உ

கடவுள் துணை.

சகலகலா பூஷணம்.

இந்நூல்

காசிவாசி ஞானாநந்த சொரூபராகிய

வித்தியானந்த சுவாமிகளால்

தொகுக்கப்பட்டு,

மஹாவித்வான் புரசை அஷ்டாவதானம்

சபாபதிமுதலியாரவர்கள்

மாணாக்கரும்

சென்னை கிறிஸ்டியன் காலேஜ்

தமிழ்த் தலைமைப் பண்டிதருமாகிய

திரு. சின்னசாமி பிள்ளையவர்களது

மாணாக்கராகிய

பு. தியாகராய முதலியாரால்

பரிசோதிக்கப்பட்டு பிரசுரஞ்செய்யப்பட்டது.

எம்ப்ரெஸ் ஆப் இண்டியா அச்சுக்கூடம்

MADRAS.

1899.

விகாரி ௵ ஆவணி ௴.

All Rights Reserved.

விளம்பரம்.

இப்புத்தகம் வேண்டியவர்கள் சென்னை பெத்து நாயக்கன் பேட்டை கிருஷ்ணப்ப நாயக்கன் குளத்துவீதி 61-வது கதவிலக்க முள்ளவீட்டிலிருக்கும் பு. தியாகராயமுதலியாரிடத்தில் வாங்கிக்கொள்ளலாம்.

இதன் விலை ரூபா **2—0—0**

☞ பு. தியாகராயமுதலியார்.

	அட்டவணை.	பக்கம்.
	பாயிரம்.	1
1	இராஜவம்ச உற்பத்தி முறைமை	11
2	அரசன் நடக்கவேண்டிய முறைமை	15
3	பிராமண ரொழுக்கம்	17
4	க்ஷத்திரிய ரொழுக்கம்	17
5	வைசிய ரொழுக்கம்	18
6	சூத்திர தருமம்	18
7	ஆன்மலாபமாகிய நான்காசிர்மங்களின் ஒழுக்கம்	19
8	இல்லறத்தாசிர்மம்	19
9	வானப்பிரஸ்தாசிர்மம்	20
10	சந்நியாச ஆசிர்மம்	20
11	அரசருடைய புண்ணியமகிமை யுரைத்தல்	21
12	அரசன் செலுத்தும் நீதி யுரைத்தல்	22
13	அரசன் சிற்றினஞ் சேர்தலால் வருந்துன்பமும் நன் மந்திரிகளைக் கூடின சுகமும் வருமாறு.	24
14	துன்மந்திரிகளால் வரும் அபஜெயமுரைத்தல்.	30
15	பெரியோரைத்துணைக் கொள்ளல்	36
16	கேள்வியற்றதனால் நேரிட்ட விபத்து வருமாறு.	37
17	அபஜெயமடைந்த அரசு பெரியவர்களால் கிடைத்த சரித்திரம்	39
18	விவேகமுள்ள வேடன் இராஜனை சரித்திரம்	41
19	விவேகமுள்ள தலையாயர் நட்பு	43
20	பகைத்தும் பதிவிரதா தருமத்தைக்காட்டியபுறாவின்கதை	44
21	கூடா நட்பு	53
22	செல்வர்களுடைய சிநேகத்தால் வருந் துன்பம்.	58
23	அரசன் தன்செய்கையால் மறுபிறப்பில் நரியாகப் பிறந்த சரித்திரம் வருமாறு	64
24	ஒழுக்கத்தினால் ஜயத்தை யடைந்த இந்திரன் சரித்திரம்.	69
25	ஆத்மக் ஞானமுள்ள கௌசிகமஹாரிஷி ஒழுக்கம் வழுவியும், நன்மையடைந்த சரித்திரம்.	71
26	இராஜர்களின் செங்கோலியற்கையின்சட்ட விற்பத்தி ..	74
27	வணக்கமில்லாதவர்களுக்கு கேடுவருமாறு	78
28	முன்ஜாக்கிரதையுடைய மும்மீன் கதை	80
29	சமுத்திரத்திற்கும் கங்காநதிக்கும் வினவிடை	82
30	தருமசாஸ்திர வியல்புரைத்தல்	83
31	அநித்திய தேகிகளாகிய ஜீவர்கள் இல்லறத்திலிருந்து முக்தியடைகின்ற விதம் வருமாறு	83

அட்டவணை.	பக்கம்.

32 செல்வமுடையவர்களை வறுமையுடையவர்கள் தாழ்வதற்கு காரணம் வருமாறு 85
33 செல்வமுடன் நற்கதியடையும் உபாயம் வருமாறு. ... 37
34 உடலானது பஞ்சபூதவடிவென்றும், பஞ்சகோசமென்றும் உணர்ந்த ஜீவர்களின் ஆசாரம் வருமாறு. ... 88
35 ஜெபத்தின் பெருமையால் முக்தியடைந்த கௌசிகன் சரித்திரம் 90
36 செல்வநிலையாமையைப் பற்றி தேவேந்திரனுக்கும் மாபலிச்சக்கிரவர்த்திக்கும் லட்சுமிதேவி பேசிய சரித்திரம் ... 98
37 காலஅளவின் பிரமாண. விபரம் 106
38 விரைவிற் செய்யவேண்டிய பதிபக்ஷ புண்ணிய விபரம் ... 108
39 மெதுவில் செய்யத்தக்கவைகள் வருமாறு ... 109
40 தருமார்த்த காமமோக்ஷ மகிமையுரைத்தல் ... 112
41 தருமார்த்த காமமோக்ஷத்தைத் தழுவிய சரித்திரம் . 113
42 உலகில் நன்மையான காரியத்தில் பிரவேசித்த பேர்களுக்கு துன்பம் வந்து சம்பவிக்கும் காரணம். ... 117
43 பார்க்கவனுக்கு சுக்கிரனென்று பெயர்வந்ததற்கு காரணம் 120
44 சுகப்பிரம்மரிஷியின் சரித்திரம். 120
45 சுகருக்கு வியாசர் சொல்லுகின்ற ஜனகராஜன் கதை. ... 126
46 ஜனகராஜன் சுகப்பிரம்மரிஷிக்கு ஞானோபதேசஞ்செய்தல் 129
47 நாரதர் சுகருக்கு ஞானோபதேசஞ் செய்தல் ... 135
48 நாரதர் பதரிகாச்சிரமத்தின் பெருமையுரைத்தல். ... 140
49 தருமங்களுக்கெல்லா மேலாகிய தருமமுறைத்தல். ... 141
50 தற்செயலாய் ஒரு ஜீவனுக்கு மற்றொரு ஜீவனால் நேரிடும் மரணவஸ்தையின் வரலாறு. 150
51 எமவாதனைவென்ற கற்புடையபோகவதியின் சரித்திரம். 154
52 க்ஷத்திரியர், வைசியர், சூத்திரர், பிராமணராகக்கூடுமா, என்றபிரசினைக்கு, உத்தரம். 162
53 விசுவாமித்திரர் பிரம்மரிஷியான வரலாறு. ... 166
54 க்ஷத்திரியன் பிராமணனான பிரகரணம். 166
55 தங்கள் தங்கள் எண்ணத்தை நிறைவேற்றிக் கொள்வது அவர்கள்வல்லமையா அல்லது வினையின் வல்லமையா என்றபிரசினைக்கு உத்தரம். 168
56 ஒருவருக்கு சுகமுள்ளபோது சிநேகமும் சுகம் நீங்கினபோது விரோதமும், கூடாதென்கிறதற்கு திருஷ்டாந்தம் 170
57 அறிவே பொருளென்ற நிச்சயங்கூறல் 172

அட்டவணை.	பக்கம்.

58 வாக்குத் தானத்தின் மகிமை கூறல் 174

59 சூத்திரனுக்கு பிரணவ சகிதமாய் வேத மந்திரங்களை ஜபிக்கச் செய்ததனாலடைந்தபயன் வருமாறு. ... 175

60 இந்திரனுடைய சிநேகத்தினால் வரும்பயனும் விரோதத்தினால் வருங்கெடுதியும் யாதென்ற பிரசினைக்கு உத்தரம் 178

61 ஸ்ரீகிருஷ்ணருடைய மஹாத்மியம். 182

62 ஸ்திரீகள் பாபஜன்மமா என்ற பிரசினைக்கு உத்தரம். 185

63 ஸ்திரீகளை மணம்புரிவதும் அவர்களைப் பாதுகாப்பதும் எப்படி என்ற பிரசினைக்கு உத்தரம். ... 190

64 உலகத்தில் எல்லாரிலும் பெரியவர்யார் என்றகேழ்விக்கு உத்தரம். 196

65 கௌசிகராஜன் பிரம்மரிஷியான வரலாறு. ... 197

66 பசுக்களினுடைய அருமையும் பாத்திரங்களினுடைய பெருமையும் உரைத்தல். 199

67 இகத்தில் செய்யத்தக்க தருமம் யாது எந்த தானத்தால் என்னபலன் கிட்டும் என்றபிரசினைக்கு உத்தரம். ... 203

68 பசுலோகம் என்பதுயாது அதை எப்பேர்ப்பட்டவர்கள் அடைகிறது என்ற கேழ்விக்கு உத்தரம். ... 204

69 பசுக்களிடத்தில் வசிக்கும் தேவதைகள். 206

70 கபிலைப்பசு மகிமையுரைத்த கதை. 211

71 இறந்துபோன தாய்தந்தையர்களுக்கு பிள்ளைகள் செய்ய வேண்டிய திதி, சிரார்த்தங்களினால் வரும்பலனென்னவென்ற கேள்விக்கு உத்தரம். 213

72 விரதமகிமை. 214

73 தானத்திற்கு தக்ஷிணை இல்லாமல் செய்யலாகாதென்ற பிரசினைக்கு உத்தரம். 214

74 கோமயப்பெருமை. 215

75 சந்தேகவழிகளால் சம்பாதிக்கும் பொருளை தானமாக கொடுக்கப்பட்டவர்களுக்கு எந்தகதிகிடைக்கும் என்ற பிரசினைக்கு உத்தரம். 216

75 சப்தரிஷிகளின் பிரமாணவாக்கியம். ... 217

75 பாதரக்ஷையும், குடையும் தகப்பன் திதியில் தானங்கொடுத்தால் என்னபலன் பெறலாம் என்றவினாவிற்கு உத்தரம். 224

76 சௌசவிதியைப் பற்றிய கேள்விக்கு உத்தரம் ... 226

77 நிரியாணமாகிய மரணக்குறியறியுந் தன்மை. ... 227

அட்டவணை. பக்கம்.

78 மானிடரில் தேவர்களும் தொழப்பட்டவர்சிலர் உண்டா என்றகேள்விக்கு உத்தரம். 231
79 தடாகம் ஏற்படுத்துகிறவருக்கு என்ன பலன் தருமென்ற கேழ்விக்கு உத்தரம். 231
80 பூஜாவிதி ஆசாரமுறையால் என்னபலன் கிடைக்குமென்ற பிரசினைக்கு உத்தரம். 232
81 சந்தனத்தின் மகிமை. 233
82 தீபப்பெருமை. 234
83 நைவேத்திய நலம். 234
84 உருத்திராக்ஷமகிமை யுரைத்தல். 235
85 பிராமணர் பொருளை கவர்வதினால் வரும்பலன் யாதென்ற பிரசினைக்கு உத்தரம். 245
86 மோக்ஷ பூமியாகிய விண்ணாட்டின் பெருமை. ... 247
87 தபசினால் வரும் பயனைப்பார்க்கிலும் நல்வழியி லீட்டிய பொருளை சத்விஷயங்களில் செலவழித்தலால்வரும் பலனைப் பற்றிய பிரசினைக்கு உத்தரம். 250
88 பூலோகத்தாருக்கு ஆயுசு விருத்தியும், அற்ப ஆயுளும் தங்கள் தங்களாலே தேடிக்கொள்வார்களென்று சொல்லுகிறார்களே என்கிற பிரசினைக்கு உத்தரம். ... 252
89 சாந்திராயண விரதமுதலியவைகளை அனுஷ்டிக்கின்றவர் அடையும் பலன். 255
90 மானிடருக்குத் தீவினையினால் மானிட ஜென்மம்போய் மிருகபறவை ஜென்மம் வருமென்கிறார்களே அது யாதினாலென்றபிரசினைக்கு உத்தரம். 256
91 மாம்ஸபக்ஷணம் சிலர் பண்ணலாமென்றும் சிலர்பண்ணலாகாதென்றும் சொல்லுகின்றார்களே அதினுண்மை யாதென்ற பிரசினைக்கு உத்தரம். 258
92 புலாலுண்பதைப்பற்றி மார்க்கண்டேயர் புகலுமுறை. 261
93 அகஸ்தியர் விதித்த புலால் மறுத்தல். 263
94 யுத்தத்தில ஒருத்தரை யொருத்தர் கொல்லுகிறார்களே அதனால் பாபம்விளையாதா என்கிற பிரசினைக்கு உத்தரம். 264
95 புழுவாகவிருந்த கிருமி இராஜனாகி சுவர்க்கலோகம் பெற்ற மகிமை கூறுகின்றது. 265
96 பூமியில் கல்விகற்றவர், தவம் புரிந்தவர், தானங்கொடுத்தவர் இம்மூவரில் யாவர் உயர்ந்தவர்கள் என்ற பிரசினைக்கு உத்தரம். 270

அட்டவணை.	பக்கம்

97 ஸ்திரீகள் செய்யுங் கடமைகள் யாது அவர்கள்எந்தவிதத்தில் கதிபெறுவார்கள் என்ற பிரசினைக்கு உத்தரம். ... 271
98 சரசஸ்திரீகளுக்கு வரும் எமதெண்டனையின் விபரம். ... 279
99 புருடர் நடக்கவேண்டிய ஒழுக்கம். 282
100 தானங்கொடுப்பதிலும் இன்சொற் சொல்லு தலிலும் எதில் அதிகபலன் உண்டாகுமென்ற பிரசினைக்கு உத்தரம். 283
101 வினையினால் வரப்பட்ட புத்திர விபரம். 286
102 கங்கையின் பெருமையும் மகிமையும் உரைத்தல். ... 287
103 ஸ்ரீகிருஷ்ணபவானுக்கு நாரதமுனிவர் மஹாதேவ இரகசியங் கூறல். 289
104 சகலாத்ம கோடிகளையு முண்டாக்கின வரும், அவற்றை இரக்ஷிப்பவரும் அழிப்பவரும், கிரகங்களை அந்தந்த நிலைகளில் நிறுத்தி உலகங்களுக்கு உபயோகமாகச் செய்தவர்யாரென்ற உமாதேவியின் கேள்விக்கு உத்தரம். 293
105 பரமசிவத்திற்கு ஐந்துமுகம் வந்ததற்கு காரணமியாதென்று உமாமயேஸ்வரி கேட்ட கேள்விக்கு உத்தரம். ... 297
106 பரமசிவத்திற்கு கண்டத்தில் கறையாகிய காரணம் யாதென்ற உமையவள் கேள்விக்கு உத்தரம். ... 298
107 பிநாகம் என்கிறவில்லை பரமசிவம் பிடித்தகாரணம் யாது என்கிற பிரசினைக்கு உத்தரம். 298
108 பரமசிவத்திற்கு இரிஷபம் வாகனமாயின காரணம் யாதென்ற சங்கைக்கு உத்தரம். 300
109 பரமசிவம் மயானவாசம் செய்யுங்காரணம் யாதென்ற கேள்விக்கு உத்தரம். 301
110 பரமசிவம் திருநீறணிந்ததும், சூலந்தாங்கியதும் பெருஞ்சோதியானதும், எப்படி என்றகேள்விக்கு உத்தரம். 302
111 பரமசிவம் கங்கையை ஜடையில் வைத்ததற்குக் காரணமுரைத்தல். 303
112 பரமசிவம் சந்திரனை ஜடையில் வைத்ததற்குக் காரணமுரைத்தல். 305
113 பஞ்சகோச உடலு முயுருமொன்றாயிருக்க சாதிகள்பலபல வகுப்பான காரணம்யாது என்ற கேள்விக்கு உத்தரம். 306
114 க்ஷத்திரியர் பிராமணரைக் காத்தலாகிய முறை. ... 308
115 மலைவாசிகளாய் தவஞ்செய்கிறதைப் பார்க்கிலும் அரிதாகியது வேறொன்றில்லையா வென்றகேள்விக்கு உத்தரம். 311

அட்டவணை. பக்கம்.

116 துறவறத்திலும் இல்லறம்பெரிதா என்கிற பிரசினைக்கு உத்தரம். 312
117 அன்னதான மகிமையுரைத்தல். 313
118 பிதுர்க்கர்ம்ம மகிமையுரைத்தல். 314
119 விதவஸ்திரீகளின் ஒழுக்கமுறைமை. 315
120 பெண்ஜாதி இழந்தபுருஷர் நடக்கவேண்டியமுறைமை.... 316
121 உலகில் ஒருவன் அரசனாகி அவனுக்கு யாவரும் அடங்கி அவனால் ரக்ஷிக்கப்படுவதும், சிட்சிக்கப்படுவதுமாயிருந்து உடனே மாறிப்போகுங் காரணம் யாதென்ற கேள்விக்கு உத்தரம். 317
122 எளிதிற் கடைத்தேறுவதற்குபாய தருமமுரைத்தல். ... 319
123 பாபமில்லாமல் திரவியம்சம்பாதிக்கும் விதம் எப்படி என்கிற கேள்விக்கு உத்தரம். 322
124 உலகில் சிலர் பாக்கியராயும் பலர்தரித்திரராகியும் நோயினராகியும், இருப்பதற்கு காரணம் யாதென்பதற்கு உத்தரம். 324
125 குற்றமுடையவனை மனுவிக்கியான முறைமைப்படி அரசன் தண்டித்திருக்க அவன் நரகத்தையனுபவிப்பானேன் என்பதற்கு உத்தரம். 332
126 வார்த்திபர் வெகுநாளிருக்க பால்ய யௌவனமுள்ள சிறுவர் இறப்பதற்குகாரணம் யாதென்றகேள்விக்கு உத்தரம். 334
127 ஜென்மங்களில் உத்தமம் மத்திமம் அதமம் அதமாதமவகை யுரைத்தல். 336
128 ஒவ்வொருவருடைய செய்கையும் தன்வல்லபத்தின் செயலா அல்லது வினையால் நடத்தும் ஈஸ்வரச் செயலா என்பதற்கு உத்தரம். 338
129 மறுஜனனம்இல்லை யென்று சில மதஸ்தர் சொல்லுகின்றதெப்படி என்ற கேள்விக்கு உத்தரம். ... 338
130 நல்வினைவருவது எவ்விதமென்ற கேள்விக்கு உத்தரம். ... 341
131 சத்கரும எக்கியத்தின் இயல்பு 342
132 பிதுர்தேவதைக்குரிய யாகங்கள். 343
133 இறந்துபோனவர்களைக் குறித்து எக்கியதானங் கொடுத்தால் அவர்கள் எவ்விதமாய் அதையடைவாரென்பதற்கு உத்தரம். 344
134 நற்கதியடைகிறவர்களின்ஞொன்றும், துற்கதியடைகிறவர்களின்ஞொன்றும் பரமசிவம்சொல்லுகின்றார். ... 346

அட்டவணை.	பக்கம்

135 எல்லாதருமங்களு மடங்கியிருக்கும் சூக்ஷமதருமமும் பிறப்பிறப்புகளினவஸ்தையினியல்பும் தேகனிலை முத்திமுடி புரைத்தல். 347

136 தவக்கியானிகளுக்கு சித்தியான யோக ஞானமுக்தியின் விபரம் பகவான் கூறுதல். 349

137 நான்குபதவிகளாகிய சாலோக சாமீபசாரூப சாயுச்சியபதவியடைகிறவர்க ளின்னுமென்றுபகவான் தெரிவிக்கின்றார். 351

138 ஸ்ரீபரமேஸ்வரி, முநீஸ்வராதிகளுக்கும் அவர்கள் பத்தினிமார்களுக்கும் ஸ்திரீகள் நடக்கவேண்டிய ஒழுக்கமுறைசொல்லிய சரித்திரம். 353

139 நாரதமகாமுநிவர், நைமிசாரண்ய முனிவர்களுக்கு அருள்செய்யும் இந்திரசபையின் சிறப்பு. ... 360

140 இயமன்சபையின் சிறப்பு. 361

141 வருணன் சபையின் சிறப்பு. 363

142 குபேரன் சபையின் சிறப்பு. 364

143 பிரமன் சபையின் சிறப்பு. 366

144 பூசைபுரிகின்றவர்களின் மகிமை. 371

145 தன்னைவிட்டு நீங்காத தரித்திரம் நீங்குவதற்கு உபாயமுண்டாவென்பதற்கு உத்தரம். 373

146 உபசாரம் செய்வதற்கும் ஏற்பதற்கும் உரியபெரியவர்கள் யாரென்றகேள்விக்கு உத்தரம். ... 374

147 சாஸ்திரங்களை நிந்தித்து கடவுள் இரண்டென்று கலகம் விளைவித்து பகைப்பது என்னென்கிற கேள்விக்கு உத்தரம். 375

148 ஸ்ரீகிருஷ்ணபகவான் திருவாய்மலர்ந்தருளியபகவற்கீதை. 376

உ

கடவுள்துணை.

சகல்கலா பூஷணம்.

பாயிரம்.

ஆதியிலோர் காலஞ் சுவர்க்க மத்திய பாதலங்களி லமர்ந்த பிராணிகள் வினை சம்பந்தத்தினு லளவுபடாதவேதங்களனைத்து மாதி யந்தபதக்கிரமங்கடுமாறிச் சிதறிய காரணத்தினுற் றேவர் முனிவர் மருண்டு, திரிநேத்திரதாரியாகிய பரமசிவனநுக்கிரகப்படி, மறைகண் முற்றேற்றியவாறே பரவிக்காட்ட, விதியி னெழுக்கங்களைச் சங்கை யற வாராய்ந்தொழுங்குபெறக் கூறுவதெவர்க்கு மரியன வாதலான், விண்ணவர், தவத்தவர், மாநுடர் முதலாயினே ரறிவு விளங்காமல் வேதவாய்மைகளை யறியாது, துஷ்கிருத்தியங்களை யநுசரித்த சில மோகனசாஸ்திரங்களை யுண்டெண்ணிக்கொண் டுலகின்கண் முக்கிய மாக வழங்கி வருஞ் சத் கருமங்க ளனைத்துந் தடுமாறிப் பாச பந்த வினைக்கேதுவாகிய மார்க்கத்தைக் கடைப்பிடியாக வெண்ணிச் சகலரு மதனைத்தொடர்ந்தநுஷ்டித்து வருகின்றதைக் கருதியே,பிரமன் விஷ் ணு தேவர்கண் முதலிய ரிஷிகளும் பரமசிவ கடாக்ஷ மில்லாம லிந்த மாறுபாடு தவறுதெனநிச்சயித்துப் பிரமன் விஷ்ணு இந்திரன்முத லான தேவர்களுடன் றிருக்கயிலையைச் சேர்ந்து, தம தாணையிற் செ லுத்தியே வீற்றிருக்கு நந்திதேவரைச் சேவித்தெங்கள் வரவைப்பெரு மனுக்கறிவிக்கவேண்டுமெனப்போற்ற வவர்கிருபையுற்றவர்களை யவ் விடத்தினிறுத்திக் கர்த்தன் சந்நிதாநத்திற்சென்று வணங்கித் தேவர் களின்வரவை விண்ணப்பஞ்செய் தநுமதிபெற்றுவந்து, நீங்கள் சபை க்குவருக வென்று பரமசிவங் கட்டளையிட்டாரென, அவ்வாக்கியத் தைக்கேட்டாநந்தபரவசராய்ச் சிவகணங்கள் காவல்கொண்டிருக்கும் பலவாயில்களைக் கடந்து சிவபிரானைத்தெரிசித்தவுடன்,விழிகளி னுந் தவாரி பெருகத் திருவடிகளிற் கற்பகமலரைச்சொரிந்துதீர்க்கதெண் டன் சமர்ப்பித்து, வேதாகம வாக்கியங்களினுற்போற்றிக் கரங்களைக் கூப்பிநிற்க, அவர்கண்மீது கர்த்தன் கிருபாநோக்கம் பாலித்துக்கட் டளையிட்டவாறே, தத்தமக்குரிய விடங்களிலிருந்த பின்ன ருங்கள் செய்கைகள் குறைவறநடந்து வருகின்றனவோவென்று வினவத்தே வர்கள் வந்தித்துத்தேவரீர், திருவுளப்படிக் கடியோங்கள் உய்யுமாறு சிதைவின்றி நடந்தேறிவருகின்றனவாயினும், பூமியின்க ணிராநின்ற தபோதனர் முதலானோர் மோகன சாஸ்திரத்திற் சிடுபட்டுத்தேவ

ரீரைப்பெரும்பாலும் பரனென நினையாது, சிலர்மாத்திரம் கர்த்தவ்யமெனக் கருதித் தொழுகின்றனர்; சிலர் மற்றத்தேவர்களுடன் தேவரீரையும் சமமாகத்துணிவுகொண்டனர்; காலக்கருமங்களைக் கடந்தவாதி மூர்த்தியு முண்டோவெனச் சில ரவமதிக்கின்றனர் ; கடவுள் வேறில்லை. நாங்கள் கற்ற சாஸ்திர வுணர்ச்சியேநித்தியமெனச் செபிக்கின்றனர் ; அநேகர் பாவ புண்ணியங்களை யின்னதென் றறியாது, உண்ண லுடுத்தல், புணர்தல், துயிலல், களித்த லிவைகளே மோக்ஷமெனவு மவைகளைத் தவிர வேறொருமுத்தியிருக்கின்றதென்ப தஞ்ஞானமெனவு நினைக்கின்றனர் ! இவ்வாறு பற்பலவிதங்களிற் சகலருமுறை தவறிய முயற்சிகொண்டு, பிறவிச்சாகரத்தைக்கடக்கு முண்மையினையறியாதுழன்று, வேதாகமவரம்பைக் கடந்து பவ நெறியை முக்கியமாகத் தொடர்ந்து, தீவினையிற் படர்ந்தலைந்து மயங்குகின்றனர். இவைக ளனைத்துந் தேவரீர் ! திருவுளத்தின் விளக்க மாயினு மடியோங்க ளறிந்தவற்றை விண்ணப்பஞ் செய்தனம். இதனைத்திருவுளத்திற்கொண் டெங்களுக்காக விரக்கமுற்றுச் சீவ ராசிகண் மயங்கு மயலை நீக்கித் தேவரீர் பாத கமலங்களைக் கருதி முமூட்சுகளாய் மோக்ஷ வீட்டைச் சேரும்வண்ணங் கிருபை செய்தருள வேண்டுமென்றிரங்க,பரம சிவமிவ்வாக்கியங்களைத் திருவுளம்பற்றியே,சங்கு சக்ரபாணியாகிய மகாவிஷ்ணுவை நோக்கி, உமது கலைகளி லொன்றைக்கொண்டு,பூமியின்கண் ணவதரித்துக் கிலப்பட்டுச் சிதறிக் கிடக்கும் வேதங்களைச்சேகரித்தே நான்குவகைப் படுத்தித்தகுதியான விருடியருக் கவைகளைப்போதித்தவர்களா லுலகிலுள்ள வாத்ம கோடிகட்குச் சிற்றுணர்வை மாற்றிப்புனிதராக்குவீர்; அவைகளை யோதப்பெறாத சூத்திராதிகளெளிதின் முத்திபெறத்தக்கதாக வேதங்களோடிவிதிக்கப்பட்ட வாகமங்களென்றும் நீதி முறைகளென்றும்ஞானசாரங்களென்றுஞ் சாஸ்திரங்களிருக்கின்றன.அவைகளி லநந்தவித முத்திமார்க்கமாயு மொழுக்கமாகிய நீதிமுறைகளாயுந் தொகுப்பான நன்மார்க்கங்களாயும் வகுத்திருப்பதால், அவைகளை மார்க்கண்டேயர், துர்வாசமுநி முதலிய ரிஷிகளாலுமினி யவதரிக்காநின்ற வாதராயணராகிய வேதவியாசராலு நாமொவ்வோர் காலங்களிலுமாதேவிக்கு மநேக லோகோபகாரமான விஷயங்க ளருளி யிருக்கின்றனம் ! அவைகளெல்லாம் வரன் முறையாக வுலகத்தில் போதிக்கப்போகிறார்களென் றநுக்கிரகஞ்செய்ய வதற்கிசைந்து, கேசவன், பிரமன்,முதலானவர்களுடன் கர்த்தரைவணங்கி விடைபெற்று வைகுந்தத்துக் கெழுந்தருளிச் சகலருக்கும் செலவு கொடுத்தனுப்பிச் சில காலம் சென்ற பின்பு, பூமியின்கண் பராச ரொரு தினம் பிராதக்காலையிற்

கங்கையைக்கடக்க வோடமேற்றினவரா யதைச்செலுத்தும் மச்சகந்தியினது சுந்தரத்தைக்கண் டோர்காரணத்தான் மோகித் தவளைச் சம்மதப்படுத்திச்சுகந்தகந்தி யாக்கிப் புணர்ந்தபோ தக்காலத்தில் விஷ்ணுவானவர் பரமசிவத்தின் கட்டளையின்படி யவள் கருப்பத்தில் பிரவேசித்துத் தண்டகமண்டலத்துட னவதரித் தவர்களிடத்திற் செலவுபெற்றுக்கொண்டு, வதரிகாசிரமமென்னும் வனத்தில் வாசம்பண்ணயோக்கியமென்றெண்ணி யவ்விடத் தமர்ந்த வக் காரணத்தினால் வாதராயணரென்னுந் திருநாமம் பெற்றுப் பரமசிவ கடாக்ஷத்தினால் வேதாகமங்களை யொருவரிடத் தோதா துணர்ந்து, வேதத்தை நான்குவகைப்படுத்தினமையால், ஸ்ரீவேதவியாசரென்னுந் திருநாமமும்பூண்டு, ஜநற்குமாரரிடத்திற் பதினெண்புராணங்களையும் வேதசாரங்களையும், மகத்துக்களுக்குப்போதனையாகத் தக்கதாக வேதாந்தங்களையுஞ் சூத்திரங்களாக்கியபின்னர், பயிலவர், வைசம்பாயநர், ஜைமுநி, சுமந்த ரிந்நால்வருக்கும், வேதநான்கையு மறிவித் தவற்றிற் குரியவர்களுக்கு வரன்முறையாகப்போதிக்கக் கட்டளையிட வவர்களவ்வாறே பரிபக்குவர்களுக் குணர்த்தினர். அதன்மேல் வேதாகம புராணங்களுலகின்கண் பரவின. அப்பொருளெலாம் வெளிப்பட்டிருந்தும்பெரும் பான்மையாய்த் தோற்றும விருப்பதானும், தாயாரது கருப்பத்தின் முளைத்துப் பிரபஞ்சவாழ்க்கையிற் றிளைத்துச் சமுகவிசாரணையினாற் களைத்துச் சஞ்சலத்தினிளைத்து, நாளும்வருந்தி, நானெனதெனவினைவிளைத்து, நால்வரு நகைக்கக் களைத்து, நடுக்குந்தலையுடன்கூனும் வளைத்து, நரை மயிர் கிளைத்து, முகமுந் திரைத்து, நாடியுநரம்பு மோடித் தளர்ந்து, காற்றடுமாறிக் கண் பஞ்சடைந்து, காதுகேளாமற் கைக்கொட்டலுடன் மூக்காலின ராகி விக்கலு மிருமலுமென்மேலிட்டொக்கலுஞ் சுற்றமு முரியவரெவரும் பக்கமேநின்றுபாதவித் திரங்க வோங்கிடு வாயு மொடுங்கி யுள்வாங்கி நீங்கும்போதுநினைவுடனிருந்து, கண்ணுறும் பொருளின் கமலபாதத்தைக் நண்ணுறும்படியே, நமனையும் வெல்லவல்லமையுள்ள நல்லனவிதனை, யாசியற்காசி வாசியாஸன வவ்வித்தியாநந்த தேசிகனிதனை யுசிதமாயருளிய விசிதவிந்நூலை, வசியமாய்விளங்க வாண்டதோரெவரும், ஆண்டவனுடைய மகிமைவந் தெய்த, உலக போகங்க ளுய்யும் வகையைவிசையறநின்ற வசன ரூபியாகி, வெளியிடுவிதியின் முறையறிந் திங்ஙனம், வித்தியாநந்த சுவாமிதன்மைந்த, னெந்தைக் கடுமைத்தியாகராஜனனே.

விநாயகர் துதி.

வெண்பா.

தகவுதரும் வேதத் தனிப்பொருளைக் காட்டுஞ்
சகலகலா பூஷணத்தைச் சாற்றற்-கிகலறுக்கு
மொற்றைமருப் பைங்கர னெண்மலர்பூண் சேவடிகள்
பற்றுவாம் நாளும் பணிந்து.

சுப்பிரமணியர் துதி.

மூவிரு முகங்கள்போற்றி முகம்பொழி கருணைபோற்றி
யேவருந் துதிக்கநின்ற விராறுதோள் போற்றிகாஞ்சி
மாவடி வைகுஞ் செவ்வேண் மலரடி போற்றியன்னான்
சேவலு மயிலும்போற்றி திருக்கைவேல் போற்றி போற்றி.

பரமசிவ வணக்கம்.

கங்கையைச் சடையைத்தாங்கிக் கபாலமு மழுவுமேந்தித்
திங்களங் கண்ணணி சூடித் திருவிளை யாடல்செய்த
நங்கயற் கண்ணிபாக னல்லடி வணங்கிப்போற்றி
யங்கலா பூஷணத்தை யறைகுவா முலகத்தன்றே.

சிவசக்தியின் றுதி.

செறிதரு முயிற்றொறு நிகழ்ந்து மன்னிய
மறுவறு மாணிடமாயின் மேவியே
யறுவகை நெறிகளும் பிறவு மாக்கிய
விறைவிதன் மலரடி யிறைஞ்சி யேத்துவாம்.

கண்ணன் றுதி.

விருத்தம்.

மாமேகனஞ்செய் முலைமாநூர்நிதம்பவலை தேறுதழுந்து மிடையும்
மாமோகமைந்தர் பொருள்வாழ்வாலயர்ந்து தடமாறுமயங்குமிடை-
தாமோதரன் கமலமாதாள்பவன் கருதிதேறுதவன்றனதுதாள் [யும்
நாமோதவும் தொழுதுளே காணவும்பெறுகி னுமேயநந்த விழியோர்

இலக்குமி துதி.

விருத்தம்.

சங்குசக் ராயுதத்தைத் தாங்கிய மாயோன்மார்பிற்
றங்கியே யுலகத்தோர்க்குத் தாழ்விலா வாழ்க்கைநல்கும்
பங்கஜ வதனமொத்த பகர்செல்வி பாதமேத்தி
யிங்கித கலாபூஷண மியற்றுவா மன்பின்மிக்கால்.

சரஸ்வதி துதி.

கலித்துறை.

உள்ளக்கமலத் தொருவாதுறைந் தருளோ வெடுக்கு
மள்ளற் பெருங்கடன் மேலுயரந்தண லருங்கதிர்போ
லெள்ளற்கருங்கலா பூஷண நன்னூ லியம்புதற்கு
வெள்ளைக்கமலத்து வீற்றருள்கின்ற விளங்கிழையே.

வியாசமுநிவர் வணக்கம்.

துக்கசாகரத் துக் கொருதோணியாய்ப்
பக்குவச்சுகனைப் பெறுபாக்கிய
தக்கவான்ம தயாபரனாகிய
மிக்கவேதவியாசனைப் போற்றுவாம்.

குரு வணக்கம்.

அமலவாரணமடங்கலு மறியொணுமுதலாய்த்
தமமகன்றபேரொளி திகழ்தருகதிநிலையாய்
முமலமாயையற ரேனுங்கு மூதறிவதாயிலகு
நிமலவித்தியாநந்தனை நிதம்பணிந்திடுவாம்.

வேறு.

நித்தசுத்தஞானமா யுசிதமாயோங்குமேலா
மத்தியான்மீகவாழ்வை அங்கையிற்கனிபோலேயேற்
குத்தியாலநுபவத்தாலுதவு மெய்த்தேசிகனன்
வித்தியானந்த மைந்தனிணை யடிபோற்று வோமே.

குரு துதி.

முத்தியாகி முழுப்பொருளாவது
சத்தியாகிச் சகலமுமாவது
சித்தமேவிச் சிவோகமதாவது
அத்தனே வேகாம்பர சரணமே.

நூற் பெயர்.

வேறு.

பொய்ப்புவி யதனினுளும் பொருக்கெனத்தோன்றி மாயு
மெய்ப்பிலாவுயிர்கட் கெல்லா மெளிதினின் ஞானமெய்த
வப்பணிசடையோன்முன்ன ரறைந்தவாகமத்திற்சொல்லு
முப்பொருள் விளக்கஞ்சொல்ல முக்கணனருளைக்கொண்டே

அவை யடக்கம்.

"முத்தமிழ்த்துறை யின்முறைபோகிய
உத்தமக்கவிகட் கொன்றுணர்த்துவன்
பித்தர்சொன்னவும் பேதையர்சொன்னவும்
பத்தர்சொன்னவும் பன்னப்பெறுபவோ."

ஐவித விலக்கணங்களை யுணர்ந்து நவரச வலங்காரமாய்ச்செய்யுள் புனைய வல்லவருக்குமுன், இந்த சகலகலாபூஷணந்தனை அடியேன் கூறத்தொடங்கிய தெத்தன்மைத் தெனின், அரிவருக்க மெபூழி அறிவதன்முன், சிறந்த திருமுறையை வரையக் கருதியதையும், வண்டுகளைப்போல அற்ப மசகமானது ரீங்காரம் பண்ணுவதையும், சூரிய பிரகாசத்தை மழுங்கச்செய்து வான்மீனானது புவியை விளக்க நினைத்ததையு மொக்கும்.

இது பெருமையான வேதமுதலிய அறுபத்து நான்கு கலைகளையும் விரிக்கா நின்ற ஸ்ரீ சிவபெருமானாலும் தேவர்களாலும் முனீஸ்வரர்களாலும் திருவாய்மலர்ந்தருளிய புண்ணிய பரிபக்க வேதுவான விந்நூல் மெல்லிய சொல்லாயினும் வெற்றுரையாயினும் வியர்த்தமாகிய புன்சொல்லாயினும் பரமசிவத்தின் திருவருளைப் பெறுகின்ற மேன்மையோர், எல்லாச்செயலும் சிவன் செயலென் றுணர்கின்றமையால், இதுவுஞ் சிவன்செயலென் றேற்றுக்கொள்வர்க ளென்றிக் கட்சி செய்யார்களென வடியனு மிங்கு வெளியிடத் துணிந்தமை யறிமின்.

பாயிரம் முற்றிற்று.

உ

கடவுள் துணை.

சகலகலா பூஷணம்.

நூல்

தருமபுத்திர மஹாராஜன் பட்டாபிஷேகம் செய்துக்கொண்டு, பூபாலகளை விசுவாசித்து நீதி செலுத்தி வருநாளில் ஒருநாள் பார்த்தசாரதியாகியும் பக்த பராதீனனாகியும், பரந்தாமனாகியும், பக்தவற்சலனாகியும் தங்களைவிட்டு நீங்காதிராநின்ற ஸ்ரீகிருஷ்ணசுவாமி யுடனே, சரசயநத்தி லிருக்கும் வீஷ்மரிடத்திற்குப் போய்வருவோமென்று ஸ்ரீகிருஷ்ணமூர்த்தியும் தருமராஜனும் கலந்துபேசிக்கொண்டு, மந்திரி பிரதானிகளுடன் தேர்மீ தேறி அங்கே போய் இறங்கி அங்குள்ள தேவரிஷிகளும் பிரம்மரிஷிகளும் மற்றவர்களும் சூழ்ந்துகொண்டிருக்க, திவ்வியகுணமங்கள ரூபமாய்ப் பிரம்மதேஜசு விளங்கத்தேகாயமான மற்று யோகநித்திரை யுற்று வீற்றிருக்கின்ற வீஷ்மாசாரியைக் கண்டு தரிசித்து, இருகரங்களையுஞ் சிரமேற்கொண்டு தீர்க்க தண்டன்சமர்ப்பித்து வணங்கியபோது, சமீபத்திலிருக்கும் பரிசாரகர்கள் கையைக்கொட்டி வணங்கி, எங்க ளாண்டவனே ! இதோதருமபுத்திர மகாராஜன் துவாரகாபுரி வாசனுடன் வந்திருக்கிறானென்றார்கள். அந்தச் சொல்லைக் கேட்டவுடனேஅவர் கருணைக்கண் விழித்துப்பார்த்து, மேலான சந்தோஷத்துடன் மகிழ்ந்து, அப்பா தருமநந்தன ! இந்தமுகுந்தனையும் இவ்வுலகத்தையும் பட்டாபிஷேகத்தையுங் கைப்பற்றிக்கொண்டு உம்முடைய எண்ணங்களை எல்லாம் நிறைவேற்றிக்கொண்டீரா அதுமிகவும்நல்லகாரியம், நீங்களிருவரும் அருகில்வந்து இவ்விடத்தி லமைந்திருக்கின்ற ஆசனத்தி லிருங்களென்றார். அப்படியே அங்குள்ள ஆசனத்திலிருந்து அங்குநெருங்கிஇருக்கின்ற தவமுநிவர்களை நோக்கி நமஸ்காரஞ் செய்தார்கள். அம்முநிவர்கள் முகமலர்ந்து இவர்களை ஆசீர்வதித்தார்கள். தருமபுத்திரர்எங்களுக்குதவியாகிய இந்தக் கிருஷ்ணபகவானும் பிரியாவிடையாய் எங்களுடன்

வந்தது அருமையின் மிக்க அருமையென்று உபசாரஞ் சொல்லிக் கூட்டமாக நிற்குஞ் சமயத்தில், துளபமாலையைத்தரித் தருளிய ஸ்ரீ கண்ணபிரான் வீஷ்மாசாரியரை நோக்கி ஆசைகொண்டு சிலவார்த்தை சொல்லுகின்றனர்.

சந்திரகுலத்தி லவதரித்த தருமபுத்திரர், சீருடைத்த நன்னிதிவசனத்தைத் தலைமேற்கொண்டு கடல்சூழ்ந்த காசினிமுழுமையும் தோள்மேற்கொண்டு, பட்டாபிஷேகமுந் தரித்துத் தாயை நாடிய சேயைப்போலும், பசுவைத் தேடிய கன்றைப்போலும், ஆசைகொண்டு இங்குவந்துதேவரீருடையதிவ்வியதிருவாக்கினால்பற்பல தருமங்களை விற்பநமாகக் கேட்கவேண்டு மென்னுஞ் விருப்பங்கொண்டு, உலகத்தார் அவ்விஷயங்களைக் கேட்டு கொண்டாடுங் கீர்த்தியையும் அடைய அதிக ஆவலுடன் பந்து ஜனங்கள்சூழப்பட்டு வந்திருக்கின்றார். பிரம்மாவிலும் உயர்ந்த மஹாரிஷிகளும் தத்வக்கியானமுள்ள முனிவர்களும் இன்னமுள்ள பெரியோர்களும் உம்மைச்சூழ்ந்து காத்திருக்கின்றார்கள். ஆதலால் வேதப்பொருளிலுறைந்து மறைந்திருக்கும் மகத்துவங்களும் தருமமுதலிய நீதிகளெல்லாவற்றையும் இவர்கட்குக் குறைவில்லாமல் நிறைவாக உமதுதிருவாக்கினால் தேன்பொழிவதுபோல் மொழிந் தருளுஞ் அருட்செல்வனே, உமக்கு இனி வேறு உபசாரஞ் சொல்லவேண்டிய தொன்றுமில்லை யென்று ஸ்ரீகிருஷ்ணபகவான் மகிழ்ச்சியுடன் புகல, அம்மொழிகேட்டு, வீஷ்மர் நகைத்து மேகவண்ணனாகிய அண்ணலே! ஆதிமத்தியாந்த ரகிதமான வள்ளலே! முகுந்தா கோவிந்தா வித்தகா! நீர் அறியாத மகத்துவங்களும் நீதியுந் தருமமும் நீணிலத்திலுண்டோ? நெடியோனே சரசயனத்தின்மீதிருக்கின்றேன் எனக்குமிகுந்த தள்ளாண்மையும் ஆயாசமும் களையும் அதிகரித்திருக்கின்றது. மேலும் என்னுவினிடத்துப்பசையும் ஈரமுமில்லாமல் உலர்ந்திருக்கின்றது. ஆகையால் தேவரீரே திருவாய்மலர்ந்தருளல்வேண்டுமென்று சொல்ல, திருமாலானவர் ஐயா வீஷ்மாசாரியரே! உம்முடையவாக்கினாற் கேட்கவேண்டுமென்று மகிழ்ச்சியுற்று வந்தவர்களுக்கு இன்னொருவர் சொன்னால் அதனால் அவர்கள் இன்பமடைவார்களோ? அது அவர்கட்குத் திருப்தியாயிராது; அவர்களாசைகொண்டு வந்த ஆவலடங்காது. ஆனதுபற்றி உமதுதேகமானதுயோகத்தால் மேன்மைப்பட்டிருப்பதால், நீர்பால்யத்திலெத்தன்மையா யிருந்தீரோ அத்தன்மையான மனோதிடமுடன்

மாசற்றிருந்து போர்முகத்திற் பட்டபுண்ணெல்லாமாறி உடல் வருத்த முதலிய ஆயாசமுந் தீர்ந்துதிடக்காத்திர தேக தைரியம் பெறும்படிக்கு அநுக்கிரகம் பண்ணினோம். நீர் இதுமுதலாகத் திடங்கொண்டு உச்சாகத்துடன் அருமையான தருமங்களையெல்லாம்ஆராய்ந்த வண்ணஞ் சொல்லுமென்று,பணுமகுடப் பாம்பணையும் பாற்கடலுட்டங்கிய பரந்தாமன் பக்தவற்சலன் பாபரகிதன் பரமபதநாதன் அருள்செய்யவே, வீஷ்மாசாரியருக்கு மனோவாக்குக்காயமூன்றும் வலுவேறி வருத்தந் தீர்ந்து மனங்குளிர்ந்து, வனமாலிகை தரித்தருளிய கருஞ் சூரியனைப்போன்ற வாசுதேவனை ஆச்சியாருடன் குலாவிய நேயனைப் பவளம் போன்ற செவ்வாயனைத் தோத்திரஞ்செய்து, செந்தாமரைக் கரத்தைக் கூப்பி வணங்கி, இருதய கமலத்திலிருத்தி உள்ளன்பு கூடிய ஒளிக்கண்ணாற்கண்டு முக மலர்ந்து அகமகிழ்ந்து மொழிபுகன்று துதிக்கின்றனர்:—

இன்னமும் உயர்ந்தோரி லுயர்ந்தோராலும் எட்டப்படாதகனியே, வேதப்பொருளுக்கு மேலாகிய தனியே, எல்லாப்பதத்திற்கும் இதமாகியபதமே,பொன்னாசை பெண்ணாசை பூவாசைவெறுத்த பெரியோர்களுக்கு உறவே, இப்புவிமாயையிற் பொருந்தி அக்கியான கேவலத்தால் புலம்பித் தளர்வார்க்குத் தூரமே, பெருமையாகிய தருமசாஸ்திரத்தில் ஒட்டாதவனுகியும்,ஒட்டினவனுகியும்,ஆத்மகோடிகள் தோறும் கிட்டினவனுகியும், கிட்டாதவனுயும், ஓரிடத்துந் தட்டாதவனுகியும், தன்னைத்தானறிந்த தலைவருக்குத்தானறியுந் தலைவனுகியும், ஆணவப்பேய் கொண்டலைவார்க்குக் காணக்கிடையாக் கரும்பொருளாகியும், உள்ள கண்ணனே, நிர்மல நிரந்தர வஸ்துவாகிய தேவரீர் மகத்துவத்தை அடியேன் மதிக்குந்தரமோ துதிக்குமதியோ கொண்டாடுந்திறமோ! மிகவும்மயிர்க்குச்செழாகின்றேன் தேவரீர் திருவடி யநுக்கிரகஞ்செய்து தமது திருநாமத்தையும், திவ்யதிருவுருவத்தையும், எல்லாவஸ்துவுமா யிருக்கிற இன்பத்தையும், நான் எடுத்துப்பேசி ஏற்றிவணங்கி இறைஞ்சும்படிக்கு அநுக்கிரகஞ்செய்யவேண்டும் ஈசனே? தேவரீர் முத்தலைச்சூலமும் தண்டு கமண்டலமும் சங்கு சக்கரமும் அன்னவாகனமும் கருடவாகனமும் ரிஷபவாகனமும் கயிலைமலையும் கமலமலரும் கடலிற்றுயின்ற யோகநித்திரை செய்யும் புண்ணியனே, துளபமணி மார்பனே, எல்லாப்பொருட்களின் சம்பந்தமுமாய் ஐம்பூதமுமாய் ஐம்புலனுமாய் அவ்வைம்புலன்களினுல் மயங்குகின்ற மயக்கமுமாய் அம்மயக்கங்களை மாற்றுகின்ற பேரறிவுமாய் இருளுமாய் ஒளியுமாய் உயிருமாய் இகமாய்ப் பரமாய்

அருளுமாய் அன்புமாய்த் தலைவனுமா யிருக்கும் ஆதிமூலப் பொருளும் தேவரீரானால், உம்மையாவரறியப் போகிறார்கள், ஐயனே ஒன்றாய் இரண்டாய் மூன்றாகிளையாய் அக்கிளைகளின் தழையாய்ப் பூவாய்ப் பிஞ்சாய்க்காயாய்க் கனியாய் ஆதிமூலமுமாய் அமைந்தமாமாய் நிறைந்த அநாதியே நான்மறையாய் முக்குணமாய் இருவினையாய் ஒருமுதலாய் நன்மையாய்த் தீதாய்ப் பற்பல சமயமுமாய் அச்சமயா சாரங்களுக்குப் பொதுவாகிய ஐந்தெழுத்தாய் எட்டெழுத்தாய் வெற்றிபெற்று வீற்றிருக்கின்ற தேவரீர்; எல்லா வற்றிலும் பாலில் நெய்போல விளங்கிப் பிரதிபலித்துக் கொண்டிருப்பது என்ன விளையாட்டோ நாகரி முராகரியென்னும் திருநாரணனே என்று, வீஷ்டுமாசாரியார் அநேகவிதமாகத் தோத்திரஞ்செய்து தொழுது வாழ்த்தியபோது, தன்னந்தனியே தனக்குத்தானே யொப்பானபெருமானாகிய ஸ்ரீ கிருஷ்ணபகவான் சற்றே நகைத்தருளித் திருக்கண் மலர்ந்து கருணைகூர்ந்து, உபயானஞ் சொல்லுவதற்கு ஒப்பொருவருமில்லாத பெரியவரே உண்மையான வீஷ்டுமாசாரியரே உமது உடலைவிட்டு உயிர்போங்காலத்தில் பேசுதற்கரிய எட்டாம் வசுவின் பதங்கிடைக்கும். குறைவில்லையென்று அருள்புரிந்தருளினார். இவ்வண்ணமாகத் தண்ணந் துளவோன் திருவாய் மலர்ந்தருளிய திவ்ய மொழியானது வீஷ்டுமரது செவியிற் புகுந்து நிறைந்து புளகாங்கித முண்டாக்க, அதனால் அழகிய அரவிந்தம்போன்ற அரியினுடைய திருவடிகளைத் துதித்து, பக்தவத்சல பரந்தாமனது அருள் மொழியைக்கொண்டு, தனது பக்கத்தி லிராநின்ற ஸ்ரீ வேதவியாசர் நாரதமஹாமுநி முதலான முநிவர்கள் இன்னமுள்ள மகாரிஷிகளின் அருள் வாக்கியமும் பெற்றுக்கொண்டு, தமது குலத்திற் சுமதியெனப் பிறந்த தருமராஜனாகிய பேரனுக்கும், மற்றவர்களுக்கும் சகல தரும சூக்ஷுங்களையுந் தடையற வாலோசித்துச் சொல்லத்தொடங்கினார்.

கேளும் இராஜ ராஜர்களுக்குப் பெரியவனாகிய தருமராஜனே உட்காரும் இவ்விடத்தில் நிறைந்திருக்கின்ற முநீஸ்வரர்களின் கிருபையினாலும், நீருண்ட மேகவண்ணனாகிய கண்ணன் எனக்கெதிரிலிருந்து காட்சி தருகின்ற மாட்சிமையினாலும், புண்ணிய ஆட்சியாகிய சாஸ்திர புராண தருமங்களெல்லா வற்றையும் உள்ளங்கை நெல்லிக்கனிபோல், ஐயந்திரிபு அறியாமை முறியச் சொல்லுகிறோம். நீ உன்மனத்தில் தெரிந்துகொள்ளக் கூடாத சந்தேக முள்ளவைகளைத் தஞ் சிறப்புடன் யோசித்துக் கேட்டுக்கொள்ளும். பேரனே என்று, வற்றிவடியாத கருணைக்கு வித்தாகும் ஒரு முதல்வனாகிய

வீஷ்டுமர் சொல்ல, தருமராஜன் மகிழ்ச்சியடைந்து, கலைகற்ற நிலை பெற்ற தலைவரைத்தொழுது முகுந்த கோவிந்த வைகுந்த பதத்தைக் கருத்திலிருத்தி, இருகரத்தையுஞ் சிரத்திற்பொருத்திப் பொற்பிரகாசம் பொருந்திய வீஷ்மரைப் பணிந்து, அவருடைய ஆசீர்வாதத்தைப் பெற்று, அவருக் கருகாசனத்திலிருந்து, தனது பரிசுத்தமான மனத்தில் அடைபட்டிருந்த சந்தேகங்களை யெடுத்துக் கேட்கத் தொடங்கினார்.

1. இராஜவம்மிச உற்பத்தி முறைமை விளக்கல்.

ஐயா ! பெரியோர்களால் புகழ்ந்து பேசப்பட்ட பூலோகத்தில் அநேகங் கோடி புத்திமான்களும் பலவான்களு மிருக்க, ஒருவன் மாத்திரம்ராஜாவாகிப் பூமியிலுள்ள பேர்கள்யாவரும் வணங்கத் தண்டனை கண்டனை அபராதம் விதிவிலக்கு வர்ணாச்சிரம தருமம் வெற்றிமாலை வீரகண்டாமணி இவைகள் முதலிய வெல்லாங்கிடைத்துச் செங்கோல் செலுத்தவேண்டி வந்ததிறமென்ன? ஆதியில் இந்த ராஜ வம்சம் எப்படி யுண்டாயிற்று ? இந்தச் சந்தேகம் என் சிந்தையைவிட்டு நீங்காமல் நெடுநாளா யிருக்கின்றது. இதற்குக் காரணம் அநுக்கிரகஞ் செய்யவேண்டுமென்று வினவ, வீஷ்டுமாசாரியர் புன்னகை காட்டிப் பெருமையாக மதித்துவாசனைபெற்ற மலர்களிலிருக்குந் தேனை வண்டினங்கள் கண்டு களித்துண்பதுபோல், மகிழ்ந்து சொல்லத்தொடங்கினார்.

ஓ ! முரசகேதனா மனோதிடகாந்தி கிருபை சத்தியம் இவைகளினால் நிலைபெற்றிராநின்ற ஒருவன், உலகிற்கு அரசனாவன். அவ்வாறமைந்த அரசன் ஐம்புலன்களையும் சேஷ்டை செய்யவொட்டாமலடக்கி; பிறர் சேஷ்டை செய்தால் காவலில் மடக்கிக் குற்றமில்லாதவனைப் பூலோகதேவர்களாகிய பிரம்மரிஷிகளாலும், மேலுலக தேவர்களுக்கும், யாகாதிமுதலிய பாகாதி பணிவிடைகளிலிருந்துபரிந்து அவர்களைப் பணிந்து அன்புபாராட்டி விசுவாசித்து வரும் நன்னெறியின் வல்லமையினால் தேச முழுதும் பூசித்து நேசித்துத் துதித்துக் கொண்டாடும்படியாய் உலகத்தை ஆளுவான் இத்தன்மைய நல்நிலைமை வாய்ந்த மன்னவன், மும்மூர்த்திகளாகிய சிவ

பெருமான் விஷ்ணு பிரமா இன்னமுள்ள தேவர்கள் முதலினேரைப் பார்க்கிலும், பிரம்ஹரிஷி வேதோக்த பிராம்மண ரதிகமென்று, உண்மையாய் மதித்து உள்ளத்திற் றுதித்து, ஊழியம் புரிந்து அன்புபாராட்டி வருவானுகில், அவ்வரசன் ஒருபிழையு மில்லாதவனுய்த் தீர்க்காயுளும் தரும விர்த்தியும் பெறுவான். அவனுளுகைக் குள்ளாகிய உயிர்களுக்குத் துர்சோபம் துர்ப் பயங்காம் துர்மரணம் துர்வியாதி முதலிய துயரஞ் சேராது. பயிர்களுக்குச் சப்த மேகங்களு முழங்கி மழைகளைப் பொழியும். யாகாதி தருமங்கள் மேன்மேலாக நடக்கும். பிரம்ம தேஜசுண்டாம். பலம்பிரபலமாகும். தைரியமே லேத்து சத்ரு ஜய முண்டாம். நெறியே முறையாம். நிதானமே தனமா யோங்கும். குலகோத்திரங்களின் குற்றமெல்லா நீங்கும். மேற்கூறிய ஐம்புலன்களும் நான் சொன்னவண்ணம் ஒரு வழிப்பட்டிருக்குமாகில், இகழ்ச்சியில்லாத புகழ்ச்சியையுடைய இராஜாராஜாக்களின் சம்பத்து வல்லமை முதலிய வெல்லாம் இவ்வுலகிற் றெய்வமாய் இருக்கு வேதமுணர்ந்த வேதியர்களின் ஆசீர்வசன பிரதாபத்தாற் கைகூடி வந்ததென்றும், கதியோடி வரத்தக்கதென்றும், உன் கருத்திலிருத்துவாய். கருணைப்பிரவாகமுள்ள தருமாராஜனே? என்றுபீஷ்மருரைக்கத் தருமாராஜன் ஐயா! இத்தன்மையான மங்களாகர மகத்துவம் பெற்ற மறையவர்கள் இராஜ தண்டனைக் குட்படுவானேன்? என்று வினவிய தரும நந்தனைப் பார்த்து, அப்பா! ஒப்பில்லாத ஆயுதமுதலிய தநுர்பாணங்களைக் கைக்கொண்டு, யுத்தமுனையிற் பிரவேசித்தால் வெற்றிபெறுகிற வீரத்திலும், உயிர்க்கொலை முதலாகிய பொல்லாத மகாபாதகங்களைச் செய்தகாலத்திலும், பிராமண கிர்த்யகர்மத்தை நித்தியானுஷ்டான தர்மத்தை விட்டுவிட்டபோதிலும், இராஜன் பிராமணர்களைத் தண்டிக்கலாம். அதனுல் அரசனுக்கு இன்பமே யல்லது, ஒரு துன்பமு மில்லை. ஆகையால், பிராமணர்களின் ஆசீர்வசன மகத்துவம் இத்தன்மையுடையது. இன்னமும் இராஜ தர்மங்களைச் சொல்லுகிறேன். கேளுமென்று தருமராஜனுக்கு மனமுருகச் சொல்ல தொடங்கினர்.

ஓ! சத்திய விரதனே! மண்பொதுத் தந்தையாகிய பிரமதேவன் பிறந்த இவ்வுலகத்தைப் பாங்காகப் படைத்து ஆத்மகோடிகளையுண்டாக்கி தேவர்களையும் அளித்தான். அப்படியாகப் பிறந்த தேவர்கள் மூவுலகத்திலும் போய்ச் சஞ்சரித்து பாபம் இப்பேர்ப்பட்டதென்றும், புண்ணியம் இத்தன்மையுடைய தென்றும், நிதானித்து அவைகளைப் பகுத்தறிந்து நடத்துவதற்கு வழி தெரியாமல் விசாரப்

பட்டு, பிரமதேவரிடத்தில் வந்து நமஸ்காரம் பண்ணி, சுவாமி பாப புண்ணியம் இப்பேர்ப்பட்டதென்று எங்களுக்குத் தெரியவில்லை! அதைத் தெரியச் செய்ய வேண்டுமென்று வருந்திக் கேட்கவும், அப்போது பிரம தேவர் லக்ஷம் அத்தியாயமாய்த் தரும சாஸ்திரம் பண்ணிப் பிரமதருமமென்று பேரிட்டு, தேவதைகளிடத்திற் கொடுத்தார். அந்தத் தரும சாஸ்திரத்தின் அர்த்தமும் தர்ம சூக்ஷமமும் தெரியாமல் மயங்கிக் கொண்டிருக்குஞ் சமயத்தில், பிரமாவினுடைய நெற்றியிலிருந்து பதினொரு உருத்திரர் பிறந்தார்கள். அவர்கள் பதினொரு பேரும் இந்தத் தருமசாஸ்திரத்தைப் பார்த்துச் சுருக்கி உலோகோபகாரமாய்ப் பதினாயிரம் அத்தியாயமாக உருத்திர தருமமெனப் பெயர் கொடுத்துப் பிரபலப்படுத்தினார்கள். அதனாலும் தேவதைக ளறிந்து கொள்ளமாட்டாமல் அலையும்போது, தேவராஜனாகிய தேவேந்திரன் ஆசையுடன் அந்தப் பதினாயிரம் அத்தியாயத்தைச் சுருக்கிச் சகலருக்கும் வெளிப்படையாய்த் தெரியும்படிக்கு, ஐயாயிரம் அத்தியாயமாக ஏற்படுத்திக்கொடுத்தான். அதைஅப்படிச்செய்தும் தருமசூக்ஷமந் தெரிந்துகொள்ள சக்தியற்றவர்களாய் மயங்கினார்கள். அதைத் தேவகுருவாகிய பிரகஸ்பதி மூவாயிரம் அத்தியாயமாக முடித்தருளினார். பின்பு அதனைச் சுக்கிராசாரியர் சுருக்கி ஆயிரம் அத்தியாயமாக ஏற்படுத்திவைத்தார். அதைப்பார்த்துச் சகலதேவதைகளுக்குஞ் சந்தேக நிவாரணமாகித்தேறும் அறிவில்லாமல், கலங்கித்துயரமடைந்து பாபத்தையே யநுசரித்து மனமிருளடைந்து அக்கியானிகளாய் விசனமுற்று, இயாவரும் ஒருபெருங் கூட்டங்கூடித் தர்மத்தை நடத்திவைப்பதற்கும் தர்மந் தப்பி நடந்தவர்களைத்தண்டிப்பதற்கும் ஒரு கர்த்த னிருக்கவேண்டுமென்று யோசித்து, மகாவிஷ்ணுவினிடத்திற்குப்போய் முறையிட்டார்கள். அந்த விஷ்ணுவானவர் பூலோகத்தில் யாவரும் புண்ணியத்தை மேற்கொண்டு நடப்பிக்கும்படியாய்த்தம்முடைய நினைப்பினாலே ஒரு மகாபுருடனை யுண்டாக்கி, அவனுக்கு விரசு என்று பெயரிட்டு அவனை நோக்கி நீ இவ்வுலகத்துக்கு ராஜாவாயிருந்து, தருமபரிபாலனம் பாபபுண்ணியம். பக்குவா பக்குவம் பார்த்து நடப்பியும். அவ்வாறு உன்சொல்லுக்கடங்கி நடவாதபேர்களைத் தகுதியாகிய தண்டனைசெய்யு மென்று ஆக்ஞாபித்து, அனுப்பிவைத்தார். அந்த விரசு என்கின்ற இராஜன் இராச்சியபரிபாலனம் பண்ணாமல் கருத்தமனென்கிற ஒரு பிள்ளையைப் பெற்று அவனுக்குப் பட்டங் கட்டிவைத்து, இப்பிரபஞ்ச வாழ்வை வெறுத்துத் தபசு பண்ணி

மேன்மை பெற்றான். அவனுடைய குமாரன் கருத்தமனென்பவன் தந்தையெவ்வழி அவ்வழி புதல்வனென்பதுபோல், சம்பத்தை விரும்பாமல் பெரும்பாலும் தவமே தனமாகக்கொண்டு தவஞ்செய்யப் போய் விட்டான். அவனுடையபிள்ளை அநங்கனென்பவன் கடல் வளைந்த காசினிமுழுமையும் திடமிகுந்த தீரத்துடன் ஆளுகைசெய்து, தருமபரிபாலன சக்கிரம் நடத்தி, மாசற்ற மனைவியைப் புணர்ந்து நெடுநாளிருந்து, சதுர்வர்ண தர்மங்களுங் குறையாமல் நடுவு நிலைமை குன்றாமல் பூமிமுழுதுங் கொண்டாடும்படிக்குப் புகழ்தேடி ஒரு பிள்ளையைப் பெற்று அவனுக்கு நன்னீதியென்னும் பெயரிட்டுச் சாஸ்திரப்பயிற்சி செய்வித்துப் பட்டாபிஷேக முடிகட்டிவிட்டு, எட்டாம்பதத்தை விரும்பித் தவஞ்செய்யப்போனான். அப்போது நன்னீதியென்னும் ராஜன் சத்தியம் சாந்தம் பொறுமை தயை தர்மம் இதுகளெல்லாவற்றையு மறந்து, காமக்குரோத லோப மோக மத மாச்சரியங்களிலே வீழ்ந்து, அவ் வாறுபகைகளையும் நீறு செய்யமாட்டாமல், அதற்குள்ளகப்பட்டுக்கொண்டு உலகமெல்லாம் பொல்லாதவனென்று சொல்லத்தக்கவனாய் நிலைகடந்து நெறிதப்பி நடந்தனன். அப்பால், இராச்சிய பரிபாலனம் பண்ணுவதற்கு இராஜனில்லாமல் அநேக முநீஸ்வரர்களும் மந்திரி முதலிய வெகுஜனங்களும் மனவருத்தமடைந்து நாட்டுக்கு இராஜனில்லாமற்போனால் தர்மங்கள் ஒன்று நடவாது, வர்ணாச்சிரம தருமந் தப்பிப்போம், வரம்புடைந்துபோம், காட்டில் மிருகங்கள் மிஞ்சிப்போம், நமக்கெல்லாம் உபத்திரவமுண்டாகும். பூமியைய ரக்ஷிக்கிற கடமை மகாவிஷ்ணுவுக்குச் சொந்தம், "மகாவிஷ்ணு பிரிதிவுபதே" என்று சுருதிவாக்கியமுண்டு; ஆகையால், அவர் முன்னிலையில் வந்த ராஜவருக்கத்தாரில், இந்த நன்னீதியென்பவனுடைய வலதுதொடையைத் தர்ப்பை இரணியனாலே கடைவோமாகில், நமக்கு ராஜன் கிடைப்பானென்று, ஒரேமனதாய் நிச்சயித்துக்கொண்டு வேதமந்திர விதிப்பிரகாரங் கடைந்தார்கள். கடையும்போது சூடெழுந்து ஒருவன் பிறந்தான். அவனெப்பேர்ப்பட்டவனென்றால், தீப்பொறிக் கிடமாகிய பொல்லாத கண்களின் காச்சலும் புலிப்பாய்ச்சலும் அண்டம் பிளக்கும்படியாகிய பெருங்கூச்சலும் திசையளாவும் கைவீச்சலுமாகப் பிறந்தான். அவனைக்கண்டு அப்பா! நீ காட்டுக்கெல்லாம் மேட்டிமையாயிருந்து தர்மந் தவறாமல் வேடர்களுக்கு அரசாகி நீதியுடன் ஆண்டுவரத் தக்கதென்று அவனைப் போக்கிவிட்டு, அப்பால் பரம கருணாநிதியை தியானித்து

அந்த நன்னீதியின் வலதுபுயத்தை மறுதரங் கடைந்தார்கள். அதி லிருந்து புண்ணிய தேகமும் விண்ணின் மின்னலிழிந்து வருவது போல், ஆரகேயூர மணிமகர குண்டல கிரீடத்துடன் கரத்தில் தனுப் பாணந்தரித்துத் தயாகரத்துடன் பரமாகாரனென்கிற இராஜ னொரு வன்பிறந்தான். அப்போது தோன்றிய பரமா காரனென்னும் பார்த்தி பன், பிராமணர் முதலாகிய ரிஷியீஸ்வரரைக்கண்டு அதிசயப்பட்டு ஆச்சரியமடைந்து ஆநந்தசித்தனாய் பிரதக்ஷண நமஸ்காரம் புரிந்து ஆசீர்வசன மேற்று சுவாமிகளே! அடியேன் செய்ய வேண்டிய வூ ழிய மின்னதென்று கட்டளையிட்டால் அப்படிச்செய்து வருகிறே னென்று வணங்கிநின்றான்.

2. அரசன் நடக்கவேண்டிய முறைமை தெளிவித்தல்.

அப்படி வணங்கிய பரமாகாரனை பார்த்திபனை மகாரிஷிகள் பெரியவர்கள் முதலியபேரும் கட்டியணைத்துக் கடாக்ஷித்து ஓ! இரா ஜகுலதீபமே? இப்பூமிக்கு நீ இராஜாவாகியிருந்து வெள்ளைக்குடை நீழலில் கொள்ளையாகிய புகழைத்தேடி அரசாளவேண்டு மென்று, சகல சாஸ்திரங்களையும் தருமங்களையும் நீதியும் சதுர்வேதமும் சொ ல்லி நல்ல முகூர்த்தத்தில் மகுடாபிஷேகம் பண்ணிவைத்து, தீர்க்கா யுசும் திரவிய விர்த்தியும் திடகாத்திரமும் உண்டாகும்படி ஆசீர்வதி த்தார்கள். அந்தப் பரமாகார மகாராஜன் சத்தியத்துடனே தர்மந்தப் பாமல் இராச்சியபாரம் பண்ணிக்கொண்டிருக்கும்போது, இப்பரமா கார இராஜனுக்கு வல்லமையுள்ள புருஷர்கள் துணையாகவேண்டுமெ ன்று நிச்சயித்து மூன்றுந்தரம் முன்சொல்லிய நன்னீதிமனுடைய எலும்பைக் கடைந்தபோது அதிலிருந்து இருவர்பிறந்தார்கள். அவர் கள் மிகுந்த சொந்தைரியத்தைப்பொருந்தி, தாதா விதாதா என்னும் பேர் பெற்றவர்கள் அவர்களிரண்டுபேரும் பரமாகார மகாராஜனுக் குத் துணையாயிருந்தும் அக்காலையில் சுக்கிராசாரியார் குருவாகவும் மந்திரியாகவுமிருந்து. இரத கஜ துரக பதாதிகளான நால்வகைச்சே னைகளையும் விஸ்தாரமாக வைத்துக்கொண்டு பிரம்மாண்டமாகிய சுற் றுமதில் கோபுரம் அகழி மலை ஆறு நாடு அரண் நகரமுதலிய பட்டண மும்கோட்டையும், ஒன்றிற்கொன்று குறைவில்லாத சம்பிரமமங்கள கரமாயிருக்கத்தக்கதாகச் சபாமண்டபத்திலமைந்த சிங்காசனத்தில் வீற்றிருந்து, அசத்திய முதலிய பகை ஆறுங் கடந்து சத்திய நித்திய தருமத்தின்வழி நடத்தி முறை நெறிதப்பிய மூடரைத்தண்டித்து,

மூத்திக்கு வித்தாகிய முதல்வரைக்கும்பிட்டு எல்லாவுலகும் நல்லவ னென்று சொல்லும்படிக்கே வல்லமையுடன் ஆண்டுவந்து. யா காதி அவிர்ப்பாகங்களால் இந்திரன்முதலாகியஅந்தரதேவதைகளும் மந்திரதேவதைகளும் கொண்டாடும்படியாய்ஆக்கினு சக்கரத்தாணை செலுத்தினுன். அவ்வரசனுடைய கால்வழியின் தவத்தால் வந்த அரசர்களியாவரும் சத்தியமும் சகலதர்மங்களும் மேற்கொண்டு மே லாகிய வேதமுணர்ந்தபிராமணர்களைப் பூசித்து வாழ்ந்துவந்தார்கள். மேலும் ராஜன் உலகத்தைக்காத்து ரக்ஷிக்கவும், ஆறிலொருகடமை வாங்கிக்கொள்ளவும், இப்படிக்கெல்லாம் சில நிபந்தனையைப் பிராம ணர்கள் ஏற்படுத்திவைத்து, எங்களேற்பாட்டின் படிக்கு நடந்தால், உனக்குச் சத்தியமும் நீதியும் ஜயமுமுண்டு. சத்தியந்தப்பி அசத் தியத்திற் பிரவேசித்து அதிக ஆசைப்படுவையாகில், தரித்திரமும் சாபனையும் ஆயுசு குறைவும் அபஜயமும் நேரிடும். இதன்றியும் எப்போதும் சத்துருஜயமே செய்து எதிரி தன்னை வணங்கவும், கப்ப ணம் கட்டவும் பண்ணிக்கொள்ளும் பாக்கியத்தில் கண்வைக்கவே ண்டும். ஏமாறப்படாது. குடிகளும் படைகளும் கொழுத்திருக்க வேண்டும். தன்னிடத்தில் நெருங்கிய நேசமான பேர்களானாலும் இராஜன் கொலுவிருக்கும் போது வித்தியாசமில்லாமல் வணங்கிப் பணியவேண்டும். இராஜனுக்கு நேசமானவர்கள் பணியாவிடில் மற்ற மோசமான சத்துருக்கள் மதியார்கள். இராஜன் மகாவிஷ்ணுவின் சொரூபமென்று மறைகளிற் சொல்லப்பட்டிருக்கின்றது; ஆதலால் அந்த அம்சமிருப்பவனுக்கே இராஜாங்கம் வருமென்று வேதமநு நீதி உரைக்கின்றது.

இராச்சியத்திற்கு இராஜனிருக்கவேண்டும். இல்லாமற்போனுல், பூமி அனுதாணையாய்ப் போகும். தருமம் நடவாது. நன்மை தீமைக ளும் விடுபட்டுப்போம். வருணுச்சிரமமும் மறையாச்சிரமும் கெட்டுப் போம். இவைகளெல்லாம் நல்ல இராஜாங்கத்தினுல் அழியாமலிருக்க வேண்டும். இராஜ பயமிருக்கவேண்டும். பயந்து நடக்கவேண்டும். ஆகையால் இராஜனில்லாமலிருக்கும் நாடு மிருக முலாவுங்காடு எனப்படும். முக்கியம் வேதமுணர்ந்த பிராமணர்மீது விசுவாசமுள்ள இராஜனிருக்கவேண்டுமென்றுசொல்ல, ஸ்ரீகிருஷ்ணபகவான் முதலிய பேருங் கேட்டுச் சந்தோஷித்து, தருமராஜன் வீஷ்மரைப்பணிந்து, ஓ! கருணுநிதியே வருணுச்சிரமமென்பதும், மறையாச் சிரமமென்ப தும், விபரமாயறியும்படிக்கு விரித்துரைக்க வேண்டுமென்று கேட்க, வீஷ்மர் மேலுஞ் சொல்லத்தொடங்கினுர்.

வருணாச்சிரமமும் மறையாச்சிரமமும் இன்னதெனப் போதித்தல்.

3. பிராமண ரொழுக்கம்.

கேளும் ! தருமநந்தனு ! பரிசுத்தமாகிய பிராமணர் வருணாசிரமமென்று சொல்லப்பட்ட நான்கு ஜாதிகளுக்கும் முதற்குலத்தோர். அந்தமேலான குலத்தோராகிய பிராமணர், செய்யவேண்டிய கிரமங்களைப் பொதுவிதியாகப் பேசி யிருக்கின்றார்கள்; அவற்றை நான் எடுத்து உமக்குச் சொல்லுகிறேன் கேளும்.

வேதியரென்போர் குற்றஞ்செய்யாமலும், கோபம்வையாமலும், சத்தியந்தப்பாமலும், ஆசையில்லாமலும், தருமமறவாமலும், பூதத்தை ஈஸ்வர கியாநத்துடன் பதிவிரதா யோக்கியதையுள்ள கந்நிகையைக் கலியாணம் பண்ணி, சுசி ஆசாரத்துடன் நித்தியஸ்நாநம் ஜபம் தப கரும தருமாக்கிநி,காயத்திரி முதலிய காரியங்களில் வழுவில்லாமற் பழியில்லாமல், நல்வழியாய் நடத்துவது பிராமணவிதி. இன்னமும் வேதமோதல் யாகஞ்செய்தல் வேதமோதுவித்தல் யாகம் பண்ணுவித்தல் தபசுசெய்தல் தெய்வத்தைப் போற்றல் தேவாராதனை முதலிய சத்கிருத்திய தருமம் பண்ணுதல் ஔபாசநம் புரிதல் அக்கிநிசாக்ஷியாகக் கலியாணஞ் செய்தல், அரசர்களுக்கு விவாகம் நடத்தி வைத்தல், அரசர் முதலிய எவர்கள் கொடுத்தாலும் தாநம் ஏற்றல் தாநமீதல், அதிதி அப்பியாசிகளுக்கு இரங்கி அன்னம்படைத்தல், இத்தியாதி உத்தமகுணங்களும் உடையவன் பிராமணன். இவர்களுக்கு நீரின்முன் ஜபமும் நெருப்பின்முன் தவமுஞ் செய்வது முக்கியமான ஒழுக்க மாகும்.

4. க்ஷத்திரிய ரொழுக்கம.

இனி இராஜமுறைமை சொல்லுகிறேன். கேளும்! ஏந்தலே! அரசனானவன் அவயவங் குறையாதவனும் அழகுடையவனும், சூரிய சந்திர க்ஷத்திரிய குல கோத்திரக் கொழுமை பெற்றவனும்,வேதாத்தியயநஞ்செய்து பிராமணரைக்கொண்டே யக்கியஞ் செய்வித்து, வில் வித்தை யானை இரதம் குதிரை தேர் கத்தி கேடயம் பாங்கு வரிசை இவைமுதலியதும் பழகி,நால் வகைச் சேனைகளையுங் காப்பாற்றி, சத்

திருவின்பேரில் சண்டைக்குப்போய் ஜயம்பெற்று,தன் தாரமே தாரம் பரதாரம்சகோதரம், கரவிடமில்லாமல் மன்னுயிரைத் தன்னுயிர் போல் மதித்துப் பொதுமையாயிருந்து திரவியஞ் சேகரித்துப் பரதேசிமுதலிய யாசகர்களுக்கு முன்பின் பாராமற் கொடுத்து, பக்ஷபாரமில்லாமல் பராராஜ பயங்கரனாயிருந்து,அரசாள்வது க்ஷத்திரியருக்கு முக்கிய தருமமாகும்.

5. வைசிய ரொழுக்கம்.

வைசியதருமந்தப்பாமல்,திரவியஞ் சம்பாதித்து, உழவுவாணிபஞ் செய்து பசுவினங்காத்து, நாணயமில்லாரிடத்தில், கொடுக்கல் வாங்கல் செய்யாதிருந்து,பொய்பேசாமல் பரதாரம் விரும்பாமல், சத்தியவழியினின்று புண்ணியந்தேடி நாவுதவறாமல்,பிராமணபூஜை புரிந்து, அன்னதானமிட்டுத் தேவாராதனை முதலிய நோன்பு சுபசோபனாதிகளிற் பொருட்செலவழித்துப் பூரணமாக முடித்துப் பற்றுவரவு கணக்கிற் சற்றும் பிரளாமல், சித்த மொருமித்துக் கோபத்தையடக்கிப் பொறுமையுடனிருந்து,அரசனது சன்மானம் பெற்றுக் காணியாட்சிக்குரியவர்களாகி பிதுர் கருமமுதலியதும் வழுவாமல் வாழ்தலே வைசியதருமம் என்று அறிக.

6. சூத்திர தருமம்.

மேற்கூறிய பிரம்ம க்ஷத்திரிய வைசியர்களாகிய மூன்றுஜாதிகளுக்கும் பணிவிடை உபசாரம் பண்ணி உழுது பயிரிட்டுபூமிக்குக் காணியாக்ஷிக்காரனாயிருந்து சந்நியாசி தரித்திரன் பிதுர்க்கள் பாலர் சகலமானபேருக்கும் உதவிசெய்து தேவதாபக்தி ஆசாரிய வைதீககிருத்திய குருத்துவ பக்தி பூண்டு, பெரியோரைப் பணிதல் பசுகாத்தல் இவை முதலாகிய தொழில்களில் ஆளாகியிருப்பது சூத்திர தருமமாகும்.

கேளும் தருமநந்தனா ! இனி ஆத்மலாபமாகிய நான்கு ஆசிரம லக்ஷணஞ் சொல்லுகிறேன் அதாவது பிரமசரியம் இல்லறம் வானப்பிரஸ்தம் சந்நியாசமுமாம்.

ஆன்ம லாப மாகிய நான் காசிர்மங்க ளொழுக்கம்.

7. பிரமசரியம்.

இதில் பிரமச்சாரி நடக்கவேண்டிய முறை என்னவெனில்,குரு வணக்கம் வேதாகமப்பயிற்சி, ஜபம் தபம் விதிவழிக் கருமம், ஒரு வேளை பிக்ஷை, தருப்பை சமுத்து புட்பம் இவைமுதலியன கொண்டு வந்து ஆசிரியர் பணிவிடைக்கு உபயோகப்படுத்தல், சந்தன சுகந்த பரிமள கந்த தைல தாம்பூலாதிகள் விலக்கல் எண்ணெயிட்டு முழுகாமல் சுத்த ஜலத்தில் ஸ்நாநம்பண்ணல், கோவணத்தனித்தனாய் நித்திரையிலும் புத்தகம்மறவாதிருத்தல், ஜீவகாருண்யமுடைமை முதலியவெல்லாம் முதலாசிரமத்தின் செய்கை.

8. இல்லறத் தாசிரமம்.

இல்லறத்தன் நாணம் மடம் அச்சம் பயிர்ப்பு என்னும் நான்கு குணங்களையும் இனிய குரலோசையும் கற்புடைமை வாய்ந்த நற்குண நற்செய்கை தோய்ந்த பதிவிரதாகன்னிகையை கலியாணம் பண்ணிக்கொண்டு அவளைவிட்டு வேறு வழியிற்புகாமல் அவளுடன்கூடி வாழ்ந்து தாய்தந்தையரைப்பூசித்து, மகிழ்வன், பாலர்கள் பெண்கள் நோயினர் முதலியோரை ஆதரித்து அதிதி அப்பியாசி பிதுர்த்தேவதைமுதலியபேர்களுக்கு இனிய வசனத்துடன் விருந்தமுதூட்டி, ஜீவஹிம்சைசெய்யாமல் பொய்சொல்லாமல் வஞ்சனை கபடம் பொறாமை இல்லாமல் பிறருடைமையின்பேரில் ஆசைப்படாமல், இழிமைமுதலாகிய கள்ளுண்ணாமல் மண்ணிலிருந்து, பெண்ணோரஞ் சொல்லாமல் பக்ஷபாரமாய் வழக்கழிவு உரையாமல் பரதேசிகளுக்கு உபசாரத்துடன் பிக்ஷைவைத்து, பந்துக்கள் சுற்றத்தாரை நிந்தனை, சொல்லாது பாதுகாத்து, தேவதா பூஜைபுரிந்து நோன்பு முதலிய விரதமிருந்து, தேவதர்ப்பணம் ரிஷிதர்ப்பணம் பிதுர்தர்ப்பணம் ஆசாரியதருப்பணமுஞ் செய்து, தேவதாபக்தி பிராமண விசுவாசம் பந்துஜந நேசம் சுப சோபன சந்தோஷங்க ளுடன் இருக்க வேண்டியவன், கிரஹஸ்தனென்னும் இல்லறத்தானாகும்.

9. வானப் பிரஸ்தா சிர்மம்.

வானப்பிரஸ்தன் அக்கினியுடனேயும் பெண்ஜாதி யுடனேயும் காட்டுக்குப்போய்ப் புனித மாகிய ஆசிர்மங் கட்டிக்கொண்டு, போஜனத்தை யொழித்து கந்தமூலம் காய் இலை சருகு கனி முதலியவற்றைப்புசித்து வீண்காலம் போக்காமல், பிரம்மநிஷ்டை கூடி காற்றுக்கும் பனிக்கும் மழைக்கும் வெய்யலுக்கும் பயப்படாம லிருந்து, பஞ்சாக்கினி மத்தியில் தபசு பண்ணுகிறது மன்றி, தன்வசமாய் எல்லாவற்றையும் ஆக்கிக் கொள்ளும் ஐம்புலன்களையும் ஆறு பகையாகிய காமகுரோத,லோப மோக மத மாச்சரியங்களையும் அடக்கித் தன்வசப்படுத்திக் கலைஞானங்களும் கைவல்லியமாய்த் தேர்ந்து கர்ம பூமியின் வாசனை விஷயத்தைக் கனவிலுங் கருதாமலிருப்பதே வானப்பிரஸ்த. மாகிய மூன்றாவது ஆசிர்மத்தின் முறை.

10. சந்நியாச ஆசிர்மம்.

நான்காவ தாகிய சகலமு நாசமான சந்நியாசம் என்னும் ஆசிர்மத்தைக் கேளும், தருமநந்தனு! அதாவது:—பெண்டு பிள்ளை பண்டு பதார்த்தமாகிய பாசபந்த மறுத்து ஓரிடத்திலிராமல் உலகமெங்கும் சஞ்சரித்தல், கிடைத்தபோது உண்ணல் உடுத்தல் படுக்கை முதலிய பக்குவம்; அறுசுவை சிங்காரம் பாராமல் அநுபவித்தல், ஒருவருடன் பேசாமல் மௌனமாதல் நல்லதென்றும் தீய தென்றும் நாடாதிருத்தல். சிகை பூணூல், இதைச் சார்ந்ததருமக் கிரியைகளை நீக்கல் காவிகாம்பரம் போர்த்தல் தண்டுகமண்டல மேற்றல் வேதசாஸ்திர புராணமுதலிய நூலெல்லாம் ஐயந் திரிபு அற வறிதல், மூன்று காலமும் முழுகல் சகலமும் பிரமார்ப்பணம் பண்ணல், நான் எனதுஎன்னும் செருக்கறுத்தல் பொறுமையாதல் விருப்பும் வெறுப்பும் முறைமையாகிய ஒப்புர வறிதலும் விட்டுவிடல் இன்னமுள்ள அநுஷ்டானங்கள் பலவுண்டு இவையெல்லாம்உடையவர்களை அதிதிகளென்றுரைக்கலாம். ஆனால் இந்நான்காவது அதிதிஆச்சிரமம்தபோபலமுள்ள பிரம்ஹ ஞானிகளாகிய பிராமணர்களுக்குத்தகுமே யல்லது மற்றபேர்களுக்குக் கைகூடாது. ஆகிலும் ஒருபரிகாரமாய்க் கூடியிருந்தாலும் நெறியுடனிருக்கலாம். சூத்திரனுக்கு இல்லறமே நல்லறமாகையால் மற்ற மூன்றுஆச்சிரமமும் அனுசரிக்கவேண்டியதில்லை.

அப்படிக்கு மேலாகிய காரியங்களை அபேக்ஷித்துத் தாங்களும் பெரியவர்களாகி உயர்ந்த பதத்தைப் பெறவேண்டுமென்று ஏக்கங்கொண்டு சற்சீலராயிருப்பதே மேலாகிய பதத்திற் சேர்த்துவிடுமென்று பீஷ்மாசாரியர்சொல்ல தருமராஜன் தேவரீர்! திருவாய்மலர்ந்த தருமமானது தேவாமிர்தத்திலுஞ் சிறந்த இனிமையைத்தருகின்றது என்று துதித்துநின்று தரும கருமங்களை யனுசரித்து தகுதியாக நடந்து கடைத்தேறுவதற்கு இராஜன்தவிர வேறொருவரால் இயலாதோ வென்று என்மனம் சந்தேகத்தைத்தழுவுகின்றது அந்த சந்தேகநிவிர்த்தியாகத் தயைசெய்யு மென்று தருமராஜன்கேட்க வீஷ்டுமர் சொல்லத்தொடங்கினார்.

அரசருடைய புண்ணிய மகிமையுரைத்தல்.

கேளும் தருமநந்தனே! பூர்வ புண்ணியகிருத்தியத்தினால் மேலுலகில் தேவபோகமனுபவித்து மீண்டும்பூலோகத்தில்வரும் இராஜனே பிராமணன். இராஜனே பூலோகதருமதேவதை இராஜனே உலகத்திற்குத் தெய்வம், இராஜனே லோகரக்ஷகன், இராஜனே சம்மாரகர்த்தன். இராஜனே இத்தன்மையாகிய குணங்களைவாய்ந்தவன் இராஜன் இராஜனில்லாவிட்டால் தருமம், புண்ணியம், சத்தியம் யாகம், வேதம், தவம், தானம், மழை, கோயில், குளம், சத்திரம், சாவடி, ஒன்றுமுதவாது கிரமமாய் நடவாது. ஸ்திரீகள் முறை தப்பிப் போவார்கள். கருப்ப வுற்பத்தியில்லாமற் குறையும் புருஷர்கள் குலாச்சாரம் சத்தியம், சாந்தம், இவைகள் முதலியவற்றைவிட்டுத் தப்பிநடப்பார்கள் மழைபெய்யாது மாடுபலியாது, குடி., படைநோயும்,கோத்திரமாயும், ஆதலால்,இராஜன் உலகத்திற்குப் பிராணனுவன். இராஜனே சமஸ்தமான உயிர்களுக்கும் நடுவுநிலையிலிருந்து கிருபையுடன் ஆளுங்கடவுள் போலாம் மேலும்சத்தியந்தப்பாமல் செங்கோல் செலுத்துவானுகில், மேற்கூறிய மூன்றுமாச்சிரமத்தின்பலனும் தபோபலனும், வேள்விப்பலனும் வேந்தனுக் குண்டாம். தேவாலயம் பிரமாலயம், ரிஷியீஸ்வரர்கள் முதலானவர்களின், யாகம், யோகம், தபமுதலியவெல்லாம், அவனாலே நடக்கவேண்டும். இராஜன் கிருபையினால் உலகத்திலுள்ளபேர்களுக்குத் தாய்தந்தையை விட்டு பிரியாதிருப்பதுபோல், அன்புபொருந்தி ஆதரிப்பன் மற்ற ஆச்சிரமத்தவர்களெல்லாம் அந்தராஜாவுக்குச் சகலமரியாதையும்நடத்தும் இனிமையான அன்பர்களென்று வேதத்திற்சொல்லியிருக்கின்றது. இன்னும் இரா

ஜனில்லாதநாடு சந்திர சூரியர்நுழையாக்காடு. புத்திரச்செல்வ மில்லாதவீடு, பிராணன்போக்கிய பெருஞ்சடக் கூடு. என்றுரைத்த காங்கேயனை மூன்றுதரம்வலம்புரிந்து, பணிந்து, நிற்கின்ற தருமராஜனாகிய பேரனை நோக்கி ஆசீர்வசனம்புகன்று, ஆசைப்பெருக்குடன் ஆசனத்திலிருக்க உத்தரவுசெய்து, அப்பனே! இன்னமும் நீகேட்கவேண்டிய தருமசந்தேகங்களைக் கேளென்று சொல்லத் தருமராஜன் வணங்கி கேட்கத்தொடங்கினார்.

11. அரசர்செலுத்தும் நீதியுரைத்தல்.

ஐயா! பூலோகத்திற்குத் தேவாம்சம்பெற்ற இராஜன், ராச்சிய பாரம் பண்ணவேண்டியமுறைமை யெப்படி? அதை யெனக்கு விரித்துரைக்கவேண்டுமென்று கேட்க, வீஷ்டுமர் சொல்லத்தொடங்கினார் விவேகம்பெற்ற வேந்தனே! அரசனுக்கு குடை, கொடி, முரசு, வாத்தியம், அஸ்திரந்தொடுத்தபடை விஸ்தார மாகியகுடி, செழிப்பாகிய பயிர், நீதி தெரிந்த மந்திரி சேதி யறிந்த தந்திரி, மீதிலுயர்ந்த மதில், மதிலுருப்பு முத்திரையமைந்தகோட்டை செடி நிறைந்த மலை, வெற்றிமாலை, வேலாயுதம், கரி, பரி, தேர், காலாள், இரத்தினபாரணங்கள் நவரத்தினகசிதகுண்டலம், ஆரகேயூர, கிரீடம், சந்தன பரிமளகுங்கும, கதம்ப கஸ்தூரி புனுகு, சவ்வாது, அஸ்திரசஸ்திரம், அநேகபூமி, பொக்கிஷ நிரப்பல் கொடிபடர்ந்த மேடு, குடிகளடர்ந்தநாடு, கொலுக்கூடமமைந்தநகர், குறைவில்லா வெள்ளநிறைந்த ஆறு, வேத மந்திர தொந்தமுள்ள வேள்வி, உயிருக்குயிராகிய தோழன், நான்கு வேதம் ஆறுசாஸ்திரம், பதினெண்புராணம், உபநிடதம், அறுபத்துநான்கு கலைக்ஞானம், தனுர்வேதம், தருமசாஸ்திரம், நீதிசாஸ்திரம் புருடலக்ஷணம், ஸ்திரீலக்ஷணம், இதுகளெல்லாம் உடைத்தா யிருக்க வேண்டும். இன்னும் சாதுசங்கம், தடைபடாக்கேள்வியோர், சாதுரியவான்கள் இவர்களுடன் பெரியாரைத்துணைக்கொள்ளவேண்டும். நல்ல மனதினளாய், மிருதுவசனமுடையவளாய் அதி ரூபவதியும் கற்பில் சிறந்த மாசற்றமனைவியும் புகழாபரணம் பூணும்பிள்ளையும், சத்தியவாக்கும், தனக்கு சிரோன்மணியாகிய மேன்மையைக் கோறப்பட்ட பந்து ஜனங்களும், அன்பு பாராட்டிய அண்ணன் தம்பிகளும் பிராணனை விரும்பாத மானமுள்ளவீரனும், ஆசாரந்தப்பாததிருப்பவனும் சோர்வு மடிமை அதயிரியமில்லாதவனுமாய், சத்துருவின்பேரிற் சண்டைக்குப்போங்காலமும் போகத்தகாதகாலமும், தன்பலமும்

துணைபலமும் எதிரியின்பலமும்காலபலமும் அப்போதைக்கப்போதே வேவுகாரரால் தெரிந்துகொள்ளவெண்டும்.செங்கோல்செலுத்துந் திறமையும் முறைமையும் கண்ணுக் கணிகலமாகிய கண்ணோட்டமும் எண்ணித்துணியுங்கருமமு மிருக்கவேண்டும். வரும் விருந்தினர்களுக்கு வரிசைதந்து உபசரித்தலும், ஆபத்து வந்த காலத்தில் தயிரியம் விடாமலும், மறுவிக்ஞான மார்க்கமும், திரவியம் சேர்ப்பிக்குந்திறமும், ஆறிலொருகடமைவாங்கும் அறமும், குடியானவர்கள் பெற்ற ஐந்துகூறில் ஒருகூறு போஜனமும், ஒருபங்கு விளை முதலும் போக, மற்ற யவை தருமத்தின் வழியே தென்புலத்தார்க்கும் தேவதைகளுக்கும், விருந்தினர்களுக்கும் சுற்றத்தார்களுக்கும் குறைவின்றி செலவழிக்க அதைப்பார்த்துத் திட்டமாய் நடத்தி வரவேண்டிய, செல்வமும்,சாம, பேத, தான, தண்ட, மென்னும் உபாயம் நான்கில்; தண்டம் தவிர, மற்றமூன்றிலும்பார்த்துமுடியாமற் போமாகில், நான்காவது தண்டம்நாட்டி விடவேணடும். அவசரப்பட்டு நிதானமின்றி கோபாக்கிரமமாய்கொள்ளப் படாது. அப்படி செய்யில் அதனுல் பழியும், பாவமும், பட்டத்திற்கு இடையூறும்பாராமல்வரும். இந்த நான்கு உபாயத்தை ஒருசத்துருவினிடத்தில் மாத்திரமல்ல, சிநேகனிடத்திலும் செலுத்திப்பார்க்கவேண்டும். பின்னும்குத்துக்கால்,கொடுங்கை, அச்சுமச்சு, வண்ணமுதலிய, இருசு, சிகரகலசம், குடை,கொடி,தோரணம்,ஆலவட்டம், இதுகளமைந்ததேரும், இரத்தினங்கள் பதித்த, தங்கக் கட்டு, வெள்ளிக் கட்டு, செம்புக் கட்டு, இரும்புக் கட்டு, முதலிய பூண்களிட்டு, குச்சுகள் மாட்டிக் கத்திகள்பூட்டி, கும்பமத்தகம்பெற்று, மும்மதம்பொழிந்து, இறுமாந்து, ஏழு உறுப்பும் உயர்ந்து, இருக்கப்பட்ட, அரச குஞ்சரமும், அஞ்சுகதிகளும், பின்னிட்டுப்போக, முன்னிட்டோடும் குதிரைகளும், சண்டை யென்று கேட்டவுடனேசந்தோஷங்கொண்டு சம்பிரமங்களங்கொண்டாடுங் கால்பலங்களும், இந்தக்கால்பலங்களில் வில்காரரென்றும், வேல்காரரென்றும், வாள்காரரென்றும், மூன்றுபிரிவுண்டு, முன்சொன்ன இம்மூவகைச் சேனையுஞ் சேர்த்து - ஆறுவிதப்படை யென்பாருமுளர். இதல்லாமல் ஆறுவிதப்படையாவது ; பந்துக்களின்மிகுந்தவர் படை, இப்போது எதிர்க்கப்போகிற சத்துருவின்பேரில், முன் எதிர்காட்டிசண்டைக்குப்போய்ச்செயிக்கமாட்டாமல் இளைத்துவந்துவிட்டவர்கள்,நானும் வருகிறேனென்று சேர்ந்தபடை, பகையில்லாமல் சவுக்கியமாய் அரசுபுரியும் அவர்களின் படை, தீவு தீவாந்திரங்களில்-பெருக்கமாய் வைத்திருக்கிறபடை, பகை நேரிட்டகாலத்தில் பொரு

ட்செலவுசெய்து-நூதனமாய் வைக்கிறதற்கு கால்படை, தன்னிடத்திலிருக்குஞ் சொந்தப்படை, இவை ஆறுவிதப் படையாகும், இவைகளை யெல்லாம் அரசன் தன்பிராணனைப் போல் காப்பாற்ற வேண்டும். பழமையாய்ப் பூர்வா பூர்விகமாயிருந்து அநுபோகந் தெரிந்தவர்கள், அற்ப உத்தியோகத்தி லிருந்தாலும் - உயர்ந்த வேலையி லிருந்தாலும், வேலையில்லாதிருந்தாலும், அவர்களை சொற்ப குற்றங்களால் தள்ளிவிடலாகாது. புதிதாய் ஒருத்தன்வந்து எத்தனைவித நன்மைகளைக்காட்டி அநுபோகந் தெரிந்தவனைப்போற்பேசி, இரவும் பகலும் பாடு பட்டாலும், அவனுடைய குணாதிசயங்களையும் பிறந்தவிடமுதலிய காரியா காரியங்களையும் விசாரிக்காமல் அவனைச்சேர்த்து, உத்தியோகத்தில் வைத்துக்கொள்ளக் கூடாது - உயர்ந்தவர்க் குயர்ந்தஉத்தமனே; இதற்கொரு திருஷ்டாந்தஞ் சொல்லுகிறேன்கேளும்.

12. அரசன்சிற்றினஞ் சேர்தலால்வருந் துன்பமும் நன் மந்திரிகளைக் கூடினசுகமும் வருமாறு.

கேளும் தருமராஜனே! இராஜன் அற்பமனிதனைச் சேர்க்கலாகாது. அவர்களால் பெரியகாரியம் ஆகமாட்டாது. தீமைவிளையுமல்லது நன்மைவிளையாது. அவர்களுக்கு என்ன உபகாரஞ் செய்த போதிலும் எவ்வளவு சகாயம் பண்ணின போதிலும், இவர்களாலே செம்மைப்படுவோமென்று ஒருக்காலுஞ் சொல்லார்கள். பலநாளுதவிசெய்து ஒருநாளுதவாவிட்டால் பலநாளுஞ் செய்தஉதவி பாழாய்ப்போம், கமுகமரம்; நித்தியந் தண்ணீர்விடாமற் போனால் எப்படிவாடுமோ, அப்படிப்போல் முகம்வாடி வம்புவார்த்தைக ளாடி அபகாரம் பண்ணுவார்கள். நமக்குப்பகையா யிருப்பவருடன் உற வாடி நமது உண்மைகளை வெளியிட்டு நமக்குக்கேடுவிளைவிப்பார்கள்.

அதற்குத் திருஷ்டாந்தமாக ஒரு கதைசொல்லுகிறேன் கேளும். தரும சொரூபியெ ஒருவனத்தில் பர்ணசாலைகட்டிக்கொண்டு அநுபமரென்கிற ரிஷீஸ்வரர் தபசுபண்ணிக் குற்றமற்றவராய் இடையூறுகளெல்லாவற்றையுங் களைந்து விரதத்திற் சிறந்து வெகுநாளிருக்கிற நாளையில், அந்தக்காட்டிலிருக்கின்ற மிருகங்களெல்லாம் அவ ரண்டையில் வந்து நமஸ்காரம் பண்ணிப் பேதமில்லாமல் பய மற்றிருந்து அவருக்கு வேண்டிய உபசாரங்களையும் தங்களா லியன்ற மாத்திரம்

உபகாரம்செய்துக்கொண்டுவரும். அந்த அநுபமரென்கிற ரிஷீஸ்வரர், அம்மிருகங்களிடத்தில் நிரம்பியதயவாய், அவைகளுக்கு ஒருதுன்ப மும்வரவொட்டாமல் பாதுகாத்துக் கொண்டு, தன்னுயிர்போல்பக்ஷம் வைத்து வருவர். இப்படிக்கிருக்க, அந்தந்தக் காட்டிலுமுள்ள மிருகங்க ளெல்லாம் இவருடைய பர்ணசாலையைச் சூழ்ந்துக்கொண்டு, தங்கள் தங்களுக் கிச்சையான இரையைப்புசித்து சுதேச்சையாய் - இந்த ரிஷீஸ்வரனை வணங்கிக்கொண்டு பிரியாமலிருக்கிறபோது, ஒரு ஆண் நாயானது நாட்டிலிருந்து சிறுமை யடைந்து காட்டிற் புகுந்து இரு பைக்கடலாகியும் தயாரசமாகியும், சிவகாருண்யமாகியும், இராநின்ற இந்த அநுபமரென்கிற மகாரிஷியினிடத்திற்கு வந்து வாலைக் குழை த்து, வாய்விட்டிரைந்து, அவரைவணங்கிக்கொண்டது. அந்தமகாநு பாவர் இதன்விஷயத்திலும் அன்புடையவராயிருந்தார். அவரெழுந்து போனால் இந்த நாயும் கூடவே போகிறது. அவர் உட்கார்ந்தால் அவ ருக்கெதிரில் இந்தநாயும் இருக்கிறது. அவர்படுத்தால் இதுவும் படு க்கிறது. அவர்எழுந்தபோது சீக்கிரம் எழுந்துவிழுந்து தெண்டனிடு கிறது. அவருடையபாதங்களை முகந்து நாவினால் நக்குகிறது. நேருக் கு நேர்நின்று உடம்பை குலிக்கி சந்தோஷக் குரைப்பு குரைக்கிறது. இப்படிக்கு இரவும் பகலும் நீக்க மில்லாமலும் தூக்க மில்லாமலு ம், அதிகப் பிரீதியாய்க் காத்துக் கொண்டிருந்த நாயின்பேரில் அந் தரிஷிக்கு ஆச்சரியம் பிறந்து, அற்புத மடைந்து அந்தச்சுணங்க னிடத்தில் மிகுந்த தய வுடையவரா யிருந்தார். இப்படி யிருக்கிற போது தவ சிரேஷ்டராகிய அந்த முநியை யடுத்திருந்த ஒரு கலை மான் தங்களினத்துடன் பிள்ளை குட்டிகளும் வெருண்டு, தன்கொ ம்பைப் பூமியிற்றாழ்த்தி மருண்டு கும்மாளமிட்டு, இந்தநாயைக் குத் திக் கொல்லவேண்டு மென்றுஎழுந்து வருங்காலையில், அதை அந்த மகாரிஷிகண்டு இரக்கமுடையவராய் பயந்து தன்னைச் சரண மடைந்த பெரிய நாயைக்காக்க வேண்டுமென்று கருதி, தன் கமண்ட லத்திலிருந்த சலத்தைத் தெளித்து கையிற் பிடித்திருந்த தண்டி னால் தட்டினார். அப்படித் தட்டவே அவருடைய தபோ பலத்தி னால் அந்த நாயானது வாயுதேவனுக்கு வாகனமாகிய கலையைப்போல் மேன்மேலாக உயர்ந்து தலைநிமிர்ந்து கொம்புகள் பிணைத்துப் பாந்து உயர்ந்து நெறித்து முறித்துக் குறித்து பாய்ந்து, எதிர்த்து வந்த மானின்பேரில் - அதிர்த்துச் சண்டைசெய்ய விட, மெய்ம்மான் ஓடிப் போகவும், நாயாகியமான் செயிக்கவுஞ் செய்து, அந்தமானுருவத்து டன் சில நாள்வைத்துக்கொண் டிருந்தார். அப்படியாயிருந்த அந்த

நாயானது, சிலநாள்வரைக்கும் மகாரிஷியின்கால்மாட்டிலே படுத்துக்கொண்டிருந்தது. இவ்வாறு தன்னைவிட்டு நீங்காதிருக்கிற இந்த நாயாகியமானை, ஒருவராலும் செயிக்கப்படாத பதினாறடிவேங்கை பாய்ந்து தண்டடித்து மயிர்சிலுப்பி தனிக்கூரலிட்டுக் கண்சிவந்து கடைவாய்நக்கி மீசைதுடிக்க மேல்விழ நெருங்கி வந்தது. அந்த நாயாகியமான் புலிக்குப்பயந்து பெரியவரைநயந்து,அவர் பின்புறத்தி லொதுங்கியது. அதையந்தப் பெரியவர் பார்த்து முன்போல் கமண்டலத்துச் சலத்தைத்தெளித்துத் தண்டினாற்றட்டி முப்பத்திரண்டடிவேங்கையாக்கி முடுக்கினார். இந்தமாயவேங்கையைக்கண்டு னாயமாகிய வேங்கையோடி யொதுங்கிப்போய்விட்டது. இந்தநாயானது வேங்கைரூபமாகவே யிருந்துமேலோருக் குபசாரம்பண்ணிக்கொண்டிருக்குநாளில், ஒருமதயானை ஒருகரந் தூக்கி இருகொம்பாட்டி,மும்மதம்பொழிந்து, நால்வாயசைத்து, மிருகங்களனைத்தும் அஞ்சும் படியாக ஆருக்கோபத்துடன் அடர்ந்து முப்பத்திரண்டடி வேங்கையை மோதியபோது, காடெல்லாம் அதிர்ந்து, கண்கலங்கி காலடியில் வாலடித்துச்சுற்றிய நாயாகிய புலியை வானமளாவிய மதயானையாக்கி விட்டார். இந்தப்போலியானையைக் கண்டு வந்தயானை மனம்வெந்துநொந்து ஓடிப்போய்விட்டது. பிறகு மிருகராஜனாகிய ஒரு சிங்கம் வந்துஎதிர்த்தது. அப்போது இந்தப்போலியானையை பஞ்சாநநமாகச் செய்து பகையாட அனுப்பினார். இந்தப்போலிச்சிங்கத்தைக் கண்ட அந்தமெய்ச்சிங்கம் அந்தஞ்சிந்தி சிந்தைநைந்து வந்தவழியோடிபிந்திப்போய் விட்டது. அப்பால் எண்காலுள்ள சரபம் வந் தெதிர்த்து அட்டகாசம் விளைக்கும்போது,இந்தத் தபோமுநியானவர் தயையுடையவராய்த் தனது தபோமகிமையால் நாயாகியசிங்கத்தைச் சார்த்தூல சரபமாக்கிப் போர்விளைவித்துவிட்டார்.இரண்டுசரபமும்புரண்டு விழுந்து-நாயாகிய சரபமேலிட்டுத் தாக்கும்போது, வந்தசரபம் எந்தவழியோ இளைத்துப்போய்விட்டது. அப்பால் நாயானது சரபரூபத்துடனிருந்து தனக்கு ஒருவருநிகரில்லாமல் காடெல்லாந்திரிந்து மிருகங்கள்யாவுந் தனக்குப்பயப்படும்படியாய், ரிஷீஸ்வரனிடத்திற்பொருந்தி அவரருளாலே தான்மேன்மையடைந்தது. இப்படிப் பிரதிஷ்டையுடனே இருக்கப்பட்டபொய்ச்சரப நாயானது, தன்னையிவ்வளவுக்குப் பெருமைப்படுத்திவைத்தமகாரிஷியை தன்னிஷ்டதெய்வமென்று எண்ணவேண்டுமல்லவா? தானுஞ்சுகப்பட்டுத் தன்னைச்சுகப்படச்செய்த தவசியாலாளப்பட்டு பெருமையடையாமல் குலத்தளவேயாகும் குணமென்பதுபோல் இந்தஅற்பசெந்தா

கிய நாயானது ஒரு வஞ்சகமானஎண்ணம் எண்ணிற்று, அவ்வெண்ண த்தை நானென்னென்றுசொல்லுவேன். அந்த நாயினெண்ணப்பு என்னவெனில்:— நாமோ சாதியில் நாய் இவருடைய தவமகிமையால்உயர்ந்த அந்தஸ்தை யடைந் திருக்கின்றோம். ஒருவேளை நமது துற்குணத்தால் இந்த மகாநுபாவராகிய ரிஷிக்குக் கோபம்வந்துவிட்டால் நம்மைமுன்போல் நாயாக்கிப்போடுவாரோ, அப்படிக்கு இவர் கோபத்தினுலகப்பட்டு அநியாயமாய்ப்பழய நாயாவதைப்பார்க்கிலும், முன்சாகிரதைப்பட்டு இவரையடித்து உயிரை முடித்து உதிரங்குடித்து, நாமும் கர்வம்பிடித்து, இந்தக்காட்டிலிருப்போம்; என்று கருதிமகாரிஷியைக்கொல்லத்தருணம் பார்த்துக்கொண் டிருக்கிறநாய்ச்சரபத்தின் எண்ணத்தையும் முகவுல்லா சத்தையுங் கெலிப்பையும், இறுமாப்பையும், திரிகாலக்ஞானியாகிய அநுபமரென்னும் ரிஷியறிந்து சாகிர்தையா யிருக்கும்போது, ஒருநாள் இந்த நாய்ச்சரபமானது மகாரிஷியைக் கொல்லுகிறதற்கு தன் வாயைத்திறந்து நகத்தை வரித்துப் பறந்து வருங்காலையில், ரிஷி தண்ணேன்றிப்பார்த்து ஏன், பழையநாயே! இப்படிச்கெட்டாயே யென்றார். அப்படி யவரழைத்தவுடன் எப்போதும்போல் நாயாகிப்போயிற்று. மூன்றுகாலமுந்தெரிந்த முதன்மை முநிவராகையால், தனக்குத் துன்பம் நேரிடுவதற்குமுன் தப்பித்துக் கொண்டு, சின்னமனிதனையுந் தன்னிலே தன்னைக் காக்கும் படிக்கொண்டுவந்து விட்டார் கேளும்தருமநந்தனு! இன்னொருத்தரானல் எப்படி தப்பிப்போகலாம். நீர்சொல்லும், ஆனதால், என்றென்றைக்கும் இராஜாக்கள் சிற்றினங்களைச் சேர்க்கலாகாது, என்றிசைத்து, இன்னமும் அரசுசெய்து நாட்டில் நெற்பயிர்கள் கரும்புபோல் வளர்ந்து செழிப்படையும் படியான நீர்வளமு நிலவளமும் ஆற்றுக்கால் பாய்ச்சலும் ஏரி குளம் கால்வாய் கேணி கயம் தடாகம் தோப்பு ஊர்சூழ்ந்த சோலை இவைகளின் விருத்தியில் அரசன் ஞாபகம் வைத்திருக்கவேண்டியது. இதுமுக்கியகாரணம். இவ்வாறுநிலவளம் நீர்வளமுடைய பூமியை நடுவுநிலைமையுடைய இராஜன் ஆண்டு வருவானுகில், அந்தப்பூமியில் தவமோங்கும், தானமோங்கும், மும்மழைபெய்யும், பூமிதேவியும் மனங்கனிந்து வஞ்சனையில்லாமல் பலபண்டங்களையும் விர்த்தி பண்ணிக் கொடுப்பாள். இராஜன் சத்தியந்தப்பி நடப்பானுகில், எத்தனை; செழிப்பாகிய பூமியும் விழுப்பாகிப்போம். பலப்பிராப்தி கிடைக்கமாட்டாது, பூமிதேவியும் நடுங்கி யொடுங்கியோடிப்போவாள். இராஜனுக்கும் குடிகளுக்கும்

தரித்திரமுண்டாம். அந்நியதேசராஜ பகைமேலிட்டுவரும். ஆகை
யால், இராஜன் நெறிமுறை தப்பாமல் தருமத்தையநுசரித்துநடு
ஞாயஞ்செலுத்தித் தேவதாபத்திவைத்துச் செங்கோற்செய்வானாகில்
அவனிராச்சியத்தில் மிகவுஞ்செழிப்பாய் தானியவிளைவுண்டாம். பூமி
வளங்கொடுக்கும்·பொழியுமழையடுக்கும், குடிபடைகளுந் தழைக்
கும் கோயில்கள் செழிக்கும். சத்தியமும் தைரியமுங் களிக்கும். அ
வ்வரசனுக்குச் சத்துருசெயமுண்டாகும். ஒருகாலத்தில் மாரிவறண்
டு க்ஷாமகால நேரிடுமாகில், குடிகளெல்லாங் குன்றிப்போம். அக்கா
லத்தில் அரசன் கிலேசப்படாமல் நமக்கென்ன குறையென்றிராமல்,
பொருட்செலவென்று பின்னடையாமல் குடியானவர்களுக்குத் திட
ஞ்சொல்லி, செலவு முதலியபொருள் விரை, மாடு, இவைகளெல்
லாம் உதவிபண்ணி எரு தழை முதலானவைகளிட்டு ஏரி, குள
ங்கள் தூருவாரி பார்வையிட்டுக் கீழ்நீர் கொண்டிறைப்பித்து பூமி
யைச்சேடைசெய்து உழுது பயிரிடும்படிக்கு முயற்சிபண்ணி,
அந்தவருஷத்தில் வந்த பலனைக் குடியானவர்களே அநுபவிக்கும்படி
க்கொடுத்து மறுவருஷப்பலனில் பாதியிறைவாங்கி, அப்பாலோங்கிய
போது தன்கடமையைப் பெறவேண்டும். அரசருக்குப் பூமியே ஆத
ரவு. அரசருக்குப் பூமியே, பிராணன் பூமியே சாமி. பூமியே கதி. இ
துவே அரசருக்கு விதி. இதை உன்னுள்ளத்திற் பதி. ஓ, அதிபதியா
யாகிய அரசனே? தரித்திரமில்லாமற்காப்பதுபூமி பசித்தபேருக்கு அ
ன்னமாவதும் பூமி, யாகாதிவேதமுதலியவற்றிற்கு ஆதாரபூதம் பூமி.
பிணி ரோகம் பீடை முதலியவற்றை நீக்கிவைப்பது பூமி, வேறொரு ந
சம்பத்தில்லாமல் சகலசம்பத்தை யுங்கொடுக்கிறது பூமி. பஞ்சேந்தி
ரிய விஷயராகிய பேர்களுக்குப் போகத்தை யுண்டாக்குவது பூமி,
பஞ்சேந்திரிய நிக்கிரகம்-பண்ணியபேர்களுக்குப் பதவிபெறுதற்காதா
ரமாகிய தவசைவளர்ப்பது பூமி. மும்மூர்த்திகளும் வந்து தங்களுக்கா
க வேண்டிய காரியத்தை முடித்துக்கொண்டு போவதற்கு முக்கிய
மாயிருப்பது பூமி. இப்பேர்ப்பட்ட பூமியை யாளுகிற இராஜன் சகல
கீர்த்தியும் பிரதிஷ்டையும் அடையப்பெறுவான். இன்னம் இந்தப்பூமி
யின்பெருமையைச் சொல்லுகிறேன். அருமையாய்க் கேளும்! பொ
ன் வெள்ளி முதலான நவ லோகங்களு முண்டாக இடமாயுள்ளது,
பொன்மலை வெள்ளிமலை கரும்பொன்மலை இது முதலிய வெகுமலைக
ளிருக்கின்றது. பற்பலகோடிமரங்கள் கொடிகள் செடிகள் ஔஷதா
திகள் சஞ்சீவிகள பிரபலமானகாடுகளுள்ளது இரண்டுசுடர் மூன்
றுதேவர் நான்குதிசை ஐந்து பூதம் ஆறுமதம் ஏழுசமுத்திரம்

எட்டுமலை ஒன்பதுகிரகம் பத்துதிக்குப் பதினொருஉருத்திரர் பன்னி
ரண்டுசூரியர். இதுகளுடனே மூன்றுகோடி அறுபத்தையாயிரந்தீர்த்
தங்களையும் அநேகம்பறவை மிருகங்களையும் தன்னிடத்தி லுண்டா
யிருப்பது. இராஜராஜர்களுக்குக் கோட்டை கொத்தளம் கொம்மை
அகிழ்முதலியவற்றை தன்மேல்வைத்துக்கொண்டு இராசாக்களைக்
காப்பது. எவரெவரெப்படி நினைத்தாலும் அவரவருக்கு அநந்தம் வி
ளைப்பது. சகலபண்டங்களுந் தன்னிடத்தி லுண்டாக்கித் தாய்போ
லருத்திவைத்து,எண்பதினாயிரம் யோசனை கனத்தையுடையது. இப்
பேர்ப்பட்ட பூமியைஆளுகிற அரசனுக்கு என்னகுறையுண்டாகும்.
அமராபதி அளகாபுரிக்குச்சரியாயிருந்துஅரசாட்சிசெய்ய உதவிபண்
ணியிருக்கும், பூமியை உழுதுபயிரிடுங்குடிகளை தன்பிராணன்போல்
காப்பாற்றிக் கொள்ளல் இராஜன் கடமை. இவ்வாறுகாக்கின்ற
அரசனுக்கு கோட்டை, கொத்தளம், கொடி, முடி , வாழ்வு, சம்ப
த்து,எல்லாம் நன்றாய்ப்பலிக்கும். பூமியைப்பாழ்படுத்திப் பூபாலகரை
வருத்தப்படுத்ததினால் பொக்கிஷங்குறையும். இலட்சுமிவிலங்கு
வள். பூததயவுடைய தருமராஜனை, புண்ணியவானென்று பேரெடு
க்க வேண்டும். மேலும் தர்மதான சாமர்த்தியத்தில் மேற்பட்ட அர
சனாகயிருந்தாலும், செல்காலம் நிகழ்காலம் எதிர்காலம் இந்தமூன்று
காலமு மறிந்து மொழியும் பொருள் மொழியாப் பொருள் தெரிந்து
பரிந்து சொல்லத் தக்க நன் மந்திரி யிருக்க வேண்டும். மந்திரியை
விட்டு ராச்சியபாரம் பண்ணுவானேயாகில், மைதீட்டிய கண்களை
யுடைய கன்னிகையானவள் கலியாணம் பண்ணிக்கொள்ளு முன்
னே, பெற்றபிள்ளை, குலவழி நிறையிலுங் கோத்திரமுறையிலும்
ஏற்றுக்கொள்ளும் யோக்கிய மில்லாமல் எப்படி யிழிவு படுவானோ,
அப்படிப்போலாவான். மந்திரியில்லாத மன்னவன் தந்தியற்ற வீணை
யைப்போல் அரசாக்ஷி பிரயோசனப் படாது. மந்திரித் தனத்திற்கு
நூலாராய்ச்சி சாந்தகுணமில்லாத பிராமணனும், க்ஷத்திரியனும் வை
சியனுங் கூடாது. சகலகலைவல்லவனாய் ஞாயாஞாயந் தெரிந்த நல்ல
வனாய் விவேகமுயர்ந்த கல்விமானாய் முன்பின் யோசிக்கத்தக்க சாந்
தஸ்தனாய்ப் புத்தி-யுத்தி பெருமை பொருமையுடையவனாய்ப் பெரிய
வர்களை நேசித் திருப்பவனாய்க் குலதோஷங் குடிதோஷங்கூறாதவனா
ய்க் குணபூஷணனான வைசியனே மதிமந்திரிகிடைப்பானாகில், அந்த
அரசன் ஆகாமியசஞ்சிதத்தி லழுந்தாமல், பிராரத்துவகன்மத்தை
உட லுடனே புசித்து, பூமண்டலமெல்லாம் ஒரு பொற்குடையி லா
ண்டு, நல்ல கதியைப்பெறுவான். ஆனது பற்றி, மந்திரியைத் தாய்

போற் பரிந்து அரசுபுரிந்து வருவானாகில், அவ்வரசன் சேய்போல் மகிழ்ச்சியாய் வளர்ந்து வருவான். தாய்வேறு-பிள்ளைவேறு யிருந்தாலும், இவ்விருவருக்கு மத்தியில் பட்சமுள்ள மனதே சாக்ஷியா யிருக்க வேண்டும். மேலும் இராஜன் புருடனைப்போலும், மந்திரி நல்ல பதிவிரதையுடன் கூடிவாழும் பாங்குடைய ஸ்திரியைப்போலும் இருந்து, தாழ் வில்லாபாக்கியமோங்கி சுகபோகத்தை யநுபவித்துக் குடிபடைகளென்னும் புத்திரசம்பத்துடன் வியாதியாகிய சத்துரு செயம்பண்ணி நல்ல கதிபெறுவார்கள். பதிவிரதையல்லாத துர்க்குணமுள்ளபெண்ணைக் கலியாணம்பண்ணிகொண்டு இல்லறதருமமுங் கெட்டு, இன்ப சுகத்தையும் விட்டு, தரித்திரமேலிட்டு, நோய்க்குடன்பட்டு, விரகத்திலழுந்தி, நரகத்தில் விழுவார்கள். இத்தன்மைபோல் புராணசாஸ்திரந் தெரியாமல் உலக நடை நொடிபாவனையுணராமல். வஞ்ச நெஞ்ச முடைய மத்தனை பொருள்வாக்கொண்டபித்தனை புண்ணியத்திற்கு கேடுநினைக்கும்பேயனை - பொருளறியாமற் பேசும் பெருவாயனை மந்திரிக ளாகவைத்துக் கொள்ளக்கூடாது அப்படிவைத்துக் கொண்டால், அடங்காப்பிடாரியைப் பெண்டுவைத்துக் கொண்ட அல்லலாய் முடியும். அப்பேர்ப்பட்ட மந்திரியையுடைய அரசனுக்கு அபஜயமும் வறுமையும் மனோவியாதியும் ஆறுப்பிணியும் தேறுக்துணிவும் நேரிட்டு இப்பூமியாளுகின்ற இராஜனும் மந்திரியும் நரகத்திலழுந்து வார்கள். ஆதலால்,இதற்குத்திருஷ்டாந்தமாக ஒருகதைசொல்லுகிறேன் கேளும்.

13. துன்மந்திரிகளால் வரும் அபஜய முரைத்தல்.

தருமக் கடவுளின் தனயனே!சகலவளப்பமுந் தழைத்திருக்கும் கோசலதேசத்தை யாண்டுவந்த கேமதரிசியென்னும் ராஜன் நீதி செலுத்தி ராச்சியபாரம்பண்ணி வருகிறநாளில், அவனிடத்தில் துர்மந்திரிகள் சேர்ந்து மிகுந்த பாபிகளாய்த் தெளிவில்லாதவர்களாய்த் தெரியாதவர்களாய்ப் பொறுமை, ஆசை, கோபம், லோபம், இவைகள்மேலிட்டு அதர்மங்களைச்செய்து இராஜனுக்குத்துர்ப்புத்தி கற்பித்து, உலகமெல்லா நிந்திக்கும்படியாய்க் குடிபடைகள் அழுதகண்ணீரும்சிந்தையுமாய் அலையும்படிக்குச் செய்து, வழக்கழிவுபேசி இலஞ்சம் பரிதானம் வாங்கி ஊரையடித்து உலையிற்போட்டு மரத்தாலி கட்டி வா

யார்ப்பகட்டி, இராஜனுடையபெருமை புகழ்முதலியவற்றைப் போக்கடித்து, அரசனை அபகீர்த்திக்கு ஆளாக்கி ஆழமாகிய பாழும்பாவக்குழியிலே அழுத்திவிட்டார்கள். அதனால், மழைபெய்யாமல் மாதவங்குறைந்து மகங்களடங்கிப் பயிர்களுங்காய்ந்து குடிபடைகளுமோய்ந்து பதிவிரதாமார்க்கமும்கெட்டுப் பிராமண கிருத்தியமும் விட்டுப் பலபண்டகளுங் குறைந்து பாபம் மேன்மேலும் நிறைந்து, பயம் வியாதி, சோபம் துர்மரணமேலிட்டு நாலெட்டறமும் நலிந்துநாடும் நகரமும் பட்ட பாட்டை நாம்சொல்லிமுடியாது. இத்தனை யிடையூறும் விதரணையில்லாத் துர்மந்திரிகளால் விளைந்தது. அப்படியிருக்குங்காலத்தில், இந்தக்கேமதரிசியென்னும் இராஜனுடைய தந்தையி னிடத்தில் மந்திரியாயிருந்த காவலனென்பவன், தன்னுடைய இராஜனிறந்தபிற்பாடு கூடவிருந்து ஈமவிதிக்கடன் முதலியகருமங்களை நடாத்தி, இந்தக் கேமதரிசியென்னும் பிள்ளைக்குப் பட்டங்கட்டி வைத்துவிட்டு, இனி யொருவரிடத்திலும் தான் உத்தியோகம் பண்ணத்தக்க தல்ல வென்று, பிரபஞ்ச ஆசையை வெறுத்துத் துறவறத்தையடுத்து, மகாபெரியவராய்க் காமாக்கினியை யவித்துத் தாபாக்கினியை வளர்த்து, காட்டிலே தவ மிழைத்துக் கொண்டிருந்தார். அந்தப்பெரியவர் ஒருநாள் கண் விழித்து நமது ராஜாவின் பிள்ளை எப்படி யிருக்கின்றானோ, ராஜாங்கம் எவ்விதமாய்நடத்துகிறானோ, நாடு நகரம் செழிப்பா யிருக்கிறதோ; நால்வகைச் சேனை களும் நானிலத்தவரும் நன்மை கொண்டாடுகிறார்களோ இல்லையோ, அதைப்போயறிந்துவருவோமென்று சில தபசிகளுடன் புறப்பட்டுக் கோசலநாடு குலாவிய அயோத்தியாபுரி பட்டணத்துக்குவந்து, மந்திரிமாரிடத்திலேயும் பிரதானிக ளிடத்திலேயும் சேனபதிகளிடத்திலேயும், பூர்வீகமா யிருக்கும் பெரியவர்களிடத்திலேயும், பிராமணக்குருக்கள் சாஸ்திரிகளிடத்திலேயும் போய்பழகி சஞ்சரித்து, அனுபவங்களினாலேயும் கேள்விகளினாலேயும் விசாரிக்கு மிடத்தில், எல்லாரும் பாவிகளாய் அன்னியாயக்காரர்களாய், பாரபக்ஷம் பேசும்பதிதர்களாய், கனவிலுந் தருமத்தைக் கருதாதவர்களாய், நீதி நிறையையடுத்த இறையைக் கெடுத்து தாங்களு முறையைவிடுத்து, துறைதப்பியிருக்கின்ற மந்திரிகளின் துர்குணத்தை யறிந்து துயர மடைந்து, ஐயோ ? பாவிகளா ? ராஜனைக்கெடுத்து நாசப்படுத்தி னீர்களா ? ஒழுக்கமுதலிய வர்ணாச்சிரமதருமம் ஒடுங்கிப்போயிற்றே ? ஆ ! ஆ ! என்று விம்மியழுது அகங்கலாய்த்து இந்தப் பிள்ளையினாலே

இவன் தந்தையாகிய பெரிய அரசனும் நரகம்புகுவானே, நாம் மந்திரியா யிருந்து துரைத்தனம் பண்ணும்போது சேர்த்துவைத்த பெரிதாகிய தருமமெல்லாம் விருதாவாய் போய்விட்டதே, இதற்கெப்படி என்னசெய்யலாம்; தர்மத்துடன் கிரமமாக நடக்கும்படியாய்ச் செம்மைப் படுத்த வேண்டும் புண்ணிய வானுடைய சொற்றைப் பூரணமாகப் புசித்த நன்மைக்காக, இந்தப் பிள்ளையினளவில் நாம் பாடுபடவேணு மென்று பூர்த்தியாய் நினைத்து, தமது தபோ மகிமை யால் அலங்கார முள்ள ஒரு காக்கையை ஏற்படுத்தி, அதற்கு விலை யுயர்ந்த ஆபரணங்களினுல் அலங்கரித்துப் பட்டு உறை பூட்டிய வட்டத்திலேந்திக்கொண்டு, பட்டணத்தி லுண்டாகிய பழைய மனிதர்களிடத்தி லெல்லாம்போய்த் தான்பழைய மந்திரி யென்று, அவர்க ளறியாமல் உபசாரஞ்செய்ய மரியாதை யுடன் இந்தக்காக்கையைக் கண்டீர்களா ? இத னுடைய மகிமை யறி வீர்களா ? நான் சொல்லுகிறேன், கேளுங்கள், வேதாகம சாஸ்திர புராணங்கற்ற விதரணை யோர்களுக்குந் தெரியாத ரகசியங்களைச் சொல்லும், அவர்களின்மனதில் நினைத்த நினைப்பெல்லாந்தெரிந்துக்கூறும், மன வஞ்சனை சூது வாது பொய் களவு முதலிய இம்மார்க்க மெல்லாம் கண்டுகொள்ளும். பாபபுண்ணியங்களைப் பகுத்துவிள்ளும். பாலும் அன்னமும் உட்கொள்ளு மென்று, நாடு நகரங்களிற் காட்டிவரும்போது, ஒருவன் கூட்டிக்கொண்டு போய் ராஜ சமுகத்தில் விட்டான், அங்கே இராஜனும் மந்திரிமார் முதலாகிய சகலரும் நிறைந்திருக்கின்றார்கள். இந்தப் பெரியவர் அந்தச்சபையைப்பார்த்து, ஓ ? இறைவனே ? முறைபிறழாத மந்திரிகளே ? இந்தக் காகத்துக்குத் திரிகாலமும் தெரியும், ஆதலால் இந்தக் காக்கையை என் மனோ வாக்குச் சரிப்பட்டிருந்த பெரிய ராஜனுடைய பிள்ளையான இளவரசனுக்குக் கொடுக்கிறேன். இதனால் ஒருவிபகாரங்களில் சாக்ஷிசாதகமுதலியவைகளை விசாரித்து சஞ்சலப்பட வேண்டுவதில்லை, சங்கதிகளைச் சொல்லி என்ன சொல்லுகிறாய், காகமேயென்றால், பளபள வென்று உண்மையாய் இன்னதிக்கில் சத்துருஉண்டு. இல்லை யென்றுசொல்லும். இது ஞாயம் அனியாய மென்று காட்டும். மந்திரிக ளிடத்திற் மாறுபா டிருந்தால் அவர்களின் பிராணனைமாட்டும். வஞ்சகநினைத் தபேணாத் தூரத்துலைக் கோட்டும். திரவியக்கொள்ளை யடித்த வரை எமனிடத்திற் கூட்டும். புண்ணிய மறந்தவர்களைப் பெருமை குறைய

வாட்டும். பொருளவாக்கொண்ட பேர்களை மருள் கொண்டலையப்
பண்ணும். இராஜத்துரோகம் கர்த்தத்துரோசம் வெகுஜனத் துரோ
கம் சிநேகத்துரோகம் செய்யும் பேர்களைத் தெருவி லிழுத்து விடும்.
எக்காலு மூக்கால முணருங் காக மென்று இதற்குப் பெயர். நடை
தப்பினபேரைக் காட்டிக்கொடுக்கும். சீர்தப்பின பேரை ஆட்டி
க்கெடுக்கும். இனி இதையறிந்து பிழையுங்க ளென்று சொல்லி,
அந்தக்காக்கையை இராஜ கொலுக்கூடத்தில் வைத்து, இராஜ புத்தி
ரனுக்கும் புத்தி மதி சொல்லி, தன் பிள்ளைபோல் அன்பு பாராட்டி
ஆசீர்வதிக்க, அந்த இராஜ குமாரன் தன் தகப்பனைக் கண்டது போற்
களித்துச் சரணம் புகுந்து, சகலவிதமரியாதையும் உபசாரமுஞ்செய்
து அவரை அனுப்பினான். அந்தப்பெரியவர் அவ்விடம்விட்டுப்பிரிந்து
காட்டுக்குப் போய் விட்டார். இப்பால், அன்றிராத்திரி பாபிகளாகிய
மந்திரிகளும் பதர்களாகிய தந்திரிகளுஞ் சேர்ந்து, அந்தரிஷி
யானவர் இந்தக்காக்கைக்கு எல்லாந் தெரியுமென்று சொல்லிப் போ
யிருக்கிறார். ஒருவேளை நம்முடைய துர்நடத்தைகளை யெடுத்து சொ
ல்லுமாகில் இராஜன் கோபித்து இவ்வாறாகவா என்னைக் கெடுத்தீர்
களென்று, இரைந்து விரைந்து வெட்டிப் போடக் கட்டளையிடு
வான். நமது பெருமை கெட்டுப்போம். ஆகையால், இந்தக் காக்
கையை கொல்லுவது நல்லதென்று ஆலோசனை பண்ணிக்கொ
ண்டு, மிகுந்த தந்திர உபாயமாய் ஒதுங்கிப் பதுங்கி வந்து காகத்
தைப் பிடித்து கழுத்தை யொடித்து அதனுயிரை முடித்துப்போ
ட்டு, ஒருவருக்குந் தெரியாமல் அவர்கள் ஓடிப் போய் விட்டார்கள்.
பொழுது விடிந்த வுடனே, கிருபைக்கடலாகிய ரிஷீஸ்வரன் காலக்
கடனை முடித்துக் கொண்டு இராஜ சபைக்கு வந்து கழுத்து முறி
பட்டு இறந்துகிடக்கிறகாகத்தைக்கண்டு, மனவருத்த மாய் வருந்தி,
இந்த வேலைசெய்தவர்களை ஞான திருஷ்டியால் அறிந்து, இனி நாம்
சும்மா யிருக்க லாகாது, பிரமாதம் விளையும், மோசம் வரும், அரச
னுக்கு நாசம் வரும், பட்டினமுழுகிப் பாழாய்ப்போய் விடும், இவ்
வரசனுடைய சந்ததியாரும் நரகத்தில் விழுவார்கள். அப்படிக் கெல்
லாம் வரவொட்டாமல் காப்பாற்ற வேணுமென்று கருதி, இளவரச
ன்சிங்காரவனத்திற் போகும்போது, தானுங்கூடத் தொடர்ந்து அட
ர்ந்த வனத்தில் சந்தடியில்லாமல் தனித்து இளவரசை ஆசீர் வதித்து
கடாட்ச வீக்ஷண்யங் காட்டி, இவர்தந்தை நாளையில் தான் மந்திரியா
யிருந்த தர்மமெல்லாஞ் சொல்லி, அப்பா இப்போது உன்னிடத்திலி
ருக்கிற துஷ்ட மந்திரிகளால் உன்னிஷ்ட காமியார்த்தங்களை யிழந்து

போகிறாய். உலகத்தார் உன்னைப் பொல்லாதவ னென்று தூறுகிறார்
கள். சும்மாயிருக்கிற உன் தலையின் பேரில் பழியேறி விட்டது. தருமத்
தைமறந்ததினால் மாதமும்மாரி யாகிய மழைமாறி குன்றி விட்டது.
உன்மந்திரிகள் உன்னை வஞ்சித்து உள்ளடக்கிப் போட்டுத் தாங்கள்
வெளிப்பட்டு வேண்டிய திரவியங்களைத் தேடிக் கொண்டார்கள். ஊ
ரை அன்னியாயம் பண்ணிவிட்டார்கள், அவர்களாலுண்டாகிற பாப
மெல்லாந் தீர விசாரியாத மன்னனைச் சேரும். ஆதலால் உன்னைப்
பாபம் பிடித்துக் கொண்டது. இன்னம் அநேகங் குறைகளுண்டு.
இதுகளையெல்லாங்கண்டு என் மனந்தாளாமல், உங்கள் தகப்பனாரிடத்
திலுண்டு வளர்ந்த உண்மையைக் கொண்டு சீர் திருத்த வேண்டு
மென்று வந்து, ஒரு காக்கையைக் காட்டி அதற்குக் காலத் திரயமுந்
தெரியுமென்று சபையறியப் பேசிவைத்துவிட்டுவந்தேன், இந்தத் துஷ்
டமந்திரிகள் தங்களுடைய துர்நடைத்தைகளை அக்காகம் ஒருவேளை
உனக்குச்சொல்லிவிட்டுப்போகிறதென்கிற அச்சத்தினாலதைக்கொன்று
போட்டார்கள். இப்பேர்ப் பட்டபாபிகளுக்கு முன் நீ எப்படி பிழைக்
கப்போகிறாய்! எவ்வித இராச்சிய பரிபாலனம் பண்ணுகிறவர்களு
க்கும் ஒருவேளையிருக்கிற சிந்தை ஒரு வேளையிராது ஏதாகிலும் ஒரு
காரியங்களைப் பேசவேண்டிவரும், அப்போது இந்தமந்திரிக ளாகிய
பாபிகள் வசனாபி, சேர்த்துக்கொன்று விடுவார்கள். ஆதலால், இந்த
மந்திரிகள் உன்னிடத்திலிருக்கலாகாது. நீ இவர்களை நீக்கிவிடுவதே
மேலாகிய பாக்கியமாக எனக்குத் தோற்றுகிறது இதன்றியும், உன
க்குப் பட்டமான அன்றுமுதல் இன்றையவரையிலும் இவர்கள்
நடத்திய அகர்மங்கள் இன்னின்னதென்று எடுத்துக்காட்டி, இது
வரையிலும் நீ யடைந்த துன்பமெல்லாம்போக; இனிமேலாகிலும்
நல்லமந்திரிகளை வைத்துக்கொண்டு இகபரானந்தத்தைப் பெறுவை
யென்று மகாரிஷி சொன்னார். அரசன் அந்த முநிவன்வார்த்தையைக்
கேட்டு, தேவரீர்! என்னுடைய தந்தைக்குரிய பெரியமந்திரி யாகை
யால், எனக்கு ஆசிரியராயிருந்து நடத்தேற்றவேண்டுமென்று, பணி
ந்து ஓ! சுவாமிகளே! எனக்குப் புத்திமதிசொல்லிக் கொண்டு சிறு
துகா லிவ்விடத்திலிருந்து என்னை பாதுகாத்து வருவீராகில், நானும்
பக்குவகுணனாவேன் பிரதானமான பாபரகிதனாய், என்றும் பர
த்துவ விசாரணைசெய்வேன். தேவரீர்பாதத்தை மறவேன் என்று; பற்
பலவிதமாக பேசிப்பணிந்தான், அந்த இராஜகுமாரனை எடுத்து அணை
த்து முத்தமிட்டு அப்பா! அப்படியே ஆகட்டும். நீ இனிமேல் எவ்
விதயாவது அந்தப்பாபிகளாகிய மந்திரிமார்களை ஒழித்துப்போடு சாக்

கிரதையாயிருந்து நீதிசெலுத்துவது,நெருப்பாறு மயிர்ப்பாலமென்று நினைத்துக் கொள்ளென்றுசொல்லி, அவனுக்குத் தெளிவு பிறக்கும்படியாய் நாளுக்குநாள் நல்லறிவுமேலிடும்படி தேற்றிவிட்டார். அன்றுமுதல் மனக்கவலை யுடையவனாய்ப் பொல்லாதமந்திரிமாகர்களின் பொய் பொறாமை வஞ்சனை முதலிய தீங்குகளையறிந்து, அவர்களுக்கே மேவுதல்செய்து நாள்தோறும் ஒவ்வொருவனாய் நகற்றிவிட்டான். இப்பால் இந்தரிஷீஸ்வாருடைய நீதியைக்கேட்டு நெறிமுறை நின்று தண்டுகள்கூட்டி அவர்திருவடி நிழலை மறவாதவனாய், உலகத்தார் கொண்டாடவும் சத்துருக்களழிந்தோடவும் தர்மதான நீளவும் செங்கோலாடவும் தேவதைகள்கூடவும், பிரபலமாய் நீதிவிசாரணை நெறியாய் நடத்தி நாடுகள் செழிக்க நல்மழை பொழிய நான்கு வருணருஞ் சிதையாமல் பத்தினிமார்க்கங்குறையாமல், இவ்வரசனது கீர்த்தி மூன்றுலோகமும் பூர்த்தியாகப் பகைவர்வந்து ஒதுங்கப்படைகளும் வந்து நெருங்க நித்தியசோபன மங்களபுத்திரபாக்கியம் சத்தியவாக்கியம் இவைமுதலிய யோக்கியங்களெல்லாம் உண்டாகி, மாதம்மும்மழைபெய்து சிலாக்கியனாக வாழ்ந்துவந்தான். ஓ! தருமநந்தனா பிரமாவைப்போன்ற வேதமுதல்வனானாலும் துணைக்காரணமாகிய நன்மந்திரி யில்லா விட்டால் இராஜனுக்குப் பிரதிஷ்டை இல்லை. ஆனால், யோக்கியமான நடத்தையும் சாந்தகுணமுள்ள மந்திரியுமிருக்கவேணும். இப்போது நான் சொல்லி வந்த திருஷ்டாந்தத்தில் சாம்பிரதாயனாகிய மந்திரி, இந்த அரசனுடைய தந்தை யிடத்திலும் அனேகநாளிருந்து, அப்பால், தவம்புரிந்து ஆத்மலாபமும் பெற்று, இப்பால் தன்னுடைய அரசனது புத்திரனுக்குந் துணையாயிருந்து காப்பாற்றினான். ஒரு நன் மந்திரியினால் அவன் பிறந்தகுலமும், அவனுக்குப் புகுந்தமனைவியின்குலமும்,தன்னை இரட்சித்தபெரிய இராஜாவின் குலமும் அவ்விராஜனுடைய புத்திரமித்திர சந்ததி வருக்கமுந் தழைத்த புண்ணியத்தைப்பாரும்,புனிதத்தையோசியும், பழிபாபநீங்கிய பாக்கியத்தைப்பாரும். பாண்டவ முதல்வனே! என்று வீஷ்மாச் சாரியார் புகன்று, மேலும் சொல்லுகின்றார் ஓ! புண்ணியவானே இப்பேர்ப்பட்ட மந்திரிகிடைத் திருந்தாலும் பெரியவாருடைய சகாயமிருக்க வேண்டும் அதெப்படி யென்னில்:—

15. பெரியாரைத் துணைக்கொள்ளல்

நான்கு, வேதம் ஆறு, சாஸ்திரம் அறுபத்துநான்கு கலைஞானம் முப்பத்திரண்டு உபநிடதம் பதினெண், புராணம் ஆகமாதி முதலிய யாவு முணர்ந்த பெரியாரைத் துணைகொள்ளல் வேண்டும் எந்நேரமும் அவர்களுடைய தரிசனமும் சாவகாசமும் பெறவேண்டும் வீண்காலம் போக்காமல் சத்காலக்ஷேபம் பண்ணவேண்டு, நல்ல நீதி நெறி முறைமைகளைத் தூண்டிக் கேட்கவேண்டு. தருமம், தானம், தவம், தயை, சாந்தம் இவைகளை யெல்லாங் கேட்டுத் தெரிந்து கொள்ளவேண்டும், மந்திராலோசனை யுடன்தன்மதியையுங் கூட்டிப்பார்த்து, இதுசரியோ, அல்லவோ வென்று பெரியவர்கள் காதிலிட்டு அவர்களுடையவாக்கினால் தெரிந்துகொள்ள வேண்டுவது முறைமை. மேலும், பெரியவர்கள் கிடைப்பது அருமையாயிருக்கும் அப்படிக்கிருந்தபோதிலும் எந்தப்பாடாகிலும் பட்டுத்தேடிவிசாரித்துச் சம்பாதித்துக் கொள்ளவேண்டும். அதேதென்றால், பெண்டுபிள்ளை, பந்து மித்திரர்கள் முதலான பேர்களெல்லாம் இவனுடைமையைச் சிலவழித்துச் சாப்பிடுவார்களே யல்லாமல், இவனைக் கடைத்தேற்றுவாரில்லை. இவனுக்கொரு ஆபத்துவந்ததானால், தாங்களுங் கூடவிருந்து அழுவார்கள். அல்லது தூரப்போய் விடுவார்கள். வகையும் சொல்லத்தெரியாது, நீர்நிறைந்தகுளத்தில் சேர்ந்திருக்கும் பக்ஷிகள் நீர்வறண்டால் நெடுந்தூரம்பறக்கும். அதிலிருந்த தாமரைகளோ நீருடனிறக்கும். நீர்சுரக்கும்போது மறுபடி உண்டாகும். அதுபோல் பெரியோரைத்துணைப்பற்றி யிருந்தால், நல்ல கேள்விகளினாலும் சாஸ்திரப் பயிற்சியினாலும் ஞானோப தேசமாய், திடச்சித்தங் கொண்டு, தெய்வ நிர்ணயந்தெரிந்து இப்பிரபஞ்சம் பொய் யென்றறிந்து, உண்மையில்நின்று போகாதிவிஷயங்களில் புத்திகெட்டலையாமல் நிலைபெற்று நெறிபற்றி நன்மையைப் பெறலாம். அப்பெரியோரென்பது எந்தவருணத்திற் பிறந்திருந்தாலும், *அவர்களுக்குச் சாதிபேதமிராது. பெருமையில் நாட்டமில்லாமலிருப்பார்கள். நன்மை தீமைகளைச்சமமாய் நாடுவார்கள். தருமமும் சத்தியமும் தவறார்கள். அத்தன்மையாகிய தெளிவுடையவர்களை அறிந்துக்கொண்டு அவர்களைவிட்டுப்பிரியாத இராசனிருப்பானாகில், அவனுக்குச் சகல காரியங்களும் வெற்றியாம். அப்படிக்கில்லாமற் போனால், உண்டதையுண்டு உடுத்தினதையுடுத்தி கண்டதைக்கண்டு களித்ததைக்

களித்துக்கேட்டதைக் கேட்டுக் கர்ம்மபூமிக் கிலேசத்திலழுந்தி, பெண்டுபிள்ளை பண்டுபதார்த்தங்களிலே பாசைதப்பட்டு, ஆத்மக்கி ஞானமில்லாமல் ஆணவமாயை காமியத்திலே தோய்ந்து, ஐம்புலன் வழியிற்பாய்ந்து ஆறுபகையாற்காய்ந்து, மனமிருண்டு மண்ணாசை பெண்ணாசையிலழுந்தி மாய்ந்துபோய்விடுவான். ஆனதால், இப் பூலோகத்தில் பெரியோர்களுக்கு மிஞ்சின பதார்த்தமில்லை. உலக மென்பது உயர்ந்தோர்மாட்டு என்றபடியே உலகமென்பது உயர்ந்தோர் மயமாயிருக்கின்றது. ஈஸ்வரன் விளையாடுகிற இந்த ஜகத்தானது அந்தப்பெரியவர்களுக் காகவேயல்லது மற்றப்பேருக் கல்ல. ஜகதீசன்செய்யும் நன்மைகளெல்லாம் அவர்கள்நிமித்தமே. சர்வத்திர சாதாரணமாய், நெல்லுக் கிறைக்குந் தண்ணீர் புல்லுக் குப் புசியுமாப்போல், பசுவாகிய ஜீவராசிகளெல்லாம் பெரியோரால் பிழைத் திருக்கின்றார்கள். அதுபற்றி இப்பிரபஞ்சசுகபோகவாழ்வை க்கையில்வைத்திருக்கிற போராசையைப் பார்க்கிலும், பெரியவர்கள் பேரில் அதிகஅன்புவைத்து, அவர்கள் தன்னிடத்தில் விருப்பமா யிருக்கும்படிக்குப் போற்றி நடந்து கொண்டால் அவர்கள் எந் நேரமுங் கூடியிருந்து திவ்யகியானங் தெரிவித்து, சாஸ்திரக் கருத் தையேற்றிக் சஞ்சலச் சித்தத்தைமாற்றி, அக்கியானவிருளையகற்றி விடுவார்கள். பெரியவர்களின் கேள்வியும் சாவகாசமும் இல்லாமற் போனால், இராஜனுக்கு எத்தனைபலமிருந்தாலும், மற்றையருக்கெவ் வளவு செல்வமிருந்தாலும், உண்மைப்பொருள்தெரிந்து ஒருபோதும் நற்கதிபுகமாட்டார்கள். பின்னு முன்னும் துன்பப்பிறவிக்கிடமாய் விடும். இவைகளைப்பற்றி இராஜனுக்குத்துணைவலியும் தோள்வலியும் கேள்வலியு மிருக்கவேண்டும். துணைவலியும் கேள்வலியு மில்லா விட்டால் இராஜன் பொருட்படமாட்டான். அதற்குத்திருஷ்டாந்த மாக ஒருகதை சொல்லுகிறேன் கேளும்.

16. கேள்வியற்றதனால் நேரிட்டவிபத்து வருமாறு.

ஓ! எமது குலத்திற்குரிய பேரனே! ஆகாயமேட்டை யளாவிய ஒருபெருங் காட்டில் கழுத்துநீண்டு, கொழுத்து, உயர்ந்து, பருத்த ஒட்டகமொன்று பிரம்மாவைக் குறித்து அநேகநாள்தபசிருந்து அதனது பக்திரசத்தால் பிரம்மாசந்தோஷப்பட்டு அன்னவாகனரூட

ராய் காக்ஷிதந்து என்னைநோக்கி தவம்புரிந்த தென்னவென்று கேட்க, அந்த ஒட்டகமானது விவேகசூனியத்தினாலும் அவசர குணத்தினாலும் பிரம்மாவைப்பார்த்து ஐயா, சதுர்முகனே! தேவர்முதலிய மானிடர்களும் ஆச்சரியப்பட்டு நகைக்கும்படியாக நூற்றன்பதுயோசனை நீளமாகி என்கழுத்து வளரும்படிக்கு அனுக்கிரகம் பண்ணவேணுமென்று கேட்க, அவ்வாறே ஆகுகவென்று கடாக்ஷித்து பிரம்மதேவர்போனார். இப்பால் அந்த ஒட்டகம் மேகமண்டலத்தை யளாவிய கழுத்தையுடையதாய் மமதையடைந்தொருவருநிகரில்லாமல் காட்டிலிருக்கிற மிருகங்க ளெல்லாவற்றையும் கூட்டிக்கொண்டு தாட்டியாய் நின்று, மதோன்மத்தமாய்த் திரிந்துக்கொண்டிருக்கும்போது ஒருநாள் விபரீதமான யுகாந்தகாலம்போல் காற்று மழையுங்கலந்து இடியுமின்னலும் எங்குமிடித்து தலைகாட்டவொட்டாமற்சாடும் வேளையில் பிரமாண்டமாகியதேகமும் நூற்றன்பதுயோசனைதூரம் வளர்ந்திருக்கின்ற கழுத்துள்ள கொழுத்தவொட்டகமானது ஒதுங்கியிருக்க இடங்கிடையாமல் மெத்தவுந்துக்கப்பட்டுபிரயாசத்துடன்நாலுபக்கங்களிலுமோடி ஒருபெரியமலையினிடத்தில் ஒரு சிறியகுகையிருக்கக்கண்டு அந்தகுகைக்குள் நூற்றன்பது யோசனைநீளமுள்ள தன்கழுத்தை நுழைத்து இளைப்பாற்றியிருந்தது அந்தக்குகைச்குள் இதற்குமுன்வந்து புகுந்திருந்த ஒருகுள்ளநரியானது குகைக்குள்வந்த ஒட்டகம் கர்வித்து காட்டிலுள்ள ஜீவராசிகளைப் பயமுறுத்தி களிப்புற்றிருக்கின்றது நம்மைக்கண்டால் எப்படியுங் கொல்லுமென்று பயந்து, இந்தமலைகுகைக்குள் ளொளித்திருக்கிற நம்மைப்பிடித்து கடித்துக்கொல்ல, தலைநீட்டியதாகையால், இதுநல்லசமயம் இதனுடையகழுத்து சீக்கிரத்தில் திரும்பப்படாது இதற்குள்ளே தானே வேலை முடித்துவிடவேணுமென்று ஒருபக்கமாகச்சாய்ந்து, அவ்வொட்டகத்தின் கண்ணுக்குதெரியாமல் கழுத்து நரம்பைக்கடித்து, இரத்தத்தைக்குடித்து, பசியையுமொழித்து பகையையுமுடித்தது, அவ்வளவுபாரியும் பலமும்பெற்ற ஒட்டகமானது ஒன்றுக்குமுதவாமற் இறந்துப்போய்விட்டது. பிரம்மாவைக்குறித்துதபசுசெய்துவரம்பெறுகிற வல்லமையிருந்தும் பெரியாரைத்துணைக்கொள்ளும் பேரறிவின்பெருமையில்லாமையினால் பெறவேண்டிய வரத்தைப்பெறாமல் பேய்மதியால் நீளக்கழுத்தாகவரத்தைப்பெற்று நெடுநாளிராமல் உயிர்நீங்கியது அதுவுமன்றி துணைவலியாகிலு மிருக்குமாகில் நரியினுடையபகைநேரிடாது காட்டிலிருக்கும் ஜீவராசிகளைப்பகையாக்கிக் கொண்டு உதவி யொருவருமில்லாமல் துணைவலியுமிழந்தது. சோர்

வில்லாவில்முனையில்மேதினியைச்செயிக்கும்வல்லவராகியஸ்ரீராமன் திரிபுவனஜயதராகிய தம்பியிருந்தும் கவிக்குலங்களைப் படைகூட்டிக்கொண்டுபோய் கடலைக்கடந்து அடலைத்தொடர்ந்து, இராவணவேட்டையாடி அயோத்தியில்வந்து, சீதையுடன் பட்டங்கட்டிக்கொண்டார், ஆனபடியால் எவ்வளவு வல்லமைசமர்த்திருந்த போதிலும்முக்கியம் துணைவலியிருக்கவேண்டியது அந்ததுணைவலிக்கு இவ்வளவென்று ஒரு கணக்கில்லை சத்துருவின்பலம் எத்தன்மையுடையதோ அத்தனைவரைக்கும் விஸ்தாரம் துணைவலிவேண்டியது பகைவர் மேவிட்டுப் பகைத்துவருங்காலத்தில் படைத் துணையானது கோட்டைவாயிற்கதவென்று குறிக்கலாம் இராஜனுடையசெங்கோல் காயமாயிருப்பதற்கு பெரியவர்களும் துணைவலியுமே துணையன்றிவேறில்லை இதைவிட்டு சின்னமனிதரைச்சேர்ப்பனாகில் உடனே அரசனுக்குப் பின்னம்வரும் அதெப்படியென்னில் சிறியகதையொன்று சொல்லுகின்றேன் கேளும்.

17. அபஜெயமடைந்த அரசு பெரியவர்ளால் கிடைத்த சரித்திரம்

பூர்வத்தில் கோசலதேசத்தை ஆண்டிருந்த மதரிசியென்னும் இராஜன் இருந்தான் அவனிடத்தில் நேசமாயிருந்தவர் காலவரிஷியென்பவர் என்னேரமும்திரியாக்கினிவளர்த்துக்கொண்டு வைதீகத்தையனுசரித்து லௌகீகங்களை யோர்வழி ஏர்ப்படுத்திசட்டதிட்டமாய் இராச்சியபரிபாலனம்பண்ணும்படிக்கு கூடியிருந்துகுணப்படுத்தினபின்பு விட்டகுறையாகிய பழையவாசனையை நினைத்து தபசுபண்ணப்போய்விட்டார் அவருடையசிநேகம்பெற்ற இராஜன் அநேக நாள் இராச்சியபாரம் பண்ணிக்கொண்டிருக்குநாளில் முன்னால் துற்கிருத்தியத்தால் தள்ளிவிட்ட, மந்திரிகளில் ஒரு துஷ்டன் மெத்தவும் வணங்கி இராஜனிடத்தில் வரப்போக விருந்து விதேகராஜனைகலந்து கலகம்விளைத்தான் அதனால் விதேகராஜன் அநேக தண்டுகளுடனே புறப்பட்டு வடவாமுகாக்கினிபோற் கொதித்து மதரிசிராஜன்பேரிலெதிர்த்தான் இந்த மதரிசிராஜனும் படைகளுடனெதிர்த்து, பயங்கரமான சண்டைபுரிந்து கைகலந்த காலத்தில், விதேகதேசாதிபன் மேவிட்டு கோசலதேசாதிபனைக் குன்றச்செய்து அவனது கோட்டை

கொத்தளமெல்லாம் பறித்துக்கொண்டு நாட்டைவிட்டோடப் பண்ணினன். அந்தக் கோசலதேசாதிபன் சகல சம்பத்துமிழந்து ஆரணியத்திற்புகுந்து, அலைந்துதிரிந்து வருந்திவாடி முன்னே தன் தகப்பனிடத்தில் மந்திரியாயிருந்து துறந்து மாதவமிழைத்தவர் மறுபடியும் தன்னிடத்தில் வந்திருந்து துஷ்டமந்திரிகளை விலக்கி, இஷ்டமந்திரிகளை நியமித்து தாமும் சிறிதுகாலமிருந்து போயின காலவமகாரிஷி யெங்கேயென்று, காடெல்லாந்தேடி அவரைக்கண்டு பிடித்து நமஸ்கரித்து ஐயனே என்னுயிரைக் காக்குந் தெய்வமே என்குல முதல்வனுகிய மூர்த்தியே துஷ்டமந்திரிகளால், நரகத்தில் விழுந்துமுழுகிப்போகப் இருக்கிற என்னைக்கைதூக்கிக்கரையேற்றி விட்டனை, என்ராச்சியத்தில் தருமத்தைநாட்டினை, இப்போது விதேகதேசராஜன் மேலிட்டுப் போர்விளைத்து மெலியப்படுத்தி இராச்சிய முதலிய அரசாட்சியைக் கைக்கொண்டு என்னைக்காட்டிலோட்டினன் தேவரீருடைய திருவடியேதஞ்சமென்றடைந்தேன், என்னை இரட்சியும், ஐயாவென்றழுதான். அந்தரிஷியானவர் ஆசீர்வதித்து நல்லது பயப்படாமல் உட்காருமென்று தன்னுடனேகூடஸ்நானம் பூசை சாப்பாடு முதலானதுநடத்தி சிறிது நாட்சென்றபின் இவ்வரசனைச் சுகப்படுத்த வேண்டுமென்று சிருடை கூர்ந்து தன்னுடைய சீடர்களுக்கு விதேகஇராஜனை அங்கே அழைத்துவரக் கட்டளை இட சீடர்கள் வணங்கி அவ்வாறேபோய் விதேகராசனை யழைத்துக்கொண்டு வந்தார்கள் வந்த அந்த இராசன், காலவமஹரிஷியைப் பணிந்து அவர்பாதங்களைக் கண்களிலும் சிரத்திலும் மார்பிலும் தோளிலும் ஒத்திக்கொண்டு முத்தமிட்டு நின்று நான் என்னபாக்கியஞ்செய்தேன் சுவாமி அடியேனொருவன் அடிமையா யிருக்கிறேனென்று அன்புகூர்ந்து அழைத்த காரணம் யாதோவென்று அடிமேல்வீழ்ந்தான். அவனையாதரித்து ஆசீர்வதித்து ஓ! அரசனே அளவில்லாத புகழ்பெற்ற பராக்கிரம சாலியாகிய என்னரசனுடைய குமாரன், எனக்குமிகுந்த அன்பன் அந்த மகாராசனை நீ எதிர்த்து யுத்தம்பண்ணி வெற்றிபெற்று அவனது இராச்சியத்தைப் பிடுங்கிக்கொண்டு துறத்திவிட்டதாய், அவன்என்னிடத்தில்வந்து முறையிட்டுக்கொண்டான் இனியாகிலும் நீஎன்சொல்லுக்கிரங்கி உன்பெண்ணையவனுக்குக் கலியாணம்பண்ணிக்கொடுத்து இருவரும் சிநேகமாயிருங்களென்று நித்தியாநித்தியவஸ்துவைபோதித்து மங்களாசனம் பண்ணினர். அந்தவார்த்தையைக் கேட்டு மிகுந்த பயங்கரத்துடன் விதேகதேச இராஜனும் கோசலதேச இராஜனும் சிநேகர்களாய் கா

வசிஷ்டரின் வாக்கியத்தை வேதமாகக்கருதி சுவாமி தமதிஷ்டப்படிக்கு நடத்துகிறேனென்று வணங்கி விடைபெற்றுக்கொண்டு கோசலதேசாதிபனும் விதேகதேசாதிபனும் கைகோத்துக்கொண்டுவந்து நல்லமுகூர்த்தத்தில் தன்பெண்ணை கோசலதேசாதிபனுக்குக் கலியாணம் பண்ணிக்கொடுத்து அவருடையபட்டிணமும், இன்னம் அளவிறந்தமண் மனை பொன்வெள்ளி பூஷணம் பொற்காசும் பொற்றுகிலும்போர்மோதிய யானைமுதற் றோாதிபடைகளும் சீதனமாகக்கொடுத்து மஹாரிஷிவாக்கியப்படிமன்னர் முதலியமகாசனங்களும் வேதவேதியரும் நாதகீத நாவலர்களுங் கொண்டாடிப்புகழ பொக்கிஷத்திலிருந்ததிரவியங்க ளெல்லாவற்றையுங்கொடுத்து மகிழ்ந்திருந்தான். அப்போது கோசலதேசாதிபன் பெண்சாதியுடனே விதேகராஜனை வணங்கிவிடைபெற்று தன்னுடையபட்டணஞ்சேர்ந்து புகழுடைய போகவாழ்விற் சுகம்பெற்றிருந்தான் ஓ! தருமபூபனே! பூரியர்சிநேகத்தைப்போக்கி ஆரியர் நேசத்தை யடைவாராகில் அவர்கள் இயாவரானபோதிலும் மேன்பாடடைவார்கள் வெற்றி பெறுவார்கள் இப்போர்ப்பட்ட இராஜனைச்சிநேகித்திருக்கிறபேருக்கும் அவனுளப்பட்ட பூமியிற்பிறந்து பாபிகளாகிய பேருக்கும்பாபமணுகாது,பஞ்சுப்பொதியிற்பட்டநெருப்புப்போல் இராசனுடைய நன்னெறித் துணைவர்ப்பாடுபாபங்களைப்போக்கிவிடும் அதற்கொரு கதைசொல்லுகிறேன்கேள்.

18. விவேகமுள்ளவேடன் இராஜனுணசரித்திரம்.

கேளும்தருமராசனே! இன்னாட்டைச்சார்ந்தபெரியகாட்டில் பாரியாத்திர மென்னும் பர்வதமொன்றுண்டு. அந்தமலையினிடத்தில்காப்பவ்வியனென்று ஒருவேடனிருந்தான். அவன்சாதியில்வேடனானபோதிலும் உத்தமகுணமும்சத்தியவசனமும் தருமங்குடிகொண்டமனதும் தயாளுவாகியும்சாந்தமும் பொறுமையும்அருமையும்விரதமும்தூய்மையும் மேன்மையுமுடையவன் மகாதாஷ்டீகன் புஜபலபராக்கிரமன் மெத்தவுந்தயிரியம்படைத்தவன் வில்வில்வல்லவன்பொய்யையறியாதவன் தான்வாசம் பண்ணிக் கொண்டிருக்கிற காட்டுவழிகளில் மிருகபயம் வேடர்பயம் திருடர்பயம் மில்லாமல் காத்து தவசிகளுக்குத் தொண்டுபுரிந்து தன்குலாச் சாரப்படிக்கு பட்சி மிருகங்களையடித்து உண்டுசுகித்து பெண்டுபிள்ளைகளுடன் வாழ்ந்திருந்தான். இவன் உத்

தமமென்று பெரியோர்கள் கொண்டாடினார்கள். அக்காட்டிலிருக்கும் ஏனாதியர்முதலியதியரும் மற்றைச்சாதியருஞ்சேர்ந்து இவனது நற்குணங்களைப்பார்த்து நீரெங்களுக்கெல்லாம் இராஜாவா யிருந்து நன்மார்க்கம்போதித்து ஆசாரவிபகாரம் பாபபுண்ணியம் நன்மைதீமைசுபாசுபம் இதுகளெல்லாம் வரன்முறை யேர்ப்படுத்தி நாங்கள் நரகம்புகாமல் நற்பதவிபெறும்படியாகக் கண்டனை தண்டனையுடன் நடத்திவரவேண்டும், நாங்களுமது ஆணைக்குக்கீழ்ப்படிந்து நடக்கிறோமென்றுவேண்டிக் கொண்டார்கள். அவர்களைப்பார்த்து புருடலக்ஷணமமைந்த தாமரைக்கண்ணுடையவேடன் சொல்லுகிறான். ஓ! பிரசைகளே! நீங்களெல்லாந் தருமநீதிதெரியாதவர்கள். உங்களையொருவழிப்படுத்தி ஆளுகிறபேர் ஒருவருமில்லை. ஆனாலும் நான்சொல்லுகிறவசனத்தைக்கேளுங்கள். எப்போர்ப்பட்ட இடுக்கண்வந்த போதிலும் உயிர்போங்காலத்திலும் என்னுடைய ஆஞ்ஞையைத்தட்டுகிறதில்லை யென்னுஞ் சத்தியம் உங்களிடத்தி லுண்மையா யிருக்குமானால் நீங்கள் கேட்டுக் கொண்டவண்ணம் நான் இராஜாவாயிருக்கிறேன் என்ன சொல்லுகிறீர்களென்று, பச்சைமேனியையுடைய வேடன்கேட்க, இவன்மொழியைக்கேட்ட அவர்கள் யாவரும் அவசியம் சத்தியமாய் அப்படியே அத்துமீறாமல் உமது கட்டுப்பாட்டிலிருக்கிறோமென்று சாஷ்டாங்க நமஸ்காரம் பண்ணினார்கள். அப்போது சத்தியனாகியவேடன் சந்தோஷித்து பாரியாத்திர பர்வதத்தினிடத்தில் ஒரு ஆசனமேர்ப்படுத்திக்கொண்டு காட்டிலிருக்கும் வேடர்முதலியபேர்களைக் கூட்டி சபை ஏர்ப்படுத்திவைத்து சிற்சில தருமத்தின் இயல்பெடுத்துச் சொல்லத்தொடங்கினான். அதாவது, கேளுங்கள் வெகுசனங்களே! இன்றுமுதல் பசுக்களையும்பிராமணர்களையும் தொழுது, அவர்களுக்குத் தொண்டுசெய்து போற்றுங்கள். அவர்கள் உங்களைக்கோபித்தாலும் உதைத் தாலும் முட்டினாலும் திட்டினாலு அடித்தாலும் நீங்கள் பதிலுக்குக்கோபிக்கக் கூடாது. கோபத்தை நாயாகநினைத்துக் கட்டிவிடுங்கள். சொற்கபதம்வேணுமென்கிற அக்கரையிருக்குமாகில் தாய்தகப்பனை தமயனைதெய்வமென்றெண்ணிபூசித்து அவர்கள் சொல்லுக்குஎதிர் சொல்லாமல் வழிபட்டு நடவுங்கள். தன்பெண்சாதி பிள்ளைகளை அன்புடன் விசுவாசித்து போஷித்துவாருங்கள். பரஸ்திரீ கமனம்பண்ணாதீர்கள். அண்ணன் தம்பி மாருடனேயும் தாயாதிகளுடனேயும் கீரமும் சரையும்போல் கலந்திருந்து வேற்றுமை யில்லாமல் சாப்பிடுங்கள். எந்தவிஷயத்திலும் ஒருவனையொருவர்வஞ்

சிக்கவேண்டாம். நன்மைதீமைகளின் விரோதமில்லாமல் கலந்திருப் பதுமன்றி பிறருக்கு இடங்கொடாதீர்கள். சத்துருவின்பேரில் சண்டைபோடுகிறபோது சாந்தத்தையும்பொறுமையையும் தூரத்தள்ளி வையுங்கள். மற்றவேளையில் கோபத்தை நீக்கிப் போக்கிவிடுங்கள். நம்முடைய ஜாதியாசாரம் ஜீவஇம்சை செய்யுந் தொழிலானாலும் நமது பசிக்கும் குடும்ப சவரட்சணைக்கும் தக்கதாய் உயிர்வதை பண்ணிக் கொள்ள வேண்டியது சத்தியந் தப்பலாகாது. தலைபோகிறகாலம் வந்தாலும் பொய் பொறாமை, புறங்கூறல் அதிகவாசையுங் கூடாதென்று தர்மசாஸ்திரம் போதித்து ஜாதிக்கட்டோலையுடன் பட்டோலை ஏர்ப்படுத்த அவ்வாறே அவர்கள் நல்லொழுக்கத்தை யனுசரித்த வேடராஜன் விதித்த விதியின்படிக்கு முறைதப்பாமல் ஒப்பாகநடந்து வந்தார்கள். அதனால் தீயவேடர்களெல்லாம் தீவினைகடந்து தெய்வலோகத்தில் ஸ்திரமாகிய நற்கதி புகுந்தார்கள். கேளும்தருமராஜனே! இராஜனுடைய நன்மைகளினால் ஜனங்களெல்லாம் நற்கதி பெறுவார்கள். (அரசனெவ்வழி அவ்வழிக் குடிகள்) இதை நீ யறிந்துக் கொள்ளும் இனிதலைமை யானவர்களின் சிநேகத்தைச் சொல்லுகிறேன் கேள்:—

19. விவேகமுள்ளதலையாயார் நட்பு.

உயர்ந்த குலத்திலுதித்து சகல கலைஞ்ஞானமுமறிந்த பெரியோரென்று துதித்துப் பூசிதைபெற்ற புண்ணியவான்கள் ஒருவனையடுத்து தந்திரம்பண்ணி சிலபொருளைக் கிரகிக்கவேண்டுமென்று எண்ணங்கொண்டு நேசிக்கமாட்டார்கள் எந்தக்காலத்திலும் ஒருவனால் பெறும்பொருளுக்கு இச்சை கொள்ளார்கள் ஒருவனிடத்தில் வரும்போதே வீட்டில் உலைவைத்துப்போட்டு வாரார்கள். இப்பேர்ப்பட்டவர்களுடைய சிநேகம் ஒப்பற்றநேசமென்று யோசித்துக்கொள்ளும் இவர்கள்தான் பனைமரம்போன்றவர்கள், மழைமேகம்போன்றவர்கள், பிரதியுபகாரத்திற்கு எதிர்பாராதவர்கள், மேலும் இத்தியாதி குணங்களையுடைய சர்வக்கியானமுற்றபேர்கள் நான்குவருணத்திலேயுமுண்டு. பட்சிமுதலாகியமிருகங்களிலேயுமுண்டு. எதிலேநல்ல ஆத்மக்கியானமும் ஈஸ்வரபக்தியும் வேதவிதியும் சத்தியபுத்தியும் தப்

யில்லாமலிருக்கிறார்களோ அவர்களைத்தெரிந்து சந்தோஷித்து பூமியி லுள்ளமானிட ஆக்கையில் பேரறிவாளராகிய பிரபலரையறிந்து சன்மத்தாற் சாதியல்லது, சன்மத்தாற் சாதி இல்லையென்று கருத் தில் மதித்து, பாசிமுதலிய நுரையைநீக்கி நீரைக்கொள்வது போ லும் உமியைப்போக்கி அரிசி பெறுவதுபோலும் புல்லிதழைவிலக் கிப் பூவைத்தரிப்பது போலும் (எந்தகுலத்திற்பிறந்தாலும் ஈசனடி யார் கழிழுக்கில்லை) என்பதுபோல் புன்மைகளையகற்றி நன்மை பெறுவதுபோலும் குலபேதம்பாராமல் அவர்களிடத்திலுற்ற அ திசயமகிமை ஆசாரமுதலிய நன்னெறிநலத்தைப் பிரயோசன மாகக்கொண்டு விசுவாசிக்கவேண்டும் மேலும் சகலவித அலங் காரங்களுடனே வானமளாவிய இரதத்தை ஒரு பொருட்டாய் மதியாமல் அதனது அஞ்சூராணியை ஆஸ்பதமாய்ப் பார்ப்பது போல குலத்தைமதியாமல் குணத்தைநிதானித்து சுகத்தைப்பெ றவேணும் இப்பேர்ப்பட்ட நற்குணமுடைய பேர்களை சற்குண முள்ள தெளிவிளேரென்றறிந்துக் கொள்வார்கள் அவர்களா லடை யும் படியாகிய பேற்றை நான்சொல்லி யாற்றமாட்டேன் (அறக்கட வுள்குமாரனே) இத்தன்மைவாய்ந்த சிவக்கியானம்பெற்ற முதன்மை யானவர்களை சண்டை முனையிற்சென்ற வீரனாலும், பஞ்சமா பாவியாலும், படியாத மூடனாலும், சமயவாதியாலும், சாது சங்க மற்றவனாலும், கண்டவுடனே தெண்டனிட்டு தங்களுடைய துற்குணங்களைத் தூரத்திலிட்டு நற்குணம் பிறந்து தரிசனமகத்துவ பக்தியினாலே கடைத்தேறிப் போவார்கள். அவர்களின் பகையைச் சம்பாதித்துக் கொண்டாலும் பாக்கியமுண்டு இதற்குச்சாட்சியாக ஒருகதைசொல்லுகிறேன் கேளும்.

20. பகைத்தும் பதிவிரதாதருமத்தைக் காட்டிய புறாவின்கதை.

காருண்யமுள்ள பெரியோர்போன்ற ஒரு ஆரண்யத்தில் விழு துவிட்டுத் தழைந்திருக்கின்ற ஆலமரத்தின் கிளையில் புருடனும் பெண்சாதியுமாகிய இரண்டு புறாக்களிருந்தது. அவ்விரண்டும் தங்கள்

குடித்தனமுறைமையில் குறைவறக்கலந்து மனமொருமையாய் ஒன்றைவிட்டு ஒன்றுபிரியாமல் வாசம்பண்ணிக்கொண்டு வருநாளையிலொருநாள் ஆண்புறுவெளியேபோயிருக்குஞ் சமயத்தில் பெண்புறு தன்னுயகனைத்தேடி தங்களினத்தின் கூச்சலின்படியேகூவிக்கொண்டு இருக்கும்போது ஒருவேடன் வில்லும், அம்பும்பிடித்து, மிருகமுதலியபட்சிகளைக்கண்டால் தாட்சணியமில்லாமலடித்து, நெருப்பிலிட்டுப்பொசுக்கிக்கடித்துத் தின்னும்படியாகிய, கடூரமானவன் என்னேரமும்கொலைசெய்யுந் தொழிற் குறிப்பினையுடையவன் சிறுகண்ணமைத்த முறுக்கியவலையைக்கட்டி இரையைத்தெளித்து தீபகப்பட்சியைவைத்து உச்சுருக்குக் கயிற்றைக் கையிற்பிடித்துக்கொண்டு, தழைகளினாலே தன்னைமறைத்து பட்சிமிருகங்களுக்கு யமன்போல ஒளித்திருந்தான். அப்போது அம்மரத்திலிருந்த பெண்புறுவானது கண்ணிக்குள் கட்டிவைத்திருக்கின்றகாரியந்தெரியாமல் வேடன்பழக்கிவைத்திருக்கிறதங்களினமாகியபுறுக்களும் அங்கிருக்கக்கண்டு பறந்துவந்துவிழுந்து அகப்பட்டுக்கொண்டது. உடனே அந்தவேடனானவன் வலையின் சுருக்குக்கயிற்றை இழுத்து சுறுக்கில் ஓடிவந்து பெண்புறுவைப் பிடித்துபையிலடைத்து இன்னம்பட்சிகளைப்பார்த்துக் கொண்டிருக்கும்போது, ஆகாயத்தில மேகங்கவிழ்ந்து சூரியகிரணமாறி பெருங்காற்று, மின்னல், பேரிடியுடனே றறறவென்று பெருமழைபொழிய, இந்தவேடனுடைய தோற்பை நனைந்து, நடுக்கமும், குளிருமுண்டாகி சரீரம்சிலிர்த்து வெளேலென்றுவெளுத்து, கையுங் காலும், விறைத்து, கண்ணு மனமும் இருண்டு காதுமூக்கும் அடைந்து கருவிகரணங்களுங் குறைந்து, பூமியில்விழுந்தான். அந்தச்சமயத்தில் ஆண்புறுவானது ஆலமரத்திற்குவந்து தன்னுடைப் பெண்புறுவைத்தேடி, ஐயோ பெண்ணுயகமே பெண்கள்சிகாமணியே! பெண்கள்பெருமாளே ! பெண்ணரசி ! செங்காலன்னமே! செம்பொன்னின்வன்னமே ! மயிலே ! குயிலே ! மாடப்புறுவே யென்று மனநொந்துவாடி அந்தோ! இந்தமழையிலெங்கே அகப்பட்டுக் கொண்டையோ ! வழிதெரியாமல் நின்றுயோ ! வருந்தியென்னைத்தேடுகின்றுயோ வென்று வாய்வறண்டு புலம்பி எவ்விடத்திலுமோடி இலையிலையாய்த்தேடி இனி என்னுசை யெவ்வாறுமோ ஏந்திழையே எனக்கிசைந்த இன்பமேயென்று வேடன்கையிலகப்பட்டு வலைப்பையிலிருக்கின்ற விதமறியாமல் வாய்விட்டலறி பேய்போற்பறதவித்தது, அதனுடைய வருத்தத்தைப்பார்த்து அவ்வனத்திலிருக்கின்ற

மாதவரெல்லாரும் வருந்தி ஆஹா! பெண்ணாசையின் பெருமைஇப்படிப் பட்டதோவென்று நினைத்துக்கொண்டு பேதுற்றார்கள். மிருகங்கள், பட்சிகள், மரங்கள், மலைகளும், புண்ணீர்போன்ற கண்ணீர்விட்டதுகள். இப்படிக்கு மண்ணும்விண்ணுங் கலங்கும்படியாய் வருந்திய ஆண்புறு, சற்றுநேரம் மூர்ச்சையாயிருந்து தெளிந்து, நெடுமூச்செறிந்து பின்னுஞ் சொல்லத்தொடங்கியது.

ஓ! பெண்ணாயகமே!நாம்கூடியநாண்முதல் இன்னாள்வரையிலும் ஒருநிமிடமேனும் பிரிந்தறியோமே! நீயும் என்னைவிட்டு நீங்கினதில்லையே நாயகனேதெய்வமென்று பூலோகவழக்கத்தைநற்றிஎன்னைப்பற்றி யிருந்த உபசாரம் பண்ணியதுடன் உடலிரண்டும் உயிரொன்றுமாக இருந்தோமே! உன்னைப்பிரிந்த என்னுயிர் இன்னமிருக்கிறதே! உன்மனமென்ன கல்லோ! இரும்போ! ஆருடைய துற்போதனையில் அகப்பட்டுக்கொண்டாயோ என்னவகைமோசம் வந்ததோ ! மதிமயங்கிப்போச்சுதோ ! என்னை மறக்குங்காலம் ஆச்சுதோ! மழையால் உயிர்மாயவாச்சுதோ ! உயிருடனிருந்து என்னைச் சோதிக்கிறாயோ விருதாவிலென்னை வாதிக்கிறாயோ ! நீ பிடித்தபிடியைச் சாதிக்கிறாயோ ! இல்லறதருமம் மறந்துவிட்டாயோ ! என்னைக்காணாதபடியால் இறந்துவிட்டாயோ ! பெருங்காற்றிலகப் பட்டுப்பறந்துவிட்டாயோ! இப்பூமியின் வாழ்க்கையைத் துறந்துவிட்டாயோ இனியொருக்கால் நானுன்னைக் காண்பேனோ, இன்பவிளையாட்டைப் பூண்பேனோ தெய்வமேயென்று பெண்சாதியை நினைத்துக்கொண்டு வருந்தி வருந்திமருண்டுகிலேசத்துடன் கண்ணீர்விட்டழுதது. இந்த ஆண்புறு புலம்புஞ் சஞ்சல வசனங்களை யெல்லாம் வேடனுடைய சிக்கப்பையிலகப்பட்டிருக்கிற பெண்புறுவானது கேட்டு, ஐயோ! பாவம் நம்மைக்குறித்து ஏனிப்படி துயரப்படுகின்றாய் நாயகனே என் விதி இப்படியாச்சு தென்று சிந்தைகலங்கி மனம்நொந்து மிஞ்சிப்போன காரியத்திற்கு வேறு செய்கை யென்ன யிருக்கிறது ஆங்காலமெல்லாம் அன்புடன்வாழ்ந்தோம் இது போங்காலம் ஏதோ பொல்லாதகாலம் பிரிவினைகாலம் சாங்காலம், இந்தக்குறித்து சஞ்சலப்படுவானேன். இதை நம்மால் விலக்கிக்கொள்ளும் வல்லமையுண்டானால் முன்னோர் முதலிய மன்னவர் பெரியோர்களெல்லாம் முடியாதிருப்பார்களா ஆகையால்! வினைப்பகுதியை வெல்ல வல்லவரில்லையென்று மனவுறுதிகொண்டு தன்னாயகனைக் கூவியழைத்து, ஓ ! பிராணநாயகா. ஓ ! பிராணவல்லபா. ஓ ! பிராணாதாரா. ஓ !

பிராணசகிதா. ஓ ! புருஷசிரேஷ்டா. ஓ ! புருஷவன்னமே. ஓ ! புருஷசிகாமணி, ஓ ! புருஷபுனிதா, என் வினைவசத்தால் இந்தவேடன் கட்டிய வலையில் விழுந்து கக்கத்திலிருக்குஞ் சிக்கத்திற்சிக்கி இவன்கைக்குள்ளாய்விட்டேன். நான் மகாதீவினையுடையவள், என்னையொருபொருட்டாக நினைத்து நீர் மனம்நையவேண்டிய மார்க்கமென்ன உம்முடைய பேரறிவாண்மையை எங்கே போக்கடித்துக் கொண்டீர்,நீர் இப்பொழுது நித்தியாநித்திய வஸ்துவிவேகக் கியானத்தை மறந்து சமயம்வந்தவேளையில் மயங்கி தாபத்திரியப்படலாமா?அப்படி படுவதினால் பயனுண்டாகுமா?இது நமக்கு முன்னும் பின்னும் நடந்திருக்கிறகாரியம் நாமும் அறிந்திருக்கின்றோமே,போனதுபோக நின்றவைக்கும் நிலைதவறாமலிருந்து என்றென்றைக்கும் பயமில்லாத இனத்தைத்தேடும், என்னுறவைத் துறவாகக்கொள்ளும், இந்த வேடனுடைய சமூகவிசார சல்லியம் எப்போர்ப்பட்டதோ இவனது பசியெத்தன்மையுடையதோ நாமொருபிராணி அகப்பட்டதைநம்பிவேறு ஆகாரம் அகப்படாமையால் வெம்பிஅபேட்சை கொண்டுவந்துமழை குளிர், காற்றினால்,மாய்ந்தவர்போல் ஓய்ந்துகிடக்கிறான். நான் இவனது பையிலடங்கி உய்யும் வகையில்லாமல் உபாதிப்படுகிறேன்.ஆனதால் இந்தவேளை விருதாவில் என்பிராணன்போகாமல் இவனுடைய பசிக்குங் களைக்கும் உபயோகப்படும்படியாய் நீர்சகாயம்பண்ணும், ஐயா! இவ்வுலகத்தில் தோற்றப்படும்நாமரூபமாகிய வஸ்துக்களெல்லாம் நசியும்பொருளேயல்லது வேறல்ல. இன்னம்பற்பலநாளிருந்தாலும் ஒருநாளிறப்பது நிச்சயம், உறங்குவதுபோ லிறப்பு, தூங்கிவிழிப்பதுபோலப்பிறப்பு, இதையறிந்தும் பிரபஞ்சத்திற்பிறப்பும் இறப்புமே தொழிலாயிருக்கிறது.இதுவேபந்தம்,இந்தப்புன்மையானபிறவியின் போகந்தெரிந்த புருஷனமானநீர் கலங்கிமயங்குவதற்குக்காரணம்யாதோ அறிகிலேன். இந்த விசாரத்தை விவேகவிசாரணையில் விட்டுவிடும்,நாம்வாழ்ந்தஇல்லறதருமம் பழுதுபட்டுநரகத்திற் கேதுவையாகாமல் ஜன்மபலித மொன்றுண்டு. அதாவதுஇவ்வேடுவனுக்கு உபயோகமாகும்படியாய்ச்செய்யும். ஐயோ! இந்தவேடன் எண்ணிய வெண்ணம்நிறைவேறாமலிருக்கின்றது,நாம்அருந்தியமனைவாழ்க்கையிலிருந்த இடத்தில் விரும்பிவந்த விருந்தாளிக்கு உபசாரத்துடன் ஊட்டி வைக்கவேண்டியது ஒருமையல்லவா. வந்தவிருந்தாளி பட்டினியிருக்க, நாம் பார்த்திருப்பதுபாபமல்லவோ. நம்மிட வீடே

றிவந்தவன் எப்படிப்பட்ட பகைவனுயிருந்தாலும், அவனை நாம் அதிதியாய்நினைத்து ஆதரிக்கவேண்டுமே; ஆகையால், இந்தவேடனுகிய அதிதியை ஆயாசந்தீர்த்து பூசைபண்ணிவையும்,ஐயனே, உம்மாலே எனக்கும் நல்லபதவிகிடைக்கும் இனிமேல் நாமிருவருங்கூடிவாழ்ந்தபோதிலும், அனுபவித்தது ஆசாபாசமேயல்லது, வேறே நூதனமுண்டோ எப்போதும் உமக்கு முந்திப்போகவேணுமென்று முழுமனதுடனினைத்த என்னெண்ணத்தின் வண்ணம்திண்ணமாயிற்று, அண்ணலே, கண்ணியமாயிற்று என்று நமது பந்துக்களுஞ் சிறந்து பார்க்கப்பாக்கியம் பண்ணுமற்போன பாபமென்னமோ, ஆனுல் எவரும் வினையின்பயனை வெல்லமுடியாது, நாம் மனோவாக்குக்காயங்களினுல் வஞ்சனை இல்லாமல் நடந்தால் வருவதுவரட்டும், போவதுபோகட்டும். இப்போது நீர் நன்றுயிருக்க ஆபத்தினுல் ஒருவன் அவஸ்தையடைந்து விழுந்தால், அதைக்கண்டுஞ் சும்மாயிருப்பது பாபத்திற் கிடமல்லவோ என்று அனேகவிதமாகப் புருடன் மனதைத்தேற்றிய பெண்புறுவின் சொல்லைக்கேட்டு ஆண்புறுவானது அறிவுடன் தெளிவடைந்து ஸ்திரீயின் பேரிலிருந்த சொந்த பந்தத்தைத்துலைத்து மழைக்காற்றுவிட்டும்எழுந்திராமல் திடந்தப்பி விழுந்து கிடக்கிற வேடனண்டைக்கு ஆண்புறுவந்து நாங்களிருக்கும் இடந்தேடிவந்தநாதனே! நீரிப்போது அடைந்திருக்கும் வருத்தத்திற்கு நான்செய்யவேண்டிய உபசார மின்னதென்று கட்டளையிட டருளினுல், அவ்வாறு நடந்துக்கொள்ளுகிறேனென்ன, வேடன் சொல்லுகின்றுன்; ஓ! ஆண்புறுவே! நானிந்தவேளை பிழைத்தெழும்படிக்கு என்னுடைய குளிரைப்போக்கி விடுவீராகில்; இதற்குமிஞ்சின உபசாரமும், உபகாரமும், உதவியுமில்லையென்று வேடன் வேண்டிக்கொண்டான், அன்னேரமே அந்தப்புறுவானது, அதிகவேகமாய்ப்பறந்து முறிந்துகிடக்கிற சிறியவிறகுகளை மூக்கினுற்கொண்டுவந்துசேர்த்து காட்டுத்தீமூட்டி தன்னுடைய இரக்கையைவீசி காற்றினுல் எரியச்செய்து வேடனுக்குக் கூடுறைக்கப்பண்ணியபோது, புரண்டெழுந்து முன்னும்பின்னுந் தீயைக்காய்ச்சி குளிரு மகன்று ஈரம் உலர்ந்து திமிர்நீங்கி கையையுங்காலையும் நீட்டியசைத்து நெட்டையிட்டு கோட்டுவாய்விட்டு, மெள்ளஎழுந்து, மறுபடியுமிருந்த அதிகப்பசியினுல் வருந்திவாடுகிற வேடனுடைய வெறுமையறிந்து, இந்த ஆண்புறுவானது, ஓ! அரண்யவாசி! உனக்குமிக

வும் இளைப்பும்களைப்பும்வந்திருக்கிறதாய் எனக்குத்தோற்றுகின்றது. நானிந்தப்பக்ஷியுடம்பெடுத்ததற்கு உன்பசியாறச் செய்வதே எனக்குப்போதுமான பிரயோசனமாகக்காணப்படுகிறது. ஆகையால் நீபசியினாலேவருந்தப்படவேண்டாம் நானிந்த நெருப்பிலே வீழ்ந்து இறக்கின்றேன் என்னை எடுத்துப்புசித்து உன்பசியைத் தீர்த்துக்கொள்ளென்றுசொல்லி, ஆகாயத்திலெழுந்து பறந்து படபடவென்று இறக்கையையுதறி ஓ! ஜகரக்ஷகனுகியகடவுளே, உன்னுக்கினையால் நல்வினைதீவினைப்பயனை யனுபவிப்பதற்கு எடுத்த இந்தத்தேகமானது, பசித்துவந்த அதிதியாகிய வேடனுக்கு இரையாகக் கடவதென்று மூன்றுவிசைகூவி இறக்கையை யொடிக்கிக்கொண்டு நெருப்பில் வீழ்ந்திறந்தது. அதைப்பார்த்திருந்த வேடன் அதிசயப்பட்டு, ஒருபக்கம் வருத்துகிற பசியால் துன்பப்பட்டு அந்தப்புறவை வெந்தபின் னெடுத்துச் சாப்பிட்டு தண்ணீர்குடித்து பசி தணிந்து அகங்குளிர்ந்து முகமலர்ந்து தருமத்தை நினைத்து இத்தரணியிற்பிறந்த ஆத்மாக்களில் பேரறிவுடைய புறுவானது மெத்த அருமையானது. நானிதுவரையிலும் இப்பேர்ப்பட்ட ஜெந்துவைப் பார்த்ததில்லை. ஐயோ! இதனது பெண்சாதி என்கையிலகப்பட்டு என்னுல் துன்பத்திலிருக்க பிரபஞ்ச வாழ்க்கைப் படிக்குப் புலம்பித்தவித்து அந்தத்துக்கத்தை உடனே மறந்து எனது உயிரைத்தந்து என்குளிரையும்போக்கி, தன்னுயிரையுமாய்த்து, தன்னுடலை பசிக்குஉதவியாக்கி இத்தனையுபகாரம்பண்ணிய ஒருபக்ஷிக்கிருக்கநல்லறிவு நமக்கில்லாமற்போனதென்ன, நான்மானிடதேகி, வழிதுறைதெரிந்து கியானமுதலியவைகளையுடைத்தாயிருந்தும் பாழானதேக நிமித்தம் இதைப்புசித்து விட்டேனே. என்னைப்போல் பாபசனன மில்லையென்று பரதவித்து, அல்ப உயிரை வளர்ப்பதற்காகவா, சிலஆத்மாக்களைவதைப்பது அப்படி உயிர்வதை செய்து உண்டும், சுகித்தும், களித்தும், என்ன பலனைப்பெற்றோம். இந்தக்கொலைத் தொழில்புரிந்த நமது குடும்பத்துப் பெரியோர்முதலியபேர்களெங்கே? எல்லாரும் இறந்துதானே போனார்கள், இருந்தவரொருவருமில்லையேயென்று மனதிளகிவாடி இந்த ஆண்புறுவைப்போல் நமக்கு அதி தீவர பக்குவங்கிட்டுமோ! ஏதோ இன்னமென்ன தீவினைக்காளாகயிருக்கின்றோமோ தெரியாதென்று, வலைப்பையிலிருக்கிற பெண்புறுவைக் கையிலெடுத்துக்கொண்டு உன்புருஷனுக்கொப்பாகிய புண்ணியவானை இம்மண்ணுலகிற் கண்டதுமில்லை, கேட்டதுமில்லை, அவனைநினைக்குந்தோறும் எனக்குமனக்கலக்கமாகிறது, அப்படிப்பட்ட உத்தமனுக்கு நான் துரோகியாய்விட்டேன், மிருபாபியா

ய்விட்டேன். என்னுவி பாதவித்தலேகிறது, ஆனபடியால், அவருட ன்கூடிப் பிரியாமல் வாழ்ந்த உன்னை எரியிலிட்டுக்கொல்லமாட் டேன். என்பாழான அங்கத்திற்கு இரையாகவொட்டேன். உனக்கிஷ் டமானவிடத்திற்குப் போய்விடென்று விட்டுவிட்டான். அந்தவேடு வன் கையினின்று விடுபட்ட பெண்புறுவானது வானத்திலுயர்ந்து, பறந்து வேடனையடுத்து, ஐயா! நானும் என் புருஷனும் (இல்லற மல்லது நல்லறமல்லவென்னும்) விதியைவிரும்பி வாழ்ந்தோம், இரு வரும் மனங்கலந்து இன்பத்தி லாழ்ந்தோம், எங்களை யொருபொரு ளாய் நினைத்து நாங்களிருக்கும் வீடுதேடிவந்து நலிந்து, மெலிந்து நாவுக்குரிசைதேடிய நீர் அதிதியாய் விட்டீர். இல்லறதருமத்தை இச் சித்தபேர்கள் பரதேசிகளுக்குஅன்னம் படைத்துபிராணதத்தங் கேட் டாலுங்கொடுத்து பசியகற்றி பரிவுடனனுப்பவேண்டிய பாதகரத்தினு ல், வேதாகமவிதியின்படிக்கு என் புருஷன் உம்முடையபசிக்கு உண வாயினர். இப்போது நீரென்னை எங்கேயாகிலும் போய் இன்பத்தை யடைந்து வாழென்றிசைத்தீர். அன்பனே என்னுதன் வெளிப்பட்ட போதே எனக்குநாதம்போய்விட்டது. என்கணவன் நீங்கியவப்போதே ஆசையும் அலங்காரமுமகன்றது. கொண்டவன் கலைந்தபோதே என் கொண்டையுங்குலைந்தது.மகிழ்நன் மடிந்தபோதே என்வாழ்வுமடிந்தது இனிஎன் வாணுள்முடியவேண்டியது. நான் என்னுயகனுக்குப் பாரி யாளாகையால், உயிர்போய் உடலிருப்பதினும் பதிபோய் பாரியாளி ருப்பதினும் பயனென்ன சையோகத்தலைவி யொத்திருந்தால் (ஐயமி ட்டுண்) என்று சுருதிவாக்கியச் சொல்லிருப்பதினுல், என்னுயகன், அதிதியாகிய உமக்கு ஆத்மதிர்ப்தி பண்ணிவைத்தார். நானும் ஒத்து நடந்தால் மாத்திரம் அவருதவிய ஆகாரப்பலன் பயன்படும். நான்அவ ரிஷ்டம்போற் கலந்து நடவாவிடில் இதுவரையிலும் நாங்கள் ஒற்று மையில் வாழ்ந்த இல்லற வாழ்வும், விரதமும், தருமதானமும், நிஷ் பலமாய்ப் போம். எனக்கும் நல்லகதி இல்லை, என்பதியின் எண்ணம் போல் நானும் உள்ளத்திற் பதிவிப்பேனுகில், பதியும், பாரியாளும் பதவியடைவோம், இல்லாமற்போனுல் அவரங்கும் நானிங்கும் அலைந்து நரகத்தில் வீழ்வோம். ஆதலால் என்காதலன் உம்மை ப்போலொத்த நல்லோர்க்கும் பசியாற்றி வருத்தப்பட்டா ரென்கிற பேர்வராமல் என்னையுங்கூட அனுப்பிவிடும் ஏந்தலே, ஸ்திரீகளுக்கு புருஷனைவிடத் தெய்வம் வேறில்லை, விரதநோன்பில்லை, கோயிற்கு ளமில்லை, மூர்த்தி தீர்த்தமுமில்லை, மஞ்சளில்லை, மாலைஇல்லை, வாசனை

இல்லை,வாடை இல்லை,குங்குமமில்லை,பூஷணமில்லை, பூர்த்தி பொசிப்பி
ல்லை,எல்லாச்சிறப்பும்புருஷனன்றிவேறொன்றில்லை,என்றுஇந்தத்தரு
மங்களை அருமையாகப்போதித்து.இதனது உண்மையைத்தெரிவித்த
பேர்களும், தேர்ந்து நடந்தஉத்தமஸ்திரீகளும்,எமவாதனையில்லாமல்
இகபர சாதனத்தை என்றும் பெறுவார்கள். ஆனதால் நீ என்னைப்
பக்ஷிக்க ஆசைபட்டுப்பிடித்த இச்சைதீரப் புசிக்கக்கடவை,என்கண
வனுடன் நானும்போய்ச் சேருகிறேனென்று உயரவெழும்பி தலைகீழா
கவிழ்ந்து தன்னாயகனிறந்த நெருப்பில் தானும்பிராணனைவிட்டது.
உடனே அப்புறாக்களிரண்டும் திவ்வியதேகம் பெற்று,தேவவிமானத்
திலுற்று தேவதுந்துமிமுழங்க தேவகூட்டநெருங்க அரம்பை, ஊர்
வசி, மேனகை, திலோத்தமை, முதலாகிய அநேகம் அப்ஸர ஸ்திரீ
கள் நடனம்புரிய,தேவரிஷிகளும் அவர்களுடையதருமபத்தினிகளும்
ஆலவட்டம், சாமரம், குடை, கொடி, பூரணகும்பம், மாணிக்கதீபம்,
இவைமுதலிய உபசாரங்கள்செலுத்திவர தேவேந்திரன்முதலிய சப்த
ரிஷிகள்,அஷ்டவசுக்கள் திக்குப்பாலகர்,உருத்திரகணங்கள்,பூதகணங்
கள் தேவகணங்கள், சிவகணங்கள் முதலிய பேர்களெல்லாம் ஜயஜய
வென்று கொண்டாட,இவ்வளவு சம்பிரமத்துடன் பெண்சாதி புருஷ
னாக மனதொத்து வாழ்ந்தபுறாக்களிரண்டும் சுவற்கலோகம்போய் தே
வரூபம்பெற்றுசுகசீவியாயிருந்தார்கள். இத்தியாதிவைபவங்களைக்கண்
டவனாகிய வேடுவன் மதிமருண்டு மண்மேற்புரண்டு ஐயையோ! இவ்
வாறாகியமகாபுருஷருக்குத் துரோகியானேனே! கொலைபாதகனானே
னே! தவக்குறையானேனே, பாபியாய்ப்போனேனே,பதிதனானேனெ
ன்று மூர்ச்சையாய் பின்னுந்தெளிந்து,நன்மைசெய்தார்நலம்பெறுவர்,
தீமைசெய்தார் தீமைபற்றி நலிவர், என்னும்பழமொழிக்கிணங்க பிரா
ண ஆசையையும் தேகாபிமானத்தையும் போக்கி டாரிந்து நமக்குவிருந்
தாக விருந்த புறாக்களிரண்டும் தெய்வதேகம் பெற்று தேவலோகமு
ற்றார்களே, அவர்களைக்கண்டு தரிசிக்க நமக்குக் கதிகிடையாதா! மே
லும் அவர்களைத்தின்றிருக்கிற நமது கர்ப்பம்புனிதம்பெறாதா, நான்
பாபியான போதிலும் நல்லோர்களால் உபசரிக்கப்பட்டு அவர்களையே
உணவாகக்கொண்ட என்னுடலானது பதிபெறாமலிருக்கப்போமா, இ
னிமேலிந்தத் தேகம் இருந்தென்ன இறந்தென்ன. வீடு,வாசல்,பெண்
சாதி,பிள்ளை யாருக்கு யார் சம்பந்தம் இதென்ன வீண்தொந்தம் என்
றுவிக்கியானம் பிறந்து இகத்தினாசையைவெறுத்து பரத்தினாசையை
விரும்பி (நிலத்தின்குணத்தால் நன்னீர் உவர்ப்பும்கைப்பும் உருசியு

முண்டாவதுபோல குலத்தின் குணம் நம்மைக்கூறுக்கிவிட்டது.) அநேகம் உயிர்வதைகண்டோம், அவைகளைப்பசிக்குஉட்கொண்டோம், கொலைத்தொழிலுக்கு ஆலயமானோம், பாபத்திற்கு அதிபதியானோம் இன்னமிருந்துவினைமூட்டைகட்டிக்கொண்டுஎமபடாளிடத்தில் அகப்பட்டு இருபத்தெட்டுகோடி நாகத்தில் வீழ்ந்து இம்சைப்படுவதைப் பார்க்கிலும், இப்பொழுதே உயிர்தப்புவது ஒப்பென்று, களங்கரகிதமாகிய காம்புறா இரண்டையும் கியானோபதேசக் குருவாகக்கொண்டு அப்புறாக்களினது திருவடியைத் தியானித்து, ஓ! என்குருசுவாமியாகிய தெய்வமே! நல்லோர்களைக்கண்டாலும் நாவினாற்பேசிக் கொண்டாலும் நாநிலத்தில் வீழ்ந்தாலும் சரணமடைந்தாலும் தரிசனஞ்செய்தாலும், நல்லகதி உடனே உண்டாமென்று வேதசாஸ்திரங்களில் விளம்பியிருப்பதாய் மேலோர் சொல்லுகின்றார்கள். அவைகளைக் கிளிப்பிள்ளைபோல், நெடுநாளாய்க் கேட்டுக்கொண்டிருந்த நான் உங்களைக்கண்டுதரிசித்தேன். கையில்பிடித்துக்கொண்டுபரிசித்தேன். கடித்துப்புசித்தேன். என்பசியைத் தவிர்த்தேன் இப்போதுஉங்களைக் கதியென்று நம்பினேனென்று, பாபரகிதமான பவித்திர மனத்தையுடையவனாகி, புறாக்கள்விழுந்த காட்டுத்தீயில் தானும்விழுந்து காலமுடிந்துபோனான். தக்ஷணமேஇந்திரலோகவிமானம்வந்தது. நெருப்புக்குத்தத்தமானவேடன் தேவரூபம் பெற்று தேரிலேறிக்கொண்டு சிங்காரங்களுடன் தேவலோகம் புகுந்தான். நானும் பரிமள மிகுந்தகுவளை புனைந்த தருமராஜனே! மேலும் பெரியவர்களுடன்கலந்து பேசியமூலத்தினாலாவது கோபக்குரோதத்தினாலாவது நன்மார்க்கமும், நற்கதியும் நற்பாக்கியமும் உண்டாகும். பெரியோர்கள் நீர்பூத்த நெருப்புப்போல் ஒன்றிலும் தட்டுப்படாமல், உலகத்தோடும் ஒத்திருப்பார்கள். ஏதோ ஒரு நாளைக்கு இஷ்டம்வந்தால் இராஜகொலுவுக்கு வருவார்கள். அவர்களைக் கண்டவுடனே எந்தவேலையிருந்தாலும் நிறுத்திவிட் உபசரித்து தரிசித்து ஒருநாட்கண்டதை பலநாளுங்கண்டதாக உணர்விலழுத்தி பிரியம்வைக்க வேண்டும். அதனால் இராஜர்கள் சுகப்பட்டு இடையூறகன்று இன்பத்துடன் வாழ்வார்கள் இதற்குத்தான் பெரியாரைத் துணைக் கொள்ளென்று பெரியோர்கள் பேசியிருக்கின்ற வாசகமிஃது, இனி சிநேகம் பண்ணத்தகாத தீயரைக் குறித்துச்செப்புகிறேன் கேள்.

21. கூடா நட்பு.

அதாவது - மூடருறவு.

ஓ, காவலனே! விருட்சங்கள் அடர்ந்துநெருங்கிய காட்டில் ஒரு ஆலமரத்தின் அடிவாரத்தில் பெரியவளைவைத்துக்கொண்டு, தங்களினத்துடன் சாராமல் தன்னந்தனியாய் பலாபலமும் புத்தியுமுள்ளமா பலிதனென்னும் எலியொன்று வெகுநாளாயிருந்தது. அந்த ஆலமரத்தின்மேற் கிளைநுனியில் உரோமசன்மனென்கிற பூனையுமொன்றிருந்தது. இப்படியிருக்குநாளில் சூரிய சந்திரகிரண நுழையக்கூடாத அந்தக்காட்டில், மிருந்தகடின சித்தமுள்ளவேடன் நாள்தோறும் வந்து புகுந்து அவ்விடத்திலிருக்கிற மிருகங்களையும் பட்சிகளையும்பிடித்துக்கொண்டுபோய்விடுவான். அப்படியாயிருந்த வேடன் ஒருநாள் அந்த ஆலமரத்தின் கிளையின்பேரில் பூனையிருக்கக்கண்டு, அதைப்பிடித்துத் தின்னவேண்டுமென்று விருப்பங்கொண்டு, அப்பூனையில்லாத வேளையில் அம்மரத்தின் அடியில் ஒரு கண்ணி வைத்துப்போனான். இரை தேடித் தின்னப்போயிருந்த பூனையானதுதிரும்பிவந்து, மரத்தில் ஏறப்போம்போது வேடுவன் வலைகட்டி இருக்கின்றானென்று தெரியாமல் (ஸ்ரீகளினுடைய மாயமயக்கவலையிலகப்படும் மானிடபாவியர்போல்) அந்தவலையிலகப்பட்டுக் கொண்டு, ஆ! மோசம்போனேமென்றிரைந்து அழுது பிராணபயம்பெற்று, பதைபதைத்து, துடிதுடித்து, பெருமூச்சுவிட்டு, நாமுடியுங்காலம் இதுவாயிருந்ததோவென்று நான்குதிக்குநோக்கி படுபாவியாகிய வேடன் எங்கே பார்த்திருக்கின்றானோ. பதுங்கியிருப்பானோ, நாம் அகப்பட்டக் குறிப்பையறிந்து ஓடி வருவானோவென்று காலினாலும் கையினாலும், வாயினாலும், வலையைக்கிழித்துப் பார்த்து தன்னால் முடியாமல் தவித்து, தெய்வத்தை நினைத்து தெய்வமே இதுவரையிலும் பெருமையாய்ப் பிழைத்தேனே இப்போதுவேடன்வலையில்வீழ்ந்து கட்டுண்டேனே, இனிஎன்கதி எப்படியோ, நானறியேனென்று மனங்கலங்கி அகங்கலாய்க்கும்போது அவ்விருக்ஷத்தின் அடிவாரத்திலிருக்கின்ற பலிதனென்னும் எலிக்கு இந்தப் பூனைபடுந்துயரந் தெரியும்படியாய், ஒரு கீரிப்பிள்ளையும் கோட்டானுங் கூவியது. அதுகளினுடைய ஓசைகேட்டு எலியோடிவந்து, பூனைக்குப் பக்கத்தில்நின்றது. இதைக்கண்டவுடன் கீரியும் கோட்டானும் கிளம்பி தாங்களிருக்கும் இடத்திற்கு

ப்போய் விட்டது. இப்பால், ஓடிவந்த எலியானது, ஓய் உரோமசன்ம னென்னும் பூனையே! இப்போது என்னாலே நீ உயிர்பிழைக்க வேண் டியிருக்கிறது. நீயகப்பட்டுக்கொண்டவலையை என்பல்லினாலே கடித் துவிட்டு உன்னைக்காப்பாற்றுகிறேன் பயப்படாதே, கவலை வையாதே நானப்படியுபகாரம் பண்ணுவேனாகில், நீர்செய்யப்போகிற பிரதியுப கார மென்ன. என்னையும் எங்களினத்தையுங் கண்டால் வாழைப் பழம்போல்விழுங்குவது தானேமரியாதை. நன்றி யறியாத்தனம் உங் கள்சுபாவம். நீங்கள் எலிப்புலியல்லவா? அப்பால் வாயிற்போட்டுக் கொள்ளுவீர்களே, நன்மைசெய்தார்க்குத் தீமைசெய்கிற சாதியாச்சு தே குலாசாரதருமம்விட்டுவிடுவீர்களா? போகட்டும் ஆபத்துவந்திரு க்கும்போது அவைகளையெல்லாம் பேசப்போகாது, உள்ளபடிமுடி யும் தெய்வமிருக்கிறது, ஐயா! எங்கள் குலத்தின் பேரில் உங்களி னத்தாருக்கிருக்கும் விரோதத்தை வைக்காமல் என்னிடத்தில் சிநே கமாயிருப்பீரா, சாதியின்குணத்தைக் காட்டுவீரா தயவாயிருப்பீ ரா உறுதியாய்ச் சொல்லுமென்று கேட்க, பஞ்சேந்திரியங்களும் உடலும், உயிரும் நிலைதவறி குலாலன் சக்கரம்போற் சுழன்றுக்கொ ண்டிருக்கு மனத்தையுடைய உரோமசன்மனென்னும் பூனை, வெகு தூரப் பார்வைபெற்ற பலிதனெனும் எலியைப் பார்த்து, ஐயா! எலி யரசனே, என்பிராண ரட்சகனே, இந்தவேளையில் எனக்குப் பிரா ணதானை வார்த்தால் இந்த உபகாரத்தை நானெந்த நாளையிலு மறவேன். நீர் கெட்டியாய் நம்பும், சிலர் காரியத்தைப் பற்றி தழுவுவார்கள், காரியமுடிந்தால் கடைக்கண்ணாலும் பாரார்கள், நா னப்படியல்ல. காரியமுடியட்டும் முடியாமற்போகட்டும் ஒன்றின்பே ரிற்கவலைகொண்டால் ஒரே பார்வையாயிருப்பது எங்கள் குலவேலை. ஆதலால் தருமதானத்தைக் கொடுத்தவராலும் பாபஞ்செய்யும் பதி தராலும் சத்தியந்தப்புஞ் சண்டாளராலும், பிராணபிக்ஷை கொடுத்த நன்றியை மறப்பார்களோ? நீர் நினைக்கின்றீரா? ஐயோ! பெ ருங்குறையாகிய பிறவிக்கடலை கடக்கக் கருதியகருவாளிகள் செய் நன்றி குன்றுவார்களா? உயிருதவிக்கு மிஞ்சின உதவி வேறில்லை. இ தெனக்கு உண்மையாய்த்தெரியும். அறக்கடவுளாகிய தருமதேவதைக் குச்சொல்லிய தருமமும் தப்பிப்போனாலும் என்னுடைய சொல்லும் சத்தியமும் தப்பமாட்டேன். உண்மைதான், வேடன் வருவதற்கு முன்னே விரைந்தோடிவந்து வலையையறுத்து என்மயக்கத்தைத்தீ ரும் உயிர்பிச்சைதாரும், உமக்குச்சகல கீர்த்தியும் புண்ணியமும்

உண்டாகும் என்ருல் நீர் நல்லபேறு பெறுவீர், தாமசம் பண்ணு
தீர் என்னுயிரை ரக்ஷியும் என்னுயிருள்ள மட்டும் என் கால்வழி சந்
ததியுள்ளமட்டும் உம்மை எங்கள் வம்சத்திற்கு உயிரளித்த தெ
ய்வமென்று, உச்சவங்ஙளுடன் தலைமேற் சுமகக்றேம். விளக்கேற்றி
வைத்துக் கும்பிடுகிறேம். சந்தேகப்படாமல்வாரும் சப்தகோடி
மகாமந்திரங்களும் அளவிறந்த ஆகமங்களும் சாக்ஷியாகச் சத்தியம்
பேசினேன். இனி சொல்பிசகமாட்டேன். துக்கத்தில் மூழ்கிய வென்
னை அக்கரையாய்க்கரையேற்றும் மெத்தப் பேசுகிறதற்கு இந்தவே
ளைபக்குவமாயில்லை. நான்வலையை விட்டு வெளிவந்தவுடனே உம்மை
விட்டு அப்பாற்போவேனென்று எண்ணுதீர். நீர் என்கர்ப்பத்திலிருக்க
வேண்டிய மனிதனுச்சுதே உம்மைவிட எனக்கு வேறு துணையில்லை.
பிராணன் போகிறகாலத்தில் எங்கள் குலதெய்வம்போல் குறுக்கே
வந்து விழுந்து, என்னுயிரைக் காத்திரக்ஷிக்குமுமக்கு உன்னுயிரை
நான்காக்கவேண்டாமோ, உமக்கு நான்தீங்கிழைப்பேனு, இப்படியும்
பாபிகளிருப்பார்களா? தெய்வந்தான்பொறுக்குமா? தீங்குசெய்யுந்தீயர்
களைத் தெய்வஞ்சீருதா? ஏன்விபரீதம் எண்ணுகின்றீர், ஒருக்காலுமப்
படிவாராது என் சொல்லுறுதியை நம்பும் சீக்கிரம் வாருமென்று
மிகவும் வருந்திச் சொல்லுகின்ற பூனையைப்பார்த்து, எலியானது
மனதிரங்கி பயப்படாதே, பயப்படாதே; நான் உன் பிராணபயந் தீர்க்
கிறேன் நீ சந்தோஷமாயிருவென்று எலி வலையைக் கிட்டிக் கடிக்கா
மல் அசைவின்றிகுந்திக்கொண்டிருந்தது. அதைக்கண்ட பூனை, ஏனை
யா இன்னம் மனமிரங்கவில்லையா, என்னை நம்பவில்லையா, என்
வார்த்தை உண்மை இல்லையா உரியைச்சீக்கிரம் கடிக்கவில்லையா,
நன்மைசெய்தார்க்குத் தீமைசெய்தால் தனக்குத்தானே கேடு நாடி
வரும், தீமையோடிவரும் வறுமை மூடிவரும், மைந்தர் பெண்
டீர் வாடியுறும். ஆதலால் சீக்கிரந்தயை செய்யும், செஞ்சேவகனே
என்று திக்குநோக்கி விழுந்து தொழுது அழுது வேண்டிக்
கொள்ளவும், அந்த உரோமசன்மனுகிய பூனையைநோக்கி பலிதனென்
னும் எலிசொன்னது, ஓ! பூனையே நான் தூரத்திலிருக்கிறனென்
று நீ யோசிக்காதெ, இந்த வலைக்குரிய வனவரசன்கிட்டவந்தால் பட்
டென்று உன்னைப்பாதுகாப்பேன். இப்போது முன்னுதாக உன்
னைவிடமாட்டேன், அதேனென்றுல் தனக்குமேற்பட்ட சத்துரு
வின் நேசம் என்றைக்கும் ஆகாது, அவர்களைச் சிநேகிக்கவேண்
டிய சந்தர்ப்பம் நேரிட்டால் தூரத்தில் வைத்து மனேபயத்துடன்

சாக்கிரதையாய் உறவாடியனுப்பவேணும், அப்படி செய்யாமல் ஏமாறி நெருங்கினால் உடனே துன்பமுண்டாம், இவ்வாறு நீதிசாஸ்திரத்தின்கருத்து. இவ்விதியை நான்கொஞ்சங் கேட்டிருக்கின்றேன், உன்னைக்குறித்து நீ யோசனைபண்ணவேண்டாம், அந்த நீச வேடனைக் கண்டவுடனே ஒரு நிமிஷத்திலே வலையைக்கடித்து உன்னை வெளிபடுத்துவேன், அதற்குமுன் அவசரப்படலாகாது எண்ணித் துணியாத காரியமிளைப்பத்திற்கேதுவாம், நீர் கிலேசப்படவேண்டாமென்று சொல்லிக்கொண்டிருக்கும்போதே எம படாளைப்போல் தண்டுங் கதையுந் தடியும் வலையும் வில்லும் பாணமும் வேலும் கோலும் கயிறுங் கையுமாய் வேடரோடிவந்தார்கள். அவர்களைக்கண்டு பூனை நடுங்கி, இனி என்ன உபகாரம் பண்ணப்போகிறாய் பலிதனென்னும் எலியரசனே யென்று பரதவித்துக்கொண்டிருக்கும் போது வேடர்களுங்கிட்டி நெருங்கிவிட்டார்கள், எலியானது இதுதான் சமயமென்று வலையைக்கடித்துப்போட்டது. அவ்வலைக்குள்ளகப்பட்டிருந்த பூனையானது,சமூகவிசாரபந்தத்தை யறுத்துக்கொண்டோடும் சந்நியாசியைப்போல், ஓடிப்போயிற்று. எலியும் தன்னிருப்பிடத்தில் நுழைந்துகொண்டது. ஓடிவந்தவேடுவர் பார்த்து உறங்கிப்போனார்கள். அன்றுபோகமறுநாள்உரோமசன்மனென்னும்பூனைபலிதனென்னும் எலியண்டைக்குவந்து ஓ, மஹாநுபாவா எனக்குப்பிராணதாரமாகிய புண்ணியனே! என்னாபத்தைத்தீர்த்த அன்பனே எனக்கு உம்மைவிட வேறுதவியில்லை, ஆதரவில்லை, தாயுந் தந்தையுங் குருவுந் தெய்வமும் நீரென்று சாஷ்டாங்கமாகத் தண்டனிட்டு, எளியேன் மீது தயவுவைத்து, வெளியேவாருமையா எலியரசனே! நேற்றெல்லாம் பாவியாகிய வேடன் வலையிற்சிக்கிப் பசியாயிருந்தேன் இப்போதுநான் எங்கேயாகிலும்போய் இரைதேடவேணும், உதவி செய்த உம்மைப்பார்த்துவிட்டு போகலாமென்று வந்தேன், உம்மைக்கண்டால் என் பசியாறிப்போம். இன்றுமுதல் நாமிருவரும் ஒன்றுபட்டு சந்தோஷமாயிருப்போம், உமக்கு ஒரு பொல்லாங்குமில்லாமல் நானும்மைச்சுரூபத்தில் வைத்துக்காக்கின்றேன்,என்னுயிரை மீட்டுக்கொடுத்த இறைவனே, என்று பூனைசொல்ல, அம்மொழியைக்கேட்ட எலியானது ஐயா, பெரியவராகிய பூனையே! நம்மிருவருக்கும் சிநேகமென்பது விட்டுப்போகாது, மேகம் வானத்திற் கனைத்தால் பூமியிலிருக்கும் மயில்களாடுகிறது.சூரியனுதித்தால் தாமரை மலருகிறது போல் அன்பர்களெங்கிருந்தாலும் பட்சம் விடப்

போகிறதில்லை ஆதலால், நாம் இப்போதிருக்கிற இடத்திலேயே இருப்போம். மனதிலிருக்கும் அன்புமாத்திரம். மறவாதிருக்கவேண்டியதே யன்றி மற்றொன்றல்ல. நாமிருவரும் ஓரிடத்திற் கூடியிருப்பதற்குச் சரிப்படாது. நானோ வளைவாசி,நீரோ கிளைவாசி, நமக்கும் உமக்கும் பிரியாவிடையா யிருக்கக்கூடுமோ? இந்தமட்டும் நீரும்நாமும் கலந்திருக்கிறபேச்சை விட்டுவிடும். எல்லாருக்கும்சிரேஷ்டராகிய சுக்கிராச்சாரியர் தன்சீஷருக்குச் சொல்லிகொண்டு வந்ததருமங்களில் சிலதுகேட்டிருக்கின்றேன், அதனாற் பெரியோர்கள் பேறு பெற்றார்கள். முதன்மையாகிய அதனை உமக்குத் தெரிவிக்கிறேன் ஞாபகமாகக்கேளும்.

இராஜனானவன் தன்னிலு முயர்ந்த சத்துருவுடனே எதிர்த்து யுத்தஞ் செய்து ஜெயிக்கமாட்டாமற் போனால்,நேசம் பண்ணிக்கொண்டிருந்து,சமயம் பார்த்துக் கொல்லச் சொல்லியிருக்கிறது.(பகையாளிகுடியை உறவாடிக் கெடுவென்று பழயமொழிவாக்கியம்) தம்மிலுமுயர்ந்தபேர்களின் இஷ்டத்தைப் பெற்றோமென்றுமகிழலாகாது. அப்படிக்கு மகிழ்ந்து அந்தநேசத்தை எதார்த்தமென்று நம்பினபேர்கள் துன்பப்படுவார்கள். தன்னிலுந் தாழ்ந்தவர்களுடன் சிநேகிக்கத்தகாது,அதுவும் அப்படியே கீர்த்தியைக்கெடுத்து கிலேசத்தைவிளைக்கும். ஏதோ ஒருகாரியம் நேரிட்டால் அந்தக் கவையைப்பற்றி கூடவிருந்து காரியசாதனை பண்ணிக்கொண்டு காலங் கழிக்க வேண்டியவன் முழுவிரோதியென்றும், குலப்பகையென்றும், தெரிந்திருந்து கூடிக்குலாவுவது அறிவுள்ளபேருக்கு அடுக்காது. முறையன்று. சத்துருவுக்குக் கேடுசெய்யுங் காரியத்திலேயே கவலைகொண்டிருப்பான், எதிரியை வெல்லவேணுமென்கிற நினைப்பு என்னேரமுஞ் சொலித்துக் கொண்டிருக்கும், கொல்லுவதற்குத் தன்னாலே முடியாதாகில் அவனுக்குப் பகைவனைக்கொண்டாகிலும் அல்லது நல்லதனத்திலாகிலும் வேலைமுடித்துப்போடுவான். சத்துருக்கள் வந்துபணிந்து கும்பிடுவார்களாகில் எதிரி சந்தோஷப்படலாகாது. அதேனென்னில் எதிராளி குவித்த கைகளுக்குள் ஒரு ஆயுதமிருக்கும்,மேலும் அவர்கள்துயரம்போல் அபிநயித்து அழுவார்கள். அவர்களுடைய கண்ணீரைத்துடைத்தால் அதுவிஷமாகயிருந்து துன்ப நீக்கிய அன்பனைக் கொல்லும். ஆகையாலிப்பேர்ப்பட்ட சத்துருவை நம்பி இன்பமாய் நேசிப்பதைப் பார்க்கிலும் அவன்கையில் இவன் பிராணனை ஒப்புக்கொடுத்து விடுகிறது மெத்தவும் உத்தமம்.

பகைவரிடத்தில் ஐக்கியசிநேகஞ் செய்யவேண்டிய முறை நேரிடு மாகில், நெஞ்சிலே பயம்வைத்து நித்திரையற்று பஞ்சும் நெருப்பும், பக்கத்திலிருப்பதுபோல் ஜாக்கிரதையாயிருந்து தப்பித்துக் கொள்ளவேணும். தான்போகிற இடமும் படுக்கிறஸ்தானமும் உண்ணுகிற உணவும் எதிரிக்குத் தெரியப்படாது. தெரிந்தால் உடனே பிராண ஹானி வரும். இதல்லாமல் இடையில் வந்த பகையானாலும் ஒருவிதத்தில் மாறிப்போம், இது அனாதியாகிய ஈஸ்வர சிருஷ்டியினாலுண்டாகிய ஜன்மப்பகை. ஆகையால் என்றைக்குஞ் சேரலாகாது உன்பேரில் வைத்த இஷ்டத்தை யொருக்காலு நான்மறக்கமாட்டேன். நீ என்மனதைவிட்டு நீங்கமாட்டாய். அதைவிட்டு என்னேரமும் உன்னுடன் கூடியிருப்பதற்கு ஒப்பமாட்டேனென்று பலிதனென்னும் எலிசொல்ல, அதினுடைய வார்த்தையைப் பூனைகேட்டு, எலியின் மனதில் ஐயம் நேரிட்டிருக்கிறபடியால் நாமென்ன சொன்னாலும் நம்பமாட்டாது. நாமேன் வீணாய் இதையழைக்க வேண்டுமென்றுதான் கொண்டஆசையை விட்டுவிட்டு தானிருந்த ஆலமரத்தையும்விட்டு, வேறொரு இடத்தில வாசம் பண்ணிக்கொண்டிருந்தது. பலிதனாகிய எலியும்ஆலமரத்தின் அடிவாரத்தைவிட்டு மற்றோரிடத்திற்குப்போய்விட்டது. ஆதலால் பூமியை ஆளப்பட்ட அரசர்கள் சத்துருக்களையும் கீழ்மக்களையும் தனக்குமேற்பட்டவர்களையு நேசிக்கப்படாது, இதைக்குறித்து இன்னமொருகதை சொல்லுகிறேன் கேளென்று விஷ்டுமா புகலுகின்றார்.

22. செல்வர்களுடைய சிநேகத்தால் வருந்துன்பம்.

பூசாகரமென்றொரு பட்டணமுண்டு. அப்பட்டணத்திலுள்ள சகலமானபேருங் கொண்டாடாநின்ற பிரமதத்தனென்னும் இராஜன் மிகுந்தபல பராக்கிரமத்துடன் அரசாக்ஷிசெய்துவரும் நாளில், பெரிய உடலையுடைய பறவைச்சாரியென்னும் பட்சிஅந்த இராஜனிடத்தில் பேதமில்லாமல் சிநேகம்பண்ணி பயமற்றுதினமும்வந்துகண்டு பேசிக்கொண்டுபோகிறதுண்டு. அந்தஇராஜனும்தீங்கில்லாமனத்தினையுடையவனாய் வஞ்சமின்றிநேசித்து வார்த்தையாடி வருவான். அவனை இந்தப் பக்ஷியானது சிநேகபாத்திரனென்று தன்சிந்தையுட்கொண்டு மெய்யாக நம்பி தனக்கு அருமையாகப் பிறந்திருக்கிறதன் பிள்ளை

யை யழைத்துக்கொண்டு இராசனண்டைக்கு வந்தது. அந்தக் குழந்தையை இராஜன்கண்டு எடுத்து அணைத்துமுத்தமிட்டு கொஞ்சிவிளையாடிக்குலாவி உல்லாசமாய் சல்லாபமாய்ஓராசனத்தில் வைத்து,தன் குழந்தைகளைப் பார்க்கிலும் சதமடங்கதிகமாய் சந்தோஷங்கொண்டாடி மேன்மையாப் மெச்சி யாதரணை செய்து இரத்தினாபரணங்கள் பூட்டிச்சிங்காரித்துவேடிக்கைபார்த்துக்கொண்டிருக்கும்போது, பறவைச்சாரியாகிறபக்ஷி இராஜன் பக்ஷம்வைத்து விளையாடிக்கொண்டிருக்கிற தன்பார்ப்பினத்தைப்பார்த்து நீஇவ்விடத்திற்றானேஇரு நான் இரைபுசித்து வருகிறேனென்று தன்குழந்தையினிடத்திற்சொல்லி தன்னைப்போல் ராஜனுந்தந்தையென்று பாவித்து தன்குழந்தையை இராஜசமுகத்தில்வைத்துவிட்டு விசுவாசமுள்ளவேந்தனிடத்தில்விடை பெற்றுக்கொண்டு தான்போகவேண்டியவிடத்திற்குப் பறந்துபோவிட்டது.இராஜன் அந்தப்பக்ஷியின் பிள்ளையை தன்னிச்சைக்கிசைய வைத்துக்கொண்டிருக்கிறபோது,அவ்விராஜனுடைய பிள்ளைகள் விளையாடிக்கொண்டுவந்து அந்தப்பறவையின் குழந்தையைப்பார்த்து,பரியாசம்பண்ணி கைமேலெடுத்துத் தரையிலடித்தார்கள். அந்த அடிபட்டவுடனே படபடவென்று இரக்கையையடித்துக்கொண்டு அதன்பிராணன் போய்விட்டது. இராஜன் உடல்பதறி, ஒன்றுந்தோன்றாமல் ஒடுங்கியிருக்குஞ் சமயத்தில் பறவைச்சாரிப்பட்சியானது வந்து இறந்துபோனகுழந்தையைக்கண்டு,எண்ணியெண்ணிக்கண்ணீர் சொரிந்து என்னகாரணம் விளைந்தது. ஐயோ! தெய்வமே! நானிந்தவிராஜனுடையநேசத்தை நம்பிபேதமில்லாமல் என்பிள்ளையை இங்கு விட்டுப்போனேன். அவ்வரசனுடைய உபேக்ஷையினால் இவன் பிள்ளைகள் என்பிள்ளையைக்கொன்றார்கள். தன்னிலுமுயர்ந்தசெல்வர்களுடைய உறவு தகாதென்று உண்மைஞானமுணர்ந்த முனிவர்கள் மொழிந்திருக்கின்றார்களே, பெரியமனுஷனும் அவன் பெண்சாதிபிள்ளையும் வந்தால் நாமும் நமது பெண்சாதியும் பிள்ளையும்வீட்டுக்குள் அழைத்துப்போய் ஏதேதோ உபசாரம்பண்ணுவோம் நமது பெண்சாதியும் பிள்ளையும் நாமும் அந்தப்பாக்கியவான் வீட்டுக்குப் போனால் தலைக்கடையில்வைத்து சாதம் போடும்படிக்கு வேலைக்காறருக்கு உத்தரவுபண்ணுவார்கள். அவர்கள் பெண்சாதி பிள்ளையை நாம் பார்த்தவுடனே பதிவிரதா தருமங் குன்றிப்போமென்று உள்ளறையில் வைப்பார்கள், ஆனபடியால் செல்வருறவைத் தேடாதேயென்று நீதி சாஸ்திரம் தெரிவித்திருக்க நாம் அறிவில்லாமல் இந்தராஜனுடைய சிநேகத்தை விரும்பினோம், நமது பிள்ளையை இவனிடத்திற்

றனித்துவிட்டுவிட்டோம், இவன் பிள்ளைகளிடத்திலிருந்த பேராசை யினால் நமது பிள்ளையை அலட்சியம் பண்ணிக்கொன்றுவிடப்பார்த்தி ருந்தான். ஆஹா?வென்றுவிசாரமாயிருந்து, அப்பாற்றெளிந்து கோடி ம்பிறந்து, கண்கள்சிவந்து நெருப்புப்போல் பெருமூச்செறிந்து இவ் வரசனது பட்டணமும் அரசாட்சியும் அதமாகும்படி செய்கிறேனெ ன்று விறுவிறெனப்பறந்து காட்டிலுயர்ந்திருக்கிற ஒரு பெரிய மரா மரத்தைக் காலினாலே பிடுங்கிக்கொண்டுவந்து ஆகாயத்திற்கிளம்பி இரண்டு றெக்கையும் விரித்து உதறி வட்டமிட்டாடி. பெருங்கூச்சலி ட்டிரைத்து. பாம்பைப்பார்க்குங் கருடனைப்போல், பகைத்துப்பாத் துரோயும், வெறுப்பும், ஆயாசமுங்கொண்டு, ஓ இராஜனே யென்றி ரைந்து அவன்காதில் இருப்புச்சலாகை ஏறுவதுபோல் ஒருவார்த் தையிசைத்தது ஓ! அரசனே இராஜாக்களுக்கும் பாக்கியவான்களுக் கும் ஒருகர்வமுண்டாகிறதுண்டு. அதென்னத்தினாலென்றால், சேனை, யானை, முதலிய, ஜனக்கட்டும்பாக்கிய ஆக்கினைமுதலாகிய, பணக் கட்டும், இருக்கிறதென்கிற அகங்காரத்தினால், மதத்தேறிப் போகி றது. அதனால், செய்காரியம், தவிர்காரியம், அறியாமல் சிந்தைக ளித்திருப்பார்கள். இந்தவாழ்வு நமக்கு முன்னிருந்தவர்கள் அனுபவி த்துதானே, அவர்கள் இப்போதுஎன்னகதியானார்கள் இதுநிலையல்ல வென்று நாடிப்பார்ப்பார்களாகில், எல்லா உயிருந்தானாக நினைத்து இன்பதுன்பத்திற்கு இரங்கி மகிழ்வார்கள். ஆகையால் அவர்களுடை யநேசம் ஆகாதென்று முன்னமே மொழிந்திருந்தும் என்னமோமதி மயங்கி உன்னுடைய நன்னடத்தையும் நல்லவார்த்தையையும் நம்பி மோசம்போனேன். என்குலவிர்த்தியாகிய குழந்தையை இழந்தேன். ஓ!கோவேயென்று வெகுகோபத்துடன் விளம்பி மேன்மேலாய்க்கிள ம்பி இப்பவும் உன்னைவிடுவேனோ? உன்னுடைய கொடிபறக்குங் கோட்டையை இடிக்கிறேன் உன்னையும் பழிக்குப்பழிமுடிக்கிறேன். அதமாக்கிறேனென்று துணிந்து, ரோஷ பாஷத்துடன் கொடிக்கின் ற பலசாலியான பட்சியைப் பார்த்து இராஜன் பேசுகின்றான். ஓ! பறவைச்சாரிப் பக்ஷி இராஜனே, இதுவரையிலும் நீர் கோபம் பண் ணிக்கொண்டது என்னால்வந்த குற்றத்திற்காக வல்ல. நானுமக்கு அ பராதியாக மாட்டேன். இப்படி செய்தால் அப்படிவருமென் றெண் ணாத அறியாச்சிறுபிள்ளைகள் அவர்களில், ஒருத்தன்செய்த பெருத் தகுற்றத்திற்காக இப்பட்டணத்தையும் வெகுசனங்களையும் என்னையு ம்அழித்து விடுகிறேனென்கிறது ஞாயமோ, தருமமோ, ஓ!ப்பறவைச்சா ரிப்பட்சியே உமக்கு அபராதஞ் செய்தவனெவனோ அவனொருத்த

தலையும் பிடித்து முறித்து முடித்து உமது பழியைத் தீர்த்துக்கொள்ளும். அதுமுறையான விபகாரமென்று சத்தியவந்தனாகிய வேந்தன் விளம்ப, அந்தவார்த்தையைக் கேட்ட பட்சியானது, ஓ!. வேந்தனே, ஒருவன் ஒரு அபராதத்தை முறைதப்பி முன்னே நடத்தினால் பின்னே அவனுக்கும் அவன்குடும்பத்திற்கும் பதினாயிரங்கோடி பகையை விளைக்கலாமென்று பராசரஸ்மிர்தியிற் பன்னி யிருக்கின்றது. இதுமாற்சல்லியமும் வஞ்சனையும்மல்ல. என்னுயிருக்குயிராகிய குழந்தையை கொன்றபடியால் நான் கொண்ட கருத்தின் வண்ண முடிப்பேனென்று நவின்று வெகுளிமேற்கொண்டு மேகம்போ லிரையும்போது, இராஜன் மறுவசனம் பேசுகின்றார். ஓய்! பறவைச்சாரியே கற்றறிவாரிலுயர்ந்த உத்தமக் குணம்பெற்ற பெரியவர்களுக்கு தெரியாத ஒருவன் தீங்கிழைத்தால், அதைத் தக்ஷணமே மன்னித்து சௌரியந்தணிந்து தாக்ஷண்யப்படுவார்களென்றும், மத்திமர்களுக்குக் குற்றஞ்செய்தால், அந்தக்குற்றத்திற்குத்தகுந்த பிரதிகுற்றம் பண்ணிக்காட்டுவது மூன்றமை யென்றும், அதமர்களுக்குத் தீங்குபுரிந்தால் அதை யொன்றுகோடியாய்ப் பெருக்கி ஆறாதகோபமாய்க் காய்ந்துஎன்றைக்கும் இடையூறுபண்ணுவார்கள். அதுவும்பாபிகளாய் படியாமடையராய் புத்தி ஈனராய் பிடிவாதக்காறராகிய அதர்மர்களுடைய கற்பிளப்பொத்த நடத்தையென்றும் பேசப்படாது என்றிசைத்த இராஜவாக்கியத்தை நட்புற்றிருந்த பட்சிகேட்டு மெத்தவிசாரமடைந்து, ஓ! இராஜனே கேளும், நீர் சொன்ன கருமமானது நான்கண்டபுத்திரசோபகாலத்தில் பிரயோசனப்படாது. இந்தத்துக்கம்பிரபஞ்ச வாழ்க்கையைப் பொய்யென்று விலக்கியமெய்யர்களையும் விடாது. அவர்களுக்கும் ஒரு வேளைவிதித்திருந்தாலு மிருக்கலாம் இது இந்தச்சமயத்திற் பேசும்பேச்சல்ல. பூலோகவாழ்க்கையிற் புகுந்திருப்பவர்கட்குப் பேசியிருக்கிற நீதிசாஸ்திரத்தைச் சொல்லுகிறேன் பிரதாபதீரனே கேளும், இராசர்கள் குற்றமற்றமனதுடை யவர்களைப்போல் வெளிக்குக்காண்பித்து, தன்னுடைய சத்துருவினிடத்தில் மெத்தவு நேசம்போலிருந்து சமயநேரிட்ட விடத்தில் தன் வேலையைமுடித்துக்கொள்வார்கள். அப்படி முடிக்கும்படிக்கு நேரிடுங்காலத்தில், அந்தப்பகையாளியைமாத்திரமல்ல அவனுடைய குடும்பகோத்திர பந்துக்களையும், நால்வகைச்சேனைகளையும், புத்திரமித்திரர்களையும் போக்கிவிட்டுபுகழ்பெற வாழ்வார்கள். ஒருவன்பகையானால் அவனைச்சார்ந்த பேர்களை அடியோடேகெல்லிவிடுவது அரசருக்குரியமுறைமையான க்ஷத்திரியதருமம். ஆனதால் நீர் இராஜன், நான்பட்சி இனம்உங்

களுக்கும் எங்களுக்கும் சத்துருத்துவமுண்டு. அதை நான் மனதில்
நினையாமல், நீ மிகவும் நல்லவனென்று புத்திமாறி உன்னுடன் சிநே
கம் பண்ணினேன். இராஜனுடையபழக்கமும் நல்லபாம்பின் பழக்க
மும் ஒன்றென்பார்கள். முடிவில் உன்னுடைய சத்துருத் தன்மை
யைக் காட்டினை. இந்தநிமிஷத்தத்தில் உன்னுடைய நாடுநகரம் மாடு
மக்கள் வீடுவாசல் காடுகரம்பு எல்லாவற்றையும் ஒரேமட்டாய் முடி
க்கிறேன் பாரென்று, இந்தபறவச்சாரி பறவை சாற்ற. இராசன், ஓ! பட்
சியே! நீர்சொன்ன நீதி யெல்லாம் இராஜர்களுடைய முறைமைதான்
இது இராஜர்களுக்குமாத்திரம் சரிப்படுமேயல்லதுமற்றப்பேருக்குத
வமாட்டாது, அதேதென்றால், அரசர்களுக்குதொன்று தொட்டு
அனுதியாய் பாரம்பரியமாய் ஜனன ஜனனத்திற்குப் பிரியாமல் அவ
ன்பிள்ளை, பேரன் இவன்பிள்ளை பேரன், இப்படி வரிசைக் கிரமமாய்
இன்னாருக்கும் இன்னாருக்கும் விரோதமென்று இவ்வுலக விஸ்ராந்தி
யாய் பெரும்பழி வழங்கிவருகிறதுண்டு. அதைக்குறித்து எந்தத் தந்
திரங்களினாலாவது, சிநேக மூலத்தினாலாவது, சாம பேத தானதண்
டத்தினாலாவது, சத்துருத்தன்மையை வெற்றிபெறநினைப்பார்கள்.
இந்தமுறைகளெல்லாம் இராஜாக்களுக்கு மாத்திரமேயல்லது மற்
றொருசாதியருக்குக்கூடாது. அப்படிக்கிருக்க மனுஷர்களுக்கும், பட்
சிக்கும், பாரம் பரியமான பகையென்று வசனித்தாய். அதேது? அப்
படிக் கிருக்குமா! இதுவரையிலும் இவ்வுலகத்தில் இப்பேர்ப்பட்ட
நீதியிருக்கிறதென்று நான் அறிந்திலேன் ஐயா, பட்சிக்கிறைவனே!
உங்களுக்கும் மனிதருக்கும் ஒருநாளும் பகையில்லை மனிதரைக்கண்
டால் நம்மைப் பிடித்துக்கொள்ளப் போகிறார்களென்று உங்கள்மன
திற் கொண்ட அச்சத்தினால் பயந்து பறந்துபோய்விடுவீர்கள். இது
வேயல்லாமல் வேறேபகையொன்றுங் கிடையாது, ஓடுகிறவனைப்பார்
த்தால் துரத்துகிறவனுக்குச்சுளுவும் பலமும்விளைவதுபோல் பயந்து
பறந்துபோகிற உங்களைக்கண்டால், சும்மாபோகிறவர்களும் உங்
களைப்பிடிப்பதுபோல் கையைநீட்டிக் காட்டுகிறதுமுண்டு. இதைவி
ட்டு நீர்தானே உம்மிடவாக்கினால் இல்லாதபகையை உண்டென்று
ரைத்தீர். இப்பவும் நீவேறு நான் வேறல்ல அப்படிக்கிருந்தபோதி
லும் ஞாயமும்நீதியும் பொது. அது மாறுபடக்கூடாது உமதுபிள்ளை
யைக்கொன்றுபோட்ட என்பிள்ளையை உமக்கு நேரேவிடுகிறேன் உ
மதுஇரக்கையினாலடித்து கால்நகத்தினால் பிளந்து மூக்கினால்கொ
ற்றி பத்தலாய்க்கிழித்து பழிக்குப் பழிவாங்கிப்போடும்; சும்மாவிட
வேண்டாம். உமது புத்திரசோபந்தீர சித்திர வதைசெய்யும், எத்தனை

விதம்பண்ணினாலும் எனக்குச்சம்மதமே. அதற்காகநான் கவலைப்படவில்லை. இவ்வளவுதான் இராஜதருமம். நீர்சகலமுந்தெரிந்த பெரியவரென்றும் நானும் நீதிமுறைதவறி நடக்கக்கூடாதென்றும், இதவாய் தாழ்மையாய் ஏழ்மையாய் குளிர்ந்தமொழியாய் உபசாரமாய் நிரம்ப வருந்தி, இறந்தபக்ஷியின் பிள்ளையைநோக்கி இறைந்து அழுது, தெய்வத்தைத்தொழுதான். இதனால் அந்தப்பெரிய பறவைச்சாரிக்கும் கோபந்தீர்ந்து மனங்குளிர்ந்து இரங்கி, ஓ? இராஜாவே என்பிள்ளையைக் கொன்றதற்குப் பதிலாக உன் பிள்ளையைக்கொல்லச் சொன்னாய் அப்படியேகொல்லுவேனாகில், இறந்துபோன என்பிள்ளை யெழுந்து வருவனா? கொழுந்துவிட்டெறிகின்ற என்குடலுங் குளிருமா? இறந்தது ஆருடையபிள்ளை அதற்காக இறக்கப்போகிறது ஆருடையபிள்ளை சிநேகன்பிள்ளைகள் தன் பிள்ளைகளே, அல்லது வேறென்ன,வினைதுலைந்தது போய்விட்டான். இன்னொருவனும் ஏனிறக்கவேணும்,நானேன் கொல்லவேணும் காரியமில்லை. நீ சத்தியந்தப்பி தருமத்தின் வழி யகன்று,இதுகெட்டது, ஒரு அல்பபக்ஷி போவென்றிகழாமல் என்பிள்ளையை நீ கொன்று பழிதீர்த்துக்கொள்ளென்று உன் பிள்ளையென்கிற வாஞ்சை பாராட்டாமற் சத்தியத்துடன் பேசி நடுவுநிலைமையை நாடி யனுசரித்தனையே, இதுவே எனக்குப்போதும். என்புத்திர சோகந் தீர்ந்து உன்மனதில்களங்கமில்லை யென்று நான்கண்டுகொண்டேன் நீயொன்றுக்கும்யோசிக்க வேண்டாமென்று பறவச்சாரிபக்ஷி ஓ!இராஜனே நீர் சுகமேயிரும் நான்போய்வருகிறேனென்று அப்பறவச்சாரி விடைபெற்றுக் கொண்டு இறந்துபோன குஞ்சையும்எடுத்துக்கொண்டுதன்னெதாஸ்தானத்திற்குப் போய்விட்டது.

கேளுந் தருமராஜனே ! தனக்குயர்ந்த பேர்களுடன் சிநேகம் பண்ணினால் அலக்ஷயமும் துன்பமும் அடுக்கடுக்காய்வரும், இதல்லாமல் கொலை களவு கட்காமம் பொய் இவைகளைக் கோர்வையாகவும், அசுத்தப்பார்வை யாகவும் இருக்கப்பட்டவர்களிடத்தில் நேசம் பண்ணப் படாது. நேசம்பண்ணினால் உடனே பிராணனுக்கு மோசம்வருவதுமன்றி நரகத்தையுமனுபவித்து, மறுமையில் ஈனமாகிய, இழிபிறப்பிலழித்திவிடும் இதற்கொரு திருஷ்டாந்தம் சொல்லுகிறேன்கேளும்.

23. அரசன் தன் செய்கையால் மறுபிறப்பில் நரியாகப் பிறந்த சரித்திரம் வருமாறு.

ஓ! தருமராஜனே ? அதருமராஜன் கதையைக்கேளும் புரிசைக் கிரியென்னும் ஒருபட்டினத்தில் பவிரகராஜன் அரசாக்ஷிசெய்துவந்தான். அவன் கொடுங்கோல் மன்னன், பொல்லாதவன் அருளில்லாதவன், அதருமங்களைப்புரிவதே அவனுக்குப் புண்ணியம். குடிபடைகளைவருத்தி இராஜதண்டங்கொண்டு வெகு பணங்களைக் கொள்ளையடித்து உயிர்வதைசெய்து, பெரியோர்மனநோவப்பண்ணி, அநேகபொருளை வைத்துவிட்டு பெருவிபாதிபிடித்து உடல்தடித்து வெடித்து சீழும் இரத்தமுமாய் வடிந்துச்செத்தான். அந்தப்பாபி இந்த பூமியிற்செய்த பொல்லாங்கினால் ரௌரவாதி நரகங்களை அனேகநாள் அனுபவித்து, மீண்டு கோமாயுவென்கிற குள்ளநரியாய்ப்பிறந்து குவலயமெங்குந் திரிந்து ஒருசுடுகாட்டுக்குப் போய் நரிகளுடன்சேர்ந்து நாற்றமுள்ள பிணங்களைப் பிடுங்கித்தின்று, நாளுமுழன்று வருநாளில் இந்தநரி பூர்வஜனனத்தில் அநேகம் பொல்லாங்கைச் செய்தபோதிலும் ஒரு காலத்தில், நன்மைசெய்திருந்த படியினாலே பூர்வக்கியானந்தோன்றி, ஐயையோ! நாம்முன்னே வெகு பாபஞ்செய்திருந்தபடியினாலே நரியாய்ப்பிறந்து இத்தனை பாடுபட்டு திரியாநின்றோம், இனியாகிலும் நற்கருமங்களைச் செய்து பூர்வபாபத்தைப் போக்கடித்துக் கொள்ளவேண்டுமென்று நல்லறிவு பிறந்து, சாதியாசாரப்படிக்கு மாமிசமுதலிய பிணங்களைத்தின்னாமல், பழங்களையுங் காய்களையும் கிழங்குகளையும் புசித்து குளத்துத் தண்ணீரைக்குடித்து காலங்கழித்து வெகுநாளிருந்தது. இப்படி யிருக்கிறபோது அதன் குலத்தாராகிய நரிகளெல்லாம் இந்த நரியினிடத்திற்குவந்து, ஐயா! நீர்நமது குலாச்சாரந்தப்பி மாமிசம்புசியாமல் பட்டினியாயிருக்கிறீர். ஒருவேளை மாமிசம் உமக்கு அகப்படாமையினாலேயோ அல்லதுகாடுமேடு திரிந்து கஷ்டப்படக்கூடாத பால்மாறிக்கையினாலேயோ நீர் விலக்கிவிட்டது. அப்படிக்கானால் நிதம் நாங்கள் கொண்டுவந்து கொடுக்கிறோம் நீர்சாப்பிட்டு சந்தோஷமாயிரும் ஐயாவென்று அநேகவிதத்திற் சொல்லியும், அதுகளின் பேச்சை ஒத்துக்கொள்ளாமல் நிழலினுடைய அருமை வெய்யலிற்போனால் தெரியும் என்பதுபோல் பூர்வத்தில் எழுவகைத் தோற்றமாகிய எண்பத்துநான்கு நூறாயிரமென்னும் யோனி

பேதத்திற்பிறந்து மறுபடியு மிறந்துவண்டிசக்கரம்போலும் கடலினுடைய அலையைப் போலும்மாறிவரும் ஜனனத்தில், எத்தனையோ கோடிபுண்ணிய வசத்தினால் ஐயறிவுள்ள ஆண்பிள்ளையாய்ப் பிறப்பது. அந்தமானிடப்பிறவியிலும் அவயவப்பழுதில்லாமற் ஜனித்து, கல்வியைக்கற்றுஞானம் சத்தியம் சாந்தம் தயைஇரக்கமுடைய தாய் நன்னிதிடத்தும் அரசனாகப்பிறப்பது எவற்றினுமரிது. அப்பேர்ப்பட்ட இராச்சியபரிபாலனம் பண்ணத்தக்கதாகக் கிடைத்திருந்தும் பெரியவர்களுடன் சிநேகஞ்செய்து நல்லதருமசாஸ்திரக் கேள்விகளைக்கேட்டு, சத்கருமங்களை யனுஷ்டித்து யோக்கியமாக தானதரும பரவுபகார ஜீவகாருண்யஞ் செய்து கடைத்தேறாமல், ஐயையோ? அனியாயமாய் பெரிய பாபங்களைப்பண்ணி செந்துக்களிற் றாழ்ந்த நரியாய்ப் பிறந்து, நாற்றமெடுத்த பிணங்களைப் பிடுங்கித் தின்றுவயிறு வளர்க்கிறோமேயென்று வருந்தி பூர்வக்கியானத்தினாலே யறிந்து, மெத்தவுந் துக்கப்பட்டு உங்களினத்தா ருண்ணுகிற புலாலை மறுத்தேனென்று சொல்ல. மற்றநரிகளெல்லாம் மெத்தவிளைந்து உத்தமரோ? எவனொருவனைத் தருமவானென்று சொல்லத் தக்கதோ அவனே குலாச்சார தருமந் தப்பாதவன், அதைவிட்டு வேறுதருமஞ்செய்பவன் அதருமன். (கைவினைகரவேல் என்ற வாக்கியத்தைக் கண்ணுற்றுப்பாரும்.) ஆகையால்நமது குலமுறைமைப்படிக்கு நாமெல்லாங்கூடியுண்போம் வாருமென்றுஎத்தனைவிதத்திற் புத்தியைக்கலைத்தாலும், ஒரே பிடிவாதமாயிருந்து நிலைவிட்டுப் பிரியாமல் சருகாதிமூலங்களை அருந்திக்கொண்டிருந்தது. இந்தவர்த்தமான மெல்லாம் அந்தக்காட்டிலிருக்கின்ற மிருகங்களுக்கெல்லாம் இராஜாவாகிய வேங்கைப்புலிகேட்டு, ஆச்சரியப்பட்டு இந்தநரியண்டைக்கு வந்து ஓய்! நரியே! உம்முடைய விரதத்தின் திடத்தைக்கேட்டு அதிக சந்தோஷமாச்சுது. உம்மையொத்த ஸ்திரமான புத்திசாலிகளிடத்தில் நேசிக்கவேண்டுமென்று வந்தேன். இப்போது என்னிடத்தி லிருக்கிற மந்திரிமார்களுக் கெல்லாம்பெரிய மந்திரியா யிருந்து மதிமந்திரித் தனஞ் செய்து எனக்குநல்ல அறிவும்யோசனையும் போதித்துக் கொண்டிருமென்று சொல்லிற்று. அதற்கந்த ஆசாரநரியானது சொல்லுகிறது ஓ; புலிஇராஜனே நான் உம்மிடத்தில் நூதனமாய்வந்து அமுல்நடத்தினால் பழைமையா யிருக்கிறபேரெல்லாம் பொறாமைப்பட்டு மனங்கொள்ளாமல் என்பேரில்விரோதஞ் சொல்லுவார்கள். எங்கேகுற்ற முண்டோவென்று தேடுவார்கள். எந்தச்சமயத்தில் இவன்பேரில் குற்றஞ் சாற்றலாமென்று யோசனைசெய்யக் கூடுவார்கள். உம்மிடத்தில் என்

பேரில் பொல்லாங்கு சொல்லி எனக்குத்தண்டனை கண்டனை செய்வி க்கும்படி நாடுவார்கள். (பார்க்கிறகண்ணுக்குக் கேழ்க்கிறகாது மே லென்பதுபோல்) அவர்கள் மொழியைக்கேட்டு நீர் கோபிக்கவேண்டி வரும் நீர் துரைத்தனம்பண்ணுகிறவர்,உம்மிடத்தில் மந்திரித்தனஞ் செய்கிற என்னை நீர் என்னசெய்யவேணுமோ அதெல்லாம் பக்ஷபார ம்பாராமற் செய்யலாம். உமக்கு எதிரில்லை, எனக்குத்திக்கில்லை. ஆ தலால்,கேள்விச்சொற்கேட்டு கேடுநினைப்புக் கொள்ளுகிறதில்லையெ ன்றும் இப்போதிருக்கிற இஷ்டம்போல் எப்போதுமிருக்கிறே னென் றும் கெட்டியாய்ச்சொல்லுவீராகில், நானும்மிடத்தி லிஷ்டப்படிக்கு இருக்கிறேனென்று சொல்ல, அதற்குப் புலியானது அப்படியே, (சொல்லுவார் வார்த்தைகேட்டு தோழைமையிகழ்வார் புல்லர்)என்று நினைத்து நான் ஒருத்தர்பேச்சையுங் கேளாமல் உன்னையே நம்பினே ன், என்னை நீ உண்மையாய் நம்பு என்று அபயஸ்தங் கொடுத்தது. அப்பாலந்த நரியானது புலியினிடத்திற்போய் சகலவிசாரணையுஞ் செய்து மந்திரியாயிருந்து பாரமார்த்திய பக்குவவிசேடங்களை எக்க லுடன்கூடி வாழ்ச்செய்து காலத்தையமுங்கண்டு காலக்ஷேபம் பண் ணிக்கொண்டிருந்தது. அந்தஇராஜபுலியும் நரிசொன்னபேச்சைத் தள் ளாமற்கேட்டு வந்தது. இப்படிக்கிருக்க, அந்தப்புலியினிடத்தில் பழைமையாயிருந்த மந்திரிமிருகங்களெல்லாம் பொறுமையடைந்து, அந்தப்புலியும் நரியும் பொருந்திவாழ்வது சரிப்படாமல், இந்தநரியைக் கொன்றுவிடவேண்டுமென்று ஆலோசித்து எந்தவிதத்திற் கொல் லலாமென்று தருணந் தேடிக்கொண்டிருக்கிற நாளையில், சமயம் வாய்க்காதபடியால், இப்படியெல்லாம் அதைக்கொல்லப்படாது. நம துபுலிராஜாவுக்கும் இந்தநரிக்கும் மித்திரபேதம்பண்ணி, அவரைக் கொண்டு இவரைக்கொன்றுவிடச் செய்யவேண்டுமென்று கலந்து பேசி காலம்பார்த்திருந்து, புலி இராஜன் பசியுடனே வருகிறவேளை பார்த்து அதற்குப் பக்ஷணமாக வைத்திருந்தமாமிசத்தை எடுத்து மறைத்துவிட்டிருந்ததுகள். அந்தப்புலிராஜன் காடெல்லாமோடித் திரிந்துகளைத்து இளைத்துவந்து பசிநோயினால்வருந்தி இவ்விடத் தில் வைத்திருந்த இரையெங்கே,யென்றுஇரைந்து கோபமாக விரை ந்து பூமியதிர்க்கும் பொல்லாத கோபவேளையை நோக்கி,ஏனையா? எங்கள்பேரிலெரிந்து விழுகிறீர் உமக்கு உயிர்த்துணையாய் வந்திருக் கிற பிரியமானமந்திரி கோமாயுதன் அதைதின்பதற்காக இரகசியமா

யித் திருடிவைத்துக் கொண்டது. அந்தநரியானது நான்மாமிசபட்சணம் பண்ணுவ தில்லையென்று சொல்லிய பேச்சை யெல்லாம் நம்பினையே அதுசுத்தவெளிச்சமே, வெளிக்கு வேஷமே. மாமிசதேகம் மாமிசத்தை மாற்றியதென்றால் யாவரும் இனத்தைத்தழுவாமலிருக்கவேண்டுமே. (இனத்தை இனந்தழுவு மென்பதுபொய்யா) ஐயா, சைவமென்று வீணான பிரதிஷ்டைக்காகச் சொல்லிக்கொள்ளுவது, இதைப்பகுத்துப் பார்க்குமிடத்தில் உள்ளுக்குள்ளே உண்ணுவது ஊத்தைக்கவுச்சு, உதிரக்கவுச்சு, ஊனீர்க்கவுச்சு, சீக்கவுச்சு, சிலைநீர்க்கவுச்சு, தேகக்கவுச்சு, போகக்கவுச்சு, புத்திரக்கவுச்சு, முலைப்பால்கவுச்சு, முகருங்கவுச்சு, இன்னமநேகங் கவுச்சுகளுண்டு. தேகம் விட்ட அன்றைக்கல்லவோ சீலமென்று செப்ப வேண்டியது. மாமிசத்தேகமிருக்கிறவரைக்கும் சைவமென்னும் மேல்பிணுக்குப் பொய் வார்த்தையை நம்பப்படாது. ஆசாரமென்று பேர்வைத்துக்கொண்டு உமக்கிருக்கிற இறைச்சியில் கொஞ்சங்கொஞ்சம் உருசிபார்த்து பசியாற்றிவருகிறதே தனக்கு ஆதார ஆசாரமாக நினைத்திருக்கின்றது. நாங்களும் பாராமல் பார்த்து வருகின்றோம். ஒருவேளை உம்மிடத்திற்சொன்னால் அதனளவில் வைத்திருக்கிற புது மோகத்தால் எங்கள்பேரில் உமக்குக் கோபம் வருமேயென்று மெத்தவும் பயந்திருந்தோம். உமது அன்னத்தைப்புசித்த நாங்கள் உமக்கு பின்னந்தேடப் படாது. உண்மையை யுரைத்தோமென்று சமயோசிதமாய்ச் சொன்னார்கள். அந்தமட்டிற்கேட்ட மதப் புலியானது சொல்வலிமையினாற் சொன்ன பொய்யை மெய்யாகக்கொண்டு வாலடித்து, நகத்தைவிரித்து முகஞ்சிலிர்த்து கண்சிவந்து பல்லைக்கடித்து அந்தநரியைப்பிடித்து அடித்து விழுங்கிவிடுகிறேனென்று, ஆக்கிரமித்துப் பராக்கிரமங்காட்டி கழுத்து மயிரைச் சிலுப்பி கடைவாயை நக்கி வாயைத்திறந்து, உடம்பைக்குலுக்கி வருகிற ஆவேசத்தை அந்தப்புலியினுடைய தாயானவள்கண்டு, அடடா பழயபாவிகள் கெடுத்தார்கள், பகைமூட்டிவிட்டார்கள், அந்தநரிவந்தபிற்பாடு என்மகன் சுகப்பட்டானே, உள்ளபடி நடக்கிற குள்ளநரி நல்லதாச்சுதே! அது பொய்பேச மாட்டாதே, உத்தியோகத்திற்கு வருகிறமுன்னிலையில் விஸ்தார வினைவிளையுமென்று கேட்டுக்கொண்டதே! துன்மார்க்கரெல்லாருங்கூடி, என்பிள்ளைக்குத்துற்போதனைபண்ணி இத்தனை தூரத்திற்குக்கொண்டுவந்து விட்டார்களே, யென்று குலைகுலைந்து ஓடிவந்து

குறுக்கே விழுந்து அப்பாமகனே அந்தநரியானது மெத்தவும் உத்த
மச் செந்துவானது, அதற்குவாய்ப்பதட்டங் கைப்பதட்டங் கிடையா
து, அதுவந்த நாள் முதல் இந்தநாள் வரையிலும் அனுபோகம்பார்த்
துவருகிறேன்,மெத்தவுநிதானமுடையது,நான் ஸ்திரமாகச் சொல்லு
கிறேன். நீ தீர்க்கவிசாரணைசெய்தாற் றெரியும், பொய்யு மெய்யும்
வெளியாய்ப்போகும். புண்ணியபாவம் இரண்டுந் தெரிகிறது, நீ பொ
றுமையாயிருவென்று பிள்ளையினது கோபத்தைமாற்றினாள். தாய்
சொல்லைக்கேட்ட பாய்புலியானது சற்றுநேரநிதானித்து தீரவிசாரி
க்கத் தெரியுமென்று கொலுவுக்கு வந்து, பழயமந்திரிகளையழைத்து
ஒருவரோடொருவர் பேசாம லிருக்க காவல்வைத்து ஒவ்வொருவரா
யழைத்து தான் தின்னுகிற புலாலை நரியெப்படி எடுத்தது, எத்தனை
நாளாய் அப்படிசெய்கிறது இயாவர் பார்த்தவர்கள்,நீபார்க்கும்போது
எந்த மாமிசத்தைஎடுத்தது. நீகண்ணுறக்கண்டாயா? கண்டபோதே
எனக்குத் தெரிவிக்க வேண்டாமே,நல்லது அந்த நரிக்காகிலுஞ் சொல்லி
மட்டடக்கவேண்டுமே? நல்லமனதுடையவர்களானால் எல்லாருநன்று
யிருக்கப்பார்ப்பார்கள், கெட்டகுணத்தார் யாவருங் கெட்டுப்போம்
படி துட்டத்தன நினைப்பார்களென்று, தனித்தனி பிரித்து அவர்கள்
மனத்தினைப் பேதித்து விசாரிக்கும்போது பொய்பேசிச் சாதிக்கமா
ட்டாமல் புலிராஜனைப்பணிந்து ஐயா, நீர் அந்தநரியைக்கொன்று
விடுவீரென்று நாங்களெல்லோரும் ஒன்றுகூடி நீர் புசிப்பதற்காக இ
ருந்த மாமிசத்தை எடுத்து ஒளித்துவைத்து,இப்படிக்கு அபாண்ட
ஞ்சொன்னோமென்று ஒத்துக்கொண்டார்கள். அத்தக்ஷணமே புலி
அரசன், விசாரமடைந்து என்னபுத்தி எண்ணினோம், நாம்நின்று விசா
ரியாமல் கொன்றுவிடப் போனோமே யென்று மனங்குன்றி நரியைய
ழைத்து இவ்விடத்தில் நடந்தகிரியைகளையுரைத்து உபசாரம்பண்
ணி இனிஎன்சரீரமுள்ளமட்டும் உன்னைப்பிரியேன், உன்னிடத்தில் அ
வநம்பிக்கை வைக்கமாட்டேன், யாரென்னசொன்னாலும் கேட்கேன்
இதுசத்தியமென்று உறுதிசொல்லிக் கொடுத்து, அந்தநரிக்கு முன்
னிருந்த பெருமையைப் பார்க்கிலும் பின்னையும் அருமைபாராட்டி
சகலவிபகார அதிகாரங்களையும் அதன்வசத்தாய் விட்டுவிட்டு தன்தா
யை வணங்கி, அம்மா! உன்னாலே நான்பாபத்தில் வீழ்ந்து ஆபத்
தை யடையாமல் கோபத்தைத் தவிர்த்து, குணவானுடைய உறவை
யடைத்து, பெருமை யடைந்தே னென்று அன்னையைப்போற்றி

துன்மார்க்கராகிய பழயமந்திரிமார்களை சன்மார்க்கமுள்ள நரிக்கு ஊழியம் பண்ணும்படிக்கு விதித்து, மந்திரியான நரியைத் துதித்து சுகம்பெற்று வாழ்ந்தது.(கேளுந்தருமநந்தனு) அறிவில்லாத பேரிடத்தில் அறிவுடையோர் சேர்ந்தாலும் குற்றம்வரும். ஆனதால் இராசர்களுடைய குணங்களை நன்றாயறிந்து பின்பு அவர்களிடத்தில் மருவவேண்டும், எவர்களானாலும் தன்சுதாவிவேகத்தினாலே தீர்க்காலோசனை செய்து தெரிந்துக்கொள்ள வேண்டும். ஒருவருடைய பேச்சைக்கேட்டு அவசரப்படலாகாது, அவரவர்கள் தங்கள் தங்களுடைய காரியஞ் ஜெயப்படுகிறதற்குப் பாடுபட்டு, எந்தவேளையில் எப்படிசெய்யவேண்டுமோ எவ்விதம் பேசவேண்டுமோ அதற்குத்தகுந்த காரியங்களைப்பேசுவார்கள். அயலார்சொன்ன பேச்சைப் புத்திமானாகிய இராஜன், சொன்னோக்கம் பொருணோக்கம் புருஷலட்சணம் அவனிருந்து சொல்லுகின்றதிசை இப்போது அவனுக்கு நடக்கிறதெசை இதையெல்லாம் நிதானித்துப் பார்த்து அதைநம்பவும் போகாது தள்ளவுங் கூடாது பராமுகமா யிருக்கவும் படாது. அவரவர்க ளக்கறைக்கு அவரவர்கள் பாடுபடுவார்களாதலால் பகுத்தறிவு இல்லாத பேர்களின் வார்த்தையை பத்தியமாய் எண்ணப்படாது. எண்ணினால், உடனே குற்றம் நேரிடும். எத்தனையோவிதத்தில் சொன்னபோதிலும்தன்னுடைய சுயபுத்தியைத் துணையாகக்கொண்டு யோசித்து நடக்கவேண்டும். அன்றியும் இராஜாக்களுக்கு, ஆசாரம் கருமக்கிரியை, ஒழுக்கம் இவைகளிருக்கவேண்டும் அவைகளில்லாவிட்டால், செல்வம் நில்லாது, ஜெயம் பெறமாட்டார்கள். ஒருவேளைகாலகதியால் தள்ளுண்டுபோனாலும், பிராணலய காலத்திலாவது ஒழுக்கத்தைத் தழுவி உயிர்விடவேண்டும். அதற்காக ஒரு திருஷ்டாந்தம் சொல்லுகிறேன் கேளும்.

24. ஒழுக்கத்தினால் ஜயத்தை யடைந்த இந்திரன் சரித்திரம்.

ஓ! குந்தமாதேவிக்கு முந்திய புத்திரனே! தேவேந்திரனும், பிரகலாதனனும் ஒரு காலத்திற் பகைத்து நெருங்கிப் போர்புரிந்து கடைசியில் தேவேந்திரன் தோல்வியடைந்து பிரகலாதனன் வெ

ற்றிபெற்று உத்தமனென்று உலகத்தார் கொண்டாட நின்றான். தேவேந்திரன் தியங்கி சோர்வடைந்து தெய்வலோகத்திற்குப்போய் தங்களாசிரியனாகிய பிரகஸ்பதி பகவானுக்கு,நடந்த சண்டையின் பிரதாபமும் தான்பட்ட அபஜெயமும் பிரகலாதனன்பெற்ற வெற்றியுஞ் சொல்லி மனவருத்தப்பட்டு, அந்தப் பிரகலாதனை தான் செயிக்க வேணும், அதற்குவேண்டிய உபாயஞ்சொல்லுமையாவென்றுகேட்டான். தேவ குருவானவர் சீடனைப்பார்த்து நீ செயிக்கவேண்டு மானால் இராக்ஷச குருவாகிய சுக்கிராச்சாரி இடத்திற்குப்போய்த் தெரிவித்துக்கொண்டால், அவருபாயஞ் சொல்லிக்கொடுப்பார் போவென்று அனுப்பிவைத்தார். அப்படியே இந்திரன் அவரிடத்திற்குப் போய் பிரதக்ஷண நமஸ்காரஞ் செய்து சுவாமி, மஹானுபாவா, நான் மெத்தவுஞ் சிறுமையடைந்து உம்மாற் பெருமையடையவேண்டுமென்று சரணம் புகுந்தேன், என்னைக் காத்திரட்சியுமையாவென்று நடந்தசங்கதியைத் தொடர்ந்துரைத்து தோத்திரம்பண்ணினான். அப்போது, சுக்கிராச் சாரியருக்கு தயைபிறந்து ஓ! தேவேந்திரனே? பிரகலாதனனிடத்திலிருக்கிற நல்லொழுக்கம் உன்னிடத்தில் வரும்படியாய்ச் செய்துக்கொள்ளுவையாகில் உடனே உனக்குச் செயமுண்டாம், அப்பால்,உன்னை வெல்லும் வல்லவரில்லை என்றியம்பக் கேட்டு இந்திரன், சந்தோஷப்பட்டு அவரைவிட்டு சிலவுபெற்றுக்கொண்டு, இப்பால் இந்திரன் வந்து,தளர்ந்த பிராமணவேடமெடுத்து,பிரகலாதனனிடத்தி லடுத்து அவனுக்கு மனங்களிக்கத்தக்கதாய் வழிபட்டு வந்தான். இந்தப் பிராமணனுடைய யோக்கிதைக்கு பிரகலாதனன் மகிழ்ந்து சுவாமி பெரியவரே, உமக்கு வேணுமென்றதைக் கேளும் தருகிறேனென்று சாற்றினான். உடனே இந்திரன் ஐயா, உம்மிடத்திலிருக்கிற ஒழுக்கத்தை எனக்குக் கொடுத்துவிடுமென்று கேட்க, பிரகலாதனன் திடுக்கிட்டு ஓ, ஓ! மோசம்போனோம் இனிமேல் சொற்சோர்வு படலாகாது, தேகம் அநித்தியம், கீர்த்தி நித்தியமென் றெண்ணி அவர்விரும்பிய அவ்வாறே கொடுத்துவிட்டான். இந்திரன் அவ்வொழுக்கத்தைத் தத்தமாக வாங்கி தெய்வலோகம்போய்ச் சேர்ந்து ஜெயித்தோரைஜெயித்து செயம்பெற்றிருந்தான். இவ்விடத்தில் சீலமானஒழுக்கத்தை தேவேந்திரனுக்குக் கொடுத்தபிரகலாதனனிடத்திலிருந்து ஒருதிவ்ய ஆசாரபுருஷன்புறப்பட்டு ஓ, பிரகலாதா, இதுவரையிலும் உன்னிடத்தில் நல்லொழுக்க மிருந்தபடியினாலே பிராமணருடைய சக்தியெல்லாம் உன்னைவிட் டொழி

யாதிருந்தது, அதைத் தேவேந்திரனுக்கு நீ தத்தம்பண்ணியபடியால் இனிமேலுன்னிடத்தி லிருக்கமாட்டேன், இதோபோகிறேனென்று வெளிப்பட்டுஇந்திரனிடத்திற்பொருந்தி அவனுடலிற்றங்கியிருந்தது. அன்று முதலாய் வெற்றிபெறும்படி ஒழுக்கமென்னும் பிராமண ஜீவாசார புருஷனும் மஹாலக்ஷிமியும் ஜெயலக்ஷிமியும் தங்கள் தங்கள் ரூபத்தைக்காட்டி பிரத்தியக்ஷமாய் தேவேந்திரனிடத்திலிருந்து விட்டார்கள். இவ்விருவரையும் பெற்றுக்கொண்ட இந்திரனானவன் இராக்கதரைச்செயித்து திருபுவனத்திற்கும் அதிபதியானான். ஆகையால்,நல்லொழுக்கம் எவர்களிடத்திலிருக்கின்றதோ அவர்களுக்குச் சத்துரு செயமுண்டாகும் மித்துருநயம் மேன்பாடாகும்; சகலபாக்கியமும்பெருகும், அவர்களுக்குப் பூலோகத்திற் கிட்டாத பதார்த்த மொன்று மில்லை. அப்பேர்பட்ட ஒழுக்கம், சீவாச்சாரம், இவைகளைத் துணையாகக்கொண்ட பேருக்குக் குறைவுவாராது. சிலவேளைகாலதேச, வர்த்தமானங் களினால் ஒழுக்கம், ஆசாரந்தப்பி னனத்துவ நேரிடுமாகில் அதனாலே அவர்களுக்கு பலங்குறையமாட்டாது, அதற்குத்திருஷ்டாந்தமாக, ஒருகதை சொல்லுகிறேன் கேளும்.

25. ஆத்மக்ஞான முள்ள கௌசிக மஹாரிஷி ஒழுக்கம் வழுவியும், நன்மை யடைந்த சரித்திரம்.

கௌசிகமகாரிஷி என்பவர் தபசுபண்ணிக்கொண் டிருக்கும்போது, திரேதாயுகமுடிவில் துவாபரயுக முதலில் மழை பெய்யாமல் க்ஷாமம்வந்தது. அந்தக்ஷாமகாலத்தில் உலகிலுள்ள உயிர்களனைத்தும் அன்னந்தண்ணீர் காய்கனி, இலை, கிழங்கு, முதலியதுங்கிட்டாமல், பெரும்பசியினால் வாடி, வதங்கி, இறந்துபோனார்கள்; அப்படிக்கு மனுஷர்களும், மாடு, கன்றுமுதலாகிய உயிர்களும் மாய்ந்துவரும்போது விசுவாமித்திரருடைய தபசுதெளிந்து விழித்துக்கொண்டார். அவருக்குண்டாகிய மிகுந்தபசியினால் உபத்திரவமடைந்து எதையாகிலும் புசித்து உதராக்கினியை யவித்து இளைப்பாறுவோமென்று, காய், கனிகந்தமூலங்களை எங்கெங்குந்தேடி இல்லாமையால் வாடி ஏன் இப்படியானதென்று கியான திருஷ்டியால் நாடி

நிலத்தில், மழைத்துளி விழாமையால் காய்ந்து போயிற்று புற்பூடு களுந் தீய்ந்துபோயிற்றென்று தெரிந்து எரியும் பசி பொறுக்கமாட்டாமல், உலர்ந்தகாடெல்லாம் ஓடித்திரிந்து வரும்போது ஒரு காட்டிலே புகுந்தார். அவ்விடத்தில் ஒருபுலையன் கிணறொன் றெடுத்து அதனருகிற் குடிசையமைத்து அநேக விலங்கினங்களை வதைத்துமாமிசத்தைக் குடிசையில் வைத்துக்கொண்டு, அதைப் பசிவந்தவேளையிற் றின்று, கிணற்றின் நீரையருந்தி, தன்னுயிரைக் காப்பாற்றிக்கொண்டிருந்தான். அந்த உளவை விசுவாமித்திரரறிந்து இராத்திரியில் அவன் குடிசைக்குள் நுழைந்து அவனையறியாமல் இரகசியமாய் இறச்சியைத் திருடினார். அதையந்தப் பொல்லாப் புலையன் கண்டு ஆர்ப்பரித் தெழுந்து கைவாளை வாங்கி கரகரெனச் சுழற்றியோங்கி அவருடல் இரண்டு துண்டமாக வெட்ட வேணுமென்று வீசப் போகிறசமயத்தில், அப்பா அப்படி செய்யாதே, என்னைவையாதே வாளினாற்கொய்யாதே என்வாக்குப் பொய்யாதே நான் சூரிய குலத்தான், தவத்தினலத்தான், நான் விசுவாமித்திரன். என் பசியினால் நுழைந்து பழித்தொழிலுக் குள்ளானேன். நீபதறாதே யென்று பன்னியபோது அந்தப்புலையன் கிடுகிடென்று நடுங்கிஒடுங்கி, ஓங்கிய கையுமோய்ந்து வாளாயுதத்தையு மெறிந்து, அவர்காலில் விழுந்து, ஐயா,பரமகுருவே இப்படிப்பட்ட வேலைசெய்வதற்கு நீருடன்படுவானேன்,உமக்கு ஈதடுக்குமோ இதுஞாயமோ நன்நீதியோ பெரியோர்களுக் கியல்போவென்று புலையன்கேட்க, விசுவாமித்திரர் கேளும் பிள்ளாய் இந்தஉடலெடுத்திருக்கப்பட்ட ஆத்மகோடிகளில் மானிட தேகம்வருவது அரிது, அதிலும் ஆசாரமாயிருப்பது அரிது, அவ்வாசாரத்தை பிராணனுக்கு ஆபத்து வந்தபோது அநுஷ்டிக்க பார்க்கில் சரிப்படாது, அந்தவேளை உயிரைபற்றி ஆசாரத்தைவிட்டுக் காப்பாற்றிக்கொண்டால், அதனாற் குற்றமில்லை. ஆசார மென்பதெல்லாம் உபசாரம் என்று கூறிய விசுவாமித்திரருக்கு முநிகாதகனாகிய புலையன் சொன்னதாவது என்ன ஐயா, சமயத்திற்குத் தக்கபடி சொல்லுகின்றீர் பிராணன்போனாலும், போமெயொழிய தன்குலாச்சாரம், ஒழுக்கம், நெறிமுறைப்பழக்கம் விடலாகாதென்று பெரியோர்கள் பேசியிருக்க, சகலநீதியுமறிந்து தெளிந்த நாதனாகிய தேவரீர் என் குடிலைசக்குள்ளே புகுந்ததுபாவத்திலும்பாவம், மகாபாவமென்றெண்ணாமல் துணிந்து உயிர்நிமித்தம் ஒட்டி நாற்றமுள்ள இறைச்சியைத்திருடித் தின்னநினைத்தது, உமக்கு ஞாயமோ? அல்

லது காலத்திற்குத்தகுந்த உபாயமோ, ப்ரம்மாமுதலிய தேவதைகளுங் கொண்டாடப்பட்ட பிரம்மரிஷியேயென்று புலையன்பேசவும், அதற்கு விசுவாமித்திரர் மாறுத்தரம் வேறுசொல்ல மாட்டாமல் மயங்கி,மறுபடியும்புலையனைப்பார்த்து புண்ணியனேபூலோகத்தாருக்கும், இப்பிரபஞ்சம் மெய்யென்றுநம்பியிருக்கின்றபேர்களுக்கும் பிராணன் போனாலும்,பெருமை பெறக்கொண்ட ஆசாரத்தைவிடப்போகாது,நீ கேட்டது மெய்யே, நாங்களோ இப்பிரபஞ்சவாழ்வு பொய்யென்று ஈஷணத்திரையாதிக ளொழித்து யானெனதென்பது இன்றி யாதொன்றும் விடுத்து பற்றில்லாமல் பிரம்மவிசாரணை பண்ணிய பரதேசிகள்.சத்தியத்தையும் தருமத்தையும் மோக்ஷத்தையும் அடையுங் கிரியையுடைய ஆசாரமே, எங்கட்குமேலாகிய ஆசாரம். அதைவிட்டால் எங்களுக்கு வேறுவழியில்லை. அதைநாங்கள் விடக்கூடாது. ஆகிலும் நாங்களொருவேளை ஆசாரந்தப்பினால் அதனா லெங்களுக்கொரு உபாதியுமில்லை. பெருநெருப்புக் கிரமில்லை புனிதவான்களுக்கொன்றேனுமில்லை. எங்களுக்கு சர்வபூதாதிகளுஞ் சமமாயிருக்கும், பெரிது சிறிதில்லை. பிரபஞ்சத்தில் ஒன்றுக்கொன்று வித்தியாசங்களாய், பேதாபேதங்களாய் தங்கள்பெண்டு பிள்ளை பண்டுபதார்த்தம், இவர்கள் அயலார், உரியவர்களென்று நமக்கும் அவர்களுக்குஞ் சம்பந்த மென்ன, இது நம்முடைமை, இது பிறருடைமை யென்று, வித்தியாசமாயெண்ணுகிற பேதம் எங்களிடத்திலில்லை, சர்வபூதாதிகளும் சமமாய்ப்பார்க்கிற கிருபாமுகங்கொண் டிருப்பவர்கள் நாங்கள். எங்களுங்கும் பிரபஞ்ச சம்பந்தத்திற்கும் வெகுதூரம். அது எங்களுக்கு நிமித்தியமில்லை. நாங்கள் சீவன் முத்தர், உலோகோபகாரநிமித்தம் உடலைச் சுமந்து ஈஸ்வரனுடைய திருவிளையாட்டுக்கு சாக்ஷிமாத்திரமாயிருக்கிறவர்கள்,எங்களுக்கு இப்பேர்ப்பட் டகாரியமெல்லாம் ஒருபொருட்டல்ல. இதனால் வருகிற ஆசார ஈனமாகிய குற்றத்தைப்போக்கடித்துக் கொள்ளுகிறவல்லபம் எங்களுக்குண்டு. ஒருவாய்ப்பேச்சினால் ஜனனம் போய்விடும். அன்றியும் யான் என தென்கின்ற ஆணவமாகிய அக்கியான கேவலத்தில் அழுந்தியபேர்களுக்குப் பிறப்பு ஒழியாது, ஆதலால் இதை நீநன்றாயோசித்துக்கொள்ளென்று செப்பவும், அந்தப்புலையன் கேட்டு அவருடைய பாதத்தில்வீழ்ந்து சுவாமி தேவரீருக்குச் சரிப்போனமட்டும் பாருமென்று போய்விட்டான். அப்பால் விசுவாமித்திரர் அந்தநாய் மாமிசத்தை நெருப்பிலிட்டு வதக்கி நன்றாய்ச்சாப்பிட்டு தாகத்திற்கருந்தி தன்பசியைத்தீர்த்துக்கொண்டு ஆயாசமாறி இருக்கு

ம்போது தனக்கிந்தப்பசி வருவானேனென்று நிதானித்துப் பார்த்து.
இவ்வுலகத்தில் பன்னிரண்டு வருஷமாய் மழையில்லாமற்போனபடி
யால் இத்தனைவருத்த முற்றதென்று பெருத்தகோபம் பிறந்து, ஜனி
க்குமேகங்களையும் மேகநாதனாகிய இந்திரனையுமெரித்துவிடுகிறேனெ
ன்று, கோபச்சிரிப்புசிரித்து வடவாமுகாக்கினிபோல் கண்சிவந்து
க்ருதி உறுமி தேவேந்திரனையும் ஆகாயத்தையும் பார்த்து ஆக்கிரமி
த்த காலையில், இந்திரனஞ்சி மேகங்களையழைத்து சீக்கிரம்போய்ம
ழைபொழியுங்கள், இன்னஞ்சற்றுநேரம் தாமசப்பட்டால் பதினான்கு
லோகமும் பாழாய்ப்போய்விடும். விசுவாமித்திரருக்குக்கோபம் பல
க்குமுன்னே நீங்கள் கனத்துப்பலத்து இடித்துத்தடித்துப் பெய்யுங்க
ளென்றுபோக்கினான். அங்கிருந்து மேகங்கள் புறப்பட்டு சக்கிரவா
ளகிரிமட்டும் குடைகவிழ்ந்ததுபோற் கவிழ்ந்து யுகாந்தகாலம்போற்
கறுத்து மின்னலுடன் சூழ்ந்து சடசடவென்று யானைத்துதிக்கைபோ
லப்பொழிந்து யெங்கும்வெள்ளமாக்கி படுகுழி பள்ளங்கணிறைந்த தி
ல்லாமலும், ஆறு, மடுக்கள், ஏரி, குளங்கள், குட்டைகள், வாய்க்கா
ல், வயல்கள், கசங்கள், கால்வாய்கள் முதலியவெல்லா நிறைந்து சமு
த்திரத்திற்கும் சகாயமாகி உலகமெல்லாம் இடையூறகன்று சகலபி
ராணிகளும்பிழைத்து பயிர்பலன்களுந் தழைத்துக் காய்த்தது. இப்
பிரகாரம் பிரதியுபகாரம் வேண்டாமல், தலையாயவார் மேகம்போல
பொழியவும், விசுவாமித்திரர் காரணமாக விருக்கவும்; உலகத்தை
க்கவுஞ்செய்வித்து நிர்மலருமாகிய விசுவாமித்திரமகாரிஷி எப்
போதும்போல் இடைவிடாமற்றபசிலிருந்துவிட்டார். ஆகையால்
ஒழுக்கமுடையாருக்கு இழுக்குவாராது. ஒருவேளை வந்தாலும் உல
கம் பழிக்காமற் படிக்கு தன்னை யறிந்த தலைவர் ஜாக்கிரதையாயிரு
ந்து ஆசாரத்தைக் காப்பாற்றிக்கொள்ளவேண்டும். ஓ! தருமஇரா
ஜனே! இராஜ செங்கோல் எப்போற்பட்டது. எத்திறமுடையதெ
ன்று வினவியதற்கு உத்தரஞ் சொல்லத் தொடங்கினர்.

26. இராஜாக்களின் செங்கோலியற்கையின் சட்டவிற்பத்தி.

ஓ! தருமபூபதி? அரசருக்குச் செங்கோலாவதுயாது? அது
எவ்வழியில் வந்தது? அந்தச் செங்கோலுக்கு அதிதேவதைகளார்?

அவைகளெல்லா முனக்குச்சொல்லுகிறேன். அப்பா! சங்கினங்களூர்ந்
து நாதமுழக்கி விளையாடித் திரியும் சேற்றினங்களும், நாற்றினங்களு
மருவியகழனிகள் சூழ்ந்த வளப்பங்களினாற் பொங்கிய அங்கதேசத்
தில் வசுவேமன் என்பேரான் இருந்தான். அவனுக்கு தருமமே இயற்
கைக்குணம். அவிர்ப்பாகங்களினால் மகிழ்ந்து தேவதைகள் யாவருங்
கொண்டாடானின்றவன். ஒருநாள் இராச்சியபாரம்பண்ணி மண்ணா
சையை நீக்கி, பெண்சாதியும் தானுமாய் இமோர்க்கிரிச் சாரலுக்குப்
போய் அங்கே தவம்பண்ணுகின்ற பெரியோராகிய ஞானிகளுக்கு
வணக்கம் புரிந்து அவர்களுடன் இணக்கமாயிருந்து தவஞ்செய்வத
ற்கு சிஷ்டாசாரத்தன்மை பயின்றுவந்தான். அப்படியிருக்கின்ற கா
லத்தில், சுவர்க்க மத்திய பாதாளமும் கீர்த்திக்கொடிநாட்டிய மாந்தா
தா வென்னும் பார்த்திபன் அவ்விடத்திற்கு வந்து, வசுவேமனென்
னும் அரசனுக்குத்தாழ்ந்து வணங்கிவழிபட்டு செங்கோலாகிய தண்
டனை நூல்முறையை எங்கோனே, எனக்குச் சொல்லவேண்டுமெ
ன்று கேட்க, பிரபஞ்சவாசனைவிட்ட அங்கதேசாதிபன் சந்தோஷத்து
டன், ஓ! மாந்தாதாவே! நீர்கேட்கப்பட்ட செங்கோலியற்கையுந் த
ண்டனையும், அதுவந்தவரலாறும், அதனுடையபலமும், விஸ்தரித்து
விளம்புகிறேன். அந்தத்தண்டனை முறைமைப்பிரகாரம் நடத்தினால்
அவர்களுக்கு என்றென்றைக்கும் பழிவராமாட்டாது பாபமணுகாது
என்று மாந்தாதாவுக்கு வசுவேமன் சொல்லியவண்ணம் உமக்குச்
சொல்லுகிறேன் கேளும் தருமநந்தனா, மூலக்கமலத்தில் முளைத்தெழு
ந்த பிரம்மா, யாகம்பண்ணவேணுமென்று எத்தனித்து, மானசத்திலே
ஒரு பிள்ளைவரவேண்டி கர்ப்பந்தாங்கி நல்ல பிள்ளையைப்பெற்று, அ
வனை எக்கிய யோக்கிய கர்த்தாவாக்கி, இமோர்க்கிரிச்சாரலில் சகல
மேன்பாடும் வரத்தக்க யாகஞ் செய்யத்தொடங்கி, அந்தயாகத்தைப்
பூரணப்படுத்தி தேவதைகளுக்கு அவிர்ப்பாகங்கொடுத்து வருகிறகா
லத்தில், மானசத்திலுண்டாகிய பிள்ளை மறைந்துபோய்விட்டான்.
அப்போது சதுர்முகனுக்குக் கோபம் பிறந்து மகாவிஷ்ணுவினிடத்
திற்குப்போய் நடந்தவிர்த்தாந்தங்களை விண்ணப்பம்பண்ணி வணங்கி
னான். அந்தச்சங்கதியை மஹா விஷ்ணுகேட்டு, பிரமனையழைத்துக்
கொண்டு எப்பொருட்குமிறையாகிய ஈஸ்வரனிருக்கப்பட்ட கைலா
யத்திற்குச் சென்று, உமாபதியைவணங்கி சுவாமி! இவ்வாறு எக்கிய
ம் பண்ணிக்கொண்டு வரும்போது அந்தயாகம் நிறைவேறி வருகிற
த்திற்கு முன்னமே பிரமனுடைய மானசபுத்திரன் மறைந்துபோனா
னும். அந்தயாகம் பூரணமாகாமற் போயிற்று. வேள்வி, விக்கினம்வரலா

காதே, இதற்கென்னசெய்வோமென்று வேண்டிக்கொண்டார்கள். அதற்குபரமேஸ்வரன் இயாதொருவன் பொல்லாதகாரியம் பண்ணி னால்,தெண்டனை நூலிற்செப்பிய பிரகாரம் தெண்டிக்க வேண்டியது. அப்படிஉடனுக்குடனேதண்டித்தால் அவன்சொன்னபடிகேட்பான். அவன் செய்ததீவினையும் அறுந்துபோய்விடும். அவ்வாறு கண்டிக்கா மற் போனால் காரியமு முடியாது, தீவினையும் நீங்காது. ஆகையால் ஒருவனிமித்தியம் தெண்டனை செய்யத் தொடங்கினால் அதைப்பார் த்து உலகத்திலிருக்கிற மனுக்களெல்லாந் பிசகாய் நடவாமல் செப் பமாயும், செம்மையாயுமிருப்பார்கள். அதனால் இயாவருக்கும் பாவ ங்கள்தீர்ந்து புண்ணியதேகிகளாய் சுகப்பட்டு வாழ்வார்களென்று சிவ பிரான்சொல்லியபோது, பிரம்மாவும் விஷ்ணுவும் பணிந்து பரமசிவ மே, தாங்கள் திருவாய்மலர்ந்தருளிய தண்டனைநூல் கற்பித்தருள வேண்டுமென்று காதலித்தார்கள். உடனே சாம்பமூர்த்தி தண்டனை நூலேற்படுத்தி நான்கு வேதம், ஆறு சாஸ்திரம், பரமஞானமான பதினெண்புராணங்களுஞ் சேர்த்து அவைகளில் ஒரு புறமாய் நீதி சாஸ்திரம், தருமசாஸ்திரம் வகுத்து, இதல்லாமல் பதினான்குசாஸ் திரம் பிரத்யேகமாயமைத்து அத்துடன்கூட பாரதசாஸ்திரம், ஆயுள் வேதம், தனுர்வேதம், மீமாம்ஸை இந்தநான்கையும் மேற்கூறிய பதி னான்கையும் கூட்டி, ஆகபதினெட்டாக்கி, இந்தச்சாஸ்திரங்களை யெ ல்லாம் மஹா விஷ்ணுகையிற்கொடுத்து, அதனுடைய விபரங்களை யும் போதித்து, நீர் உலக ரக்ஷகனுகையாலும், மகா விஷ்ணுப்பிரிதிவு பதே யென்னும்வாக்கியத்தினாலும், உலகத்திற் பரவும்படியாய் விரி த்து இந்தக்கருத்தை எவர்களும் தெரிந்துக்கொண்டு, இந்நூலின் படி நடக்கத்தக்கதாய் நீரே இராஜனாகவிருந்து திட்டஞ்செய்து, இதையனுசரிக்காதபேரை உடனுக்குடனே தண்டித்து தருமசக்கர பரிபாலனம் பண்ணி தாரணிபிக்காவற்கடவுளாயிருந்து இரட்சியு மென்று, சதாசிவ மூர்த்தி கிருபையுடனே அநுக்கிரகஞ்செய் தனுப் பினார். அப்படியே விஷ்ணுவும் பிரம்மாவும் அவ்வருளைப்பெற்று வந் தார்கள். இதற்குள்ளே இந்தச்சேதி தெரிந்து எக்கியகர்த்தாவாகிய மண்பொறுத் தந்தையினுடைய மானசபுத்திரன் *எப்போதும்போல் வந்து யாகத்தை முடித்தான். அப்பால் மகாவிஷ்ணு அங்கிராவென் கிற பிள்ளையை மானசத்திலே உண்டாக்கி அவருக்கு ஆதிபாண்ட ரங்கனளித்தசாஸ்திரங்களை யெல்லாம்படிப்பித்துக் கொடுத்து அவ னைப்பூமிக்கு அரசனாக்கினார். அந்தப்பிள்ளை மரிசிமஹாரிஷிக்கு இந் தசாஸ்திரங்களை வழங்கிவையகத்திற்பிரசித்தம் பண்ணச்சொன்னார்.

அந்தமரிசி கொண்டல்வாசனாகிய தேவேந்திரனுக்கு உபதேசித்தருளினார். அந்தத்தேவேந்திரனால் அஷ்டதிசாமுகங்களிலுமிருந்த ரிஷீசுஸ்வரர்களெல்லாரும் மகாதேவவாக்கியத்தையறிந்து பூலோகத்தில் விதைத்தார்கள். பூலோகத்திலுள்ளபேர்கள்சிஷ்டாசாரத்தன்மைப் பிரகாரம் தொண்டுபட்டுகிரகித்துக் கொண்டார்கள். இதுதான் தண்டனைநூல் வந்ததற்குமுகாந்திரம். அந்தத்தண்டனைநூலுக்குப் பெயர் கபர்த்தி, சங்கரன்றானு, உருத்திரபவன், உமாபதி எனவாம் இப்பெயருடையவர்களால் இந்நூல் செய்யப்பட்டது. அவரவர்களே அந்தந்த நூலுக்குப் பெயரும், அதிதேவதையுமானார்கள். அந்த நூலின்வழியே நடவாமல் அதிக்கிரமித்து தீங்குசெய்தபேர்களை தண்டிக்கிறபோது, இன்னாரினியாரென்றுபாராமல் தன்மனிதன் பிறமனிதனென்றுன்னாமல் பயப்படாமல் அஞ்சாமல், இரக்கங்கொள்ளாமல், அந்தந்தக் காரியங்களுக்குத் தகுந்தபடி இராசன் தண்டிக்கவேண்டியது. அப்படி தண்டித்தால் அந்த ஆத்மாக்களுக்கு நல்ல தெளிவும், சுகுணமும், புத்தியும் வரும். இரத்தினங்களுக்கு சாணைபிடிப்பதுபோலும், பயிருக்குக் களை எடுப்பது போலும், தாமரைத் தடாகத்திற்கு பாசி யகற்றுவதுபோலும், நெல்லுக்குப் பதர்போக்குவதுபோலும், இருட்டுக்கு வெளிச்சங்காட்டுவதுபோலும், ஆத்மாக்களுக்கு குற்ற நீக்கிக் குணங்கொடுத்துப் பாவத்தைபோக்குதலாம். ஆனதால் அரசர்கள், பகை, நட்பு தர்மாதர்மம் ஆராய்ந்து தண்டனை கண்டனை முதலிய வைசாற்றிய பிரகாரம் நடத்துவதே செங்கோன்மை. இந்தப்படிக்கு எந்த இராஜன் நடத்துகின்றானோ, அந்தஇராஜனுக்கு எவர்கள் அடங்கிநடக்கின்றார்களோ அவர்களுக்கு இகபரசாதனம் உண்டாமென்று வசுவேமன் சொல்ல, மாந்தாதாமனமகிழ்ந்து சந்தோஷப்பட்டு விடைபெற்றுக்கொண்டு தன்னுடைய பட்டணம்போய்ச்சேர்ந்து, தன்னரசாட்சிக்குரிய தேசமெல்லாம் தர்மா தர்மம்விசாரித்து தண்டனைநூல் பிரகாரம் நடத்தி தானும் தன்னைச்சேர்ந்தபேர்களும் பெருமையுடன் பேறுபெற்றார்கள். அதனால் இராஜர்கள் விபகாரங்களில் தாட்சணியமில்லாமல் தண்டிப்பதே முதற்காரியம். இதுதான் செங்கோல் வந்தவரலாறென்று வீஷ்டுமர்சொல்லக்கேட்டு, ரிஷியீஸ்வரர்கள், முனீஸ்வரர்கள், தவசிகள், தபோதனர்கள், தருமராஜன், அவருடைய தம்பிமார்கள், கிருஷ்ணன் முதலாகியபேரும் உவகையோடுமனமகிழ்ந்து அனுதியில் தண்டனைநூல் வந்தமார்க்கம் இப்படியாவென்று கொண்டாடினார்கள்.

இன்னும் விசேஷமாய்ச் சொல்லுகின்றார். இராஜன் தன்னிடத்தி லிருக்கப்பட்டவர்களுக்கு அடிக்கடி சாக்கிரதையாய் நடவுங்களென் றும், நடவாமற்போனால் கடின தண்டனை கிடைக்குமென்றும், பயம் பிறக்கத்தக்கதாகச் சொல்லிக் கொண்டு வரவேண்டும், அப்படி சொ ல்லியும், தெரியாமையால் சிலகுற்றங்கள் செய்வார்களாகில், அந்த வேளையில் தண்டனை நூல் பிரகாரந் தண்டியாமல் மனம்பொறுத்து சற்றே தாழ்ந்த தண்டனை தண்டிப்பவனே உயிர்களின் மீது தாட் சண்ணியமுடையவன், அதுதான் தயாளுவாகிய இராஜமுறைமை. கொடுந் தண்டனைகூடாது. இத்தன்மையுடன் குடிபடைகளுக்குத் தந்தை போன்றவன் மகாபுண்ணியவான். இவனேதான் தரும இராஜனென்று சாற்றுவது. அதைவிட்டு அரசன் இராஜச தாமச சாத்வீகுணங்களிலே அகப்பட்டு மனம்போனபடிக்குப்போய் தாழ் ந்த குற்றத்திற்கு உயர்ந்த தண்டனை தண்டிக்கிறவன் மகாபாபி, நிந்தையையுடைய கொடுங்கோல் வேந்தன். அவனிருக்கும் நாடுபெ ரும்புலி சேருங்காடு. அவனுக்குப் பின்னே நிற்குங்கேடு. சாமபேத தான, தண்ட சதுர்வித உபாயசத்தியந்தப்பாமல் முறைமைவிசாரித்து அதன் தகுதியும் வழக்கமும் ஒழுக்கமும் நியாயமுமந்நியாயமுமறிந்து, பெரியோர்களுக்கும் ஊராருக்கும் சரிப்படத்தெரிவித்து, தாங்கத்தக் கதண்டனை நடத்தி தன்னுயிர்காத்து வருகிறவன் நீதிமான். அந்தச் சாந்தகுணந்தப்பி நாமே இராசனுக்கதே நமக்கெதிர் யாரிருக்கின்றார்க ளென்று ஆணவமாயை அகந்தையடைந்து எவரையுமதிக்காமல் எடு த்தெறிந்துபேசி வணக்கம் அடக்கம் ஒடுக்கம் ஒழுக்கமில்லாம லிருப் பானாகில் அவனுக்கு எப்பேர்ப்பட்ட பலமிருந்தாலும் பணமிருந்தா லும் பாழாய்க்குறைந்துபோம். அவனும் அபசெயப்பட்டு வறுமை யடைவான். அதற்குத் திருஷ்டாந்தமாக ஒருகதை சொல்லுகிறேன் கேளுமென்று சொல்லுகின்றார்.

27. வணக்கமில்லாதவர்களுக்கு கேடுவருமாறு.

இமவத்கிரிச் சாரலில் ஒரு இலவமரம் ஆகாயமட்டும் உயர்ந்து தன்னுடைய கிளைகளை அஷ்டதிக்குமட்டும் நீட்டி தழையுங்கொழுந் தும் தளிர்த்து குடை கவிழ்த்தாற்போலிருந்தது. அம்மரமானது பிரம்மாண்டமாய்ப்பருத்து நெடுங்காலமா யிருக்கின்றது. அந்த

மரத்தண்டைக்கு நாரதமகாமுனிவர் வந்து, மெய்யுக்கை தங்கி நின்று அந்த இலவமரத்தை நோக்கி, ஓ சான்மலிவிருட்சமே, மகமேருமுதலிய மலைகாடு செடிகளெல்லாமுறித்து அதம் பண்ணுகிறவாயுதேவனுக்கும் உனக்கும் அதிக சிநேகிதமோ? அவன் உன்னைமுறிக்காமல் விட்டிருக்கவேண்டிய காரணமென்ன? அதை யொளிக்காமற் சொல்லவேண்டுமென்று கேட்க, அந்த இலவமரம் சற்றே நகைத்து, ஐயா நாரத மகாமுனியே என்பலத்திற்கு வாயு பகவான ஈடாகமாட்டுவானோ? எனக்கவன் எம்மாத்திரம் மற்றமரங்களைப்போல என்னைமதித்துக் கேட்கின்றீரோ, அந்தவாயுவை மெத்தக்கொண்டாடிப் பேசுகிறீர். அவனுக்கு ஆயிரம் பங்குநானதிகமாச்சுதே என்னை இலேசாய்மதித்தீரோ வென்று, தன்னைத்தானே புகழ்ந்து பேசியசான்மலிமரத்தைப் பார்த்து நாரதர் சொல்லுகின்றார். ஓ பூரணித் தருவே மகாமேருவினுடைய கொடிமுடியை யொடித்து ஆதிசேடனைக் கெலித்த பராக்கிரம சாலியாகிய வாயுதேவனை உனக்குச் சமானமல்லவென்றும் ஒன்றுக்கு ஆயிரம்பங்கு உயர்ந்தாயென்றும் சொன்னையே இப்படியாகச் சொல்லத் தகுமோ? நீ ஒரு அல்பவிருட்சம். உன்னைப்பார்க்கிலும் வயிரம் பற்றியமரம் அநேகங்களிருக்கிறது அதுகளொன்றும் இப்படி கர்வித்துச் சொல்லக்காணோம். நீர் பேசுவது அகந்தையாயிருக்கிறது. இந்த ஆணவமும் அகந்தையும் வணங்காமுடிபெற்ற இறுமாப்பும் முட்டமுடியநிற்குமா? வாயுதேவன்மதித்து வரும்போது இப்போதென்னிடத்திலளவளந்த நிலையின்படிக்கு, கெட்டியாயிருப்பாயா! இந்தச்சொல்லை மறவாதேயென்று நாரதர்சொல்ல, அவர்மொழியைக்கேட்ட இலவமரமானது பின்னையும் பின்னையும்பெருமை பாராட்டி, இன்னம்நான்சொல்ல வேண்டுமோ! வீண்பேச் சென்னத்திற்கு, வெட்கப்படாமல் வாயுதேவன் இவ்விடத்திற்குவரும் போதுநானபடுகிற அவமானமும் அவனடையப்போகிற அவமானமும் நீரே பார்க்கலாமென்றுசொல்லியது. அதன் வார்த்தை வலுவைக்கேட்ட நாரதரானவர் நல்லதுகாண்போமென்று இலவமரத்தினிடத்தில் விடைபெற்றுக்கொண்டுபோய் தேயுநண்பனாகிய வாயுபகவானைக்கண்டு தனக்கும் இலவமரத்திற்கும் நடந்த சங்கதிகளைப்புகன்றார்.

அம்மொழிகேட்ட வாயுபகவான் இம்மென்றெழுந்து கோபாக்கினியுடன் சீறி நெருப்புபொறி பறக்கக் கண்களைநெறித்து விழித்து ஆக்கிரமித்து லோகா லோகமெங்குங்குலுங்கத் தக்கதாய், மலை, ஆறு, காடு, நாடு, கோபுரம், தோரணகம்பமியாவற்றும் அதிரும்படி

யாய் ஆரவாரத்துடன் புறப்பட்டு கீழது மேலது, மேலது கீழது என்னப்புரட்டி ஜாடித்து வரும்போது, இலவமரங்கண்டு கிடுகிடென்று நடுநடுங்கி தன்னுடைய கப்புக்கவருகிய கிளைகளை முறித்துக் கொண்டு, மொட்டையாய்நின்று, தப்புவார்த்தை பேசினேமென்று சலித்து தன்னைவேருடனே சாய்த்துவிடப்போகிறானென்கிறபயத்தினாலே வாயுதேவனைவணங்கி, நல்லவார்த்தைவழங்கி இணங்கியகாலையில், காற்றானது கோபசாந்தியாய் மனங்குளிர்ந்து போய்விட்டது. அதைக்கண்டு நாரதர்வந்து புன்சிரிப்புக்கொண்டு, ஆனந்தக்கூத்தாடிதன்னுடைய மகதியாழைத்தட்டிப்பாடி இலவமரத்தைநோக்கி ஏன் பலமாகிய பொங்கர் விருட்சமே, உன்னுடைய கிளையெங்கே பணரொங்கேகப்புங்கவருமெங்கே இலையெங்கே தளிரெங்கே யென்றுகேட்டு, அது உன்னுடைய இறுமாப்பல்லவா உன்னைமொட்டையடித்து விட்டது இனியெப்போதும் உனக்கும்மற்ற ஆத்மகோடிகளுக்கும் ஆணவம்மமதை அகந்தையாகாது ஆகாதென்று சொல்லிப்போட்டுதன்னுடைய ஸ்தானத்திற் கெழுந்தருளினார். ஆனபடியால் இயாவனொருத்தன் தனக்கொப்பாக ஒருத்தருமில்லை யென்று, பிரதிஷ்டை பேசி தன்னைத்தானே புகழுகிறானோ அவன் எவனானபோதிலும் சீக்கிரத்தில் நால்வருங் கண்டு நகைக்க, உடனே தாழ்ந்து அவமானப் பட்டு வருத்த முறுவான் கேளுந், தரும நந்தனா! எவனொருவன் யோக்கியமும், அவை யடக்கமும், வணக்கமும், கியானமும், உடையவனோ, அவன் மேல்வருங் காரியமறிந்து வேளைக்குத் தக்கபடி தப்பித்துக்கொள்ளுவான், அப்படிவருங் காரியங்களுக்கு முயற்சிதேடிக் கொள்ளாமலிருப்பானாகில் அவன் உறுதியாய் காரியத் தாட்சியினாலே கண்கலங்கி இறந்துபோவான். அதற்குச்சாக்ஷியாய் ஒருகதை சொல்லுகிறேன் கேளென்று வீஷ்டுமர் விளம்பலுற்றார்.

28. முன்ஜாக்கிரதையுடைய மும்மீன்கதை.

ஓ! தரும பூபதியே? பூமியிலுள்ள ஒருநதியின் மடுவிலுற்ற அநேகஞ் சலசரத்தில் பெரியதாகிய அறிவையுடையமூன்றுமீன்களிருந்தன. அவைகளின் பெயர் தீர்க்கதெரிசி, பிரார்த்தகாலதெரிசி, தீர்க்கசூத்திரதெரிசி. இம் மீன்கள் மூன்றும் சிநேகமாய் சஞ்சரித்துக் கொண்டிருந்தது. அப்படிக்கிருக்க அந்த மடுவிலுள்ள சலமெல்லாம் கொஞ்சங் கொஞ்சமாய் கால்வாயிலோடிக் காச்சலாலுணர்ந்தும்,

போர்வதைக்கண்டுமெண்திலச்சங்கொண்டு தன்னுடன் கூடிமருவிய இரண்டு மீன்களையுங்கண்டு வருவதுணரும் தீர்க்கதரிசியென்னுமச்சஞ்சொல்லுவதாவது, என்னுடைய தோழர்களே நாமிருக்கிறமடுவினுடைய நீரெல்லாம் வறண்டும் வடிந்தும் போய்விடுகிறது, இனிமேல் செம்படவர்சேர்ந்துவந்து வலைவீசினால், நாம் அகப்பட்டுக்கொள்ளுவோம் ஆதலால், இதில் இனி நாமிருக்கப்போகாது முன்னடி மடைவாயிற்போகிற நீர்வழியேபோய் ஆழமுள்ள மடுவில் அல்லது குளங்களில் தடாகத்திலிருந்து பிழைப்போம், இனி இவ்விடத்தி லிருப்பது காரியமல்ல வென்றியம்ப, மற்றஇரண்டு மீன்களும், இந்த இடத்தில் நாம்வெகுநாளாயிருந்தோம்இந்தமடுவைவிட்டுப் போகிறதேதுநம்மைப்பிடிக்கிறதேது, போ,போ,இதெல்லாம்பயித்தியம்.மேலும் நினைத்த உடனே போகக்கூடுமா எல்லாம்பின்னாலே பார்த்துக்கொள்வோமென்று,வந்தபின்னறியும்பிரார்த்த காலதரிசியும்,வந்தும் அறியாததீர்க்கசூத்திரதரிசியும் பேசியது. அதைக்கேட்டு இவர்களுக்கு மேல்வருங்காரியஞ்சொன்னால் தெரியவில்லை, துன்பப்படுகிற முன்னிலையிற்றெரியுமென்று சொல்லி விட்டு தீர்க்க தரிசியானது, நீர்வளமுள்ள பெருங்குளத்திற்குப் போய்விட்டது. மற்றிரண்டுமீன்களும் முன்னிருந்த மடுவி லிருக்கும்போது மீன்வேடர்வந்து வலைவீசினார்கள். அம்மடுவிலுள்ள, மீன்களகப்படும்போது, இந்தபிரார்த் தரிசியென்னும் மீனும் அகப்பட்டு, ஐயோ நமக்குப் பிராணன்போகிறகாலம் நேரிட்டதே ஆ! ஆ! நமதுதீர்க்க தரிசிசொன்னதும் சரியாச்சுதேயென்று மனமயங்கி துக்கப்பட்டு நிதானித்து, இனியாகிலும் ஜாக்கிரதையாய் இருப்போமென்று தயிரியங்கொண்டிருந்து, செம்படவன் வலையை உதறியபோது இறந்ததுபோற் கிடக்க, வலைவேடன் அதைநோக்காவிருக்க, மறுபடியும் செம்படவன் வலைவீசும் சமயம்பார்த்து அம்மீன்மடுவில் குதித்து, சேற்றில் ஒளித்தது, மற்றொரு மீனாகிய தீர்க்கதெரிசி என்பது பிராணனைக் காப்பாற்றிக்கொள்ளும் வகையறியாமல் வலைஞரிடத்திலகப்பட்டு மாய்ந்தது.ஆனதால் முன்சாக்கிரதையும்பேரறிவுமுள்ளபேர்கள் ஆபத்துகாலத்தில் எப்படியும் தப்பித்துக்கொண்டு பிழைப்பார்கள். அறிவுஞ் சாக்கிரதையுமற்றவர்கள் சோம்பேறியைப்போல் எந்தக்காரியங்களையும் எண்ணிப்பாராமல் எதிராளி இடத்திற்சிக்கி இறந்து போவார்கள், என்றிசைத்த பாட்டன் வாக்கியத்தைக் கேட்ட தாஷ்டீகனென தருமஇராஜன் ஐயா, தேவரீரால் சகலநீதியுந் தெரியவந்து. ஆநந்தபாஷ்பத்துடன் ஆசையானேன். இதல்

லாமல் சீமையாளப்பட்ட இராஜர்களுக்கு ஜெயம்வருகிற விதமும், அபஜெயமுண்டாகிற காரணமும் சமையத்துக்குத்தக்கபடிக்கு ஜயத்தையடைவதற்கு யோக்கியமுமுள்ள விஷயங்களை தேவரீர் அநுக்கிரகிக்கவேண்டு மென்று கேட்க வீஷ்டுமர் அதற்கொருகதை சொல்லத்தொடங்கினார்.

29. சமுத்திரதீரத்திற்கும் கங்கா நதிக்கும் வினாவிடை.

முன்னொருகாலத்தில் கங்காப்பிரவாகம் வந்து கடலிற் கலந்தபோது, சமுத்திரம் கங்கையைக்கண்டு ஓ! கங்கையே, இந்தப் பெருவெள்ளம் வரும்போது உங்களருகி லிருக்கப்பட்ட செடி, கொடி, புற்பூடுகளை விட்டுவிடுகிறீர்கள், பெரியமரம் கிளை எல்லாம் அடிவேருடன் பிடுங்கி, அசைத்து, அலைத்து ஆட்டி, முறித்து விழ்த்துகிறீர்கள், அது என்னத்தினாலே? இந்த விருட்சங்கள் பண்ணுகிற அபகாரமென்ன? புற்பூடுகள்செய்கிற உபகாரமென்ன, என்றுகேட்க அந்தக்கேள்விக்கு கங்கையானது விசுவாசமாய் சொன்னதாவது, நாங்கள் பெருகிமும்மரமாய் வரும்போது எங்களுக்கு அடக்கமாயும் ஒடுக்கமாயும், வணங்கப்பட்டதை வருத்த மாட்டோம் வணங்காமல் நிமிர்ந்து இறுமாந்து கட்டையாயிருப்பதை வேருடன்பறித்து மொட்டையாக விழ்த்துவோம். வணங்குவது பிழைக்கும் வணங்காதது உயிரிழக்குமென்ன, அந்தவார்த்தையைச் சமுத்திரம்கேட்டு சரிதானென்று ஒப்புக்கொண்டது. ஆதலால் இளைத்த அரசன்வணக்கத்துடன் கனத்த பலவானையடுத்து நல்லவார்த்தை களைப்பேசி அவ்விராஜனுடைய மனம் போனபடிக்குத் தானும்போய் அண்டிப்பிழைப்பான், பலவான்களுக்குத் தாழ்ந்து நடந்தால் என்றைக்குங் குறைவுவாராது யாதொருகுற்றமு மில்லையென்றார். இதுவரையிலும் இராஜ நீதிகளைக் கேட்டு இன்பமடைந்தேன் இனி எண்பத்து நான்கு கோடி ஜீவாத்துமாக்களும் எவ்விதத்தில் சனனமரண வேதையைக் கடந்து தணிக்கைபெறுவார்கள்,அதனதுவிபரத்தை அடியேனுக்குச் சொல்லவேண்டும் ஐயனே யென்று தருமநந்தனன் கேட்க வீஷ்டுமாச்சாரியார் விபரித்து சொல்லத்தொடங்கினார்.

30. தருமசாஸ்திர வியல்புரைத்தல்.

ஓ! எனக்கன்புள்ள தருமபுத்திரனே தருமங்களை பலகோடி விதங்களாக எடுத்துச் சொல்லாத சாஸ்திரங்களில்லை, நல்ல அறிவுடைய பெரியோர்கள் தருமமார்க்கமாய் எல்லாமறிந்து அப்பிரகாரநடந்து நற்கதி பெறுவார்கள். தர்மந்தெரியாத மூடர்களெல்லாம் பாபங்களை விர்த்திபண்ணிக்கொண்டு நரகத்திற் கேதுவாவார்கள். நல்வினை தீவினைகளினாலே இந்த உலகம் நடந்துவருகிறது, உலகுண்டானதும் உடலுண்டானதும் வினைப்பயனென் றறிந்துக்கொள்ளும் மெய்யனே! அப்படி வினைக்காரணமா யுண்டாக்கப்பட்ட பூமியில் தருமத்தின்பேரில் கருத்தைவைத்துக் கடைத்தேற வேண்டும். கடைத்தேறுவதற்கு அநேகம் வழிகளுண்டு, எந்தவழியைப்பற்றி எவன் முடிவுகாண்கிறானோ அவனுக்கு அவ்வழியிற்சுகமுண்டு, அவைகளில் ஏதாகிலுமொன்றைக் கேட்பையானால் அதற்குவழி காட்டுகிறேனென்று வீஷ்மர் சொல்ல தருமராஜன் ஐயா, மெத்தப்பிரயாசப்பட்டு எடுத்த இந்த உடலானதுதற்செயலாய் விழுந்து இறந்துபோவதற்குமுன் சோம்பலில்லாமல் எந்தக்காரியத்தைச்செய்தால் சுலபத்திற்கரையேறக்கூடும் இது உலகத்தாருக்கு எளிதிற்றெரியவேண்டியது, அப்படிப்பட்டமார்க்கத்தை எனக்கு அநுக்கிரகம் பண்ணிவையுமென்று அறக்குமாரன்கேட்க, அதற்கு பிரமசாரியாகிய வீஷ்மர்ஒருதிருஷ்டாந்தரஞ்சொல்லு கின்றார்.

31. அநித்திய தேகிகளாகிய ஜீவர்கள் இல்லறத்திலிருந்து முத்தியடைகின்ற விதம்வருமாறு.

பிராமண குலத்திற்பிறந்த மேதாவியென்னும் பெயர் வாய்ந்த ஒருவர் இருந்தார். அவர் மேலானசாஸ்திரங்களைச்சோதித்து சுருதி, குரு, சுபாநுபவத்தினாற் சிறந்து பிரபஞ்சத்தையு மறந்து பொருந்தியபோது, அவருடைய தகப்பனானவன் சமஸ்த பூதாதி உயிர்வருக்கங்களெல்லாம் பூமியிற்பிறக்கிறதும், இறக்கிறதுங்கண்டு மனம்வெறுத்து தன்பிள்ளையாகிய மேதாவியைப்பார்த்துக் கேட்கின்றான். அப்பா குழந்தையே? இந்தக்கிரகஸ் தாச்சிரமத்தினாலே ஆத்மலாபம் ஒன்று

மில்லை, உயிர்கதிபெறுவதற்கு முகாந்திரமில்லை, இந்த இல்லற வாழ்க்கையால் நல்லறங்கிட்டுமென்று எனக்குத்தோன்றவில்லை,இக பர சாதனமாகிய இல்லறத்தை யொழித்து மனஞ்சலித்து வனத்திற் குப்போய் பஞ்சேந்திரியங்களையும் பாழாக்கி பெரியோர்களுடைய சாவகாசம் பெற்று உபதேசக்கிரமமுற்று உடற்பகையாகிய காமக்குரோதாதிகளை நீக்கி, பிராணவாயுவிற்கு யோகவலுவேற்றிக்கொண்டு, சம்மாரகர்த்தாவாகிய, எமனை ஜெயித்து விஷ்ணுமாயை வென்று பரத்தின்பதத்தைக்கண்டுவாழவேண்டுமென்று இச்சைகொண் டிருக்கின்றேனென்று சொல்ல, மெய்யனை மேதாவிகேட்டு ஐயா, காட்டுக்குப்போய் தபசுசெய்து கதியடைகிறே னென்று கழறுகின்றீர், இல்லறத்திற் கூடாதென்றும், துறவறத்திற் பரத்தையடையலாமென்றும்,இரண்டு விதங் கற்பித்தீர், இவ்விடத்தை விட்டு அவ்விடத்திற்குப் போனால் ஆத்மலாபம்வரும்,இல்லாவிட்டா லில்லையென்பதல்லவோ உம்முடைய கருத்து, ஆத்மலாபம் ஆச்சிரமத்தின் பேரிலேறிற்று, அதப்படியல்ல; கியானவுறுதி கிட்டாத பேர்களுக்கு ஸ்திரீயின்மயக்கமும், அசத்தியமும், அவாவும், புறங்கூறுதலும், பொறாமையும்,ஜீவ இம்சையு மிகுந்து அதனாலீஸ்வரன்சார்பு பெறமாட்டாமற் போய் கருமபூமியிற் காதலித்து ஐம்புலன்களையுமடக்காமல் யான் எனது என்னும் பற்றால்மயங்கி நின்றவர்கள் எவர்களோ,அவர்கள்தான் அடிக்கடி சனனமெடுத்து எமதண்டனைக்கு ஈடுபட்டு பாசக்கயிற்றாற்கட்டுண்டு கதையினால் மொத்துண்டு, சூலத்தாற் குத்துண்டு சோம்பிக்கிடப்பார்கள். கியான உறுதியைக் கடைப்பிடியாய்க் கொண்டவர்கள், ஜீவகாருண்யத்துடன் இருந்து அவர்கள் பெண், மாயையடையாமல் சத்தியந்தப்பாமல் சதாசிவச்சார்பு பெற்று ஐம்புலனையு மடக்கியமனையும் புறங்கண்டு அருள்வடிவுபெறுவார்கள். அப்பேர்ப்பட்ட உத்தமர் இங்கிருந்தாலென்ன அங்கிருந்தா லென்ன எங்கிருந்தாலுமென்ன, வீட்டிலிருந்தால் விசனம், காட்டிலிருந்தால் தரிசனமென்று இரண்டுமில்லை. அவர்கள் பெண்சாதிபிள்ளைகளுடன் கலந்து,குலாவி, நெருங்கிவாழ்ந்தாலும் அவர்களை மாயை அசைக்க மாட்டாது. மனத்தெளிவும் உறுதியும் உண்மைக் கியானமும் நித்தியாநித்திய வஸ்துவிவேகமும் மலபரிபாகமும் இல்லாதவர்கள் காட்டுக்குப் போனாலும் காலூன்றித் தவமிழைத்தாலும் ஆகப்போகிறதொன்றுமில்லை. இருந்த இடத்திற் றவங்கூடாதபேருக்கு எங்கே போனால்தா னென்

ளைககூடும், பெரியவர்களின் நேசமும் விசுவாசமும், சாவகாசமும், உபதேசமும் இங்குமுண்டு, அங்கேமாத்திரம் உண்டென்பது அபத்தம், மோட்சம் பெறுகிறவனுக்கு இடபேதமில்லை. இருந்த இடத்திலிருந்து அனுபவிக்க மாட்டாதவன் வனத்திற்குப்போய், புலிக்கிரையாகி மறுபடியும் பிறக்கவேண்டியதாய் முடியும், உள்ளபடியே மோக்ஷலாப மடைகிறவன் மனோதிடமுடையவனாய் இல்லத்திலிருந்து சித்தந்தெளிவுடையவனாயிருப்பானாகில், அதிலிருந்து கிஞ்சித்து பிசகின போதிலும் சுவர்க்காதி போகங்கிட்டி மீண்டு சுக ஜீவியாய்ப் பிறந்து முத்தியடைவதற்கு சந்தேகமில்லை. ஆகையால் மனோதிடமுடையவன் எங்குமிருக்கலா மென்று வார்த்தை வழங்கிய மேதாவியின் வசனத்தை தந்தைகேட்டு சரிதானென்று தனியனாய், ஈஸ்வர பக்தியும் இருதயசுத்தியும் பெற்று இரக்கமும், பூததயவு, அருளுடைமை அன்புடைமை உறுதிக்கியானமுற்று, ரிஷிகளுக்கெல்லாம்பெரியவராகி பூமியிற்பிரசித்தரானார், ஆதலால் உலகிலுள்ள பேர்களெல்லாரும் கடைத்தேறுவ தெப்படி யென்று உசாவியபடியால் இனிநான் உனக்குச் சொல்லவேண்டியதென்ன, இவ்வாறு இல்லறவாழ்க்கையைக்குறித்து பேசியிருக்கிற வண்ணம் நல்லமனைவியுடன் கலந்து இல்லறம் நடத்தினால் எல்லவர்க்கும் இன்பமுண்டாகும் மதிகுலமன்னனேயென்று வழங்கக்கேட்டு, தருமராஜன் தருக்கடைந்து ஐயா, வெகுதிரவியம் பெற்று ஒருவன் வாழ்வதும்; செல்வமில்லா ஒருத்தன் அவனை தாழ்வதும், உயர்ந்தவனொருவன் தாழ்ந்தவனொருவன் என்பதும், என்னகாரணத்தா லென்று கேட்க வீஷ்மரியம்புகின்றார்.

32. செல்வமுடையவர்களை வறுமை யுடையவர்கள் தாழ்வதற்கு காரணம் வருமாறு.

மனவுறுதிகொண்ட மாதவத்தருமனே! கேளும் தனமுள்ளாருக்கு மதமிருக்கும், கோபம் பிறக்கும், நமக்கெதிர் ஒருவருமில்லை யென்று கர்வப் பேய்பிடிக்கும், கல்வி கேள்வியுடைய பேர்களைக்கண்டால் அவர்களை மதியாமல் வணங்காமல் அகந்தை அடைந்து, ஆங்காரமுடைத்தாய் ஐஸ்வரியம் சாச்வதமென்று அக்கியானத்தை மதித்து

விக்கியானத்தை விடுத்திருப்பார். அன்றியும் பெண்மயக்கம்பொருண் மயக்கம் மண்மயக்கம் இவைகளைப் பெருமையாகப் பெற்றிருப்பார். சம்பத்தில்லாத வர்களுக்கு இத்தியாதிசங்கடங்க ளொன்று மில்லை. அதனால் தரித்திரனுக்குப் பாவமில்லை. ஜன்மாந்திரத்தில் இந்தத்தரித்திரன்இத்தியாதி மமதையடைந்து பெரியவர்கள்மனம்பேதிக்கநடந்து இந்தப்பிறப்பில் நொந்துவந்து பிறந்து, இனிநோதலடையப் போகிற தனவானிடத்தில் காத்துக்கொண்டிருக்கிறான். திரவியமில்லாதவன் உயர்ந்தவன். பூர்வபுண்ணியத்தினால் வந்தபொருளைப்போற்றி, இன்னம் புண்ணியந் தேடிக்கொள்ள முயன்று எவனையும் நொய்யவுரையாமல் நோதல் புரியாமல் செய்யுங்கருமந் தீங்கறச்செய்து, ஜீவராசியிலிரக்கம் காட்டி, ஸ்திரத்திலிருந்து தெய்வமிகழாமற் றொழுது சிந்தையொருமித்து மமதைநீக்கி வாழ்வானாகில், அவன் தேவலோகத்தையனுபவித்து இன்னொரு ஜென்மத்தில் இறைவனாவான். அப்படிக்கில்லாமல் நடந்தால் அதிக பாவமூட்டை கட்டிக்கொண்டு நால்வரு நகைக்கநலிவுற்றிறந்து நரகவாதனையி லழுந்திக்கிடந்து, இவன் நன்றாயிருக்கும்போது மனமறிந்து செய்தநன்மையோ, மனமறியாமற் செய்த தன்மையோ, அந்தப் பலனிருந்து வேறொருயோனியிற் புகவொட்டாமல் மேலாகியமானிட ஆக்கையிற்பிறந்து மேற்கூறிய மாதவப் பேறுபெற்ற மகாராஜனிடத்தில் வறுமையாய்க் காத்திருக்கவேண்டிவரும். கூடியமட்டும் பாரமார்த்திகமாய் நடந்தவன்பின்னும் பின்னும் முற்பதவிப் பெருமையிலே செல்வனாய்ப் பிறப்பான். தீரக்கெட்டு ஆணவப்பட்டு அழிபவன் வேறு யோனியிற் பிறந்து வெகுகஷ்டப்படுவான், அதனால்திரவியமில்லாதவன் கர்வமற்றவன். திரவியம்படைத்தவன் கர்வமுற்றவன். எல்லாப் பொல்லாங்கும் பெரும்பழியும் பொருளிருப்பவனைப் பிடிக்குமேயொழிய பொருளில்லாமல் அருளிருப்பவனைப்பிடிக்கமாட்டாது தருமராஜனே யென்ன, அதைகேட்டஅறன்மைந்தன் ஐயா, தேவரீர் திருவாய் மலர்ந்தருளிய வண்ணமானால் திரவியம் படைத்தவர்கள் எவ்விதத்தில் கடைத்தேறுவார்கள் அதைச்சொல்ல வேண்டுமென்று வேண்டினான். அதற்கு வீஷ்டுமர் சொல்லுகின்றார், பொருள் அவாவைபோக்கி, இப்பொருள் யாரிடத்திலும் நிலைத்திருப்பதல்லவென்று அநுபோகத்தினாலும், நல்ல ஆசிரியர் முன்னிலையினாலும், சாஸ்திரவழக்கத்தினாலும் ஆசையாகிறவேளாக்களைந்து, அண்ணழி ஆண்டழியென்று அலக்ஷயப்படுத்தி அருளாசைவைத்து நன்மார்க்கம்

பற்றிநிற்பாராகில் அவர்கள் நல்லகதியைவிதியாய்ப் பெறுவதுமன்றி சனனம் நேரிட்டபோதிலும் பொருள்மிகுந்த குபேரசம்பத்தைப் பெறலாகும் அதற் கொருகதை சொல்லுகிறேன் கேளும் தருமநந்தனு.

33. செல்வமுடன் நற்கதியடையும் உபாயம் வருமாறு.

வேதநெறிதப்பாத மங்கனென்னு மறையவன் பணத்தாசைப்பிடித்து எந்தவிதத்தி லாவது எந்தத் தொழிலினுலாவது பொருள் சேர்ந்தால் போதுமென்று, தன்னுடைய சாதியாசாரந் தப்பி திரவியந்தேடினுன். அதை தரும கருமங்களிலும் சற்பாத்திரங்களிலும் செலவழித்து அதற்குத் தகுந்த நல்லபயனை யடையாமல் பிரயோஜன மில்லாமல் பூமியிற்புதைத்து, உலோபமிகுத்து பின்னையும் ஆசைப்பிடித்து ஆத்துமக்கியானமற்று, அறிவும் பொறையும் நெறியும் முறைமையுங்கெட்டு, தான் போகிறகதி தனக்குத் தெரியாமல் நாம் சாஸ்வதமாயிருப்போம், இந்தத்தனம் நம்மை விட்டுப்போகாது, செல்வநிலையாமை இளமை நிலையாமையென்னும் நீதிசாஸ்திரம் தருமசாஸ்திரம் இவைகளைப் பார்க்காமலும், பொருளெந்தவழி வந்ததோ அந்தவழியே போய்விடும் இந்தப்பொரு ளிருக்கும் போதே அருளைத் தேடிக்கொள்ளுவோ மென்று யோசிக்காமலும், கியான சூனியத்தால் மயங்கி சரீரந்தளர்ந்து நோய்கள்மேலிட்டு சிலேத்தும இராஜன் காவிட்டு வெளிப்படுகிற காலத்திற் வெள்ளைக்கொடி போன்ற நரைநரைத்து, மறைவுசெய்வதுபோல திரைவந்து, பேரி முழங்குவது போல் இருமிக்கனைத்து கட்டுங் கலகலத்து கால்வாங்கி நாடிகள் குதிரையோட்டத்தைக் கூடிக் குதிக்க, பாரியாள் புத்திரமித்திரரும் பதைபதைத்து, விழிமேல்கீழாய் வெருண்டு விழித்து உடலும், உயிரும் ஒடுங்குங்காலையில் யாத்திரைக்கியானம் வந்து ஐயோ, நாமிறந்துபோய் விட்டால் நமக்குப் பின்னுலே நம்மைத் தொடர்ந்து இந்தப் பெண்டு பிள்ளை உற்றூர் பெற்றூர் சுற்றத்தாரும் நாம் தேடிப் புதைத்த பொருளும் நம்முடன் வரபபோகிறதோ? ஒன்று முதவப்போகிற தில்லையே, நாம் செய்த நல்வினை தீவினை அல்லது பாப புண்ணியம், இதுதானே நமக்குவழித் துணையாய்வருவது நமக்குங் காலம்சமீபித்தது. இந்தப்

பொருளைப் போற்றி வைத்திருப்பதினால் பிரயோசனமென்ன வென்றுபோங்காலக் கியானம் பிறந்து நல்ல சத்கருமங்களில் சிலவுசெய்து ஒருகாசும் வையாமல் ஆசையுஞ் செய்யாமல் பரப் பிரமத்தையே பொருளாகக்கொண்டு பிராணனைவிட்டான். உடனே சிவகணதரிசனமாய் மோட்சம்லபித்தது. ஓ? வல்லவனேயென்று வீஷ்டுமர் சொல்ல, நல்லவன் கேட்டு,நன்றுடன் இதமகிழ்ந்து அங்கட்கிசைந்த இறையேசரணம், இவ்வுலகமானது பஞ்சபூத சகிதமென்றும், பஞ்சகோசமெய்யென்றும் பகர்கின்றார்களே அந்தப்பஞ்சபூத மெங்கே இருந்தது அதுவந்து இந்தத்தேகத்திற் சம்பந்தப்பட்ட விதமென்ன வென்று கேட்க வீஷ்டுமர் சொல்லுகின்றார்.

34. உடலானது பஞ்சபூத வடிவென்றும், பஞ்சகோச மென்றும் உணர்ந்த ஜீவர்களின் ஆசாரம் வருமாறு.

ஆதிமுலப் பொருளாகிய பரந்தாம னுடைய திருநாபிக் கமலத்திலிருந்து பிரம்மாபிறந்தார்.பிறந்தபிரம்மதேவர் ஆகாயத்தைப்படைத்தார்.அந்த ஆகாயத்திலிருந்து சகலமும் பிறந்தது.அவைகளில் வாயுவுண்டாயிற்று; வாயுவிலிருந்து தேயு தோன்றிற்று. தேயுவிலிருந்து அப்புக்கசிந்தது.அப்புவிலிருந்து பிரிதிவுதோன்றிற்று.அவைகள் உதித்தபடிபடியோ,அப்படியே யொடுக்கமென் றறிந்துக் கொள்ளும். இந்த ஐந்து பெரும்பூதங்களினால் சமஸ்தமான பிராணிகள் தோன்றின, அகில முதலாகிய பாதாளலோக மேழும் பூலோக முதலாகிய சத்தியலோக மேழும்,ஆகப் பதினான்கு லோகங்களும்,முகமாகவும் ஏழு சமுத்திரம் வயிறாகவும் பர்வதங்கள் முழுதும் எலும்பாகவும், தோப்புகள்,வனங்கள், காடுகளெல்லாம் ரோமமாகவும்,வானமும், பூமியும், உடலாகவும் சக்கிரவாளகிரி, கையாகவும், பெரும்புறக்கடல் கடைத்துவாரமாகவும் சந்திர சூரியர்,கண்களாகவும் வடவாமுகாக்கினி,யுகாந்த காலாக்கினி, உதராக்கினியாகவும், ஆறு, கால்வாய், அருவிமுதலாகியதும் இரத்தநாடியாகவும். திசையேகாலாகவும் உருக்கொண்டிருக்கின்ற தம்பிரானாகிய ஆண்டவன், கர்த்தா, அவர்தான், அண்டநாதன், பிர்ம்மாண்டநாதன் இதில் சரங்களாயுள்ள தெல்லாம் பஞ்சபூத சொரூபமென்றும் அசரங்களாயுள்ள, மலை, மரம், ஆறு, குகை,

கோபுரங்கள், பஞ்சபூதசகிதமல்லவென்றும் சிலர் நினைப்பார்கள், நீயப்படி எண்ணலாகாது, சரங்களைப்போலவே அசரங்களென்றும் அவையெல்லாம் சலத்தினுதரவால் முளைத்ததே யல்லதுவேறல்ல ஆனதைப் பற்றி அந்தபஞ்சபூதத்தினலாகிய இத்தேகமுமப்படியே வந்ததென்று நினைத்து அக்காரியங்களை அதிதீவரத்தி லறிந்துக்கொள். அப்படிவந்த தருமையான தேகமென் றெண்ணி நற்கதிபெறும் பெரியோர்களுடைய ஆசாரமும் சொல்லுகிறேன் கேளும். சூரியஉதயமாக ஐந்து நாழிகைக்கு முன்னெழுந்து கமண்டலத்து நீரால், கரம், வாய், முகம், ஆசமனியங்கொண்டு பரிசுத்த மனதுடன் தனது ஆத்மார்த்தகடவுளின் அடிமலரைத் தியானித்து, செவிமறைய சிரவேஷ்டிகட்டி நிருதிமூலைக்குப்போய் களர்நிலத்திலே மற்றொரு நினைப்புகள் வரவொட்டாமல் உன்மத்தமாயிருந்து மலமிரண்டையுங் கழித்து எவர்களுடனேயும் பேசாமல் இருகை நிறையமிருத்திகை சேர்த்து குதத்திற்குப்பதினொன்றும், இடதுகரத்திற்கு ஏழும், வலதுகரத்திற்கு ஐந்தும், காலுக்கு பத்தும், ஆக முப்பத்து மூன்றுதரம் சௌசமாற்றி அந்தத்தொகையே வாய்கொப்பளித்து, பதினொரு, அங்குலம், ஐந்து அங்குலமாக நல்லபூங்கொம்பு அல்லது பாற்கொம்புகளால் பல்விளக்கி அங்கந்நியாசம், கரந்நியாசம், பண்ணிக்கொண்டு ஈஸ்வரத்தியானஞ் செய்து தடாகத்திலிறங்கி பரிசுத்தகங்கையாகப் பாவனைபண்ணி சங்கல்பித்து, ஸ்நானமாடி நீரைத்துவட்டி மடிவஸ்திரமுடுத்தி சூரியமந்திர சகிதமாய் சூரியநமஸ்காரம்பண்ணி நித்திய கர்மாநுஷ்டான முடித்து ஆத்மார்த்தக்கடவுளைப்பூசித்து தோத்திர நமஸ்காரந் தொடங்கி ஆசமன்னியங்கொண்டு அசுத்தமானவழியிற் செல்லாமல் நல்லவழியாய் நடந்து, தானிருக்கும் இடம்புகுந்து, பசித்துவந்த பரதேசிகளுண்டோ வென்றுதேடி பஞ்சகச்சாய அன்னமும் பகர்ந்து, உபசரித்து கோபத்தைவிடுத்து, சத்தியத்தையடுத்து குரோதத்தைக்கெடுத்து மனதுங்கீனமாய் ஈனவிர்த்திகட் கிசையாமல், இது சத்து, சடம், என்கின்ற பதார்த்த பேதமுணர்ந்து, எதார்த்தமாகத் தன்னைத்தா னறிந்து, காலந் தெரிந்துண்டு கழிக்கத்தக்கதைக்கழித்து, அதிக பிரசாபத்தியத்தி லகப்படாமல் நாவைக்காத்து நன்மைபெற் றிருப்பதே ஆசாரம். இதற்குவேண்டிய மந்திரங்களையெல்லாம், மர்மமாய் மனதிலுணர்ந்து அம்மகாமந்திரங்களை பிரயோகத்தின்வழி போக்கி பஞ்சேந்திரியங்களையும் நிக்கிரகம் பண்ணி தான்கடைத்தேறத்தக்கதாக

எவனொருவன் நிலையினின்று மந்திரஞ் செபிக்கின்றானோ அவன் எல்லாவற்றிற்கும் மேலான பேரின்பலோகம்பெறுவான்.

இதிப்படியிருக்க, யோகிகளுடைய தன்மையை யுரைக்கிறேன் கேளும், இயமம், நியமம், ஆசனம், பிராணாயாமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதி, இவைகள், அட்டாங்கயோகம், இவ்வெட்டினுடைய, ஆசனம், மந்திரம், இயற்கை, இருக்கை பேதாபேதம் இவைகளை நன்றாயனுபவித்தறிந்த பெரியோர்களிடத்தில் அனுபவிக்கும் விதமறிந்து, வாயுவைக்கும்பித்து, யோகாப்பியாச மனுஷ்டிப்பார்கள், இதன்றியும் யோகாப்பியாசத்திலிருந்து மேலான செபம் பண்ணுவதென்று விளம்புவார்கள், அதற்கொருசாக்ஷி விள்ளுகிறேன் கேளும்வள்ளலேயென் றுரைக்கின்றார்.

35. ஜெபத்தின் பெருமையால் முத்தியடைந்த கௌசிகன் சரித்திரம்.

கௌசிகனென்றொரு பிராமணர் இருந்தார், அவர்சத்தியம் பொறுமை சாந்தமாயிருப்பவர், ஆசாரத்தில் தூய்மையான ஆசாரமுடையவர் மந்திரப்பிரவாக மகத்துவமெல்லாம் தெரிந்தவர், அப்பேர்ப்பட்டவர் ஓரிடத்தை ஏற்படுத்திக்கொண்டு ஆயிரம்வருஷஞ் செபம் பண்ணினார் அவரிடத்திற்கு சாவித்திரி, தேவித்திரி, யானவள் பிரசன்னமாய் வந்துநின்று, நீர் வெகுநாளாய் செபஞ்செய்கிறீர், உமக்கு என்ன இவ்வுலகத்திலுடைய வெண்டிய இருக்கிறதோ அதைக்கேளுந் தருகிறேனென்றாள். அந்தச் சரஸ்வதிதேவியைப்பார்த்து அம்மணி நான் இயாதொருலாபத்தையுங்குறித்து செபிக்கவில்லை, இப்பேர்ப்பட்ட செபம்பண்ணுகிற விரதங்களுக்கு விக்கினம் நேரிடாமல் நடக்கும்படிக்கு அநுக்கிரகஞ் செய்யவேண்டும் என்றார், அப்படியே இசைமடந்தை சந்தோஷமடைந்துவரங்கொடுத்து ஓ, வேத மந்திர பிராமணமுனியே நீரனுஷ்டிக்கிற மந்திரசெபத்திற்கு மகிழ்ந்து உன்னிடத்திற்கு தருமதேவதைவரும் அப்பொழுது கால இயமனிகட்டி நீவாப்படுத்துவான் அக்காலத்தில் முக்கோடி தேவருங் கைகூவிக்கத் தக்கதாக நல்லகதி தருமென்று சொல்லிவிட்டுப் போ

ளுன். அப்பால் முன்போலேயற்றுஞ் செபஞ் செய்யத்தொடங்கி விர த பின்னமில்லாமல் மூந்நூறுவருடஞ் செபஞ் செய்துவரும்போது தருமதேவதை பிரசன்னமாகி, ஓ பிராமணசீலனே! பெரிதிலும் பெரியது தவம். அந்தத் தவத்திற்கு மேற்பட்டது செபம். அதை நீரனுஷ்டித்து வந்தமையால் உமக்கு மேலான கதி கிடைத்தது; அக்கதிக்குப்போய்ச் சேர்ந்துவிடும்; இந்தஸ்தூல பூதவுடலை கர்மபூமியிற் கழித்துப்போடும் நன்னய குணாலய ஞானியே எனவும். முதற்குலத்தானுகிய பிராமணன், தருமதேவதையைச் சரணமடைந்து, ஐயா! கொடியதுன்பம் வருகிறபோதெல்லாம் லாபலோபத்திற் கிடங்கொடுத்துக்கொண்டு ஆன்மாவைக்காப்பாற்றி அதற்குக் கவசமாயிருந்த உடலை யொழித்து ஆத்மாவுக்குப் பேரின்பம் வந்தகாலத்தில் கூடயிருந்து அனுபவித்த தேகந்தை நீக்கி,நான்மாத்திரஞ் சுகமடைவது தருமமோ,என் தாயின்கருப்பத்தில் உருக்கொண்டபோது,கவசமாகயிருந்து சராசரங்களினுல் வளர்ந்து அதனது இயர்க்கையான குணத்தை சந்தோஷமாகக்கொடுத்து எல்லாந்தன தென்று என்னைச் சுமந்திருந்த மெய்யைவிட்டு நான்மாத்திரந் தனித்துப்போய் சுகம்பெறுவது எனக்கு நன்மையல்லவென்று நவில,தருமதேவதை ஓ கௌசிகரே!எப்பேர்ப்பட்ட மகிமையுடையவர்களுக்கும் தேகம்வேறு, தேகிவேறு சேதனன்வேறாய், தான்குடியிருந்த வீட்டுக்குக் கணக்குப்பார்த்து அளவின்படிக்குக் குடிக்கூலிகொடுத்துஅப்புறப் படுவதுபோல் தேகத்தையகற்றி சீவன்கதியடைவதே யல்லாமல் ஸ்தூலதேகம் சூக்மதேகியாகிய ஆன்மாவுடன்மேல்பதவி யடைந்தது கிடையாது. உமக்குத் தெரியாத இரகசியமுண்டோ உத்தமனே:தேகம்பொய்யாச்சுதே உயிர் மெய்யாச்சுதே என்னதான் பழகியிருந்தாலும் கடைசியில்கெட்டவனுகருக் கெட்டது தான் கிடைக்கும்.நல்லவனுக்கு நன்மையேகிட்டும், ஆதலால் சத்தாகிய ஆத்மபுருஷன் மாத்திரமே, முத்தாகியமுத்தியில் மூழ்குவான். எனதென தென்றிருந்த ஏழைபொருளை எனதெனதென்று விரும்பி எடுத்துக் கொள்பவர்போல் தனதென்றிருந்தசொந்தந் தட்டுக்கெட்டுத்தடுமாறிப்போய் பிணம்,பிணமென்றிகழப்பட்ட பின் கதியேயல்லது வேறில்லை. என்னுடன் கூடிப்பிறந்து சகலநன்மைக்குந் துணையாகச்சிறந்து இடங்கொடுத்துக் கொண்டிருந்த உடலைவிட்டு வரமாட்டேனென்றுயே,நரகவேதனை யனுபவிக்கும்போது,உடலிருந்து அனுபவிக்குமா இல்லையே ஆன்மாவல்லவோ துன்பப்படுகிறது,

இதுகளை நீ யோசித்து தேகத்தைவிலக்கி நல்லகதியடையக்கடவையெ ன்றுதருமதேவதை சுவில, அவ்வார்த்தையை ஆதரிக்காமல் கௌசிகர் தேகாபிமானத் துடனிருக்கவும், அந்தவேளையில் இந்தமஹாரிஷிக்கு நேரில் மிர்த்தியு தேவதையும் காலனும் வந்து இதோநாங்களிருவரும் வந்தோம், உமது ஸ்தூல பூத உடலை நீக்கி சூக்ஷ்ம தேகத்துடன் கொ ண்டுபோகின்றோம் நீர் பிரயாணப்பட்டு வாரும், நீர் மிகவும் நல்லவர் உம்மை மேலானபதவியில் நிறுத்தும்படியாய் சம்மார கர்த்தாவாகிய இயமதருமஇராஜன் உத்திரவு செய்திருக்கின்றார், நான் அவருடைய காரியக் காரன் என்பெயர் காலன் இவர்தான் உயிர்களைக் குத்தகை எடுத்திருக்கின்ற மிர்த்தியுதேவதை யென்றுரைத்து அழைத்தார்க ள். அவர்கள் பேச்சை மதிக்காமல் எப்போதும் போல் செபத்திலிரு ந்து விட்டார். அந்த வேளையில் எமதருமராசன் பிசரூபமாகி ஏனையா நடைபேசுறீரொன்று கேட்க; கௌசிகரானவர், சீக்கிரம்எழுந்து நமஸ் கரித்து கிட்ட நெருங்கி ஆசனங்கொடுத்து அவருக்குச் செய்யத்தக்க மரியாதை உபசாரங்களெல்லாஞ்செய்து, தானுமிருந்து கலந்துபேசிக் கொண்டிருக்கும்போது, பெரியவர்களால் கொண்டாடப்பட்ட பிரதா பசாலியாகிய அயோத்தியையாளும் இட்சுவாகு மஹாராஜன் செங் கோல் தானம்பண்ணிப் போகிறவர் இந்தக்கௌசிக மகாரிஷி ஆசிரம த்தின்வழியேவந்தார். அவ்விடத்தில் தருமவானாகிய எமதருமராஜனை க்கண்டு பிரதட்சண நமஸ்காரம் பண்ணிக்கொண்டு தீர்க்கசெபதிட வானாகிய கௌசிகமஹாரிஷியைக்கண்டுவணங்கிநின்ற சூரியகுலத்து இராசனைகண்டு ஓபெருமைபொருந்தியஇராஜனே. எனது ஆசிரமத்தி ற்கு இன்றையதினம் நீர்வந்தபடியால் எனக்கு அதிதியானீர். உன் னெண்ணத்திற் கொண்டிருக்கின்ற இச்சையை ஒளியாமற் கேளென் று கௌசிகர்சொல்ல, சத்திய சௌவுச, ஆசார, உபசார, பூசை, செப, தபவிரதாதிகளும், சாஸ்திரத் தெளிவும், எக்கியமும் ஏராளமாய்ப் பெற்ற இட்சுவாகுமஹாராஜன், கௌசிகரைப் பார்த்து! சுவாமி நான் இந்தப்பூமி எல்லாம் ஆளப்பட்ட இராஜன், உங்களைப்போன்றவர்கள் அபேட்சிக்கப்பட்ட பொருள் யாதொரு பதார்த்தமேனும் நான்கொ டுக்கவேண்டிய வனாயிருக்க தேவரீரிடத்தில் நான் எந்தப்பதார்த்தத் தைக் கேட்டு வாங்கி உண்ணப் போகிறேன். மேலும் ஒரு பதார் த்தத்தின் பேரில் ஆசைப்பட்டால், அது, பிறவிக்குவித்தாகுமென் று ஆசாபாசத்தை அடியோடறுத்து விட்டிருக் கின்றேன், அப்பேர் ப்பட்ட விரதத்தைப் போக்கி யான் எதைக் கேட்பேன், என்றான்,

அம்மொழி கேட்ட கௌசிக முனியானவர், ஓ, இராஜனே! எப்படிப் பட்டவர்களானாலும், ஒருவரிடத்திற்கு வந்தால், அவர்களுக்கு தன்னாலியன்றமாத்திரம் உபகாரம்பண்ணுவது உத்தமமென்றுபேறு பெற்ற ஜீவன் முத்தர்களுரைத்திருக்கின்றார்கள், அதைப்பற்றி உமக்கு நானுமுரைத்தேன். இப்படவும், பர்வதாகிர்தியாகிய தோளினையுடைய பார்த்திபனே, வேத வேதியர் முதலிய பேருக்குக் கொடுக்க மெய்த்தவரியாவரும் நம்மிடத்தில் வந்து யாசிக்க இப்படி மேன்பாடாயிருக்கின்றநாம், இவனை எவ்வாறு கேட்பதென்று லச்சைப்படாதீர், மகாப்பிரசாதமென்று மனதில் மதித்து, நாணத்தை போக்கி, நன்றாய்க்கேளும், என்று பேசிய கௌசிகரிஷியின் இஷ்டத்தைக் கண்டு இட்சுவாகுமகாராஜன் தேவரீருடைய சிந்தை இப்படிக்கிருந்தால் நான் தடுப்பது நிந்தை, கற்றறிவுள்ள உத்தமனே நீர் பண்ணப் பட்ட செபத்தினுடைய பலன்கள் யாவற்றையுஞ் சம்பிரமமாய்க் கொடுமென்று கேட்டான். அதற்குக் கௌசிகர் எண்ணங்கொண்டு யாம் இதுவரையிலுந் தேடிக்கொண்ட செபத்தினுடைய பலன்முழுமையும் வேண்டின படியால் இதோ உபசாரத்துடன் தத்தம்பண்ணுகிறேன் ஒப்புக்கொள்ளுமென்று கௌசிகருரைக்கவும், அவ்வார்த்தையின் உதாரத்தைக் கேட்டு வெற்றி மிகுந்த ஜெயமும் சத்துருவடையும் பயமும் வசனவுசிதமுமுடைய இரவிகுலாதிபன் அதிக அற்புதமடைந்து ரிஷிகட்கெல்லாம் இராஜரிஷியே தேவரீருடைய மனதில் வெகுகாலம் பிரயாசப்பட்டு சேகரித்த அரும்பொருளாகிய செபத்தை அடியேனுக்குக் கொடுக்கிறேனென்கிறது அருமையான காரியம், அது எனக்கு எளிதிற்கிடைத்தால் பெரிய ஔதாரியம் ஆருக்கும் ஆசை பெரிது, நானும் அவ்வாசை வலையை அறுத்தவனல்ல, மிகவும் இஷ்டந்தான் கஷ்டப்பட்டுக் கூடிய ஜெபோ பலன்களை எல்லாம் மனது கவலைப்படாமற் கொடுக்க வேண்டுமென்றான். அவ்வரசனது கருத்தறிந்த முனியானவர் மகிழ்ச்சியுடன் அப்படியே வாங்கிக்கொள்ளுமென்று தருமமுணர்ந்த தபசி சொல்லுகிறார் (ஓ இராஜனே) எனக்கு ஒன்றின்பேரிலும் அவாவில்லை, நான் நிராசையானவன் இந்தச் செபத்தினால் வருகிறபலன் என்னத்திற்கு இதோதந்தேன் பெற்றுக்கொள்ளுமென்று கமண்டலத்து சலத்தையோட்டி கையைநீட்டி தத்தம் பண்ண எத்தனப்பட்டார், அரசன் அதைக்கண்டு இந்தமகாரிஷியினுடைய மனோதுல்யத்

தையும் பற்றற்ற பலத்தையும் பாரமார்த்திகத்தையும் பார்த்து இட்சுவாகுவுக்கு லட்சியமான பட்சம்வந்து வெள்ளமான பேரறிவுடைய உள்ளந் தெளிந்து ஓ, சுவாமி முனிநாதா நிராசையையுடைய நீர்,வெறுத்து இந்தச் ஜெபபலன் என்னத்திற் கென்று எனக்களிக்கத் துணிந்தீர், தேவரீருடைய சிந்தையறியாமல் விந்தையாய்க் கேட்டேன். சாதுவாகிய உம்மால் தர்ம்ம நிர்ணயமும் பற்றற்ற பரிசும் அவாவறுத்தலும் தெரியவந்தது. சுவாமிகளின் செபம் எனக்கு வேண்டாம் மிகுந்த தபசையடைந்த ரிஷீஸ்வரரே, உமக்கிஷ்டமில்லாத காரியத்தை எனக்குக் கொடுக்கிறேனென்றால், நான் வாங்கிக்கொள்ளுவனோ உமக்கு ஆசாபாசம் அற்றதுபோல் எனக்கும் பிரபஞ்சப் பொருளின் பேரில் அபேக்ஷையில்லையென்று அரசன்புகல, கௌசிகர் ஓ, இராஜனே நீர் முன்னொடி ஜெபபலனெல்லாந் சிந்தாமற் றருமென்று கேட்டுவிட்டு இப்போது முன்கேட்டதை மறந்து வேண்டாமென்று வெறுத்து வேறொன்று சொல்வது வேந்தருக் கியல்போ, சூரியகுலத்துத் தோன்றல்களுக்குச் சொற்சோர் வருவது சுகிர்தமோ, உத்தமர்கள் பிராணன் போகிற காலத்திலும் சொல்தவறார்கள், தவறினால் பெரும்பாபம் வரும், முன்னே தேடிய தவமெல்லாம் போய்விடும், அன்றியும் திரிகால அனுஷ்டானமும் தேவபக்தியும் குறைந்துபோம் ஆதலால், என்சொல்லைத் தட்டாமல் நீர்கேட்ட இஷ்டத்தை வீண்போக வொட்டாமல் வாங்கிக் கொள்ளுமென்று வருந்தினார். அதற்கு இராஜன் ஒப்பாமல் தடுத்து மறுமொழி கூறவும் அதற்கந்தப் பெரியவர் அறுமொழியறையவும் இவ்வாறு இரண்டு பேரும் வாதிட்டுக்கொண்டிருக்கும் போது; விகிர்தாகார ரூபத்துடன் இரண்டு பேர்சேர்ந்து வழக்கிட்டு வாதிட்டு இவ்விருவரையு நோக்கிப் பேசத் தொடங்கினார்கள். அதென்னெனில், ஐயா, கௌசிகமுனிவே! ஓ இட்சுவாகுமகாராஜனே! இதோ என்னுடன் வாதாடிவருகிற இவன் ஒருகோதானம் பண்ணினான். அந்தப் பலனை எனக்குக் கொடுமென்று நான்கேட்டேன் அதற்கிசைந்து கொடுத்தான் நான்பெற்றுக்கொண்டு திரும்புகிற சமயத்தில், எனக்கு விவேகம் விளைந்து நானொரு பெரியவருக்கு இரண்டு பசுதானங் கொடுத்திருந்தேன் அந்தப்பலனை உனக்குக் கொடுக்கிறேன் எனக்குக்கொடுத்த கோதானத்திற்குப்பதிலாக நீ வாங்கிக்கொண்டு போவென்று சொன்னேன் நல்லதென்று சம்மதித்து ஒப்புக்கொண்டார். இவர் முன்னே ஒப்புக்கொண்ட படிக்கு இப்

போது ஏற்றுக் கொள்ளாமல் நிலைதவறி மனம்பிரிந்து என்கண்ணிற் காணாமல் மறைந்து விட்டார். அதுமுதலிதுவரையிலும் மொழி பிசகிப்போன இவரை எங்கெங்குந் தேடி ஏங்கி இருந்தேன். இன்றைக்கு என்கண்ணிலகப்பட்டுக் கொண்டார் பூர்வஞ் சம்மதித்தபடிக்கு கோதானம் பலனைக்கைக்கொள்ளுமென்று சலம் வார்க்க, வாங்கமாட்டேனென்று கையைப் பறித்துக் கொள்ளுகிறார், பஞ்சேந்திரியங்களையும் ஏவல் கொண்டிருக்கிற பாக்கியவான்களே; இதையாராய்ந்து தேர்ந்து ஓர்ந்து தருமமாகச் சொல்லுங்களையாவென்று ஒருவன் கேட்க; அவனுக் கெதிரியாகிய மற்றொருவன் ஒருதலைவழக்காகக் கேட்டுவிடாக்காமல் என் ஞாயத்தையுங் கொஞ்சங்கேட்டு நடுநீதிசொல்லுங்களென்று நவிலலுற்றான்.

ஓ! ஐயமாரே? இவர் என்னுடைய கோதானபலத்தை பலவந்தமாய்க் கேட்டார், நான்மனப் பூர்வமாய்க் கொடுத்தேன்வாங்கிக் கொண்டு போய்விட்டார், அப்பால் சிலநாள் தரித்து தன்னுடைய கோதான பலத்தை எனக்குக் கொடுக்கிறே னென்பதாய்த் தொந்தரவு செய்கிறார், அதைப் பெற்றுக் கொள்வதற்கு எனக்கிஷ்டமில்லை, இவர் விருதாவில் போராடுகிறார் ஒருபகாரம் பண்ணினவனுக்கு அவனிடத்திலிருந்து பதிலுபகாரம் பெற்றுக்கொள்ளுகிறமனம் எனக்கில்லை. அப்படிக்கு யாவராவது ஆசைப்பட்டால் அவர்களுக்குக் கொடுமென்றும், ஆசையில்லாத பேர்களுக்கு அடித்துப் பாலூட்டுவதா வென்றும் தடுத்தேன். இவர் நிற்பந்தம் பண்ணுகிறது முறைமைதானா; நீங்களுத்தமர்கள் நன்றாய் ஆராய்ந்து பார்த்து நரகத்திற்கேதுவில்லாமல் பேசுங்களென்று வழக்கிட அநந்தவன் மறுபடியுஞ் சொல்லுகிறான், மகாரிஷியே, மகாராஜனே, இவர்சொன்னது மெய்தான் என்கோதானபலனைக் கொடுக்கிறே னென்றபோது இவர்சம்மதி இல்லாமற்றடுப்பாராகில், நான் விடவேண்டியதே, அப்படிக் கில்லாமல் அப்போது இவர் ஒப்புக்கொண்டு இப்போது தான் வாங்கமாட்டேன், தானம் பெறும்படி அக்கறை இல்லை என்பாராகில், நான் சும்மா விடப்போமோ? (முறையோ வென்பவன் தலையில் மூட்டை வைப்பானா) நீங்களே சொல்லுங்களென்றான். இவ்விருவர் விபகாரத்தை ரிஷியும் இராஜனுங்கேட்டு தீர்க்காலோசனைசெய்து, அரசன் இவ்விருவருக்குஞ் சம்மதியாகும்படிக்குச் சொல்லாமல் மௌனத்திலிருந்தாற் பிழையில்லையென் றிருந்து விட்டான். அந்தக்கௌசிகமுனிவன் இட்சுவாகுராஜனை எறநோக்கி ஓ! அரசனே இருவர்வழ

க்கையும் செவ்வையாய்க் கேட்டீரே; இவர்கள் சொன்னபேச்சு இவ்வளவுதான் என்னுடைய செபத்தின் பலனைக் கேட்டுவிட்டு இப்போது வேண்டாமென்கின்றீரோ உமக்கும் இப்படியே வரும், இப்பவும் நீர்விரும்பிக் கேட்டபடிக்கு நான் வெகுகாலமாகச் செய்துவந்த செபத்தின் பலனை சுபத்துடன்வாங்கிக்கொள்ளும்,இல்லாவிட்டால் சபிப்பேன் பாருமென்றுகோபிக்கவும்,அம்மொழிகேட்ட இராஜன்மறுமொழிபேசாமல்கையைநீட்டினான்.கௌசிகமுனிவர் தனக்குரிய செபத்தின்பலன் இவ்வரசனுக்குச் சொந்தமாகக் கடவதென்று மனோவாக்குக்காய திரிகரணசுத்தியாய் தத்தம்பண்ணினார். அதை ஏற்றுக்கொண்டு சுவேதகக்ஷத்திர நிழலில் வையகத்தை விளைத்து ஆளப்பட்ட மகாராஜன் கௌசிகரிஷியைப் பணிந்து ஒருவார்த்தை புகலத்தொடங்கினான். ஐயா,உம்முடைய தபோபலத்தை நான் வாங்கிக் கொண்டேன், இனிமேல் நீர்நல்ல கதியடையத்தக்கதாக என்னுடைய புண்ணிய பலன்முழுவதும் உமக்குத் தருகிறேன் நீர்வாங்கிக் கொள்ளுமென்று சொன்னான். அந்தவேளையில் வாதித்து வந்திருந்த இருதிறவாதியாகிய விகிர்தாகார புருஷர்கள் இராஜனுக்கெதிர் நின்று ஏனையா இப்படியாகச் சொல்லுகின்றீர், நாங்கள் சொல்லிக் கொண்ட விபகாரத்தையுங் கேட்டு அதற்கு நன்மை தீமை விளம்பாமல் நீருந் தப்பிய ஞாயஞ் செப்புகின்றீர், எங்களுடை பூர்வோத்திரத்தைக் கேளும், நாங்களிருவரும் காமக்குரோத புருஷாள் இந்த ரூபமெடுத்து வந்தோம் இதோ இருக்கின்ற தருமரூப சொரூபி எமதருமராஜன் இவர் மிர்த்தியுதேவதை இவர்கட்கு நடுவே இருப்பவர் பிரமநிலை பிரியாத கௌசிக மகாரிஷி, நீரோவென்னில் சூரியகுல திலக வீரியனாகிய, இட்சுவாகு மகாராஜன் சகலவிபகார தருமமுந் தெரிந்தவர் இந்தத் தபசியுடன் தர்க்கமாடுகிறீர், இதுதர்மமோ, சொல்லுங் கர்மமோ, மற்றதெல்லாம் ஒரு பொருட்டல்ல ஒருவருக்கொன்று கொடுப்பதும் ஒருத்தர்கையிலொன்று வாங்குவதும் அது ஒருவருடைய செயலல்ல வினையின்படி நடக்கத்தக்கது என்று சொல்லிவரும்போது தருமதேவதை பிரசன்னமாய் ஓ, இட்சுவாகு மஹாராஜனே, உத்தமனாகிய உமக்கு இந்த மஹாரிஷிகொடுத்த செபத்தின் பலனானது இவனை நல்லகதியிற் கொண்டுபோய் வைக்கும் உம்முடைய புண்ணிய பலனைக்கொடுத்து இவருக்குக்கதி நூதனமாய்த் தேட வேண்டியதில்லை, உம்முடைய உதவி இவருக்கு வேண்டாம் மாசற்ற இருதய உத்தமருக்கீந்த தானம் மத்திமமாய்ப் போகாதென்றது, அந்தச்சமயத்தில் முப்பத்து முக்கோடி தேவர்களும் நாற்

பத்தெண்ணாயிரம் ரிஷிகளும் சித்தர் கின்னரர், கிம்புருடர், காந்தரு
வர், வித்தியாதரர், முதலாகிய பூதகணத்துடன் தேவகணங்களும், பு
டைசூழ்ந்து வரும்படியாய், அன்னவாகனரூடராய் சரஸ்வதிதேவி
யுடன் பிரம்மதேவர் காட்சியாய் தாட்சியில்லாத வரங்களளித்து, புஷ்
பவருஷம் பொழிந்து தேவ துந்துமியுடன் நூற்றெட்டு தேவவாத்தி
யமும் கோஷித்து, அஷ்டதிக்கும் அதிரத்தக்கதாக வெகுசம்பிரமத்
துடனே நெருங்கியபோது; அவாளிருவரு மெழுந்து சதுமுகத்தனு
டைய சரணத்தில்விழுந்து துதித்துவாழ்த்திய சமயத்தில், அவர்களை
நோக்கி, நான்கு முகத்தையுடைய நாதன், ஓ, கௌசிகரே! உம்மு
டைய செபத்தைப்போலும் விரத உறுதியைப்போலும் உலகத்தில்
ஒருவரு மிழைத்ததில்லை அதனால், நாம் சந்தோஷித்து வந்தோம் எ
ன்னுடைய முகமண்டலபதவி உமக்குக் கொடுத்தேன் சீக்கிரத்தில்
உடலையொழித்து வந்து சேரென்று கருணைகூர்ந்து பிரியமா யுரைத்
தார். அவ்வார்த்தையைக்கேட்டு நிறைந்த அறிவாற் சிறந்த கௌசிக
ரும் இட்சுவாகு மஹா ராஜனும் தட்சணமே உலகந்தோன்றிய நாள்
முதல் நடந்து வந்த உண்மைப் பிரகாரம் தேகத்தை நீக்கி சகல தே
வர்களும், ஜெயம் ஜெயவென்று செபிக்கும்படியாய் பவக்கடலைக்கட
ந்து சத்தியலோகமுத்தியை யடைந்து என்றென்றைக்கு மாறாத பே
ரானந்த மோட்சம் பெற்றிருந்தார்கள்.

பிரமதேவனும்தேவர்கள் முதலியபேரும், தங்கள் தங்கள் எதா
ஸ்தானஞ்போய்ச் சேர்ந்தார்கள். ஆத்ம கோடிகளைத்தண்டிக்கின்ற
அந்தகனும் தருமதேவதையும் காமக்குரோதமும் தங்களிடம் போய்
விட்டார்கள். ஆனபடியால், எல்லாத் தபசைப்பார்க்கிலுஞ் செபம்
பண்ணுகிறது மேலான ஆத்மலாப மென்றறிந்துக்கொள்ளும். மலப
ரிபாகமறிந்து அலமருமாயை யகற்றி விலக்கும் பதவிபெறுவதைவிட
பிராணனுக்கு வேறே உறுதிகிடையாது. அந்தச் செபமானது எவ
னெப்படி நினைக்கின்றானோ அப்படிக்கெல்லாங் கைகூடிவரும். உயி
ருக்குலாபம் மந்திரத்தின்செபமேயென்று வீஷ்டமருளாக்க; அத
னால் தருமராஜன் அகமும் முகமும் ஆநந்தப்பட்டு பாட்டனுடைய
பாதத்தில்விழுந்து, ஐயா, உம்முடைய கிருபையினாலே இப்பேர்ப்ப
ட்ட மகாரகசியங்களெல்லாமறிந்தேன், இன்னமொரு சந்தேகமிருக்
கின்றது, அதென்னவென்றால் செல்வநிலையல்லவென்று பெரியோர்
கள் பேசிஇருக்கின்றார்கள், அனுபவத்திலு மப்படியே இருக்கின்றது,
அது என்னத்தினால் நிலைபெறமாட்டாது என்றைக்கும் நிலைத்திருக்

கும்படியானஉபாயமெப்படி, அதை எனக்குச் சொல்லவேண்டு மென்று தருமராஜன் கேட்கவும், கங்காபுத்திரன் உத்தரமுரைக்கத் தொடங்கினார்.

36. செல்வநிலையாமையைப்பற்றி தேவேந்திரனும் மாபலிச்சக்கிரவர்த்தியும் பேசிய சரித்திரம்.

ஓ, முரசகேதனு! முற்காலத்தில் தேவேந்திரனும் பலிச்சக்கிரவர்த்தியும் செல்வத்தைப்பற்றிப் பேசிய வினவிடைகளை உமக்கு விரித்துரைக்கின்றேன். அதாவது சதமகனென இந்திரன், சத்தியலோகத்திற்குப் போய் நான்முகனைக்கண்டு நமஸ்காரம் பண்ணிக்கொண்டு, ஐயா, மூலக்கமலாசனனே, விரோசனனென்கிற ராக்ஷசஇராஜன்பிள்ளை, மாபலிச்சக்கிரவர்த்தி, மூன்றுலோகாதி பத்தியமும்பெற்று சக்கிரவர்த்தியென்று பெயரேந்தி ஒருகுடைநிழலில் உலகையடக்கி இருகில்லாத பெருவாழ்வுவாழ்ந்து வந்தவனைக் காணேமே, அவனிப்போது எங்கிருக்கின்றான் அந்த இடத்தை எனக்குத் தெரிவிக்க வேணுமென்று கேட்டான், அதற்குப் பிரமன் நகைத்து இந்திரனைப் பார்த்து உன்மனதினினைத்துக் கேட்டது எனகருத்தெரியலாயிற்று, முன்னே மூவர்முதலாகிய தேவர்களையும் தலை காட்டவொட்டாமலடித்து இறுமாப்படைந்து, தனக்கு மேலானசம்பத்துடையவர்களில் லையென்று திருவிற்சிறந்து பெருவாழ்வு வாழ்ந்தவன் அந்தவாழ்வெல்லாம் நம்முடைய கையிற் கொடுத்துவிட்டு தாழ்வை யடைந்து போனுனென்கிற தயாளத்தினலல்லவோ, என்னைக்கேட்க வந்தாய் சசிமணாளனே, அது எனக்குத் தெரியவந்தது ஆகிலும், இப்போது அவனிருக்கிற இடமும் ஐஸ்வரியத்திடமும் உனக்குத் தெரியச்சொல்லுகிறேன்கேள், அவன் சுரபியமென்கிற எவிரூபமெடுத்துபூமியிற் சஞ்சரிக்கின்றான். அவனைக்கண்டு நீயென்ன செய்யப்போகிறாய் அதை எனக்குச் சொல்லென்று இந்திரன் கேட்க, சுவாமி! அடியேன் அந்தமகாபலி சக்கிரவர்த்தியைப்பார்த்து சிலவார்த்தை சொல்லவேண்டி இருக்கிறது தாங்கள் முழுமனதுடன் சிலவு கொடுங்களென்று பிரதக்ஷண நமஸ்காரம் பண்ணி, அப்படியே விடைபெற்று சத்தியலோகத்தை விட்டுப் புறப்பட்டு பூலோகத்தில் வந்து, காடுகள், செடிகள், மலைகள், வனந்திரங்கள், நாடுகள், நகரங்கள், மேடு

கள், பள்ளங்கள், ஆறுகள், குளங்கள், குன்றுகள், குகைகள் எங்கு
ந்திரிந்து தேடி பூமியெல்லாம் வலமாகவந்து ஓரிடத்தில்மாறுருவத்
துடன் வாசம்பண்ணுகின்ற மாபலியாகிய எலியைக்கண்டு ஓ மாபலி
சக்கிரவர்த்தி ! செயிக்கப்படாத யுத்தங்களெல்லாஞ் செயித்து, விஜ
யங்கொண்டு, முடிக்கக்கூடாத யாகமுதலிய வேலைகளை முடித்து
பிரபல மேன்மையடைந்து வாழ்ந்த வாழ்வெல்லா மறைந்துபோக
நீர் இந்த எலிரூபமெடுத்து உமியும்நெல்லுந் தின்றுக்கொண்டு உயிர்
பிழைக்கும்படியாய் நேரிட்டதல்லவா ! ஐயோ, உம்முடைய பரி
வட்டணையும் வைபவமும் பெருஞ்செல்வமும், பிரதிஷ்டையும்,
வீராப்பும், எங்களைப்போன்றவர்களை ஒரு விதத்திலும் மதிக்காத
இறுமாப்பும் இயாவரையும் அவமதிக்கும் மமதையும் அருமை பெ
ருமையும், எங்கேமறைந்ததோ? இம்மட்டோ இந்தபோகம்,தனுகர
ண புவன போகமெல்லாஞ் சதமல்லவென்னச்சாற்றியது உண்மை
தான்,தெய்வமேயென்று, சித்தங்கலங்கிச் சற்றுநேரம் பொறுத்து
கிட்டநெருங்கி நீ பயப்படாதே நான் தேவேந்திரன், உன்னைப் பார்க்
கவேண்டி பேராசைகொண்டு வந்தேன் என்று பகர்ந்தான். அந்த
மகாநாதனைப்பார்த்து மாபலிச்சக்கிரவர்த்தி சொன்னன், ஓவச்சி
ராயுதனே, எனக்கு இந்தவேளை சமயமென்றறிந்து பயம்விட்டு என்
னைக்கிட்டி இழிவானவார்த்தை இசைத்து இகட்சியாய் ஏளனம் பண்
ணுகின்றனையே நீ இப்படிபேசுவதினால்பெருங்கூட்டமாகிய இராக்ஷ
தர்களுக்கு பலங் குறைந்துபோயிற்றென்று நினைத்தாயோ? இராக்ஷ
தர்களுக்கு இறக்கினும் பலஞ் சிறக்குமேயொழிய குறைச்சலா
காது. முற்காலத்தில் நான் பிரபலித்திருக்கும்போது, எனக்கெதி
ரிலே நீவந்து நிற்கப் பயபட்டு மூலைக்குமூலை யொதுங்கிக்கிடந்த
வன்.வாரத்திற்கொருதரம் புறப்பட்டு (வனவேடர் மான்கூட்டத்தை
கலைத்துவிடுவதுபோல்) உன்னையும் தேவர்களையும் பொன்னுலகத்
திற் றங்கவொட்டாமல் ஓட்டிக்கொண்டு திரியும்போது நீஎங்கேயோ
நானெங்கேயோ, அப்பேர்ப்பட்ட அழகன் இப்போது அச்சமின்றி
என் அருகில்வந்து மனோதிடங்கொண்டு பயப்படாதே,பயப்படாதே,
என்று எனக்குத் தைரியங்காட்டி காலபேத சமயங்கண்டு கசட்டுமொ
ழி வருக்கத்தக்கது, உன்நல்லகாலமோ,உனக்கு முறைமையோ, இப்
படி நீ இசைக்கத்தகாது, நான் இப்போதுஅனுபவிப்பதெல்லாம் உன்
னாலும், என்னாலும் வந்த செயலல்ல, சர்வேஸ்வரனாகிய பசுபதியின்
செயலென்றறிந்து அகந்தையடக்கக்கடவாய்;உலகில் ஒருவருக்கு ஆ
ங்காலத்தில் எல்லாந்தற்செயலாயமைந்துகைகூடும்.திக்குகளெட்டும்

ஜெயமுண்டாகும், இடுக்கணிராது,பயமிலை,பிடித்தகாரியம் (கடித்த வாய்துடைத்தாற்போல்வரும்.) போங்காலம் வந்தால் எத்தனைபொருட்பல முற்றிருந்தாலும் பெண்டிர், பிள்ளை, மண், மனை, பந்து மித்திரர்கள், மந்திரி, மாதவர், குருக்கள், குடி, படை, அரண்மனை,நாடு, நகரம், காடு, கரம்பு,நிரம்பி இருந்தாலும், சமயத்திற் குதவாமல் எல்லாந் தட்டுக்கெட்டுப்போய் விடும். ஆகையால் செவ்வையாய்த்தேறித் தெளிந்த அறிவுடையோர்கள் ஜெயமும், அபஜெயமும், நன்மையுந், தீமையும், சுகமுந், துக்கமும், இன்பமும், துன்பமும், வாழ்வுந் தாழ்வும், வறுமையுந் திறமையும், பெருமையுஞ் சிறுமையும், சமமென்று பாராட்டி, வாக்கினாற் பேசியவண்ணம் மனமுங்குவிந்து, அகம்புறமொத்து அரன் செயலென்று ஆநந்தத்தைக் கைவிடாமல் அநுபவிப்பார்கள். நன்மை தீமையிலும், நொய்டவுரையார்கள், நொந்ததைகண்ணுற் பாரார்கள் நாவையடக்கி ஜீவகாருண்ணியராய் எல்லாஞ் சிவன் செய லென்றிருப்பார்கள், இதுதான் பெரியோர்கணிலை. சிறியோர்கணிலை, நானிப்படி இருக்கிறேனென்றுதெரிந்து அஞ்சாமலடுத்து இங்குவந்து இரக்கப்படுவதுபோல் ஏசிக்காட்டினையே இதுதான். எரியுங் கொள்ளியை உபகாரத்திற்கு ஏறத்தள்ளித் தீமூட்டுவதுபோலுமாயிற்று, இந்திரனேயென்று மாபலிநவின்று மனஞ் சலித்தான்.

இப்பிரகாரந் தன்னைத்தானே வெறுத்துக் கொண்டு தீவினையை நினைத்துத் தியங்கிய மாபலியின் தேகத்திலிருந்து சௌந்திரியமாய் ஒருவராலும் எழுதிமுடியாததாய் ககனவாசிகளாலுங் கண்விழித்துக் காணக்கூடாததாய் ஆபரணவலங்கார வஸ்திரந் தரித்துக்கொண்டு சகல பாக்கிய சுந்தரமுள்ள இரட்சகியாகிய மகாலட்சுமி வெளிப்பட்டு, ஆயிரங்கண்ணனாகிய இந்திரனுக்கு எதிரில் நின்றாள். அந்த மகாதேவியை ஆயிரங் கண்களினாலுங்கண்டு ஆறுமைகொண்டு அம்மணீ நீ இந்த மகாபலிச்சக்கிரவர்த்தியி னுடைய உடலை விட்டுப் புறப்பட்டு நாயேனுக் கெதிரிலிருக்கின்றாயே என்தாயே மனோன்மணீ நீயாரம்மா நான் தெரிந்து கொள்ளுஞ் சக்தியற்றவனா இருக்கிறேன், தெரிவிக்கவேண்டுமென்று சிந்தித்தான். அந்த வேளையில் முப்புவன நிறைந்த செந்தாமரைக்கமலத்திற் பிறந்த லோகநகை சமஸ்த கோடிஜீவாத்மாக்களையும் இரட்சிக்காநின்ற அரிப்பிரியை ஆகண்டலனே ! என்னையறியாயா ? நான்மகாலட்சுமி; இதுவரைக்கும் இந்தமகா பலிச்சக்கிரவர்த்தியினிடத்திலிருந்து சகலசம்பிரமமும் பெறச்செய்தேன். இவன் முன்போ லில்லை கிழமகனாகி அதற்குத்தக்க நினைப்பு, நடை, நொடி, பாவனை, ஆசார முதலியயாவுங் குன்றி

னான். இனிமேல் இவனனடையிலிருக்க மனமொப்பாமல் உன்னை
நாடி வந்தேன், நீ என்னை அடைந்து வாழக் கடவதென்று மாயோன்ம
னைவி, சொல்லக்கேட்டு இந்திரன், சந்திரபிம்பச்சுந்தரியைப் பிரதட்
சணம் பண்ணி எழுந்திருந்து இரண்டுகரத்தையுஞ் சிரத்தில்வைத்து
தோத்திரஞ்செய்து துதிக்கின்றான். ஓ நாதநாதாந்த ரூபி பாலபா
லாந்தசீலி மோகமோகாந்த பாலி சிலசிலாந்த சீலி மிர்கமத பயோ
தரி கோடிசூரியப்பிரகாசவல்லி அமுர்தாநந்த வசனி ஆதிசத்திவல்லி
ஜகன்மோகினி, சர்வபூத சொரூபி சத்காரிய காரணி, ஜகத்ரட்சகி,
தேவதேவகி, திருவே, தருவே, அருவே, உருவே, மருவே, ஐஸ்வ
ரிய குருவே, அம்மணீ, வருகவருக, மனோன்மணி வருக, நவமணிவ
ருக, வருக உருக்குமணிவருக வருக சிந்தாமணிவருக வருகவென்
று மதித்துத் துதித்து வணங்கினான். அந்தப் பொன்னுலகத் திறை
யைக்கண்டு பூரித்து சந்தோஷித்து அவன் முகமண்டலத்திற்றாவி ஆ
யிரங்கண்ணுடைய தேகத்தில் அயிக்கிய மாய்விட்டாள். உடனே தே
வேந்திரன் திருமால்போல் விளங்கி தேயசுடைத்தாய் ஜெகமெல்லாம்
புகழ்ச்செகச்ஜோதியானான். இதுகளை யெல்லாம் அரிகிலிருந்து பா
ர்த்த மாபலியானவன் எட்டப்போயிருந்து (ஊக்கமது கைவிடேலெ
ன்னும்) வாக்கியப்பிரகாரம் தயிரியத்தைவிடாமல் ஆகட்டும் எங்கே
போகிறாள், நமக்கு நல்லகாலம் வந்தால் அம்மைதிரும்பி நம்மிடம்வரு
வாள், இந்திரனைச் சுமையெடுக்க வைப்பாள், இவ்வாறு தானே மாறி
மாறிக்கொண்டு இன்னான் இனியானென் றெண்ணாமல் இந்தப்பூமி
மலபந்தப் பூமியென்றுணராமல், எங்குந்திரிந்துழலுகிறாள், நமக்கெ
ன்னவென்று மனஞ் சுளிக்காமல் மேன்மையோடிருந்தான். தேவேந்
திரன் சிந்தைகளித்து மாபலியினிடத்திற் சொல்லி விடைவாங்கிக்
கொண்டு வானுலகடைந்தான்.

இப்பால், மாபலி யானவன் இன்னுஞ் சிலநாட்டரித்து இருந்
த இடத்தைவிட்டு மலைப் பாம்புகள் மலிந்த இமயகிரிக்குச் சென்று
அம்மலையின் குகையிற் பிரவேசித்து தபசு பண்ணினான், இப்படிக்
கிருக்க மேலுலகத்தில் விஜயம் பெற்று பிரதாபனாயிருக்கிற வெள்
ளை வாரணன், அரசனாகிய மாபலியைப் பார்க்கவேண்டு மென்றுவ
ந்து முன்னிருந்த இடங்களெல்லாம் ஆராய்ந்து, காணாமையால் துய
ரடைந்து பனிமலையைக்கண்டு ஒன்று மறியாதவனைப்போல் உருத்
தெரியாமனின்று அரக்கன் மனது அரக்கென உருகும்படிக்கு சுடச்
சுடச் சொல்லுகின்றான். ஏனையா, இராக்கதராஜனே! நவரத்தின
கசிதமாயிருக்கப் பட்ட தேர்களையும் பொன் பூணணிந்த கொம்புகளு

டைய யானைகளையும் வாயுவேகத்திலு மிஞ்சிய வாசிகளையும் சமுத்திரம் போனிறைந்த சேனைகளையும், சூரியகிரணம்போற் சொலிக்கும் ரத்தினாபரண கேயூரமணிகுண்டல கிரீடங்களையும் விட்டு சமஸ்த கோடி தேவதைகளுஞ் சயசயவென்று கைகட்டிச் சேவிக்கத்தக்கதாக பரிவட்டனைகளுடன் ஆடம்பரமாய் நின்று லோக முதல்வனென்று பெருமிதம் பெற்று நிறைந்த கொலுமண்டபத்தில் சிம்மாசனமேறி சிங்கம்போல் வீறிய சக்கிரவர்த்தியாயிருந்த நீர், விருதாவாய் அப்பிரயோசனப்பட்டு இந்தப்பனிமலைச்சாரலில் குகைக்குட்புகுந்து கிடக்கத்தக்கதாக பிரமனெழுதினனே? அடாபாவி ! ஐயோ, வினையேயென்று பரிதாபப்பட்டான். இவன் கூறியமொழியெல்லாங்கேட்டு தேவேந்திரனென்று தெரிந்து, மாபலிசினத்து, ஓ! இந்திரனே நெடுங்காலமாய்ப் பெருவாழ்வு வாழ்ந்த பேர்களானாலும் ஜெயத்தையடைந்த வீரரானாலும் அழகு ஆண்மையடைத்தவர் களானாலும் அதிகசாஸ்திரங்கள் கல்விகற்றவர்களானாலும் தெய்வபக்தி ஆசாரிய பக்தியுமுள்ளவரானாலும் இவ்வுலகத்தில் ஆத்தமகோடிகளைப்படைக்கின்ற அயனானாலும் அதனைப்பெற்றவனானாலும் சிறிதுகாலம், போகமும் சிறிதுநாள் யோகமும் கொஞ்சதினம் மோகமும் சின்னாள்சமத்தும் பன்னாள்விபத்து மடைந்து பின்னுஞ் சிலபொழுதில் எல்லாவற்றையு மிழந்து நிறுவகிக்கமாட்டாமல் துக்கப்பட்டு தன்னைப் பணிவாரைத் தான்போய்பணிந்து தரித்திரப் படுவது கர்ம பூமியின் சுபாவம், இதுதான் இகத்தின்லாபம் நல்வினை தீவினை இரண்டினாலும் வரும்படி யாகிய போகத்தை அனுபவிப்பதற்கு எடுத்தது இந்தத்தேகம் இதை நீயறியமாட்டாயா, பேச்சிலும் ஏச்சிலுமிருந்தவனே, நீ பூர்வத்தில் சகலசம்பத்தையும் போக்கடித்துக்கொண்டு சத்துருவினால் மெத்த வருத்தப்பட வில்லையோ எழுபதினாயிரம் தேவவருஷம் சிகாழியில் மூங்கி லென்னவடிவெடுத்து புதர்மூடி புத்திகெட்டு பயந்திருக்க வில்லையோ இமயகிரிச்சாரலில் சலநிறைந்த தடாகத்தில் தாமரைத்தண்டில் அணுரூபம் படைத்து அலைச்சலடைந்தா இல்லையோ! இத்தன்மையாய் எத்தனை கேடுக்கு ஈடுபட்ட நீ தன்னைமறந்து பேசினாய் இது உலகமுறைமை யென்றெண்ணாமல் எம்மைப் பழிப்பதற் கிசைந்தையே எந்தக்காலத்தில் எது அனுபவிக்க வேண்டுமோ அதுவந்து தீரும் உறுதிபெற்ற உத்தமர்கள் கற்றகல்வியின் திறத்தால் இதற்குக் கவலைப் படுவார்களோ? கோடையினால் தீக்காய்ந்து பயிரானது மறுபடியும் மழையினால் துளிர்த்துத் தளிர்த்துக் காய்க்கு மல்லவா சிலநாளிருட்டும்சிலநாள் நில

வு மல்லவா, செல்வம் இல்லாதபோது துக்கப்படுகிறதும் இருக்கிற போது சந்தோஷப் படுகிறதும் ஒரு அறிவா? அப்பேர்ப் பட்டவர்கள் சற்றில் மகிழ்ந்து தயிரி லழகுபார்க்கின்ற அறிவில்லாதவர்கள். இதற்கொரு திருஷ்டாந்தங் கேளும் காற்றினாலே நெருப்புப் பிரபலமாகிறது அந்தக்காற்றினாலேயே அவிந்து போகிறது, நெருப்பினாலே நீருண்டாகின்றது அந்த நீரினாலேயே நெருப்பவிந்துபோகிறது நீரினாலே மண்ணுண்டாகிறது மண்ணினாலே நீர்மறைந்துபோகிறது சகலமும் நீரினாற்பிழைப்பது சலவெள்ளத்தால் சகலமுநாசமாகிறது சூரியனால் தாமரைப் போதுவிரியும் அந்தச்சூரியனாலேயே கரிகிறது, இவையோசிக்கு மிடத்து உடலிலே பகையுண்டென்பது உனக்குத்தெரியவில்லையா? எல்லாம் காலத்துக்குத் தகுந்தபடி நடப்பதற்குக் காத்திருக்கும், நல்லதும் பொல்லதும் நாம் தேடிக்கொண்டதல்ல. ஒன்றையுண்டாக்கிக் கொள்வதற்கும் உண்டானதை விலக்கு வதற்கும் ஒருவருக்கும் ஆதாரமில்லை. ஆதலால் நான் முன்னிருந்து அனுபவிக்க வேண்டியகாலம் அது, இப்பொழுது இப்படியாகக்குகைகுட்புகுந்து இருக்கும் படியான காலமிது; என்னுடைய நல்வினைக்காலத்தில் என் கண்ணி லகப்படாமல் நீ ஒளித்துக் கொண்டிருந்தாயே, அந்தக்காலத்தையும் இப்போது தேவராஜனாய் வச்சிராயுத பாணியாய் முத்தாரம் பூண்டு எனக்கு முன்னின்று விஸ்தாரம் பேசுகின்றனையே இந்தக்காலத்தையும் நீயே எண்ணிப்பார்த்துக் கொள்ளலாம். எதிர்காலத்தில் எனக்கு ஈஸ்வரன் என்னென்ன அதிசயங் காட்டுகிறாரோ அதை யறிந்து, சொல்லுகிறதற்கு ஆருடைய தரம், மேகவாகனா வென்றான். அதைக் கேட்டு தேவேந்திரன் மாபலிச்சக்கிரவர்த்தியின் மநோதிடத்தையும் தயிரியத்தையும் கௌரவத்தையும் பார்த்துமகிட்சி யடைந்து நல்லது சக்கிரவர்த்தியே நான்போய்வருகிறே னென்று சிலவுபெற்றுக்கொண்டு விண்ணகரத்திற்குப் போய் போகபாக்கியத்திலிருந்து பின்னும் பன்னாட் போனபிற்பாடு பூலோகத்திற்கு வந்து அவரவர்கள்நினைத்த காரியங்களைத் தரப்பட்ட கங்காநதியில் ஸ்நானம் பண்ணிகரையருகிலிருந்து செபஞ் செய்யுஞ் சமயத்தில் சத்தியலோகவாசியான பிரம்மாவுக்குச்சமானமாகிய நாரதமகாமுனிவர் அந்தபாகீரதியில்ஸ்நானம் பண்ணி செபங்கைகூடிய தேவேந்திரனுக் கருகில்வந்தார். அந்தவேளையில் சூரியப் பிரகாசம்போன்ற தேரிலேறிக் கொண்டு திவ்ய சொரூப சுந்தரபிம்பந் தோன்ற அம்மன்வந்து எதிரில் நின்றனள். தேவேந்திரனும் நாரதரும் சீக்கிரமெழுந்து தீர்க்கதண்டமாய் விழுந்து இருவருங் கைகூப்பி திவ்யக் காட்சியே ஜெகத்திற்

காட்சியே, ஜீவகாருணியே, தேவரீருடைய பெயரென்ன அம்மாவெ ன்று கேட்க அன்னமாகிய கன்னி சொல்லுகின்றாள். நான் மகா லட்சுமி; இதுவரையிலும் ராக்ஷசராஜனிடத்திலிருந்து இப்போ தெனக்குச் சம்மதி இல்லாமற் புறப்பட்டு வந்து விட்டேனென்றாள். அவள் வார்த்தையைக் கேட்ட நாரதரும் தேவேந்திரனும் பிரத க்ஷணம் பண்ணி நமஸ்கரித்து ஓமகாதேவி அகிலாண்ட நாயகி, ஓங்காரி, பரப்பிரம சொரூபி, நிர்வாகி, நிராகாரி, நிற்குணி, நிர் பலாட்சி, சகுணி, சற்குணி சௌந்தரி, ஜீவரட்சகி, ஜீவசாட்சி பொற்கமலவாசி, பிரதாபவிசுவாசி, பரமோதேசி, கலாமுக சுந்தர கேசி, விஷ்ணுநேசி,கேசவப்பிரியை நாராயணி•கிருபாசமுத்திரி, கரு ணைக் கண்காட்சி, காமனுச்சி கமலவல்லி தீனதயாபரி பக்தவற்சலி வேதவேதாந்த முதல்வி மெய்ப் பொருட்டலைவி யென்று அநேகவித மாகத் தோத்திரஞ் சொல்லி அஞ்சலித்து அம்மணி; நீர், இராக்ஷ தனை விட்டு நீங்கிய தற்குக் காரணமென்ன வென்ன? அவ்விரு வரு க்கும் சொல்லுகின்றாள். ஓ நாரதரே ! ஓ மருப்பியானை யூர்தியே என்செய்கதி நீங்களறியமாட்டீர்களா, எவரொருவர் தீவினை செய் கிறார்களோ அவர்களிடத்தில் நான் அரைக்கணப் போதும் பொருந் தேனே (தீவினையாவ தென்னவென்னில், கொடும்பாவம், அதாவது, சூரியோதயத்திலும் அஸ்தமிக்கும் போதும் தூங்குவதும் வேதத்தை தெய்வத்தை விதியை, விலக்கை, ஆசாரத்தை, ஆசாரியரை, பூசாவி தியை, பெரியோர்தவத்தை, புண்ணியத்தை, விரதத்தை, நோன்பை, தாயை தந்தை, தமயனை, தம்பியை, தனயரை, தருமபத்தினியை எ ளியாரை, இன்னமுதலிய நன்மைகளை இகழ்ந்து பேசுவது சுயஸ்திரீ யைத் துக்கப்படவைத்து பரஸ்திரீயைப் பக்கத்தில் வைப்பது ஞாயந் தப்பி அனியாயநடப்பது வழக்கழி உரைப்பது லஞ்சம் பரிதானத்திற் கிச்சிப்பது,பொய்ச்சாட்சி பேசுவது,ஒருவர் சொத்தை அபகரிப்பது, மனதிலொன்றும் வாக்கிலொன்றுமாய் வசனிப்பது,வஞ்சிப்பது, நன் றிகுன்றுவது, ஜீவஹிம்சை பண்ணுவது, தீரவிசாரியாமற் றெண் டிப் பது, நிந்திப்பது குடும்பதோஷங் கூறுவது அபாண்டம் போடுவது, பயனில்லா வார்த்தை பகருகிறது, கோபத்தினுற் சீறுவது, சோம்ப லாவது, குளியாது, முழுகாது, அசுசியா இருப்பது, சூதாடுவது கள்ளுண்பது, காப்புச்சேர்ப்பது தூஷித்து நிந்திப்பதே தொழிலா யிருப்பது, தெய்வ மிகழ்வது, இன்னமுள்ள நன்மைகளுக் கிடரா கிய தன்மைசெய்கின்ற நலமிலாரிடத்தில் நானிருக்கமாட்டேன். ஒரு குணமேனும் உத்தமமா யிருந்தால் அந்த இடத்தில் சற்று நேரமிரு

க்க மனஞ்சம்மதிக்கும். அவர்களானொன்னில்! விருந்ினைப்பரிந்து பூசைபுரிந்து அமுதூட்டி உபசரிப்போரிடத்தும், துறந்தார், இறந்தார், இவர்கள் கடமையைச் சோராமற் செய்பவரிடத்தும், உண்மையான ஆசார பராளிடத்தும் கடிந்துரையாடாத கருணையோரிடத்தும், குளிர்ந்த முகமுடையோரிடத்தும், எல்லாருக்கு நல்லவரொன்றிருப்போரிடத்தும் நித்தியமான சத்தியகீர்த்தியை நிலைநாட்டுவோரிடத்தும் தெய்வபக்தி ஆசாரியபக்தி செலுத்துவோரிடத்தும் சந்தைதாயை நிந்தியாதவரிடத்தும் கோபிசந்தனம் பூதிநாமம் பற்றியபேரிடத்தும் தருமமுள்ளபேரிடத்தும், துளசி வில்வத்தினிடத்தும், இலட்சணமமைந்தயானை குதிரை, பசு, ரிஷபம், பூமி இப்பேர்ப்பட்ட இடத்தும் அநீதி இல்லாத ஆலயத்திடத்தும் என்னுயகனது இருதய ஸ்தானத்தைப் பார்க்கிலும் இன்பமாயிருப்பேன். இன்னும், சத்திரம், சாவடி, தடாகம் மடம், சாலை, சோலை, தண்ணீர்ப்பந்தல் ஏரி, குளம், ஆறு, ஊறுகயம், தாமரைத்தடாகம், இவ்விடத்திலும் இவைகளை ஏற்படுத்தப் பட்டபேர்களிடத்திலும் குலாசாரமுக்கியம் எல்லா ஆசாரத்திற்குமேலானது, அவைகளையும் குலமுறைகளையுந் தப்பாமல் நடத்துகிறவர்களிடத்தும் நான்நீங்காதிருப்பேன். என்னைவிட்டு அவர்களும் பிரியாமல் பிரியமாயிருப்பார்கள். என்று உருக்குமணி தேவியாருரைத்தனள். அம்மொழியை நாரதரும் தேவேந்திரனும் கேட்டு அற்புதப்பட்டு அம்மா நல்லது; மகாபாவியாயிருப்பவன் மகாராஜனு இருக்கிறனே, அவனடந்ததெல்லாம் பாவமாயும் அக்கிரமமாயுமிருக்க ஏதாகிலும் ஒரு நற்காரியஞ் செய்திருந்தால் மற்றப் பொல்லாங்கை எல்லாமறந்து அவனிடத்திற்குப் போவையோ புகலுந்தாயே என்று போற்றினார்கள். சுகந்தபரிமளமலர்மாலை சூடியமகாலட்சுமி சிறுநகை விளைத்துச் சொல்லுகின்றாள் ஓ! அறிவுடையவரோ குற்றம் மூன்றுபாகம் குணம் ஒருபாகமிருந்தால், அவர்களிடத்திலும் போவேன். போய் எப்படி இருப்பேனென்றால்; தீயின் பேரிலும் முள்ளின்பேரிலும் தேககடுங்கிச் செல்பவர்போல சிடசிடவென்று சிறிதுநாள் நின்று ஏதாகிலுமொரு முகாந்திரத்தைநாட்டி அவர்கட் கிசையக்காட்டி மறைந்துபோவேன். நற்செய்கையாகிய நல்வினை மூன்றுபங்கும் தீவினையாகிய துற்செய்கை ஒருபங்கு மிருந்தால் அவர்களிடத்தில் நான் போயிருந்து மேலுமேலும் நல்வினை தேடச்செய்து தீவினையைமறந்து நாளுக்கு நாள் விர்த்தியாக்கி நன்னடத்தை நற்காரியம் நற்செய்கை நற்றவம் நற்புத்திரன் நற்பெண்டிர் எல்லாவற்றையுஞ்

சேர்ந்து நானும் விளையாடிக் கொண்டிருப்பேன். கர்ம்மானுபவத்தால் அகந்தை அக்கிரமஞ் செய்யப் பிரவேசிப்பாராகில், மகிட்சியின்படியே இகட்சிவிளைத்து நானும் நீங்கிப்போவேன். அந்த அகந்தை அகங்காரமறைந்து நன்மார்க்கவழி வந்தால் நானுந் துணையாயிருந்து கைதூக்கி விடுவேன். ஒருவேளை தெரிந்துந் தெரியாமல் குற்றங்கள் செய்தால் நானிருக்கிற வரைக்கும் அக்குற்றங்களை விசாரணைக்குக் கொண்டுவராமல் வெகுபேர்சந்தோஷிக்கும்படி விடுத்து நானும் பொறுத்துக் கொண்டே இருப்பேன், புண்ணியவான்களிடத்தி லிருப்பது எனக்குப் பூச்சிதையுண்டு, அவர்கள்செய்கிறகுற்றத்தை மன்னிப்பது என்கடமை அதிகப்பட்டால் எவற்றையும் ஒரே தரமாகச் சாய்த்து விட்டு ஓடிப்போவேன் என்றுஇயம்பினள். அந்தவார்த்தையை இந்திரனும் நாரதருங் கேட்டு சந்தோஷமுற்று என்மனோன்மணித் தாயே அம்மணியென்று தோத்திரம் புகன்று இப்போது நீர்வந்தது என்னத்திற்கு எவ்விடத்திற்குப் போகிறீர் ஒன்றுமில்லாதவனை, உலகு காவலனுக்கி வைப்பதற்கோ, நீங்கள் புறப்பட்டது உண்மையாகச் சொல்லும் உத்தமபூஷணி என்றும் பணிந்தார்கள். ஓ, தேவேந்திரனே! உன்னிடத்தி லிருக்கும்படியாகவே முன்னமே உரைத்திருக்கின்றேன். இது காலமானதால், உன்னைத்தேடி வந்தேன் என்று தனது சுயப்பிரகாசத்தைக் காட்டி உடனே மறைந்து பரம அணுவடிவமெடுத்து இந்திர னுடலிற்புகுந்து மகிழ்ந்திருந்தனள் (தருமசொரூபியாகிய தருமராஜனே) நீ முன்னை கேட்ட கேள்விக்கு இதுவேசாட்சியாய் இருதயத்தி லிருத்துமென்று சொல்ல சகலரிஷிஈஸ்வரர் முதலியதேவர்களுங் கொண்டாடுகின்ற விஷ்டுமாச்சாரியர் குறிக்கவும் அந்தச் சந்தேகத்தை நிவர்த்திசெய்து தருமநந்தனன் அதிசயப் பட்டு மறுபடியும் பாட்டனை வணங்கிக் கேட்டனர். சுவாமி காலம்காலமென்று சொல்லுகின்றீர்களே, அந்தக்காலமாவதென்ன? அந்தக்காலத்தி னளவை எனக்குத் தெரியக் கிருபைபுரிந்தருளும் (என்குலகுருவேயென்று) சிரத்தையாய்க் கேட்க விளம்பத்தொடங்கினர்.

37. கால அளவின்பிரமாண விபரம்.

அப்பா, பாண்டு புத்திரனே! நிமிஷம் பதினெட்டுக் கூடியது காஷ்டம் காஷ்ட முப்பது கூடியது கலை, கலைமுந்நூற் றன்பது கூடி

யது சிறுமுகூர்த்தம், சிறுமுகூர்த்த மிரண்டு கூடியது பெருமுகூர்த்தம். பெருமுகூர்த்தம், பதினறுகூடியது, இராப்பகல் சேர்ந்த ஒரு நாள். அந்தநாள் ஏழு தழுவியது, வாரம். அவ்வார மிரண்டு கலந்தது பின்பட்சம் அப்பட்சத்துவயும் மாதம், மாதம் ஒன்றுக்கு முப்பது நாள் அம்மாத மிரண்டு சேரில், ரிது. ரிது மூன்றுகூடினல், அயனம். அயனம் இரண்டு வரில் ஒருவருஷம். அந்தவருஷத்திற்குள்ளே தக்ஷணயனம், உத்தராயணம், இரண்டுண்டு, இது பூலோகவருடம். அயனமிரண்டு சேர்ந்தது ஒருவருடம் இது தேவதைகளுக்கு ஒரு நாள். இந்நாளில், உத்தராயணம் பகல் தக்ஷணயனம் இரவு, இந்நாள் முந்நூற்றறுபது கூடியது, தேவவருஷம். அவ்வருடம் பன்னீரா யிரத்தை நான்கினுற்பெருக்கிக் கண்டதொகை; கிரேதாயுகம், மேற்கூறிய பன்னீராயிரத்தை மூன்றினுற் பெருக்கி ஏர்ப்பட்ட தொகை திரேதாயுகம், அப்பன்னீராயிரத்தை இரண்டிற் பெருக்க ஏர்ப்பட்ட தொகை துவாபரயுகம், அதை ஒன்றிற் பெருக்க நின்றதொகை, கலியுகம். முன்சொல்லி வந்தமுந்நூற்றறுபது நாளாகிய வருஷம் பன்னீராயிரத்தை நான்கில், மூன்றில், இரண்டில், ஒன்றில் பெருக்கிய தொகை கூடியது நான்குயுகம் அப்படியாகப் பெருக்கிக் கூட்டிய தமிழ்வருஷத்திற்கு தொகையைச் சாற்றுகின்றேன்.

முதலாகிய கிரேதாயுகத்திற்கு வருஷம் பதினேழு லட்சத் திருபத் தெண்ணுயிரம், இரண்டாவது திரேதா யுகத்திற்கு வருஷம் பனிரண்டு லட்சத்துத் தொண்ணூறுயிரம். மூன்றாவது துவாபர யுகத்திற்கு வருஷம் எட்டுலட்சத்தறுபத்துநாலாயிரம். நான்காவது, கலியுகத்திற்கு வருஷம் நாலுலட்சத்து முப்பத்திராயிரம். இப்பேர்ப்பட்ட யுகம் நான்கு கூடியது ஒரு சதுர்யுகம். இந்தச்சதுர்யுகம் ஆயிரமானுல் சிருஷ்டி கர்த்தனுக்கு ஒருபகல். இன்னம் ஆயிரஞ் சதுர்யுகஞ் சேர்ந்தால் நான்முகனுக்கு இரவு. ஆக இரண்டாயிரஞ் சதுர்யுகம் முப்பதுசேரில் ஒருமாதம். அந்தமாதம் பன்னிரண்டு கலந்தால், ஒருவருடம. அவ்வருடம் நூறுகூடினல் அயனுக்கு ஆயுள் முடிவு. அப்பிரம தேவன் பகலில் சகல ஆத்மாக்களையும் சிருஷ்டிப்பார். இரவில் எண்பத்து நான்கு லட்சம் யோனிபேதமும் இறந்துபோம். அப்போது சலப்பிரளயம்வந்து மூடிக்கொள்ளும். இராத்திரி முழுது மப்படியே யிருக்கும். முதற்கூறிய நிமிஷந்தொடங்கி மண்பொதுத் தந்தையின் ஆயுசு பரியந்தம் உனக்குணர்த்தினேன்; இப்பால் அந்தக்காலம் பெருகிவளர்ந்து போமே அதை யாரறிந்து அறையப்போகின்றார்கள். இதுதான் காலமென்பது. இந்தக்கால அளவை பாற்கடலிற் பிறந்த

ஆலால விடத்தைக் கண்டத்திற் றரித்தருளிய ஆதிபாண்டரங்களும், அகலிட முழுதும் விழுங்கிய ஆதிநாராயணனும் அறிந்து பேசமாட்டுவார்களாகில் மண்டலத்திலும் விண்டலத்திலும் எண்டிசையிலுமுள்ளவர்கள் என்ன அறியப் போகிறார்கள். இறைவனே! என்று வீஷ்டுமர்சொல்ல, அதைக் குந்திகுமாரன் கேட்டானந்தித்து ஐயா, நல்ல காரியங்களைச் சீக்கிரத்திற் செய்யென்று செப்புகிறார்களே அதென்னத்தினால் அதற்குமாத்திரம் ஏன் துரிதப்படவேண்டியது அதுகாரணம் சொல்லுங்களென்று கேட்க வீஷ்டுமர் விளம்புகின்றார்.

38. விரைவிற் செய்யவேண்டிய பதி-பசு புண்ணிய விபரம்.

விரைவிற் செய்யுங் காரியம் இரண்டு விதமுண்டு. அதையறிகிற விதமெப்படி யென்றால் சகலசாஸ்திர புராண வேதாகமங்களுணர்ந்து, அதுகளில் சாரமான காரியங்களையும் பகுத்தறிந்து பிரபஞ்சத்தோடு கூடி பெண்டு, பிள்ளை, பண்டு, பதார்த்தம், மண், மனை, வீடு, வாசல், தோட்டந்துறவு, ஆனை, சேனை, ஆபரணம், ஆடைகள் இத்தியாதி முதலியவெல்லாம் மாயாபதார்த்தமென்று இந்த உடலைவிட்டு உயிர்நீங்கி உடல் உலகைவிட்டு மறையும்போது மேற்குறித்த பொருளனைத்துங் கூடவாராது. முன்பின்னாகிய யாவருக்கும் இது பிரத்தியட்சமே, ஆதலால் ஆசாபாசத்தி லழுந்திக் கிடவாமல் அதில் அசிரத்தை வைத்து இந்தக் குடும்பங்களைக் காப்பாற்றுவதற்கு நீதிசாஸ்திரம் எவ்வளவு பிரமாணம் பேசி இருக்கிறதோ அவ்வளவுக்குப் பாடுபட்டு பிரபலித்த மனம் நாட்டி; தண்ணீர்ப் பானையைத் தலைமேற் கொண்டுபோகிற, தையல், தன்னுடைய பார்வைஎதிரிலும் நினைப்புக் குடத்திலும் பதித்துப்போவது போல, பார்வையெல்லாஞ் சமூக விசாரமாகிய சமுசாரத்திற் போக்கி தன்னுயிர்த் துணையாய் தானெங்கே போனாலும் அங்கேயும் வழித்துணையாகின்ற தருமத்தில் நினைவைத் தாக்கி சரீரமிருப்பதும், அச்சரீரத்திற் சஞ்சரிப்பவன் ஒளிப்பதும் தெரியாதபடியால் சீக்கிரத்திற்றானே தாமசமில்லாமல் பதிபுண்ணிய தருமத்தைத் தேடவேணும், அந்தத்தருமமே ஜெயமோட்சத்தின், கதவைத் திறக்கு முதற்சாவி. அனாநிமிஷமும் சும்மாஇராமல் எப்போதெப்போ தென்று சமயத்தில் முடித்துக்

கொள்ள வேண்டும். தருணந்தப்பினால் மரண நிச்சயம், ஐயோ அனியாய மாய்ப் போய்விடாதீர்கள். அவசரத்திற் செய்யுங்களென்று சான்றோருரைக்கும் வாசகம் ஆனால், தருமம் பலவிதமுண்டு. அது களில் பசு, புண்ணியமென்றும், பதி புண்ணியமென்றும், இரண் டுண்டு. அவ்விரண்டினுள், எல்லாப்புண்ணியங்களு மடங்கிப்போம். அப்படிக்கிருந்தாலும் தருமமென்பது பொதுப்பெயர். எதுவானா லும் சீக்கிரத்திற் செய்வது நல்லது. அதிலும் பதிபுண்ணியம் பத்தத் தனை உத்தமம். இதனால் சுத்த பதிபுண்ணிய மெல்லாம் மோக்ஷம். பசு புண்ணியத்தினாற் பலப்படுங் கருமமாம். கருமமாவது சொற்கா திபோகம். பெரியவர்களுக்கு உற்றவிடத்துதவி, திருப்பணி உச்ச வம், வேதமந்திரப் பிரதிஷ்டை, ஆசாரிய பூசை, ஜபம் இன்னம்பல வித புண்ணியங்கள் பதிதருமத்திற் சேர்ந்து பலனைத்தரும். யாகாதி கிருத்தியங்கள் அன்னதானங்கள்,பசுபுண்ணியத்திற் சேர்ந்து கலந்து சுவர்க்காதி போகங்களைக் கொடுக்கத்தக்கது. நற்பிறவியும் செல்வத் தையும் கொடுக்குமாகையால் எந்தவிதத்திலாவது பேரறிவாளனா வன் நிலையில்லாக் காயத்தை நிச்சயமாய் நம்பாமல் கெட்டுப்போகும் செல்வத்தை இஷ்டமென்றெண்ணாமல் விட்டுப்போவான். பாவியம் கிட்டுமென் றுன்னாமல் கஷ்டப்பட்டாலும் சற்கருமங்களைத்தேடிக் கொள்ளவேண்டும் மெய்விரதனே உடலுறுப்பாகிய இளமை, தேகம், செல்வம், நித்தியமல்லாத அனித்தியப் பொருளாதலால், சீக்கிரம் புண்ணியஞ் செய்யவேண்டு மென்பதாம். மெதுவிற் செய்கிற காரிய முண்டு. அதையுஞ் சொல்லுகிறேன் கேளும் அறக்குமாரனே.

39. மெதுவில் செய்யத்தக்கவைகள் வருமாறு.

சிர்காரி என்னும் தபசியாகிய ரிஷிக்கு மேதையென்று ஒருபிள் ளை பிறந்திருந்தான். அவன் மன்மதனுக்கு நேராகிய வடிவமுடைய வன். ஆதி சேடனுக் கொப்பாக அருமறை கற்றவன். மேலாகிய தப சுகளை மெதுவாய்ப் பெற்றவன். இப்பேர்பட்ட பிள்ளையின்பேரில் பட் சமுடைய மகா தபசியான சிர்காரியானவர், ஆசிர மத்திலிருக்கும் போது பெண்சாதிக்குந் தனக்கும் பிணக்குநேரிட்டு மரியாதைக் குறைவாகிய சண்டை விளைந்து அத்துமீறிப்பேசிய படியால் குண மாகிய குன்றின்மேலிருந்தவர் கோபமாகிய குண நிலமீதிறங்கி ஆக்கு

ரோஷப்பட்டு மேலத என்கிற மெய்யனைப்பார்த்து அப்பாவுன் தாயாகிய இவளை வெட்டிப் போடென்று வெகுளியா லுரைத்து, ஆச்சிரம வீட்டை விட்டு பூச்சரமாகிய சோலையிற் புகுந்து போய் விட்டார். தாயாருக்கு ஆயுள நீடித்திருப்பதனால் தந்தை சொற்படிக்கு வெட்ட, மனம்வராமல் மெத்தத்துக்காக்கிராந்தனாய் பத்துமாதஞ் சுமந்து, பெற்றெடுத்து, வளர்த்து, சீராட்டித் தாலாட்டிக் காத்திரட்சித்த மாதாவை எப்படி வெட்டுவேன், ஒரு உபத்திரம் பண்ணாமல் அவள் சாகப்போகிற தில்லையே; என் கைவாளினால் என் தாயை நானெப்படி முடிப்பேன் என்று மனதிலுன்னி யுன்னி இந்தத் தருமசங்கடத்திற்கு நாமென்ன செய்வோம், தந்தை சொல்லுக்கு மேலாகிய, மந்திர மில்லையே. இந்தப்படி நடத்துவது தருமந்தானோ? தாயைப்பிள்ளை கொல்லப் போகாது, இதுவுந் தருமந்தானோ? நானென்ன செய்வேன் என்று மனக்கன்றி, இவ்விரண்டு தருமத்திலும் தன்னுயிரைமாய்த்துக் கொள்வது மேலான தருமமென்று துணிவு கொண்டான். இப்படி இருக்கிறவேளையில் கோபங்கொண்டு குறும்பொறையிற் புகுந்த சீர்காரியானவர் சினந்தெளிந்து ஆச்சிரமத்தை நோக்கித் திரும்பி ஐயையோ? என் பிராணனுக்குப் பிராணன், ஆவிக்காவி. உயிர்க்குயிராகிய உரியவளை இன்னேரம், வெட்டிவிட்டானோ என்னமோ தெய்வமே தெய்வமே நாம் போகிற வரையிலும் பேரறிவாளனாகிய பிள்ளை வெட்டாமலிருக்கானோ! என் மேன்மைக் குமாரன் கொல்லாம லிருக்கானோ! வென்று கோவென்றழுது நாம் கோபத்தினாற் கூறினோமென்று தெரிந்துக் கொள்ளானோ! நன்றாய்ப் படித்தவன் தாயைக் கொல்லச் சம்மதிப்பானோ! சமதக்கினி சொல்லைக்கேட்டு பரசுராமன், தாயைக்கொன்றானே அதுவும் புண்ணியருரைத்த விரதந்தானே அவ்வாறு, புரிந்திருப்பானோ ஆமாம் அப்படியாகிய தருமவிரதத்தந்தை வார்த்தையால் முந்தினாலும் தகுந் தகாதென்று எண்ணிப் பார்ப்பதல்லவோ தருமம். எல்லாந் தருமந்தானா பதறுத காரியஞ் சிதறுதது ஒரு தருமமல்லவா? மேலும் நமது புத்திரன் மெத்தவும் புத்திமான். அவசரப்படமாட்டான். ஆகிலும் தெய்வமிருக்கிறது அவளைக்கண்ணினாற் காண்பேனோ! ஆம்தெய்வமே, ஓ? வினையே நான் ஆச்சிரமத்திற்குப் போனபோது என் வயிறு குளிரப் பண்ணுவையோ? வயிறு எரியச்செய்வையோ வென்று எண்ணாது மெண்ணி அங்கலாச்சுக்கொண்டு ஆசிர்மத்திற்கு வந்தார். தன்பிள்ளையும், பெண்சாதியும் எதிர்கொண்டு சாஷ்டாங்கமாக நமஸ்காரத்துடன்

வணங்கி தோத்திரம் புரியக்கண்டு, உள்ளங்குளிர்ந்து கண்ணீர் வெள்ளமாயோட புன்சிரிப்புக்காட்டி, பிள்ளையின் புத்திக்கு மெச்சி பெண்சாதியை ஆசீர்வதித்து பிள்ளையையும், பெண்சாதியையும், இரண்டு கைகளினாலு மேந்தித்தாங்கித் தழுவி மனங்குளிர்ந்து மணவாளனோடு மனைவியர் எதிர்த்து வார்த்தை யாடக்கூடாது. எதிர்ப்பேச்சில்லாதிருந்தால், ஈரேழுலோகத்தையும் வெல்லலாம். இதுதான் பெண்களுக்கு இருக்க வேண்டிய தரும மென்று இரசமாகிய வார்த்தைகளினால் பிரியவசனமும் புத்தியுஞ் சொல்லி நன்மையுடன் வாழ்ந்திருந்தார்கள். ஆனபடியினாலே, குவளை மாலை தரித்தருளிய கோவே துணிவினால், கோபத்தினால், அதிகாரத்தினால், ஆக்கினையினால், அகங்காரத்தினால், அவசரத்தினால், பொறாமையினால், பொல்லாங்கினால், பகையினால், எண்ணிப் பாராமையினால் இன்னுமநேக விதங்களாகிய மதமாச்சரியத்தினால், கொலை, கட்காமம், முதலாகிய பாதகங்களைச் செய்வதற்கு மனது வருவதுண்டு. கோபமே பாபம்கொடியது கோபஞ் சண்டாளம் மகாபாதகங்களை உண்டாக்குவதற்கு வித்தாயிருப்பது கோபமுதலிய குறைகளினால் குற்றம் நேரிடுகிறதாயிருந்தால் சற்றுநேரம் கோபத்தை யடக்கி தன்பிழையும், எதிரி பிழையையும், ஆராய்ந்து, தனக்குள்ளிருக்கும் ஒருவனுக்குச் சரிப்படுத்தி, இதுதகுந் தகாதகாரிய மென்று கண்டறிந்துக் கொண்டு அதுகளில் தாரதம்மியம் பார்த்து பொறுமையாகிய விரதபூஷணத்தைப் பூணுவதே உத்தமத்திலும் உத்தமம். முன்னுரைத்த சிர்காரியென்னுந் தவசியின் புத்திரன் மேதையென்பவன் தகப்பன் பேச்சைக் கேட்டு உடனே தாயை வெட்டிப் போடாமல் தந்தையினுடைய வார்த்தையையும் தாயினுடைய மூர்ச்சையையுஞ் சமரசப்படுத்தி துரிதப்படாமல் நிதானித்த படியால், மைந்தனுந் தந்தையுந் தாயுஞ் சுகப் பட்டார்கள். ஓ? தருமநந்தனா! யாதா மொருத்தர் பொல்லாத பாபங்களைச் செய்ய மனங்குவியுமாகில் உடனே பேரறிவினாலே பிரித்து ஆற்றிவிட்டு கோபத்தை மாற்றிவிடவேண்டும். ஆறிப்போன கோபம் எதிரிக்கு ஆதரவாகும். அப்போதே இரக்கந்தோன்றும். தீர்க்காலோசனை பண்ணித் துணிந்தபேர்கள் யாவரோ அவர்களுக்கு வரும்பலனை அரும்பதவியை பெருங்கீர்த்தியை, என்னாலிசைக்கத் தக்கதன்று. அவர்கள் பொன்னாட்டின் போகத்தைப் பெறுவார்கள். ஆகையால் சத்கருமங்களைச் சடுதியிற் செய்யவேணும். துஷ்கருமங்களை சோர்வாய் விடவேணும், சீக்கிரத்திற்செய்கிற காரியமும் மெதுவிற்

செய்கிற காரியமும் இதனாலறிந்துக் கொள்ளென்று வீஷ்டுமர்சொல்ல, தருமராஜன் சந்தோஷப்பட்டு ஐயா, தர்மார்த்த காமமென்கிற மூன்று காரியங்களிலேயும் ஜீவனுக்குறுதியாகிய சகாயஞ்செய்யத் தக்கது இன்னதென்று எடுத்துக்காட்டவேண்டும் இறைவனே யென்று இறைஞ்சிக்கேட்க, அதற்குக் கங்காபுத்திரன் கரைக்கத் தொடங்கினார்.

40. தருமார்த்த காமமோக்ஷ மகிமையுரைத்தல்.

இன்பமென்பது இலட்சுமியைப் போலும் குளிர்ந்த தாமரை முகத்தளாய் மெதுவாய்ப் பேசுகிற மிருது பாஷியாய் கோபமில்லாதவளாய் குறைக்கு நாய்போற் சீறுதவளாய் நோயற்றவளாய் பழிப்பில்லாக் குலத்திற் பிறந்தவளாய் நாணம், மடம், அச்சம், பயிர்ப்பு, இந்த நான்கு குண முடையவளாய் மாமி, மாமனார் மைத்துனர், சுற்றத்தார், பந்துமித்திரர்கள் இவர்களுக்கு இதம்பட நடப்பவளாய் விருந்தினரைக்கண்டால் பரிந்தெதிர்கொண்டு வருந்தி அன்புடன் அன்னம் படைப்பவளாய், நாயகன் சொல்லுகின்ற முறைமை வழியினின்று நடப்பவளாய், மலடியாய்ப் போகாமல் புத்திர பாக்கிய முடையவளாய் இந்திராணி இரதி இவர்களைப்போல் இன்பலீலை புரிபவளாய், அன்னியர் அயலார் வீட்டிற் போகாதவளாய், நித்தியஸ்தான செபதப, நியமத்துடன் சூரிய நமஸ்காரம்பண்ணி நாயகனுக் கடங்கி நடக்கும் அதிபாலிய முடையவளாய் இன்ன முள்ள ஸ்திரீகளுக்குரிய லட்சணமும், சற்குணமும் பொருந்திய பெண்சாதியுடன் மனதொத்து ஆசையாய்க் கலந்து வாழ்வதுதான் பேரின்பத்திற்கும் பெரிதாகிய இன்பம். இது இம்மைப் பிரயோசனம். பொருளாவது, இத்தியாதி குணங்களமைந்து சொல் தவறாத மனையாளுடன் கூடிவாழ்கின்ற மனைவாழ்க்கையில் போசன முதலாகிய பிதுர்க்கருமஞ் செய்வதற்குத் தேடும் பொருள் வழியறிந்து முறைமையாய் ஒருவர்மனநோவாமல் தன்னைத் தீவினைசாராமல் சோழி சூது சொக்கட்டான், சதுரங்க முதலிய பாவசொத்துக ளல்லாமல் கொலை களவு கள்காமத்தினால் வரும்பொரு ளில்லாமல் குறை புகன்றோர்க்காமல், கணக்கழிவு கூறாமல், நம்பினபேர் நடுங்காமல், அடைக்கலம் வைத்தவர்களழாமல், தருமதான, சாவடி, மடம், ஆலயம், ஏரி, குளம், வளம்,

தோப்பு, துறவு, இவைகளைச்சார்ந்தும் இலைகளினுலுயர்ந்தும் வாராமல் மனமடிந்து பிறரிகழாமல் நன்மையிற் கிடைத்தது போதுமென்று சம்பாதித்த பொருளை நன்மார்க்கத்திற் செலவழித்து ஜீவகாருண்யனுயிருப்பாஞுகில் அவனுக்கு இம்மைப்பயனும் மறுமைப் போகமும் உண்டு. இப்பால் தருமமாவது காலந்தப்பாது நித்தியானுஷ்டான கருமங்களைக் கருதி குருநாதனையும் ஈஸ்வரனையுந் துதித்து பூசாவிதியும் ஆசாரநியமமும் செபதப நமஸ்காரமும் புரிந்து தானென்கிற ஆணவசுதந்தரத்தைத் தள்ளியாவற்றையும் பிரம்மார்ப்பணமாகத்தத்தம்பண்ணி அவனல்லது வேறில்லை என்று அறிந்து நடப்பதுவேதர்மம். இந்தத்தருமத்தினுல் இம்மைப்பயனும் அம்மைப் போகமும் உம்மையாகிய மோட்சமுங் கிடைக்கும். இம்மைப்பயனுவது பூமியிற்செல்வமும் அம்மைப் போகமாவது, சொற்காதி போகம் உம்மைப்பயனுவது இனிமேற்கிடைக்கப்போகிற மோட்சம். இம்மூன்றும் தருமமாகிய தவத்திஞற் பெறலாகும் தருமராஜனே! தர்மார்த்தகாம மோக்ஷமென்கிற மூன்றிலும் பிராணுதாரலாபம் தருமமே இதற்குச்சாட்சியாக ஒரு கதைகேளும்.

41. தருமார்த்த காமமோக்ஷத்தைத் தழுவிய சரித்திரம்.

கடல்வளைந்த காசினியில் திடம்விளைந்திருக்கின்றதேவப்பிராமணகுலத்திற் பிறந்த ஒருபெரியவர் இருந்தார். அவர்காமத்தை விட்டு அர்த்த மாகிய பொருள்மேலாசைவைத்து பூமி எல்லாந்திரிந்துபொன்னுசையிற் பரிந்து முடிவில் தபசுபண்ணி திரவியம் பெறவேணுமென்று மனதிலெண்ணி ஒரு பர்ணசாலை ஏற்படுத்தி அதிலிருந்து தவம்பண்ணுகிற தருணத்தில், ஒரு மஹாபுருஷன் தேவ சொரூப சுந்தர திவ்விய திருமங்கள ரூபத்துடன் பிரசன்னமாஞன். அவனைக் கண்டு அஷ்டாங்க நமஸ்காரஞ் செய்து, அடிபணிந்து நிற்கின்ற பிராமணனைநோக்கி உனக்கு வேண்டிய தென்னவென்று வினவ, சுவாமி எனக்கு மிகுந்த திரவியம் வேண்டுமென்ன, அப்போது அந்தத் தேவன் ஒருயட்சனை வரும்படியாக நினைத்தான். அப்படியே யட்சன்வந்து தொழுதான். அவனைப் பார்த்து தாமரைமாலை தரிக்கப்பட்ட இந்தப் பிராமணன் எவ்வளவு திரவியங் கேட்டாலும்

கொடுக்கமாட்டேனென்னுமல்வழங்கிவரக்கடவாயென்றுவகுத்தான்.
அப்போதே யக்ஷன் அந்தப் பிராமணனை நோக்கி ஓ, ஐயரே! நீர் ஆ
சைப்பட்ட நிதியம் எவ்வளவோ அவ்வளவு தருகிறேன் பெற்றுக்
கொள்ளுமென்று பொக்கிஷத்தைத் திறந்து விட்டான். அதைக் கண்
டபோதே அவ்வேதியனுக்கு கியானம் பிறந்து மனந்தெளிந்து,
ஐயோ, என்ன அருமையான தவத்தைச் செய்து நிலையற்ற திரவிய
த்தைப் பெரிய பொருளாய் விரும்பினேம். செல்வும் பிரயோசனமா?
கல்வி பிரயோசனமா? தவம் பிரயோசனமா? ஐஸ்வரியத்தினால் பெரு
மையும் பூலோகப்பிரதிஷ்டையும் உடலுக்குச் சுகமல்லாமல் உயி
ருக்கென்னசுகம். இந்தப்பொருளினாலே கோபம், லோபம், மோகம்,
மதம், மாற்சல்லியம், பகை, மமகாங்காரம், ஆணவமலம், அக்கி
யானகேவலம் இதெல்லாம் விளையுமே இதை விருதாவிற்கெட்டேன்,
என்விரதமெல்லாம் விட்டேன், வீணாசைப் பட்டேனென்று, தன்னை
த்தானே நொந்துக்கொண்டு தனக்கெதிரிலே, காட்சியா யிருக்கிற
புட்பகவிமானனை நோக்கி, பிரதட்சணம்வந்து நமஸ்கரித்து, சுவாமி,
அடியேன், மடைமையினால் பொருளை விரும்பிக் கேட்டேன். தேவரீர்
அருள்செய்யத் துணிந்தீர். இந்தப் பொருள், மருளை விளக்கத்தக்
கது. ஆகலால் தெருளை விளக்கும்படியாகிய, ஆன்மாவுக்கு லாபத்
தைத் தருகின்ற அம்மைப்பொருளைக் கை கூட்டிவைக்குந்தருமமா
ன தவத்தைப் பெறும்படிக்கு அநுக்கிரகம் பண்ணுமையாவென்று
வேண்டிக்கொண்டான். அந்தத்தேவனுக்கு கிருபைவந்து நீர் நல்லகா
ரியத்தை நாடினீர். இதுதான் சாஸ்திரவிசாரணைசெய்த சாதுக்களின்
விவேக முறைமையென்று வாழ்த்தி, தவப்பொருளே சித்திக்கத்தக்க
தென்று, கிருபைகூர்ந்து மறைந்துபோனார். அதனால் உயிருக்குச்
சார்பு தருமம், தவம், இதுவே பிரதானம். மகாதர்மமென்று நிச்ச
யித்து, நெடுங்காலந் தவம்பண்ணி நெறிவழிபற்றி வாழ்ந்து நீணிலத்
தி லிருப்பவர்கள், தரித்திரப்பட்டு இவரிடத்தில் வந்து வணங்கி தங்க
ளுக்குவேண்டிய பொருளையும் பட்டாபிஷேக தாரந்தாருக வாழவே
ணுமென்கிற பாக்கியத்தையுந் தாருமையாவென்று கேட்டாலுந் தரு
வேனென்று பிரசித்தப்படுத்தி அவ்வாறே அவரவர்களுக்குங் கொடு
த்து ஒப்பில்லாத மெய்ப்போதரிஷியென்று எப்போது மிருந்தார்.
அப்பா தருமராஜனே! காமத்துக்கும் பொருளுக்கும் பெரிது தரு
மமென்று தானென்பதற்ற வீஷ்டுமர் சாற்றி, அப்பேர்ப்பட்ட தப
சுக்கு நினைவு முக்கியமான துணையானது. இவ்வாறிருந்து பேறுபெ
ற்ற தபசிகளின் பெருமையும் சொல்லுகிறேன் கேளும்.

ஓ வேந்தனே! குணசாந்தனே! வேதவேதாந்தமான உபநிடதமு தலாகிய வேதாகமங்களையும், நன்காராய்ந்துணர்ந்த நாதப்பிரம்மமெ ன்றொரு பிராமணோத்தமரிருந்தார். அவர் தன் மனையாளுடன் சாத்து விகம், இராசதம், தாமசம் இம்மூன்று குணங்களையுங்கெடுத்து திரி குணதோஷஞ் சாராமல் கொல்லாவிரதங்கொண்டு காட்டிலிருந்து தபசு செய்துவந்தார். நாளுக்குநாள் அவருடைய தபசு அதிகப்ப ட்டு வருகிறநாளையில், வேதவிதியால் விளம்பி இருக்கின்ற பசுவடை இட்டு வேள்விசெய்யாமல் பழவர்க்கமுதலிய வகையாதிகளைக்கொண் டு பசுவபைக்குப்பிரதியாய் ஓமம் பண்ணவேண்டுமென்று மனமகி ட்சியுடனே எக்கிய முடிப்பதற்கு வேண்டிய திரவியங்களைச் சேகரித் துக் கொண்டிருக்கும்போது, இந்தச்சங்கதியை தேவேந்திரன் கேள் விப்பட்டு அந்தப் பிராமண னிடத்திற்குவந்து ஓ பிரம்மகுல சிரேஷ் டனே! வேதத்திற் சொல்லி இருக்கின்ற சகலயாகங்களுக்கும் பசுபந் தனம் பிரதானமென்று பேசியும், அப்படியே அநேகம்பேர்கள் நடத் தியு மிருக்க, அதற்கு மாறாக இலைகளைப்போட்டு எக்கியம் பண்ணுவ து உமது குலத்திற்கு இயல்போ; நீர் படித்ததிறமோ; வேதவிதிக்கு வேறுபட்டு நீர் நடத்தினால் அது உமக்குச் செல்லாது. அதனால் வரு ம்பயனுமில்லாது. இது மிகவும் பொல்லாது, என்று புகன்று புரந்த ரன் போனான். அப்பால். சிலரிஷியீஸ்வரர்கள் வந்து ஐயரே ! விரத மெய்யரே ! அக்கினிக் கையரே ! நீர் பசுபந்தனமில்லாமல் எக்கியம் பண்ணப்போகிறதாய்க்கேள்வியானோம். நீர்அப்படிக்குச் செய்யக்கூடு மா? உமக்கு அது முறைமையாமா? அதனால்வரும் பாபம் வீண்போ மா ? விதிதப்பி நடப்பார்க்கு விதித்திருக்கின்ற தண்டனை வீணுமா? இப்படி செய்வதனாற் பலன் கிட்டுமா ? நீர் கொல்லாவிரதங் கொண் டிருந்தாலும், வேதத்திற்கூறியவண்ணம் பண்ணினால் விரதபங்க மி ராதேயென்று விதம்விதமாய் விளம்பினார்கள். அவர்கள்பேச்சையுங் கேளாமல் யாகஞ்செய்ய எத்தனித்திருந்த பெரியவரைப் பார்த்து அ வருடைய பெண்சாதியானவள் கேளும் பர்த்தாவே, தேவேந்திரன் சொன்னபேச்சையும் ரிஷியீஸ்வரர்கள் விளம்பிய விதியையுங் பொரு ட்செய்யாமல் உமதுமனம் போனவாறே செய்வதற்கு முயற்சிபண் ணுகிறீர். நமக்கெல்லாம் வேதமே ஆதாரம், அதைத்தள்ளி நடந்தால் வேதபுருஷன் உமது யாகத்தையும், விரதத்தையும், நிறைவே ற்றமாட்டார். அதனால் பழியும் பாவமும் அபரோதனையுஞ் சம்பவிக் குமென்று, தன்னாற் கூடியமட்டும் தருமபத்தினி சாற்றியும், அவள் வார்த்தையையு மிகழ்ந்து மண்டல குண்டலங்கள் வகுத்து வேதிகை

யமைத்து திரியாக்கினி திரித்து சமஸ்காரம்பண்ணி நமஸ்காரஞ்செய்து சங்கல்பவிதி தரித்து வாகிச வாகிசுபரிபூசைபண்ணி அக்கினியை ஓமகுண்டத்தில்வைத்து ஜொலிக்கச்செய்து அடிமேகலையிலே தருப்பையும் நடுமேகலையிலே கூற்சமும் மேல்மேகலையிலே பருதிஇஷ்டமும்வைத்து அக்கினிக்கு ஜனிப்பு ஜாதகன்மமுதலானது நடத்தி சிறுக்கு சிருவத்துக்குப் பூசைமுடித்து திரிமூர்த்தி சொரூபமாய்ப் பாவித்து ஆச்சியத்திற்கு சமஸ்காரஞ்செய்து ஆச்சியமாகிய அந்த நெய்யை தருப்பையினலே தொட்டு இடைபின்கலை சுழிமுனையாய்ப் பாவித்து மூலாதார ஆகுதிபண்ணி பூரணகுதிசெய்து அப்பிரப பிரதான ஓமம் பண்ணத்தக்கதாக ஆரம்பித்தார். அப்போது அக்கினி பிரபலியாமலடங்கி மடங்கி அவிந்து போயிற்று. எத்தனை விதத்தில் மூட்டினலும் கர்ப்பூரம், நெய், சமுத்து, இதுகளைக் காட்டினலும், நெருப்பு மூளாமற்போனதை ரிஷியீஸ்வரன்கண்டு, இதென்னகாரணமென்று நிதானித்து ஆலோசனையிலிருக்கும்போது, அவருக்கெதிரிலே ஒருமான் வந்து நின்று ஓ, ஐயா, நீரென்னயாகம் பண்ணுகிறீர்? குசையாகமேயல்லது தசையாகமா? எங்கேயாகிலும் இப்படி நடந்திருக்கிறதா? ஓமத்திற்கு உயிரைக்கொன்று வயிற்றிலுபிக்குள் வெண்டுகில்போன்ற நிணமாகிய வபையை எடுத்து மந்திரதேவதைகையிற் கொடுத்து யாகம்பண்ணினல் புண்ணியபல னுண்டாம். புகழுண்டாம். பொருளுண்டாம். போதமுண்டாம். புனிதர்களாசீர்வாதமுண்டாம். முத்தியுண்டாம். அதனலொரு பாவமுமில்லை என்பதாய் வேதத்தில் விளம்பி இருக்க, நீரப்படி புரியாமற் போனபடியினல் அக்கினி எரியாம லவிகிறது, ஆதலால் என்னை நீர் பசுவாகக்கொண்டு வபை எடுத்து ஓமம்பண்ணு மாதவனே என்று சொல்ல, அதற்கும் ஒப்பாமல் நடத்துகிற விப்பிரனைப்பார்த்து பின்னும் மானனது ஓய், ரிஷியே பாபம் வருமென்று பயப்படாதீர்? வேதத்திற் சொல்லி இருக்கின்ற மேன்பாட்டின்படிக்கு மெய்யாகநம்பி, அவிர்ப்பாகமளித்தால், தேவதைகளெல்லாஞ் சிந்தைமகிழ்ந்து, உம்மிடத்தில் வந்து கண்டு, நிந்தைநீங்க வாழ்த்துவார்கள். நீர் எக்கியம்பண்ணுகிறீர், அதில் முக்கியமாகிய அவிர்ப்பாகம் வாங்கிச் சாப்பிடலாமென்று அக்கரையாக ஆசைகொண்டு, தேவர்களெல்லாம் ஆகாயத்தில் கூட்டங்கூட்டமாய்க் குவிந்திருக்கின்றார்கள். அதோ தேவேந்திரன் முதலியபேர்களுந்திகைத்துக்கொண்டிருக்கிறார்கள் பாருமென்று அந்தமான் யாகஞ்செய்யும் பிராமணனுக்குத் தெரியும் படியாக அனுக்கிரகம்பண்ணிற்று. அந்தமான் வசனத்தைக்கேட்டு வானத்தைப்பார்த்து சகலகோடி

தேவதைகளையும் சதமகங்களையுங்கண்டு ஆச்சரியங்கொண்டு ஐயம் நீங்கி "செய்வினை திருந்தச்செய்" என்னும் வேதவிதியை அநுசரித்துமனதை ஸ்திரப்படுத்திக் கொண்டு வருகிறதருணத்தில் தருமதேவதை பிரசன்னமாய் ஓ கொல்லாவிரதங்கொண்ட குணக்கியனே, வேதத்தின் உண்மையை வெளியிடுகிறேன் கேளுமென்று யாக அத்தியாயம் நவின்றிருக்கின்ற சத்திரமத்தையும், எழுதாக்கிளவியாகிய ஈஸ்வர்வாக்கியத்தையும், தமரகவோசையாற் பிறந்த அட்சரசொரூபத்தையும், கிரமமாகச் சொல்லி மறைந்து போய்விட்டது, மறைமுதல் வணங்கிய மறையவன், மனந்துணிந்து வேதமே உன்னை நம்பினேன் நம்பினேனென்று எல்லாவற்றிற்கு மேலாகிய எக்கியத்தில் திரிமூர்த்திகள் முதலாகிய தேவேந்திரன் தேவர்கள் யாவருக்கும் பசுவபையினால் ஓமம்பண்ணி, அவிர்ப்பாகங் கொடுத்து திருப்திபண்ணிவைத்தான், அப்போது திரிமூர்த்திகள் முதலான பேர்களும் சந்தோஷப்பட்டார்கள். அப்படிப்பட்ட மேலான எக்கியத்தைப் பண்ணி அநேகவிஜயமும், தபமும், நன்மையுங், கூடிவரத்தக்கதாக ஓமப்பசு எக்கியத்தினாலடைந்து பதவி பெற்றான், இனிமேல் நானுனக்குச் சொல்லவேண்டியதென்ன, வேதமேநமக்கு அத்து, அதைக்கற்று அதின்சொற்படி அவிர்ப்பாகம் வைத்து நடந்தால் எல்லாப் பலன்களுமுண்டாமென்று வீஷ்மர் சொல்ல தருமநந்தனன் தன்னியனானான்.

பின்னும் பாட்டனாரைப்பணிந்து இந்து குலத் து தபஞ்செய்த ஐயனே நன்மையான காரியங்களிற் பிரவேசித்த பேர்களுக்கு, எல்லாரும் பழிக்கும்படியாக துன்பம்வந்து சம்பவித்துத் துயரப்படுகிறார்களே, அதென்னத்தினாலே, இருளைப்போக்கிப் பிரகாசிக்கப்பட்ட சூரியனைப்போல் ஆத்மாவுக்கு அக்கியானமான இருட்டை நீக்கி சுக்கியான மென்னுஞ் சோதியைப்பிரகாசிக்கச் செய்யாநின்ற சுகுணரோ இந்தச் சந்தேகத்தை நிவிர்த்திசெய்ய வேண்டு மென்று சரணம் புகுந்த சற்புத்திரனை நோக்கிச் சாற்றுகின்றார்.

42. உலகில் நன்மையான காரியத்தில் பிரவேசித்தபேர்களுக்கு துன்பம்வந்து சம்பவிக்கும் காரணம்.

ஓ மைந்தனே கேளும், குளிர்ந்த பிரகாசத்தை யுடைய குழவிப்பிறையையும் பிரபாகமாகிய கங்கையையுந் தரித்தருளிய சடாமகு

டத்தைப் பொருத்த தாணுவாகிய மூலகாரணப் பொருளானவர், ஸீ ணைமுனி முதலாகிய சகலகோடி தேவதைகளும் ரிஷிகளும் தேவக ண பூதகணங்களுஞ் சேவிக்கும்படியாய் செவ்விலவின்மலர்போலுஞ் சிவந்த இதழினையுடைய ஆதிசக்தியான தேவிவாமபாகத்தில் வந்திரு க்கும்படிக்கு கோடாகோடி கொன்றைமரங்கள் முலாவிய அநேக நந் தவனங்களும் வில்வவனங்களும் தழைந் திருக்கப்பட்ட கைலையங் கிரியில் மாணிக்கச்சிம்மாசனத்தில் எழுந்தருளி இருக்கும்போது சில ரிஷிவீஸ்வரர்கள் முதலாகிய மெய்யடியார்களும் அவ்விடத்திற்குவ ந்து அதிகார நந்திதேவருடைய அநுமதியின்பேரில் திருக்கோயிலு க்குட் புகுந்து பிரதட்சண நமஸ்காரம்பண்ணி தேவதேவ மஹாதே வ தத்துவநித்த பரிசுத்த நிர்மல கருணாநிதியாகிய கடவுளே! பிரமன் குமாரனாகிய தட்சப் பிரம்மா தேவரீரொருவரை விலக்கிமற்றப்பேர் களுடன் சபைகூடி ஒருமித்துயாகமொன்று செய்கிறான், அந்தயாக த்தில் உமக்குமாத்திரம் அவிர்ப்பாகமில்லை, எப்பொருட்கு மிறையா ய் எல்லாவற்றிற்குஞ் ஜோதியாயிருக்கின்ற ஈஸ்வரனே, உம்முடைய கருணை எப்படியோ எங்களுக்கொன்றுந் தெரியவில்லை என்று இறை ஞ்சித் தோத்திரம் புரிந்தார்கள். அவ்வுரைகேட்ட ஆதிபகவன் புன்னகையோடு பொருந்தி இருந்தனர். அன்னேர வேளையில் அம் மனுக்குக் கோபம் பிறந்து அரகர சம்போவென்று வணங்கி பூலோ கத்திற் செய்கின்ற, யாகம்போற் செய்யாமல் அகங்காரத்தினாலும், அறிவீனத்தினாலும் செய்யப்பட்டதக்கனுடைய எக்கியம் அழியத்த க்கதாக, தேவரீர் சிந்திக்கவேண்டுமென்று அந்தரி மொழிந்தனள். கணக்கிறந்த திருவிளையாடலை யுடைய கண்ணுதலானவர் சங்கரிவார் த்தையைக் கேட்டு சகலபிரமதகணங்களும் புடைசூழ ரிஷபவாகன ரூடராய் பார்வதா தேவியுடன்,பதிதன் செய்கிறயாக சாலைக்குவந்து அந்தரவாசியா யிருந்தபோது,அதைத் தக்கன்கண்டு நிலைதளராமல் ம னங்கலங்காமல் தானெடுத்தகாரிய முடிவுபெறும்படி ஓமம்பண்ணிக் கொண்டுதேவதைகளுக்கு அவிர்ப்பாகங்கொடுக்க ஆரம்பித்தான்.அப் போது தானல்லாத பொருளில்லாத பசுபதியானவர் ஞானதிபர்களா கிய ஜீவன் முத்தர்களினது மனமகிழத்தக்கதாக நம்முடைய, நெற் றிக்கண்ணிலிருந்து ஒரு வீரனைப் பிறப்பித்தார். அந்த வீரபத்தி ரன் பலவித ஆயுதங்களுடனே கோபாக்கிரந்தனாய் நெருப்பெரியுங்க ண்ணும் சிரிப்பெறியுங் கோரதந்தமுமாகி, பரமேஸ்வரனைப்பணிந் து விடைபெற்றுக்கொண்டு யாகத்திற்புகுந்து அநேகம்படை வீர கணங்களை ஏர்ப்படுத்தி ஓமஞ்செய்கின்ற வேள்விச் சாலையைச் சுற்

றிலுங் காவலாக்கியபோது. சற்றேனுந் தாட்சண்ணியம் பாராமல் யுகாந்தகாலத்தில் சமுத்திரமும் பொங்கி உலகத்தை வளைத்துக் கொள்ளும் உபத்திரவமெப்படியோ அத்தன்மைபோல் யாகசாலையை வளைத்துக்கொள்ளவே அதற்குள்ளகப்பட்டுக்கொண்ட அயன் அரி முதலாகிய தேவதைகளெல்லாம் கைநெறித்து மெய்பதைத்து, என் னசெய்யப்போகிறோமென்று ஏங்கித்தளர்ந்தார்கள். அந்தவேளையில் வேள்விச்சாலைக்குட் புகுந்த வீரபத்திரர் வீராவேசங்கொண்டு அந் தயாகத்திற் குடன்பட்டிருந்த சகலதேவதைகளையும் கண்டகண்ட மட்டுஞ் சேதித்து மூலைக்கு மூலைசோதித்து பஞ்சுப்பொதியிற் பற்றிய நெருப்புப்போல் அதமாக்கி எரித்து விஷம்போன்ற தக்கனை யும், எச்சனையும் தலையை வெட்டிப்போட்டார். அதுகாலையில் பிர மதேவன் நானுபக்கத்திலும் ஓடிவாடி அகிலலோகநாதனுகிய ஆதிபர மேஸ் வரருடை, அடிமலரிணையில் அலறிவிழுந்து ஆண்டவனே தக்கனுக்குக் கர்வபங்கமாயிற்று இனிமேல், தேவரீருக்கு அவிர்ப்பா கங் கொடுப்பதற்குச் சந்தேகமில்லை அவன் பிழைக்கும்படிக்கு கரு ணைசுரக்க வேண்டுமென்று மஹாதேவனை வேண்டிக்கொள்ள அதனு ல் மனதிரங்கி பிரமாவினுடைய பரிதாபம் பார்க்கமாட்டாமல் வெய் யலில்வைத்த மெழுகுபோலுருகி வீரபத்திரரால், வெட்டுப்பட்டு விழுந்தபேரெல்லாம் பிழைக்கும்படிக்கு தயைபுரிந்தருளினர். சக லமானபேரும் சஞ்சலப்படாமல் முன்போலவே மூளைவீசியவாறு போல் பிழைத்தெழுந்தார்கள். எழுந்தபேர்களியாவரும் வீரபத்திர சுவாமிகையால் வீழ்ந்து மேலாகிய பரமசிவத்தி னருளால் பிழைத் தோமென்றறிந்து இருவரையும் பணிந்து யாகம் அழிந்துபோய்க் கிடக்கிற அமக்களத்தையுங்கண்டு கிடுகிடென்று நடுங்கி பயபக்தியு டன் தோத்திரஞ் சொல்லி சுவாமி, நாங்கள் செய்த அபராதத்தைப் பொறுத்திரட்சிக்கவேண்டு மென்பதாய் தக்கன் முதலாகிய பேர்க ளும் ஒக்கவுடன்சேர்ந்து பொருமலும் விக்கலுங்கொண்டு புலம்பித் தவித்து தயாபரா! பராபராவென்று வேண்டிக்கொண்டு மறுபடியும் வேள்வியைத் தொடங்கச்செய்து வேதவிதியின் படிக்கு முதலில் மஹா தேவனுக்கு,அவிர்ப்பாகங்கொடுத்து மற்றவர்களையும் பூசித்தா ர்கள். பரமன் தக்கனை மாத்திரம் தலைமாறலுடன் வைத்திருந்தார். இதைப்போல் நல்லகாரியமா இருந்தாலும், செய்காரியம், தவிர்காரி யம் இரண்டுமறிந்து ஈஸ்வரபக்தியு மிருந்து நடத்துவாராகில் நிறை வேறும் இல்லாவிட்டால் கெட்டுப்போம் நன்மையைநாடிய தருமநந் தனுவென்று வீஷ்டுமர் புகன்றூர். பாட்டனுக்குப் பேரன் பணிவி

புரிந்து என்குலதெய்வமே பார்க்கவனென்னும் பெரியவனை சுக்கிர னென்று உலகத்தார் சொல்லுகின்றார்களே, அவருக்கு இந்தப் பெய ர்வந்த வரலாறென்ன வென்று பேரன் கேட்க, மேலோனுகிய வீஷ்டு மர் பட்சத்துடன் சொல்லத்தொடங்கினூர்.

43. பார்க்கவனுக்கு சுக்கிரனென்று பெயர் வந்ததற்கு காரணம்.

முன்னெருநாள் பார்க்கவனெனவர் அளகைக்கதிபதியாகிய குபே ரனிடத்திற்குப் போய் அவனைப்பயங்கரப்படுத்தினூர். அதனுல்துய ரமடைந்த இருநிதிக்கிழவன் தரித்துச் சகிக்கமாட்டாதவனுய் தன துதோழமை பூண்டபரமசிவனிடத்திற் சென்று பரதவித்தான். அச் ங்கதியைக்கேட்ட பார்வதி சமேதராகிய சிவபெருமான், குபேரன் பேரிற்பரிந்து பார்க்கவன்பேரில் குரோதங் கொண்டெரிந்து அவனை ப்பிடித்து விழுங்கிப் போட்டார். அப்பால் தேவர்கள் ரிஷிகள் முனி வர்கள் யாவரும் அழுது ஆதிசிவனைத்தொழுது பார்க்கவனைத் தர வேண்டுமென்று வேண்டிக்கொண்டார்கள். அதன்பேரில் பால நே த்திரனுக்கு அருளுண்டாய் விழுங்கியபார்க்கவனை வீரியவழியினுல் விட்டுவிட்டார். இந்தப் பார்க்கவன் ஈஸ்வரனுடைய சுக்கிலமாய் அதோ முகத்தால் வந்தபடியால் அன்று முதல் இவனைச்சுக்கிலனெ ன்று சொல்லப்பட்டு இவ்வுலகத்தில் சுக்கிரனென்று மருவியது. ஓ ! தருமராஜனே என்று சாற்றவும் சந்தோஷப்பட்டு நமஸ்கரித்து ஓ நாதனே நானிலங்கொண்டாடா னின்ற வேத வியாசருடைய பிள் ளை சுகயோகியின் விர்த்தாந்தமெல்லாம் கேட்க விருப்பமுற்றிருக் கின்றேன் என் னபேட்சையடைங்க அருள் செய்யவேண்டும் ஐய னே என்ன. சுத்த பவித்திரராகிய வீஷ்டுமர் சொல்லத் தொடங் கினூர்.

44. சுகப்பிரம்மரிஷியின் சரித்திரம்.

சகலகல்யாணகுண அச்சுதனுக்கு மைத்துனனே கேளும், கோ டா கோடி கொடியாகிய வேதங்களை எல்லாம் சிக்கறுத்து. இருக் கு,எசுர், சாமம், அதர்வணமென்று நான்காகப் பிரித்து ஜடைசாகை

களுடன் உலகத்திற்கெல்லாம் ஆதாரமாகும்படி செய்தருளிய ஆதியில் சகல தபசுஞ்செய்து திரிகாலக்கியானியாய் சாபானுக்கிரக சாமர்த்தியமுடையவராய் அதிக தூய்மையா யிருக்கப்பட்ட வேதவியாசமகா முனியானவர் வெகுநாளாய் பிள்ளை இல்லாமல் புத்திரன் வேணுமென்கிற அபேட்சையினாலே, சூரியன் தினமும் பிரதக்ஷண நமஸ்காரம்பண்ணிக் கொண்டு வாராநின்ற வெள்ளியங்கிரிச்சாரலில் அருந்தவமிருந்து, பர்வதராஜ புத்திரியையும் பரமசிவனையும் கருத்திலிருத்தி கடுந்தவசுபண்ணி வருங்காலத்திலே, சிவனுக் கற்புதமாகிய சிலயாகங்களைச் செய்துமந்திரமூலமாய் அவிர்ப்பாகமளித்து சிவனைத் தியானித்து ஆனந்தக்கண்ணீர் விட்டழுது, சரீரம் பொடித்துப பூரிக்க நாவானது குழகுழத்துத் தழும் பேற நெஞ்சம் பஞ்சு போலாகி வெண்ணெய்போலுருகி, உடல் குழைந்து சிவானந்த வெள்ளத்தில் மூழ்கி பரவசமாய்த் தியானஞ்செய்து தன்னைமறந்தபோது, ஏழைபங்காளனுக்குக் கிருபைவந்து யக்ஷ, கின்னர, கருட காந்தருவ, சித்தர், வித்தியாதரருடன், அநேகங்கோடி ரிஷீஸ்வரர்கள் தோத்திரம் பண்ணிக்கொண்டு மொய்த்து வரும்படியாக சகலஜீவாத்ம கோடிகளையும் இரட்சிக்கப்பட்ட சம்புவாகியநாதன் ரிஷபவாகனரூடராய் பார்வதியம்மனுடன் மான்மழு சதுர்ப்புஜம் காளகண்டந்திரிநேத்திரத்துடனே காட்சிகொடுக்க,அதைப்பார்த்த வேதவியாசர் சூரியனைக்கண்ட செந்தாமரைக் கமலம்போல் அகமகிழ்ந்து முகமலர்ந்து, ஆனந்தமாயக் கூத்தாடி பஞ்சாங்கநமஸ்காரம் பண்ணி சாம்பசிவ மூர்த்தியின் திருக்கோலத்தைப் பார்த்து, தன்னிலுமடங்காமல் மகிழ்ச்சி பூரித்து, ஆனந்தவேர்வை வேர்த்து தோத்தரித்து மகாவிலாச உல்லாச கைலாச வாசியாகிய சுவாமியே என்று உள்ளமுருகி என்புகுழைந்து, அன்புதழைந்த வேதவியாசரை, விடையோனோக்கி நீரிழைத்த தவத்திற்கு நாம் மிகவு மெச்சினோம், உமது கோறிக்கையைக் கூறினால் கொடுப்போமென்று மொழிந்தார்.வேதவியாசர் பணிந்து நிர்மல நிற்குண நிராகார நிச்சயமே! அடியேனுக்கு ஆத்மக்கியானமும் யோக்கியமும் அறிவும் பக்தியும் பஞ்சபூதசேஷ்டைகளி லகப்படாப்பான்மையும்,மாயையுயொழித்த மைந்தனொருவனைத் தந்தருளவேண்டுமென்று வருந்திக் கேட்க,அப்படியேகொடுத்தேனென்று திருவாக்கருளி, அரன் வெள்ளியங்கிரிக்கெழுந்தருளினார்.இப்பால் வேதவியாசர் தபசுநிலைநீங்கி கைலையங் கிரிச்சாரல்விட்டு இமோத்கிரிச் சாரலரிகில் போய் பர்ணசாலை ஏர்ப்படுத்திக்கொண்டு வைதீகமடங்கட்டி வாசம்பண்ணி வருநாளையில் ஒருநாள் தீக்கடையுங்கோலை செங்கையிற்பி

டித்து அக்கினிபிறக்கும்படிக்குக் கடையும்போது மைதீட்டியமயில்
கண் போன்றசெவ்வரி பறந்தகண்களையுடைய அரம்பையானவள் அ
வ்விடம் வரக்கண்டார். அவளுடையமதிமுகமும் மதத்தவிழிகளும்
சுருட்டிய கடைக்கண்ணும் சுவர்ணகுடம் போற்கதித்துப் பெருத்தக
னதனமும், ஆல்வயிறும் மால்ரோமவரையுமாகத் தோற்றிய சுந்தரத்
தைக்கண்டு, வேதவியாசர் மிகுமோகங் கொண்டு விலக்கக் கூடாத
மன்மதபாணத்திற்கு இலக்காகி,ஓமத்தீயில் உய்வது விடுத்து காமத்
தீயிற் கருகிமெலிந்து கண்பஞ்சடைந்து கலங்கிவருவதை முல்லைக்
கொப்பாகிய பல்லையுடைய வல்லியறிந்து மன்மதன்கணையால் வாடிய
வேதவியாசரை நாடி மையல்தீரக்கலவிகூடி மருவவேண்டுமென்றோ
டிவருபவள்போல நடைகாட்டி ,கெஞ்சிக் கொஞ்சிக்கொஞ்சிப் பஞ்ச
வர்ண அஞ்சுகம்போல் அஞ்சியஞ்சி வஞ்சி தஞ்சமீயென்று அளியா
ய் அழகியகிளியாய்களிகொண்டு ஒருமரத்தின் கிளையிலிருந்தாள்.
வியாசர்வேளின்கணையால் மெலிந்து வேசாறி விரகம் பொறுக்கமாட்
டாமல் நேரிற்கண்ட நேரிழையழகும் அவள் நெறிப்பும் காமப்பார்
வையின் குறிப்பும் இவருக்குட் புகுந்து அவளை நினைந்து நினைந்து
உருக அவருக்கு வீரியம் பெருகும்போது அது பூமியில் விழப்படா
தென்னும் புண்ணியத்தை எண்ணி அதை கையிற்றாங்கிய காலையில்
கையுநிறைந்துமெய்யுமறந்து நெருப்புக்கடைந்த குழியில்நிரம்பியது.
அது இவருக்குத் தெரியாமல் தன்னைத்தான்மறந்தவராய் அரணிக்
கோலால் ஓயாமற் கடையும்போது அந்தச்சூடும் இந்தச் சூடுங்கல
ந்து அக்கினி ஜொலித் தெழுந்ததுபோல் மகத்தாகிய திவ்யசுகமஹா
ரிஷிபிறந்து எழுந்தார். உதயகிரியி லிருக்குஞ் சூரியனும் நாணும்படி
க்குச் சுயம்பிரகாசகாந்தியுடன் தோன்றிய சுகனென்னும் சுதனைக்
கண்டு வேதாகமசாஸ்திர புராணமுதலாகிய கலைகளுக்குரிய புருஷ
ரும் பெரியோர்களும் அரியதவத்திற் குரியோர்களும் மெய்யன்பிறந்
தான், எங்களையன் பிறந்தானென்று துதித்துக்கொண்டாடினார்கள்.
தருமதேவதை நீதிதேவதை வனதேவதை பூமிதேவதை முதலிய பே
ர்களு மதித்து மகிழ்ந்தார்கள். தேவதுந்துமி முழக்கி புஷ்பமாரி பொ
ழிந்தார்கள். சகலாத்ம கோடிகளுக்கும் தற்செயலாய்ச் சம்பிரமமும்
சந்தோஷமும்பிறந்து, நித்தியோச்சவங் கொண்டாடினார்கள். பாரிலு
ள்ள பாவங்கள் பறந்தோடவும் தருமக்குழுமித் தலை எடுத்தாடவும்
பெரும்பேறுங் கலந்தவைபவத்துடன் ஜனித்த பிள்ளையைப் பார்த்
துக் களித்து தீராத வறுமையி லகப்பட்டுத் தேம்பிய ஒருவனுக்கு

மாறாத திரவியவாழ்வு வந்தால் அவனுடைய மகிழ் வெப்படியோ அப்படிப் போலும், பிறந்திறந் துழன்ற பிராணனானது நாளுக்கு நாள் கொஞ்சம் நல்வினை தேடி அதனாற் புண்ணியங்கூடி விவேகம் விளைந்து மந்தம் மந்தாதரங்களெல்லாங் கடந்து தீவிரம் அதிதீவிரதரத்தில் கடைசியாய்ப் பிறந்து இருவினை யொப்பு மலபரிபாகமாய் ஜனன முளை தீய்ந்து இருவினைப் பயனுங்காய்ந்து உற்பவவிடாய்மாய்ந்து சுவர்க்க லோகமடைந்து ஆனந்தத்தை பெறுவது போலவேதவியாசர் பிரம்மாநந்தத்தில்மூழ்கி எழுந்தார். அந்தக்காலத்தில்தேவர்களும் தேவேந்திரனும்ரிஷிகளும் முனீஸ்வரர்களும் பிரம்மதேவனும் சரஸ்வதியும் லட்சுமியும் ஆகாயகங்கையும் பூமிதேவியும் சித்தசாத்தியரும் வந்துஞானமே நிறைந்த சொரூபமாகப் பிறந்தமைந்தனை உவந்து ஏந்தி உச்சிமுகந்து நீராட்டி ஆசீர்வதித்து சட்கர்ம்மப் பிரகாரம் புத்திரோச்சவம் ஜாதகன்மம் காலக்கிரமமாக நடப்பித்து சாமவேதகானத்தை வீணையில் மீட்டி தேவாம்பைகள் பாடிக்கொண்டிருக்க,பார்வதிசமேதராகிய பரமசிவன் ரிஷபவாகனரூடராய்,நாரதர்முதல்ஞானக்கடலாகிய மோன முனிவர்கள் முன்னும் பின்னு மொய்த்துவரும் படிக்கு எழுந்தருளிவேதவியாசருடைய சேய்தனைப்பார்த்து கிருபாசமுத்திரத்துடன் திருவருண் முகூர்த்தஞ் செய்துமதிவளரக்கலைவளருமாறுபோல்மதிவளரக் கலைவளரவென்று வாழ்த்தி மஹாதேவியுடன் வெள்ளியங்கிரிக் கெழுந்தருளினார். பிரமன்முதலான தேவர்களும் போனார்கள். இப்பால் சுகப்பிரம்மரிஷியானவர் தந்தையைப் பணிந்து திரிகரண சுத்தியாய் புத்தி செலுத்தி திடனா வென்கின்ற பிராமணனிடத்தில் வேதாகம சாஸ்திரவிதி நூலெல்லாங்கற்று புராணாசாரம், ஆசாரம் விபகாரம் நமஸ்காரம், சிஷ்டாச்சாரம், அதிகாரம், தருமவுபகாரம், இயாவுந்தெரிந்து ரிஷிகளுக் கெல்லாம் முதன்மையா யிருந்து தனது தந்தைஇருக்கின்ற ஆசிரமத்திற்கு வந்து முறைமைப் பிரகார மிருந்து ரிஷிகளுடன் வாசம்பண்ணி விரிந்த திறமைக்குரிய பெரிய விரதங்களை யனுஷ்டித்து, பிரபஞ்ச மயக்கத்தையும் பார்த்துக்கொண்டு ஒருவர்கண்ணிலுந் தோற்றாமலகன்று காரணப் பொருள்போல் நின்று, சிலநாட் சென்றபின் வியாசர், அப்பா உலகமென்பதும், இவ்வுலகத்திலுள்ள சகல பேதங்களும் தாறுமாறாகிய மாயை யல்லது வேறில்லை,இனிமேலதைக்கூறுவதி லென்ன சிலாக்கியம்,பிரம்மம் ஒன்றுதான் நிச்சயபதார்த்தம் குற்றமற்றசத்குணனே, இது எதார்த்தம், அகிலபுவன சராசரங்களில் உள்ளும் புறம்புமாயு

றைந்து விளையாடுவது பரப்பிரம்மமே,அவரசைந்தாலல்லது அணுவு
மசையாது அவரோசுதந்தரன்,மற்றவர்கள்யாவரும் பரதந்திரர்கள், ஓ!
துரந்தரனே என்று இந்தப்படிக்கு எங்கெந்தத் தருணத்திற் சொல்
லவேண்டியதோ அந்தத்தருணத்தில்வேதத்திலெடுத்துக் காட்டினார்.
(தந்தைசொன்மிக்க மந்திரமில்லை யென்னும்) விதிப்பிரகாரம் வியாச
ராலறிந்துக்கொண்ட மெஞ்ஞான தேசிகன் மறையாசிரமத்தில் பிர
மசாரியம கிரகஸ்தன் வானப்பிரஸ்தன் என்று விளம்பி இருக்கின்ற
வகை தொகை விரிவு மூன்றையு மறிந்து இதுகளைப்பார்ப்பதினாலும்
கேட்பதினாலும் பிரபஞ்ச ஆசாபசாசம் பிடித்துக்கொண்டு ஆட்டும்,
அது சிலருக்குக் கொண்டாட்டம் அப்படிபபட்ட பண்டாட்டங்களை
மாற்றுகின்ற ஞானநூலை நவிலுமையா வென்று கேட்டார், மைந்
தன் வசனத்தைக்கேட்ட வாதராயணர் நகைத்து சகல கலைக்ஞான
மும் உருவாய்ச் சமைந்த பிள்ளாய் மேற்சொல்லிய மூன்றாச்சிரமங்
களினாலும் பற்றுவையாமல் புத்தியினால் விலக்கிவிடலாமென்று பார்
க்கிறாய்,அதைவிட்டு விடப்போமா?மேலேறுகிறவன் முதற்படியிலிரு
ந்தேறுவதா அல்லது மூன்றுபடியைத் தாண்டி நான்காவது படியிற்
காலூன்றி ஏறுவதா சொல்லும் தராசின் முட்போன்ற மனதையு
டையவர்களானாலும் பாபத்திற்கு பயமும் தயாரசமும் தண்ணளியும்
தலைமையும் தன்னுயிர்போல் சராசரவுயிரும் சமமென் றுன்னி இரு
க்குந் தவத்தினையுடையவர், களுக்கும் இந்த ஆசிரமம் மூன்றை
த்தள்ளி வேறில்லை இம்மூன்றிலேயே பழகிவரும்போது சகல
மு நாசமாகிய சந்நியாசமிருக்கிறதே யென்றியம்பிய பிதாவுக்கு
பிள்ளை சொல்லுகிறார் ஐயா, நீர் சொன்னதென்ன இந்தப் பிரபஞ்ச
வாழ்க்கைப் போகங்களை விரும்பிய ஆக்கையுடையோர்க்கு நீர் போ
திக்கவேண்டியது இதுதான். எனைக்கூடச் சேர்த்துக்கொண்டு
சொல்லவேண்டாம் நானிந்தப் பூவாசை பொன்னாசை பெண்ணாசை
யை விரும்பினவனல்ல நீரிதை மறந்து போம், இந்தப் பிரபஞ்சமா
னது நல்வினை தீவினைகளின் போகமாய்மருவி இருப்பது. நல்வினை
யாவது தானம் தருமம் பிரருபகாரம் பரோபகாரம் இன்னம்பற்பல
சற்காரியங்களுண்டாயிருக்கின்றது. தீவினையாவது பொய், கொலை,
களவு கள், காமம் இவைகள் மயமாயிருப்பதுதானிருவினை. இ
வைகளில் நல்வினையைச் செய்தவன் இங்கும் அங்கும் விடு வாசல்,
மனை, மனை, பெண்டுபிள்ளை,பண்டுபதார்த்தம்,பாக்கியம்,யோக்கியம்,
சத்தியவாக்கியங்களினாற் சிலாக்கியம், விமானம் தேவசமானம், வெ
குமானம், சுகுமானம் விதானம் நிதானத்துடன் உலகாதிபனாகி கலை

மதியோடிருப்பான் இந்தவாழ்வினல் அதிசெயமென்ன இவனுடைய பேபோகிற லாபமென்ன, தீவினையைச் செய்தவன் பாபியாய், தரித்திரனய், நோய்பிடித்து உண்ணல் உடுக்கல், படுக்கை, கொடுக்கை யற்று வீடுவாசலில்லாமல் கைகால் குறைந்து கவலை மேலிடுவான். அதனற் குறைவென்ன செல்வத்தினற் சுகமென்ன,கண்டது. எதுமகிழ்ந்தது இன்மையால் எது துக்கப்பட்டது,எதுநயாங் கொண்டது எண்ணிப்பார்க்கு மிடத்தில் இதுவும் பாவமே அதுவும் பாவமே,ஒருமரம், இரண்டுபாளை, ஒன்று நுங்கு, ஒன்று கள்ளு. அறிவாளிகட்குசம்பந்த விசேடத்தால் இரண்டு மொன்றே, அறிவில்லாத பேர்கட்கு அது வேறு,இது வேறு தான் சுகத்தினல் நன்மையும், அசுகத்தினல் தீமையுமில்லை. இவனுடைய பேதைமனமானது பிரமாதத்திற் கொண்டுபோய் விட்டது. நினைப்பினல் நெடுந்தூரம் போன இவன் திரும்பிவந்து எப்படி தேறுவானே வென்றால் சாஸ்திரக்கியானத்தைச் சார்ந்து, சாதுசங்கமப் பழக்கத்தினு லோர்ந்து சங்கதி இன்ன தென்னத் தேர்ந்து அனுபவத்தாலறிந்த அறிவாளிகட்கு சுகதுக்கமான வினை இரண்டும், விலங்கு தான்,பிறவிக்கிடமே, ஐயோ? ஆ, ஆ! ஆத்மா கடைத்தேறப்போகிற வழி ஈதல்லவே, பல்லக்குக், குதிரை, இரதங்களில் பவனிவந்தா லென்ன,பாரெல்லாந் திரிந்து நடந்துவந்தாலென்ன இருவருக்கும் துன்ப இன்பமொன்றே ஒருபிள்ளை துன்பப்படுகிறான் ஒருபிள்ளை இன்பப்படுகிறான் இந்தஇரண்டு பிள்ளைகளையுந் தாய் தகப்பன்பார்த்து சந்தோஷப்படுவார்களா? இல்லையா? சர்வாத்மாவாகிய ஈஸ்வரன் எல்லாரிடத்திலுமிருந்து பார்ப்பது நிசமா அபத்தமா, நிசமானல்,பிள்ளைகளிற்பேதம் வரவேண்டிய தென்ன, பெற்றவர்களுக்குப் பிள்ளைகளொன்றே, சகலாத்மகோடிகளுந் தன்னை நினைத்துப் புசிக்கும்படி ஏர்ப்படுத்தி இருக்கிறார். அந்தப்புசிப்பு எப்படியும் இவனுக்குக் கிடைக்கக் காத்திருக்கின்றது, பிறத்தல், இறத்தல், அனுபவித்தல், ஆநந்தப் படுதல், எல்லாம் இருவினை யாளராகிய இருவருக்குஞ் சரியே, இப்படிக்கிருக்க ஈஸ்வரத் தியானஞ் பண்ணி விதியையனுசரித்து நடவாமல்வெகுபேர் கெட்டுப்போகிறார்கள்.மனோநிச்சயமில்லாமல்துக்கத்தைவருவித்துக் கொண்டு வாடுகிறார்கள்,விருதாவாய் வாழ்வென்றும், தாழ்வென்றும் பிராந்தியுட் கொண்டு மயங்கி வீழ்கிறார்கள். பிராந்தி மயக்கந் தீர்ந்தால் மாறிப்போ மல்லவோ, நிதான முண்டாகுமே, நாம் இன்னன் நமக்கு வீடு இன்ன இடத்தில் நாம் இன்னத்தினல் முழுகிப்

போ யிருந்தோம் நம்மை இன்னான் கைகொடுத்து அழைத்துவந்து நல்ல இடஞ் சேர்த்தான், இனிமேல் வீட்டுக்குப் போகலாம் இல்லை ஒருவருந் துணையில்லா விட்டாலும் ஒரு பக்கத்தில் விழுந்து கிடந்தால் சிலநேரத்தில் தெளிந்துபோம். இது போலமோனமாய் ஒரு மூலையில் விழுந்து கிடந்தாலும் தான்கொண்ட பிராந்திமயக்கம் விண்டுபோய்விடும். அல்லது, அகன்றுபோய்விடும். கடைசியில் பசிக்கு ஆன்மா உடலுடன் காணப்போகிறது உணவு; மற்ற தென்ன விருந்தாலும் பயனில்லை யென்று ஞான சூக்குமமறிந்து, ஈஸ்வரபக்திபண்ணி, எந்தவேளை யிலுஞ் சிந்தை தெளிந்து, களிம்பு மாற்றிக் கண்டுணராமல் ஏன்வீணிற் கெட்டுப் போகின்றார்கள் நல்வினை தீவினைசம்பந்தமான விலங்காத விலங்கினது பிறப்புமாறாமல் வந்துக் கொண்டிருக்கும். இந்த இருவினைகளில் நல்வினை நல்லதென்றும் தீவினை தீயதென்று மகிழ்வார்கள். இவ்விரண்டு வினைக்கும் வித்தியாச மென்ன வென்றால், இரண்டும் விலங்குதான்; விலங்கானாலும், நல்வினைசெம்பொன் விலங்கு. தீவினையானதுகரும்பொன்விலங்கு.இவ்வளவு தாரதன்மய முடையது. இதனுடைய தன்மையறியாமல் உயிர்வர்க்கங்கள் நல்வினை வேணுமென்று மயங்கி முயங்கி தானதருமம் பண்ணினால் சுகம் பெறலாமென்ன சஞ்சலப்பட்டு அலைகின்றார்கள், ஆனால், கீர்த்தியுண்டு, பெருமைபெறலாகும். அப்போது, பூஷணை உடலுக்கல்லது, உயிருக் கொன்றுமில்லை. இப்படிப்பட்ட பெருமையும் புண்ணியமும், வாழ்வும், மேன்பாடும், எனக்குவேண்டாம் சீக்கிரத்தில் ஜனன மரணவேதனை யொழிந்து மோட்ச மடையவேண்டும், இதற்குவேண்டிய முத்திசொரூப லட்சண மெல்லாம் மொழிந்து, எனக்கு மோக்ஷங்கிடைக்கும் ஆக்கத்தைத் தேடுமையா வென்று சுகப்பிரமம் சொல்லவேதவியாசர் ஓமெய்யனே!ஒருதிருஷ்டாந்தமாக ஜனகமகாராஜன் கதை சொல்லுகிறேன்கேள்.

45. சுகருக்குவியாசர் சொல்லுகின்ற ஜனகராஜன் கதை.

விதேக தேசத்திற் கலந்த மிதுலா புரியில் ஜனகமகாராஜன் துரைத்தனம் பண்ணிக்கொண்டு புத்திர பத்தினி மித்திரபந்தம் பற்றியதைப் போலிருந்து, பிள்ளைப் பூச்சி போலும், புளியம்பழத்தோடு

போதும், பொருந்தி, மாயையாகிய மரத்தை வேர்களைந்து வெட்டி, அதுமறு படியும் கிளைத்து எட்டிப் பாராமலழியும் படியாய் விரதாக்கினி கொளுத்தி யவனே ஜீவன் முத்தன், அவனே பிரமசொரூபன்: உலகத்தோடொத்து வாழ்பவர்களி லொருவன்; கலைமுற்றுங் கற்று கற்றோரோ டிணங்கி கல்லாருடன் கலந்து நாலுபேர் நடக்கிற மார்க்கத்தின்படிக்கு நடந்து லோகமாயைக்குட் படாமல் நீறு மூடிய நெருப்புப் போலிருக்கிறான். அவனுக்கொப்பான வர்களில்லை, அப்பேர்ப்பட்ட பக்குவனாகியடங்கியிருப்பவனிடத்திற்கு நீபோவாயாகில் உன்மனதிலிருக்கிற சந்தேகங்களையெல்லா மாற்றிவைப்பார், நீ அவனை நாடிப்போகிறபோது பிரபஞ்சத்திற்கு வேறுபாடாய்ப் போகாமல் ஞானத்தை யொளித்து, லோகத்தை யனுசரித்து, உலகிலுள்ளசாதாரணமான ஒருவனைப்போல் போய்ப்பாரென்று வியாசருரைத்தார். விஞ்ஞான வீறுபெற்ற சுகயோகியும் தன்பிதாவைப் பணிந்து விடை பெற்றுக்கொண்டு சென்று தேவதைகள் கொண்டாடப்பட்ட பரதகண்டத்திற் புகுந்து, வானமளாவியமலைகளும், காசினி நிறைந்தகாடுகளும், தண்ணீர் வறண்ட சவுட்டுப் பூமியான பாலைநிலங்களும், முல்லை முதலியமேடும், பள்ளமுங்கடந்து தாமரை மலர்களானது ஸ்திரீகளுடைய முகங்களுக் கீடுபடாமல் வெட்கித் தண்ணீரில் ஒற்றைக்காலில் நின்று, தவமிழைக்கின்ற கோலமும், தேன்பெருகி அருகிலிருக்கும் ஆறுகளிலோடி, மருதநிலத்தை வளர்க்கும்படியாகிய வளமும், மண்ணரம்பைகள், விண்ணரம்பையரிடத்தில் மருவியாடும் வண்மையும் மந்திகள் வேர்பலாப்பழத்தை மகிழ்ந்துண்ணுந் தன்மையுமுடைய விதேகநாட்டின் எல்லை யளவைக்கண்டு மகிழ்ந்து சென்று மிதுலாபுரியைச் சார்ந்தபோது, பரதநாட்டியங்களும், சுரக்கியானங்களும், தாளங்களுக்கிணங்கிய, மேளங்களும், வீணைவேணு, தம்பூர், முதலாகிய, கருவிகளைக் கொண்டு சங்கீதம் பாடுகின்ற சரசமாதர்களும், சகோரயாழ், மகதியாழ், பேரியாழ், செங்கோட்டியாழ், வாசிக்கின்ற புருஷருடன், சரச சல்லாப, உல்லாசங்களை யனுபவித்திருக்கின்ற ஸ்திரீகளும் நாயகனுடன் கலந்து பாடுகின்றவர்களும், கலவியிற் புரண்டு ஊடுகிறவர்களும் ஊடல் தவிர்த்து கூடுகிறவர்களும், கொஞ்சுகிறவர்களு மன்மதன் கணையால் வாடி இருவருயிரும், ஒன்றாயிணைந்த பேரும் இத்தன்மையான வளங்கள் பலவாயிருக்கின்ற சின்னங்களைக் கண்டுங் காணாதவர் போல் தலைகுனிந்து சம்பிரமங்களைக் கேட்டு, மாடமாளிகை கூடகோபுர மருவிய தெருவீதி கடந்து, மிதுலைக்குட்பிரவேசித்து, அங்கேவாழை, கமு

கு, கரும்பு, இளநீர், பலா, மா, தாழை, மகரதோரணம் கொடி, மேல்விநோதம் இவைகளெல்லாம் அலங்கரித்திருக்கின்ற, வீதிகளின் விநோதங்களையும் பொற்குடங்களால் பூரணகும்பம் இழைத்திருக்கின்ற மேடை வேதிகை களின் சம்பிரமங்களையும், யானை, குதிரை, தேர், பதாதி, முதலியவைகணெருங்கிய, பெருக்கமும், நவரத்தினங்களாற் செய்தகுன்றுகளும், சிங்கார மண்டபங்களும், வசந்தமண்டபங்களும், ஆயிரக்கா லுயர்ந்தமண்டபங்களும், ஆமை, காடை, கோழி, கவுதாரி, கடாமுதலியவைகள், சண்டைபோட விட்டிருக்கிறசந்தடியும், அன்னம், மயில், கிளிளை, குயில், மான்குட்டி, மாடப்புறுமுதலிய பட்சிகளைக்கொண்டும், இராஜஸ்திரீகள், முதலாகிய மற்றப்பெயர்களும் போற்றுகின்ற அம்மனைத் துதிக்கும்பந்துமுதலிய ஆரவாரமும் இன்னமுள்ள சம்பிரமங்களெல்லா வற்றையுங்கண்டு களித்து சித்திர விசித்திரமுள்ள இராஜசிங்காசனக் கொலுக்கூடத்திற்கு வந்தார். அவ்விடத்திற் காவலாயிருந்த துவார பாலகர்கண்டு ஆரையாபோகிறது நில்லுமென்றதட்டினார்கள். அதைக்கேட்ட சுகரானவர் சந்தோஷத்தினால் வாழ்த்தினாலும் தீவினைவசத்தாற்றிட்டினாலும் சமமாயனுப்பவிக்கப் பட்டசாது அவ்விடத்திலேயே அசையாமனின்றுவிட்டார். உடனே துவாரபாலகர் போய் ஐயா, ஆரோ ஒருவர் வந்திருக்கின்றாரென்று ஜனகாராஜனுக்குத் தெரிவித்தார்கள். இப்படி மகானுபாவராகிய சுகப்பிரம்மமே வந்தாரொன்றறிந்துக் கொண்டு, இன்று நமக்கு நல்லகாலமென்று கண்ணீருகுத்துக் களித்து பக்கத்திலிருக்கப்பட்ட மந்திரிகள், சாஸ்திரிகளுடனே எழுந்து எதிர்சென்று கண்டு, பிரதக்ஷண நமஸ்காரம் பண்ணி மிகுந்த தேவதாவுபசாரத்துடன் அழைத்துவந்து ஆசனத்திலிருக்கச்செய்து, அர்க்கியபாத்தியம். ஆசமன்னியம் பாதோதகம், வஸ்திராலங்கிர்தம் புட்பம் அட்சதை, தூபம், தீபம், நைவேத்தியம், சோடசபூசைகளு நடத்தி சுவாமிநீதவரீர் இங்கெழுந் தருளிய காரணமியாதோ தெரிவிக்க விரும்புகிறேனென்று தெண்டனிட்டிருக்க, சுகபிரமரிஷி சொல்லுகின்றார், என்றந்தை வேதவியாசர் உம்மிடத்திற்குப் போகச்சொன்னார். என்னத்திற்காக வென்றால் இறப்புப் பிறப்பு இல்லாத பேரானந்தஞானம் உம்மாலறிந்துக்கொள்ளு வதற்காக வென்று தெரிவிக்கவும், அந்தவார்த்தையைக் கேட்ட ஜனகன் பயந்து மகாரிஷிகளுக் கெல்லாம் மாயையின் லட்சணத்தை வகுத்துச்சொல்லி மாயை கடந்து அப்பாற் கரையேறுமாற்கமுங் காட்டானின்ற மகானுபாவர்

தூய்மைக்குந் தூய்மையானவர் வேதவித்தாக விளங்கிவியாசப்பிர்மம் அவர்றியாததும் ஒன்றிருக்கின்றதோ ஆ? என்னிடத்திற்கிருபைவைத்து மாயையின் புணர்ப்பையும் மறப்பையும் ஜனனமரணமற்ற திடஞானத்தையும் போதித்து ஆத்மதெரிசன மாகும்படி செய்தருளி தந்தியனுக்கிவைத்த சர்வலோக நாயகன் தம்மிடமாகத் தெரிந்துக்கொண்டதை மறந்துவிடப் போகிறேனென்று, பழம்பாடம் பார்க்கிறாப்போலத் தூண்டினரோ?

ஐயா, பொய்யாகிய உலகமென்று* உமது தந்தையினிடத்து மெய்யாகிய இரகசியம் படித்துக்கொண்டு கிருதார்த்தனானேன். அவரெனக்கு உபதேசம்பண்ணி இருக்கிறபடிக்கு, தலையான ஞானமார்க்கத்தை உமக்குச்சாற்றுகிறேன். அதனுடைய கிரமங்களெல்லாம் கேட்டருளும். கர்த்தனுடைய காதலனே என்று சொல்லத்தொடங்கினர்.

46. ஜனகராஜன் சுகப்பிர்மரிஷிக்கு ஞானோபதேசஞ் செய்தல்.

கேளும் சுகப்பிரமசோதியே உலகத்தில் பிராமணர்கள், ஆச்சிரம நான்கையும் அனுசரிக்க வேண்டும். அதில் முதலாவ தாச்சிரமம் வேதாத்தியயனம் பண்ணப்பட்ட உபாத்தியாயனை வணங்கி சிஷ்ய பணிவிடைபுரிந்துவழிபட்டுசாங்கோபாங்கமாய் வேதம்படித்துக்கொள்ளல் வேண்டும். பிராமணர்வீடுகளில்பிட்சைவாங்கி சாப்பிடவேணும். எண்ணெய் இட்டுக்கொண்டு ஸ்நானஞ்செய்யப்படாது. தரையிலே படுக்கவேணும். சந்தனாதி வாசனை திரவியம் தாம்பூலமாகாது. கோவணத்தனாய் ஈஸ்வரத்தியானம் என்னேரமு மிருக்கவேணும். இரண்டாவதாச்சிரமம், நற்குண நற்செய்கையையுடைய, பொற்குடிப்பிறப்பாகிய பெண்ணை விவாகம் பண்ணிக்கொண்டு, அவளுடன் மருவி சகலதருமங்களையுந் தாட்சி இல்லாமற்செய்து பெரியவர்களுக்குத் தொண்டுபுரிந்து புத்திரப்பேறுற்று வருந்தி விருந்தினைப் பரிந்து உபசரித்து, விரதபின்னம் வாராமல் அன்னமருத்தி சத்திய தருமம் நித்திய மென்றிருக்கத் தக்கது. மூன்றாவது ஆச்சிரமம் சந்ததியை இல்லறவாழ்க்கையிலிருத்தி பந்தபாசங்களையறுத்து நாட்டை யகன்று காட்டில் மருவி நாட்டம் பிரியாமலிருந்து மனோதிடமாய் தபசு

புரிந்து தியானஞ் செலுத்துதலாகும். இந்தவானப் பிரஸ்தத்தில் மருவியிருந்து இதனுடைய மார்க்கமறிந்து மனந்துறந்து, நான்காவது ஆச்சிரமமாகிய படிமேலேறி மோட்ச முடியேறுவார்கள். இப்படி வரன்முறைபதப்பாம லனுசரித்து ஒவ்வொன்றின் பலனையுமுணர்ந்து ஞானம் பிறக்கவேணும். இஞ்ஞான விஞ்ஞான அஞ்ஞானத்தை அடுக்கடுக்கா யறுத்துப் படியேறினவர்கள் பாக்கியவான்கள் என்று ஜனகர்சொல்ல, அதைச் சுகப்பிரமங்கேட்டுதீக்ஷடைக்கோலில்தேகம் தேகியாயிருந்த தீப்போன்ற சுகப்பிரமயோகி இராஜனைக் குறித்து ஓ, ஜனகனே வேதவிதிப்பிரகாரம் ஒவ்வொரு ஆச்சிரமத்துறையையும் அனுசரித்து அந்தந்தவித்தியாசங்களைக்கண்டு வெறுப்படைந்து யதியாச்சிரமஞ்சேர்ந்து அதனால் தான் ஞானம்வரவேண்டுமோ? ஒருவேளை நல்லபுண்ணியவசத்தால் முதலாசசிரமத்திலேயே ஞானம் வந்துவிட்டால் அதுபிரயோசனப்படாதோ? வாராதென்கிற வழக்குண்டோ? நல்லது நல்வினைப்பயனாற் கிடைத்ததானால் மற்ற மூன்றாச்சிரமத்தையும் அனுசரிக்க வேண்டிய முறையில்லையே, இதனுடையதிறத்தைச் செப்புமையாவென்று சுகர்கேட்க, ஜனகவரோதயன், சுவாமி தேவரீர் திருவாய் மலர்ந்தபடியே ஆச்சிரமதருமங்களை அனுசரித்துத் தேறாமல் பிறவிஞானம் பெற்றிருக்கப்பட்ட பெரியோர்களுமுண்டு; அவ்வாறு நேரிட்டிருந்த போதிலும், வேதத்தில் விதித்தவண்ணம் ஆச்சிரமநான்கையுங் கைவிடாம லனுசரிப்பார்கள். ஞானம் வந்தவர்கள் நான்காசசிரமத்தையுந் தழுவவேண்டியதென்னவென்னில், தாங்கள் படியேறி விட்டோ மென்றும் பற்றில்லாத ஞானவான்களென்றும் அலட்சியமாய் விட்டுவிட்டால் அகப்பற்று புறப்பற்றையுடைய அக்கியானிகள் தவத்தை விரதத்தை அனுஷ்டிக்கமாட்டாத சோம்பலுடையவர்கள். பெரியோர்களெல்லாம் இந்த ஆச்சிரமத்திற் பிரயோசன மில்லையென்று விட்டுவிட்டார்களே பலனிருந்தால் விட்டுவிடுவார்களோ, இல்லையில்லை நாமேன் அந்தநான்காச்சிரமத்தையுங் கட்டிக்கொண்டிருக்கவேண்டுமென்று விட்டுவிட்டு சீக்கிரம்கெட்டுப்போவார்கள். சர்வேஸ்வரன் சகல ஆத்ம கோடிகளுங் கடைத்தேறவேண்டுமென்று மோட்ச வீட்டுக்கு ஏறிப்போகிறபடிபோல் சரிதை, கிரியை, யோகம், ஞானம், இதற்கு முறையே பிரமச்சாரி, கிரகஸ்தன், வானப்பிரஸ்தன் சந்நியாசன், என்று சோபானக் கிரமமாய் ஏர்ப்படுத்தி வைத்திருக்கின்றார். ஆகையால் பிறவிஞானம் பெற்றவர்களும் அனுசரித்துத் தீரவேணும். அப்படிக் கனுசரியாமல் விடும் பெரியோரால், உலகங்கெடும். அதனாற்பாவம்

படும். ஆசைவிட்ட பெரியோனைக் கொண்டாடும் ஈஸ்வரனுக்கும் உப ராதியாவன். ஞானமுதல்வர்களுக்கு அவசியமில்லாமற் போனு லும், உலகத்தாருக்காக தானடைந்து காட்டி சிஷ்டாசாரத் தன்மை யாய் செய்விக்கவேண்டும். அதைக்கண்ட பூலோகத்தார் ஓ, பெரியோ ர்களெல்லாம் அனுஷ்டிக்கின்றார்களே யென்றுபேய் போல விழுந்து பிடிவாதத்திற் றேறுவார்கள். சகலமுந் தெரிந்ததானுவே, உமக்கு நான் சொல்லவேண்டிய தென்ன? வேதத்திற்குரிய தேவரீரோ வேதவி தியை இகழாமல் மூன்றாச்சிரமத்தை யனுசரித்து படிப்படியாக ஏறி நான்காவது ஆச்சிரமம் நன்னெறி நிலையிலிருப்பதே உத்தமமென்று ஜனகர் நவில, சுகப்பிரம்ம யோகி சொல்லுகின்றார், தலைமைஞானம் பெற்ற தபோதனர்கள் இவ்வுலகத்தி லிருக்குங் காலத்தில் தங்களுடலை எவ்விதமாய் வைத்துக்கொண்டிருப்பார்கள். அந்த முறைமையை எனக்கறையவேண்டு மென்ன, அறுபகைகளையுங் களைந்த இறையாகிய ஜனகர் இசைக்கின்றார். உண்மை ஞான முணர்ந்த உத்தமர்கள் எந்த ஆச்சிரமத்தி லிருந்தாலும், ஒருயிரைக் கொல்லார்கள். இடையூறு செய்யார்கள். குற்றங்களைத் தேடார்கள். குறை எவருக்கும் புரியார்கள். கர்மிகளைப்போல பந்தங்களிற் பட்டுழலார்கள். பற்று வையார்கள். மனமும்வாக்கும் வேறுபடார்கள். உள்ளும்புறம்பும் ஒத்திருப்பார்கள். எல்லா உயிரிடத்திலும் பிரியங்கொண்டு ஒருமைப்பட்டிருப்பார்கள், ஒரு பதார்த்தத்தின் பேரில் விருப்பும் மற்றொருபதார்த்தத்தின்பேரில் வெறுப்பும் வைக்கமாட்டார்கள். உபகாரம் பண்ணினவர்களென்று பட்சமும் அபகாரஞ் செய்தவர்களென்கிற அபட்சமும் நினையார்கள். ஒருவர்மேற் கோபமும் இன்னொருவர் மேற சந்தோஷமும் காட்டார்கள். ஒருவேளை நினைப்பும் பின்னொரு வேளை மறப்புமாயிரார்கள். என்றைக்கும் ஒரே நினைப்பும் ஒரே சீருமாயுறுவார்கள். இறப்புப்பிறப்பு என்கிற அறியாமையை அகற்றி நன்னடக்கையுடையவர்களை மெய்ஞ்ஞானிகளென் றறிந்து விளம்புவது தகும் இன்னுஞ் சொல்லுகிறேன் இரும்புவேறு, பொன்வேறென் றெண்ணார்கள் கரும்பும், வேம்பும், சமமாய்க் கொள்வார்கள். மகமேருவையும், சிறுயதுரும்பையும், சரியென்று மதிப்பார்கள். அதிதீவிரபக்குவமாய் நிர்மலசுத்த பரிபாகமாய், அரும்பாய், மொக்காய், அலராய், மலராயிருக்கப்பட்ட, மோட்ச வீட்டைக்கண்டு அதனது முடிவைத்தெரிந்தவர்கள் பெரியோர்கள். இதுவுமல்லாமல், ஒருவர் திட்டினாலும், தோத்திரம் பண்ணினாலும், புகழ்ந்தாலும், இகழ்ந்தாலும், அடித்தாலும், இடித்தாலும், சீறினாலும், தூறினாலும, உடலு

க்கேயன்றி உயிருக் கொன்றுமில்லை யென்று கோபங்கொள்ளாதி ருப்பார்கள். லௌகிகத்திலழுந்தி மயங்கார்கள். தவப்பிரம்மானந்தத் திற் றங்கியிருப்பார்கள். இப்பேர்ப்பட்ட நல்லஆத்மாக்கள் முன் சொல்லிய நான்காச்சிரமத்தை நண்ணி இருந்தாலும், நாடாதிருந் தாலும், அதனால் அவர்களுக்கு யாதொரு குற்றமுமில்லை. அவ ர்களிச்சா சுதந்தராள் ஓ ! சுகப்பிரமமே இது தான் ஞானவர ம்பு; இதற்காதாரம் மோனவரம்பு. ஞானவான்கள் தேகத்தை எ ப்படிவைத் திருப்பார்களென்று நீர்கேட்ட படியால், இப்போது ரைத்த இயற்கையின்படியே தேகாபிமானஞ் சிதைத்து உடற்சார் பில்லாமல் தேகம் பிராரத்துவ கன்மபோகத்தைப் புசிப்பதற் கெ டுத்ததென்று பூர்த்தியாய்த் தெரிந்துகொண்டு உடலுக்கு பலம் இளப்பம் என்னவந்தபோதிலும் தன்னபிமான மென்பதில்லாமல் புளியும் ஓடும்போல் ஒட்டாமனின்று, எல்லாவற்றிற்கும் ஆதா ரம் உடலென்று காட்டி உண்மை ஞானத்தால் நீயாரோ நானாரோ வென்று விட்டு மீந்திருப்பார்கள். இனிமேல் உன்றந்தையாகிய வியா சரிடத்திற்குச் சென்று தன்னைத்தானறியுந் தன்மையை விசாரித்து சம்பந்தமில்லாமல் தனியே இருப்பது தகுதியென்று ஜனகமஹாரா ஜன் சொல்லி சரணம் புகுந்தபோது பிரம்மரூட தீபமாகிய சுகயோ கி யானவர் கிருபாநோக்கமாக ஆசிர்வதித்து ஆசாரியபக்தி செலுத்தி சிலவு வாங்கிக்கொண்டு வேதவியாசரிடத்திற்கு வந்துபணிந்து, ஜன கரிடத்திற்போய்க் கண்டதுமுதல் இப்போதிவ்விடத்தில் நின்றது வரைக்கும் நடந்த விர்த்தாந்தங்களைச் சொல்லி தான்கேள்விப்பட்டு வந்த ஞானசாஸ்திரத்தி னலத்தைச் சொன்ன சுகயோகியை வேதவி யாசர் குளிர்ந்த முகமாய்க் காருண்யப் பார்வையுடன் கடாட்சித்து, அப்பா ஞானசாஸ்திரங்களெல்லா நன்றாயறிந்துக்கொண்டாய் நீ இங் கேதானே இருவென்று சொல்லவும் அவ்வாறே தகப்பனுடைய சீட ர்களாகிய சுமந்தர், பயிலவர், வைசம்பாயனர், இம்மூவருடனிருந்து செயல்வேறு, சிந்தனைவேறில்லாமல் வேதமோதிக் கொண்டிருந் தார். இப்படி இருக்கிற நாளில் அருமையான வேதசாஸ்திரபுரா ணங்களை எல்லாம் ஐயமறப்படித்திருக்கின்ற சீடர் மூன்று பேரும் ஆசாரியருக்குப் பிரதக்ஷணம்பண்ணி நமஸ்கரித்து சிரத்திற்கரத் தைக்குவித்து சுவாமி! தேவரீரிடத்திற் கற்றுக்கொண்ட வேதமுத லியவற்றை தங்களுடைய போதனா சக்திப்பிரகாரம் பூலோகத்திலி ருக்கின்ற வர்களுக் கெல்லாஞ் சொல்லிவைத்தால் லோகோபகா ரமாயிருக்கும். தங்களுக்கும் பிரதிஷ்டையுண்டாம் ஆதலால், அனுக்

கிரகம்பண்ணவேணும் ஐயா வென்று வணங்கிக் கூறவும்; மலரகிதமான வேதவியாசர் நகைத்து உலகத்திலுள்ள யாவருங்கடைத்தேறும்படியாக மிகவும் நல்லவார்த்தையைச் சொன்னீர்கள், இது முக்கியஞ்செய்ய வேண்டிய காரியந்தான், மேலும் நல்ல நூல்களைக்கற்றவன் தன்னைப்போல் பல்லோரும் நல்லவாராகப்போதித்து வைக்கவேணும், அப்படிக்குச் சொல்லிவையாதபேர் படியாத மூடரிடத்திற் பயன்பட்டு அவர்கள்செய்த தவங்கெட்டு குறுகிக் குன்றுவார்களென்றிருக்கின்றதை நீங்களோதி யுணர்ந்திலீரோ அதற்கொரு திருஷ்டாந்தம் பாருங்கள் பஞ்சப் பிரணவ மந்திரமாகிய மௌனத்திலிருக்கின்ற ரிஷிகள், மோட்சமடையும் போது தன்னைச்சூழ்ந்த சகலருங் கதிபெற வேணுமென்று உபதேசித்துப் போகிறார்கள், மறுவற்றஞான இருதயர்களாகையால் தன்னைப்போல் மற்றையரையும் பார்க்கிறார்கள். நீங்களுமப்படியே போதித்து உபசரிக்கவேண்டியது முறைமையே, என்று புகன்றவேத வியாசரைப்பார்த்து அப்படிக்குத்தருமமிருந்தாலுந் தங்களுடை பேரருளைப் பெருந்துணையாகக் கொண்டு போனால் எங்களுக்குப் பெருமையுண்டு ஆதலால் விடை கொடுங்களென்று கேட்டார்கள்.

அச் சொல்லின் பொருளை யறிந்த வியாசர் மன மகிழ்ந்து ஓ அன்பர்களே! எல்லா நூல்களையுஞ் சாம்பிரதாயமாய்க் கற்று என்னிலுஞ் சிறந்த கீர்த்திபெற் றிருந்தும் நாமேபோய் உலகத்திற் சொல்லிவைப்போமென்று வித்தியாகர்வம் படையாமல் ஆசாரியருடைய அருளைப்பெற்று அப்பால் போதிக்கவேணு மென்கிற அன்புடனே இருந்தீர்களாகையால்; நீங்கள்தான் எனக்குகந்தபிள்ளைகள். இப்பொழுதுதான் சந்தோஷப் பட்டேன் என்னிடத்திற் கற்ற நூலும் கேட்ட கேள்வியுஞ் சிறக்க கடவது என்று புகன்று மூன்று பிள்ளைகளையும் எடுத்து மார்பிலணைத்து, முத்தமிட்டு, சுகனைப்பார்க்கிலும் அதிகமென்று சொந்த பந்ததொந்தங் காட்டி, பூலோகத்தில், வேதங்களை விரிக்கும்படிக்கு அனுப்பிவிட்டு அகந்தையற்றிருக்கும் போகியாகிய வேதவியாசர் யோகியாகிய தன் குமாரனுடனே பர்ணசாலையிலிருந்தார். அப்போது சரிகமபதனிசவென்னும் இசையை யாழிலேற்றி வாசிக்கப்பட்ட நாரதர்வந்தார் அவரைக் கண்டு பெரியாருக்குச்செய்ய வேண்டுவன வெல்லாம் பிசகாமற் செய்து பூசித்த வியாசரை நாரதர் நோக்கி சுவாமி வேதவியாச மூர்த்தியே நானிந்த வனத்திற்கு வரும்போதெல்லாம் சப்தமேக முழக்கம் போலும் சமுத்திர இரைச்சல் போலும் சற்றேனு மோயாமல் சர்வதா முழங்கிக்கொண்டி

ருக்கின்ற வேதகோஷ்டம் இப்போது தங்க ளாச்சிரமத்தில்மு
ழங்காம லிருப்பதற்குக் காரண மென்ன? உம்மிடத்தில் வேரு
ன்றி இருக்கவேண்டுமே, தேவாள் வேதவித்தே இது என்ன நிமித்த
த்தில் விட்டிருக்கின்றது வேதவியாசரென்று மிகுந்த பெயரைப் பொ
ருந்தியவித்தகனே சொல்லுமென்று வினவ, வியாசர் சொல்லுகிறார்.
கர்மபூமியிலுள்ள பிராமணருக்கு வேதமோதி விக்கும்படிக்கு என்
னிடத்தில்வாசித்த சிஷர்களை அனுப்பி வைத்தேன், இவ்விடத்திற் ப
டிப்பவரொருவரு மில்லாமையால் வேதம்ஓதுகிற சந்தடியற்றிருக்கி
றதென்றுபாராசர் குமாரர் வேதவியாசர் பேசிய பின்னும் ஓய் பெரியவ
ரே உம்முடைய கடாட்ச வீட்சண்ணியத்தினால் என் பிள்ளையாகிய
சுகனும் நானும் பூமியெல்லாந் திரிந்து வண்டுபோற் சுழன்று வேதங்
களைப்போதிக்கப் போகிறோம், அப்படிக்குப் பிரயாசை எடுத்துக்கொ
ள்ளாவிட்டால் வேதம்பரவுகிறதா யிருக்கவில்லை யென்று சொன்னார்.
அந்தப்பேச்சைக் கேட்ட நாரதர் அப்பிரகாரம் சொல்லிப் போதித்துத்
திரிய வேண்டியது முறைமைதானென்று விடை பெற்றுக் கொண்டு
போய்விட்டார். இப்பால் வியாசர் சுகயோகியுடன் கடல்சூழ்ந்த கா
சினியை வலமாகத்திரிந்து பிள்ளைக்கும் பூமியிலுள்ள பிள்ளைகட்கும்
போதித்து,பின்னை ஆகாச மார்க்கத்திலும் தான் பூமியிலும் வேதாத்
தியனம் பண்ணிவைத்து சாங்கோபாங்கமாய் நான்குவேதமும் சுக
யோகிக்கு வரும்படியாகச் செய்து வேதாந்த இரகசியமும்விளம்பிய
ருளினார். பிற்பாடு ஆகாசகங்கையில் ஸ்தானமாட வேணுமென்று
பிள்ளையை ஒருபக்கத்தில் நிற்கவைத்து ஸ்தானஞ் செய்யப் போனார்
இப்பால், சுகப்பிரமம் ஒரு சுசியாகிய பூமியிலிருந்து வேதபாராய
ணம் பண்ணும்போது சிவந்த சடாமகுடதாரியாகிய நாரதர் வந்து சு
கனைப்பார்த்து அப்பா நீ பூரண சப்தமாய் தொனியாய் நாதமயமாய்
இதலளிதமாய் வேதமோதுவதைக் கேட்டு உன்னைப்பார்க்கவந்தேன்,
மிகவுஞ் சந்தோஷமடைந்தேன், ஆனந்தமாயிற்று உனக்கு வேண்
டிய காரியத்தை விரும்பிக் கேட்டால் நான் கொடுக்கிறே னென்றார்.
சுவாமி! எனக்கு வேறென்றும் வேண்டாம் என்னை இன்னொன்ற
றிந்து அப்பால் என்னை என்பதும் அறிந்தவ னென்பதும் அறியத்
தக்க தென்பதும் அற்று சுகமுற்றிருக்கும்படிக்கு வரங் கொடுக்கவே
ண்டுமென்று வாழ்த்தினான்.அதைக்கேட்ட நாரதர் இவருக்குப் போ
திக்கவேண்டுமென்று தன் மனதில் நினைத்து பருவகாலம் பார்த்திரு
ந்த பொருளைக் குறித்துக் கேட்டபடியால் இப்பொருளுக்குரியவன்
இவனே யென்று வேதமுடிவின் சாரத்தை விளம்பத் தொடங்கினார்.

47. நாரதர் சுகருக்கு ஞானோபதேசஞ் செய்தல்.

வேதாந்த சாரமறிவதற்கு மிகு மோகியாகிய சுகயோகியே கேளும், வர்ணாச்சிரமம் நான்கு, அவை யாதென்னில், பிரம க்ஷத்திரிய வைசிய சூத்திரரென்பது, இந்நான்கினுடைய பேதமாவது அஞ்ஞானப் போர்வையல்லது வேறில்லை உயர்ந்த சாதி இதுவென்றும் அதுவே முக்கியமென்றும் தாழ்ந்த சாதி இதுவென்றும் இதுவேதாழ்மையொன்று மில்லை அஞ்ஞானமகன்ற விஞ்ஞானம் எந்தஇடத்தில் விளங்குகிறதோ அதுவே பிரதானம், கர்மத்தினாற் சாதி யல்லது சென்மத்தினாற் சாதி இல்லை. சாதி என்பது பிறப்பு, உயர்வு தாழ்வு பேசுவதெல்லாம் அஞ்ஞானம், பிரபஞ்ச மயக்கம். பிரபஞ்சமாவது இல்வாழ்வோன் இவன் நாட்டில் கிரகத்தாசிரமங் கட்டிக்கொண்டிருப்பவன் இது இரண்டு காலுக்கும் போட்டுக்கொண்ட விலங்குகள் பிள்ளைகுட்டி யென்னுங் கடையாணியினாலிறுக்கித் தறிக்கப்பட்டது. பிரமசாரியாச்சிரமம், வானப்பிரஸ்தாச்சிரமம், இவ்விரண்டும் பெருமை யுள்ளதென்று, பெரியோர்கள் ஒப்புக்கொள்வது, அதிலும் பயனில்லை, அப்பால்யதியாச்சிரமத்தில்தயாரசமும்சத்தியமுமிருக்கவேண்டியது. இவ்விரண்டில் கடுகத்தனை தப்பிப்போனால் மலையத்தனை நரகம் வந்து முன்னிற்கும். தெரியாமற் றவறினவனுக்கும் ஒருபங்கு தண்டனை ஆனபடியால் வண்டியுருளைப்போல் கீழதுமேலதாய் சுழன்றுக்கொண்டிருக்கப்பட்ட செனனமரணமானது தீராது. அது என்றைக்குத் தீருமென்றால் நானென்பது நசித்து தானென்பது தவிர்ந்து ஆணவமலமகன்றதானால் சராசரகோடி சகலாத்மாவும் தானேயல்லது வேறில்லை. சமஸ்ததேகாதிகளெல்லாஞ் மாயை சம்பந்தம் ஆத்மாபரிசுத்தம் மாயாமயக்கத்தி லகப்பட்டு மருண்டு கிடக்கிறது, மாயைவசத்தாகிய உடலுக்கும் களங்கரகிதமான உயிருக்கும் சம்பந்தமில்லை யென்று இது என்றைக்கு வேறாகக் காண்பானோ அன்றே மோட்ச, மென்றறிக அப்போது நிராமயமும் நிட்களமும் நிர்விகல்பமும் நிற்குணமும் தானேயாவான், அப்படிக்கு இருளும் வெளிச்சமும் இல்லாத இடத்திலிருந்து பார்க்கில் சகலமும் எளிதில் வெளிச்சமாய்த் தோற்றும், அப்படிப்பட்ட ஞானசொரூபியாய்த்தானிருக்க அதை விட்டுவிட்டு மாயாமயக்கமாகிய உலகத்தைத் தானென்றெடுத்து மேற்போட்டுக்கொண்டு தனக்குரிய ஞானசொரூபத்தை மறந்து எத்தனைநாள் திரிகின்றானோ அத்தனைநாளும் தன்னைத்தானறிகிற தெளிவு வரமாட்

டாது; பிரபஞ்சவாஞ்சை மயக்கத்திற் படியாமல் தற்சுபாவ தற்சொரூபமான சுகயோகியேயென்று ஞானோபதேசம் பண்ணிவைத்து அநுபோகமுங் காட்டியபோது சோதிவிளக்க சுத்தஞான சமுத்திரத்தில் மூழ்கி சனனக்கடலைத் தாண்டி எங்குந்தானாகிய பிரம்மஞானம் விளங்கி பற்றின்றி யுற்ற உத்தமச் சுகயோகியானவர் சுற்றவுமடைய உத்தரதிசைக்குப் போகவேணுமென்று வியாசனைப் பணிந்து விடைகேட்டார்; அப்போது வேதவியாசர் அப்பா மகனே அடா சுகனே என்னைப்பிரிய மனமெப்படிக் கிசைந்ததோ பிரியமானவனே யென்று பேசியகாலையில் நாரதருணர்த்திய ஞானநிர்க்கிரியையை எடுத்துப் பலபலவிதங்களைக் காட்டவும் அதைக் கேட்டு பிரம்மித்து புகழ்ந்து மகிழ்ந்து சுகுணமான பிள்ளை தன்னை விட்டகன்று போகிறானே யென்கிற கிலேசத்தால் பெருந்துயரப்படுகிற பிதாவை ஏகசொரூபமாக காட்டித் தேற்றி பொருமலைமாற்றி அதிதீவிரமாகிய யோகப்பரியேறி பூலோகத்தைப் பிரிந்து ஆகாயமார்க்கத்திற் போம்போது மேலோக வாசிகளாகிய தேவதைகள் கண்டு அநேகங்கோடி சூரியப்பிரகாசம்போலச் சுகப்பிரமம் இதோ போகிறாரென்று பூரித்து ஐயோ இவர் குலஞ்செய்த நலம் யாதோ? வேதவியாசரிழைத்த தவமெத்தன்மைத்தோ இந்தப்பிள்ளை பிறவிக் ஞானோதயமூர்த்தியாய்ச் ஜனித்ததேயென்று யாவருங் கரத்தைச சிரத்திலேற்றி சிவசிவவென்று தியானித்து தரிசனங்கண்டு தெளிவுகொண் டிருந்தார்கள். சராசரங்களியாவுந் தானாயிருக்கப்பட்ட சுகயோகியும் பிரசண்டமாருதவேகம் பின்னிட்டுப் போகும்படியாய் தான் முன்னிட்டு வடமுகத்தை நாடிவருகிற வேளையில் சகல சராசரங்களையும் பார்த்து உங்களிலே ஒருவன்தா னிவனென்றுரைத்து லோகோபகாரத் தந்தையாகிய வேதவியாசர் இந்தவழியே வந்து மைந்தாவென்று இவன் பெயரைச் சொல்லிக் கூப்பிடுவாராகில் நீங்க ளியாவரும் ஏன்ஏனென்று சொல்லுங்களென்றியம்பி சோதிமயமாய்ச் செல்லும்போது ஆகாயமளாவிய சிகரங்களை யுடைய மலைச் சுனைகளில் தீர்த்தமாட வருகின்ற தேவஸ்திரீகள் வஸ்திரங்களைக் களைந்து வைத்து நிர்வாணமாய் நீராடிய காலையில் அந்தவழியாய்ப் போகிற சுகயோகியைப் பார்த்து நாணம் வெட்கம் அச்சமில்லாமல் தங்களிச்சையின்படிக்கு ஸ்நானம் பண்ணிக்கொண் டிருந்தார்கள் சுகப்பிரமம் விகல்பமில்லாமல் பிரம்மக்ஞானத்துடன் செல்லுகின்ற விசையினால் பர்வதங்கள் மலைகள் விருட்சங்கள் இதுகளெல்லாம் அசைந்தும் முறிந்தும் அறுந்தும் ஒடிந்தும் படிந்தும் பொடிப்பொடியாய்ப் போகத்தக்கதாகமகாமேருவுக்கு

வடபாரிசத்திற் புகுந்துபோய்விட்டார். இப்பால் இரணிய கருப்பனுக்குச் சமானமான வேதவியாசர் ஒப்பில்லாத புத்திர சோபத்தினால் அரணியிலுற்பவித்துப் பிரிந்துபோன மகன் சுகன்போன வழியைத் தொடர்ந்து போகிறபோது இமையாநாட்டத் தவர்கள் எல்லோரும் பார்த்து ஐயா! உம்முடைய குமாரன் இளஞ்சூரிய பிம்பம்போல் ஆகாயமார்க்கமாய்ப் போனார். அவர் போன வேகத்தில் பர்வதங்களுங் குலுங்கி பட்சி மிருகங்களுங் கலங்கி விருட்சங்களும் விலங்கிப் போய்விட்டன, இன்னேரம் நெடுந்தூரம் போயிருப்பார் நீர் நடக்கிற நடைக்கும் அவர் சென்ற வேகத்திற்கும் சரிப்படாது, நீர் அவரை எந்தநாளையிற் காணப்போகிறீர், ஏதேது கண்டுபிடிக்க மாட்டீர், பூமியிலிழிந்து போமென்றுரைக்க, அவர்கள் சொல்லையுந் தட்டி பிள்ளையைப்பற்றி பெருங்காட்டைச்சுற்றி பெருமூச்சிவிட்டு ஒருபர்வதத்திற் போயிறங்கினார். அவ்விடத்திலுள்ள சுனைநீரில் விளையாடிக்கொண்டிருந்த தேவஸ்திரீகளியாவரும் வேதவியாசரைக் காண்பதற்கு முன்னே வெட்கப்பட்டு வஸ்திரங்களினால் தேகத்தை மறைத்துக் கொண்டார்கள். அதை வியாசர் கண்டு சற்று நின்று இதற்குமுன் இந்தவழியிற்போன ரிஷியைப் பார்த்தீர்களா வென்றார், ஆமென்றார்கள் இப்போதுடுத்திய ஆடையை அப்போது தரித்தீர்களா வென இல்லையென்றார்கள், முன் சென்றவன் என்மகன் நானவனைத் தேடிவந்தேன், என்பெயர் வியாசன் அவனும் புருஷன் நானும்புருஷன் அப்படிக்கிருக்க அவன் போனபோது அச்சமில்லாம லாடிக்கொண்டிருந்த நீங்கள், என்னைக்கண்டு லச்சைப்பட்டு பட்டுவஸ்திர மூடுத்திக்கொள்ளவேண்டிய பரிசென்ன இந்தப்பேதத்தைப் பகருங்களென்று கேட்கவும், உசிதகசித உத்தமஸ்திரீகள் ஐயா, வியாசரே முன்னே போன முனிவரானவர் சுத்தமாயை யற்றவர் சொரூபக் கியானமுற்றவர், அதனால் எங்குமவரா யிருப்பாரென்றுணர்ந்து நிர்வாணதிசையினின்று ஸ்நானம்பண்ணினோம், அவர் மாயாப் பிரபஞ்ச மயக்கறுத்த ஞானவானானதால் எங்களுக்கு அவரைப்பற்றிப் பேசவேண்டிய சம்பந்தமில்லை. எங்களை அவர் தெரிந்தவர், நாங்கள் அவரை அறிந்தவர்கள், நீரவ்வாறல்ல. இப்பிரபஞ்ச மாயையின் மூழ்கிய பெருங்கியானி உம்மைப் பார்த்தவுடனே அங்கம் பேதித்து வெட்கமேலிட்டு புடைவையை உடுத்திக்கொண்டோ மென்றார்கள். அம்மொழியைக்கேட்டு வேதவியாசருக்குத் தெளிவுபிறந்து நிரம்பிய விசனமாய் நெடுமூச்செறிந்து பிள்ளையை நினைந்து பிரிவாற்றாமையால் பெருங்குரலிட்டு அப்பா மகனே ஐயா சுகனேயென்று கூப்பிட்டார். அங்ஙன்

நிலைத்த, மலைகள், மரங்கள், செடிகள், முதலியதும் ஓரறிவுமுதலா கிய ஆறறிவுடன் கூடிய ஆத்மகோடிகளியாவும் அண்டாடங்களும், ஏன் ஏனென்று எதிர்மொழி ஈந்தன. வியாசர் வெருண்டு நம து புத்திரனைக் கூவினால் இந்தப் பூமி முதல் மகாபூதங்களெல்லாம் ஏனென்று கேட்கிறது, இதையோசிக்கு மிடத்தில் இப்பூமியாயும் பூதபேதங்களாயும் பூதகோடிகளாயும் பரவிய பரப்பிரமம் ஒன்று, அ தை நீ தெரிந்துக்கொள்ளாமல் தகப்பனென்கிற பெருமையும் தனை யனென்கிற அருமையும் பாராட்டுகிறாயோ? பிள்ளை யார், தந்தை யார் ஆருக்கு ஆர்பிள்ளை யாருக்கு ஆர்தகப்பன் நீ வேறு நான்வேறென்ப தென்னை ஒன்றுமில்லை நாதப்பிரமம் ஒன்றென்கிற இன்று முதலெ ன்றுங் கண்டு கொள்ளென்று அறிவுறுத்துகிற மொழியாக்களும் பிற ந்ததென்று தெளிந்து தெளியாமனத்தினை யுடையவராய் செல் வனே, சிறுவனே, சேயனே, என்று தினமும் மனமுந் திகிலுமா யிருந்தார். இப்படிக்குப் பிரபஞ்ச ஆசாபாச ஆபாச மகற்றியவேத வியாசரும் புத்திரபாசப் பற்றுவிடாமல் தெய்வமே தெய்வமே எ ன்று, தியங்கிமயங்கிய நாளில் பிரம்மா, விஷ்ணு, தேவேந்திரன், முப்பத்து முக்கோடி தேவதைகள், நாற்பத்தெண்ணாயிரம் ரிஷிகள் யக்ஷகின்னரர், கருட, காந்திருவர், சௌனகாதி முனீஸ்வரர் சிவகண பூதகண இராக்ஷசகணங்களுடன் பச்சைக்கொடி படர்ந்த பார்வதிக லந்த, பவளம்போன்ற பரமசிவன் இடபவாகன ரூடராய் மான்மழு சதுர்ப்புசம் காளகண்டம் திரிநேத்திரம் சூலம் டமரகம் கபாலமு டையவர் ஆலகால விடத்தைப்பட்சித்து அரியயனாதிகளாகிய தேவர் களை ஆதரித்ததனி முதலானவர், எல்லாவற்றிற்கும் மூலகாரண முத ல்வனானவர் அற்புதவமுதனான ஆதிமூர்த்தி, கிருபா நோக்கமாய் வேதவியாச ரிடத்திற்குவந்து பெருங்காட்சியாய் நின்றபோது, வேத வியாசர் எழுந்து அநேகவிதமாக விழுந்து சாமவேதக் கானஞ்சாற்றி பரவசமடைந்து பாயுங்கண்ணீருடன் என்புநளுருகி பட்சமாகக் கூ த்தாடி தன்பிள்ளையைப் பிரிந்த வருத்தம் பாசபந்த நெருப்பு இவை களெல்லாம்பரந்தோடிப் போகும்படியாய் சிறந்த தேவாதிதேவனைப் பணிந்து எழுந்திருந்து கைகட்டி வாய்பொற்றி பக்தியுடன் புத்தி யாய்ப்பாடினார். அவ்விடத்திருந்த சாம்பமூர்த்தி வியந்து புகழ்ந்து கிரக்கம்பஞ்செய்து ஓ பேரறிவுடைய பெரியோனே நீர் பூர்வகாலத் தில் புத்திரன் வேண்டுமென்று நம்மைக்குறித்து தபசு பண்ணிய போது உமக்குவேண்டிய தென்னவென்று நாம் வந்துகேட்க பஞ்ச பூதத்தையும் ஜெயிக்கதக்க பாலகன் வேண்டுமென்றீர், நாமும் பட்ச

மாய் அநுக்கிரகம் பண்ணினோம் அவ்வாறே பிறந்தபுத்திரன் பரமா நந்த ஞானத்தைப்பெற்று ஒருவரும் பெறுதற்கரிய புகழைக்கைக் கொண்ட பெரியவராயினர். நீர் பிரபஞ்சமாயையி லழுந்திய அறிவி னரைப்போல் துன்பப்படவேண்டிய துயரமென்ன? வேதஞ் சூக்கிற வாக்கினால் மெஞ்ஞான சொரூபமெல்லாம் விளம்பியநீர் காண் முளையைக் குறித்துக் கவலைப்படுவது ஞாயமோ? இப்பிரபஞ்சத்திற் கு அதீதமாகிய ஞானத்திலிருக்கிற பேர்கள் சமூக விசாரத்திலும் தழுவி தாம்கொண்ட கருத்திற்கு தவறுதல் வாராமல் பிள்ளைப் பூச் சிபோல் பூரணகலையுடன் பொருந்தி வாழ்வார்கள். அப்படிக்கில்லா மல் பரிபூரண கியானம்பெற்ற பாக்கியனைக் கண்டுபிடிக்க வேண்டு மென்கிற மனவலிமையுடன் அவனைத் தேடப் புறப்பட்டது உமக்கு முறைமையோ? அப்படிக்குப் போனாலும் அவனுமக்கு அகப்படமா ட்டான். ஒருவேளை யகப்பட்டாலும் உன்னுடனே கலந்திருக்க வர மாட்டான். பூமி கடல் மலை மேகம் சந்திர சூரியர் முதலாகிய பிரம் மாண்ட முள்ளவரையிலும உன்பெயரும் உன்பிள்ளைபெயரும் நிலை நிற்கும் படிக்குக் கீர்த்தி தேடிக்கொண்ட மைந்தனைக்குறித்து சிந்த னைப்படுவதை மறந்துவிடு. ஆனால் புத்திரவாஞ்சையால் பிள்ளையைக் காணவேணுமென்று எப்போது நீ அபேக்ஷிக்கின்றையோ அப்போ து உன் பிள்ளையின் சாயை உனக்குத் தோன்றும்படியாய் வரங்கொ டுத்தேன், நீர் பூலோகத்திற்கு போமென்று விடைகொடுத்து தரு ம சமுத்திரதாணுவானவர் மறைந்துவிட்டார். இப்பால் வியாசர் பர மேஸ்வருடைய அனுக்கிரகத்தைப்பெற்றுதம்முடையபர்ணசாலைக்கு வந்து மனோ நிச்சயங்கொண்டு மைந்தன் பிரிவை மறந்து உலகத்தா ருக்கு உண்மை ஞானத்தைத் தெரிவிக்கவேணுமென்று ஒரு பரியா யமாய்ச் சொல்லி வேதநான்கையும் விரித்து புராணங்களையுந் தழுவி நடக்கும்படி போதித்து அவ்வாறு நடத்திக் கொண்டு வரும்போது மெய்மைக்கியானம் விருதாவாய்ப் போய்விடுகிறதே யென்று விசன ப்பட்டு, இதை யொருவருக்கும் விளம்பலாகாது ஏனெனில், நாரதர் நம்முடைய பிள்ளைக்கு பூட்டைத்திறந்து காட்டிவிட்டுப் போயினர். நாட்டைத் தழுவிக்கொண்டிருந்த நமது மகன் நல்லறிவாளனாகிய சுகன் பக்குவப்பட்டிருந்தமையால் காட்டியசோதி கற்பூரதீபம் போ ல்கலந்து பரிபூரணபாக்கியவானானன்,இனிநாம் செய்யவேண்டிய தெ ன்னை யென்று இகத்தைத்தழுவி இதற்குவேண்டிய சாஸ்திரங்களை எல்லாம் இதவா ஏர்ப்படுத்திக் கொண்டிருந்தார். சகலமானபேருங் கேட்டு அறுவகைப்பகைகளையு மறுத்து அப்பொழுதே ஞானம்பெற்

றவர்களைப்போல மகிழ்ந்து புராணவைராக்கிய புனிதரானார்கள், இந்
தச்சுக பிரம்மத்தின் சரித்திரத்தைப் படித்தபேர் கேட்டபேர் லோக
வாழ்க்கையில் மூழ்கியிருந்த போதிலும் நொடிக்கு நொடி மனத்தெ
ளிவும் அப்போது நேரிட்டிருக்கிற வியாதியும் மனோவியாதியுநீங்கும்.
தூய்மை அன்றியும் பரிசுத்தம் இரக்கமும் உடையராவார்கள். மேலும்
நாரதர் பதரிகாச்சிரமத்திற்குப் போய்ப் பேசுகிற சங்கதியைச் சொல்
லுகிறேன் கேளுமென்று காங்கேயர் பகரத்தொடங்கினார்.

48. நாரதர்பதரி காச்சிரமத்தின் பெருமை யுரைத்தல்.

ஓ! தயாளுவாகிய ஜனார்த்தனனுக்கு மைத்துனனான சதுரனே
கேளும் மூலக்கமலத்தில் முளைத்த முதல்வனான பிரமனுடைய மகன்
நாரதன் பூமண்டல மெல்லாந்திரிந்து, மகதியாழ் தாங்கிவரும் போது
பதரி காச்சிரமத்தின் வழியாய் வந்து அங்கிருக்கப்பட்ட மகானுபாவ
ராகிய நாராயண மூர்த்தியைக்கண்டு அவரிடத்திற் சென்று மதுர
வாசகமாய் இதவாய் வசனித்திருந்துக்கொண் டிருக்கும்போது
துருத்திபோன்ற அற்ப உடலை எடுத்ததற்குப் பயனென்ன வெ
ன்னில் பரம்பிரமத்தை உள்ளும் புறம்பும் ஒத்திருக்க ஏகமாய்க்
காண்பதே ஆன்மாவுக்கு உறுதியென்பதாய் பெரியோர்களெல்லோ
ரு மிசைத்திருக்கின்றார்கள். நடலைக்குற்றங்களைந்தநாராயணரே,
அந்தச்சூட்சுமத்தை அடியேனுக்கு அருள்செய்யக்கோருகிறேனெ
ன்று வினவ, நாராயணர் சொல்லுகின்றார். ஓ! நாரதரே இப்போது நீரி
சைத்தசோதியை உள்ளும்புறமும் பார்ப்பதே உண்மைஞானம். உள்
ளே என்ன ஆநந்தத்திறகண்டாயோ அந்த ஆனந்தமாகப் புறம்பிலுங்
காணவேணும். இதல்லாமல் மகாமேருக்கு வடபுறத்திற் போகிறபே
ர்களுக்கெல்லாம் சுத்தமுத்தி என்று சுருதியும். ஆகமங்களுஞ் சொல்
லுகிறது அச்சுத்தாத்துமாக்களெல்லாம் சுவேதவர்ணமாகிய அவ்விடத்
திலிருக்கின்றார்கள். அங்கிருககின்ற ரிஷிகளியாவரும் உண்மையுடை
யவர்களே யல்லது பொய்யரொன்பது சற்றேனுமில்லை, இப்படி
க்கு அளவிறந்தபேர்களிருக் கின்றார்கள். எல்லாம் சக்கிராங்கி
தனாகிய விஷ்ணுவைச சதாகாலமு நினைத்து அந்தி சந்தி, செப, மந்
திரமும் அதுவாகச்சமைத்து சலனமில்லா திருப்பவர்களும் அருட்

சோதியைத் தரிசிப்பவர்களுமா யிருப்பார்கள். ஓ! வேதமுனியே நீ ரும் போனாற் காணலாமென்று நாராயணர் சொல்ல, நாரதரும், மன மகிழ்ந்து மேருவுக்கு உத்தரபாகத்திற் சென்று நாரயணர் நவின்றகா ட்சி எல்லாங்கண்டுணர்ந்து பூலோகத்திற்கு வந்துசகலருக்கும் விள ம்பினார்,வச வென்னும்இராஜன் அந்தப்பிரகாச வெளிச்சத்தைக்கண் டு மோட்சமடைந்தான். சிவசிருஷ்டி செய்கின்ற பிரம்மகுமாரனாகிய அத்திரி மகாரிஷியும் அந்த ஒளியைப்பார்த்து உள்ளந் திருந்தினார். பிரம்மாவினாலும் காண்ப்படாத விஷ்ணுவினுடைய திருமேனிப் பொ லிவை யாவராற் காணக்கூடும், கண்டாற் பதவி,கைகூடும், அமலமா யிருக்கப்பட்ட சுவேதவனத்து ரிஷிகளல்லாமல் மற்றொருவராலுங் காணக்கூடாதென்று வீஷ்டுமர் விளம்பினார். இராஜவிரோதயனாகிய தருமராஜன் ஐயா, கிருதார்த்தனானேன் சகல ஜனசமூகங்களுக்கும் பொருந்தும்படியாய் சமமான தருமமொன்று சொல்லவேண்டும் அ ந்தத்தருமத்திற்கு ஒன்றும் நிகரில்லாமலிருக்கவேணும், என்றென் றைக்கும் நிலையான காரியங் கொடுப்பதா இருக்கவேணும் சொல்ல ப்பட்டது மோட்சம் வரத்தக்க தாயிருக்கவேணும், பிராணிகள் அ தையனுஷ்டிப்பதற்குச் எளிதாயிருக்கவேணும், அப்பேர்ப்பட்ட தரு மமாக ஒன்று ஆராய்ந்தெடுத்துச் சொல்லுமையா வென்று கேட்க, விரதசீல வீஷ்டுமர் வியந்து, புகழ்ந்து சொல்லுகின்றார்.

49. தருமங்களுக் கெல்லா மேலாகிய தருமமுரைத்தல்.

முன்னொரு காலத்தில், நாரதர், தேவேந்திர னிடத்திற்குப்போ கும்போது அவனிவரைக்கண்டு எதிர்கொண்டு பிரதக்ஷண நமஸ்கா ரஞ்செய்து, ஆசனத்திலிருத்தி சோடசவுபசார பூசைபுரிந்து, சுவா மிகளே இங்குதேவரீர் எழுந்தருளுவதற்கு அடியேன் என்ன தவ மிழைத்தேன் நானின்று பிழைத்தேனென்று தோத்திரம்பண்ணி ஆ சீர்வசனம் பெற்றுக்கொண்டு நின்றான், அவனைச் சிங்காசனத்திலுட் கார்ச்சொல்லி ஒருவருக் கொருவர் க்ஷேமவிசாரணை செய்துகொண் டிருக்கும்போது இந்திரன் ஐயா,நாரதரே பூமியில் அற்புதங்களேதா கிலு முண்டோ அப்படிக்குண்டானாற் சொல்லுமென்று தூண்டினா ன். அந்த இந்திரனை நாரதர்பார்த்து உண்டாயிருக்கிறதென்று சொல் லுகிறார்,ஓ! வச்சிராயுதனே,உலகத்தாரைக் கடைத்தேற்றிவைப்பதற்

காக கங்கைக்கரையில்பத்மநகரமென்றொருபட்டணம் உண்டு அதில்,
பிருகு வென்னும் பிராமணனிருக்கிறான் அவன் சகலகோடி பிராணிக
ளையும் தன்னுயிர்போற்பார்க்கப்பட்ட தயாரசகுண முடையவன், நித்
திய சத்தியவிரதன் யாவரும் நல்லவனென்று கொண்டாடப் பெயர்
பெற்றவன் கோபத்தை தச்சோபித்தவன் பெருமையான உத்தமஸ்திரீ
யை மணந்து பிள்ளைகளைப் பெற்றவன், வந்தவிருந்துக் குபசரித்து
இனிமேல்வரப்போகிற விருந்துக்கு எதிர்பார்த்திருப்பவன், பாக்கிய
த்திலும், யோக்கியத்திலும், சிலாக்கியமானவன். நோயற்றவாழ்வு
டையவன் இப்படிக்கொன்றுலொன்று குறைவில்லாமல் நிறைவாக
வாழ்ந்து வருகிற நாளையில், தருமசாஸ்திரங்களையும் நீதிசாஸ்திர
ங்களையும் படித்து, அதனுடைய நுட்பா நுட்பங்களை வடித்து தே
ர்ந்து தெளிந்து, அநேகதருமங்களில் எது ஒன்று மாத்திரம் பரம
தரும மென்று முதன்மை முக்கியம் அறியவேண்டு மென்று
மெத்தவுஞ் சாஸ்திர விசாரணை செய்து, மேலோராகிய மெய்ய
றிவோர்களையுங்கேட்டு ஒருவருந்தெரியச் சொல்லாமையால் கிரகஸ்
த்தாச்சிரமத்திலேயே வாழ்ந்து வந்தான். இப்படி நெடுநாள் கடந்த
பிற்பாடு ஒருநாள் அவரிடத்திற்கு ஒருரிஷியீஸ்வர்வந்தார் அவரைக்
கண்டு வணங்கி புட்பார்ச்சனைபுரிந்து, அன்னவாகனக் கடவுளுக்கொ
ப்பானவரோ வாருமென்று உபசரித்து போசனமுண்பித்து அவரால்
மங்களாசனம் பெற்று, சுவாமி தருமங்களில் மேன்மையாகிய மேலா
ன தருமமென்ன அதை எனக்குத் தெரிவிக்கவேண்டுந் தேவனே
யென்று சிந்தித்தார். அந்தப்பெரியவர் சொல்லுகின்றார் அப்பா பல
நூல்களும் பலவாறாகப் பேசியிருக்கின்றது, உலகத்தில் சிறுதுபேர்
சத்தியமென்றும் சிலர்தயாரச மென்றும் சிலர் கொல்லாமை யென்
றும், பலர் விருந்தினரொன்றும் சிலர் உபசார மென்றும் பலர் வேதவி
தியாகிய ஆச்சிரமங்களிற் சொல்லி இருக்கப்பட்ட தருமமென்றும்,
உள்ளங்கை நெல்லிக்கனிபோல் உள்ளும் புறம்பும் ஒத்திருகின்ற
உண்மைப் பொருளென்றும் பேசுவார்கள். அப்படிக்கிருக்க தருமங்
களில் இன்னது மேலாகிய தருமமென்று விளம்புதற்கு நான் பாத்
திரனல்ல, ஆனாலும் குற்ற மில்லா நற்றவங்களைச் செய்கின்ற நைமி
சாரணியத்திற்குப் பக்கத்தில் கோமதியென்னுந் தீர்த்தக்கரைக்கடு
த்தபத்மதடாகயென்னு நகரத்தில்பத்மனென்னும் பேர்பூண்டமகத்து
வமுள்ள சர்ப்பராஜன் துரைத்தனம் பண்ணிக்கொண்டிருந்தார். இல்
லறமல்லது நல்லறமல்ல மென்னுஞ் சுருதிவாக்கியத்தைப் அவர்பிடி
த்து அதற்குவேண்டிய கருவிநூல்களெல்லாம் வாசித்து கிரகஸ்தாச்

சிரமத்தைத்க்கிரமமாய்நடத்திவந்தார்.அவர் மகத்தாகியதரும சொரூபி நித்தியப்பிரமாணத்திலே இருக்கப் பட்டவர், ஆநந்த சமுத்திரத்தைக் கண்டிருக்சப்பட்ட பேர்களுக் கெல்லாம் புண்ணிய தருமங்களை விரித்துரைக்கப்பட்டவர், நல்ல மகாத்மாக்கள் தபோநிதிகள் பிதுர்க்கள் முதலியபேர்களுக்குப் பூசை பண்ணப்பட்டவர், அவருடைய பெருமையை ஒருவராலும் அளவிட்டுச் சொல்லப்படாது, அவருடைய ரூபம் சர்ப்பரூபமென்று நினையாமல் அவரிடத்திற்குப்போய்நீர்சேட்க வேண்டிய சந்தேகங்களை நிவர்த்திபண்ணிக்கொண்டு வரலாம் அவருனக்குச் சொல்லுவாரென்று புகன்று தன்னுச்சிரமத்திற்கு ரிஷியீஸ்வரர்போனுர். அவர்போய்விட்ட வுடனே இவருக்கு ஆசையும் அன்பும்மேலிட்டு பத்மனென்னும் பாக்கியவானைப் பார்க்கவேண்டு மென்று பக்திமேலாய் தன்னுடைய பெண்சாதி பிள்ளை, பந்து மித்திராள், யாவரையுங் கூட்டி அவர்களுக்கு நல்லவார்த்தை சொல்லி இந்தவர்த்த மானங்களைத் தெரிவித்து சந்தோஷமாக அவர்களிடத்தி லுத்தரவுபெற்றுக் கொண்டு மகாரிஷி கூறிய அடையாளப் படிக்குத் தேடிச் சென்றுன், இவன் அவர் வீட்டுக்குப் போனபோது அந்தப் புண்ணியனுகிய பதுமன் வீட்டிலில்லாமல் அப்புறம் போயிருந்தபடியால் அந்த நாகராஜனுடைய,பெண்சாதி, இந்தப் பிராமணனுக்கு எதிரில் வந்து பாதபூசை பண்ணி அர்க்ய பாத்திய அர்ச்சனையும் புரிந்து வீட்டுக்குள் அழைத்துப் போய் ஆண்டவனே தேவரீர் வந்த காரியம் யாதோ அடியாளுக்குத் தெரிவிக்கவேண்டு மென்று நமஸ்காரஞ் செய்தாள். இந்தப் புண்ணிய குணவதி செய்த உபசாரத்தினுல் இவள் புருஷன் இன்னிலையுடையவ னென்றும் இவர்களின் இல்லறதருமம் நல்லறமாமென்றும் நிதானித்து வேதங்களை யாராய்ந்த வேதியன் மிகப் பயந்து வெருவாய் நயந்து அம்மணி சிலசந்தேகங்களை உன்னுயகனுல் அறிந்துக்கொள்ள வேண்டிவந்தேனென்றுன். அதுகேட்டு அந்த அம்மன் சொல்லுகிறுள் ஐயமோ என் கணவர் வாரிச நண்பனுகிய பகவானிடத்திற்குப்போ யிருக்கின்றனர், அவர் வருவதற்கு எட்டுநாள் செல்லுமென்று அதிகபத்தியும் அன்பும் பாராட்டி சொன்னுள். வந்த பிராமணன் அதைக்கேட்டு அப்படியே வரட்டும் அவர் வரும்வழியிற் காத்திருந்து அழைத்துக்கொண்டு வருகிறேன் அல்லது அவர் வந்தபிற்பாடு வருகிறேனென்று மகா பதிவிரதையாகிய மடமாதுக்குச் சொல்லி, அவர்கள் வீட்டை விட்டுப் புறப்பட்டு அவசரமாக நடந்து அவர்வருகிற வழியிலிருந்து அந்த மகானுபாவர் வந்து தரிசனங் கொடுக்கிற வரைக்கும் உபவாசவிரத மிறைப்போமென்று ஆறுநாளி

ருந்தார். அதை யந்த உத்தமியறிந்து இந்தப்பிராமண ரிஷியினிடத்தில் வந்து கர்த்தனே நான்குவேதமுங் கலைகண்டிருக்கிற நாயகத் தூய்மைவாய்ந்த நாதனே, அடியாளுக்கு அன்பாகிய நாயகன் அனுமதி ஆஞ்ஞையிட்டிருப்பதுஎன்னவென்னில்,நம்முடைய ஆச்சிரமத்திற்கு யாவரேனும் பெரியவர்கள்வந்தால் அவர்களுக்குச் சோடசோபசாரம்பண்ணி அவர்களிஷ்டப்படிக்கு அன்னங்கொடுக்கச் சொல்லிப் போயிருக்கின்றார், அப்படிக்கிருக்க தேவரீர் இவ்விடத்திற் கெழுந்தருளியும், அமுது கொள்ளாமல் உபவாசமா இருந்தால் முறைமையாகாது, மேலும் நாயகனால் எனக்குக் குற்றம் வந்து சம்பவிக்கும் அதல்லாமலும் எங்களுடைய இல்லறதரும நியமமுங் கெட்டுப்போம், நானும் நாயகனும் நாகத்திற் கிடமாவோம்,ஆதலால் அடியாள் அன்னம் எடுப்பித்துக்கொண்டு இவ்விடத்திற் கு வருகிறேன், தேவரீருக்கு இஷ்டமான மட்டும் பிட்சை ஏற்றுக்கொண்டு ரட்சித்து எங்களைக்கடைத்தேற்றவேண்டும் கண்ணருணிறைந்த கற்பகமேயென்று பலவாறு இனியவசனங்கூறி, அவருடைய தருமபத்தினிக்கும் பத்தத்தலையாய் வேண்டிப்பணிந்து உபசரித்தாள். அதற்கந்த பிராமணன் அருந்ததியிலும அதிக புகழ் பொருந்தி வருந்தியபெருந் திருவனைய பெண்கணாயகமே உன்புருஷனெங்கே யென்று கேட்டபோது சூரியனிடத்திற்குப்போ யிருக்கின்றார் வருவதற்கு ஒருவாரம் செல்லுமென்று வசனித்த அப்போதே அவரைக் காணுகிற பரியந்தம் புசிப்ப தில்லையென்று சங்கல்பம் பண்ணிக் கொண்டு உபவாச மிருந்தேன், அந்த விரதங்கெட உமது வார்த்தைக் குடன்படேன், அன்னமும் அருந்தேன் உன்னுடைய காதலன் எட்டாம் நாள் வாராவிட்டால் ஒன்பதாநாளுதய முதற்கொண்டு உண்ணுகிறேன் இதனால் உங்கள் விரதத்திற் கொருபங்கமில்லை, உங்களுடைய நியமம் இயமயோகத்தின் பலனைப்பெறும் உங்களுக்கொரு தீமையுஞ்சேராது, உங்கள்வாய்மையுஞ் சோராது வல்வினையும் வாராது தாயே மனோன்மணி நீர் போமென்று சாற்றினார். அவரது மொழியைக்கேட்டு நாகராஜாவின் நாயகியாகிய நாககன்னி தன்வளவுக்குவந்து விட்டாள். சூரியபகவானிடத்திற் சென்றிருந்த சுகுணவானான நாகராஜன் வந்தவரவை ஆசிரமத்திலிருந்த பதிவிரதை எதிரோடிக்கண்டு பாதபூசை முதலிய உபசாரங்கள் பண்ணி சிங்காசனத்தி லிருக்கச்செய்து சேடியர் தோழிகளால், ஆலவட்டம், சாமரம் விசிறி, சாந்தாற்றி, முதலியவற்றால் இளைப்பகற்றி அவருக்கு முன்னின்று, சுவாமி அடியாள் விண்ணப்பம், சூரியமண்டலம் போயிருந்தபோது தம்மிடத்திற்கு பி

ருகுவென்னும்பெரியவர்வந்தார் உபசரித்தேன் அவர்தங்களைவிசாரித்தார்,செங்கதிரோனிடத்திற்குச் சென்றார், இங்கு ஒருவாரத்தில் வருவாரென்றேன் அப்படியானால் அவர்வருகிற வரைக்கும் நான் உபவாசவிரதம்பூண்பேனென்று தாங்கள்வரும்வழியிற்றவ முற்றிருந்தனர், இச்செய்தியறிந்த அடியாள் திருவடியிற்பணிந்துஅநேகவிதத்திற்றெரிவித்துத் தேற்றியபோதும் தீரம்விடாமலிருந்தனரென்று செப்பினாள். அம்மொழிக்கேட்ட நாகராஜன் அப்போதே எங்கே அவரெங்கேயென்று கொழுந்து விட்டெரியுங் கொப்பறையில் விழுந்த புழுப்போற்றுள்ளி இளைப்பைப்பாராட்டாமலெழுந்து பரிந்து பிருகுவிடத்திற்குப்போய் தேடியுங்கிட்டித் தெரியாப்பெருமானே, நாயனையபேயனை நாடி வந்தகாரணம் யாதோ குடிசையிலடி பெயர்த்த குணமென்னமோ, சீரடிவருத்தப் பெற்ற செயலியாதோ வென்று, முகமன்கூறி தாம் வந்தது இன்னகாரியமென்று வழங்கினால் அந்தக்காரியத்தை க்ஷணத்தில்சாக்கிரதை செய்யமாட்டுவேனென்று சாற்றவும், பிறப்பிறப்பற்ற தவப்பலத்தையுடைய பிருகு மஹாரிஷி சொல்லுகின்றனர். ஓ ! நாகபோகனே நான் வந்தகாரியத்தைக் குறித்துபபிற்பாடு பேசுகிறேன், நீர் சூரியமண்டலத்திற்குப் போய்வந்த துரிதமென்ன. அம்மண்டலச்சிறப்பும், விசாலப் பரப்பும், நேர்மையுஞ், சீர்மையும், அதிசயமும், சூரியனிருக்கின்ற ஆசாரமும், சம்பிரமமும், நீர்வார்த்தையாடிய வகையும் விநோதங்களும் விந்தைகளும் உண்டாயிருப்பதை நீர்கண்டபடியே கரைக்கவேண்டுங் காவலனேயென்று பிருகுமாஹாரிஷிகேட்க அவருடைய செவியில் தேவாமிர்தஞ் சொரிவதுபோல் நாகராஜன் செப்பலுற்றனர். ஓ! பிரம்மவித்தாகிய தேவனே கேளும் சூரியமண்டலத்தில் முரசு, கறடிப்பறை, குடமுழவு, மல்லரி, துத்தாரி, பூரி, டமாரம், எக்காளம், தாரை, வீரசின்னம், தப்பட்டை, தவண்டை, மேளமுதலிய சகலவாத்தியங்களும், சப்த மேகமுழக்கம்போல் ஒருபக்கத்தில் ஒலிக்க, தேவஸ்திரீகள் கந்தருவப்பெண்கள் யக்ஷகன்னியர்கள யாவரும் சதி, சுதி, தாள, மேளங்களுடன் பரதமாடுகின்ற பரிசு ஒருபக்கங் கோஷிக்க,பேரறிவிலுயர்ந்த பெரியோர்கள் உறுதியுடையவர்கள் கரையற்ற வேதாகமங்களைக் கழறுகிற சப்த மொருபக்கம், ஸ்மிர்தி, இதிஹாசம் பஞ்சஇலக்கண பாவகம் தற்கம் மீமாம்சம் அறுபத்துநான்கு கலைக்ஞானமும் அப்பியாசம்பண்ணுகிற ஆரவாரம் ஒருபக்கம், முப்பத்துமுக்கோடி தேவர்களும் நாற்பத்தெண்ணாயிரம் ரிஷிகளும சகலசாதியருங் குலவேதியரும் தோத்திரஞ் செயகின்றது மொருபக்

கம். தவசிகள் முனிவர்கள் வேதமந்திரம் விளவுகின்ற கீதநாத மொ
ருபக்கம், தரிசிப்பவர்கள் துதிக்கின்ற சந்தடி யொருபக்கம். ஆலவ
ட்டசாமரங்கள் சத்திரங்கள் மயிற்பீலிகள் குஞ்சங்கள் பிஞ்சங்கள்
சுருட்டிகள் முத்துக்குடைகள் இவைகளால் உபசரிக்கின்ற ஒலி பல
பக்கம், ஆசிர்வசன ஆர்ப்பொருபக்கம், அஷ்டமங்கலம் லாலிசுப
மங்களம் முதலிய ஆரவாரசம்பிரமம் ஒருபக்கம். மேற்கட்டிய வி
தானம் மகரதோரணம் பராக்கு கட்டியம் எச்சரிக்கை முதலான உப
சாரஅவசரங்களொருபக்கமும் இன்னமனேகவைபவங்களுடன் உஷா
தேவி பிரத்துஷாதேவி சாயாதேவி சமேதனாய் நவரத்நகசித சிங்காத
னத்தின்பேரில் ஆயிரங்கிரணத்துட னிருக்கப்பட்ட திவ்வியமான தே
வநிர்மாணஜோதிமணியை மார்பிற் றரித்துப்பிரகாசிக்கப்பட்ட சூ
ரியபகவான் பிரபையுடன்கொலுவீற்றிருந்தார்; அவருக்குஒற்றையா
ழித்தேர் சப்தமாகுதிரை சிவந்த திருமேனிபொருந்திய அருணன் சா
ரதிமனோவேகவாயுவேகமாய் மகமேருவைப்பிரதட்சணஞ்செய்துவை
யகத்தார் வாணாளை யளந்து கட்டிய மகாமூர்த்தி, அவருடைய கிரு
பையினால் மழை பெய்கிறதும் தானியாதிகள் மலிகிறதும் வருஷம்,
மாசம்,வாரம்,திதி, நட்சத்திரம், யோகம், கரணம், உத்தமம் மத்திமம்
நடப்பதும்,சராசரங்களுண்டாய்த் தழைவதும்,சிருஷ்டி,திதி, சம்மா
ரமும்,முக்குணமும் இக்குணங்களுக்குரிய பிரம்மா,விஷ்ணு, உருத்தி
ரர் முதலிய மூவரும் அந்தச் சூரியபகவானுடைய ஒளியினாலே ஒ
ளியாய் உட்கலந்திருக்கின்றார்கள். இம்மும்மூர்த்திகளும் அவருடை
ய பிரகாசமென்றால் சகலாத்ம கோடிகளுக்குஞ் சூரியனைவிடவேறு
சுடரும் தெய்வங்களுமுண்டோ. இப்பேர்ப்பட்ட சூரியபகவானுக்கு
முக்கோடி தேவதைகள் அர்க்கியங்கொடுத்து சுவர்னபுஷ்பம் பொழி
ய, கருடனுடைய தமையன் அருணன் அதிக விசையுடன் விமானத்
தைச்செலுத்த வேகதாகத்துடன் சப்தமானடிக்க அலைகடல்வளைந்த
உலகத்திற்கெல்லாம் கண்கண்ட தெய்வமாகிய கதிரவன் கொலுவிரு
க்கையில் மிகுந்த ஜோதியுடன்ஒருமகாபுருஷன்வந்தான்.அவனுடைய
பிரதாப மென்னவென்னில் தேவதைகளைப்போல் திவ்விய தேகம்பெ
ற்றவன், ஆரகேயூரமணி குண்டலகிரீட பூஷணாலங்கிருதன்,திடகாத்
திரவச்சிரதேகஉச்சிதபலவான், அருணனுடைய காந்தியிலும் அதிக
மானவன், அப்பேர்ப்பட்டவன் சூரியபகவானுடைய கொலுமுகத்தில்
வந்து நின்று சிலாக்கியாசாரமான தோத்திரவாக்கியங்களைச் சொன்
னான். அதைக்கேட்ட சூரியன் ஆநந்தமுற்றிருக்க மறுபடியும் அந்
தத் திவ்விய புருஷன், சகலகோடி ரிஷியீஸ்வரர் முதலாகிய பிரமுக

கணங்களும் பணிந்து வணங்கித் தோத்திரம் பண்ணிக்கொண் டிருக்கிற சமயத்தில், அந்தச் சூரியசோதியிற் புகுந்து உள்ளேகலந்து ஒன்றுபட்டுப்போனான். அதைக்கண்ட தேவதைகளும் அஷ்டதிக்குப் பாலகர்களும் முகமலர்ந்து அகமகிழ்ந்தார்கள். இந்த விந்தையை நானுங்கண்டு அற்புதமடைந்து ஆயிரங்கிரணங்களையுள்ள ஐயா, உம்மிடத்திலும் ஒளியாய் வந்து உன்னுட்புகுந்து ஒன்றிப்போன உத்தமரரோ, அவருடைய உண்மையைச் சொல்லவேண்டுமென்று உறுத்திக் கேட்டேன். என்பால்வைத்த அன்பினால் வண்டுமொய்க்குந்தேனிறைந்த தாமரைமலர்மாலை சூடிய சூரியதேவன் குலுங்கநகைத்து மகத்துவமும் மர்மமுமான வசனத்தைச் சொல்லத் தொடங்கினார். ஓ நாகராஜனே! என்னிற்கலந்தவர் தேவதைகளிலொருத்தர், மிகவு நல்லவர். பூலோகத்தில் வேதமோதுகின்ற பிராமணர்களில் இவரும் ஒரு குட்டிப்பார்ப்பார். சகலகோடி தருமங்களும் யாதொரு பலனைக் குறித்துச் செய்யாமல் நிராசையாய்ச் செய்யப்பட்டவர். குற்றமற்ற நிர்மல உதகம்போல் பற்றற்றிருப்பவர். தேகாபிமான மற்றவர். ஸ்தூலபூததேகம் போய்விட்டவுடனே சூக்குமதேகத்திற் பிரவேசித்து என்னுடன் கலந்து பிரிவரப் பரவினார். இதுதான் இடரில்லாத முத்தி, இதன்றி வேறதிசயமில்லை. யாவனொருவன் ஆசாபாசத்திலகப்பட்டுக் கெட்டலையாமல் ஆசையற்றிருக்கின்றானோ அவனே பிறவிவேதைகடந்தவன். அவனே முத்தாத்மா. ஆசையுடனும் இருபற்றுடனும் செய்கிற தருமமெல்லாம் பிறவிக் கேதுவாகும். அவாவிருக்கிறவனுக்கும் தவாப்பிறப்பு ஜனனமரணம் நீங்காது. ஆகையால் எல்லாத் தருமங்களிலும் முதன்மையான நிராசையோடிருந்து ஒரு வழிப்பட்ட உண்மையோனாதலால் சீக்கிரம் ஜனன மொழிந்தது, பிறவித்துன்பம் போய் என்னுடலிற் கலந்து ஜோதியோடு ஜோதியாய்ப் பரவிவிட்டான். கேட்டீரோ! நாகராஜனே என்று சூரியன் கூற மகிழ்ந்து சந்தோஷ மடைந்தேன். இது நேற்றயதினம் சூரியனிடத்தில் நடந்த சமாச்சாரமென்று பேச, பிருகு மகாரிஷி கேட்டு ஆநந்தக்கடலில் மூழ்கி, நாம் நினைத்துவந்த கருத்து சங்கையற்ற செயலாய் வெளியாயிற்று, நமது விரதமும் பலித்தது. தருமசூட்சமும் தெரிந்ததென்று நினைத்து அந்த நாகராஜனையிருந்த உபசாரத்துடன் ஆசீர்வதித்து, மகானுபாவரே நான் வெகுநாளாய் முடிவான தருமம் அறிய வேண்டுமென்று அநேகம் பெரியோர்களை உசாவினேன், ஒருவருஞ் சொல்லமாட்டாமல் சந்தேகத்தில் விட்டார்கள், உம்முடைய மகிமையைக் கேட்டு இந்த ரகசியத்தை உம்மால் தெரிந்துகொள்ள வேண்டு

மென்று வந்த இடத்தில் நீரில்லாமற் போனபடியால்,உம்மைக்காணு கிற பரியந்தம் உபவாச விரதமிருந்து கண்டு பிரம்மலோகத்தில் நட ந்த ஆச்சரிய சமாச்சாரங்களை உம்மாற் கேள்விப்பட்டு,நான் கொண் டிருந்த சங்கைதீர்ந்து கிருதார்த்தனுனேனென்று பிருகு மகாரிஷி பேச, அந்தச் சொல்லைக் கேட்ட நாகராசனும் அவரை வணங்கி வழி பட்டு உபசாரங்கள் செய்து சுவாமி,தேவரீர் நிரம்பிய பசியும் இளைப் புமாய் இருக்கின்றீர்,அடியேனை நாடிவந்து ஆறுநாள் பசித்திருந்து போவது அழகல்லவே, அறமல்லவே அடியேனுக்குப் புகழல்லவே எழுந்திருந்து வாருமென்று இதவாகப் பேசி,மனைக்குள் ளழைத்துப் போய் நெய்யளாவிய அன்னங்களும் அறுசுவை பதார்த்தமும் பாய சம் வடை பணியாரங்களுடன் படைத்து,ஆசையும்அன்பும் பொருந் திய புருஷனும் பெண்சாதியும் உண்பித்து கரம் வாய்பூசி ஆசமன்னி யமருந்தி களைதீர்ந்து ஓரிடத்தி லிருவரும் உட்கார்ந்து ஒருவருக்கொ ருவர் பேசவேண்டிய தரும ரகசியங்களைப் பேசிக்கொண்டு வரும் போது பிருகு ரிஷியானவர் தானனுஷ்டித்து வருகின்ற இயல்பெல் லாம்பேசி பரம தருமம் அறியவேண்டியபான்மையால் வந்தேனென் று பகர்ந்தார். இவருடைய விருத்தாந்தங்களைக் கேட்ட பதும ராஜ னைவர் தன்னுடைய சரித்திரங்களைச் சாற்றி தருமபத்தினி கிடைத் திருக்கின்றதவத்தினுல்,சிவநாமத்தை மறவாச் செல்வம பெற்றிருக்கி றேனென்று செப்பி,ஆத்ம விதேகமுத்தி அடைகிறவர்களுக்கு அதி தீவிர பக்குவமும் பேரறிவும் தனக்குத்தானே வந்து கைகூடும்படி நல்வினை நடத்திவைக்குமென்று நவின்று எல்லாவற்றிற்கு மேலான தருமமானது, எந்தப் பதார்த்தத்தின் பேரிலும் இச்சை வையாதது தான் பரதருமம். இச்சைப்படுவது அபரதருமம். அந்த இச்சையை விட்டேனென்பது வாசகப்பாடன்றி வாசியப்பாடன்று. அகமும் மனமும ஒத்து ஒருமையாய் நிராசைப்படுவானுகில் அவனெவனை போதிலும் உடனே முத்திபெறுவான். அவனுக்கு எல்லாக்காரியங்க ளும் பொருந்திக் கைவல்லியமாம். நினைத்தது சித்தியாம். அவனெத் தனை காலமிருந்தாலும் மாயாதேக வருத்தமின்றி சாயாதேகச் சம் பிரமத்துட னிருப்பான். அவன்தான் அகங்கையில் மோட்சத்தை வைத்துக்கொண்டிருப்பவன். சுகதுக்க மற்றவன். துக்கம் ஏக்கம் வி ட்டவன். சோதிரூபமாகிய சூரியனிற்கலந்து சுடராயிருப்பவனென்று உணருமென்றுசொல்ல,அதைக்கேட்ட பிருகுவானவர் அதிக லாபம் பெற்றவர்போல்மகிழ்ந்து பரவசமாய் ஐயா, நெடுநாளிருந்த சந்தேக ங்களை ஒருநிமிடத்திற் றெளியச்செய்தீர், இன்றுமுதல் உம்மை என்

குலதெய்வமென்று ஏற்றிப்போற்றி வருவேனென்று அவருடையபெண்சாதி தருமசீலியினிடத்தும்வார்த்தையாடிதாயே! சிந்தாமணி, இவ்வுலகமாதாவாகிய அம்மணிக்குச்சமானமான அறம்வளர்த்ததாயென்று உன்னை எந்நேரமும் நான் சிந்திக்கவேண்டியது, கற்புள்ளகாதலியேயென்றுங்கணவனுடன் கூடி வாழ்தியென்றும் இன்சொலுரைத்து இருவரிடத்திலும் விடைபெற்றுக்கொண்டு சனகசனந்த சனற்குமாரஜனர்த்தனர் முதலியபேர்களுங் கொண்டாடப்பட்ட பிருகுமகாரிஷி தன்னிருப்பிடத்திற்குச் செல்லும்போது சவனமகாரிஷியின் ஆச்சிரமத்திற்குப்போய் ஐயா, தேவரீர்போதித்த அடையாளப்படிக்குச் சென்று இல்லறவாழ்விலுயர்ந்த அந்தப்பதும மகாராஜனைக் கண்டு பரமதருமார்த்தம் பக்குவமாயுணர்ந்து, அதுவே நிச்சயமென் றெண்ணி அதைக்குறித்து விரையங்கள் பண்ணுமலும் அதி சூக்குமமானபரமரகசியத்தைத் தெரிந்துக்கொண்டேன். இந்தரகசியத்தைத் தெரியப்படுத்தியது தேவரீருடைய புண்ணியமென்றுரைத்து தன்னுடைய எதாஸ்தானம் போய்ச்சேர்ந்தார். அன்றுமுதலாக ஒன்றிலும் பற்றில்லாதவராய்சிலநாளிருந்து பூமிபிரதக்ஷணம்புரிந்துவருகின்றபுண்ணியனைசூரியனிடத்திற்பொருந்திபாலும்நீரும்போலக்கலந்துபோயினர். இதுதான் ஆத்ம முத்தியென்பது. இந்த அற்புதங்களைப் பார்த்து வந்தேன். ஓ, தேவந்திரனேயென்று ஜீவன் முத்தாத்மாவான நாரதபகவான்சொல்ல மேகநாதனுக்கு மெய்யறிவுவந்து பரமதருமம் இதுவென்றுணர்ந்து, பூமண்டல மெல்லாம் நொடியிற்போய்வருகின்ற புனிதனே உம்மாலே இந்தத்தருமம்தெரிந்தேனென்று தோத்திரம்பண்ணி நாரதனை வணங்கினன். அவரும் ஆசீர்வதித்து விடைபெற்றுக்கொண்டு தன்னெதாஸ்தானத்திற்குப் போனர், கேளும் தருமநந்தனவென்று பிரியமகலாத வீஷ்மர்சொல்ல உரிமையுள்ள தருமராஜன் சரீரம் பூரித்துதன்னைமறந்து உலகத்தார் கடைத்தேறுவதற்காக சுலபத்தில் ஒரே தருமத்தை உரைத்தருளிய உத்தமனே சித்தசனைச் செயித்த சிதேந்திரியனே சரணம் சரணமென்று தலைமேற் கரங் கூப்பித் தொழுது சிலவு பெற்றுக்கொண்டு அஸ்தினபுரம் போனர்கள். மகாரிஷிகள் கிருபாச்சாரியர் விதுர மகாராஜன் ஸ்ரீ கிருஷ்ணபகவான், வேதவியாசர், முனிவர், பரதர், வசிஷ்டாதிப்பிரம கூட்டங்களும் பாண்டவர்களும், ஞானசோதிப் பிரகாசம்போல முகமலர்ந்து பிரம்மதேஜசுடையவர்களாய் நம்முடைய பாக்கியமே சிலாக்கியமென்று தங்களுக்குள் தாங்களே மகிழ்ந்துகொண்டாடிக்கொண்டு பிரதக்ஷண நமஸ்காரம் புரிந்து அவரவர்கள் ஸ்தானங்களுக்கு போய்ச் சேர்ந்து

உண்டுடுத்தி சுகித்திருந்தார்கள்கேட்டிருந்தரிஷிகளெல்லாஞ்சேர்ந்து, இதை படித்தவர்கள் எழுதினவர்கள் படிப்பித்தவர்கள் படிக்கச் செய்தவர்கள் படித்ததைக்கேட்டு பயன் விடாமலுரைத்தவர்கள் இதனுடைய தத்துவமறிந்து நடந்தவர்கள் இவர்கட்கெல்லாம் இகத்திலுண்டாகிய துன்பநீங்கி இன்பமுடன் மண் மனை மக்கள் மாடு வீடு யாவத்துமான சம்பத்தும் பெற்று வாழ்ந்து தீர்க்காயுளுமுடையவர்களாய் முடிவில் மோக்ஷம் பெறுவார்களென்றார்கள்.

50. தற்செயலாய் ஒரு ஜீவனுக்கு மற்றொரு ஜீவனால் நேரிடும் மரணாவஸ்தையின் வரலாறு.

இந்தக்கரும பூமியில் அருமையான களங்கரகிதனா யிருக்கப்பட்டபிராமணனொருவர் இருந்தார். அவருடையஸ்திரீயானவள் புண்ணியவதி. அவளுக்கு ஒரே பிள்ளை. அந்தப்பிள்ளையைப் பாம்பு கடித்தது. ஔஷத முதலிய சிகிச்சைகளும் பண்ணினார்கள். அதினால் உபயோகப்படாமல் அந்தப்பிள்ளை இறந்துபோயிற்று. இந்த பிள்ளையைப்பற்றி யாவரும் தியங்கி, மயங்கி, இரங்கத்தக்கதாக உன்னி இறந்துகிடக்கிற புத்திரனைப்பார்த்து பெற்றவள் மனங்குன்றி வயறுதாளாமல் முறையோ முறையோ வென்று கதறிப்பதறும்போது, பொருச்சுன னென்னும் பெயரினையுடைய, ஒருவேடன் பேரறிவாளன்கண்டு ஓட்டமா யோடிவந்து அந்தப்பிள்ளையைக் கடித்த பாம்பை கையிற் பிடித்துக்கொண்டு இறந்துபோன பிள்ளையின் தாயாருக்கெதிரில் விட்டுக்காட்டி இதோ உன் பிள்ளையைக்கொன்ற பாம்பைக் கொல்லுகிறேன் பாரென்றான். அந்தபிராமணஸ்திரீ அப்பா,வேடனே என்குழந்தை இறந்தது என் முன்வினைபோகத் தால் விளைத்த கொடுமையே யல்லாமல் கொன்றவர்களுடைய குற்றமல்ல. நீஏன்வீணில் இந்தப்பாம்பைக் கொல்லுகின்றாய்.இதனுடையபிள்ளை குட்டி, பெண்சாதி யுடன் சுகமே வாழட்டும். இதை கொல்லவேண்டாம் விட்டு விடென்றாள். பவளம் போன்ற வாய்திறந்து பகர்ந்த பிராமணப் பெண்ணின் பேச்சைக்கேட்ட வேடன் ஐயோமானிடப்பிறவியில் சந்ததி முக்கியமானது அப்பேர்ப்பட்ட சந்ததியைக்கடித்து கொன்ற பாம்பை அடித்து விடுவதே தருமம், இதைக்கொல்லுவதில்

ஒரு துன்பமுமில்லை; யாவரும் இதற்கு இதக்கப்படார்கள். பசு ம்பொன் மாலையைத் தரித்த அம்மணி உனக்கு ஒன்றுந் தோன்ற வி ல்லை, உலகவியல்பு, யாவனொருத்தன் தான் ஜெயம் பெறவேணுமெ ன்று நினைக்கின்றானோ அவன் சத்துருவைக் கொல்வது தருமமே. தேவேந்திரனும் தான் ஜெயமடைவதற்கு விருத்திரா சூரனை வெகு பாடுபட்டு முடித்தான். பரமேஸ்வரர் தன்னைப்பகைத்து யாகம்வி ளைத்த தக்கனைக் கொன்றார். ஆகையால் பகைவரை உடனே கொல் லுவது உறுதி. அதனளவில் விசாரப்படலாகாது. தயைதாட்சணி யம் எண்ணிப்பார்க்கப்போகாது துஷ்டநிக்கிரகம் பண்ணாவிட்டால் அக்கிரமமேவிட்டுப்போம். அம்மணியென்றுகிராதகன்சொல்ல; அதற் கும் அந்தப்பிராமணப்பெண் மனங்கூசாமல் பசையுள்ள பால்மரத் தை வெட்டுவதுபோல் நஞ்சையுடைய நாகத்தை பதபதைக்கக் கொ ல்லுவையாகில் இதனுலிறந்தபிள்ளை எழுந்து வருவானோ? ஒருபோது மில்லை. அப்படிக்கிருக்க விருதாவாய்ப் பாம்பை கொல்லுவதிலாப மென்ன, வேலைஇல்லா வேலை ஆதைக்கொல்லும்போது தலையும் வா லும் உடலும் உயிரும் துடிப்பதைப்பார்த்து, நமது மனந்துடிப்போ மே! இதுதான் காக்ஷி யல்லது வேறொன்று மில்லை. நீரதை கொலை செய்யத் துணிவீரால் நானதைப்பார்க்கப் பயப் படுவேன்: கொல் லாவிரதமே விரதம் (புலையுங், கொலையுங் களவுந் தவிர்வதே) புண்ணி யம். ஓ, கண்ணியனே இந்தப்பாம்பை விட்டுவிடும் விட்டுவிடு மென்று உள்ளமுந் தேகமு நடுங்கி யுரைத்தாள். இப்படியாக வாதாடிக் கொ ண்டிருக்கிற பிராமணஸ்ரீயின் பேச்சையும், வேடனுடைய பெரு மூச்சையும் கேட்டு அவ்வேடன்கையிற் சிக்கிக்கொண் டிருக்கின்ற சற்பம் கோபவேசங்கொண்டு ஆர்ப்பரிக்கின்ற வேடனை நோக்கி ஓ, மெத்தவுந் தெரிந்த வில்வேடனே, என்னைக் கொல்லுகிறே னென்று நீ எந்தமுறைமையினாற் சொல்லுகிறாய், உனக்கென்ன தருமமிருக் கின்றது நானென்ன செய்வேன் உன்னை ஏதாகிலும் கடித்தேனோ இந் தக்காட்டில் நீயும் நானும் புரண்டுக்கொண் டிருக்க, இது வரையிலு ம் எத்தனையோ தரம் என்னை நீ மிதித்திருப்பாய் உன்னை நான் வரு த்தி இருப்பேனோ, மிருத்தியுதேவதை விதித்தபடிக்கு, இந்தப்பிள்ளை யை நான் வந்து கடித்தேன், அப்படிக்கில்லாமல் என்சுயபுத்தியால் துஷ்டத்தனத்தால் தீண்டி இருப்பேனாகில் நீர் சொல்லவேண்டியதுங் கொல்ல வேண்டியதும் நீதியே, எய்தவனிருக்க, அம்பை நோவது போல், செய்தவ னொருவன் பழியும் பிராணன்போகிற வழியும் நா ன் சுமக்கலானேன் பண்டமொரு பக்கம் பாவமொரு பக்கமென்பது

போல் என்னை வருத்தப் படுத்துவது தருமத்திற்குப் பொருத்தமல்ல; ஞாயஞ்சரிதானு சொல்லு மென்று கேட்க, அந்தப் பாம்புக்கு வேடன் சொல்லுகின்றான். இப்போது நீ சொல்லிய மிர்த்தியு தேவதையை ஆரறிவார்கள் பிரபஞ்ச மெல்லாம் பாம்புகடித் திறந்தானென்று பழியுன்பேரிற் சுமந்திருக்க நீயேதோ ஒருவழிகாட்டுகிறாய் பொல்லாதகொடுமை புரிந்தவன் நீ யல்லவா அடாபடுபாவிசற்றேனு மனமிரக்கமில்லையா ? தாய் தந்தையர் பந்துக்கள் வந்தவர்போனவர் நின்றவர் பார்த்தவர் கேட்டவர்களும் பதறுகிறார்களே, ஆதலால் பழிக்குப்பழி உன்னை கொல்லுவதே வழியென்று பகர்ந்தான். இப்படிக்கு வேடனும் பாம்பும் வெகுநேரம் வாதாடிக்கொண் டிருக்கிறபோது மிர்த்தியுதேவதை பிரசன்னமாய் மூவுலகத்திலும் தன்னதிகாரத்தை நடத்திக்கொண்டிரா நின்றவன் காலன் அவன் கட்டளைபடிக்கு காற்றெனத்திரிந்து காரியமுடிப்பதுநாம். அவன் எம்மை, அம்புபோல் எய்துவிடுவன். அவனெங்கே குறிவைத்தாலும் தப்பாமற் கொல்லுவோம் நாங்கள் ஒருவர்கையிலடங்கிய வேலைக்காரர்கள் நீங்கள், எங்களைக்கோபிப்பதும் நிந்திப்பதும் உங்களுக்குப்பாபம். இப்போது இந்தப்பாம்பைக் கொல்லுவதனால் ஒருபலனு மில்லை. உலகத்தில் கர்மிகளா யிருக்கிறபேதைகள் சாஸ்திரத்தின் முடிவுஅறியாத மூடர்கள் பேசுகின்ற பேச்சைப்போல் நீயும் பேசுகிறாய், பெரியோர்கள் வாசம்பண்ணுகிற காட்டுக் குரியவனாயிருக்கிற நீ,விபகாரந்தப்பி யொருவேலை செய்யபோமாவென்று,மிர்த்தியு தேவதை விளம்பியது. அதன் சொல்லைக்கேட்டு கானகவேடன் கனைத்து, நீர் எனக்கொரு பழமொழி படித்தீர் அதாவது எய்தவனிருக்க அம்பைநோவதெப்படி என்பதாய் நீர் கூறியமொழி யாதொரு குற்றமில்லை. ஒருவன்மீது வெகுகோடி பாணங்களை எய்யும்படியானவன் எதிரிலேநிற்கிறபோது அவன் விட்டபாணங்களை முன்னுதாக அறுத்துப்போட்டு அப்பால் எய்தவன்பேரில் தாக்கிறார்கள் அதை நிதானிக்குமிடத்தில் அம்பைபோன்ற உங்களைக் கொன்றுவிட்டு தேகவருத்தந் தீர்ந்தபிற்பாடு உங்களையேவிய காலன் முதலாய்க் கணக்காகயிருக்கின்ற எய்தவன்பேரில் எய்வது தகுதியாதலால் பிரத்தியட்சத்தில் இந்தப் பாம்பு கடித்தபடியால் புத்திரன் இறந்தான், இதைஎடுத்துப் பேசவேண்டுமே யொழிய மற்றதைக்குறித்துப் பேசுவதற்கு விபகாரமென்ன வென்று வேடன் சொல்ல, நீ, நானென்று பேசிக்கொண் டிருக்கிற சமயத்தில் இபாவருங்கொண்டாடப்பட்ட காலன்வந்து வேடனுக்கு முன்னின்றான். ஏன் பிள்ளாய் இந்தப்பாம்பைப் பிடித்துக்

கொல்லுவேனென்றாய், ஒருவரொருவரைக்கொல்லக்கூடுமோஎப்போ தும் ஊழ்வினையின்படிக்கு நடக்குமல்லாமல் வேறுண்டோ, வேதமு தலியசாஸ்திர புராணங்களிற் றேறித் தெளிந்த பெரியோர்கள் தாம் தாம் செய்தவினை தாமேயநுபவிப்பரென்று சாற்றுகிறார்களல்லது அன்னியர்கள்பேரில் பின்னுஞ் சொல்லுவதில்லை, எல்லாம் நல்வினை தீவினையின் சுபாவமென்று எதுவந்தாலுஞ் சந்தோஷப் படுகிறதேய ல்லாமல் வேறொன்று நினைப்பதில்லை, நன்மை வருங்காலத்தில் எல் லாம் நன்மையாகவே வரும், தீமைவருங்காலத்தில் துன்பமேவரும், நல்வினை தீவினைகளின்படி, நடத்திவைக்கிறது எங்கள் சுபாவம் ஓ, வனவேடனே அநியாயமாய் இந்தப்பாம்பைக் கொல்லுகிறேனென் பது அவசிய மல்லவென்றறைந்த காலனுடைய முகத்தை வேடன் ஏறநோக்கி நின்றான். இவ்வாறு வாதித்துக்கொண்டிருக்கையில் பர் வதம் போன்ற தனத்தையுடைய, பிராமணஸ்திரீ சொல்லுகின்றாள். ஓ, ஐயமாரே, வீணாய்ச் சம்வாதம் பண்ணுவதில் என்ன பிரயோசன ம், மேல்வினையைத் தள்ளிக்கொண்டவர்கள் ஆராகிலு மிருக்கின்றார் களா, நீங்கள் வாதுபுரிவதனால் பொழுது போகின்றது இறந்துபோன என்குமாரனுக்கு வயிறுப்பிப்போகிறது. அவனைசுடுகாட்டிற்கொண்டு போய் முடிக்கத்தக்க கடனை முடிப்பதற் கில்லாமற்போகிறது, மடிந் தபிள்ளையை வைத்துக்கொண்டு வயிறெரிவதைப்பார்க்கிலும் எரிமூ ட்டிவைத்து தலைமுழுகிப் போட்டால் என்துயரம்நீங்கிப்போம், ஐயா வேடனே, உமக்குக் கோடிசரணம் பாம்பை விட்டு விடுமென்று வே ண்டினாள். அந்த உத்தமியின் வார்த்தையைக்கேட்ட வேடன் ஐ யோ, உன்பாவ மிப்படியா வென்று மனதிரங்கிபாம்பை விட்டு விட் டான். அந்தப்பாம்பு வேடன்கரத்தி லகப்பட்ட மெலிவு தீர்ந்து சர சரவென்று போய்விட்டவுடனே, அக்கிராரத்தி லுள்ளவர்களெல்லா ஞ்சேர்ந்து பிராமணப்பிள்ளைக்கு நீர்க்கடனு, நெருப்புக்கடனும், நடத் தி ஸ்நானம்பண்ணி தங்கள் தங்கள் வீட்டுக்குப் போனார்கள். இங் ஙனம் வந்திருந்தவேடன் மிர்த்தியுதேவதை காலன் முதலானபேரும் அவர்களிடம் போய்ச் சேர்ந்தார்கள். இது முற்காலத்தில் நடந்த கதையானபடியினாலே ஒருவர் ஒருவரைக் கொல்லக்கூடாது ஒருவ ராலொருபர் இறந்தார்களென்று சொல்லப்படாது. எல்லாம் வினை யின் செயலென்று விசிதமாயறிந்துக்கொள்ளும். இன்னம் நீங்கள் கொன்றதாகவும் உங்களாலவர்கள் மடிந்ததாகவும் பிரம்மைமுதலி ய சந்தேகமுண்டோ, உலக இயற்கை இடத்தைப்பற்றியும் முன்னிரு ந்தறவர்களைப் பற்றியுஞ் சொல்லுவது காரியம், மேல்வினை மூண்டு

முடிப்பது காரணம். இதனால் உனக்கொரு கொடுமையுமில்லை யென்று கடுமையகன்ற மனத்தினனாகிய வீஷ்டுமெருனைக்க தருமராஜன் சங்கடநீங்கி இன்னமொன்று கேட்கின்றார். ஞானவல்லபனே இவ்வுலகத்தில் இல்லறதருமத்துட னிருக்கிறபேர்கள் மிர்த்தியுமுதவிய எமனை வென்று மாறாத இன்பத்தை அனுபவித்தவருண்டோ அப்படி யுண்டானல் அருள் செய்யவேண்டு மையனே யென்று வேண்ட வீஷ்டுமர் சொல்லுகின்றார்.

51. எமவாதனை வென்ற கற்புடைய போகவதியின் சரித்திரம்.

ஓ, என்னன்புக்குரிய மன்னனே மறுகுலத்திற்பிறந்து கறை தோய்ந்த வேலைக்கையிலேந்திய காவலன் சுயோதனராஜனென்பவன் இப்பூமியில் பிரசித்தமா யிருக்கப்பட்ட நருமதை நதியே ஒரு ஸ்திரீயாகவந்து இவனைப் பதியாகக்கொண்டு வாழ்ந்து வருகிறநாளையில், உலகத்தி லிருக்கப்பட்ட பெண்களுடைய அழகெல்லாந் திரண்டு அவர்களுடைய புகழாகிய பதிவிரதா தன்மமெல்லாம் பொருந்தி ஒரு பெண்ணுய்ப்பிறந்ததோ என்னும் படியாய்ப் புகழுள்ள அந்தராஜனுடைய பெண்சாதி வயிற்றில் ஒரு பெண்ணுயகம் பிறந்தாள். தாயுந் தந்தையும் அற்புதமடைந்து பெண்பிறந்த சந்தோஷத்தால் உச்சவாதிகள் நடத்தி அப்பெண்குழந்தைக்கு சுதானையென்று பெயரிட்டு இராஜமுறைமையாக வளர்த்து வருகிறநாளையில், பேதைபெதும்பைப் பருவங்கடந்து பதினன்கு வயதிற்குமேல் மங்கைப்பருவ நேரிட்டதை மாதாபிதா மகிழ்ந்து உதாசனக்கடவுளாகிய அக்கினிபகவானைப் பூசித்து வரச்சொல்லிக்கட்டளை இட்டார்கள். அந்தப் பெண்ணினுடைய தண்டை, சதங்கை, சிலம்பு, கொஞ்சத்தக்கதாகவும் சகலாபரணங்களுங் கலகல வென்று ஒலிக்கத்தக்கதாகவும் இரண்டு பொற்கிரிபோற்றிரண்ட தொய்யலெழுந்துப் புரண்ட கொங்கையைச் சுமந்து இடைதாங்க மாட்டாதென்று ஏங்கிச் சிவ்வாடத்தக்க தாகவும் கரத்திற்றரித்திருக்கப்பட்ட வளையல்கள் கலகலவென்று கோஷிக்கவும் மேகலாபரணம் பதினறு கோவையுடன் மின்னிப் பின்னும் முன்னும் பாரிக்கும் படியாகவும் செவ்வரி, கருவரி, படர்ந்த செங்கண்களானது செவிவரையிலும் பாய்ந்திருக்கவும் பவளம்போன்ற வா

யில் பற்களாகிய ஆணிமுத்துப் பிரகாசிக்கவும், இன்னும் விசித்திரமான ரூபசித்திர பொற்பிரதிமைபோல் வருகிறபோது, புருவமாகிய வில்லை வளைத்து சொரூபமாகிய கண்ணம்பு தொடுத்து முகவுல்லாசமிருகலையும்பொடித்துமிருசல்லாப சரபதமும்படித்து அக்கினிதேவனிடத்திற்கு வந்தாள். இந்த விந்தைவந்த மிகுந்த சௌந்தரியத்தைப்பார்த்து கண்ணம்புக்குப் பயந்தவனாய் கால் பதறி, மயங்கி காயாக்கினியாற் கலங்கி சரீர முலர்ந்து, சருகாய்ப் புலர்ந்து அடக்கமாட்டாத ஆசைகொண் டிருக்கப்பட்ட அக்கினி பகவான் சுதானையை நோக்கி, சுமுகமதியே, சுகுணவதியே, சுகிர்தமொழியே நீயெனக்குப் பெண்சாதியாயிருவென்று வருந்தினான். இந்தச்சொற் கேட்டு அந்தப் பெண்மிகுந்த நாணத்துடன் தலைஇறங்கி நின்று தோகைமயில்போற் சாய்ந்து, குயில்போற் கூசி கிளிபோல் வசனித்தாள், என்தாய் தந்தை என்னைப்பெற்று வளர்த்த சந்தோஷந் திரச்சம்பிரமமாய் ஒருவர்க்குப் பாணிக்கிரகணம் பண்ணிக் கொடுப்பதற்கு முன்னே என்னிச்சையாய் ஒருவர்பேரி லாசைப் பட்டிணங்குவது அழகோ? எல்லாந்தெரிந்த உமக்கு நான் சொல்லவேண்டிய தென்னை உமதிஷ்டப்படிக்கு நடத்திக் கொள்ள வேணுமென்றால், உள்ளத்தில் விளைந்த ஆசையை விருதாவாய்ப் போக்காமல் என்தாய் தகப்பனிடத்திற்சென்று அவர்கள் சம்மதிக்கக்கொண்டு உமதிஷ்டப்படிக்கு முடித்துக்கொள்ளு மென்று சாற்றி, தனது தாய்தந்தை இருக்குமிடத்திற்குப் போனாள். இப்பால் அக்கினிபகவான் வெட்கப்பட்டு வேதக்குன்று வளர்ந்ததுபோல் வேதியன் வடிவங்கொண்டு சுயோதனராஜனிடத்திற்குப் போனான். அந்த ராஜன் இந்தப்பிராமணனைக் கண்டு வணங்கி ஆசீர்வாதம்பெற்று தேவரீர் ஆரையா எங்கிருந்து வருகின்றீரென்று கேட்க அக்கினிதேவன் வெற்றிமாலை தரித்தவேந்தனே உருவத்தில் மிகுந்த அழகைப்படைத்த உன்னுடைய சுதானையை எனக்குக் கலியாணம் பண்ணிக்கொடும் நான் அதற்காக வந்தேனென்றான். இராஜன் அதற்கு ஒன்றும் பேசாமலிருந்தான். அந்தவேளையில் பர்வதம்போன்ற தோளையுடை அக்கினிதேவன் நாணி அப்புறம்போய் தன்னுடைய சுடர்க்கலையைச் சுருட்டிக்கொண்டு மறைந்துபோய்விட்டான். அப்பால் மூன்று லோகத்திலும் அக்கினியைக் காணாமல் அலைந்து திரிந்து தேவர் முனிவர் பிராமணர் முதலியபேரும் வருந்தி தீக்கடைக்கோலைத் திரித்தார்கள், அதனிடத்திலும் அக்கினி பிறக்காமற் போனபடியால் நித்தியாக்கினி, ஓமம், யாகம், சமையல், பாகம் தீபம் ஒன்றுமில்லாமல் உலகம்

இருண்டுபோயிற்று இப்பேர்ப்பட்ட வேலைகளெல்லாங் குறைவறநட த்துகின்ற செங்கோலையுடைய ராஜன்மனம் வேறுபட்டு சந்தோஷ மில்லாமல் சலித்துக்கொண்டான். இதென்ன நான்செய்த பாவமோ? என்னைச் சேர்ந்தவர்களால் எய்தியகுற்றமோ தர்மந் தவறிப்போயிற் றோ காரணந்தெரியவில்லை யென்று கண்கலக்கமுடையவனாய் அக்கி னிபகவான் ஓமத்தினிடத்திலிருந்து எப்போதும்போல் அவியேற்று க்கொள்ளாமற் போனதென்ன அதிசயமென்றுவெகுவிசாரமாய் நடு ங்கி பெருமூச்செறிந்து யோசனையாயிருக்குங்காலத்தில், பிராமணர் களியாவரும் தபித்துஸ்தான முதலிய ஆசமனீயமில்லாமல் யோசனை பண்ணிப் பார்க்குங்காலத்தில் அக்கினிபகவான் வேதியருடனே விசா ரப்பட்டுக்கொண்டான், ஓ, ஐயமார்களே, சுதானையினிடத்தில் எ னக்கு மோகமுண்டாயிருக்கிறது அந்த ஆசைநீக்கினால் நான்மனித னுகத்திரிவேன் இல்லாவிட்டால் என்சுடுகையைப்பார்க்கிலும் காமா க்கினி கொளுத்திவிடுகிறது அதுசகிக்கமாட்டாமல் ஒளித்துக்கொண் டிருக்கின்றேனென்றான். அதைக்கேட்டபிராமணர் இராஜனிடத்திற் றெரிவித்தார்கள். அப்படியாவென்று அரசன் மகிழ்ந்து தன் குமார த்தியை சகலாலங்கார கன்னிகாதானமாக அக்கினிதேவனுக்கு தாரா தத்தம் பண்ணினான், அக்கினியும் மன்மதசொரூபங்கொண்டு பெண் கையைப்பிடித்து அரசு ஆல் முருக்கினால் நாட்டிய, அரசாணிக்காலை ப் பிரதக்ஷணம்வந்து பெரியவர்களுக்கு நமஸ்காரம் பண்ணி தலைமை யான பெண்ணுயகத்தின் இளமையான குஜத்தைத்தழுவி பெரும் போக வாரிதியிலமுழ்ந்தி, வடவைக்கனலாகிய பெருந் தீயென்னப்பொ ருந்தி இன்பமாதுரிய இதயத்தே னருந்திமருவிய சுதானையின் கருப் பத்தில் புண்ணிய உருவமேதிரண்டு ஒருபிள்ளை பிறந்தான். தவத்திலு யர்ந்த தவசிகளும் திரியாக்கினிக்கதிகாரிகளாகிய வேதியர்களும் மங் களாசனஞ்சொல்லி வாழ்த்தும்படியாய் தேவர்கள் புஷ்பமாரி தூற் றும்படியாய் புத்திரோச்சவ முதலிய கருமங்களைத் தாட்சிஇல்லாமற் செய்து அப்பிள்ளைக்கு ஞான சுதெரிசினன் என்கிற நாமங்கொடுத்து குழவிப்பிறைவளருந் தன்மைபோலவளர்ந்துவருகிற குமாரனுக்குப் பூணூற் கலியாணமும் பொருந்தி வேதாகமசாஸ்திர புராணங்களும் ஐயந்திரிபில்லாமலறிவித்து தன்மகன் உலகத்தில் முயற்சியடைந் தபிற்பாடு அன்னப்பட்சி நாணியநடையும் சொர்ணஸ்தம்பந்தோற் குந் தொடையும் மின்னற்கொடி வெட்கிய இடையும் பொன்னைப் போற் பிரகாசிக்கும் உடையும் கற்கண்டுபாகினு முயர்ந்த மொழியும் விற்கொண்டவண்டினுஞ் சிறந்தவிழியும் அற்கண்ட கொண்டலைப்

போன்றகொண்டையும் கற்கொண்டுருண்டு முழங்கிய தண்டையும் களங்கமற்றிலங்கிய முகமும் இளங்கனிக்கிசைந்த தனமாகிய நலமும் இங்கிதமனமும் எழிலார்கனமும் அருந்ததிக்கொப்பாகிய கற்பும் ஆசாரபூசை ஆகமத்திற்கொப்பும் போகவதியென்னப்பெயர் செப்பும் ஒருமஹாரிஷியின் மகளாகிய பெண்ணரசியைப்பேசி நல்ல முகூர்த்தத்தில் தன்மகனுக்கு விவாகநடத்தி பெண்ணும்பிள்ளையும் இல்லற வாழ்க்கையிலிருந்து தருமங்களெல்லாவற்றையும் புரிந்து கிரகஸ்தாச்சிரமத்தில் சொல்லி இருக்கிற விதிமுறை தப்பாமனடந்து விரதமிருந்து தருமத்தாட்சியு கருமத்தாட்சியுமில்லாமல் நவமே விடவாழுநாளையில், சண்டனை வென்றிடவேண்டுமென்று உட்கொண்டு அங்ஙனமிருக்கும் பெரியோருடனுரைத்து தானும் பெண்சாதியும் குருக்ஷேத்திரத்திற்குச் சென்று விசாலமான பர்ணசாலையொன்று ஏற்படுத்திக்கொண்டு, அவ்விடத்திற்றவமாய் நின்று அங்கேவருகின்ற மாதவாகள் மஹாரிஷிகள் இவர்கள் முதலாகிய பேர்களுக்குப் பாதபூசை அர்க்கியபாத்திய உபசாரங்கள் செய்து திவ்யகந்தமூல கனிவர்க்கங்கள் கொடுத்துவந்தனை வழிபாடிழைத்து சத்தியநித்தியபத்தியமுதலிய சாந்த வேதாந்த விரததபோநிதியாகிய சுதெரிசன மஹாரிஷியானவர் பொற்புடைமைவாய்ந்த கற்புடைமையணிந்தகாதலியாகிய போகவதிகணவன் சொற்றவறும விருந்தபடியால் அவளுடன் பொருந்திவாழ்ந்து, நாளுக்கு நாள் தவமுமுயர்ந்து நான்குதிக்கும் அடர்ந்து வரும் விருந்தினராகிய அதிதிகளுக்குப்பரிந்து உபசரித்து பதியும் சதியும் விதியும் இதுவேயென்று தேவர்களெல்லாருங் கொண்டாடிப் புகழ்ந்து எல்லாத்தருமங்களிலும் இவர்கள் இல்லற தருமம் சொல்லத்தரமல்லவென்று பல்லோருந் துதித்தார்கள். இப்படிக்கிருக்கிறகாலத்தில் சுதெரிசன ரிஷியானவர் தன்மனதிற் குடிகொண் டிருக்கப்பட்ட விரதமுடிவெல்லாம் தமது தருமபத்தினிக்குத் தெரியப்படுத்தினார். என் கண்ணுக்கினிமையான பெண்ணே யாதாமொரு அதிதி இந்த ஆச்சிரமத்தின் வழிவந்தால் யாரோ எவரோ வென்றெண்ணுமல் அன்புபாராட்டி முன்புறவைத்து அர்க்கியாதி பூசைபுரிந்து அட்சதை தாம்பூலசந்தனமமைத்து தூபதீபங் கொடுத்து சுயம்பிரகாசச் சோதியாகவும் ஆதிமூல விஷ்ணுவாகவும் ஆத்மாக்களைப் படைக்கும் பிரம்மாவாகவும் வந்தனை வழிபாடு செய்வையல்லது வேறு மாறுபாடாய் நினையாதே. அவரை சிவசொரூபம் விஷ்ணுமயம் பிரம்மதேயசு என்று மதித்து பணிந்து துதித்து அவர்களுடைய உடல்வருத்தந் தீர்த்து உணவருத்திப் பொருந்தி ஆ

லவட்டம்போட்டு அடிமலரை வருடிப்பிடித்து அறுசுவையன்னம் வருந்தி யுண்பித்து, அவர்கள் திருப்தியடைந்து இளைப்பாறி அவர்களா ய்ப்போறுல் ஆசீர்வசனம்பெற்று அடிமலரை நமது முடியுற வணங் கிக்கொள்ள வேண்டியது. இதைவிட வேறு தருமம் புண்ணியம் எங்கணுமில்லை, திங்கள்வதனுய் அதிதிபூசையேபூசை மற்றப்பூசை யெல்லாம் ஆசாரவயிற்றுப்பூசை இல்லறந் தேடிவந்த அதிதிகள் எந்தப்பொருளையும் விரும்பார்கள். ஒருவேளை எதைக்கேட்டாலும் சந்தோஷத்துடன் கொடுக்கவேண்டியதே முக்கியதருமம். கே ட்டோருக்கிட்டோர், பெரியோர் இடாதோரிழிந்தவாழ்வினையுடை யோர். அவர்கள் ஒருவேளை ஆநந்தமாய் உன்னை விரும்பினுலும் மு கஞ் சுளியாமல் மேனி நெளியாமல் விட்டிலொளியாமல் மேனிவிடு வதே மேன்மைத் தருமத்திற்கு வேராகும். இதன்றி நானில்லாத போது துறந்தோர் முதலிய பேர்கள் வந்தால் இப்போது நானுனக் குத் தெரிவித்திருப்பதை பிரணவப்பொருளாகக் கொண்டு பூசித்தனு ப்புவதே உனக்குக் கடைமை. என்னுடைய வார்த்தை உனக்குக் க டைப்பிடியுடைமை.இதுவே தருமமென்று இன்னுஞ் சொல்லவேண் டிய இயற்கைகளெல்லாஞ் சொல்லி இதனுல் இல்லறதருமத்தைக் கிரமமாக நடத்தினபேர்கள் பெற்ற பேரும் பலப்பேறும் எல்லாம் எடுத்துக்காட்டி இருவருமனங் கலந்து வாழ்ந்து வந்தார்கள். ஒரு நாள் பெண்சாதியை பர்ணசாலையில் வைத்து தருப்பை சமித்து மா விலைமுருக்கிலை புரசிலைகொண்டுவரும்படியாய்க்காட்டுக்குப்போனுர். இந்தப்பதிவிரதா சிரோமணியானவளிருந்த இடத்திற்கு ஒருபிராம ணன் சரேலென்றுவந்தான். அவன் சாஸ்திர, வேத ஆகம புராண ஞ் சகலமுங்கற்றவன், திடமனம்பெற்றவன் அவனைப்பார்த்துதேய்ந் த இடையுடனே மனமுஞ் சோரும்படிக்குப் பயந்து திடுக்கிட்டு திடீலென்றெழுந்து எதிர்சென்று நின்று உபசாரம்பேசி வேதியர்க ளிருக்கப் படுக்கப் புசிக்கப் விதித்திருக்கின்ற பர்ணசாலைப்பாங் கிலழைத்துக்கொண்டுபோய், தர்ப்பாசனத்தி லுட்காரவைத்து பா தார்ச்சனை முதலிய தூபதீப பரிசுங்கொடுத்து, அவருடைய அடிக ளில் தன்முடியைப்பதித்து தெண்டனிட்டு சுவாமீ அடியாள்செய்ய வேண்டிய பணிவிடை இன்னதென்று கட்டளையிடவேணும் நாயே ன்கடைத்தேறுவதற்காக எழுந்தருளிய ஞானக்கனியேயென்று தொ ழுதனள்.வந்த பிராமணன் சந்தோஷப்பட்டு அந்தோபைந்தொடியே கந்தற்பன்கணையால் நொந்து நானைந்தேன், வந்துன்னை யடைந்தேன் என்சிந்தைமையலைத் தீர்த்தருள் தையலே உன்னமுதமலையையும் அ

தரக்கனியையும் அலைந்து கெட்டோடி வந்த என் மோகத்தைத்தீரும் தாகத்தைத் தாரும், என்று பலவாறாகவேண்டினான். அவன் சொல்லைக்கேட்ட உத்தமி சற்றுங் கலங்காமல் அந்த இடத்தை விட்டும் விலங்காமல் பத்திரசமாய்ப் பணிந்து ஐயனே இதுமுற்று முணர்ந்த முனிவர்கள் சொல்லுமுறைமையோ தாங்கள் விரும்பிக்கேட்ட தானத்தை நிதானித்தால் வானத்தில் மேலாகிய பதவிதருமோ? இல்லை,இது உயிருக்குதவியாய் வருமோ ஐயோ அற்பகாமத்தினால் உமது விற்பனமெல்லாம் வீணாய்ப்போய், சொற்பனங்கண்டவர் போற், சோம்பி கற்பனையாகிய நரகத்தில் விழக்காரியமேன். உம்மைத்தொட்டு என்னையுமிழுக்குமே தீமைக் கேதுவாகிய காரியங்களிற் பெரியோர்கள் பிரவேசிக்க மாட்டார்கள். விருப்பங்கொள்ளார்கள். அனித்திய தேகத்திற்கு அனித்தியந் தேடுவது அனித்தியமே; ஆதலால், பெண்ணின்பந் தவிர்த்து இந்த இல்லறத்திலிருக்கப்பட்ட பதார்த்தங்களில் எதைகேட்கினுந் தருகிறேன் பின்னை எதுவேண்டினுங் கேளுமையா வென்று அந்தப்புனிதவதி புகன்றாள். அந்தப்பேச்சைக் கேட்ட பிராமணன் நகைத்து, இந்தவேளையி லெனக்குவேண்டியது இன்பம், நீ வீண்ஜம்பம் சேசுபகிறாய், நீ என்ன தந்தாலும் என் மனத்தினாலுங், கரத்தினாலும், தீண்டேன் ஒரு பொருளை ஒருவரிடத்திலும் வாங்குவதில்லை என்னும் விரதமுடையேன், இப்போது நான் மோக விகாரங் கொண்டிருக்கின்றேன், நீ தடை படுத்தாமல் உன்னதரபானந்தருவையா? தரமாட்டாயா? என் பிராணன் போய்விடும்போ லிருக்கிறது உனக்கு பாபமும் பழியும் வரும் என்னைச் சீக்கிரம்காரும் வாரும் உட்காருமென்று செப்பினான். அந்த ஆரணனுரைத்த காரணத்தைக்கேட்ட பூரணசந்திரோதயம் போன்ற வாரணதனத்தையுடைய புண்ணியக்கன்னி அநேகவிதமா எண்ணி தீர்க்காலோசனைபண்ணி கிலேசமுன்னவளாய் இனி என்னசெய்வேன் தெய்வமே! இவருரைத்த வார்த்தையோ தடுக்கக்கூடாமலிருக்கிறது நமது நாயகன் கட்டளையோ அதிதியானவர் என்னகேட்டாலுந் தடையறக் கொடுப்பதே தருமமென்று மொழிந்து தானும் இல்லை என்னுமல் எதுவுங்கொடுக்கிறேனென்பதாய் விரதங்கொண்டிருக்கின்றார் அவருடைய விரதமும்பங்கமாகப்படாது, நமது பதியினுத்தரவின்படி நடக்கிறது பழுதில்லாத தருமம், அதிதிகளின்மனது திருப்தியாக்கிறது இல்லறவாழ்க்கையினியல்பு இவைகளை கவனித்துப்பாராமல் விலக்கிவிட்டால் இதுவரையிலுந் தேடிய மனைவாழ்க்கைப் பெருந்தவம் அடியோடழிந்துபோம், நாடியதைக்

கொடுக்கிறது நல்லறம் இல்லறமே, நாமிவருக்குடன்படாவிட்டால் நாணம், மடம், அச்சம், பயிற்பு இந்நான்கு மடக்குணமுங் கற்புடைமையுங் கெட்டுப்போம், இதற்குயாது செய்யத்தக்கதென்று கிலேசங்கொண்டு முடிவில் ஸ்திரீகளுக்கு புருடன் தெய்வம் அவருடைய ஆக்ஞை திருமந்திரம் ஆதலால் நம்முடைய கணவன் நவின்றிருக்கின்றபடிக்கு மனஞ்சுளுக்கில்லாமல் உடன்படுவதே மஹாபதிவிரதாதன்மமென்று மன உறுதிகொண்டு, தன்புருஷனைத் தெய்வமாய்ச் சிந்தையிலிருத்தி சுவாமி, என் கர்த்தாவாகிய பர்த்தாவின் சொற்கடவாமல்நடப்பேனுகில்லோகாபவாதத்தடையாகிய இடையூறுஎன்னையென்ன செய்யக்கூடும் மற்றொன்றுக்கும் யான் பயப்படவேண்டியதில்லை யென்று குலமடந்தை யானவள் அந்தப் பிராமண அதிதியை நோக்கி ஓ! ஐயரே,தேவரீரிச்சை தீரும்படிக்குச் செய்யலாமென்று முல்லையரும்பைப் போன்ற தந்தங்கள் பிரகாசிக்கும்படியாய் நகைத்து கட்டிமுத்தாடி அதரபானமூட்டினுள். இவளருந்தக்கொடுத்த இன்பரச சரசசல்லாபங்களினுல் உல்லாசமாயிருந்து அந்தப்பெண்கொடியாகிய போகவதியும் வர்தவேதியனும் ஒரு அறைக்குள் நுழைந்தார்கள் அந்தவேளையில் காட்டுக்குப்போயிருந்த கணவன் வந்து,தான் கொண்டுவந்த தருப்பை முதலிய சமுத்துகளைஓமவேதிகையில் வைத்துப் விட்டுதன் பத்தினியாகிய உத்தமியைக் காணுமல் படபடப்புடனே அவள்பேரைச் சொல்லிக் கூப்பிட்டான். அந்த ஓசையை போகவதிகேட்டு வைதீகபிராமணன் முகத்தைப்பார்த்தாள். அந்த அதிதியானவன் கடகடவென்று பற்கடித்து நீகடைத்தேறுவாய் நீகடைத்தேறுவாய் பேசாதே பேசாதே மிஞ்சிப்பேசுவையாகில் உன்னைச் சபிப்பேனென்றுன். அதைக்குறித்து யோசித்து நாமிப்போது இவருக்கும் உடன்பட்டோம், இந்த அதிதியின் வாதை தீர்ந்து இவர் ஆநந்தப் படுவதற்குமுன்னே நாமுறித்துக்கொண்டு போவது முதன்மையன்று. நல்லது நாயகனுக்கு நாமிங்கிருக்கிறோமென்று தெரியச்செய்யலாமென்றுல் இந்தப்பிராமணர் சபிப்பார் ஆகையால் நம்முடைய வினைப் பிரகாரமுடியுமென்று பேசாமலிருந்துவிட்டாள் இப்பால், இவள் புருஷனுனவன் அநேகந் தரம் கூப்பிட்டு மனந்திடுக்கிட்டுவீட்டுக்குள் நுழைந்துபார்த்தபோது அவ்வீட்டிலிருந்த அதிதிப் பிராமணன், ஓய் பிராமணனே மதிமருளாதே கவலைபடாதே உன் மனைவி அதிதிபூசை பண்ணுகிறுளென்ன: இக்கோதைக்கிசைந்த மணவாளன் சொற்குறிப்பறிந்த குணவாளன் மேலானகதி சம்பாதிக்க விரும்பினவன் புண்ணியமெல்லாவற்றையும் ஒரே திரட்

டாக உருட்டி தானேகைக் கொன்னவேண்டுமென்னுங் கருத்தையுடையவன், அதிதியின்பேச்சைக்கேட்டு ஆநந்தமாய் சரீரம்புளகித்து மனங்குளிர்ந்து மேன்மேலான பாக்கியங் கண்டவன்போல் பூரித்து ஆடிப் பாடினன். வேதபாடங்களைச் சொல்லிக் கொண்டோடினன். ஜன்மசாபல்யமானேன், என் தந்தை தாய் தேடிய தவமே தவம். மற்றதெல்லாம் அவம். நானென்னென்று சொல்லுவேன். அதிதியர் யெழுந்தருளிய ஆதியுமவரோ யாவற்றிற்குமேலான அறிவுமவரோ, திரிமூர்த்தி சொரூபமுமவரோ, எனக்கு முன்பிறந்த முதல்வருமவரோ. விரதமுமவரோ. விவேகமுமவரோ. வெற்றியுமவரோ.யுக்தியுமவரோ. சக்தியுமவரோ. சித்தியுமவரோ. யாவும் அவரோயென்றெண்ணுவதுஎன்வழக்கம், இதுநிச்சயம் இதற்குப் பஞ்சபூதமும்சூரியசந்திரரும் என்மனமும் சாட்சி. உண்மை என்பதற்கு திருஷ்டாந்தக்காட்சி, இதுவே தருமக்காணியாட்சி யென்றுரைத்து ஐயா,மஹானுபாவா! அதிதிகள் ஆசைப்பட்டு விரும்பினபடிக்கு வழிபடச் சொல்லி உத்தரவு செய்திருந்தேன், முன்னம்நானுரைத்த வண்ணம் என்பெண்சாதி அதிதி பூசை பண்ணுகிறாள். மிகவுஞ் சந்தோஷஞ் சந்தோஷ மென்று வாசலிற்போய்நின்று வாயோயாமற்றுதித்தான்; அப்போது அசரீரி இதெல்லாந்தெரிந்து ஓ! அதிதியே! இந்தமஹானுபாவன் சொன்னவார்த்தைகளியாவும்சத்தியமே.உண்மைதான்அகம்புறமிரண்டும் ஒத்தவன் குற்றமில்லை என்றது. அந்தவேளையில் அந்தப் பதிவிரதையைப் பக்கத்தில் வைத்துக்கொண்டு வீட்டுக்குள்ளிருந்த வேதியன், தான் எடுத்துக்கொண்டு வந்த வேடத்தை யொழித்து எமதருமராஜனாகிய எதாரூபமெடுத்து காலபாச தண்டு சூல கோலத்தைத் தாங்கி எருமைக்கடாவாகனத்துடன் தேவதைகள் ரிஷிகள் திக்குப்பாலகர் சூழப் பிரத்தியட்சமாயினர்.உடனேபோகவதியும் அவள்புருடனை புண்ணியவானும் பிரதக்ஷண நமஸ்காரம் புரிந்து அநேகவிதமாகத் தோத்திரஞ்சொல்லிப் போற்றிவாழ்த்தினர்கள். நான்கு திக்குகளிலும் தேவதைகள் புஷ்பமாரிவாரித் தூற்றினர்கள். உலகெல்லாநிறையக் குறைதவிர்ந்தார்கள். தருமதேவதையும் உடல்குளிர்ந்து இல்லற நடத்திய சற்புருஷாளிருவரையும் பார்த்து, உலகத்தில் உங்களைப்போல் ஒருவரையுங் கண்டிலேன், உத்தமகுணத்தரே! உமக்கு வேண்டியவரங்களேந் தருகிறேனென்ன, சுவாமி அடியேனுக்கு எமதண்டனை எமவாதனை இல்லாம லிருக்கும்படிக்கு வரங்கொடுக்கவேண்டுமென்ன, அப்படியே எத்தனைகாலம் இவ்வுலகிலிருக்க இச்சையோ அத்தனைகாலமும் அன்போடிருந்து அதிதி பூசைபுரிந்து பிரப

ஞ்சத்தாரை பின்னிட்டபோது தேவலோகத்திற்போயிருந்து போக பாக்கியங்களை யனுபவிக்கும்படி வரங்கொடுத்தேன். இன்றுமுதல் என்றென்றைக்கும்எமனுடைய உபத்திரமில்லை.என்றியம்பிபதிவிரதா சிரோன்மணியாகிய போகவதியம்மனைப்பார்த்து அம்மா உன்னுடைய தான நிதானத்திற்கு மெச்சினேன். சந்தோஷமானேன், நீ இன்றுமுதல் போகவதியென்னும் பெருமையுடன் வேகவதியென்கின்ற நதியாய் புனிதமாய் தீர்த்தமகத்துவமாய் என்னும் வற்றாமல் உன் புருஷனுக்குமாத்திரம் ஸ்திரீயாய் மற்றவர்களுக்கு சகல பாபங்களையும் போக்கடிக்கின்றபுண்ணியநதியாய்வாழ்கவென்று வரங்கொடுத்து, பெரியோர் முதலிய பேர்களும் புகழ்ந்து ஆசீர்வதிக்கும்படிக்குக்கண்டு களித்து தங்கள் தங்களெதாஸ்தானம் போய்ச்சேர்ந்தார்கள். அந்தத்தர்மதேவதை கொடுத்த வரத்தின்படிக்கு எமனைச் செயித்து இன்பமாகவாழ்ந்திருந்தார்கள்.விரிந்தபூமாலைபொருந்திய தருமநந்தனு! இல்லறத்திற்கு எடுத்துரைத் திருக்கின்றநெறிமுறைநீதிவழியின்படி நடந்தால் காலனைவெல்லலாம், கதியையும் பெறலாமென்று வீஷ்மர் பலபலவிதமாய்ப் பன்னினார்.

52. க்ஷத்திரியர், வைசியர், சூத்திரர், பிராமணராகக் கூடுமோ என்றபிரசினைக்கு, உத்தரம். இந்திரபுஜங்க சம்வாதம்.

இங்ஙனம் தருமராஜன் முதலிய அரசர்களியாவரும் அடிபணிந்து ஐயா! எங்கள் துயர நீங்கத்தக்கதாய்ச் சொரூபநிச்சயஞ் சொல்லத்தக்கவரே! என்போன்றவனை இரட்சிக்கப்பட்டவரே! சுவாமி! சூத்திரர் வைசியர் க்ஷத்திரியர் இம்மூன்று வருணத்தாரும் தங்கள் குலத்திற் குயர்ந்த பிராமணராகவேண்டுமென்றால் ஆகலாமா? இந்த ஐயம் என் மனதிலிருந்தது,இன்றைக்குத்தீர்ந்து நான்கடைத்தேறும்படிக்குத் திருவாய் மலர்ந்தருள வேண்டுமென்று சிந்தித்து வந்தித்தார்கள். அதற்கு வீஷ்மர்சொல்லுகின்றார். தவசிரேஷ்டனாகிய ஒரு பிராமணன் இருந்தான்அவனுக்கொருபிள்ளை இருந்தது அந்தப்பிள்ளையைக் காட்டுக்கனுப்பி தருப்பை சமித்துகொண்டுவரும்படி உத்தரவு பண்ணினார்.அப்படியே அந்தப்பிள்ளை போகிறபோது,வழியிலே ஒரு கோவேறுக்கழுதையின் குட்டிமேய்ந்துக் கொண்டிருந்தது. அந்தக்

குட்டியைக்கண்டு அதட்டி துரத்தினான். அந்தகழுதைக்குட்டி தன் தாயிடத்தி லோடி அம்மா! நான் சும்மா மேய்ந்துக் கொண்டிருக்கும்போது ஒருவன் என்னையடித்துத்துரத்தினானென்று கோபத்துடன் கூறியது, அதைக்கேட்ட கோவேறுகழுதை குட்டியை முத்தமிட்டு அம்மா! அவன்கெட்டான் பிராமணனானால் தெரியும். கீழ்ப்பட்டபுலையன் இந்தக்காட்டில் நமக்கும் அவனுக்கும் சம்பந்த மென்னவென்ன, அதற்குக் குட்டி சொல்லியது. அவன் சோலிக்குப் போனேனா, அவனைத்தொந்தரை செய்தேனா என்னை ஏனடித்தான். அவனைச் சும்மாவிடப்படாது சண்டைபோட வேண்டுமென்று கடுங்கோபமாய்ச் சொல்லிற்று. அந்தக்குட்டியின்வார்த்தையை இப்பிராமணப் பிள்ளை கேட்டு மெத்தவிசாரமாய் பெருமூச்சுவிட்டு தேகமுழுதும் வியர்த்து தேம்பி வெம்பி நகைத்து திரும்பித் தியங்கித் திகைத்து, இதன் தாயாகிய பெண்கழுதை யினிடத்திற்குப் போய் கண்ணிலே தண்ணீர் விட்டழுதுவிசனப்பட்டான். அவனைத் தாய்க்கழுதைக் கண்டு ஏனழுகிறா யென்று கேட்டதற்கு புலையனென்றுரைத்த புன்மையை நானறியத் தக்கதாகச் சொல்லவேண்டு மென்ன, அதற்குப் பெண்கழுதை, இவன் கழுத்தைப் பார்த்து இவனுக்கு நல்வினையின் பூர்வ புண்ணியத்தினால் மிருகபாஷை தெரியும்போ லிருக்கிறது. அதனாலல்லவா நாம் சொன்னதைத் தெரிந்துக்கொண்டு பூர்வோத்திரங் கேட்கிறான். நல்லது ஓ பிராமணப் பிள்ளாய்! உன் தாயானவள் காமவிகாரங்கொண்டு நாலாம்வர்ணமாகிய சூத்திரனைப் புணர்ந்து அந்தச் சூத்திரபீஜத்திற்கு நீ பிறந்தாய். ஆகையால் உயர்ந்தகுலத் தாய்க்கும் இழிகுலத் தந்தைக்கும் பிறந்ததோஷத்தால் உனக்குப் புலையத்துவம் வந்தது." அதைத்தான் சொன்னேனென்றது. அச்சொல்லைக்கேட்ட வேதப்பிராமணப்பிள்ளை சரீரநடுங்கி தன் தந்தையிடத்திற் வந்து நடந்த விர்த்தாந்தத்தையும் பூர்வோத்திரத்தையும் புகன்றான். அதைக்கேட்ட தந்தை இதென்னவிந்தை ஐயோ! அப்பா, இது உன்தாயார்பேரில்நிந்தை உன்னிந்தை கலங்காதே என்று தேற்றினான். அந்த மொழி தனக்குத் திருப்தி இல்லாததினால்தான் தபசுசெய்து சுத்தப் பிராமணனாகிறேனென்று தந்தையை விட்டகன்று ஒரு பெரிய ஆரணியத்திற் போய் ஒற்றைக்காலூன்றி மற்றைக்கால் மடக்கி, அன்னாகாரமொடுக்கி ஐம்புலாதிகளையுமடக்கி, ஆகாயத்தை நோக்கி நூறுவருஷந் தபசு செய்து வருந்துகின்ற நாளிலொருநாள் வச்சிரதாரனாகிய தேவேந்திரன் காட்சியாகத் தோன்றியபோது, அந்தப் பிராமணப்பிள்ளை பிரதக்ஷண நமஸ்

காரஞ்செய்துத் தொழுதுநிற்க அவனைத் தேவேந்திரனேக்கி நீ என்னைக்குறித்துத் தவஞ்செய்த காரணமென்னவென்று கேட்டான். ஐயா நான் மகா புகழையுடைய இழிவில்லாத உயர்ந்த பிராமணனாக வேண்டும், அப்படியாக வரந்தாருமென்றான். அதற்கு தேவேந்திரன் நகைத்து இவ்வுலகத்தில் யாருங் கோராத வரத்தைக் கேட்டனை. அது நான் கொடுக்கிற வரமன்று அதுதவிர வேறேவரங் கேளும் தருகிறேனென்றான். தவஞ்செய்த பிராமணன் பின்னொரு வரமும் வேண்டியதில்லை,நான் மற்றொன்றையுங் குறித்துத் தவம் பண்ணவில்லை, எனக்கு வேண்டியது நல்லகுடியிற் பிறந்த வேதியனாகவேணுமென்றான். அதற்கொரு உத்தரமுஞ் சொல்லாமல் தேவேந்திரன் மறைந்து போய்விட்டான். பின்னையும் அந்தப்பிள்ளை முன்னையிலும் பதின் மணங்கதிகமாய்த் தவமிழைத்தான், அதெப்படி எனில் ஒருகாற்பெருவிரலை நிலத்திலூன்றி தபசுசெய்கின்ற தபசிகளுங் கண்டு தலைநடுநடுங்கும்படிக்கி மாமிசம் தோல்நரம்பு முதலிய வைகளுஞ் சரிந்து இளைந்து போகும்படியாக மனஞ்சலிப் பில்லாமல் தைரியம்விடாமல் மறுபடியும் நூறுவருஷம் அருமையான தவம்பண்ணினான். அப்பால் தேகசக்தி யற்று உடலொடுங்கிப்பூமியின்பேரிற் சாய்ந்துவிட்டான். அதனால் தேவேந்திரன் ஓகோ இதுபழிக்குவழியாய்வந்ததென்று வெகுசீக்கிரத்திற் பிரசன்னமாகி,தன்னிரண்டு கரத்தாலும் வாரி எடுத்து அவனுடைய வருத்தத்தைதீர்த்து களையாற்றி ஓ சிறுவனே!நீர் உயர்ந்த பிராமண னாகவேணுமென்றுவருந்தித்தவமிருந்தீர் நெருப்பில்காச்சிய இரும்பு குடித்த நீரானது கழன்றுவர மாட்டாது, அதுபோல் எவனெவன் வினைப்போகத்தால் எந்தசென்மமெடுக்கிறானே அந்தச்சனனத்தில் அவனெத்தனை தபசுபண்ணினாலும் அந்தத்தபசெல்லாம் ஆத்மாவுக்குள்ளே மறைந்துக் கொண்டிருந்து,அந்தத்தேகம்போய் மறுபிறப்புவந்தபோதுமுன்னிழைத்த தபசின்பலனை அடையச்செய்யும். இந்தப்பிறப்பில்தானே பலன்கொடுக்கமாட்டாது.இராஜன்முதலான மூன்றுசாதியரும் பிராமணனாகப் போகிறதில்லை.விருதாவில் வன்பிரயாசப்படுகிறாய் உன்னாலாகாது. சொன்னாலுங்கேளாய் (கிட்டாதாயின்வெட்டெனமற) என்னும் நீதிக்கு மாறாய் எட்டாப்பழத்திற்குத் தொறடுகேட்டுகிறாய். மாமிசதேகத்தைப் புண்ணாக்கி மண்ணாக்கி மாயச்செய்கிறாய். இனியாகிலுந் தவத்தை விட்டுவிடு. விவேகமற்றவனே! பிராமணப்பிறப்பு இலேசானதல்ல. அதைக்குறித்து வரன்முறை சொல்லுகிறேன். நீர் விபரமாய்க் கேட்டறிந்துக்கொள்ளும். என்று தேவேந்திரன் புகலுகிறார். கேளும் தபசிரேஷ்டனே பர

மசண்டாளன் நூறு ஜனன மெடுத்து, ஜனனந் தோறும் அந்தக் குலத்தொழிலிற் பிரவேசிக்காமல் சத்தியநெறியாகிய நித்தியவிரதத்தில் சாக்கிரதையுடன் உத்தம மனதாயிருந்தால் நான்காவது சூத்திர யோனியிற் பிறப்பான். அச்சூத்திர ஜனனத்தில் கருமந்தப்பாமல் தர்மந்தவறாமல் கிரமமாக நூறுசென்மம் விரதநோன்பிழைத்தால் மூன்றாஞ்சாதியாகிய வைசியனாவான். அந்த வைசியன் கருமதருமந்தவறாமல் பொய்யுரைபேசாமல் சீவகாருண்ணியனாய்த்தேவதாபூசை திருப்பணியலங்காரஞ் செய்து ஐநூறு ஜனனம் அருந்தவமிழைப்பானாகில் க்ஷத்திரியனாவான். அந்த க்ஷத்திரியன் நெறிபிசகாமல், குலமுறைகுறையாமல், நீதிவழுவாமல், நிலைதவறாமல், மன்னுயிரைத் தன்னுயிராய் மதித்து ஆயிரம்பிறப்புப் பிறந்து பிறவிதோறும் அகந்தையடக்கி கருமங்கருதி எக்கிய ஓமங்களியற்றி தீவினை வயப்படாமல் நல்வினையைநண்ணில் அவனுக்குப்பிராமணஜனனங் கிடைக்கும். அந்தப் பிராமணன் பஞ்சேந்திரியங்களையு மடக்கி ஏகமனதாய் அவம்நீக்கி யாகாதிகளுண்டாக்கி வேதப்பொருளறிந்து அப்பொருளை விளக்கி, அவ்வழிநடந்து நிர்மலசித்தனாய் ஓர் ஆயிரஞ்ஜனனமெடுத்தானாகில் மகாரிஷியாவான். ஆனபடியால் இந்த வரிசைக் கிரமப்படி ஏறவேணும். இப்படியாக பிரமசிருஷ்டியிலே வரப்பட்ட பெரியஜெனனத்தை இந்தப் பிறப்பிலேயே கிடைக்கவேணுமென்று எண்ணிறந்தகாலந் தவஞ்செய்தாலும் கிட்டுமோ? இப்போது நான் சொன்ன வரிசைப்படிக்கு தவறுதலில்லாமல் நடந்த இராஜனால் பிராமணஜன்ம முண்டாம். அந்தப் பிராமணன் தனக்கு விதித்திருக்கின்ற விதிப்பிரகாரம் நடப்பானாகில் நன்மையுண்டாம். விதிதப்பினால் பழையகதியிற் கொண்டுபோய் விட்டுவிடும். பிறகு அசாத்தியம். நீதிபராகிய பூபதிகளாலும் பிடிக்கப்படாத சார்த்தூலம் உனக்குக் கிடைக்குமோ? அந்தஆசையை நிராசையாக்கிவிடு. இன்னமும் வேண்டிய பெண்கள் இச்சைகொள்ளும்படியாகவும் உன்னைப் புருஷனாகக்கொண்டு பூசிக்கத்தக்கதாகவும் சுகமே இருவென்று அதற்குத்தகுந்த தேயசும் ஆயுசுங்கொடுத்து புருடூருக்குள் தேவனென்று பெயருமளித்து அவனையொரு தேவனாக்கி வைத்தார். அந்தப்படியே அநேகம் பெண்கள் பூசிக்க சிவந்த மேனிகொண்டு பூமியிற் றிரிந்தான். தேவேந்திரனும் தெய்வலோகம் போனான். ஓ, தருமனே! இந்த மூன்றுகுலத்தாரும் என்னபாடுபட்டாலும் பிராமணனாக மாட்டார்களென்று கங்காபுத்திரன் உரைக்க, இருகரங் குவித் திறைஞ்சி எந்தையே! க்ஷத்திரியர் தவஞ்

செய்து மகாரிஷியாக மாட்டார்களோ? விசுவாமித்திரமஹாரிஷி எப்படியாளுரென்று தருமராசன் வினவ வீட்டுமர் சொல்லுகின்றுர்.

53. விசுவாமித்திரர் பிரம்மரிஷி யானவரலாறு.

அப்பா, அரியோனே சூரியகுலத்திலவதரித்த காதிராஜனுடைய காதலன் கௌசிகராஜன் வெகுநாள் இராச்சியபாரம் பண்ணிக் கடையில் பிரம்மரிஷியானவனது வரலாற்றைக் கேளும். தமக்கையும் தங்கையு மிருவர், ஒருத்தி ரிஷிக்கு வாழ்க்கைப்பட்டாள். மற்றொருத்தி ராஜனைக் கட்டிக்கொண்டாள். இவ்விருவருக்கும் பிள்ளை இல்லாமல் ரிஷியுடன் சொல்லி பிரார்த்தித்தார்கள். அந்த ரிஷிநீங்களிரண்டு பெயரும் மாதவிடாய்வந்த நான்காம்நாள்கங்கையில்ஸ்நானம்பண்ணி, அக்கரையோரத்தி லிருக்கின்ற இரண்டு மரத்தின் பெயரை அவர்களுக்கு உபதேசம்போற்சொல்லி,அதைத் தழுவிக்கொள்வீராகில் கர்ப்பமுண்டாகுமென்றுர். அவர்களவ்வாறு செய்யாமல் மறதியினுல் தங்கைக்கு குறித்தமரம் அக்காளும் அக்காளுக்கு குறித்தமரம் தங்கையுமாக அணைந்துவந்தார்கள்.ரிஷிபார்த்துநீங்கள்நான்சொன்னபடிக்கு நடவாமல் மாறிப்போனபடியால் ரிஷி பத்தினியாகிய உன்வயிற்றிற் பிள்ளைபிறந்து பிராமணகுலமென்கிற பேர்மாத்திர மிருக்க க்ஷத்திரிய கிர்த்தியமாய் நடப்பான். ராஜபத்தினியான உன் கர்ப்பத்தில் க்ஷத்திரியனுகப் பிள்ளைபிறந்து பிராமண நெறிமுறை பிசகாதவனுவான். இது வினைவசத்தால் நீங்கள் தேடிக்கொண்ட நியமமென்று அனுப்பினுர். அப்படியே கருப்பமுற்று இருவரும் பெற்றுர்கள். இதுபூர்வகர்மம்.இவ்விதத்தாற்பிறந்த கௌசிகராஜன் வெகுகோடிகாலந் தபசுபண்ணி பிராமணனுகிறதற்கு மெத்தவும் பிரயாசப்பட்டு பிரம்மரிஷிக் கொப்பாய் விசுவாமித்திரரென்று பெயர்வகித்தார். அவர் பட்டபாடெல்லாம் நீ கேட்டிருப்பாய் அதைக்குறித்து நான் பேசவேண்டியதில்லை. ஆதலால் பிராமணமகத்துவம் மகா பெரிதென்று சதுர்முகனும் சொல்லி இருக்கிறுனென்று அவர்களுக்கு அருள்புரிகின்றுர்.

54. க்ஷத்திரியன் பிராமணனுன பிரகரணம்,

முற்காலத்தில் வீதிவ்வியராஜனென்று யாவராலும் கொண்டாடத்தக்க ஒரு இராஜன் இராச்சியபாரம் பண்ணுகிறநாளில், அவ

னுக்குச் சமானமான பிள்ளைகள் நூறுபெயர் பிறந்தார்கள். அவர்கள் நூறுபேரும் பிரபலமாய் காசிதேசத்தை ஆளப்பட்ட ராஜனுடைய குமாரர்களுடன் கனத்த சண்டை விளைவித்து அவர்களைக் கொன்றூர்கள். அந்தப் பிள்ளைகளின் தந்தையாகிய காசிராஜன் பார்த்து பாரத்துவாசரிஷியினுடைய ஆசிரமத்திற்குப்போய் அவரைக்கண்டு கும்பிட்டுநின்று தோத்திரித்து தீர்க்கதண்டன் சமர்ப்பித்து தன்குமாரர்களுக்கும் வீதிவ்வியராஜன் புத்திரர்களுக்கும்யுத்தம்நேரிட்டு அந்த யுத்தத்தில் தன்பிள்ளைகளிறந்துபோன விர்த்தாந்தமெல்லாஞ்சொல்லி மிகுந்த குறையுடன் விசனப்பட்டார். அதனால் பரத்துவாசருக்குக் கிருபைவந்து காசிராஜனுக்கு எல்லாச் சோபமுந் தீர்ந்து பழமையைப் பார்க்கிலும் புதுமையாய்ப் பிரபலமாய்ச் சுகம் பெறும்படியாக ஒரு யாகஞ் செய்வித்து அந்த எக்கியத்தி னிடத்திலிருந்து ஒரு புஜபலமுள்ள சுத்த வீரனை உண்டாக்கினார். அந்தவீரன் திரிலோகத்தையுஞ் செயிக்கும்படியாகிய திடதிரன். அவனைக் கண்டு சகல பெரியோர்களும் வாழ்த்தினார்கள். அப்பேர்ப்பட்ட பிள்ளையானவன் வீதிவ்வியராஜன் பிள்ளைகள்பேரிற் பகைத்து எதிர்த்து சண்டைவிளைத்து அவன் நூறு பிள்ளைகளையு நூறுக்கி, அப்பால் இப்பேர்ப்பட்ட துட்டனைப்பெற்றவ னெங்கே யென்று சதுரங்கப்படை கூட்டி வீதிவ்வியராஜனைத் தேடிப்போகிறபோது இந்தச்சேதியைக் கேட்ட இராஜன் ஓட்டமாயோடி பிருகு மஹாரிஷியி னாசிரமத்திற் புகுந்து சுவாமி! உமது திருவடிக் கடைக்கலம் எனது பிராணனுக்கபயஸ்தங்கொடு மென்று பிரார்த்தித்தான். அவனைத் தொடர்ந்து முக்கியமாய்ச்சென்ற காசிராஜனுடைய எக்கிய குமாரன் பிருகுமஹாரிஷியின் பர்ணசாலைக் குட்புகுந்து அவருக்குத்தகுந்த தோத்திரம் பகர்ந்து ஐயனே, எங்கள் குலத்தைக் கருவறுத்தபலத்த திருடனைப் பெற்றவன் தங்களிடத்தி னுழைந்து மறைந்திருக்கிறான். அவனைக் கைப்பிடியாகக் கொண்டு போகவேண்டும். அதற்குத் தடைசொல்லாமற் சிலவுகொடுஞ் சுவாமியென்று பாதத்தில் வீழ்ந்து கரங்குவித் திறைஞ்சினான். அதற்குப் பிருகுமஹாரிஷி இதங்கி ஓ! சகலகலையுங் கற்ற இராஜபுத்திரா உனக்குரியசத்துரு இவ்விடத்திற்கு வரக்காணோம். இந்த ஆசிரமத்திலுமில்லை இருந்தானாகில் கண்டுபிடித்துக் கொண்டுபோவென்று இரண்டுதரஞ்சொன்னார். அந்த வீரன்கேட்டு கோபவெகுளிகொண்டு குறித்துப் பார்க்கிறபோது, அந்தப் பிருகு நம்மிடத்தி லடைக்கலமென்று அடைந்தவனை எப்படி காட்டிக்கொடுப்பது ஐயோ, அதிக பாவமாயிற்றே யென்று அருள்சுரந்து தமது

தவமகிமையால் விதிவ்வியன் அநேகம் பிராமணரூபமாயிருக்கிறதை காசிராஜபுத்திரனாக வந்து புகுந்த வீரன்கண்ணுக்குத்தோன்றும்படியாக நினைத்தார். அவனொண்ணிய வண்ணம் வேதபாராயணம் பண்ணி புண்ணியனாகப் பொருந்தி இருந்தான். வந்த இராஜகுமாரன் அந்த ஆசிரம மெல்லாந்தேடி பகைவனைக் காணாதபடியால் மறுபடியும் பிருகுமஹாரிஷியினிடத்தில்வந்து, சுவாமிகளே அபசாரமென்று வெகுவித உபசாரமாய் வேண்டிக்கொள்ளுகிறேன். மனம்பொறுத் தருளல் வேண்டு மாதவனே என்று வணங்கினான். அவருஞ் சந்தோஷமாய் ஆசீர்வதித்தருளினார். அவரிடத்திற் சிலவு வாங்கிக்கொண்டு காசிபட்டணம் போய்ச்சேர்ந்தான். அன்று முதலாகப்பிருகுமுனிவர் தம்முடைய சொற்பழுதாறாமல் விதிவ்வியனைப்பார்த்து நீ இன்றுமுதலென்றென்றைக்கும் பிராமணனாகவே இருந்துவிடென்று கட்டளையிட் டருளினார். பிரமாணந்தப்பாமற் செய்தபோருளினால் பெறுதற்கரிய பிராமண ஜனனப்பேறு பெற்றுமகிட்சியுடன் தவம் பண்ணிக்கொண்டிருந்து திரியாக்கினியிடத்தில் அநேகம் பிள்ளைகளை யுண்டாக்கிக்கொண்டான். அந்த ஓமாக்கினியி லுதித்த பிள்ளைகளும் பிராமண பிரம்மகுலமேயானார்கள். இதைக்குறித்துப் பார்க்குங்காலத்தில் அப்பிள்ளைகள் அக்கினியிற்பிறந்தபடியினாலேயும் இவர்களின்தந்தை பிருகுரிஷியி னனுக்கிரகத்தினால் பிராமணனானபடியினாலேயும் அவருக்குப்பிறந்த பிள்ளைகள் பிராமணராகக் கூடுமென்பது தகுதியான விதிமுறைமைதான் சந்தேகமில்லை. தருமபூபதியே என்று பிரம்மாவுக்கீடாகிய வீஷ்மர் விடைகொடுத் தருளினார்.

55. நங்கள் தங்கள் எண்ணத்தை நிறைவேற்றிக் கொள்வது அவர்கள் வல்லபமா? அல்லது வினையின் வல்லபமா? என்ற பிரசினைக்கு உத்தரம்.

ஐயா, இந்த உலகத்தில் சிலபேர் ஒவ்வொரு பிரதிக்கினைபண்ணி அந்தப் பிரதிக்கினைப் பிரகார முடித்துக்கொள்ளுவது அவர்களுடைய வல்லமையா ? அல்லது வினையினுடைய வல்லமையா? என்று கேட்க, வீஷ்மர் சொல்லத் தொடங்கினார். கேளும் தருமநந்தன ! யாதொருத்தர் பிரதிக்கினை பண்ணி அது முடிவுபெறுவதற்கு அதற்

குண்டான முயற்சிகளெத்தனை இயற்றவேண்டுமோ அத்தனையுஞ்
சோம்பலில்லாமற் பண்ணினாலும் அதுமுடிவதற்கு மேல்வினை விளை
ந்திருந்ததே யாகில், அந்த வினையே எல்லாவற்றையு முடிப்பதற்கு
அனுகூலமா யிருக்கும். தீவினை இருக்குமாயின் தேடிச்செய்யு முயற்
சியெல்லாந் தீதாய்ப்போய்விடும். ஆனால் நல்வினை தீவினை யென்று
நாடி சோம்பலாய் முயற்சிசெய்யாமலிருக்கப்படாது. முயற்சியாரா
ட்டாமற் போனால் மேல்வினைக்கு ஆதாரமில்லை. அதுவுங் கைகூடா
து. அப்படியானால் மேல்வினை என்னமாய்ப்போமென்று கேட்பாயா
கில்; மேகத்தில் பளிச்சென்று வெளிசசங்காட்டி மறைந்துபோகின்ற
மின்னல்போல் இவருக்குச்சற்றே கிரமமிருக்கக்காட்டி மறைந்து
போம். இதுதான் மேல்வினையின் விளைவு. ஆகையால் என்னேரமும்
முயற்சியிலேயே இருக்கவேணும். அவரவர்கள் முயற்சிக்குத்தகுந்த
துபோல் இருவினை விளையு மென்றறியும். முனைந்து பிரகாசிக்கசெ
ய்யு முயற்சியாவது காரியம். வினையானது காரணம் காரணமின்றிக்
காரியங்கைகூடாது. அதெப்படி யென்றால், நன்றாய் முற்றிக்காய்ந்து
தேறியவித்தாலும் நல்லநிலத்தில் விதைத்து எருமுதலியதுங் கொ
டுத்துத் தண்ணீர்பாய்சசலினால் அந்த விதைமுளைத்து கொழுமையு
டன் வளர்ந்து குணமுள்ள பலனைக்கொடுக்கும் அந்தநல்விதயை உ
வர்நிலத்தில் விதைத்தால் முளையாது. தப்பிமுளைத்தாலும் பலனைத்
தாராது. அத்தன்மைபோல் முயற்சிசெய்யாமற்போனால் நல்வினையுங்
கெட்டுப்போம். எவ்வளவு முயற்சிசெய்கின்றார்களோ அவ்வளவும்
நல்வினையானது பிரகாசிக்கச்செய்யும். நெய்யிருக்கிறவரைக்கும் வர்
த்தியிற்பற்றிய விளக்குபிரகாசிக்கும். நெய்யற்றால் திரியெரிந்து நெ
ருப்புங்கூட அவிந்து அப்பாற்புகையும். இன்னும் முயற்சி இருந்து
ஒருவேளை வினை இல்லாமற்போனால் அதிகபலன் கைகூடமாட்டாது.
முயற்சியும் வினையும் சமத்துவமானால் மெத்தப்பிரபலிக்கச்செய்யும்
இதனால் காரணமில்லாமல் காரியமும்பண்புபெறாது. காரணமின்றிக்
காரியமுமாகாது. அதற்குத் திருஷ்டாந்தம் காற்றில்லாமல் அக்கினி
ஜொலிக்காது. நெருப்பில்லாமல் காற்றினாலே யாகம்நடக்காது, இதை
உன்னறிவினாற் றெரிந்துக்கொள்ளும் அறன்குமாரனேயென்று வீஷ்
டுமருரைத்தருளினார். அதற்கு தருமர்பணிந்து சொல்லுகிறார்.

ஐயா! ஒருவருக்குச் சுகமிருக்குங் காலத்தில் அவருடனிருந்து
விருந்து முதலியது மநுபவித்து அவர்கட்குத் துன்பம் வருங்காலத்
தில் மிக்கனவாய்க்கூடிய விகிதத்தை நாடாமல் விட்டுவிடுகிறதா?
அல்லது கூட இருந்து அவர்களுடைய நல்வினை தீவினைதம்முடைய

தென்று அனுபவிக்கிறதா ? இதற்கு விதிவழிசொல்லவேண்டுமென்ன வீஷ்மர் சொல்லத்தொடங்கினார்.

56. ஒருவருக்கு சுகமுள்ளபோது சிநேகமும், சுகம் நீங்கினபோது விரோதமும், கூடாதென்கிறதற்கு திருஷ்டாந்தம்.

அப்பா ! காசிதேசத்தில் வில்லுங்கணையுங் கைக்கொண்டுதிரிகின்றகானவனொருவன் பட்சிமுதலிய மிருகங்களைக்கொல்லுந்தொழிலிற் சற்றேனுங் கூசாதவன், பட்சிகளின்பேரில் பாணங்கள்தொடுக்கும்போதெல்லாம் அந்தப்பாணங்கள் ஒருமரத்தின் மேற்போய்ப்படவும் அந்தபாணங்களில் விஷந்தோய்ந் திருப்பதனாலே அப்பாணம்பட்ட அம்மரத்தினது, பிஞ்சு, காய், கனி, இலை, பூ, முதலியவெல்லாம் உதிர்ந்துபோய் மொட்டை மரமாய் வெட்டவெளியாயிற்று. அம்மரத்தில்வாசம் பண்ணிக்கொண்டு நெடுநாளா இருந்த ஒரு கிளியானது தழைந்தமரம் உலர்ந்துபோனதைக் கண்டு சஞ்சலங்கொண்டு இம்மரத்தின் பழத்தைத் தின்று காலங்கருப்பு தெரியாமல் பிழைத்திருந்தோமே ! இப்போதிந்தமரம் பட்டுப்போனது போலாயிற்றே, இதுதழைத் திருக்கும்போது நாம் செழித்திருந்தோமே, இப்போதிளைத்த காலத்தில் இதைவிட்டுப் போய்விடுகிறது தருமமல்லவேயென்று, அம்மரத்திலேயே இருந்து மழைக்கு நனைந்து வெய்யலுக்குக்காய்ந்து மேனிமெலிந்து குளிரொடுத்து காற்று, இடி, மின்னல், இவைகளால் பாடுபட்டு கருத்தழியாமல், தைரியம்விடாமல், கவலைப்படாமல், சலனமுறாமல், நன்றிகுன்றாமல், பழமைபாராட்டி அறிவையும், பலத்தையும், அனுகூலமாக்கி அவ்விருட்சத்தைவிட்டுப் போகாம லிருந்தது. இப்படிஇருக்கிற காலத்தில், மேகவாகனனாகிய தேவேந்திரன் இந்தவிந்தையையறிந்து ஒரு கிழப்பிராமணனைப்போ லுருவெடுத்து அந்தவிருட்சத்தி னிடத்திற்குவந்து விஷக்கணைகள் பட்டு வெந்துபோயிருக்கிற மரக்கிளையிலிருக்கும் ஸ்திரக்கிளியைக்கண்டு ஓ! அஞ்சுகமே ! உன்னுடல் இத்தனைவருத்தமுறத்தக்கதாக இவ்விடத்திற்காய்ந்து தீய்ந்துமாய்ந்துபோனமரத்திலிருப்பானேன். வேறே தழைத்துப்பழுத்திருக்கிற மரங்களைச்சார்

ந்துசௌக்கியம்பெறக்கூடாதோ? நீ ஏனிப்படிவருத்தப்படவேணும். (ஒரு வீடில்லார்க்கு உலகம் வீடென்பது போல்) ஈஸ்வரனுலேர்ப்ப டுத்தியகாடு அனேக முண்டு. அவைகளில் வாசம்பண்ணிக் காலம்போ க்காலாமே? ஐயோ! வீண்காலம் போக்கிறாயே என்று வேதியன் கேட்க, கிளியானது ஓ, பிராமணரே உமக்கு நமஸ்காரம், நானிந்த மர த்தின்பேரில் நெடுநாள் என் சொந்தமரம் போலிருந்து பிராதக் காலம், மத்தியானம், சாயுங்காலம், இம்மூன்று காலங்களிலேயும் பசிநோய் தாகந்தோன்றுமற்படிக்கு இம்மரத்தின் பழங்களைச் சாப் பிட்டுக்கொண்டு பக்குவமாய் வாழ்வுபூண்டேன். இப்போது இந்தமர த்திற்கு இடை யூறுவந்துவிட்டதென்றுமதிகெட்டமாந்தரைப்போல் செய் நன்றி குன்றி சிந்தைமறந்து, அயல்விருட்சத்தில் அணுகமாட் டேன். இதுவே பேரறிவாளருடைய தன்மை. உலகத்தில் ஒருவ ன்சுகமுஞ் செல்வமும் பெற்றிருக்கும்போது அவனுடன்கூடி சுகத் தை யனுபவித்து அவனுக்குக்கெடுதியும், வறுமையுங் கிட்டியநாளில், கடன்காரர்முதலியபோர்களிடத்தில் அவனைக்காட்டிக்கொடுத்துவிட்டு அப்பாற் போகின்ற கயவர், சுசடர், கல்லாநன்றி இல்லாதவரைப்போல் நானு நீங்கிப்போவது, ஞாயமோ? தருமமோ? நாதனே! சுகத்துக் கெ ப்படிபகுத்து சுகித்தோமோ அப்படியேதீமைக்கும் உடன்பட்டிருக்க வேண்டும். அப்படி இராமற்போவாராகில் அவருக்குப்பழியும்பாவமும், பங்கமும் வரும். அதுவுமல்லாமல் இவன் கொடியநரகமேகுளிக்கவே ண்டிவரும். இந்தத் தருமசூட்சந் தெரிந்திருக்கப்பட்டநான் வேறொரு விருட்சத்திற்குப் போகலாமவென்று பேசியபோது, பிராமணனாகிய தேவேந்திரன் இந்த அஞ்சுகத்தைப் பார்த்துசொல்லுகிறான்: யாவரும் விரும்பும்படியாகிய இந்த செகத்தில் தேகவருத்தம் பாராமலும், பசி யைப்பாராட்டாமலும், நித்திரை இல்லாமலும், பழிச்சொல்லுக்குப் ப யப்படாமலும், அருமையோராமலும், இநத்தார்கள் கூறுகின்ற அவம திப்புணராமலும், நிலைதப்பாமலும், இருப்பதனுற் பயனென்ன? என் றைக்கிருந்தாலும் இறந்துபோகிறதேகம். இருக்கிறவரைக்கும் உண் ண லுறங்க லென்பதை யோர்ந்து அனுபவியாமல் வருந்துவது என் ன பிரயோசன மென்று கிழப்பிராமணன் கேட்கவும், கிளியானது ஓ! ஐயரே! நீர் வேதவேதியர். சகல விதிமுறையுந் தெரிந்தவர். தருமசொரூபி. உன்னைவிட சத்தியகுணி வேறில்லை. நீரே இப்படி சொல்லுவீராகில் நீச்சதுரோகிகளாகிய நன்றிமறந்தவருக்குக் கொ ழுக்கொம்புபோலாம். என்னளவில் இப்போர்ப்பட்ட மொழியை சொ ல்லா திருக்கும்படிக்கு வேண்டிக்கொண்டேனென்றது. அம்மொ

ழிகேட்ட தேவேந்திரன் ஆநந்தமடைந்து ஐயோ, அற்பமாகிய பட்சிக்கு இவ்வளவு பேரறிவு பிறந்தது அருமையென்று அகமகிழ்ந்து தன்னுடைய ரூபத்துடன் பிரசன்னமாய், ஓ அஞ்சுகமே! நீ சுகமாயிரு. நான் தேவராஜன், உன்னுடைய நிலை யுணர்வதற்காக வந்தேன்; நீ மெத்தவும் நன்னெறிபற்றி இருக்கின்றாய். அதனால் நான் கிருபைகூர்ந்தேன். உனக்குவேண்டியதைக் கேட்பாயாகில் தடை இல்லாமல் தருகிறேனென்றான். அதைக் கிளிகேட்டு எனக்கு வரங்கொடுக்க உமக்கிஷ்டமிருக்குமாகில், இப்போது நானிருக்கிற மரம் எப்போதும் போலே இடையூறில்லாம லிருக்கும்படியாக அனுக்கிரகம் பண்ணுமையா வென்று கேட்டது. இந்திரன் அப்படியே அடிக்கிற காற்றிற்கும், பெய்கிற மழைக்கும் அம்மரம் பயமற்றிருக்கும்படியாய்க் கிருபைபுரிந்தருளினர். உடனே அந்த விருட்சம் முன்போற்றழைத்துக் கொழுந்தோடிப் படர்ந்து நெருக்கமாயடர்ந்து வானம்வரையிற் சென்று டர்ந்து பூரித்து, காய்த்து, பழுத்து, சிரக்கம்பஞ் செய்திருந்தது. அப்பா! தருமபூபதியே! அமுதபூபனாகிய ஆகண்டலன் இந்தக் கிளியினிடத்திலிருந்த நன்றிகுறையாத் தருமத்திற்காக முன்னின்று அதனது மனதைச் சோதித்து திறமகலாத திடத்தைக் கண்டு சந்தோஷங்கொண்டு அந்தக்கிளி கேட்டவரத்தைக் கொடுத்துப் போனார். ஆகையால் நல்லவர்களாகிய உத்தமர்கள் சுகதுக்கத்துக்கு உடன்பட்டு நேசமாயிருப்பார்கள். மத்திமர்கள் நீர்நிறைந்த குளத்தில் பறவைசெறிந்து, நீர் வற்றினால் பறந்துபோம் பான்மைபோல் நீங்கிப் போவார்களென்று நன்றியறிந்த வீஷ்டுமர் நவின்றருளினர். பண்டிதனாகிய பாண்டுபுத்திரன் ஐயா, உலகிலுள்ள பொருள்களிலெல்லாம் அறிவே பொருளென்று பேசுகிறார்களே, அந்த அறிவினால் அறியவேண்டிய அரும்பொருளென்ன? திரிகாலமுந் தெரிந்த திவ்விய கியானியாகிய தேவரீர் தெரிவிக்கவேண்டுமென்று வணங்கிக் கேழ்க்க வீஷ்டுமர் சொல்லத் தொடங்கினர்.

57. அறிவே பொருளென்ற நிச்சயங்கூறல்.

கேளும் தருமநந்தனா! நீலமேக சாமளவர்ணனாகியநெடியோன் ஸ்ரீமந்நாராயணன் கோவிந்த கோபால கேசவ வாசுதேவ கோவர்த்தனகிரிதரனாகிய இந்தக் கிருஷ்ணமூர்த்தியின் பாதபத்மங்களைப்பற்றிப் பக்தியாய்க் காண்பதே பேரறிவாகும், இந்தப் பரவாசுதேவனது திருவடிகள் பஞ்சபூதமாகியும் பஞ்சகோசங்களாயும், ஞானேந்திரியங்க

ளாயும், கர்மேந்திரியங்களாயும், பிராணமயமாயும், மனோமயமாயும், விஞ்ஞானமயமாயும், ஆனந்தமயமாயும், அன்னியமாயும், உன்னியமாயும், அன்னியோன்யமாயும், அறிவாயும் அவ்வறிவுக்கறிவாய்,எங்கும் நிறைந்து இருக்கின்ற கர்த்தாவாகிய சாக்ஷியே,தானாகவிளங்கிய பொருளாகியும் ஓமயாகத்திற் குரிமையாகியும் சத்தியமும் நித்தியமும் ஞானஞ்ஞானவிஞ்ஞானபதமாகியும் எல்லாவற்றிற்குமேலான மோட்சசாம்பிராஜ்ஜியத்தை விளக்குவதனால், இனிவேறு பொருளுண்டென்று விளம்பலாமோ? பசும்பொன் னாரம்பூண்ட பாக்கியனே! பாபவினாசனாகிய பரமபதநாதனும் கைலைவாசனும் சத்தியலோகவாசியும் வைகுண்டநாதனும் மயில்வாகனனும் இன்னும் வேதங்களி லியம்பிய பலபேத தேவதைகளும் சுருதிச் சொரூபமும் தோற்றமாற்றமும் இந்தத்துவாரகாபுரிவாசனென்று உணரத்தக்கதே அறிவிலுயர்ந்த அறிவென்று வீஷ்டுமர் சொல்ல, ரிஷீஸ்வரர் முதலாகிய முனிவர்களுங் கேட்டு புன்சிரிப்புக்கொண்டு எதிரிலிருக்கின்ற முகில்மேனியானைப் பார்த்து இவர் சிலநாளைக்குமுன்னே தேவகிதேவியார் வயிற்றிற் பிறந்தவர். யாதவர் குலராஜ திலகனானவர் நம்மிலொருவராய் நலம்பொலத்திற்கு உடன்பட்டிருப்பவரை நான்குவேத முதல்வனென்றும் திருநாரணனென்றும் கொண்டாடுவதென்னசொல்லுமென்று வினவ, வீஷ்டுமர் விளம்புகின்றார். ஓ ரிஷிகளே, தீக்கடைக்கோலிலிருந்து பிறந்த நெருப்பானது கொஞ்சமேனுங் குறையாமல் தன்னுடைய பலத்தையும் குணத்தையும் பாரினில் விரித்துத் தகிக்கும்பான்மைபோல் சந்திரகுலத் தோன்றலாகிய தருமராஜனது தபோபலத்தினால் காருண்யத்திற்கு முதன்மையாகிய கடவுள் திருவவதாரம் பண்ணி பாண்டவர்சகாயனென்றும் பார்த்தசாரதி யென்றும்பெயர்தாங்கி நமதுராஜகுலத்திலொருவராய் வாசம்பண்ணி சுபாசுபங்களுக்கு உடன்பட்டு பக்தபராதீனனா யிருக்கின்றார். இவருடைய அனந்த கலியாணகுண லீலாவிநோதங்கள் அதிசயங்கள் திருக்கூத்துகள் ஆனந்தநடனங்கள் ஆருக்காகிலுந் தெரியுமோ? வேதாகமங்களினாலும் அறியத்தக்கதோவென்றும் ஐம்பொறிச்சேட்டையு மடைக்கி அகோரதபஞ்செய்து அறியத்தக்க பொருளாயும் தத்துவங்களையும் நவநவமாக பிரித்துதன்னையறிந்துணர்ந் தறிவுக்கறிவாய் நிறைந்து நின்ற ஆனந்தப் பொருளாயும், அற்புதவிலாச லீலாவிபூதியைத்தோத்திரம் பண்ணி ஆனந்தபரவசராய் அகங்குழைந்து அன்புபாராட்டி துதிக்கும் வேளையில் அந்த வீஷ்டுமருடைய பக்திரசத்தைப் பக்கத்திலிருந்து பார்த்திருந்த லோகவிராட்சண்யராகிய கிருஷ்ணபகவான் புன்சிரிப்புட

விருக்கவும், வேதவியாசர்முதலிய பாண்டவர்கள் ரிஷிகள் முனிவர்கள் தவசிகளியாவரும் பேரானந்தத்திற் புரண்டு புளகாங்கிதம்போர்த்துமெய்மறந்து நான்குவேதத்தின்முடிவானபரம கருணாநிதியே கேசவநாராயண வாசுதேவ அப்பிரமேய அரிமுகுந்த மாதவ மதுசூதன ஹரிஹரியென்று வாழ்த்திப் போற்றினார்கள். அப்பால் தருமராஜன் பாட்டனைப் பணிந்து பதுமமுகத்தைப்பார்த்து பற்பல இரகசியங்களும் விற்பனவிவேகங்களும் தேவரீரா லறிந்து கிருதார்த்தனாயினேனென்றுபணிந்து ஐயா! இப்பவும் சற்பாத்திரமான பேருக்கும் சகலவேத சம்பன்னனாகிய பிரமக்ஞான பிராமணனுக்கும் யாதொருவஸ்து தருகிறேனென்று சந்தோஷமுண்டாகச் சொல்லி இன்றைக்கு நாளைக்கென்று இதம்படக்கூறி அப்பால் இல்லையென்று சொன்னவனும் ஒன்றுங்கொடாமற்போனவனும் இவர்களென்ன பேறடைவார்கள் சொல்லவேண்டுமென்று வேண்ட, வீஷ்டுமர் திருவாய் மலர்ந்தருளுகின்றார்.

58. வாக்குத்தானத்தின் மகிமை கூறல்.

முற்காலத்தில் ஒரு குள்ளநரியுடன் வெள்ளைக் குரங்கானது கூடி சிநேகம் பண்ணிக்கொண் டிருந்தது. ஒருநாள் நரி, மனிதர்மாமிசம் தோல் நரம்பு எலும்புகளைக் கடித்துத் தின்னும்போது, குரங்கு பார்த்து ஓ நரியே! நீ பூர்வஜன்மத்தில் என்னபாபம் பண்ணினாய் நாயுந்தீண்டாத நாறுடலைப் பிடுங்கித் தின்னுகிறையே என அதற்கு நரியானது ஐயா குரங்கே நான் முன்பிறப்பில் ஒரு பிராமணனுக்குச் சிறிது திரவியங் கொடுக்கிறேனென்று ஆசைவார்த்தை சொல்லி நாளைநாளை யென்றுசொல்லி என்னுயிர் நமனுடையநாளாகி நான் மோசம்போனேன். அந்தப் பாவத்தினால் இந்தச் ஜனனமெடுத்தும் பூர்வக்கியானத்துடன் சொல்லுகிறேன் என்றது. அதைக் குரங்கு கேட்டு அப்படியா உன் பூர்வோத்திரமென்று விசனப்பட்டுபோய்விட்டது. தருமராஜனே பூமியில் யாவனொருவன் பூர்வ புண்ணிய வசத்தால் பொருளுடைத்தா யிருப்பானாகில் அவனுக்கு இடம் பொருள் ஏவல் முதலாகிய துணையுமுண்டாகு மாதலால் அவர்கள் சாஸ்திரங்களை அறிந்த பண்டிதர்களை யடுத்து அவர்களுக்கு உபசாரத்துடன் அவர்களிடம் கல்வி கேள்வியால் தருமமுதலாகிய சத்திய நீதி நெறி

முறையறிந்து தானதருமஞ்செய்து முயன்று பிராமணன் முதலிய ஏழைகளுக்கு அப்போதைக்கப்போதே கொடுத்துவிடவேணும். அப்படிக்கில்லாமல் கொடுக்கிறேனென்று பேராசை காட்டி பிற்பாடு கொடுக்காமலும் இன்றைக்குநாளைக்கென்றும் இழுத்தலைக்கழிப்பானாகில் அவனுக்கே பிணந் தின்னு நரியாகிய பிறப்புக் கிடைக்குமென்று நவின்றார். அப்போது தருமராஜன் புத்தியிற்றெளிந்து பத்தியாய்ப் பணிந்து சுவாமி நான்குவருணாச்சிரமத்தின் தாழ்ந்த குலத்தன் வேதமந்திரங்களை பிரணவசகிதமாய் ஜபித்தால் அவனுக்கு நற்கதியும், உபதேசித்த குருவிற்கு துற்கதியும் உண்டாகும் தருமத்தைச் சொல்லவேண்டுமென்றுகேட்க அதற்குவீஷ்டுமர் ஒருதிருஷ்டாந்தம் சொல்லத்தொடங்கினார்.

59. சூத்திரனுக்கு பிரணவ சகிதமாய் வேத மந்திரங்களை ஜபிக்கச்செய்ததனு லடைந்தபயன்வருமாறு

கேளுந் தருமபாலனே ! இமோத்கிரிச் சாரலில் எண்ணிறந்த பிராமணர்கள் மிகவும் பொறுமையுடனே தபசு பண்ணிக்கொண் டிருந்தார்கள். அவர்களைப்பார்த்து நான்காம்வருணத்தினனாகிய ஒருசூத்திரன் அந்தப் பிராமண ரிடத்திற்குப் போய்ப்பணிந்து அவர்களுக்கெல்லாம் ஆசாரியராயிருக்கின்ற பெரியவரைக் கண்டு செந்தாமரைக் கமலம்போன்ற திருவடியில்வீழ்ந்து வாய்புதைத்து கைகட்டி மெய்யொடுக்கி ஐயா அடியேனுடைய பிறவி வேரறும்படியாக அனுக்கிரகித்து கடைத்தேறும் வழியைக் காட்டும். தவமபுரியுமார்க்கத்தைக் கூட்டுந் தங்களைப்போலாவதற்கு வேதசாரத்தையூட்டும் சுவாமிசரணம்; சதுராசரணம்; தவமே சரணமென்று போற்றித் தாழ்ந்தான். அந்தப் பெரியவர் ஆசீர்வதித்து அப்பா உனக்குத் தவம் எளிதில் வாராது. இங்ஙனந் தவம்புரிவோர்க்கு வழிபாடுபட்டுக்கொண்டு மனத்தூய்மையாயிருப்பாயாகில் அப்புறம் பார்த்துக்கொள்ளலாமென்று அருள்புரிந்தார். அன்றுமுதல் பொறிபுலன்வென்ற பெரியோருடைய உத்தரவின்படிக்கு பழுதறவழுவற்ற பணிவிடை பண்ணிக்கொண்டு அந்தஇடத்தைவிட்டு மற்றோரிடத்திலிருந்து மகாபத்தியுடையவனாய் தேவதைகள் திருப்தியடையும்படியாய் விரதங்கள் செபங்கள் நன்னெறிகள் இ

வைகளின் தவறுமல் தன்ஜாதிமுறைநமை நீதிஒருமைமுதலிய காரியங்களைத் தள்ளி மேலாகிய விரதசீலனும் தன்குருஸ்வாமியை மறவாமல் பிதுர்த்தேவதைகள் ஆசைப்படும்படியாகப் பூசைவைத்துநித்திய கடன்முறைகழித்து கருத்துடையவனும் கோபத்தை யறுத்து ஆசையைவெறுத்து கிருபை காருண்ய முள்ளவனும், திரிலோகமும் கொண்டாடும்படிக்கு சுத்தஜீல சாந்த உத்தமகுணமா யிருக்கிற காலையில், இவனை பெரியோர்களுக்கு ஊழியம் பண்ணிக்கொண்டிருவென்று போதித்த பெரியாசிரியர் இவனது நன்னடைக்கைகளால் நயந்து மிகவும் புகழ்ந்து அகமுங் குளிர்ந்து முகமு மலர்ந்து இவனிடத்திற்கு வந்து அழைத்தார். வந்த குருவைக்கண்ட அந்தமனிதன் வணங்கி திருவடிகளை வாழ்த்தி ஆண்டவனே ! அருந்தவம் பூண்டவனே! நான் கடைத்தேறினேனென்று ஆசையுடன் சொல்லி ஆசானைப் பூசைசெய்து பெரிய ஆசனத்திலெழுந்தருளச்செய்து, அண்டையில் கைகட்டிக்கொண்டு நின்றான். அவனுடைய நிலையெல்லாம் நன்றாய்ப் பரிசோதித்து ஆசார அனுஷ்டானங்களுக்குச் சந்தோஷித்து மகா மந்திர மர்மங்க ளெல்லாம் வழங்கி தாழ்வான காரிய தந்திரங்களைத் தள்ளி நன்மார்க்கங்க ளெல்லாஞ் சொல்லி, பூரண பட்சம் வைத்து இந்த முறைமைப் படிக்கு முயற்சி யோடிருந்து தவம்முற்றினால் நீ நற்கதி புகுவாயென்று அனுக்கிரகம் செய்து விட்டு அகன்றார். அவ்வாறுரைத்த ஆசான்வாக்கியப் பிரகாரம் சூத்திரன் சற்பாத்திரனாய் ஜெபதபங்கள் செய்து வெகுகாலமிருந்து நிரியாண பருவபக்குவஞ்சார்ந்து தபத்தின்பயனால் மறுபிறப்பு ஒரு மகாராஜ புத்திரனாகப்பிறந்து, மிகுந்த கல்விமுதலிய திறத்திலும் கருத்திலும் பிரபலமா இருக்கின்ற பெருமையை அவன் தந்தை யறிந்து சந்தோஷமடைந்து நல்லமுகூர்த்தத்தில் பட்டாபிஷேகங் கட்டி விட்டு வானப்பிரஸ்த்தாச் சிரமத்திற்குப்போனான். தந்தை நீங்கியவுடன் பிள்ளை நீதியாய் உலகாண்டு வருகையில், பூர்வசன்மத்தில் தனக்குத் தருமநெறி நீதிதவஞ்சொல்லிவைத்த சகலகலை வல்லபராகிய ஆசாரியன் இந்தராஜனுடைய பட்டணத்தில் அரண்மனைப் புரோகிதனுடைய பிள்ளையாய்ப்பிறந்து வளர்ந்து வந்தான். இப்படியிருக்க ஒருநாள் அந்தப் புரோகிதப்பிள்ளை நால்வகைச் சேனையுள்ள இராஜனரண்மனைக்கு வரவும், அவனைக்காணவே அந்த இராஜனுக்குப் பூர்வக்ஞானம் வந்தபடியினால் சிங்காசனம் விட்டுத் திடீலென்றிழிந்து கலகலவென்று நகைத்தான். புரோகிதப்பிள்ளை இராஜனையடுத்து கிட்டிவந்து வணக்கத்துடன் என்ன ஐயா ! இராஜ பூச்சிய

சிலனே! என்னைக்கண்டவுடனே நகைத்தகாரண மென்னமோ? என்பேரிற் குற்றங்குறைகளுண்டோ நான் செய்த அபராதம்யாதோ? சிரிப்புவந்ததற்கு முகாந்திரமென்னமோ? அதை எனக்கு தயவு செய்தருளு மென்று பயந்து கேட்க, இராஜன் புரோகிதனைப் பார்த்து ஐயா! நீங்கள் பூர்வம் இமோத்கிரிச்சாரலில் வெகுபிராமணருக்கெல்லாம் ஆசாரியாரயிருந்தவர்கள் நானொருசூத்திரன் அப்போது உம்மைச்சரணென்றடைந்தேன், என்பேரிற்கிருபைவைத்துமந்திரோபதேசம் செய்து என்னைத் தன்னியனாக்கினீர். தேவரீரருளினால் இப்பிறப்பில் இராஜனாக்கிவைத்ததென்று நடந்தவிர்த்தாந்தங்களைச்சொன்னான். இந்தவர்த்தமானந் தெரிந்துக்கொண்ட புரோகிதச் சிறுவன் விசனமுற்று நாமிவருக்கு மந்திரோபதேசம் பண்ணிய பாவத்தினாலே நம்முடைய தவமெல்லாமடிந்து நம்மையும் இந்தப்பிறப்பிற் கொண்டுவந்து விட்டது. நாமுபதேசித்த மந்திரத்தை இவரனுஷ்டித்த படியினாலே பூர்வக் ஞானபுண்ணியகனமும் சார்வபூம சம்பிரமத்தனமும் பெற்றார். நம்முடைய பாவமிப்படியாச்சுதென்று நலிந்து, மெலிந்து, பெருமூச்சு விட்டார். அந்தப்புரோகிதனை இராஜன் வணங்கி மிகுந்த பாற்பசுக்களும் தகுந்த திரவியங்களும் பொன்மலைபோல் குவித்து சுவாமி, தாழ்ந்த குலத்தனுக்குபதேசித்த தன்மையால் தமக்கு நேரிட்ட பாபங்களை எல்லாம் இப்போதே போக்கடித்துக் கொள்ளும். (காஞ்சனம்கர்மவினாசனம்) செய்யுமாகையால் இந்தாரும் இஷ்டப்படி தானம்பண்ணி நீர்வாரும் இறைவனேயென்று எத்தனையோ கோடி பொன்னும் முத்தும், பவளமும் விஸ்தார வஸ்திரங்களுங் கொடுத்து அனுப்பிவிட்டார். அப்பால் அந்தப்புரோகிதர் ஓரிடத்திற்போயிருந்து தருமங்களெல்லாம் பரிந்து வேதவிதியின் பிரகாரம் கருமங்களும்பிரிந்து செய்யும்யாகாதிகிர்த்தியங்களு நடத்திதேவதார்ச்சனை பிதுர்க்கருமம் அதிதிபூசை ஆசாரமுதலியதும் அனுஷ்டித்து பூமிபிரதக்ஷணம்பண்ணி அநேகபுண்ணிய தீர்த்தங்களில் மூழ்கி, ஐம்புலன்களும் புறம்போகாதடக்கி ஆறுபகையு மறுத்து பூர்வஜென்மப் புண்ணியத்தால் யோகத்தினின்று பூரணதேஜசையடைந்து மறுபடியும் எப்போதும்போலவே ரிஷிகுலத்தி லவதரித்து முதல்வனானர். இராஜனும் நான்முறை செங்கோல் நிறைதவறாமல் மனுவிக்கியான மறவாமல் அரசுபுரிந்து கீர்த்தியடைந்து மேலானகதியை விரும்பிப்புகுந்தான். கேளுந்தருமராஜனே, நான் ரிஷிதரும சந்தேகங்களை உனக்கு விசேஷித்துச் சொல்லவேண்டிய நிமித்தியமில்லை, உன்விவேகத்தால் நீயறிந்துக் கொள்ளலாம் குற்றமற்ற வெற்றியைப் பெற்றவ

னே குறைவற்ற கல்வியைக்கற்றவனே, இழிந்த குலமானாலும் நற்குணநற்செய்கை மந்திரோபதேசத்துடனே இருந்து வழிபட்டால் மேற்பட்டகதியிற் கொண்டுபோய்ச் சேர்க்கும். தப்பினால் அவனுக்குபதேசித்தவனை இடர்ப்படுத்தி தாழ்ந்தகதியிற் றள்ளிவிடும் ஆனதால் ஒருவருக்குபதேசம் பண்ணுவதற்கு முன்னமே அவனுடைய பருவத்தையும், செய்கையும் குலத்தின் தொகுப்பையும், குணத்தையும் நன்றாயறிந்து அதிதீவரமுணர்ந்து உபதேசிக்கவேண்டும். மற்றப்படிக்கு பொன்னாசையாலும், பேராசையாலும், தாட்சணியத்தாலும் போதிக்கக்கூடாது. தான்பெற்ற மந்திரத்தை ஒருவருக்கு முணர்த்தாமலிருக்க வேணும், மந்திரமென்பது எளிதல்ல; மந்திரம் தேவப்பிரம்ம சொரூபம். மந்திரமேமாதவம். மந்திரமே யாகம் மந்திரமே யோகம். மந்திரமே தர்மார்த்த காமமோட்சம். மந்திரமே தெய்வம். மந்திர மென்பது இரகசியம். மந்திரத்தினாலாவது மற்றொன்றினாலுமாகாது. மனத்தூய்மையுடைய மந்திரமே பெரியோர்கள் சிஷ்யபருவபக்குவ காலமறிந்து செப்புவார்கள். திங்கள்குலனே யென்றுவிஷ்டுமர் சொல்ல தருமராஜன் கேட்டு அதனாலானந்தமடைந்து, கருணாநிதியே! தேவர்களுக்கு இராஜனான தேவேந்திரனுடன் சிநேகமானாலென்ன அதிசயம்; சிநேகமில்லாமற் போனாலென்னகுறைவு: அதனால்வருங்கெடுதியைச் சொல்லுமென்றுகேட்க, விஷ்டுமர் பேசலுற்றார்.

60. இந்திரனுடைய சிநேகத்தினால் வரும்பயனும் விரோதத்தினால் வருங்கெடுதியும் யாதென்ற பிரசினைக்கு உத்தரம்.

சிவசங்கர னென்கிறராஜன் ஒருகுடை நிழலில் உலகமெல்லாம் ஆளுகைசெய்து வருகையில், எல்லாப்பாக்கியமுங் கிடைத்திருந்தும் புத்திரபாக்கியங் கிட்டாமையால் மனம்வருந்தி பிராமணர்களைகூட்டி எனக்குப் புத்திரச் செல்வமுண்டாவதற்கு ஒருயாகஞ் செய்ய வேண்டுமென்று தொடங்கி, இந்திரனுக்கு விரோதமாகி மந்திரயாகத்தில் அவிர்ப்பாகமளித்து நூறுபிள்ளைகளைப் பெற்று உச்சாகத்துடன் உலகத்தையுங் காத்து பெருக்கமான பிள்ளைகளின் சம்பிர மத்தையும் பார்த்து, அவர்கட்கு வேண்டிய வித்தியாப்பியாச முதலியதும் விளைத்து மிகுந்த பராக்கிரமத்துடன் முயற்சியடைந்து வருகிற முனை

யைக்கண்டு, கனேகள்தீர்ந்து காதலியுந் தானும் நிதகல வாழ்ந்து வருகின்ற காலத்தில், ஒருநாள் வேட்டையாடப் போகவேணு மென்று குமாரவர்க்கங்களும் ராஜஸ்திரீகளும் ரத கஜ துரக பதாதிகளும் மந்திரி தந்திரி பிரதானி வேட்டைக்காரர் வலேயர், நாய்கள், டேகை ராஜாளி, முதலியவைகளும் பொருந்தி வரும்படியாய் வெகு ஆடம்பரத்துடன் காட்டுக்குப் போய்வேட்டை யாடினார்கள். அவரவர்கள் நாலுபக்கங்களிலும் பிரிந்து கண்டபேரண்டம், சரபம், சார்த்தூலம் இன்ன முள்ள துஷ்டமிருகங்களை வெட்டிக்குற்றி சுட்டு வலேயில்மாட்டிப் படுகுழியில் வீட்டிவருகின்ற சந்தோஷ வெற்றியால் சிதறிப் போனார்கள். இராஜன் ஒருமானைநாடி குதிரைமேற் கொண்டோடி கணேகளை யுதிரச்சிந்தி இமைக்கொட்டாமற் றொடர்ந்து வருகிறகாலேயில்,காலங்கருதிக்கொண்டிருந்த தேவேந்திரன் இதுதான் சமயமென்று உகாந்தகாலத்தி லெழுகின்ற சப்தமேகத்தின் மின்னல் இடிமுழக்க விபரீதம்போல் ஒருபயங்கரத்தை யுண்டாக்கினார். அந்த ஓசையானது பிரளயகால முழக்கமாக வதிர்ந்து அண்டகடாகங்கலங்கிப் பூமியுங் குலுங்கியபோது இராஜனைச்சுமந்த குதிரையிரண்டு கடிவாளம் பிடுங்கிகொண்டு கால்மீறி இராஜனைத் தூக்கிக்கொண்டு வாயுவேகமனோவேகமாகப் பறக்கிறபாய்ச்சலில் அரசன்மெய்மறந்து பூலோகவாசையைத்துறந்திருந்தான். இவ்வாறு ஓட்டமெடுத்தகுதிரை வெகுதூரம்போய் மேகங்கள்தவழுமுடியினேயுடைய மலேயோரத்தில் பெருக்கெடுத்து வேகமாய்வருகிற ஆற்றிலிறங்கியது. அந்தக்குதிரையும் அதன்மேலிருந்த அரசனும் முழுகிமுழுகி எழுந்தபோது அந்நதியின் பிரபாவத்தினாலேராஜன்பெண்ணுருவானான். மகாராஜனானவன் பேதமை ஸ்திரீயாகிய பேதத்தினால் மேல்வினையைநினைத்து வெட்கப்பட்டு நாணமுற்று முன்னே வேட்டையாடவந்த காட்டைநாடி வந்து தன்னைபார்த்து சந்தேகப் படாநின்ற தன்பிள்ளைகள்பெண்சாதி மந்திரிமுதலிய மாதவனைநோக்கி நடந்தவிர்த்தாந்தங்களை நவின்று பிள்ளைகளிடத்தில் ராச்சியத்தைஒப்புவித்துஅவர்களை நாட்டுக்கனுப்பிவிட்டு ஸ்தம்பாகிர்தியாய் அசைவற்றுத் தவம்பண்ணப்பட்ட ரிஷிகளிருக்கின்ற ஆசிரமங்களுக்குப்போய் அவர்களுடன்கலந்து உபதேசமுதலியதும் பெற்றுக்கொண்டு, தபசுபுரிந்து காடேகதியா யிருக்கும்போது, காமத்தினாலேஒரு முனிஸ்வரன் கையிற்சிக்கி அவருடன் கலந்து சுகபோகம் புணர்ந்து வாழ்ந்துவருகிறநாளில் சேமல்தேர்போன்ற கடிதடத்தையுடைய இந்தஸ்திரீயானவள் வேறு நூறுபிள்ளைகளைப்பெற்று அந்தப்பிள்ளைகளெல்லோரும் பெரியவர்களாகிய பிற்பாடு அவர்களைய

ழைத்துக்கொண்டு தன்னுடைய பட்டணம்போய்ச்சேர்ந்து, அரண்மனைக்குப்புகும்போது. இவன்முன்னேராஜனாயிருந்தநாளிற்பிறந்தபிள்ளைகள்நூறுபேரும் வந்து தகப்பனென்றறிந்துசாஷ்டாங்கநமஸ்காரம் பண்ணி பெண்ணுருவமைந்ததைக்குறித்துச் சஞ்சலப்பட்டார்கள். அந்தநூறுபிள்ளைகளையும் அருகிலழைத்து ஆசீர்வதித்து வாழ்த்தி அப்பாகுமாரர்களே நான் இந்தப்பெண்ணுருவான பின்பு பெற்றபிள்ளைகள் இந்தநூறுபெயருமென்று அவர்களுக்குத்தெரியச்சொல்லி இவர்களும் நீங்களும் ஏகோபித்துக் கூடிவாழுங்களென்றிசைத்து தான்வனத்திற்குப்போய்விட, அப்பால் இந்தஇருநூறு பிள்ளைகளும் பொருந்தி ஒருவருக்கொருவர் உற்றதுணையாய் ஒருமையாய் வேற்றுமையின்றி மேதினியிலிருந்தார்கள். அந்த நாளில் தேவேந்திரன் மனம்பொறாமல் ஒரு பிராமண ரூபமாய்வந்து இந்தப் பிள்ளைகளிற் சிலருக்குப் போதித்து அவர்கள்மனதைப் பேதித்து பகைவிளைத்து வைத்தான். இவ்விருதிறப் பிள்ளைகளும் பொறாமைக்காய்ச்சலுடன் சண்டைபோட்டு இருநூறு புத்திரரும் இறந்தார்கள். இதனால் கருநிறம்போன்ற கண்களையுடைய இராஜகன்னிகைகள் கண்ணீர்விட்டு பெருமூச்சுடன் தேம்பி வெம்பிதிணறி அழுகும்போதுஒருவன்எதிரில்வந்து நின்றான். அவனைக்கண்டுஅழுகிறஅம்மையானவள் தன்குறையெல்லாஞ் சாற்றினாள். அதைக்கேட்ட அம்மனிதன் உன்பிள்ளைகள் மனம் பேதித்ததுஞ் சண்டை போட்டதும் இறந்ததும் தேவேந்திரனுடைய பகை, அதேனென்றால் இந்திரனுக்கு இதவில்லாத எக்கியத்தைப் பண்ணி நூறுபிள்ளைகளைப் பெற்று பிரபலிக்கச்செய்த படியால் தேவேந்திரனுக்கு இஷ்டமில்லாமற் கோபம்பிறந்து, உன்கணவன் காட்டில்வேட்டையாட போனபோது யுகாந்தகாலச்சப்தமெழுப்பியதும் குதிரைமிரண்டோடப் படுத்தியதும் மலையாற்றிலழுத்திப் பெண்ணாக்கியதும் அந்தப்பெண்ணுருவத்திலிருந்து நூறுபிள்ளைகள் பிறக்கச்செய்ததும், இதுவெல்லாம் இந்திரனுடைய பகையால் விளைந்தது. அந்தத் தேவேந்திரன் நான்தானென்று கலீரெனச்சிரித்து தன்னுருவங்காட்டினான். அதுகேட்டு ஐயனே நாங்கள் தெரியாமற் செய்துவிட்டோம் செல்வமுங் கெட்டோம் சிறுவர்களையுமிழந்து விட்டோம், உமது திருவடிக்கடைக்கலம் புகுந்தோமென்று தோத்திரம்பண்ணி இந்திரனுடைய அனுக்கிரகத்தினால் காட்டில் பெண்ணுருவாயிருக்கிற ராஜாவை யழைப்பித்து இந்தச் சங்கதிகளையும் புகட்டினார்கள். அதுகேட்டு அரசன் தேவேந்திரனைப்பணிந்து ஆகண்டலனே அனந்தகலியாண குணனே ஆநந்தபோக துரந்தரானந்த

வைதீபாக புரந்தரனே! நான் புத்திகெட்டேன் என்னை இனிச்சுகப்ப டுத்திக் காப்பாற்றுமையா வென்று தேவராஜனைப்பணிந்துவேண்டிக் கொண்டு,என்னுடைய புத்தியீனத்திலேலே நான்தப்பிப்போய் யாகஞ் செய்யப்புகுந்ததும் உமக்கு என்பேரில் ஆயாசம் விளைந்ததும், பிள் ளைகளிறந்ததும் நான் பெண்ணு யமைந்ததும் செல்வமுதலிய ராஜா ங்கத்தைத் துறந்ததும்,உம்மை யாகத்தில் மறந்ததும் என் தீவினைப் பயனென்று சிந்தைநைந்து உபசாரஞ்சொல்லி மனம்பொறுத்துக் கொள்ளும் மகத்தின் வேந்தேயென்று வேண்டிக்கொண்டான். அத ஞல் திரிலோகபூசிதனுகிய தேவேந்திரன் மனதிரங்கி கோபமாறி சா ந்தமுடையவனுய் ஒவேந்தனே, இறந்துபோன இருநூறு பிள்ளை களில் சிலரைப்பிழைப்பிக்கிறேன். உனக்கிஷ்டமான பிள்ளைகளைக் காட்டென்று கேட்டான். அதற்கு நான் பெண்ணுனபின்பு பெற்ற பிள்ளைகளைப் பிழைப்பூட்டுமென்று போற்றினுன். வச்சிராயுதன் நீஇ ராஜாவா யிருக்கும்போது ராஜபத்தினியினிடத்திற் பெற்றபிள்ளைக ளைநாடாமல் புருஷப்பெண்ணிடமாய்ப் பிறந்த பிள்ளைகளை நினைத்த து என்னகாரணமென்று கேட்கவும் இராஜன்சொல்லுகின்றுன். நா ன் புருஷனுயிருக்கும்போது என்னுயகியும் நானுங்கலந்து பெற்றபி ள்ளைகள் அவர்கள். இவர்கள் நூறுபேரும் என்வயிறுநோகச் சுமந்து வருந்திப் பெறப்பட்டவர்களாதலால் சொந்தச்சந்ததிப் பிள்ளைகளைப் பார்க்கிலும் இடையில்வந்த இந்தப்பிள்ளைகளின்பேரில் ஈஸ்வரன் ஏ ராளமாக ஆசையுண்டாக்கி இருக்கின்றுன்; ஆனபடியால், அந்தப் பிள்ளைகளை எழுப்பித் தாருமென்று கேட்டான். ஆண்டவனே உயி ருதவிசெய்யும் கருணைக்கண்பாரும், என்காதலரைத்தாரும், கண் ணுயிரக் கடவுளேயென்று கைதொழுதான். இந்திரன் மனமகிழ்ந்து அந்தப்பிள்ளைகள் நூறுபேரும்பிழைக்கும்படிக்கு அனுக்கிரகம் பண் ணி மேலுஞ்சொல்லுகின்றுன். ஓ, இராஜனே நீ பெண்ணுயிருக்க வேண்டியதில்லை, உன்னை முன்னைப்போலவே வேந்தனுக்கி விடுக்கி றேனென்றுன். அதைக்கேட்ட அரசன் இந்திரனுக்கு வந்தனைதந்து ஐயா, தேவர்க்கிறையே புருஷனைப்பார்க்கிலும் பெண்களுக்குப் போ கசுகமதிகமானதால்,எனக்குப்புருஷ வடிவம்வேண்டாம் பெண்வடி வமே சம்மதம் இதனுலெனக்குவேண்டிய இன்பஞ்சனிக்கின்றது. இதுவேபோதுமான தென்றுன். அதைக்கேட்டு இந்திரன், அற்புத மடைந்து புருடனு யிருந்தவன் பெண்ரூபத்தைப் பெற்று, அதின்பி ரதாபப்பிரபலத்தை அனுபவித்துப் பேசுகின்றுன். புருஷஜன்மங்கெ ட்டதென்று ஏசுகிறுன் ஆதலால் இவனென்றென்றைக்கும் பெண்

வடிவமாயிருக்கத் தக்கதென்று பெருவரங்கொடுத்து ஸ்திரப்படுத்தி விட்டுப்போனன் இப்பால் இவன் நூறுபிள்ளைகளுடன் பெண்ணுருவம் பொருந்தியிருந்தான்.

கேட்டீரோ தருமநந்தனே! நீ வினவிய சந்தேகத்திற்கு உத்தரமிது வென்றுரைக்க அதற்கு தருமராஜன் ஐயா, இந்தச்சங்கிரதாளுகிய ஸ்ரீ கிருஷ்ணனது வல்லமையைக்கேட்க மனமுவந்தேன். திருவாக்காலுரைத்தருள வேண்டுமென்றுவணங்கிய தருமருக்கு ஆசீர்வதித்து மூலப்பிரகிர்தியின் முதலறிந்த முதல்வன் திரிகரண சுத்தியாய்ச் செப்பத்தொடங்கினர்.

61. ஸ்ரீகிருஷ்ணருடைய மஹாத்மியம்.

கேளும் தருமபாலகா, அச்சுதனுக்கு மைத்துனனுன அறன்காதலனே ஒருவராலும் பெருமையை யுரைத்தற் கருமையாகிய கெருடன் பூமியிற்பிறந்து, தாயாருடைய சாபந்தீர்க்கவேண்டி சத்துருவின் பிள்ளைகளாகிய சர்ப்பங்களுக்கு தேவாமிர்தங்கொண்டு வரும்படியாய் தேவலோகத்தைக் குறித்துப் போகிறபோது எதிர்த்துப்பகைத்த தேவர்களை எல்லாஞ் செயித்து தேவாமிர்தத்தை எடுத்துக்கொண்டு திரும்பிவருங்காலையில் ஞானேதய மூர்த்தியானகருடனுக்கெதிரிலே யானையின்மேலாரோகணித்து; ஆரோ ஒருவர்போல மகாவிஷ்ணுவந்து வழிமறித்து நின்று நல்லவார்த்தை நவின்று நாளுவிதவரங்களளித்து ஸ்ரீமன் நாராயணபகவான் போய்விட்டார். அப்பால், பெற்றவளனுபவிக்கிற ஆபத்தை தீர்த்தபிற்பாடு தந்தையான காசிபர் பிரம்மாவினிடத்தில்வந்து பிரதக்ஷணநமஸ்காரம் புரிந்து ஐயனே, நான் தேவாமிர்தத்திற்குப் போய்வரும்போது, மகாவிஷ்ணு குறுக்கேவந்து எனக்கு அநேகவரங்கொடுத்துப் போனுரென்று நடந்தசங்கதிகளை ஒளியாமல் நவின்றபோது, கருணைக்கடலாகிய காசிபர்கருத்துருகிக் கசிந்து கருடனைக்குறித்து அப்பா, லோகராட்டியன் தாயிலுங் கிருபையுடைய தயாளன் சகலாத்மகோடிகளையும் ரட்சிக்கப்பட்டவன் பக்தபராதீனன் ஆதிமூலப்பொருளாகிய அவரோயுனக்குகாட்சிகொடுத்தாராகுல்,அநேகங்கோடிநாள்தவம் புரிந்தாலுங் கிடைத்தற்கருமையாகிய திருவடி வேதங்களினலு மறியக்கூடாத பாதம்கிடைத்தது உன்னுடைய தவமென்றுன்னி நாங்க

ளியாவரும் கொண்டாடுகின்றோம், எத்தனையோகாலமெல்லாம் வருந்தித் தவமிருந்த ஜீவன் முத்தர்கள் முதலிய அருந்தவர்களும் பெறக்கூடாத பெரியபதம்பெற்றாய். இவ்வுலகமெல்லாம் அவருடைய ஆதீனம். பாலாழியிற்றுயிலும் பரந்தாமனாகிய ஸ்ரீமந்நாராயண மூர்த்தியை கிருபைக்கடலை அருள்மாரிபொழியு மேகத்தை ஆபத்பந்துவை, பிரமனைத்தந்த திருநாபிக்கமலனை சோதியாய்த்துலங்குந்துளவணி மார்பனை நீண்ட மேனி நெடுமாலை வாசுதேவனை கோவிந்தனை அச்சுதனை கேசவனை, வாசவனை, முரஹரியை, முகுந்தனை மூலப்பொருளாகிய முதல்வனை நீ தரிசித்ததே பாக்கியம், இப்பவும் அந்த மகாநுபாவர் பதரி காச்சிரமத்திலிருப்பார். அவரைக்கண்டு பணிவிடைத் தொண்டு பண்ணிக்கொண்டு பாபரகிதனாயிருவென்று புத்திரனுக்கு வேண்டிய புத்திமதிகளைப் போதித்து சுவாமியின் பிரதாபங்களெல்லாஞ் சொல்லி யனுப்பினார். தந்தையுரைத்த மந்திரமொழிப்படி சர்வக்கியனாய் பதரிகாச்சிரமத்திற்குச் சென்று ஸ்ரீமந்நாராயணமூர்த்தியைக்கண்டு ஆனந்தத்துடனே மயிர்க்கூச்செறிய அனேகமாய்க் கண்ணீர்பொழிய ஆடிப்பாடிக் கோடிகோடியாக அடிமேற்பணிந்து மனத்திலுணர்ந்து நாவுகுளறத் தோத்தரித்து, நிற்கின்றகெருடனை வைகுண்டவாசன்பார்த்து நகைமுகத்துடன் கிருபைகூர்ந்து ஓ! பட்சிராஜனே, என்னைத் தேடிக்கொண்டு வந்தமையால் என்னிடத்தில் எப்போது மிருக்கக்கடவதென்று அருள் புரிந்து பதரிகாச்சிரமம் விட்டெழுந்து கருடனுக்கு முன்னாகநடந்தார். சுவாமி எழுந்தருளியபோது கருடனுங் கூடக்கடுகியோடினார். ஸ்ரீமந் நாராயணக்கடவுள் கொத்தாகிய கொன்றைமலரை முடித்துச் சத்தாகிய அம்பிகையை வாமபாகத்திலமைத்து கங்கையையுந் திங்களையுந்தரித்து புலித்தோலும் பொங்கரவமும் பொருந்திய சங்கரன் யோகத்திலிருக்கின்ற கைலைமலையையும் சந்தனம் கமுகுமரங்கள் மலைந்த, நந்தவனத்தையுங்கடந்து உத்தரதிசையை நாடிச்சென்றபோது அவ்விடத்தில் ஒருவராலு முணரக்கூடாத இருட்பூமிதோன்றவும், தவத்தைப்பெற்ற கருடனுக்கு வழிதெரியாமல் மனத்துணிவு நீங்கிமதிமருண்டு மயங்கினான். அந்தவேளையில் பரவாசுதேவனுடைய பக்தனான கருடனுக்கு சூரியப்பிரகாசச் சோதிபோல் இருள்கெட ஒளியுண்டாக்கினார், உடனே கருடன்கண்டு அக்ஞானத்திலழுந்தி எழுந்து விக்ஞானசோதியில் மெய்மறந்தவர்போல், மகிழ்ந்து சர்வலோகநாயகன் அந்த இருள்வனத்திலும் பூமியிலும் ஆகாயத்திலும் உலாவிக்கொண்டிருப்பதும் பலபுவனமும் சகலசராசரமும் அண்டரண்ட பிரம்மாண்

டமும் சிருஷ்டி திதி, சங்காரங்களும், முக்குணமும் மும்மூர்த்தியும், பற்பல பேதாபேதமான சில்லறை தெய்வங்களும் முப்பத்து முக்கோடி தேவதைகளும் நாற்பத் தெண்ணாயிரம் ரிஷிகளும், ஏகாதச ருத்திரரும், துவாதசாதித்தரும், அஷ்டவசுக்களும், திக்குப்பாலகரும், பஞ்சபூதமும், சப்தசமுத்திரமும், பெரும்பொறைக்கடலும், சக்கிரவாளகிரியும், பரமபதம், கைலாயம், சத்தியலோகம், மகமேரு முதலான குலாசலமும் மூன்றுகோடி யறுபதினாயிரம் புண்ணியதீர்த்தமும், நாவல், இறலி, குசைகிரவுஞ்சம் புட்காரம் தேனுனை கமுகு இவ்வேழுவிருட்சங்களும் பாரியாத்திரசுவேத முதலான நான்குவனங்களும், நான்குமடுவுகளும் அநேககோடி பர்வதங்களும் தும்புரு நாரதர் முதலாகிய சப்தரிஷிகளும், மற்றரிஷிகளும், பிரிதிவிமண்டலத்திலுண்டான அற்புதங்களியாவற்றும் இவரல்லா தில்லை யென்று கண்டுகொண்டு அதிசயப்பட்டு தன்னாற்பார்க்கச் சக்தியுமில்லாமல் பிரமித்து இனி நாம் பார்த்து முடியாதென்று பகவானைச் சிந்தித்து, வந்தித்துத் தோத்தரித்து, சுவாமி தேவரீருடைய பரிபூரணலீலா விநோத விபூதியை நான்கண்டு களிக்கமாட்டுவேனோ; வேதாகமசாஸ்திரங்களும் அதை உணரமாட்டாதே நானறியாச் சிறியேன்பயப்படுவேன். இந்தமகாவிலாச சொரூபத்தை மறையும் மறையுமென்று நாநடுங்கி கண்களை மூடிக்கொண்டு க்ஷணநேரம் பொறுத்துகண்ணை விழித்துப்பார்த்து கருணையங்கடலேயென்று கருதியபோது சாரங்கபாணியாய்த் தனித்திருப்பதைக் கண்டு, இதென்ன விந்தை ஆரிடத்திலிந்த அதிசயங்களைப் பார்த்தோம். (அவரே ஆலமரத்தை யடக்கியவித்துப்போலிருக்கக் கண்டோம்.) சர்வசீவ தயாபரனென்று வணங்கிப்போற்றிய கருடனை மகாவிஷ்ணுபார்த்து இதெல்லாம் என்னுடைய மாயாவிலாசம். இதை யறியத்தக்கவரே ராரென்றுரைத்து அனுக்கிரகஞ் செய்தருளினார். அப்படிப்பட்ட ஆண்டவன் எப்பேர்ப்பட்டவர்க்கு மெட்டாதவன். முத்தி முதற் பொருளென்று கற்றுணர்ந்த வீஷ்மர் சொன்னார். அதைக்கேட்ட தருமராஜன் புகழ்ந்து ஐயா நீண்ட அளகத்தையுடைய மாதர்களி யாவரும் பாபரூபமென்று பகருகின்றார்கள், என்னிதயத்திலும் அப்படியே இருக்கின்றது. அதனுடைய விபரத்தை அடியேனுக்கு அனுக்கிரகம் பண்ணுமென்று கேட்க, வீஷ்மர் சொல்லத் தொடங்குகின்றார்.

62. ஸ்திரீகள் பாபஜென்மமா என்ற பிரசினைக்கு உத்தரம்.

கேளும் என்னருமையான தருமனே! மகதியாழ் வல்லவராகிய நாரதர் பூமிசஞ்சாரம் பண்ணி வரும்போது அவருக்கெதிரில் பெருமை பொருந்திய ரூபலட்சணமமைந்த ஒருபெண்கள் சிகாமணி செந்தாமரைபீதிறுமாந்துள்ள சிந்தாமணியைப்போல் வந்தாள். அவளது சௌந்தரியமானது இரதியோ தவ விரதியோ என்னும்படிக்கிருந்தது. அவளை நாரதர் கண்டு அதிமோகங்கொண்டு ஆபரண வலங்கார சிங்காரமா யிருக்கப்பட்ட பெண்களனைத்தும் பாபசென்மமென்று படித்த பெரியோர்கள் விதித்திருக்கின்றார்கள். அதென்னத்தினாலென்ன, அந்த அப்ஸர ஸ்திரீயானவள், ஓ பிரம்மபுத்திரரே நீர் கேட்டகேள்விக் கொப்பில்லை யாதொருபிசகில்லை உண்மைதான். உன் றந்தையான பிரமன் சகல பாவங்களையுந் திரட்டிப் பெண்ணுருவாக்கினார். அந்த மகா பாவிகளுடைய சரித்திரத்தைக் கேட்க தேவரீர் செவிக்கு விருப்பமா யிருக்கின்றதோ, ஆனால் நானறிந்தமட்டுஞ் சொல்லுகிறேன் நீர் கவனமாய்க் கேளும். ஒருவர் ஒரு காரியத்தைச் சொல்லும்போது வேறு சிந்தை கொள்ளாமல் விருப்பமாகக் கேட்டு திருப்பியுத்தரஞ் சொல்பவன் உத்தமன். மற்றவன் செத்தவன். இதை நீர் அறிந்துகொள்ளும் ஐயா. இவ்வுலகத்தில் உமக்குத் தெரியாத விஷயங்களொன்றுமில்லை. அக்கியான கேவல பாபமே ஸ்திரீகள். அதெப்படியென்னில், விக்ஞான மேலோங்கி எப்பேர்ப்பட்ட புருடனையும் மாயைவலையில் வசப்படுத்திக்கொண்டு தாங்களே அவர்களுக்குப் பிராண சஞ்சீவி யென்றுஞ் சகலசுகமு மிவர்கள்தானென்றுந் தோன்றச்செய்து, எண்சாணுடம்பிலிருக்கும் புண்காணியை அவன் பார்க்கப்பார்க்க மயங்கி பிரமைகொண்டு முயங்கி கரும்பின் ருசியினுங் காமமதிகமென்று அதரோஷ்டரசமருந்தி அவள்காலடியேகதியென்று, செப தப விரத நோன்பு தெய்வம் பிதுர்க்கரும முதலியவெல்லாமறந்து, பந்து மித்திர சுற்றந்தாரையுந் துறந்து, இவளை தனது குலதெய்வமென்று சிறந்த் உடல்திரப்பணிந்து, அவள் ஆளடிமைபோல் வீழ்ந்து கிடக்கத்தக்கதாகச் செய்துக்கொள்வாள். சமுத்திரத்தையும் மழைத்துளியையும் வான்மீனையும் கீருமணனுண்மையும் கணக்கிட்டளக்கலாம். கண்டள்ளிக் கொள்ளலாம். பெண்களுடைய கருத்தின் அளவையும் அவர்கள் கொண்ட காமப்பெருக்கத்தையும் அளவி

டப்படாது. அவர்கள், மோனமான ஞானியையும் மோசம்போகச்செய்வார்கள். ஞானதீபத்திற் கொருபற்று, கோபத்துக் கொருகொத்து, தீயமாபாபத்துக் கொருவித்து, அவர்களை நம்பின ஆபத்தால் வரும் விபத்து, நரகத்திற்கொரு மந்திரமூலம்,நகைமுகமோகமோ மந்திரஜாலம், நயமொழியோ செவிக்கேறிய ஆலம்தளிர்போன்ற உயிர் கீறிய சூலம், நரகக்குழியும் நவத்துவார வழியுஞ் சரியென்பதற்குச் சாட்சி. சீழு, இரத்தம், நிணம், புழு, வெப்புநீர் இவை தொக்கிக் கிடப்பதனாலும் இஃதி லழுந்தியபேர்கள் நல்வினைப்பயனெலாழுந்தாற் காணலாமென்பதினாலும் நாற்றமிருந்திருப்பதினாலும் நால்வருநகைக்க அனுபவிப்பதாலும் பேதமில்லை. ஐயா நாரதரே! நெருப்பைத் தொட்டாற் சுடும். இப்பேர்ப்பட்ட பெரும் பாவிகளை நினைத்தாற் சுடும். இத்தியாதி குரூரகுணமுடைய துரோகிகளைக் கூடினனில் அந்தப்பாவம் இவனுக்கு ஏழேழுசென்மத்திற்கு நீங்காது. இப்படியான ஸ்திரீகளுடன் சேருவது மகா சௌக்கிய சுகமென்று எண்ணுவதொன்றேயொழிய சுகமென்பது கிடையாது. துக்கமென்பது இவனை விட்டகலாது. அதெப்படியென்றால், சுணங்கன் (பசையற்ற என்பைக்கடித்து தன்னுடைய உதிரத்தை சுகித்து பசியாறுவது போலாம்.) இந்த ஸ்திரீகளிடத்து ஆசாபாசவிசுவாச நேசம் வைத்தாலும் முத்துமுத்தாய்ப் பேசிக் கொஞ்சினாலும் உனக்கு நான் முறியென்று கெஞ்சினாலும் நெஞ்சிலடக்கிய வஞ்சம் விலக்கார்கள். துரோகம், கபடு, நித்திரிப்பு, வஞ்சகம், மோசம், காவிடம், பொய், சண்டை, கூச்சல் இதுகளே மெய்யாயிருக்கிற பெண்போகத்திற்கு மிஞ்சிய போகம் எந்தநாளுமில்லையென்று எவனொருவன் எண்ணி இருக்கிறானோ அந்த நாள்வரையிலும் பாவத்திற் குடன்பட்டு துக்கங்களை யனுபவித்து, சங்கடத்தினால் வருந்தி நோயினால் நொறுங்கி நொந்து நைந்து புகைந்து இருமி தலைநடுக்கிச் சத்துப்போம்போது ஸ்தூலதேகத்தை நீங்கி சூட்சமதேக மொன்றாக்கி யாத்மா சரீரத்தை வருந்தி நரகத்திற் பொருத்தி எரித்து இம்சைப் படுத்துவார்கள். ஆகையால் பெண்களைப் பாபரூபமென்று பகருவதாம். மேலும், எந்நாளும் புருடர்களுக்கு ஸ்திரீகளால் துக்கமேயல்லது சுகமில்லை. சுகமென்கிற கிஞ்சித்போகம் சஞ்சிதபாவம். யாவனொருவனுக்கு அதிக துன்பமடைவதாய் தீவினை யுளதோ அவர்களைத்தான் பெண்ணாசைப் பேய்ப்பிடிப்பது. பித்தேறியசித்தம் மெத்தத் துடிப்பது. புண்ணியவான்கள் விஞ்ஞானப் பொருளைப்பற்றிப் பேசுவதல்லது காமத்தைக் குறித்துப் பேசார்கள். கயவர் கருமைபெற்ற கண்களை

யுடைய கண்ணுட்டியென்று ஆசைமயக்கேறி மோசமையல் மீறி க ண்ணோய், வெட்டை, சிரங்கு, சூலை, கிரந்தி, மூலம், பவுத்திரம், அ னையாப்பு, வெள்ளை, காங்கையேலிட்டு அன்னங்கசந்து பசிமாறி அஜீ ரணப்பட்டு தேகம்வியர்த்து தாகமெடுத்து ஈளை இருமல்மிகுந்து பெ ருமைகுறைந்து பீடைதழைத்து முடிவாகிற பரியந்தம் மூக்கல் கக் கல் விக்கல் ஓக்கலுடன் கூடியழு தலை எடுக்க வொட்டாமற் றனைம ட்டமாக்கி உயிரொன்னும் பயிரையறுக்கிற காம அரிவாளை நினைந்து அதற்குரியவர்களாகிய துரோகிகளை மறந்து, தெய்வமே என்னைவ தைக்காமற் கொண்டுபோய் விடுவென்று கண்ணீர் பெருக்கி ஆலால விடமாறுலும் வடவைக்கனலாறுலும் வாசியே, அடிபாவி வேசியே நாளும் வருத்தி நலிக்குதே, சீழுமிகுத்து வலிக்குதே திட்டென்று வீ ழ்ந்து பொட்டென்று போகாமல் சித்திரவதை செய்கிறதே, எத்தனை விதமா இணங்கிக் கலந்திருந்தாலும் இடைந்திருந்த தன்மனதுபோல வே இப்படி இருந்தாளே, ஒன்றிருக்க ஒன்றைச் சொல்வதுபோல் வ ஞ்சித்தாளே, திரிபுவனங் களிலுள்ள தேவதைகளும் ஸ்திரீகள் மன தைத்தெரிந்துக் கொள்ளமாட்டார்கள். ஆதலால் அவர்கள்மனம்வஞ்சக னை குடிகொண்டகப்பல், மாயையடைத்து வைத்திருக்கும் பேராசை கொண்ட பெட்டி, பேதைமாந்தரைப் புதைக்குமண் வெட்டி, இவைக ளைப்பாரம்பரியமாய்த் தெரிந்திருந்தும் விளக்கைப் பிடித்துக் கிணற் றில்விழுவார்போல் மூடர்கள் நம்பி அவளெப்படி சொன்னுலும் அப் படியே கேட்டு நடந்து மனோவாக்குக் காயமூன்றும் அவளுக்கு வச மாக்கிப் படுகுழியிற் பட்ட யானைபோல் சிக்கிக்கொண்ட பேர்களியா ரோ அவர்கள் தான் பிறவியென்கிற துக்க சமுத்திரத்தில் மூழ்கிக் கிடக்கப்பட்டபேர்கள். ஸ்திரீகளெல்லோரும் பாவிகள் தானோவெ ன்றால், ஏகதேசத்தில் கடலிற் கன்மிதந்தாப்போல் கற்புடைய பதி விரதைகளாய் தன் புருஷனை தெய்வமென்று, மணவாளன் சொல்லு க்கு மாறுபேசாத மாதர்கள் சிலருண்டா யிருக்கலாம், அப்படிக்கில் லாவிட்டால் பெண்களென்கிற வாசனையற்றுப்போம். ஒருதீக்கடைக் கோவினிடத்திற் செனித்த தீயானது அதிகசுவாலையாய் சோதியாய் மிகுந்தகிரணங்களுடனே வெப்பங்கொண்டு குளிர்ந்து குழைந்து கிட க்கிற சேறுகியபாத்தையும் உலரச்செய்வதெப்படியோ அப்படிப்போ ல உத்தமஸ்திரீகளுடைய தரிசனத்தினுல் சகலபாவமும் தோஷமும் பொசிந்துபோய் விடுகிறது. ஆனதால் அவர்களைக்குறித்து நினைக்க வேண்டுவதில்லை. இது அற்புதமே அநேகங்கோடி ஆத்மாக்களில் சுகர், வாமதேவர் என்னப்பட்ட சிறிதுபேர் மாத்திரம் எவ்வாறு ஞான

வான் களாயிருந்து அவளைக் கண்டு தரிசித்த பேர்க்கெல்லாம் ஞா
னோதயமாய் பிறவிக்கடலைக் கடந்தார்களோ, அப்படிப்போல் அநேக
க்கோடி பெண்களுக் குள்ளே ஒவ்வொருத்தர் உத்தமிகளா யிருப்ப
துண்டு. மற்றமாதர்க ளியாவரும் பாவிகளே. பெண்களினாலே புருஷ
ர்கெட்டுப் போவார்களென்பது பொய்யல்ல. இதற்குத் திருஷ்டாந்தம்
பூர்ணசந்திரனுக்குச் சமானமான முகத்தினை யுடையகௌதமர் பெண்
சாதி அகலிகையினாலேதேவேந்திரன் எந்நாளையிலு நீங்காதபழியும்
பாவமும் தேகமுழுதும் ஆயிரம்யோனி ஆசவும்பெற்றான். உலகிலு
ள்ள பெண்களினழகில் எள்ளத்தனை எள்ளத்தனை எடுத்துப்படைத்
த மூன்றாம் பிறைபோன்ற நெற்றியையுடைய திலோத்தமை யான
வளால் ஒரு முகமாயிருந்த பிரமன் நான்முகமாய் நாணமடைந்தான்.
சுந்தோபசுந்தன் உடலுயிரும்போலிருந்த அண்ணன் தம்பி இருவரு
ம் ஒருவராலுஞ் செயிக்கப்படாத ஊமுடையவர்கள் மேனகையா
லழிந்தார்கள். சந்திரன் தீராத சாபம்பெற்று தேகங்குறைந்து திரி
ந்தலைந்து தாரையென்னுங் குருபத்தினியால் தாழ்வினை பூண்டான்.
மூன்றரைக்கோடிவயது பெற்ற இராவணன் சீதாதேவி பந்தத்தால்
புத்திர மித்திரகளத்திராதி சோதரருடன் மாண்டுபோனான் இன்ன
ம் பூதலத்திலும் பாதலத்திலு முள்ளரிஷிகள் முனிவர்கள். தபசிகள்
அரசர்கள் தேவர்கள் யாவர்களும் மாதர்களாலே பழியும் இழிவும் பா
வமும் ரோகமும் தரித்திரமும் வருத்தமு மடைந்து வாணாளொழி
ந்தார்கள். இதுகளெல்லாம் காமமாகிற கிஞ்சித்து மோகமல்லவோ
இப்பாட்டுக்குங் கேட்டுக்கும் வாட்டமாயிருந்தது, மேலும் பெண்க
ள் நல்லபுட்பம் ஆடைஆபரணம் இவைகளைக்கொண்டுவந்து கொடுக்
கச்சொல்லி கேட்பார்கள், அவர்களிட்டப்படி கொடாமற்போனால்
கெட்டமனத்துடன் இகழ்வார்கள், இல்லை என்னாமற் கொடுத்தால்
அதைச் சிங்காரித்துக்கொண்டு அடக்கமில்லாமல் வெளிப்பட்டு காம
க்கிழத்திகளாய் விரகமேலிட்டிருந்து எத்தனை விடநாயகன் கூடி
னாலும் சித்தினியாகிய ஸ்திரீகளுக்கு சற்றேனுங் காமத்தணி விருக்க
மாட்டாது. புருடனுக்கு உண்டாகிய போகத்தில் எழுபங்கு அதிக
மாயிருக்கும். புருடன்மனது அல்பம், பெண்கள் மனசு காயகல்பம்.
ஆதலால் ஆணுக்குப் போகமுந்தும் அவர்கட்குப் போகம்பிந்தும் சரி
ப்படாது அப்படிக்குச் சமப்பட்டிருப்பது அருமை. இப்பேர்ப்பட்
டஸ்திரீகள் எப்படி அடங்கி இருக்கிறார்களென்றால், சாதிக்கட்டுப் பா
ட்டுக்கும் இராஜதண்டனைக்கும் பழிச்சொல்லுக்கும் பதுங்கி இருக்
கிறார்கள். இத்தியாதிகாரியங்களும் பிரயோசன மில்லாமல் இட்ட

மாகிய இன்பந்தேடுவார்கள். பெண்ணென்கிற பெயரும் ரூபமும் காமமே.நாயகன் எத்தனை நயமாகவும் நலமாகவும் நன்மையாகவும் நாகரீகமாகவும், நல்லம்மான் பிள்ளையாகவும் கிடைத்திருந்த போதிலும் அயலார் மேலாகு மனம், பரபுருஷனைச் சேருவதே பாக்கியசுகமென்றெண்ணுவார்கள். இதன்றியும் தந்தையானபோதிலும் கருவிலமைந்த மைந்தனானபோதிலும் அண்ணன்தம்பியான போதிலும் அழகுடையவராகிருக்கில் பெண்களுக்கு நிதம்பந்துடித் துதிரம் பொழியும். அதனால் அந்தப் புருஷனை எப்போது சேருவோமென்று முப்போதுங் கவலைகொண்டு அன்னிய நாயகனை அணையும் பெருமையே அனுதினமு நினைவார்கள். இப்படிப்பட்ட கெட்டநினைப்பையுடைய துட்டப்பெண்கள் கொட்டமான பாபத்தைக் குடிவைத்துக் கொண்டவர்கள். அவர்களுக்குச்சுசி, சுத்தமிராது அதேதெனில் முதிர்ந்த உதிரம், மூத்திரம், இந்திரியம், மதசலம், மும்மல பாசம், மொய்க்குங் கிருமிகள்வாசம் கீழ்வாய்நேசம் வியர்வை யுல்லாசம் வெகுசுகமோசம், இதுகள் இடைவிடாம லூறிக்கொண்டிருக்கிறசேற்றுக்கயம். அதனாற் சுசிஇல்லை சுத்தமுமில்லை. இது புத்திமான்களுக்குத் தோற்றும் புத்தீனருக்குத் தோன்ருது. இவ்வளவுதானையா பெண்ணுருவெல்லாம் பெரும்பாவ ரூபமென்று மகா மகதியாழ் கைக்கொண்ட நாரதருட னவின்று தேவதைகள் கொண்டாடுஞ் சௌந்தரிமாகிய அப்சரஸ்திரீயென்பவள் நாரதனை யகன்று போய்விட்டாள். கேளுந் தருமராஜனே யென்று பகர்ந்த பாட்டனைப் பணிந்து ஐயா, இத்தியாதி குணங்களை யுடைய பெண்களை எப்படி மணம்புரிவது எவ்வாறு காக்கவேண்டியதென்று கேட்க, அப்பா அவர்களைக்காக்க அரியரப்பிரமாதிகளாலு மாகாது.மெத்தப்பிரயாசம்.மோகமும் மோசமும் தேகமா இருப்பவர்கள், அவர்களுடைய மனதை பெரிதுசெய்து முந்தானைக் காவலாயிருந்து முன்னவனைப் பெருமைப்படுத்தி மனைவாழ்க்கை நடத்திவந்தால் நல்லதாயிற்று இல்லாமற்போனால் ஏழுமதிலிட்டிருந்தாலும் எட்டுத்திசைக் காவலானாலும் உருவியகத்தி கைக்கொண்டு நித்திரை இல்லாமற் காத்தாலும் ஒருவரால் கட்டுத்திட்டம் பண்ணமுடியாது. அறக்காத்தவன் பெண்டிழந்தானென்னும் பழமொழியுண்டு. அப்படிக்குக் கொரேமாகவும் கட்டுப்பண்ணக் கூடாது, காவலில்லாமலும் விட்டுவிடப்போகாது, சாக்கிரதையோ டிருப்பதாகக் காட்டிக்கொண் டிருக்கவேணும். அதற்கொரு கதை சொல்லுகிறேன் கேள்.

63. ஸ்திரீகளை மணம்புரிவதும் அவர்களைப் பாதுகாப்பதும் எப்படி என்ற பிரசினைக்கு உத்தரம்.

தேவசருமனென்கிறவொருமுனீஸ்வரன் இருந்தான். அவனுடைய
பெண்சாதி உசிசை என்பவள் சித்திரக்காரரால் எழுதி முடியாதவி
சித்திர அழகி. மகா புத்தியுடன் புருஷனுக் குபசாரம்பண்ணிப் பணி
யப்பட்ட புத்திசாலி. இவ்விதமாக இருவருங் கூடி வனத்தில் வாழ்ந்
துவரு நாளையில் ஒருநாள் இன்னொருவனத்தில் ஒருவருக்கு எக்கிய
ம்பண்ணி வைக்கவேண்டிய வேலைவந்தது. அதை மனத்திற்கொ
ண்டு விபுலனென்னும் பிரதம சீடனைப்பார்த்து அப்பா எனக்கு மனை
வியாகியும் உனக்குத் தாயாகியுமிருக்கிற உசிசை என்னும் ஆசாரிய
பத்தினியை விட்டுப் பிரிந்து ஒரு வேள்வி செய்யப் போகவேண்டிய
தாய் நேரிட்டது. என்னுடைய ஸ்திரீயை தேவேந்திரன் விரும்பி
வெகுநாளாய்க் கண்போட்டுக்கொண் டிருக்கின்றான். அதை நானறி
ந்து ஸ்திரீகளுக்கெல்லாங் காவல் வேண்டுமென்று கழறிய நீதியின்
படிக்கு பத்திரமாய்ப் பாதுகாத்துக்கொண்டிருந்தேன். அதனால்
இதுவரையிலும் இந்திரனுக்கு எட்டாமற் போய்விட்டது. அப்படிக்
கிருந்தபோதிலும் அவன் இவள்மேற்கொண்ட ஆசையை வெறுத்து
விட்டவனல்ல. ஆகையால் நான் அக்கரையாய் யாகம் பண்ணிவைக்
கப் போகவேண்டி இருக்கிறது. நான்போய்வருகிறேன் நீ என்னைப்
போல் இரவும் பகலும் ஏமாறாமல் இந்திரன் வந்துநுழையாமல் என்
மனங் குழையாமல் உன்தவம் பிழையாமல் காத்துக்கொண்டிருவெ
ன்று கருணையோடுரைத்து மறுபடியுந் திரும்பிவந்து சீடனைக்குறித்
து அப்பா தேவேந்திரன் பலவித ரூபமெடுத்து வருவான். அதெல்
லாவற்றையும் உனது தவமகிமையா லுணர்ந்து அதற்குத் தகுந்த
அவசரத்துடன் தடுத்துக் காத்து ஜாக்கிரதையா யிருவென்று அநேக
முறை யுரைத்துப் போகத்தொடங்கினார். ஆசாரியன் மொழியைக்
கேட்ட விபுலனை சீடன் சுவாமிகளே! நீ ரொன்றுக்கும் பயப்பட
வேண்டாம் மனதிற் சஞ்சலம்வேண்டாம் அந்தவேலைஎன்சொந்தவே
லை நீர்போய்வாரும் உத்தரவின்படி பத்திரமாய்க் காக்கிறேன் பாரு
மென்று ஆசானைபூசித்து அனுப்பிவிட்டு சீஷன் ஆசாரியபத்தினியை
வித்தியாசமில்லாமற் காத்துக்கொண்டிருப்பவன்போல் வெளிக்குக்
காட்டி மகாமர்மத்துடன் தேவேந்திரன் மாறுரூபமாய்வந்து வஞ்சிக்

கப்போகிறுனென்றும் ஆசாரியர்நமதுசொல்லை நம்பித்தானே போயி ருர், எதாகிலுங் குறைவுவருமாகில் நமது சத்தியம் தவம் நிறைவுரு தென்று நினைந்து ஆசாரியர் பெண்சாதியும் தெரிந்துகொள்ளா திருக் கத்தக்கதாய் பரகாயப்பிரவேசபந்தமென்னுஞ் சாகாமந்திரத்தால் குரு பத்தினியின் தேகத்திற் பிரவேசித்து பிராணனேடு பிராணவாயுவாய்க் கலந்து பிழையற்றிருந்தான்.இந்தபுரட்டை இந்திரனறியாமல் அவள் கொண்டையைப்போல இருண்டகாலத்தில்,செங்காவிவஸ்திரமும் லங் கோடும் தண்டுகமண்டலமுங்கொண்டு வச்சிராயுதமனைய கண்களையு டையமாதரசியின்ஆசிரமத்திற்குள்வந்து பெண்கள்மோகிக்கும்படியா கியவடிவமெடுத்து, தகத்தகாயமேனியுடன் வச்சிரபாணியாய் உச்சித ரூபமாய்அவளுக்குநேரில்நின்றான். அவனைக்கண்டமங்கையானவள்ம ருண்டாள். அப்போதே இந்திரன் சொல்லுகின்றான். ஓ திங்கள் வதனாய்! பெண்கோகிலமே, மாதுரத்னமே உன்பருவமும் உன் சொரூபமும் உன்னுருவமும் வீணாகப் போக்கிவிட்டாய். ஆ! என் னுடன் கூடினால் இன்பம் வேறு தேடுமோ, உன்னுடன் கலந் தால் இஷ்டம் வேறே நாடுமோ, இந்திரபோகம் உன் சொந்தம ல்லவோ. பாக்கியம் நீ பார்த்துப் பகர்ந்தவர்க்குண்டாம். பெருமை யால் மகிழ்ந்து புளகாங்கமாம். இந்தப் பேய்முனியைப் பற்றிக் கொண் டிருப்பதிற் பிரயோசனமென்ன? நல்ல சோறுண்டா, வர் ணத்துணியுண்டா, பூச மஞ்சளுண்டா, சிலவுசெய்யப் பொருளு ண்டா, சீராய்ச் சிறப்பிக்க ஆபரணங்களுண்டா, தித்திப்பா யுண் பதற்குச் சிற்றுண்டியுண்டா, கட்டினதாலிக்குமேல் கடைமணியு ண்டா கலவிகுலவிபுலவிதிருத்திக் கூடுதலுண்டா, வெள்ளைப்பல்லு க்கு வெற்றிலையுண்டா, கிள்ளித்தெறிக்கச் சதையுண்டா, ஐயோ! ஏ னிப்படி வீணாய் வாணாளை மாய்க்கிறாய் என்றென்றைக்கும் இந்தப் பருவகால மிருக்குமோ இனிப் போனால் வருமோ என்னிடத்தி லன் புவைத்து இன்புறுமென்று இதவாகிய வார்த்தைகளை எடுத்துப் பே சும்போது,அந்தரிஷிபத்தினியுடலுக்குள்ளே பாவி அயிக்கியமாயிரு க்கிற சீடன்கேட்டு மனதுநொந்து வருந்தப்பட்டு கோபமெழுந்து ம றுபடியுமடங்கி அந்த ஆசாரிய பத்தினி பேசுகிறப்போலவே அவள் வாக்கிலிருந்து வசனித்தான். எப்படிக்கென்றால், நீயார் இந்திரன ல்லவா? எங்கிருந்து வருகின்றாய். ஒருத்தருடைய ஆசிரமத்திற்கு ம ற்றொருவர் வரலாமா? நீ இராவண சந்நியாசியைப்போல் வாசற்காவ லாளியையு மயக்கி வந்தாயே, நீ யப்படி வருவதற்கு என்னசுதந்தரம். மாயாண்டி வேடம் ஏன்கொண்டுவந்தாய், நீ பெரியமனுஷன்,உனக்கு

புத்தி இல்லையா, தேவர்களுன்னை வணங்குவார்களா, சதமகனென்கிற சப்தமுனக்குண்டா, முன்பட்ட சூடு மறந்துவிட்டாயா, முதற்கொண்ட தாரந் துரந்து கெட்டாயா, உனக்கு விண்முழுதாளி என்னும் பட்டந் தகாது, பிரகஸ்பதி பேசிய நீதி போதாது,போபோ என்ன,தேவேந்திரன் திப்பிரமை கொண்டு பிராணன் போனபின்னம்போல மூர்ச்சையடைந்து சோர்ந்தான். அந்தச் சமயத்தில் சிடனுன விபுலன் அந்த அம்மன் தேகத்தைவிட்டு வெளிப்புறப்பட்டு சர்வசம்ஹார காலருத்திரன்போல் கொதித்து சகலபூதமு நடுங்கக் குதித்து ஆ, தேவேந்திரனே ! என்னுசாரியனில்லாத வேளையறிந்து என்தாயாரிடத்தில் வந்து வாய்க்குவந்த வம்புமொழிகளை வசனித்தாய், மடையர்போல புஜலித்தாய். என்னுண்டவன் கண்டால் நீ பூண்ட பட்டமும், பூண்களும், பொருளும், பொன்னும் பாழாய்ப் போய்விடும், உன்னையும் பிறவிஎழாயத் தேடும், நீ கெடுவாய் கெடுவாய், அடா குடிகேடா, படுபாவி, குருத்துரோகி, யாகம் நூறுவாய்,உன் தேகம் நீறுவாய் ஓ காமியே மூதேவி இருக்கும் பூமியே, பரதாரம் பரபொருள் இச்சிப்பது பான்மையன்றென்று யோசிக்கவில்லையோ ? உரிமையான நீதிசாஸ்திரங்களை முறையாய் வாசிக்க வில்லையோ ? வாசித்ததை விசுவாசிக்கவில்லையோ ? ஆளனில்லாதவேளையில் பெண்களை அனியாயஞ் செய்யவந்தாயோ இதுவே யுனக்கு நிரந்தர வேலையோ ? நெறிமுறையறியாத பாலையோ? அடா அந்நியாயக்காரா,நீ பாவியிலும் கொடியபாவி பெரும்பாவி இதோ உன்னைக்கொல்லுகிறேன் பார், இனி யுனக்குப் போக்கிடமெங்கே சாக்கடைநீரோ, நீ பிராணனுடன் தப்பிப்போவையோ,என்கையாற் சாவையோ சொல்லென்று மந்திரவாளை யுருவிக்கொண்டான். அதை இந்திரன் கண்டு, கிடுகிடென்று நடுங்கி விடவிடென்று ஒடுங்கி வெட்கப்பட்டு துக்கத்துடன் உடம்போடுயிர் போனவன்போற் பயந்து மானத்தால் நயந்து மகாரிஷிகுச் சிடனுன விபுலனுடைய பாதத்தில் வீழ்ந்து பரதவித் தெழுந்து ஓ மகானுபாவா ! மாதவசீலா, ஞானவதீதா, நற்குணரூபா, சுவாமி, என் அபராதத்தை இன்றைக்குமாத்திரம் மன்னித்துவிடும். எளியேன்பொருட்டு இரக்கப்படும்? எரியும் கோபத்தை விடும். ஏழையின்பேரிற் கிருபைவையும் இளைத்தபேருக் கருள்செய்யும். புத்திகெட்டேன் உமது ஆசாரியர் சொல்லைக் காப்பாற்றியது போல் அடியேனைக் காப்பாற்றி ரட்சியும் இந்தம்மாளுடைய பதிவிரதாதன்மத்தைப் பாதுகார்த்ததுபோல் என்மதி விருதாவாகாமல் மானங்காத்தருளும் சபிக்கவேண்டாம் க்ஷமிக்கவேண்டுமென்று அங்கங்

குன்றிப் பங்கப்பட்டு செங்கரங்குவித்து சங்கர சுயம்புவே என்று சா ஷ்டாங்கமாய்ப் பணிந்து இன்றுமுதல் என்றென்றைக்கும் இப்படி ப்பட்ட துட்டவேலைக்கு உட்படப்போகிறதில்லை உமக்காட்பட்டேன். ஐயனே அற்பத்தனத்திற் பிரவேசித்து கௌரவத்தைப் போக்க டித்துக்கொண்டேன். இனி புத்தி வந்ததென்று போற்றிப் புலம் பினன்.

அந்த முனிவனுடைய மாணுக்கனுகிய விபுலன் மலைபோலெதி ர்ந்த கோபத்தை மாற்றி மனமிரங்கிக் கிருபைகூர்ந்து ஐயோ! ஆக ண்டலனே, உனக்கு எல்லாப்போகமுங்கிடைத்திருக்க ஒன்றுமில்லாப் புல்லனைப்போல் திரிவானேன். இதுநன்மையல்லவே? உன்னைக்கொ ல்லும்பகையே. இனிமேலும் இப்படிப்பட்ட பொல்லாங்கிற்கு இடங் கொடாதீர். புண்ணியவான்கள், புனிதவதிகள் சாபம் பொல்லாததே, நீ பிழைத்துப் போய்விடு உனக்குப் பிராணபிட்சை கொடுத்தேன் ப தனம்பதனமென்று சொன்னன். அப்படியே மகாபாக்கியம் உமதுவாக் கியமென்று அடிக்கடிவந்தித்து இந்திரன் அமராவதிக்குச் சென்றன். இப்பால் மகாரிஷி பத்தினிக்கு புருஷதருமங்களும் பதிவிரதா மகத் துவமும் போதித்து, ஆவலாகிய தாயினிடத்திற் காவலாயிருந்தான். இப்படிஇருக்கிறகாலத்தில் எக்கியம்செய்யப்போன தேவசருமரிஷி யானவர் வந்தார். அவரைக்கண்டு தெண்டனிட்டு நடந்தவிர்த்தாந்த மெல்லாஞ் சீடர்சொன்னர். அதைக்கேட்டமகாரிஷியானவர் மனமகிழ் ந்து சந்தோஷப்பட்டு சீடனுக்கு மங்களமுண்டாகும் படிக்கு ஆசீர்வ சனங்களுடன் வேண்டியவரங்களெல்லாங் கொடுத்து தன்பெண் சா தியுந் தானும் ஒருமையுடன் வாழ்ந்திருந்தார்கள். (பூமிதேவியான வள் மண்வெட்டி முதலிய ஆயுதங்களினுல் தன்னை வெட்டுகிற பேர் களைத்தானே சுமந்துக் கொண்டிருக்கும் பொறுமைபோல்) தேவேந் திரனினைத்த குற்றத்தைப் பரிகரித்திருந்தார். கேளுந்தருமநந்தனுபெ ண்கள் பேரிலெவ்வளவு ஆசையிருந்தாலும் அந்தஸ்திரீகள் மேல்விழு ந்து மோகப் பட்டாலும் அவர்களை நம்பப்போகாது, மெத்தப்பத்திர மாய் தம்முடைய புத்தியை நிறுத்த வேணும் பதறலாகாது நம்பிவி ட்டால் மோசமும் நாசமும் முண்டுவரும் என்று சரசயனத்தி லிரு க்கும் வீஷ்மர் சாற்றினர். அந்தமகாவிரத மூர்த்தியை மாதவனும் பாண்டவர்களும் ரிஷிகளும் போற்றினர்கள் மறுபடியும் வீஷ்மர் முரசகேதனனை நோக்கி சொல்லுகிறர் ஓ! பாண்டுகுமாரனே.

ஒரு அப்ஸரஸ்திரீயானவள் மிகுந்த அழகுடனும் மகாசம்பிரம விலாச உல்லாசத்துடனும் ஆகாசத்திற் போனள், அவள் கையிற

பிடித்திருந்த பொன்னுருவின் பூமாலைதவறி மேற்சொல்லியதேவசரு
மரிஷியின் ஆசிரமத்தில் விழுந்தது. அந்த ரிஷிபத்தினியாகிய உவி
சை என்பவள் சீக்கிரத்திலெடுத்து தன்னுடைய கூந்தலில் முடித்
துக் கொண்டு கிடைத்தற்கருமையான மாலைகிட்டிய தென்று சந்
தோஷ சம்பிரமங்கொண்டாடிக் கொண்டிருந்தாள். அப்படிக்கிருக்
கும் போது இவளுடைய தங்கைபுருஷன் காட்டில் வேட்டையாடி
இவர்களிருக்கிற ஆசிரமத்தின் வழியே வந்தான். மைத்துனனைக்
கண்ட மகாரிஷியின்பத்தினியானவள் எத்தனை தூரம் வேட்டைக்குப்
போனீர், இத்தனைநேரம் சாப்பிட வில்லையோ, இளைப்பா இருக்கிறீ
ரோ கொஞ்சங்-கந்தமூலங்கள் தின்று தாகத்திற்குப் புசியுமென்று உ.
பசரித்தாள். அவன் தான் வந்த களையைப்பாராமல் மூத்தமாமியார்
முகத்தைப்பார்த்து நீர்முடித்திருக்கிற புட்பமாலை திவ்வியதேவமண
மா இருந்து திக்கெட்டும் பரிமளிக்கிறது. இப்பேர்ப்பட்ட பூமாலை
உண்டென்று இதுவரையிலும் நானிந்தப் பூலோகத்திற் கண்டதில்லை.
இந்தமலர்மாலை உனக்குக்கிடைத்தவரலாறு எனக்குச் சொல்ல வே
ண்டுமென்று வேண்டினான். அதற்கவள் சந்தோஷமடைந்து தன்
புருடனாகிய தேவசருமருடனே சிரித்துவார்த்தையாடி என்தங்கை
புருஷன் அங்கதேசாதிபனானவர் நான் முடித்திருக்கின்ற பூமாலை
யைப் பார்த்து இதனது பரிமளமும் பொன்னிறமும் மிருத்துவமும்
தன்புத்தியை மயக்கிவிட்டது தானெங்குங்கண்ட தில்லையென்று இச்
சையாகப் பேசினார். இப்பேர்ப்பட்ட பொன்னுருமாலை என்தங்கையு
முடிக்கும்படியாக தேவானுக்கிரகம் பண்ணவேண்டுமென்று உபசா
ரஞ் சொன்னாள், அவளுடைய அமுதம்போன்ற மெல்லியமொழிக்கு
தேவசருமர் மயங்கி யாசற்ற விபுலனென்னுஞ் சீடனை வரவழை
த்து நீ தேவலோகம்போய் இந்தப்பொன் னுருமாலையைச் சீக்கிரங்
கொண்டுவர வேண்டுமென்று அனுப்பினார். உடனே சீடன் ஆசா
ரியருக்குப் பிரதக்ஷண நமஸ்காரம் புரிந்து ஆசிர்வசனமும்அனுக்கிர
கமும்பெற்றுஅமரருலகத்திற்குச்சென்று அழகியமலர்மாலைகொண்டு
ஆசாரியருடைய பர்ணசாலையை நோக்கி வருகிற வழியில், ஒருபெண்
ணும் ஒரு புருஷனும் தோற்புக் கெலிப்புத் தோன்றாமல் பொறாமை
மேலிட்டு ஆர்ப்பரித்துச் சண்டை செய்திருந்தார்கள். அதை இந்த
விபுலன் கண்டு இச்சண்டையால் நமக்கென்னகாரியம். ஆசாரியர் ப
ணிவிடையே வீரியமென்று அவசரமா யோடிவரும்போது ஆறுபே
ர்கூடிய கூட்டம்,சூதமாடிய தேட்டம்,கேட்டப்பந்தயம் ஆட்டத்தில்
நேரிட்ட வாட்டத்தால் ஏசிக்கொண்ட இழிவையும் பேசிக்கொண்ட

சபதத்தையுங்கேட்டு இது நமக்குப் பொருளல்லவென்று அருள்நிறைந்த ஆசானிடத்தில்வந்து அடிமலர்மேல் பொன்மலர்வைத்து அஷ்டாங்க நமஸ்காரஞ்செய்து கைகட்டிநின்றான். தேவசருமர் சிந்தைமகிழ்ந்து தெய்வலோகத்துத் திவ்வியமாலையை தருமபத்தினியினிடத்திற் கொடுத்து அங்கதேசாதிபனான அரசனுக்குக்கொடுபித்து அவனுடைய பட்டணத்துக்குப் போகும்படிக்கு அனுப்பிவைத்தார். இப்பால் சீடனான விபுலன் குருவின் திருவடியைத்தொழுது ஐயனே, தெய்வலோகம்போய் பூமாலை கொண்டுவந்த வழியில் விந்தையான அதிசயங்கள் வெகுவாய்க்கண்டேன், அந்த விஷயங்களில் ஒரு புருடனும், ஒருஸ்திரியும் சண்டைபோட்டு அந்தரத்திற் சுழன்றார்கள். அதைப்பார்த்துக்கொண்டு இப்பால்வரும்போது மும்மூன்றுபேர் கூடிச் சூதாடுகையில் யாதோ ஒரு காரியத்தைப்பற்றி ஒருத்தருக்கொருத்தர் சபதம் பண்ணிக் கொண்டார்கள். அவ்வாறுபேரிலொருத்தன் வழியேவருகிற என்னைப்பார்த்து இதோபோகின்றானே குருத்துரோகி இவனடையப்போகிற பாபநரகத்தில் நானும விழக்கடவேனென்றான். அந்தச் சொல்லைக்கேட்டது முதல் இதுவரையிலும் எதுகாரியத்திலும் அசைவற்றிருக்கின்ற கருங்கல்லாகிய என்மனது கரைந்து கலைந்து கலங்கிக் கவலைப்படுகிறது. ஆண்டவனே என்மனமறிய ஒருபாவமும் செய்திலேன், அப்படியிருக்க இப்படிப்பட்ட குருத்துரோகியென்னும் பெயர்வருவானேன் சுவாமி, விபரமாய் எனக்குத் தெரியச் சொல்லவேண்டுமென்று விசனமுற்று விக்கி விம்மி முறையிட்டழுதான். அதற்கு ஆசாரியர் சொல்லுகின்றார் அப்பா கலக்கமுறாதே, நீவந்தமார்க்கத்தில் அந்தரத்தில் ஆணும் பெண்ணுமாய்ச் சுழன்று சண்டை செய்தா ளென்றாயே அவர்களிருவரும் பகலுமிரவுமாம். மற்ற இருமூன்று பேரும் ருதுக்கள், அவர்களுன்னைக்கண்டு நீபோகிறகதியிலே போவேனென்று சபதம்பேசியது உன்னிடத்திலிருக்குங் குற்றத்தைக்கண்டு சொன்னார்கள். அது என்னவென்றால் தேவேந்திரன் என்பெண்சாதியினிடத்தில் வாராமலிருக்கும்படி உன்னைக்காவலாக்கிப் போயினேன் நீ என்பத்தினி புத்திக்குத் தெரியாமல் அவளுக்குள்ளே புகுந்து கலந்து மறைந்திருந்தது உனக்குஅதுதருமமுறைமையல்ல.மேலும் இப்படியாகக்கலந்திருந்து இந்திரனோடு வார்த்தை ஆடி வென்றே னென்று என்னிடத்திலுஞ் சொல்லாமற்போனாய், ஸ்திரீயையறியாமல் அவளுடைய அவயவங்களிற் சேர்ந்து பொருந்தி மருவி இருந்ததை, அவளெப்படியும் ஸ்திரீசென்மம்,பேதமைக்குணப் பிழையானவர்கள் சரியாயிருப்பா

ர்க ளென்று சாதிக்கப்படாது. சந்தேகப்படக்கூடாது ஆசாரிய பத்தினியாகிய அவளுக்கு நீபுத்திரன், தாய்கருப்பத்தி லூறிக்கிடந்த தநயன் யோனித்தழும்பு படவந்தமையால், ஒருவருடம் அவளுட னூடாடிக்கொண் டிருக்கின்றான். இது அப்படியல்ல சம்மந்தபாவம், நேத்திரபாவம், நினைக்கும்பாவம், பரிசபாவம் இப்படிக்கெல்லாம் பகுத்தறிவுடையோர் பகர்ந்திருக்கின்றார்கள். ஆகிலும் இதிலொருசாரந்தம் வன்மை இல்லாமல் உண்மைபேசினால் தோஷம் அறுமென்று சுருதிப்பிரமாணமுண்டு.நான் வந்தபோது என்னுடன்சொல்லி விடுவையாகில் உருகி இளகிப்போய்விடும். எனக்கு நீ மிகவும் சரியான பிரியசிடனானகையால் நீ நினையாமல்வந்ததிந்தப்பாவம். இதை நீங்கும்படி செய்தேன், இனி நீ நிந்தை இல்லாமல் அருந்தவம்புரிகவென்று பெருந்தவனாகிய ஆசான்மொழிந்த பொருள் கொண்டு தன் குற்றந் தனக்குத்தானே தெரிந்துகொண்டு தான் செய்தது பிசகென்றோர்ந்து என்னவேலை செய்தோமென்று இதயங்கலங்கி வெகுகாலந்தபசுபண்ணி அப்பாலாசானுஞ் சிடனுங் குருபத்தினியும் நற்கதி புகுந்தார்கள்.

பூமண்டலத்தை ஒரு வெள்ளைக்குட நிழலிலடக்கிப் புரந்தருளுந் துரந்தரனே என்று நிரந்தரமான யோகநிஷ்டை குலையாத வீஷ்டுமர் சொல்ல, தருமராஜன் முதலியபேர்களுஞ் சந்தோஷப்பட்டு நமஸ்கரித்து உலகத்தில் யாவரிலும் பெரியவர் இன்னாரென்று சொல்ல வேணுமென்ன வீஷ்டுமரநோக்கலுற்றார்.

64. உலகத்தில எல்லாரிலும் பெரியவர் யார் என்ற கேழ்விக்கு உத்தரம்.

ஓ! அறன் குமாரனே பூர்வத்தில் இதோ இருக்கின்ற ஸ்ரீ கிருஷ்ணபகவான் நாரதரைக்குறித்து நீராரைவணங்குவீரென்று கேட்க, அதற்கு நாரதர் சொன்னதாவது ஓ! சௌரிராஜப் பெருமானே பரமேஸ்வரன் மகாவிஷ்ணு பிரமன் வேலாயுதக்கடவுள் வாயு வருணபகவான் அக்கினிதேவன் தேவேந்திரன் இவர்களைப் பணியப்பட்ட அடியார்களுடைய பாதங்களுக்கு நானடிமையாய் வணங்குவேன், பின்னும் கதிக்கு வழிகாட்டப்பட்ட குருஸ்வாமியினுடைய வார்த்

தைகடவாதபேர் ஒருவராலும் நீக்கப்படாத மாயையையென்ற பெரியோர் மனவெறுக்காமல் இல்லறத்தில் நல்லறத்துடன் முகஞ்சுளிக்காமல் வந்தவிருந்தை உபசரித்தூண்பிக்கும் உரியோர் வேதாகம விதிவிலக்கு பிசகாத மெய்யர், தென்புலத்தார் பூசை ஸ்திரமாய் நடத்தும் விரதர், பிராமண விசுவாசம் பசுதருமம் புரியப்பட்ட புண்ணியர், தங்களுடைய நித்தியகர்ம அனுஷ்டானம் விடாத நெறியோர், இவர்களுக்கெல்லாம் தாழ்ந்து வணங்குவேனென்றார். இவ்வார்த்தை கேட்டு இக்கிருஷ்ணமூர்த்தி சந்தோஷமானார். ஆதலால் இப்போது நான்சொல்லிவந்த இவர்கள்தான் எல்லாவற்றிலும் பெரியோர்களென்று பிரியமான வீஷ்மர் பேசவும் அன்புடன் கேட்டு தருமராஜன் அகமும் முகமு மலர்ந்து ஐயா கௌசிகராஜனை காதிராஜன் பெற்ற விதமெப்படியென்று வினவினார். அதற்கு வீஷ்மர் சொல்லத்தொடங்கினார்.

65. கௌசிகராஜன் பிரம்மரிஷியான வரலாறு.

ஓ! அருளாளா பிருகுமகாரிஷியின் பிள்ளை சௌநகமகாரிஷி காதிராஜனுடைய தந்தை கற்பகம்போன்ற காதல வண்மையமைந்த குசலமகாராஜன் அண்ட கடாகங்கவிந்த பூமியை ஆண்டுவரும் போது சௌநக ரிஷிவந்தார். அவருக்கு நமஸ்காரமுதலிய உபசாரங்களும்புரிந்து சுவாமிகளே, தேவரீர் இங்கெழுந்தருளியது யாதுகாரண மென்று, இராஜன் கேட்க சௌநக ரிஷியானவர் சொல்லுகிறார். ஓ, அரசனே நீரும் உன் பெண்சாதியும் எனக்கும் எனக்கு நேசமான வர்களுக்கும் பணிவிடை செய்வீர்களா வென்று கேட்டார். இராஜன் இருதயம் பூரித்து அந்தச் சௌநகர் சொற்படிக்கு ஊழியம் பண்ணிக்கொண்டு வந்தார்கள். சௌநகர் இவ்வாறு அவ்விடத்தில் சிலநாளிருந்து இன்னொரு இடத்திற்குப் போனார். இவர்களும் அவரைவிட்டு நீங்காமல் தேக நிழற்போற்றொடர்ந்து நாளுக்கு நாள் அதிக விசுவாசமாய்த் தொண்டு செய்து நின்றார்கள். அங்கு சௌநக மகாரிஷி ஒரு நாட்பகல் போசனம் பண்ணி நித்திரை செய்யவேண்டு மென்று படுத்துக்கொண்டார். பந்து மித்திரர்களும் அந்தராஜனும்அவருடைய ஸ்திரீயும் மகாரிஷியினுடையபாதங்களைப் பிடித்துக்கொண்டிருந்தார்கள். அப்போது ரிஷியானவர் அலண்டு புரண்டு எழுந்து இவர்களைப்பார்த்துச் சொல்லுகிறார் ஓ! அரசனே! அரசியே! ஏன், என்தூக்கத்தைக் கெடுத்தீர்கள், என்னைவிட்டுப்

போகாதீர்கள், கமலம்போன்ற கைகளினுலே என்காலைப் பிடியுங்கள் என்று பேசிக்கொண்டே நித்திரை போய்விட்டார். இவர்கள் உண்டி உறக்கமில்லாமல் திருவடியைவருடிக்கொண்டேயிருக்க அவருக்கு நித்திரை யதிகமாய் இருபத்தொருநாள் தூங்கினர். ராஜனும் ராஜபத்தினியும் ஒருவரோடொருவர் பேசாமல் ஊமைபோல் காலைப்பிடித்த வண்ணமே இருபத்தொருநாளும் விழித்திருந்தார்கள். இருபத்திரண்டாநாள் சௌநகரெழுந்து இவர்களுடன் பேசாமற்போய் விட்டார். சுவாமி! எவ்விடம்போனரோ இவ்விடம் வருவாரோ; வரமாட்டாரோ வென்று கவலைபாய்க் திருக்கும்போது சௌநகமகாரிஷி யாரோ ஒருவர்போல் வீட்டுக்குப்போய் தெவவையாகச் சாப்பிட்டு மறுபடியும்வந்து முன்போலவே படுத்துக்கொண்டார், வெற்றிவேலுடைய வேந்தன் பத்தினியுடனே நித்திரை ஆகாரமற்று பழயபடி இருபத்தொருநாள் பாதத்தைத் வருடிக்கொணடிருந்தார்கள். அப்பால் ஞானமுனிவர், தூக்கந்தெளிந்தெழுந்து இவர்களை நோக்கி, முன்னே இருபத்தொருநாள், பின்னே இருபத்தொருநாள் ஆக நாற்பத்திரண்டு நாளும் பசிதாக நித்திரை சற்றேனு மில்லாமல் மறந்து தேகாபிமானந் துறந்து, ஒரேநிலையிலிருந்து பணிவிடை புரிந்தது அற்புதம், அற்புதம். இவர்களுடைய சாந்தகுணத்திற்கு நாம் அபராதியாய்ப் போய்விடுவோ மென்று பயந்து மிகவுநயந்து பட்சமாய் இட்சுவாகு குலத்திற் பிறந்தவனே, மகாலட்சுமி போல இருக்கப்பட்ட ஸ்திரீயும், மகா விஷ்ணுவைப்போன்ற நீயும் சாப்பிட்டீர்களா? போசனமில்லாம லிருந்தீர்களோ, அப்படியா சந்தோஷமாயிற்று உங்களுக்கு நல்லவரம் கொடுக்கிறேன் வேண்டியதைக் கேளுங்களென்று சொல்ல, அப்படிக்கே, சுவாமி வம்ஸவிர்த்தி யாகும்படிக்கு உங்களிலொருவனுய் ஒருபுத்திரன் வேணுமென்று போற்றினர்கள். அப்படியே அவர் அனுக்கிரகம் பண்ண அவ்வாறே ஒரு பிள்ளைபிறந்தது, அதன்பேரில், அந்தரிஷியானவர் சிருஷ்டிகர்த்தாவின் சிந்தையைத் தெரிந்துக்கொண்டு உங்களிஷ்டப்படிக்கே வரங்கொடுத்தோம். ஆனல், இந்தப்பிள்ளைக்குப் பிறக்கிற பிள்ளையானவன் பிரம்மரிஷியாய் எங்களைப்போலிருப்பான் இவனொருத்தன் இராஜர்களைப் போலவே குலமுறைதவறாமல் நீதியுடன் ராச்சியபாரம் பண்ணுவான் பயப்படா தீர்களென்று ஆசீர்வதித்து சௌநகமகாரிஷி தவத்திற்குப்போனர் அவர்கொடுத்த வரத்தினபடி உடனே புத்திரனுகிய காதிமகாராஜன் செங்கோல் செலுத்தினர். அவருடைய புத்திரன் கௌசிகராஜன் விசுவாமித்திர ரிஷியானவர் பிருகுவம்ஸத்திற் பி

றந்தபிள்ளை உலககண்டகனாய் அரசுபுரிந்து பரசுராமனென்று பேர் பெற்றிருந்தார். அதுபோலிந்தக் கௌசிகனுமாயினு னென்று வீஷ்டுமர் விளம்பினார், தருமராஜனுக்குச் சரீரம் புளகித்து பாட்டனுக்கு ஊட்டமுதலியதுங் கொடுத்து பரிந்துபசரித்து வணங்கி ஐயா, பசுக்களின் பெருமையும் பகரவேணு மென்ன தயாரசத்தையுடைய வீஷ்டுமர் ஆயாசத்தைப் பாராமற் சொல்லுகின்றார்.

66. பசுக்களினுடைய அருமையும் பாத்திரங் களினுடைய பெருமையும் உறைத்தல்.

ஓ! சத்தியவிரதனே! சௌநகரென்கிற ரிஷியானவர் பூமிக்கு ஆதாரவாகிய பாகீரதியின் முகத்து வாரத்தில் ஸ்நானம் பண்ணி மூழ்க்கிப்போய் சலத்திற்குள்ளே நல்ல இடத்திலிருந்து அருமையான தவம்புரிந்து பன்னிரண்டு வருஷம் ஆரியர்களுங் கண்டு களிக்கும் படிக்கு அசைவற்றிருந்து விட்டார். அப்போது வலைஞர்கள் மீன்பிடிக்க வேண்டு மென்று வந்து வலைவீசி அதிர்த்துக்கலைத்து நாலு பக்கமுங் கவிந்து நார்வலித்து இழுக்கும்போது மாயைவலைக்குத் தப்பியிருந்த மாமுனியான, சௌநகர் வலைக்குளகப்பட்டுக் கொண்டார். என்னமோ கனமாயிருக்கிறதென்று இழுத்து அவனைகரைமேலேற்றினார்கள். அந்த வலைக்குட்பட்டு வந்தமகாரிஷியை மீன் பிடிப்போர் கண்டு மிகுந்த பயங்கொண்டு சாஷ்டாங்கமாக நமஸ்கரித்து சுவாமி நாங்கள் எங்கள் குலாச்சார தருமப்படிக்கு வலைபோட்டோம் இந்த முகத்துவாரப் பள்ளத்தில் தேவரீர் மூழ்கி இருந்ததையறியோம் ஆகிலும் எங்கள் பிழை பொறுக்கவேண்டும் ஆண்டவனே யென்று மிகவும் வேண்டினார்கள். சௌநகமகாரிஷியானவர் சாக்கிரத்திலிருந்து ஓ! செம்படவரே! நீங்கள் உங்கள் சாதியாசாரத்திற்குத் தப்பில்லாமற் செய்தீர்கள். அதனாலுங்களுக்குத் தோஷமில்லை சலசரத்தைப்போல் உங்கள் வலையிலகப்பட்ட என்னையும் மீனுடன்சேர்த்து விற்றுப்போடுங்கள் என்னை மிகுத்து விடாதீர்களென்று சொன்னார். அம்மொழிகேட்ட வலைஞர் தேகந்திடுக்கிட்டு மகானுபாவரே! இப்படிசொன்னால் நாங்களெப்படி பிழைப்போம். என்னமாய் விற்போம் என்று ஒருவருக்கொருவர் ஆலோசனை செய்துக்கொண்டு அக்காலத்தில் உலகாண்டிருந்த சந்திரகுலாதிபனான நமது நகுஷமகாராஜன்

காலிற்போய்விழுந்து நடந்த விர்த்தாந்தங்களைச் சொல்லி கடற்கரை யிலிருக்கும் எங்களைக்கரையேறச் செய்யுங்காவலனே யென்று கண் ணீர்விட்டழுதார்கள். நகுஷராஜன் உடனே புறப்பட்டு சௌநக ரிஷியிடத்திற்குவந்து சரணம்புகன்று சுவாமி சிற்றறிவுள்ளதீனர்கள றியாமற்செய்த குற்றத்தை க்ஷமிக்கவேணும் ஞானநந்த நாயகமே யென்று துதித்து இன்னு மின்னும் பணிந்தேற்றினன். அதற்கந்தச் சௌநகரிஷியானவர் இவர்களுக்கொரு குற்றமு மில்லை குறையுமில் லை அவர்கள் சாதித்தொழிலைத் தாராளமாய் நடத்தி பெரும்வலைவீசிப் பிரயாசத்துட னிழுத்து காத்திரமான மீன் அகப்பட்டதென்று களி த்துப்பேரானந்தங்கொண்ட பேராசை வீண்போகாமல் என்னை விற் றுப்பொருள்கொள்ளச் சொன்னேன் இம் மண்ணுலகுக்கு மன்னவ ஞன உன்னிடத்தில் வந்து முறையிட்டுக் கொண்டதற்கு நீ என்னி டத்திலடைந்து இதவுசொல்லுகிறாய், நல்லது எனக்குண்டான விலை யை இவர்களுக்குக்கொடுத்து, தாமதப்படாமல் என்னை மீட்டுக்கொ ள்ளு மென்றார். அரசனதற் கிசைந்து அப்பா சம்பட்டபடை யுடை யவர்களே மும்மலமும் முக்குணமும், முப்பிணியு மற்ற முனிவருக் காக ஆயிரம்பொன் கொடுக்கிறேன் அதை வாங்கிக்கொண்டு இவ ரைக் கொடுத்துவிடுங்களென்று கேட்டான். அந்த ரிஷியானவர் கண்விழித்துப் பார்த்து ஓ அரசனே நீர் முறைமைதப்பிச் சொல்லு கின்றீர். நிறைகுணவான்களாகிய எம்போலியருக்குத் தகுமான விலை கொடுத்து மீட்காமல் ஆயிரம்பொன் என்பதாய் ஒரு தொகையைச் சொல்லுகிறாய். இவ்வளவு விலைதானு நான் பெறத்தக்கது இம்மட் டாமதிப்பிட்டது மன்னவும், அந்த அரசன் கேட்டுப் பயந்து ஓ! கழிக்கரையாரே லக்ஷம்பொன் தருகிறேனென்ன, மகாரிஷி நகை த்து எனக்கு விலைவைத்தது இதுவோ இம்மாத்திரத்திற்குத்தானே நான் உடலெடுத்தது என்றார். மறுபடியும் மன்னன் கலங்கி கோடி பொன் கொடுக்கிறே னென்றான். ஐயோவென்றலறி மையலிலா மூது மாதவமிழைத்த உடல் இந்தவிலையோ பெறுவதென்று தனை வெறுத்துக்கொண்டு, ராஜனே உமது மந்திரிமார்கள் வேதசம்பன்ன சாஸ்திரப்பிராமணர்கள் சத்தாகிய பெரியோர்கள் மகத்தாகிய மாதவர் கள் இவர்களுடன் கலந்து ஆலோசித்து நான் இன்னவிலை பெறுவே னென்பதாய் விலைமதித்து அப்பாற் சொல்லுமென்ன, வேந்தன் திடுக் கிட்டு இருகாத்தையு நெரித்து மனக்கவலையோடு நிதானித்து சஞ்ச லப்பட்டு தன்னிடத்தி லன்புவைத்திருக்கின்ற கவிசாதரென்னும் மு னிவரை நினைத்துக் கைதொழுது (சுவாமி) நான் தருமசங்கடத்தி லக

ப்பட்டுக்கொண்டு தவிக்கின்றேன், இந்தவேளை என்னை இரட்சிக்க வேணுமென்று திக்குநோக்கித் தெண்டனிட்டுச் சிந்தனை செய்தான். அந்த க்ஷணமே அவர் வந்தெதிர்நின்றார். அவரைக்கண்ட இறைவன் முறையோவென்றழுது அவரடியிற்றொழுது, தழைந்தகுலமான ஆலம்விழுது தானே பட்டுப்போகவந்தது பழுது,நானென்னசெய்வேனென்றுசகல உபசாரமும் புகன்று இவ்விடத்தில் நடந்திருக்கிற விர்த்தாந்தங்களை எல்லா நவின்றான். இவ்வசனங்களை வித்தகனாகிய உத்தமமுனியறிந்து ஓ! அரசனே இந்த மகானுபாவராகிய மகாரிஷிக்கு பிரம்மாவும் இன்னஞ்சொல்லாநின்ற தேவர்களும் ஈடாகமாட்டார்கள். மேலும் பெரியவர்களுக்குச் சரியாக உலகத்திலுள்ள பொருள்களை எல்லாங்கொடுத்தாலும் பொருந்தாது. இவர்களுக்குச் சமமாயிருக்கிறவஸ்து என்னவென்றால் பசுக்கள், பிராமணர், பஞ்சகவ்வியங்கொடுக்கிற தருமதேவதை சொரூபமாகிய பசுவும், அற்சோபம் துர்ப்பயங்கரம் துர்மரணம் துர்வியாதி நீக்கிச் சுகந்தருகின்ற பிராமணரும், உலக பவித்திரப் பொருளாகிறது. பசுவென்பது பாரிலில்லாவிட்டால் பிராமணர்முதலிய ரிஷிகளுக்குப் பெருந்தவம்,ஓமம்,விரதம், ஆசாரம் முதலியவைகளும் பொருந்தி நடவாது. வேதமுதல்வராகிய மும்மூர்த்திகளிலேயும் சிறந்தவர்கள் பேரானந்தமுனிவர்கள். ஜீவன்முக்தர்களுக்கும் உயர்ந்தவர்கள் ரிஷிகள். இவர்களினும் பெரியவர்களை ஆராய்ந்து பார்க்கவேண்டுவதில்லை. அப்பேர்ப்பட்ட ரிஷிகளுக்கு பசுவல்லாமல் மற்றொன்றும் ஈடுபடாது. பசுவில்லாமற் பதிதபாவனமில்லை.பசுவின்பெருமையைப் பகர்வதற்கு என்னால்முடியாது. ஒரு பசுவை உத்தமமாகிய ஒருவருக்கு உவந்து தானங்கொடுக்கில் உலகெல்லாம் புகழும்படியாக வாழ்ந்து மேலான பயனைப் பெறுங்கதியடைவார்கள் யென்று வேதங்கள் விளம்புகின்றன. அந்தப் பசுவின் தேகத்திலிருக்கிற உரோமமொன்றுக்கு ஒருவருஷக் கணக்கின்படிக்கு எத்தனை மயிரிருக்கின்றதோ அத்தனை வருடம் முத்தியிலிருப்பார்கள். இதன்றி எக்கியம், ஓமம், அக்கினி தேவதைகள், பெரியோர்கள், தென்புலத்தார் யாவருக்கும் துன்பமகற்றி இன்பத்தைத் தரப்பட்டவர்கள் பிராமணர்கள். (எவராலுஞ் செயிக்கப்படாத எம்முடைய ஏந்தலே) நீ இதுகளின் தாரதன்மிய மறிந்து சௌநகரிஷிக்குப் பதிலாக ஒரு பசு கொடுக்கிறேனென்று பேசினால் பக்குவமாகுமென்று கவிசாத மகாரிஷி கழறினார். அப்போது புவியாளும் நருஷன் மகிழ்ந்து நாணமனத்துடன் சௌநகரைப்பணிந்து சுவாமி உமக்குக் கிரையமாக ஒரு கபிலைப்பசு கொடுக்கிறேன், அடியேனைக்

கவலைப்படுத்தவேண்டாமென்று அவர்பாதத்தில் வீழ்ந்தான். அதைக் கேட்டசௌநகர் ஆநந்தப்பட்டு மிகவும்சந்தோஷமாய் நிருபனைவாழ்த்தி, இதுதான்எனக்குத்தகுந்தவிலையென்றுபூரித்தார். உடனே கழிக்கரையாருக்கு ஒருபசுவைக்கொடுத்து மகாரிஷியை மஹாராஜன் மீட்டுக்கொண்டான். அந்த வலைஞர்கள் சௌநகரிஷியைத் தொழுது சுவாமி எங்கள் குறைதீர்ந்து நாங்கள் கரையேறும்படியாக இக்கபிலையை உமக்குத் தானமாகக் கொடுக்கச் சம்மதித்தோம். தேவரீர் தடைப்படுத்தாமல் சம்பிரமமாய்ப் பெற்றுக்கொண்டு எங்களைக் குலகோத்திர குடும்பத்துடன் காத்திரட்சியுமென்று கூட்டமாகக்கூடிப் பணிந்தார்கள். வம்புசெறிந்தஅம்போருகசரணையுடைய மகாரிஷியானவர் அவர்கள் திரிகரணசுத்தியாய்ச்சொன்ன திறத்தையறிந்து மீன்பிடிப்போரிடத்தில் பசுவைத தானமேற்று, அப்பா வலைஞர்களே நானிதுவரையிலும் ஒருவரிடத்திலொன்றும் பெற்றவனல்லன். உங்கள் வேண்டுதலினாலும் உபசாரத்தினாலும் நீங்கள் நற்கதி யடையவேணுமென்கிற ஞாபகத்தினாலும் உங்களிடம் கோதானம் பெற்றேன். அருள்பெறுவீரென்று அனுக்கிரகம் பண்ணப்போகிறதருணத்தில் இவருடனே கூட வலையிற் சிக்கிய மச்சங்களெல்லாம் தேவசொரூபம் பெற்று ஆசாரிய ரிடத்திலுற்று தோத்திரஞ் சாற்றியது. அதுகண்டு ஆநந்தங் கொண்டு அன்புடையவராய் நீங்களியாவருந் தேகத்துடனே தேவலோகம் போகக்கடவதென்று ஆசீர்வதித்து சிலவு கொடுத்து வலைவோரை நோக்கி, எனக்கு நீங்கள் சுத்த மனதோத்து சுரபிதான மளித்தமையால் குடும்பவர்க்கத்துடன் சொர்க்கம்போய்ச்சேருங்களென்று எசகியஞ்செய்கிற காரர்களினாற் அர்க்கியங்கொடுக்கருளினார். தக்ஷணமே அவர்களுந் திவ்விய தேகிகளாகி தேவவிமானரூடராய் தேவேந்திர போகிகளாய் திருவிற் சுகபோகிகளாய் தேவதுந்துமி வாத்தியங்களுடன் பொன்மாரி பொழிய அமுதம் பெருகிவழிய அஞ்ஞான ஜனனமொழிய அப்சரஸ்திரீகள் நடனம்புரிந்து பாடல்மொழிய ஐந்தரு நீழலி லமர்ந்தார்கள். பின்பு பலவாறான நகுஷணைபார்த்து தருமஉருவமாகிய சௌநகமகாரிஷி தயைவைத்து திடகாத்திரதேககாவலனே, உனக்குவேண்டிய வரங்களைக் கேளுந் தருகிறேனென்னவும், இராஜன் நான்குவேதசொரூபமாகிய தேவரீர் இப்பூமி செய்ததவத்தினால் இவ்விடத்திற்கு வந்தீர், தேன்மருவிய செந்தாமரைப்போன்ற உம்முடைய திருவடிகளுக்கு சாஸ்திரங்களிற் செப்பியிருக்குந்தன்மைப்பிரகாரம் அன்பசையாமனிறுத்திஅருச்சனை செயவதே அடிமைக்குப் போதுமான புண்ணியமென்று புகன்றான்.

அச்சொற்கேட்ட அருந்தவர் இவ்வரசனது பக்திவசனத்திற்கு மெத்த மகிழ்ந்து மிகவும் புகழ்ந்து இகத்திலிருந்து சுகத்தையடைந்து ஏகாந்தமாகிய தேகாந்தத்தில் தேவதைகளியாவரும் எதிர்கொண்டு அஞ்சலிசெய்து வாழ்த்தி நவரத்தின முடிசூட்டிப் போகத்தக்கதாய் தெய்வலோகசிம்மாசநமேறி தேவதைகட்குக் கோவாய் தேவேந்திரனுவாயென்று ஆசீர்வதித்துப்போனார். இராஜன் அவரடிவைத்த இடத்தைப் பூசித்து ஆலயங்கட்டி நித்யோற்சவமுதலாகிய பூசை நிறைவேற்றினன். சத்தியமுந் தருமமுந் திரண்டுருவான தருமநந்தனு! சற்பாத்திரமாகிய ஸ்தானபலமும் பசுவின் தானபலமும் இத்தன்மை யுடையதென் றுணர்ந்து மேலும் ஜலசரங்களாகிய மீன்கள் சஞ்சரிக்கப்பட்டசெம்மை இல்லாத இடத்திற்பொருந்திய குற்றத்தினுல் இவர் அருமையான நிஷ்டைகூடிய மகாத்துமாவானுலும் பரவரிழுக்க வலைக்கண்ணியின் பந்தத்திலகப்படுத்தியது. இதன்றிபெரியோருடைய சாவகாசத்தினுலும் நன்மைகிடைக்குமென்று சொல்லுவதற்குச் சரியாய் அவ்வலையிலகப்பட்ட மீன்களும் அம்மீன் பிடிப்பவர்களும் பேறடைந்த பெருமையைப் பாரும். இன்னும் சௌாநகரிஷிக்கு எந்தப்பொருளுஞ் சரிபடாமல் கபிலை ஈடானபடியினுலே பசுவின் மகத்துவம் இப்பேர்ப்பட்டது பாருமென்று பகர்ந்த பாட்டனை வேண்டிக்கொண்டு என் குலமணியே இகத்தில் என்னென்ன தானதருமம் பண்ணவேண்டியது எந்தத்தானத்தால் என்னபலன் கிடைக்கும் இதுகளை விபரமாய்ச் சொல்ல வேண்டும் மேலவனேஎன்று விரும்பிக்கேட்க வீட்டுமர் பகருகின்றார். அங்கந் தங்கமான பொங்குமுடையவனே.

67. இகத்தில் செய்யத்தக்க தருமம் யாது எந்த தானத்தால் என்ன பலன் கிட்டும் என்ற பிரசினைக்கு உத்திரம்.

மாற்றுயர்ந்த தங்கம், பொன், வெள்ளி, செம்பு, இரத்திநங்கள், வஸ்திரம், யானை, குதிரை, பல்லக்கு, தேர், கன்னிகை, இவைகளைத்தானஞ் செய்தால் என்னபலன் கிடைக்குமோ இதற்கெல்லா மேலான பலன், தான்பெற்றகன்னிகையைப் பெரியோர்களுக்குத் தானம்பண்ணுவது, இதனிலும் பெரியபலன் நல்லன்பர்கட்கு இன்பமாய் அன்

ணதானஞ் செய்வது, இந்தத் தானத்திலுஞ் சிறந்தது தண்ணீர்ப்பந்தல் வைத்து உபசரித்தளிப்பது, அத்தண்ணீர்வார்ப்பதிலு மேலானது வித்தியாதானம் புரிவது, அதனிலும்பெரியது சற்பாத்திரவான்களுக்குத் தடையறக்கொடுப்பது, எல்லாவற்றிற்கு மேலானது பூதானமீவது, பூதானத்திலு முயர்ந்தது கோதனம்; கோதானத்திலும் அந்தப் பசு எப்படி இருக்க வேண்டுமென்றால் குலம் நலம் வர்ணம் சாந்தம் பாற்பெருக்கம் விருத்திசுபலட்சணம் காதுநெறிப்புமறுவில்லாநிறம் மாசற்றதாய் அங்கக்குறை வில்லாததாய் நோயற்றதாய் கடாரிக்கன்றை யுடையதாய் நுண்மயிலைபாய்ந்ததாய் வாலுங்காலும் பூமியிலமர்ந்ததாய் தோலிற் சூடுறாத பசுவை நாலுவேத முணர்ந்த பிரம்மக்கியானிக்குங் கொடுத்தால் புன்கூறிய தானங்களைவற்றிற்கு மேலாய்ச்சிறந்ததாம். அப்பலன்களை எல்லாம் அடையவே கொடுக்கும். என்றென்றைக்கும் இருளில்லாத ஆனுலகஞ்சேர்வார்கள். அந்தக் கோதானத்திலும் அதிதி அப்பியாகதி பூசைசெய்து அவர்கள் விரும்பியதைப் பெரும்பயனென்றளிப்பது, அதனிலும் பெரிது குறிப்பறிந்தீதல், அதனிலும் பெரிது கல்விக்கியானமுடையானுக்குக் கொடுப்பது, அதனிலு நன்று ஏழைகள் கேட்பதை ஒளியாமலீவது, அதனிலும்பெரிது கூலி குறையாமற் கொடுப்பது, அதனிலுமுயர்ந்தது குடும்பரட்சணை, அவற்றிலும் பெரிது சத்தியதருமம், யாவற்றிலுமுயர்ந்தது அன்னை தந்தையர் சொல்தவறாதது. இவைகளெல்லாத் தானங்களின் பலனைத் தருமென்று வீஷ்மர் புகல, தருமராஜன் ஐயா, அவசியமறியத்தக்க ரகசியங்களை யறியாலானேன் இப்போது தேவரீர் பசுலோகஞ் சேர்வார்களென்று பகர்ந்தவண்ணம் அந்த ஆனுலகம் எங்கிருக்கின்றது நானறிய நவிலவேண்டும் நாயகனே யென்ன கங்காகுமாரன் சிங்காரமாகச் செப்பத்தொடங்கினர்.

68. பசுலோகம் என்பது யாது அதை எப்பேர்ப்பட்டவர்கள் அடைகிறது என்ற கேழ்விக் குத்திரம்.

ஓ பூபாலபேரனே, பூலோகமுதற் கொண்டு சொல்லப்பட்டமேலுலகத்திற் சத்தியலோகத்திற்கப்பால் அண்டச்சுவரொன்னுமொன்றுண்டு. அவ்வுலகத்தை எவருமகாண்பது மிகவுமரிது. கண்டவர்விண்டிருக்கின்றபடி உட்கொண்டிருப்பதை பூர்வம் தேவேந்திரன் பிரம்மாவைவணங்கி இப்போது நீயென்னைக்கேட்டபடியே சங்கைசெய்தான். அவனுக்

குப் பிரமதேவனறைந் திருக்கின்றபடி நான் சொல்லுகிறேன் கேள். பசுலோக மெவ்விடமென்னில் அண்டகோளகைக்கு அருகாமையில் ஜீவலோகத்திற்கு மேலாய்ச் சேரவிருக்கின்றது. அதுபாசபந்த வினையையறுத்துபதம்பாலித்தருளுகின்ற பசுலோகம் அவ்வுலகத்தில் நானும் என்பிள்ளைகளாகிய உபப் பிரமாக்களிற் சிலரும் மானிடதேகத்தில் சத்தியந்தப்பாமல் வாழ்ந்த ஞானவித்தகரும் அவ்விடத்தில் வாசம்பண்ணி அவ்வுலகின் அதிசயங்களையறிந்து அனுபவிக்கத்தக்கதேயொழிய மற்றொருவராலு முடியாது. பூலோகமெல்லாம் ஒருகுடை நீழலிலடக்கி ஆண்டுவந்த அரசர்களும் தேகம் வருந்தி தவங்கள் புரிந்து நிதம் சதம் மகம் யாகம் தொடர்ந்து தானதருமங்கள்வழங்கி பெருமை பாராட்டாமல் கீர்த்தி முழங்கி கிருபை யுடைவராய் இறுமாந்து போகாமல் அடங்கியமூன்று லோகமுங் கொண்டாடா நின்ற அரசர்களும் லட்சணமான பசுவை போஷித்து அதன்பாதத்தை மஞ்சள் புஷ்பங்களினால் பூசைபண்ணி பூ பொன் மணிகளினால் அலங்கரித்து பூரணக்ஞான பூசுரருக்குப் புனிதநீருடன் தானமளித்து மனங்குவிந்திருந்தபேர்களும் ஆனுலகத்தை யடைந்திருப்பார்கள். இப்பேர்ப்பட்ட மேலான பசுலோககதியானது கோடிசூரியப்பிரகாசங்குலாவி இருப்பது. சுத்தவெண்மையுடையது சோதிமயமானதுபொன்மேனியான பரமனையும், நீலமணியுடல்பெற்ற மாயனையும் பவளம்போன்ற யானைமுகத்தினையும், சுப்ரமணியக்கடவுளையும் கடாக்ஷமுள்ள சிவகாமசுந்தரியையும் வேறுபடுத்திக் கூறாமல்பக்தியுடநினைத்து அன்பினாலே வழிபாடுசெய்து ஆராதனை முதலாகிய உபசாரஞ் செய்பவர்கள் ஆனுலகம் உறுதியாய்ச் சேர்வார்கள். இத்தியாதி பெருமையுடையதாகையால் சாம்பமூர்த்தியாகிய பசுபதியும் தன்னுடைய கொடியிலே பசுவைநிறுத்து அதனையே வாகனமாக்கிக்கொண்டு அதனது சத்தையே விபூதியாகப் பூசிக்கொண்டு சகலபாவதோஷ சுபாசுபசந்தோஷங்களுக்கும் பூதப்பிரேதபிசாசடாகினிடோகினி முதலியபேய்களுக்கும் நீறுபட்டவர் வினைநீறும் படிக்குச் செய்து க்ஷேமங் கண்டருளினார். எப்பொருட்குமிறையாகிய ஈஸ்வரனே ஏற்றுக்கொள்வாராகில் இனி நான் பசுவினுடையபான்மை தூய்மையைப் பகரவல்லவனோ இவ்வளவு தூரம் அதை எடுத்துப் பேசியது உன்னிஷ்டத்தினாலும் என்னுடைய அறியாமையாலும் சொன்னேன். ஓ! தேவேந்திரனே என்று பிரம்மதேவர் சொல்லக்கேட்டு இந்திரன் மகிழ்ந்து எழுந்து புகழ்ந்து தன்னுலகம் போனான். கேளுந்தருமரேயென்று வீஷ்டுமர்சாற்றினார். வாசனையுள்ள குவளைமாலையைத்தரித்த வாய்மையோன் மகிழ்ந்து மா

தவனே மேற்கூறிய பசுவினுடைய அவையவங்களில் எங்கெந்தத் தேவதைகளிருப்பார்கள் எனக்குத் தெரிவிக்க வேண்டுமென்று தருமநந்தனன்கேழ்க்க அநுமையான விந்தையை சிந்தை மேலோர்களிக்கவும் புகலுகின்றனர்.

69. பசுக்களிடத்தில் வசிக்கும் தேவதைகள்

பசுவினுடையமுகத்தில் தேவேந்திரன், கர்ணத்தில் சப்தரிஷிகள், கொம்பில் காலன், மூக்கில் வாயு, பாதங்களில் குபேரன், புஷ்டத்தில் சிவன்முத்தர்கள், முகவாய்க்கடையிலே சூரியசந்திரர், கண்டத்தில் பரமேஸ்வரன், வரிமடிப்பில் பார்வதி, வயிற்றில அக்கினி, இடையில் ஸ்ரீமந்நாராயணன், தலைடையில் அஷ்ட வசுக்கள், முசுப்பில் சாவித்திரி, நெஞ்சில் பகலவொன்னுந்தேவதை, வாலில் தருமதேவதை, மயிரில் முக்கோடி தேவர்கள், காலில் காலப்பிரமாணக் கடவுளர், நடுநெற்றியில் சித்தர்கள், அடிவயிற்றில் பன்னகாதிபர், மடியில் அமுத கூபாளர், யோனியில் இந்திராணி, முலையில் சரஸ்வதி, மூத்திரத்தில் கீர்த்தி லட்சுமி, சாணத்தில் இலட்சுமி, இரத்தம் சந்திரகலை, மாமசம் சத்தி இவ்விதமாக இருப்பதானல் அந்தப்பசுவின் பெருமையைப்பகரலாகுமோ? இந்தப்பிரகாரம் அவையவங்களிற் சகலதேவதைகளு மிருப்பார்கள், அதன் தூய்மையான புனிதத்தை ஆரறியப் போகிறார்கள், மஹாதெளிவையுடைய விவேகிகள் இதனுடைய பொருளறிந்து பெருமைதெரிந்து போஷிப்பார்கள். பசுவை பிரம்பினாலும் கொம்புகளினாலும் கயிற்றினாலும் தோல்வாறினாலும் தடியினாலும் மற்றெதுகளினாலும் அடிக்கப்போகாது. பயிர்ப்புலத்தில் மேய்ந்தபோதிலும் மூன்றுதரங்கையைத்தட்டி துரத்தவேண்டும். அதற்கும்போகாமற் போனல் தர்ப்பைப் புல்லால் வைக்கோலாற்றட்டியோட்டுவதே தருமம், அதற்கு மேலிட்டுச்செய்வது அதருமம், இவ்விதமாகக் கொண்டாடிவெகுபேர்கடைத்தேறினார்கள். அதிலுனக்கொரு கதைசொல்லுகிறேன் கேள்.

மகாரிஷியாகிய சுமித்திர னென்பவருக்கு ஒருபசுவுண்டு. அவர் பொழுதுவாய்ப் பொழுதுவிடிந்தால் அந்தப்பசுவை நன்றாய்த் தேய்த்து மேய்த்து போஷித்துப் பூசித்துவருவார் இப்படி இருக்கிற நாளிலொருநாள் சுமித்திரமுனி உதயத்திலெழுந்து அதனுடம்பெல்லாஞ் சொரிந்து தடவிக் கொடுத்து குளிர்ப்பாட்டி புல்லுள்ள புலத்தில்

மேய்த்துக்கொண்டிருக்கிறபோது, ஒருரிஷபஞ் சம்பந்தப்பட்டது. அந்தப்பசு அதனால் கருப்பமுண்டாயிருந்து கிடாரிக்கன்றை ஈன்றது. அக்கன்றும் பசுவும் பெரிதாகியபோது தாயொன்றும் கன்றொன்றுமாகக் கன்றுபோட்டு இவ்வாறுவருஷந்தோறும் கன்றுகள் விருத்தியாய் (தருமந்தழைவது போற்பெருகி மந்தைப்பசு வாயிற்று. இந்தக்சுமித்திரன் மேலும் மேலும் ஆசையாய் சவாட்சணை பண்ணிக்கொண்டிருந்தார். இவ்விதமாக நாள்தோறும் பழகிய பந்தத்தினால் இவரெவ்விடம் போனாலும் அந்தப்பசுக்களும் கூடப்போகிறதுண்டு. எங்கு நின்றாலும் எந்த இடத்திலுட்கார்ந்தாலும்படுத்துக்கொண்டாலும்இவரைவிட்டுப்பிரியாமலிருந்தன! அவரும் அவைகளினிடத்தில்மனவெறுப்பில்லாமல் பசியறிந்து தாகமறிந்து தேகஸ்திதியறிந்துகாப்பாற்றி அதுகளுக்குபேரிட்டழைத்து தானும் அவ்வகளுடன் ஒருவராய் விளையாடிக்கொண்டு அப்பசுவின் கன்றுபோல் அதனது முலேகளில் வாய்வைத்துண்டு, மாடென்றும்மனிதனென்றும் வேற்றுமையில்லாமல் வெறுப்பின்றி விருப்பமா இருந்தார். இதைக்கண்ட சகல ரிஷிகளும அவரை பீனரிஷி என்று பெயரிட்டழைத்தார்கள். இப்படிக்கு வெகுநாளாகிறபோது பத்துநூறு பசுக்கூட்ட மாயிற்று. அப்பசுக்களை எல்லாம் ஒரு மடுவினுடைய கரையருகில மேய்க்குங் காலையில் அமமடுவில் சப்திக்கப்பட்ட வளையலும் பாத கடகமுதலிய சிலம்பும் கறுத்த அளகமும் பருத்த ஸ்தனபுளகமும்படைத்த மாதர்கள் கரைபுரளும்படி சலத்தைக்கலக்கி அலேயெறியுநீரில் ஆநந்தமாய் விளையாடிக்கொண்டிருக்கையில் அவர்களைக்கண்டு பசுக்கூட்டங்களெல்லாஞ் சொன்னதாவது, நீங்களிந்தமடுவில் வந்து விளையாடுகின்றீர்களே நீங்களியார்? ஏனிந்தமடுவில்மூழ்கிறீர்கள் என்றுசொன்ன, அதற்கு அந்தஸ்திரீகள் பூர்வத்தில் நாங்கள் பசுச்சென்மங்கள் இப்போது புஷ்பதமாதர்களின் பிறப்பாயிருக்கின்றோம். எங்கள் நாடுபசுலோகம் ஆனுலகென்றும் அழைவார்களென்றார்கள். அம்மொழிகேட்ட பசுக்கூட்டமெல்லாம் நாங்களும் பசுலோகஞ் சேரும்படிக்கு அனுக்கிரகம் பண்ணமாட்டீர்களா வென்றுகேட்க அவாகளிரக்கப்பட்டு நீங்களியாவரும் இந்த அந்திராஜன் தேவயாக எக்கியப் பசுக்களாய் உயிர் விட்டீர்களானால் ஆனுலகமடைவீர்களென்று உறுதியாகிய உபாயஞ்சொல்லிப் போய் விட்டார்கள். அதைக்கேட்ட கோவினங்கள் அந்த அந்திராஜன் தேவயாகத்திற் பிராணனை விடும்படிக்கு நிச்சயித்து மறுபடியுந் திரும்பி காமெல்லாம் சுமித்திரமுநிவரால் விருத்திபண்ணப்பட்டும் போஷிக்கப்பட்டும் பிழைத்திருந்தோமே நம்முடன் பழகி இருந்தவரை நாம்

விடலாமா அவருக்குநாம் சொந்தஉடைமையே. அவர் நம்மை இது வரையிலுங் காத்திரட்சித்தாரே அவரை விட்டு விட்டு நன்றிமறந்தவர்போல் நாமாநத்திரங் கதியடையலாமா ? அது நன்மையல்லவேயென்று யோசித்து நல்லது நாம்போய் அவரையழைத்தால் அவருயிர் பிரியாமல் உடன்பட மாட்டார், அவருக்குப் பிராணன் இந்தயுகத்திற் பிரிகிறதாக இல்லை, அவர்நம்முடனே கதிபெறவரப்போகிறதுமில்லை, அவர்வராவிட்டாலும் நாம் பலவந்தம்பண்ணி ரிஷியின் பிராணனை மாய்த்து பசுலோகங் கொண்டுபோவது பாக்கியம். இதனால் நமக்குப்பாபமில்லை எந்தக் காலத்தில் இவரிந்தப்பதவிபெறப்போகிறார். நம்மைக்காத்த பலனுக்கு நாம் அவரைக் காப்பாற்றுவோமென்று மனோதிடங்கொண்டு ஆவினங்களெல்லாம் சுமித்திரமுனி இடத்திற் சேர்ந்து அவர்முகத்தை ஏறிட்டுப்பார்த்துச் சொல்லுவதெப்படி, கொல்லுவதெப்படி யென்று மனங்கூசி வாடி மயங்கி ஒன்றையொன்றப்பார்த்து ஒதுங்கும்போது அந்த ஊரிலுள்ள பசுவினங்களாகிய சிற்சிலகபிலைப்பசுக்கள் இந்தமந்தைப் பசுக்களைப்பார்த்து ஐயோ ! நீங்கள் கொல்லமாட்டீர்கள் துணிவுபோராது, வைதீகரிடத்தில் பழகினவர்கள் உங்களுக்குச் சீவகாருண்யமுண்டு, நீங்கள் காட்டில் வாசம், நாங்கள் நாட்டில் வாசம், எங்களுக்கு நானாவித உபாயம், தருமம், தந்திரம், உலகத்தார் நடக்கிற வஞ்சகம், மாறுபாடு, மோசம், பொய், பொறாமை, கலகம், ஆசை, அன்பு, நாங்கள் கன்றுக்கும் பாலடக்காமற் கறந்தால் ராஜபோஜனம் தேவபோஜனம் காட்டுகிறது, கறக்காமல் மறுத்தால் மாட்டுக்காறனிடம் ஓட்டுகிறது. இவ்வளவு யோக்கியர்களிடத்திலிருந்துபழகி இருக்கிறநாங்கள் எங்களுக்கெல்லாந் தெரியும். வேண்டுமானால் நாங்கள்கொல்லுகிறோம், இந்த மகாரிஷியைக் கொன்றால் எங்களுக்கென்ன உண்டு விரதங்கெட்டாலுஞ் சுகந்தக்கவேண்டுமே சொல்லுங்களென்று கேட்கவும், அக்கபிலை பசுக்களை நோக்கி இந்தமந்தைப்பசுக்கள் சொல்லுவது, எங்களை ஆரொருத்தன் அன்பாகத் தானங்கொடுக்கின்றானோ அந்தக் கோதானபலனுக்கு நூறத்தனைபங்கு உங்களைத்தானம் பண்ணுகிறபேருக்கு வரத்தக்கதாகவும் உலகமெல்லாங் கொண்டாடும்படியாகவும் வரங்கொடுத்தோமென்று வாக்குதத்தம்பண்ணியதுகள். அவ்வரம் வாங்கிக்கொண்டு கபிலைப்பசுக்கள் ஒருமித்துக் கண்சிவந்திருக்கும்போது மற்றப்பசுக்கள் ரிஷியினண்டைக்குப்போய் ஓ, ரிஷியே நீரெங்களைக் காத்திரட்சித்த கடமைக்காக எவர்களும் பெறுதற்கரிதாகிய பசுபதங் கொடுக்கிறோம் வருகிறீராவென்று அழைத்ததுகள். அவரதற்குச்

சம்மதியாமல் முகத்தைச் சுளித்துக் காட்டினார், உடனே பக்கத்தில் நின்றகபிலைப்பசுக்கள் பாய்ந்தது அதனால் அந்தரிஷிமாய்ந்து ஆய்ந்த அறிவுடையானை ஆனுலகத் தாரும் எதிர்கொண்டழைக்கும்படிக்கு கோகுலத்தோடுகூடிப் பசுலோகமடைந்தார். நல்லகாரியத்திற் கிடங்கொடாமல் முகத்திற் கோபங்காட்டிச் சுளித்தபடியினால் பிராமணன் முகத்தில் அசூசியாகிய மூதேவி வாசமமைந்ததை பிராதக்கால முழுக்கினாலும் பிரம்மகாயத்திரி முதலிய அர்க்கிய ஓமங்களினாலும் போக்கி சூரியதேயசுகாட்டி சத்தியவிரத உத்தமகாரியங்களினால் பிரம்மதேயசுபூணக் காணபதென்றும் அப்படிச் செய்யாத பிராமணர்கள் முகத்தில் அசூசிவாசமென்று தேவர்கள் சொல்லி இருக்கிறார்கள்.

இதல்லாமலும் அண்டமுகடு இடம் பெறாமல் சந்திரசூரிய கிரணங்களைத் தோய்ந்து முளைத்திருக்கும் ஒருமகாரிஷி முதுகில்வளர்ந்த மூங்கிலைகாமதேனு நாவினால் நீங்கச்செய்தபோது சல்லிவேரொல்லாமறுத்து மூலவேர் நீங்குஞ்சமயத்தில் அந்தமகானுபாவருக்கு வருத்தமாய் நோயால்மெலிந்து சீ மூதேவியென்று திரும்பிப்பார்த்துரைத்தனர். அதனாலும் இந்தமகாரிஷியைக்கொன்ற தன்மையினாலும் அன்றுமுதல் பிராமணர் முகத்திலும் பசுக்கள் முகத்திலும் அசூசந் தங்கி இருந்தது. இப்பால்மகாரிஷி வளர்த்த பசுக்களெல்லாம் குற்றமற்ற அந்திராஜனிடத்திற்குப் போய். ஓ! மகானுபாவா நாங்கள் நற்கதிபெறும்படியாக எங்களையாகப் பசுவாக்கிக்கொண்டு அக்கரை சேர்த்து விடுங் காவலனேயென்று சொல்ல. அப்பசுக்களின் காரியந்தெரியாத பார்த்திபன் திகைத்து திப்பிரமை கொண்டு, அப்பா இத்தனை பசுக்களையும் எந்தயாகத்தில் முடிக்கிறது இதென்ன விபரீதம், எதுவுமிதமாயிருக்கில் மகத்துவ வழிவரும், அதிகமானால் அகத்தியம் பழிதருமென்று உங்களை நான் கொல்லமாட்டேன் போங்களென்றான். அந்தப்பசுக்கள் ஓ ராஜனே நீர்வேறு யோசனை பண்ணுகிறீர். நாங்கள் மனப்பூர்வமாய் நல்லகதி யடைவதற்கு காலநேரிட்டிருக்கிறது. அதனால் உம்மை வேண்டுகிறோம் இதனால் உமக்கும் நற்கதியுண்டாம் இதரயோசனை செய்யாமல் யாகநடத்துமென்று சொல்ல சொல்லைக்கேட்டு அந்திராஜன் சிந்தனைசெய்து,செந்தழல் கரத்தந்தணரையழைத்து வந்தனைதந்து, யாகசாலை ஏர்ப்படுத்தி ஓராயிர வருஷம் கோமேதயாகம் புரிந்தான். யூபஸ்தம்பத்தில் பசுக்களை தர்ப்பையினால் பந்திக்கிறபோது அந்திராஜன் பசுவினங்களை நோக்கி ஓ தருமசொரூபசாதுக்களே உங்கள் வார்த்தையைநம்பி யாகஞ்செய்கி

றேன், மந்திரஉச்சாடனம்பண்ணி ஓமம்வளர்க்கும்போது நீங்களியா
வரும், மகாதேவனைச் சிந்தையிலிருத்தி வந்தித்துக்கொண்டிருக்க
வேண்டும். அப்படிக்கில்லாமல் அஃறிணையறிவால் துன்பப்பட்டு
கண்களிலே தண்ணீர் விடுவீர்களாகில், தக்ஷணமே யாகத்தை
நிறுத்திவிடுவேனென்றான். அம்மொழிக்கு ஆவினங்கள் சம்மதித்
துக்கொண்டு அதுநிமித்தமாய் ஓமாக்கினியை வளர்த்தி பூரணாகுதி
கொடுத்து வரும்போது ஒரு நாள் முறையில் யூபஸ்தம்பத்தில் ஒரு
பசுவைக்கட்டி வைத்தார்கள். அதனுடையகன்று தாயைக்கண்டு
அதனிடத்தில் வந்து நின்றது அந்தப்பசுவானது தன் பிள்ளையின்
உடம்பெல்லாம் நாவினாலே நக்கி ஐயோ! மகனே, நீ இன்று முதல்
யாரிடத்திலிருப்பையோ, யார் ஆதரிப்பார்களோ யாரை அம்மாவெ
ன்றழைப்பையோ, இதோ நான் எக்கியப்பசுவாய்ப் போகிறேன் பாச
பந்த ஆசைபொல்லாதது, மற்றொருமாடுகளை மனிதர்களை முட்டிக்
கொல்லாதிருந்து வாழென்று சொல்லாதுஞ் சொல்லி நல்லதாகி
யபசு கண்ணீர்விட்டது. வல்லவனாகிய மகாராஜன்கண்டு யான்முன்
சொன்ன வண்ணஞ் செய்யேனென்று கைகூப்பிநின்று யாகத்தை
நிறுத்தி விட்டான். தன்னினமான மற்றப் பசுக்களையும் பிரிந்து
தானும் பிரபஞ்சவாழ்க்கையிற் பரிந்து கண்ணீர்சொரிந்த காலியுட
னே மற்ற மிருகப் பசுக்களையும் விட்டோட்டிவிட்டு சாந்திவேள்வி
யைத் தன்மட்டுஞ் செய்து சர்வத்திற்கும் மேலான சாயுச்சியம் பெ
ற்றான். மனங்கலங்காமல் ஒரே நினைவாயிருந்து எக்கியத்திலிறந்த
ஆவினங்களையெல்லாம், அப்சரஸ்திரீகளும் பெரியவர்களுந் தேவர்க
ளும் எதிர்வந்து வணங்கி, ஆநந்தங்கொள்ளும்படியாய்ப் பசுலோகம்
போய்ச்சேர்ந்து அங்கிருந்த அரிவையரைக் கண்டு, உங்கள்சொல்லின்
உதவி உபாயத்தினால் அந்திராஜன் யாகப்பசுவாய் ஆனுலகடைந்தன
மென்று அன்புடன் மருவி இருந்தார்கள். அப்பசுக்களை சவரட்ச
ணை பண்ணிக்கொண்டிருந்த பீனமகாரிஷியும் அவரைச்சார்ந்த இன
த்தாருங் குலத்தாரும் தானிருந்த தலத்தாருங் வணங்குப்படிக்கு
வாழ்வு பூண்டிருந்தார்கள். ஓ, தருமராஜனே! சகல தேவதைகளும்
பசுவினிடத்தில் வாசமாயிருக்கிறபடியால் தேவதைகளைப் பார்க்
கிலும் பசுக்க ளதிகமென்றுரைத்தார், அதைக்கேட்டு தருமராஜன்
சந்தோஷித்து வணங்கி கர்க்கனே நான் கண்ணும் காதுங் கருத்தும்
பெற்றதற்கு உம்மால் உரியபலனடைந்தேன். இம்மை, அம்மை,
உம்மைக்கும் உதவி தேடிக்கொண்டேனென்று உடம்புமறந்து உள்
ளமகிழ்ந்து பூமியில் விழுந்து புரண்டு பணிந்து பூரித்துப் போற்

றித் தோத்திரம்செய்தார். புங்கவர் முதலியபேர்களும் புகழ்ந்து மகிழ்ந்தார்கள். இந்தச்சரித்திரத்தை எழுதினோர் படித்தோர், இன்பமாய்க்கேட்டோர் இதயத்தி நிறுத்தினோர் அனுஷ்டித்தோர் ஒருவருக்குரைத்தோர் இவர்களெல்லாம் தனதானிய போகமும், சாம்பிராச்சியமும், புத்திரசம்பத்தும் பெண்சாதிபாக்கியமும், இல்லறதருமமும்பெற்று ஆயுசுடன் நோயற்றுவாழ்ந்து முடிவில்பசுலோகமடைவார்களென்று சுருதிவாக்கியம்.

70. கபிலைமகிமையுரைத்த கதை.

நான்கு திசையும் கீர்த்தியை யுடைய தருமநந்தனனுவர் பீஷ்மரை வணங்கி எந்தையே பசுக்களிலே கபிலைப்பசுவென்று வேறேபிரித்துப் பகர்ந்தமையால் அந்தப்பசுவுக்கு நிறம், குணம் பிறப்பு, சிறப்பு அப்பசுவைப்போல் அவையவலட்சண மமைந்திருந்தாலும் காதுங்,கண்ணும்,மடியும்,மூக்கும்,கறுப்பாயிருக்கும்.இவைகளின் ஒரு குறிப்பிருந்தாலும் அதுவுங்கபிலை யென்று பேசுவார்கள். இப்பேர்ப்பட்ட கபிலைப்பசுவை யாவரேனும் பூசித்து அர்ச்சனை செய்து தருமதேவதை யென்று பாவித்துப்போற்றினல் மேன்மையிற்சிறந்தமேலானகதி பெறுவார்கள். மனுவிக்கியானத்துக்கு மாறாய் நடந்தவர்கள் வேதவிதிகளை விலக்கிய பேர்கள் தீவினை முதலிய பாவங்களைத் தேடிக்கொள்வார்கள். பொய் பேசினவர்கள் தெய்வ நிந்தை செய்தவர்களானுலும் ஒருகபிலைப்பசுவைக்காப்பாற்றி அதற்குவாயுறையைகொடுத்து வளர்த்து அதைவழியிற் கண்டாலும் வணங்கித் தொழுது அதனுடைய பாலைதேவதைகளுக்கு அபிஷேகமாகும்படி அளித்து உபசரித்தாலும் தீமைகள்தீர்ந்து செம்மையாகிய பலனையடைவார்கள். அந்தக்கபிலையை அடித்து உதைத்து வதைத்து இறைபோடாமற் கட்டி இம்சை பண்ணின பேர்கள் எமலோகத்தில் வருணபாசப் பிணிப்பினுல் வாடி நிராநரகத்தில் கோரயழுந்துவார்கள், அந்தப் பசுவின்பால் மனிதர் சாப்பிடப் போகாது. சாப்பிட்டால் பசுவின் இரத்தத்தைப் பானம் பண்ணியது போலாம். சிவலிங்கத்திற்கு அபிஷேகம் பண்ணலாம். இப்படி சிவனுக்கற்புதஞ் செய்தவர்களின் பெயரைச் சொல்லுதற்கு பிரம்மா முதலாகிய தேவர்களும் பயப்படுவார்கள். மேலும், அபிஷேகஞ் செய்வித்தவர்களுடைய பெருமையை அறியவு மாட்டார்க ளென்றால் நான் சொல்லத்தரமல்ல. அப்

ப்பேர்ப்பட்டகபிலையைச் சுசியாய் தயாரசனும் சத்தியவானும் நித்திய விதிதப்பாதவனுகிய வேதியனுக்குத் தானமாகக் கொடுத்தால் அவனுக்குக்கிடைக்கிறபேறுசாற்றத்தக்கதோ? இத்தன்மையாகிய பசுக்களுக்கு தினமும் புற்கொடுத்து குளிப்பாட்டி மஞ்சள் குங்கும புஷ்பமணிந்து தண்ணீர் குடிப்பித்து தளைநீக்கி வழிபட்டால் உடலெடுத்தநாள்முதல் ஒரு புண்ணியமுஞ் செய்யாத உலுத்தனானாலும் கல்லாக் கசடனானாலுங் கியானமில்லா மூடனானாலுங் காமியானாலும் பொய்திருட்டுக் கபடியானாலும் பிழைநீங்கி யொதுங்கி பெருங்கதி பெறுவான்.

இவ்வளவு பெருமையும் அருமையும் இந்தக் கபிலைக்கு எப்படி வந்ததென்றால் முன்காலத்தில் அக்கினிபகவான் தேவர்கள் பேரிற் கோபமாய் கபிலைப்பசுவின் வயிற்றுக்குள்ளே ஒளித்துக்கொண்டான். அந்த வுளவறியாமல் உலகெல்லாந் தேடி எங்குங் காணுமலேங்கி மெத்த விசாரமாய் கபிலையினிடத்திற்கு வந்து ஓ, புண்ணியஉருவே! பொய்யாதபுனிதமெய்யே அக்கினி தேவன் எங்கேயோமறைந்துபோனுன். அவனில்லாமல் நித்திய பூசை நைவேத்தியம் ஓமம் யாகந் தடையாய் நாங்களும் பெரியோர்களும் வருந்துகிறோம் வாடுகிறோம் நீர் தருமதேவதை யாகையால், எங்கள் வருத்தந் தீரத்தக்கதாக இன்ன இடத்தில் இருக்கிறான் அக்கினிபகவானென்று எதார்த்தஞ் சொல்ல வேண்டுமென்று வேண்டிக் கொண்டார்கள். அத்தேவர்கள் படுந்துயாத்தைக் கண்டு சிந்தை இரங்கி அக்கினிதேவன் என்னுடலிலே இருக்கிறானென்றுரைத்தது. அப்போது அக்கினிதேவன் வெளியில்வந்து தேவர்களை வெறுத்துக்கொண்டான். அவர்கள் அக்கினிக்கடவுளுக்குச் சாந்தஞ் சொல்லி அவன் கேட்ட வரங்களைக் கொடுத்து பூலோகமுதலிய புண்ணியலோகத்திற்கும் பூசை நைவேத்தியம் பொருட்படும்படிக்குப் பொருத்தினார்கள். அந்தநாளையில் சகலதேவதைகளுஞ் சங்கடநீங்கி கபிலைப்பசுவைக்கொண்டாடிப்புகழ்ந்து உலகிலுள்ள பொருளுக்கெல்லாம் சுத்த பவித்திரமான பொருள் கபிலைகளென்று சுசி ஆசார புனிதங்களும் உங்களால் சுத்தமாகத் தக்கதென்று உங்களைப் போஷித்த பேர்களுக்கு பூரணபதவி கிடைக்குமென்று பேரானந்த வீட்டுக்கு நீங்களே சோபானமென்று மேலான வரங்களை ஸ்திரம்பெறக் கொடுத்தார்கள். அந்த நாள்முதல் இந்தக் கபிலைகளுக்குப் பரிசுத்தமுண்டாய் பதங் கிடைத்ததென்று வீஷ்மர் விளம்பினார். அதனாற் சந்தோஷப்பட்டு ஐயா இறந்துபோனபேர்களுக்கு நல்லகதி வரும்படியாக அவரவர்களுடைய பின்

ளைகள் செய்யவேண்டிய திதி சிரார்த்தங்களென்ன? அது செய்கிற கிரமமென்ன? அதனால் வரும் பலனென்ன சொல்லவேண்டுமென்று தொழுத தருமராஜனுக்கு வீஷ்டுமர் விரித்துரைக்கின்றார்.

71. இறந்துபோன தாய்தந்தையர்களுக்கு பிள்ளைகள் செய்யவேண்டிய திதி, சிரார்த்தங்களினால் வரும் பலனென்னவென்ற கேள்விக்கு உத்தரம்.

இயாவனொருவன் எக்கியம்பண்ணி அவிர்ப்பாகம் வைக்கும்போது தேவர்கள் பிரசன்னமாவதுபோல, மாண்டுபோனவர்களுக்காக பிதுர்லோக தேவதைகள் முதன்மையாயிருக்கிறார்கள். இறந்த தாய் தந்தையைக்குறித்து அன்னம் தர்ப்பணம் பிரதானமாகச் செய்யவேணுமென்று சொல்லுவதுண்டு. அது மூன்றுபிரிவாயிருக்கும். அதாவது பிராமணர்களுக்கு அன்னம்பகர்தல், எள்ளுடனே தண்ணீர்வார்த்து விடுகிறது, பிண்டம் பிண்டமாய்ப் பிடித்து பிதுர்திருப்தியாய்க் கொடுக்கிறது, விலக்கினதை விட்டு விதித்திருப்பதைச் சேர்த்து ஆசாரயீன அசுத்தனாகிய பிராமணனைத் தள்ளி வேதவித்தாய் சுசிக்கிரமமாய் விஞ்ஞான வந்தனாகிய வேதியனை வைத்துக்கொண்டு ஆத்மசுசியுற்ற பூதனாய் ஸ்தானமுதலிய புறத்தூய்மையோடிருந்து சாஸ்திரவிதிப்பிரகாரம் திதி கொடுப்பாராகில் இவர்களுடைய பிதுர்க்கள் இவர்கள் நினைத்தளித்த கதிபோய்ச் சேர்வார்கள். முக்கியமாய் மொழிந்திருக்கின்ற எக்கியம் ஐந்தில், பிதுர்க்கருமம் பிரதானமான எக்கியம். இந்தப் பிதுர்க்காரியம் பெரியோர்களைக் கண்டபோதும் புண்ணியதீர்த்தங்களைப் பார்த்தபோதும் செய்யவேண்டும். அல்லது பிதுர்த்தினம் வருகிறவரையிலுங் காத்திருந்து செய்யவேண்டும். இப்படிக்குச் செய்யக்கூடாமற் போனாலும் தன்குற்றந் தீரும்படியாய் தந்தைதாயிறந்த திதியை மறவாமல் சுத்திபத்தியாயிருந்து திவசங் கொடுக்கவேணும் அப்படி கோடாமற் போனால், அந்தவம்ஸத்தார் முழுவதும் நசித்து மீளாநரகத்தில் வீழ்வாரென்றுமனுவிக்கியானத்திற் பேசியிருக்கின்றது ஆதலால், (விக்கியானேஸ்வரம்) பார்த்தால் இதனது விபரமெல்லாம் விள்ளுமென்றுரைத்த பாட்டனை தருமராஜன் பணிந்து சுவாமி! விரதமுறையை பற்பலவிதங்களாய்ப் பேசுகிறார்களே அதனுடையவிபரஞ் சொல்லவேணுமென்று கேட்க, குந்திமைந்தனுக்குக் கங்கைமைந்தன் கூறுகின்றார்.

72. விரதமகிமை.

ஏழுகடலும், ஏழுகிரியும், ஏழுபொழிலும், எட்டுத்திக்குப்பாலகரும் எட்டுவசுக்களும் ஒன்பதுகிரகங்களும் ஒன்பதுமணிநிதியும் ஒருங்கே கொண்டாடாநின்ற உதிஷ்டிரனே கேளும், தபசுசெய்கிற ரிஷிகளியாவரும் உபவாசமிருந்து ஈஸ்வரனுடைய திருவிளையாடல்களையும் அவரது திருவுருவத்தையும் சிந்தித்து தபத்துடனிருப்பார்கள். இல்லறத்தாருக்கு ஏதாகிலுங் காரியத்தாட்சி வந்தால் அக்காரியங் கைகூடுகிறவரையிலும் இத்தனை நாளைக்கென்று விரதமிருந்து ஒருவேளையுண்டு காரியசாதனம் பண்ணிக்கொள்வார்கள். இதல்லாமல், பெரிய விரதமொன்றுண்டு. அதாவது, இல்லறதருமத்திற் கடுத்திருக்கிற விபரப்படிக்குத் தப்பாமல் விருந்தினரையும் சுற்றத்தாரையும் இனிய வசனத்துடன் உபசரித்து அமாவாசி, ஏகாதசி, சதுர்த்தசி, சஷ்டி, பூரணை முதலிய திதிகளிலும், கார்த்திகை, விசாகம், திருவாதிரை நக்ஷத்திரங்களிலும், சோமவாரம், சுக்கிரவாரம் சனிவாரங்களின் விரதங்களில் அவரவர் குலாச்சாரதருமந் தப்பாமல் நடப்பதும் மேலாகிய விரதமென்று வீஷ்டுமர் சொல்ல.

தருமராஜன் சரணமடைந்து சுவாமிகளே! உலகத்தில் எந்தத் தானம் பண்ணினாலும் எந்தவிரதம் நோன்பு இழைத்தாலும் இரணியதானங் கூடவைக்கும்படி ஏற்படுத்தி இருப்பானேன். தக்ஷணை திரவியங் கொடுக்காமற் செய்யலாகாதோ வென்ன வீஷ்டுமர் சொல்லத்தொடங்கினார்.

73. தானத்துக்கு தக்ஷணை இல்லாமல் செய்யலாகாதா என்ற பிரசனைக்கு உத்தரம்.

கேளும்தருமனந்தனே முற்காலத்தில் பரமேஸ்வரன்தன்னுடைய வீரியத்தை அக்கினி பகவானிடத்தில் வைத்தார். அக்கினிதேவன் அதைச் சகிக்கமாட்டாமல் தத்தளிக்கும்போது கொஞ்சம் பூமியிற் சிந்தி அது உடனே சொர்ணமாயிற்று. அந்தத் தங்கத்தை தேவதைகள் கண்டு எவர்க்கு எந்தத் தானந் தந்தாலும் அந்தச் சொர்ணத்தைக் கூடவைத்துக் கொடுத்தால் விசேஷம் இல்லாவிட்டால் பலனில்லை யென்று விதித்து வைத்தார்கள். ஆனபடியால் சொர்ணம் எல்லாப் பொருளுக்கும் மேலான பரிசுத்தமுடையது. பாபவினை போக்குவது

அயோக்கியனை யோக்கியராக்குவதும் பெரும்போகக் கடல் கடக்குங் கப்பலுக்கும் சகல தர்மங்களுக்கும் உச்சவாதிகளுக்குந் தலையாயிருப்பதும் அரசனால் அதிகாரஞ்செய்வதும் கீழ்மக்களை மேன்மக்களாக்குவதும்குணத்தைவளர்ப்பதும் குலத்தைவிளைப்பதும் இல்லாத பொருளை உண்டென்பதும் உண்டென்பதை இல்லை என்பதும் இன்னமுள்ள பெருமை சிறுமை எல்லாவற்றிற்கும் பொன்னே காரணம். யுகந்தோறும் இதனுடைய சொரூபங் குறைந்துபோம். ஆனால் இதனது மகத்துவங் குன்றாது ஆதலால் எந்தக் காரியத்திற்கும் ஈஸ்வர சமிதமாக இரணியதக்ஷிணை ஈயவேண்டுமென்று வீஷ்டுமரியம்ப தருமராஜன் சந்தோஷித்து ஐயா கபிலையின் கோசல கோமயம் அசுசம் போக்குகிற தூய்மையென்று முன் குறிப்பிட்டிருப்பதைவிரித்துரைக்க வேண்டுமென்று வேண்டிய காலையில் குறைவில்லாததவம்பெற்ற வீஷ்டுமர் சொல்லுகின்றார்.

74. கோமயப்பெருமை.

பூர்வம் செந்தாமரைக் கமலத்தில் வீற்றிருக்குந் திருமகளானவள் பசுக்கூட்டத்திற்குப் போய் ஓ! கபிலைப்பசுக்களே நானெப்போதுந் தப்பாமல் உங்களிடத்திலிருக்கும்படியாக விருப்பங்கொண்டு வந்தேன் நீங்களொருமைப்பட்டு என்னிஷ்டப்படிக்கு வரங்கொடுக்கவேணுமென்ன அதற்குப்பசுவினங்கள் ஓ, மகாலட்சுமியே! நீ எங்குந் தங்குவதில்லை நிலைஇல்லாதவள் மின்னல்போற் றோன்றி மறைந்துபோவாய் நீ போனபிற்பாடு உன்னை நினைத்து நினைத்து கிலேசப்படவேண்டி இருக்கும். நீ யாரை அழவொட்டாமல் வாழவைத்தாய் அது தானில்லை நீஎங்களிடத்திலிருக்க வேண்டாமென்று வெறுத்தார்கள். அதைக்கேட்ட இலட்சுமிசொல்லுகின்றாள் ஓ,கோவினமே!நான் உண்மையாகவொருவரிடத்தில்நிலைத்திருப்பதில்லை அதுநிச்சயம்நானிருக்கும் இடத்தில்சில வித்தியாசங் கண்டால் அங்கே தரித்திருப்பதற்குத் தாளாமல் இன்னொரிடத்திற்கு நான் போய்விடுவதுண்டு.மேலும் ஞாயந்தவறிபொய்மொழிபேசிபுண்ணியமறந்துபாபம்விளைத்து பொறுமைமேவிட்டு பின்புறணி பேசிபுருஷனை அவமதிக்கும் நாய் போற் பிதற்றும் பேய்களிடத்திற் பொருந்தேன்.நீங்கள்புனிதர்கள்எக்கியயோக்கியர்களில் உங்களிலுயர்ந்தவ ரொருவருமில்லை, நீங்கள் சகலதேவதா சொரூபம்தருமபீடம் மாயையு மர்மமும் அற்றவர்கள் இப்பேர்ப்பட்ட உங்

களிடத்தில்வாசமாயிருக்கவேண்டுமென்று இச்சையாய்வந்தேன் உங்களாலேஎன்பெயர்விளங்கவேணும்தருமதேவதையாகிய நீங்களேதள்ளிவிட்டால் என்னருமை யறிந்து யார்கொண்டாடுவார்கள் முக்கியமுள்ளவர்களே யென்று அப்பசுக்களின்மனது பரிவுறும்படியாகப்பன்னினள். அப்போது ஆனினங்களெல்லாங்கூடி ஆலோசித்து நல்லது எங்களுடைய சாணத்தில் நீ வாசமாய் எக்கிய யாகாதிமுதலிய புண்ணியவசனத்திற்குப்புனிதமாய் கோசலகோமயமென்று கொண்டாடும் பெருமையாய் வீடுவாசல் மெழுகிச் சுத்திசெய்கிற அகத்திற் கருமையாய் பாபசண்டாளத்துவபைசாசகணத் துஷ்டர்களுக்குப் பவித்திரமாயிருந்து அங்கங்கும் வாசஞ்செய்யவேண்டுமென்று உறுதியானமொழி கொடுத்து கோமயத்திற் குலாவும்படி வரங்கொடுத்தார்கள்: ஸ்ரீமகாலட்சுமி தனக்கு நற்பேறுகிடைத்ததென்று கொண்டாடி முகமலர்ச்சியாய் மனமகிட்சியாய்எவைகளினும் உச்சாகமாய் பசுக்களின் கோமயமான சாணத்திற் பதிவுகொண்டிருந்தாள். அவளுக்குத்தங்கையாகிய கீர்த்திலட்சுமியும் அந்தமுறைமைப்படிக்கு கோஜலகோமயம் மேன்மையாய் அதுகள்பட்ட இடமெல்லாம் புனிதமாய் லட்சுமீகரமாய் அசூசங்களைப்போக்கடித்து ஆசாரமாயிருந்து அலங்காரஞ்செய்வதும் மனதுக்கு சந்தோஷமாக்குவது மதுவே என்று சொல்ல.

இதைச்சந்திரகுலாதிபனான தருமராஜன் கேட்டு சந்தோஷத்துடன் ஐயா தருமவழியிற்சம்பாதித்த திரவியத்தை தானமாகப்பெற்றவர்களுக்கு எந்தக் கதிகிடைக்கும் எப்பலனைப் பெறுவார்களென்று கேட்க வீஷுமர் சொல்லத்தொடங்கினர். தாஷ்டீகமான தருமராஜனே அதற்கொருசரித்திரம் சொல்லுகிறேன் கேட்பாயாக.

75. சந்தேக வழிகளால் சம்பாதிக்கும் பொருளை தானமாக கொடுக்கப்பட்டவர்களுக்கு எந்தகதி கிடைக்கும் என்ற பிரசினைக்கு உத்தரம்.

நான் சொல்லப்போகிற சரித்திரத்தைக் கேட்டால் உன்மனதிலுற்ற சங்கையுந் தீரும்மற்றவர்களுக்குச் சந்தேகநிவர்த்தியாவது மன்றி ஜென்மஜென்மங்களி லிழைத்த தீவினைமுதலிய பாவங்களும் தீராத ரோகங்களும் தெளியாத மூடத்தன்மையும் தெளியப்பண்ணுந் தரித்

திரும்போய் பிறவிப் பெருங்கடலிலாழாமல் குற்றங்குறைவில்லாச் செல்வத்துடன் புத்திர மித்திர பாக்கியமும்பெற்று கீர்த்தியாய் வாழ்ந்து முடிவில் பரமபதமடைவார்கள்.இவ்விதமாகச் சகல சாம்பிராச்சியத்தையுங் கொடுக்கப்பட்ட கதையிதுவாக்களுமென்று கழறினார்.

74. சப்தரிஷிகளின் பாபப்பிரமாண வாக்கியம்.

அத்திரி வதிஷ்டர் ஜமதக்கினி கௌசிகர் பாத்துவாசர் கௌதமர் காசிபர் இவர்சளேழு பேரும் திரிபுவனங்களுங் கொண்டாடப்பட்ட செல்வர்கள், கவலையற்றிருக்கின்ற அருந்ததியும்,புருடனைவிட்டொருக்ஷணப்போதும் பிரிந்தறியாதவள். சண்டியென்பவளும் அவளுடைய நாயகன் பசுசகனென்கிற ரிஷியும் இவர்கள் பத்துபெயரும் அதிகமான தபசுபண்ணி பூலோகத்திற் சஞ்சரிக்கு நாளையில் மழை இல்லாமல், சயலாத்துமாக்களும் வருத்தமடைந்து துன்பப்பட்டு சோர்வடையுங்காலத்தில் இந்தமகானுபாவர்களாகிய சப்தரிஷிகளுக்குங் கந்தமூலபலங்கிட்டாமல் காடு நாடெல்லாந் திரிந்து, கவலைப்பட்டு அந்தந்த இடங்களிலிருந்த ரிஷிகளுந் மஹா தபசிகளும் அருந்தவர்களும் உற்சாகமில்லாம லுறங்கி பசியிருந்து பறந்து ஒன்றுந் தோன்றாமல் அறிவழிந்து, சிரமையடைந்து உலகத்தவரைப் பார்க்கிலும் ஒடுங்கிமெலிந்து உயிருசலாடப் பொருந்தி இருப்பதைப் பார்த்து, தாங்களு மோரிடத்தி லுட்கார்ந்து பைத்தியம் பிடித்தவர்களைப்போல் பரதவித் திருக்கும்போது,சத்துப்போன ஒருபிணத்தை வைத்துப்போன இனத்தைப் பார்த்து இந்தப் பிணத்தை யாகிலுந் தின்று பசிதீர்த்துக் கொள்ளுவோமென்று அப்பிணத்தின் சமீபத்திற்போய்ச் சுற்றிக்கொண்டு மாம்சத்தைப் பிடுங்கினார்கள். அந்த வேளையில்விடாதருவென்கிற இராஜன் காட்டில் வேட்டையாடி, அந்தவழியே வருகிறவன் இவர்கள் பிணம்தின்னப் புகுந்ததைக்கண்டு நெருங்கிவந்து பிரதக்ஷண நமஸ்காரம் புரிந்து போற்றி மகாபெருமைபெற்ற பேரானந்த மூர்த்திகளே, உங்களுக்கு நேரிட்ட நெடும் பசிவருத்தத்தினால் இந்தப்பிணத்தைப் புசிக்கப் புகுந்தீர்கள் ஐயோ இப்படிக்கேன் வரவேணும் சொர்ணங்கள் நவரத்தினங்கள், ஆபாணங்கள் வஸ்திரங்கள் நெல்முதலாகிய நவதானியங்கள், பற்பலபண்டங்கள், நல்லபாலைத்தரும் வெள்ளைப் பசுக்கள் இதுகளெல்

லாம் வேண்டினமட்டும் உபசாரத்துடன் தருகிறேன் உங்கள்பசி நோய் தீரத்தக்கதாக வாங்கிக்கொள்ளுங்க ளென்று பகர்ந்து பணிந்தான். அதற்குச் சப்தரிஷிகளும், தலையசைத்து இப்போதுநேரிட்டிருக்கின்ற பெரும்பசியினால் நாங்கள் உடலொடுங்கிவிழுந்தாலும் உயிர் போனாலும் நல்லதே. உடலோ டிருக்கவேணுமென்கிற ஆசை ஒருக்காலுமில்லை. பிணத்தைத்தின்றாவதுபெரும்பசி தணிப்பது பெருமை. இதைவிட்டு கைசாய்ந்து, காலோய்ந்து மனமடிந்து, உடலொடுங்கி, தனக்கில்லை யென்று ஒருவரிடத்திற் குறைபுகன்று வாங்குவது கூடாது. அப்படி அல்லவென்று வாங்கினாலும் நல்லவர்களாய் தருமத்தின்வழியிற் சம்பாதித்தவராய் பாபசொத்தல்லாமலிருப்பதாய் பாரமார்த்தியராய் குடிப்பிறப்பி லுயர்ந்தவராய் கேட்டவர்களுக்கு இல்லை என்னாதவராய் கெடுநினைப்பற்றவராய் ஆசாரபூசாவிதி அன்புடையவராய் ஜீவகாருண்ய முள்ளவராய் இருப்பார்களாகில் அவர்களிடத்திற் பெறலாகும். அம்மட்டே யன்றி நாயினுந்தாழ்வாகிய தாசிகள் வெட்கம் விட்டு லச்சைகெட்டு மேல்விழுந்துறவாடி வஞ்சனையாற் சம்பாதிக்கப்பட்ட திரவியத்தைப் பெரியவர்களென்று பேர்பெற்றவர்கள் இறந்துபோனாலும் மறந்துந் தீண்டமாட்டார்கள். அதைப்பார்க்கிலுங் கெட்டசொத்து கொடுங்கோல் மன்னர் பொருள். அப்படிப்பட்ட பொருளை நாங்க ளுன்னிடத்திற் பெற்றுக்கொள்ள மாட்டோம், நீயேன் வருந்துகிறாய்; அரசனே யென்று சப்தரிஷிகளும் சாற்றி வெறுத்தார்கள். அம்மொழியைக் கேட்ட இராஜன் மிகவுமனநொந்து தன்பட்டணம் புகுந்து சகல சாஸ்திரங்களுந் தெரிந்த குற்றமற்ற பெரியோர்கள் சொன்ன சொல்லறிந்து இழிவாகிய முறைபுரிந்து தேடுஞ் செல்வமானது கடலலைபோ லொத்ததென்றுணர்ந்து புத்திமான்களாகிய மந்திரி களுக்கு சப்தரிஷிகள் சொன்ன தாட்சியைப்புகன்று அவர்களும் அரசனும் ஆலோசனைசெய்து இன்னவிதமாய் நடத்தலாமென்று நிச்சயித்து காய்கனிபண்டங்களுக்குள்ளே திரவியத்தை மறைத்து சப்தரிஷிகளுக்குங் கொடுத்து அவர்கட்குக் குற்றநேரிடும்படிக்குச் செய்யவேண்டுமென்று வினைவசத்தால் வேந்தனுக்கும் அமைச்சர்களுக்கும் புத்திசபலப்பட்டு தாங்கள் செய்வது மெத்த உபாயமென்று நினைத்து மந்திரிமார்கள் சப்தரிஷிகளிருக்கிற இடத்தைநாடிப் போய், காய்கனி கிழங்கு முதலியவற்றைக் கொடுத்துக் காலில் விழுந்தார்கள். அக்கனிகளை ரிஷிகள் வாங்கிப்பார்த்து அதற்குள்ளே சுவர்ணம் நிறைந்திருக்கின்ற குற்றத்தை யோர்ந்து யாதொன்றும் எங்கட்கு வேண்டியதில்லை

உங்கள் இராஜனுக்குப் புத்தி போதியுங்கள் நாங்களொருவரிடத்தி லும் வாங்குவதில்லை யென்று மறுத்து மறுபடியுங் கொடுத்துவிட்டா ர்கள். அதனை வாங்கிக்கொண்டுபோய் இவ்விடத்தில் நடந்த விர்த் தாந்தங்களை எல்லாம் இயம்பினார்கள். கொடுங்கோல் மன்னனுக் குக் கோபம் பிறந்து மகாரிஷிகளென்று மனங் கொள்ளாமல் துணி வாய் அவர்களைக் கொல்லுங் கருத்துடையவனாய் சற்றேனு மிரக்கமி ல்லாமல் மாரண ஓமம் பண்ணினான். அந்த ஓமாக்கினியிலிருந்து ஒருராக்ஷசி ஆர்ப்பரித்தெழுந்து அண்டரண்ட பகிரண்டமும் அதிர வெளிப்பட்டாள். மகா புஜபலத்தையுடைய இராஜன் பார்த்து இன்ன இடத்தில் வேதப்பிராமண ரிஷிகளிருக்கின்றார்கள் அவர்கள் ஆசார யீனாள் பிணத்தைப் பிடுங்கித் தின்னப்பட்டவர்கள் அவர்களண்டை க்குநீபோய் மெனியைப்பிடித்து கோரதந்தத்தாற்கடித்துக் கொன்று வரக் கடவையென்று மந்திரவலுவேற்றி யனுப்பினான். அந்த பிரம்ம ராக்ஷசக்கன்னி ரிஷிகளிருக்கப்பட்ட விசாலமான பொய்கைக்க ரையிற் புகுந்து வானம்வரையிலு நிமிர்ந்தாள். சத்தியமே நித்திய விரதமாகப்பெற்ற உத்தமரிஷிகளும் தங்கட்குரிய விசாலக்கண்களையு டைய பத்தினிமாரும் தாமும் தபசுபண்ணிக்கொண்டிருந்து நிஷ்டை கலைந்தெழுந்திருந்துபசியாற்றிக்கொள்ளுவதற்குபட்சணைகள்ஒன்றுங் காணமல், அந்தப் பொய்கைக்குவந்து அதிற் றழைத்திருக்கப்பட்ட தாமரைத் தண்டு அதின் கிழங்கு காய் கொழுந்து முதலியவற்றைத் தின்று தண்ணீருண்டு பசிதாகந்தணியப்பண்ணும் வேளையில், கோர தந்தமும் செம்பட்டமயிரும் கறுத்தஉடலும் சிவந்தகண்ணும் வாயு மநாக்கும் வடிவுங்காட்டி கொடிய ஆயுதங்களும்பூட்டி அவர்கட்குத் தோற்றும்படிக்கு எதிரில் எதிரியாயிருந்தாள். இவர்கள் அவளைக்கண் டுங் காணாதவர்போலிருந்தார்கள். அவள் கனைத்து நலமோங்கியுயர் ந்த தவரிஷிகளே நீங்களியாரென்றும் இந்தத் தடாகத்திற்கு ஏன் வந்தீர்களென்றும் போராடிப் பேசினாள். சப்தரிஷிகளும் நீயார் அர க்கி, உன்பூர்வோத்திரம் புகலென்று கேட்டார்கள். அந்தப் பூதஸ்திரீ யானவள் இந்தத்தடாகத்து நீரை ஒருவரும் தீண்டாமலும், எவருக் கும் உதவியாக வொட்டாமலும், காவலிருக்கப்பட்டவளென்று கழ றினாள். அது கேட்டு முனிவர் மொழிகின்றார்கள். நாங்கள் இந்தக் குளத்திலிருக்கின்றதாமரைக் கிழங்கைஉண்டு தண்டுமுதலியவற்றை மென்று தழைகளைத் தின்று தரித்திர காலங் கழிக்கவேண்டி வந் தோமென்று சொன்னார்கள். அரக்கியானவள் முன்னதாய் உங் கள் பெயரைப் புகன்று அப்பால் நீங்கள் வந்த சங்கதி சொல்லு

ங்களென்று அதட்டிப்பேசினாள் அவள் வாக்கியத்தினால். மகாரிஷிகள் மருண்டு இவளேதுசண்டி புரண்டு பேசுகிறாள் தர்க்கமிடுகிறாள் சமர்த்தைக்காட்டுகிறா ளென்று ஞானதிருஷ்டி யினால் நாடினார்கள். இவள் பிறந்த விதமும் வந்திருக்கிற காரணமும் இவளை யனுப்பி வைத்த இராஜன் முயற்சியும் அறிந்துகொண்டு, இப்படியாக நமது பிராணனைப் பிடிக்கவந்த பேயென்று நகைத்து இவளதுவல்லமையை யறிவோமென்று தங்களுக்குரிய பெயரைச்சொல்லாமல் வேறுமாறுபாடான பெயரைச் சொன்னார்கள். அந்தவேளையில் இன்னொரு ரிஷி ஈஸ்வரன் எங்கேயோ இருந்து அந்தப் பங்கஜதடாகத்திற்குவந்தார். அந்த ரிஷி இங்கிருந்த சப்தரிஷிகளையுங் கண்டு ஆநந்தங்கொண்டு பேசி வருகிறவேளையில் இராக்கதஸ்திரியானவள் படபடவென்று ஓடிவந்து ஓ! புதிதாய்வந்த ரிஷியே உன்னுடைய பெயரென்ன சொல்லுமென்று பின்னுங்கேட்டாள். அவருஞ் சொன்னார் அன்னவளுக்கு இவருடையபெயர்பொருள் விளங்காமையால் அரக்கி இரட்டித்து இரட்டித்துக்கெட்டியாய்ச் சொல்லினக்குநன்றாய்த்தெரியப்படுத்துமென்று சீறினாள். அதனால் அவருக்குக் கோபம்பிறந்து அடிபொட்டி மகளே உனக்கித்தனை அகங்காரமா அல்பஸ்திரீயாகிய அரக்கி நீயா என்னை அலட்சியம் பண்ணி அதட்டிக் கேட்கிறவளென்று கையிற்பிடித்திருந்த தண்டைச் சுழட்டி எறிந்தார் அதுபோய் அவளுடையதலைமாய்ந்து விழச்சாடியது. நீலகிரிபோல் நிலத்தில் விழுந்தாள் மகாரிஷியினுடைய கோபாக்கினி புறப்பட்டு அவளுடலை எரித்துப் போட்டது. அதனாற் சாம்பலானாள்; வனத்திலுள்ள மாதவர்களும் சப்தரிஷிகளும் சந்தோஷப்பட்டு அந்த ரிஷியைப் புகழ்ந்து கூட அழைத்துக் கொண்டு மகாயோக்கியமான தடாகத்திற் புகுந்து ஸ்நானம் பண்ணி காலக்கடன்களை முடித்துக்கொண்டு தாமரைக்கிழங்குதண்டடனிலைகள் இவைகளைப்பிடுங்கி சேறில்லாமலலம்பி சுமையாகக் கட்டி ஒரு பக்கத்தில் வைத்து தாங்கள் செபத்தி லிருந்து விழித்துப் பார்க்கும் போது அந்தச் சுமைஇல்லாமற்போயிற்று.பசியினால் வருந்தி பலதிக்கிலும் பார்த்து காணாமல் ஐயப்பட்டு என்ன இவ்விடத்தில் அயலார் வரவில்லையே. நாம் வைத்த சுமையை யாரெடுத்தவர்கள், எப்படிப்போயிற்று, இங்கிருந்தவர்கள் தானே எடுத்திருக்கவேண்டும் நீங்களாராவது எடுத்தீர்களா வென்று கேட்க அங்குள்ள ஒருவருமறியோ மென்றார்கள். பிரமாணஞ்சொல்லிக்கொடுங்களென்றுகேட்டு, ஓ சுனகரிஷியே நாங்கள் சொல்லுகிற பிரமாணங்களுக்கு நீர் சாட்சி பூதமாயிருந்து கேளுமென்று சத்தியம் பண்ணினார்கள்.

(அத்திரிமகாரிஷி) சொல்லும் பிரமாணவாக்கியம் தானந்தச் சுமையை எடுத்திருப்பேனாகிலும், எடுத்த பேர்களைப்பார்த்திருப் பேனாகிலும்,பசுவை உதைத்து அடித்தவர்,சூரிய சந்திரருக்கு நேரில் மலம் மூத்திரம் விடுத்தவர், வேதத்தில் விதித்திருக்கின்ற தருமந்தப்பி நடந்த வேதியர், வேள்வி யாகக்கருமங்களில் மந்திரக்குறைவு சொன னவர் இவர்கள் போகிறபாபத்தில் நானும் போகக்கடவனென்றார்.

(வசிட்டர்சொல்வியது)வேதம்படியாதவேதியன்,துறவுபூண்டபின் பெண்போகம் விரும்பினவன், ஆளைக்கண்டு குறைத்து மேல்விழுதா யைக்கூட இழுத்துக்கொண்டு திரிபவன்,அடுத்தாரைக் கெடுப்பவன், ஆசார நெறிதப்பினவன்,பசித்தவர்க்கு அன்ன மிடாமலுண்டவன், இவர்கள் வீழுநரகத்தில நானும் படியக் கடவே னென்று,அந்த மூட் டையைத்தொட்டது மில்லை ஒருவரெடுக்கப் பார்த்து விட்டது மில்லை யென்று சொன்னார்.

(காசிபரிஷிசொல்வது)அந்ததாமரைக்கிழங்குமூட்டையைநானெ டுக்கவில்லை,எடுத்திருப்பேனாகில் பெற்ற பிள்ளையை விற்றுண்டவன், சரண மடைந்தவனைத் தள்ளி இகழ்ந்தவன், திரவியமிருந்தும் தீனர்க ளை இரட்சியாதவன், மெஞ்ஞானிகளை வெறுத்து நிந்தித்தவன், பொய் சாட்சிபுகன்றவன், கர்மமானதாலங்களை ஒருநாளையில் இரண்டுதரம் ஏற்றவன், எடுக்கப்படாத சுமையை எருதின்மேல் லேற்றினவன், எருது முக்கி இழுத்துச சம்பாதிப்பதை ஜீவனஞ் செய்பவன், எருதி ன்மனநோவ அடித்தவன், கிழப்பசுவைக் காப்பாற்றாமல் விட்டவன், போகிறகதியில் நானும் போகக்கடவே னென்றார்.

(பரத்துவாசரிஷிசொன்னதாவது)இந்தத்தாமரைக்கிழங்கைஅப கரித்திருப்பேனாகில் தங்கள்தங்களுடைய ஞாதிகளை வஞ்சித்தவன், அவர்களுடன் குடும்பரட்சணை பண்ணாதவன்,பசுக்களைவிற்றுப் புசிப் பவன், பொறுமையற்றவன்,ஐயமிட்டுண்ணாதவன், தருமபரிபாலனம் புரியாமல் பெரியோர்வைத்த தருமசத்திரத்தைக்சாவடியை ஏரிகுளங் களை இடித்துத்கொடுத்தவன், ஒருவருக்கு விற்றபின் மறு விலைக்குக் கொடுத்தவன், வழியடைத்தவன்,போகிற நரகத்தில் நானும் போகக் கடவேனென்றார்.

(ஜமதக்கினிகூறுவது) இந்தக்கிழங்குச் சுமையைகிரஹித்தேனா கில்வீடுதூரமான ஸ்திரீயுடன்மருவினவன்,தீர்த்தமுதலிய ஜலங்களில் மலசலம்விட்டவன்,பெண்களுக்குத் தூதுமுதலிய துஷ்கிர்த்தியத்தி லே சீவனஞ்செய்பவன்,கொண்ட நல்லவள்மனதுகுன்றச்செய்தவன்,

கூத்திமோகத்தால் தந்தை தாயைப் பழித்தவர்,இவர்கள்போகிற நரகம் எனக்கும் உண்டாகுமென்றார்.

(கௌதமரிஷிவாக்கியமாவது) இந்த மூட்டையை நானறியேன் எடுத்திருப்பேனாகில் பெரியோர்மனஞ் சலிக்கப்பேசினவன், அகந்தை செய்தவன்,தான்செய்த தருமத்தை நடுவில்விட்டவன்,அதை விலைக்கு விற்க உடன்பட்டவன்,நித்தியாக்னி ஹோமத்தை நீக்கினவன்,அவித்தவன்,ஆத்மக்ஞானமற்றுதன் தாரத்தையொதுக்கி பரதாரத்தைப்புணருபவன், சோரஸ்திரீகையிலன்னஞ் சாப்பிட்டவன்,பாலின் அன்னத்துடன்பழத்தை நீக்கி உப்பிட்டமுதுண்ணவன்,உண்ணும்போது தீப ஒளியை யொழித்து உண்டவன்,பெரியோர்களுக்குப் பொருளைக்கொடுத்து அருளைப்பெறாமல் அநீதியில் வழக்காடிக்கெட்டவன், நல்லோரை நிந்திப்பவன்,முன்னொன்று பின்னொன்று சொல்பவன்;போகிறகதியில் நானும் புகுவேனென்றார்.

(விசுவாமித்திரர் சொல்லிய வாக்கியம் நானிந்தமூட்டையைத் தொட்டெடுத்திருப்பேனாகில் வினைமூட்டை சுமப்பதுமன்றி நால்வகைச்சேனையைக் காப்பாற்றுதராஜாக்கள், தனக்குரியவேலைக்காறரிடத்து கடி கடிந்து பேசுகிறவர்கள், குடிகளை வருந்திக் கொடுமைசெய்பவர்கள்,அநியாயத் தீர்வை தண்டமிடுபவர்கள், தீரவிசாரித்தறியாதவர்கள்,பட்சபாதம் பேசுகிறவர்கள்,கண்ணோட்ட மற்றவர்கள், கற்றவர்கல்லானை நட்டவர்,உற்றவர்களைகாக்காதவர், மனுவிக்கியானந்தப்பி நடப்பவர்கள், மாற்றார்வார்த்தையை நம்பின அரசர்கள், எந்தநரகத்தி லிறங்குவார்களோஅந்தநரகமே அடியேனுக்கென்றனர்.

இந்தப்பிரகாரம் ஏழுரிஷிகளுஞ் சொன்ன பிரமாணங்களைச் ரிஷிகேட்டு வடமீனாகிய அருந்ததியை நோக்கி அம்மா நீயும் பிரமாணம் பண்ணவேண்டு மென்றனர் அப்படியே மஹா பாக்கியமென்று சொற்லுகின்றாள்.

(அருந்ததிதேவி) நானந்தச் சுமையை எடுத்திலேன்,எடுத்திருப்பேனாகில் மாமன்மாமிபேரில் அன்பில்லாமல்நிந்தைசொல்லிசண்டை இட்டுத் திட்டுகிறவள்,தன்சுவாமியாகியகணவனுடன் தாறுமாறுபேசி நிற்பவள், புருடனுடைய குறையைப்பிறரிடத்திற் சொல்லியபேதைகள்,போஜனமுதலாகிய பொரிக்கறிகள்பால்வடைபாயசங்கள்பண்டம் பலகாரங்கள் பழத்தினுசுகள் இவைகளைபுருஷனுண்பதற்குமுன்னே புசிப்பவள், பிள்ளையை வஞ்சித்தவள்,கருவழித்தவள்,காலையிலெழாதவள் அறுசுவையுடன்சமயற்செய்து அரிகிலிருந்து அன்பனுக்கிடாமல்

முண்டக்காய்த்தண்ணீரும் சுண்டக்காய் வற்றலும் அதோகிடக்கிறது கதுக்கு போவென்று அலக்ஷியமாய் மனம்பதைக்கச் சொல்பவளும், எந்தக்கதி யடைவார்களோ அந்தக்கதிக்கு அடியாளும் பாத்திரமென்றாள்.

(அருந்ததியின் தோழிப்பெண் சொன்னதாவது) நானந்தக்கிழங்கு மூட்டையைத் தொட்டிருப்பேனாகில் சாதம் சமைத்துக்காலமறிந்துதன் கணவனுக்கிடாதவள், வீட்டுவேலைசெய்வதற்கு மனமில்லாமல் முகஞ்சுளித்துக்கொண்டவள், பொய்பேசுகிறவள் விலையாகக் கொண்டு வளர்த்தபெண்பிள்ளையை கன்னிகழிக்காமல் கலியாணப் பிள்ளையை பார்க்காமல் தன்புருஷன்முதலிய பேர்களுக்குக் கூட்டி வைத்து தான் கொண்டகருத்தை முடித்துக்கொள்ளுகிறவள், பிச்சையன்ன மிடாதவள், சுன்னங் கொடாதவள், யாசகரையதட்டி திட்டித் துறத்தினவள் புருட னிடத்தில் உதட்டியாய் பேசினவள் இவர்களெக்கதி ஏறுவார்களோ அக்கதி ஏறுவேனென்றாள்.

அவளுக் கருகாமையிலிருந்த பசுச்சகனென்னும் பாஸ்கரர் நானு மந்தத்தாமரைக்கிழங்கைப் பார்த்தறியேன், எடுத்தறியேன் சத்தியமாகச் சொல்லுகிறேன் வேசிவயிற்றிற் பிறந்த பிள்ளையாயும் ஒருவருக்கு அடிமைத்தொழில் செய்பவனாய் போவேன், இது இந்தச் சன்மத்தில் மாத்திரமல்ல சென்ம சென்மந்தோறுந் அப்படியே திரிவேனென்றனர்.

எல்லோர் மொழியையுங்கேட்ட சுனகரிஷியைப் பார்த்துச் சொல்லுகின்றார்கள் எங்கள் வாக்கில் வந்தவண்ணம் மனதும் ஒருமைப்பட்டு சத்தியம் பண்ணினோம். நாங்கள் சொல்லிய உண்மைகளியாவும் உம்முடைய ஞாபகத்திலிருக்கிறதல்லவோ நீரும் எங்களைப்போல் சங்கையறத் தீர்த்துக்கொடுமென்று கேட்டார்.

அந்தரிஷியானவர் நகைத்துச்சொல்லுகின்றார் நல்லது நானந்தக்கிழங்கு மூட்டையை எடுத்திருப்பேனாகில் தேவப்பிராமணருக்கானாலும், எக்கியம் பண்ணப்பட்ட ரிஷிகளுக்கானாலும், ஒருவன் ஆசையுடன் பெற்றபெண்ணை சகலாலங்கார கன்னிகாதானமாய்க்கொடுக்கும் பலனெதுவோ அப்பலனை நானடைவேன் என்று சத்தியம் பண்ணினான். அவ்வாக்கியங் கேட்ட ரிஷியீஸ்வராளியாவரும் பெருமைபெற்ற மஹாரிஷியைப்பார்த்து எல்லாப்பாபங்களையும் விளைத்து அவைகளைப் போக்கப்பட்ட புண்ணியமூர்த்தியே நாங்கள் உண்பதற்குக் கொண்டிருந்தவண்டினஞ்சூழ்ந்ததாமரைமலர்தண்டை எங்களுக்

குக்கொடுமையாவென்று வேண்டினார்கள் அந்தவேளையில் சுனகரிஷி ரூபமாயிருந்த தேவேந்திரன் தன்னுடைய சுயரூபங்கொண்டு ரிஷிக ளுக்குபசாரங்கூறி நான்செய்த அபசாரத்தை பொருத்தருள வேண்டு மென்று தோத்திரம் புரிந்து மாயைரூபமாய்வந்த அந்தராக்ஷசஸ்தி ரீயைக்கொல்லவும், உங்கள் வாக்கினால் தருமசபதங்களைப் பலர்கேட் கவும், தாமரைக் கிழங்குச்சுமையைமாயையால் மறைத்தேன். அது நீங்கள் வைத்த இடத்திலிருக்கின்றது. நீங்கள் பசியாறுங்கள் இனி நல்ல மழைவருஷிக்குமென்று தேவேந்திரன் போய்விட்டான். அப் பால் அவனுத்தரவின்படி நான்குதிக்கிலுங் கவிந்து வெகு கோஷ்டத் துடன் மழைபொழிந்து பூமிகளில் சகலபயிருமேறி விளைந்து, சகல சம்பத்தும் போதுமான வரையிலும் பொருந்தியது. ஜீவன்முத்தரிஷி களுக்கும் பசிதீர்ந்து தேசஞ்செழித்தது. சப்தரிஷிகளுந் தவம்புரிந் தார்கள். அந்தராஜன் பாபமான அபலந்தேடிக்கொண்டே னென்று வந்து ரிஷிகளைப்பணிந்து ஆசீர்வசனம் பெற்றுப்போனான். ஐயா புண்ணியனே இப்போது நான் சொல்லிய அனுஷ்டானங்களி நின்று பாக்கியவந்தனாயிருந்து பாபமில்லாப் பொருளை யனுபவித்தால் வம்ச பரம்பரையாய்ச் செல்வங்குறையாமற் செருக்கு மேலிட்டு முகிவில் பரகதி பெறுவார்களென்றும் கங்கை மைந்தன் சாற்றினார். சந்திர குலசிகாமணியாகிய தருமராஜன் கேட்டு சுவாமி பாதரக்ஷையும் கு டையும் தகப்பன் பெயர்சொல்லித் தானமீந்தால் என்னபலனைப் பெ றலாகும் அதை எனக்குச் சொல்லவேண்டுமென்ன வீஷ்மர் சொ ல்லத்தொடங்கினார்.

75. பாதரக்ஷையும் குடையும் தகப்பன்திதியில் தானங்கொடுத்தால் என்னபலன் பெறலாகும் என்றவினாவிற்கு உத்தரம்.

கேளும் தருமநந்தனா முற்காலத்தில் ஜோதியாகிய சூரியனுக் கும் பெருமைபொருந்திய ஜமதக்கினிக்கும் வாதுவந்தது. அதென் னவென்றால் ஜமதக்கினி சந்தோஷமாய் கையில் விற்பிடித்துக் கொண்டு உல்லாசமாய் வருகையில், அவர்மேகத்திற் பிரகாசிக்கு மி ன்னல்போன்ற அழகையுடையரேணுகை அம்புறாதூணி தாங்கிக் கொண்டு பின்னேவரவும் நெடுந்தூரஞ் சென்று வெள்ளிடைவெளி யில் ஜமதக்கினி நின்று அம்புறாத்தூணியை வாங்கி வில்லிலே அம்

யைச்சந்தித்துப் பிரயோகம்பண்ணினார். மாயாவிநோத மனோவிகாரங்கொள்ளாத மஹாரிஷியெய்த பாணத்தை மேகலாபரணமும் சிலம்பும் சப்திக்கும்படியாய் ரேணுகாதேவி ஓட்டமாயோடி எடுத்துவந்து புருஷனிடத்தில்வைத்தாள். இப்படியாக அவர்போடுகிற அத்தனை பாணங்களையும் எடுத்தோடி வரும்போது ஒருவிசை சீக்கிரத்தில் வாராமல் சற்றேபொறுத்து வந்தாள். அந்த ஜமதக்கினிபகவான் ஓ, பெண்ணாயகமே என்கிட்டவாவென் றழைத்து நீ அஸ்திரமெடுத்து சனுதியில் வாராமல் இத்தனை நாழிகைசென்ற தென்ன அங்கே நடந்ததை உள்ளபடிசொல்லென்று கேட்டார். ரேணுகை இரண்டு கையுங் கூப்பிச்சிரசில் வைத்துக்கொண்டு கிடுகிடென்று நடுங்கி சுவாமி சூரிய வெப்ப முதிர்ந்த களர் நிலத்தின் சூடு நெருப்புப்போற் பற்றுவதினால் கால்வைக்கமாட்டாமல் மரத்தினிழல்தோறும் நின்று சாலாற்றிகொண்டு, உலகமெல்லாந் துதிக்காநின்ற தயாரசமூர்த்தியாகிய தங்களண்டைக்கு வந்தேனென்றாள். இந்தமொழி கேட்ட ஜமதக்கினிக்குக் கோபம்பிறந்து கண்கள் சிவந்து ஆ! உன்னுடம் பெல்லாம் வியர்க்கவும் கால்கள் கொதிப்பேறவுஞ் செய்தசூரியனை நானென்னசெய்கிறேன் பாரென்று உதடுதுடிக்கப் பெருமூச்சுவிட்டு புருவ நெரித்து கதிரவனைக் குறித்தார். அவருடைய கோபத்தைத் தினபதியறிந்து பிராமணரூபமாய் மஹாரிஷிக் கெதிரில்வந்து பிரமனுக்கொப்பாகிய பிரபலமுனியே ஆயிரஞ்சோதியாகிய சூரியன்பேரில் அதிக கோபங்கொண்டு தண்டிக்கும்படி நினைத்த தன்மை யாதோ பற்பல கோடி ஆத்மாக்களும் பூமண்டலமும, காடும், செடியும், மேடும் மலைகளும் சூரியோதயாஸ்த மில்லாவிட்டால் சுருங்கிப்போமே நெருப்பிற்குச் சோதியேது, நீருக்குக் குணமேது, பயிர்களுக்குயிரேது இதுகளெல்லாந் தெரிந்த பாக்கிய தவசிலாக்கிய சாதுவான யோக்கிய தவசிரேஷ்டராகிய தாங்களே இப்படிகோபிக்கலாமா? பெண்சாதி தேகம் வருத்தப்பட்டு பொரிந்ததென்று பரிந்து வரப்போமா, எரிந்து விழலாமா, இவ்விதமாக நியகோபங்கொள்வீராகில் தயாபரதத்துவம் எடுபட்டுப் போமே, அருளேயுருவா இருக்கப்பட்ட ஐயனே, கொஞ்சக் காரியத்திற்காக சூரியன்பேரிற் கோபிப்பதுமுறைமையோ சூரிய கிரண மில்லாமற்போனால் மழை பெய்கிறதேது, அந்தமழை இல்லாமற்போனால் பூமியில்பயிர் முதலியவற்றின் விளைவேது, விளைவாகிய பலபண்டங்க ளில்லாவிட்டால் ஓமாக்கினியேது, அக்கினிசோத்திர மில்லாவிட்டால் அவிர்ப்பாகமேது, அவிர்ப்பாக மில்லாவிட்டால் மூவர் முதலிய முனிவரோடு தேவர்களேது தேவதை களி

ல்லாவிட்டால் வேதமேது, ரிஷிகளேது, விதிவிலக்கேது, ஆகை யால் சகலபூதகோடி உயிர்களுக்கும் சூரியனே காரணம். தங்கம்போ ன்ற யோகபரர்களுக்குச் சூரியகலை, அவனாலேயே எல்லோர்களுக்கு முதலி. அப்படிபட்ட ஆதவன் பேரில் இப்படிப்பட்ட கோபம் எண் ணக்கூடுமோ உம்முடைய நியாய, நன்றன்றுரைத்து, தன்னுடைய நிசரூபத்தைக்காட்டி மஹாம்மேருவைப்போல் வளர்ந்து பிரகாசித் தான். அவனைக் கண்டமாத்திரத்தில் கோபமாறிப்போய் கிருபாசமுத் திரனாய் சூரியபகவானைத் தழுவிக்கொண்டு ஆசீர்வதித்து வாழ்த்தி னார். மஹானுபாவராகிய ஜமதக்கினியின் வாழ்த்து தலையேற்று மிகு ந்தபக்தியுடன்குடையும்,பாதரக்ஷையும் தானங்கொடுத்து என்காய்ச் சலைக்காத்த புத்திமான்களுக்கும் பக்தியாளருக்கும் நித்திய வைபவ வெற்றியு முண்டாகுமென்று வேதன் விதித்திருக்கின்றார். ஆதலால் குடையும் பாதரக்ஷையு முனிவர் முதலியோருக்குக் கொடுத்தவர்கள் நற்கதியாகிய நன்மையடைவார்களென்றுவரமீந்து சூரியன்போயினார். இரேணுகையுடனே ஜமதக்கினி தன் ஆச்சிரமத்திலமர்ந்திருக்கச்செ ன்றார். ஆனதால், யாவராலும் பாதரக்ஷையும், குடையும், தங்க ளைப்பெற்றதந்தைதாயை நினைத்து பெரியோர்களுக்குத் தானங்கொடு க்கிறார்களோ அவர்களடையும் பலனை சூரியமண்டலமே யறியுமென் று வீஷ்டுமர் சொன்னார். அதைக்கேட்டு பொய்யற்ற மெய்யன் சுவாமி, சௌசம்பண்ணுகிறவிதி சாற்றவேண்டுமென்று வேண்ட சூரி யனைப்போற் றெளிவினையுடைய வீஷ்டுமர்சொல்லத் தொடங்கினார்.

76. சௌசவிதியைப்பற்றிய கேள்விக்கு உத்தரம்.

தருமகவச தராதிபனே கேளும்! இரவில் பகலில் இருமலங் கழி க்கும்போது தெற்கேமுகமும் வடக்கே அபிமுகமாக உட்காரவேண் டும். காலமூன்றினும் பாதைகழிக்கும்போது பூணூலைச்செவியிலேற்றி வேட்டியினால்தலையைமூடி பூமியைப்பார்த்துசூரியனைச் சந்திரனை பசு க்களை பிராமணர்களை பெரியோர்முதலிய ரிஷிகளை ஆராதனையாகிற தெய்வங்களைப் பாராமல் ஒருவருடனும் பேசாமல் எவர்கள் கண்ணி லும் படாமல் மூன்றுதரங்களையுந்தட்டி உட்கார்ந்து மலங்கழித்து, இடதுகரத்தில் மிருத்திகையும் வலதுகையில் சலமுங்கொண்டு குத த்தைச் சன்றாய்சுத்திசெய்து பின்பு இடதுகையை மிருத்திகையினால் தேய்த்துவலதுகரத்தையும் அர்த்தமாற்றி இருகரத்தையுஞ்சேர்த்து

இழையத்தேய்த்து இரண்டுமுழங்கால்மட்டும் மணலினாற்கழுவி எட்டுதரம், வாய்கொப்பளித்து ஆசமனங்கொண்டு பின்பு முப்புரி நூல் செவ்வியமாயணிந்து ஒருவருடன்பேசாமல் இல்லறந் துறவறமென்னும் இருநெறியுடையோருக்கும் தருமசாஸ்திரம்சொல்லியபிரகாரம் தூய்மை ஆசாரத்துடன் நடப்பது இயற்கையாம். பின்குலமானபேர்கள் தங்களினத்துக்குத் தக்கபடி இருந்து தனக்குமுன் குலத்தார் சொல்லியகாரியங்களைச்செய்து எல்லாரிலுமுயர்ந்த இருடிகளை வணங்கி வழிபடுகிறதே மேலான காரியமென்று புகன்று நான்காம்வருணத்துசூத்திரன் தன்னுடையமனத்தூய்மைக்கு அரிதான ஆசாரத்திலே இருந்து உயர்ந்த பிராமணர்கள் முதலிய குலத்திற்கும் ரிஷிகளுக்கும் வணங்கி வழிபட்டு நடந்தார்களேயாகில் யாவற்றிற்கும் மேன்மையான கதிபெறுவார்களென்றறிந்துக்கொள்ளும் என்றார். தருமராஜன் சந்தோஷித்து ஐயா, இறந்து போங்காலத்தை எவ்வாறுணர்ந்துக் கொள்ளத் தக்கதென்று கேட்க அதற்கு வீஷ்மர் சொல்லுகின்றார்.

77. நிரியாணமாகிய மரணக்குறி யறியுந்தன்மை.

அப்பா! தருமனே; ஒருவருக்கு மரண காலங் கிட்டிவரும்போது அறிந்துக்கொள்ளுந் தன்மை எப்படிக்கென்றால் தெற்கே இருந்து வடக்கே போகிறவர்களை வடக்கேயிருந்துதெற்கே போகிறவர்களைக் கண்டால் திசைமாறு பாடாய்த் தோற்றுமாகில், பார்த்தவர்கள் மூன்று வருடத்தில் முடிவார்கள்.

சூரியனை மண்டலமில்லாமலும் கண்ணைமூடிப் பார்க்கில், கதிர்கள் தோன்றாமலும் போனால் இரண்டு வருடத்திலிறப்பார்கள்.

தன்னுடைய உடற்சாயல் தொண்டியாய்க் கண்டாலும், தோன்றாமல் போனாலும், ஒருவருடத்திலொழிவார்கள். மேலும், தேகத்தினிழலானது பற்பலபேதமாய்க் காணுமாகில், ஆறுமாதத்தில் அழிவார்கள். தங்கள் கையினால் இரண்டுகாதையுமூடிப்பார்க்குமிடத்தில், ஓசை இல்லாமலிருந்தால் ஒரு மாதத்தில் உறங்குவார்கள், வாயில் சலத்தை வார்த்துக்கொண்டு, கொப்பளித்து பாதி வெயிலில் பாதி நிழலில் உமிழ்ந்தால் அது இந்திர தனுசைப்போல் வீழாமற் போமாகில் ஆறுமாதத்திலழிவார்கள். அருந்ததி தரிசனமாகாமற்போனால்

குரங்கொன்று அடித்துப்பிடித்து கிழக்குமுகமாய்க் கொண்டு போகிறதுபோல் கனுக்கண்டால் பதினைந்துநாளையில் படுவான்.

தன்சுபவாத்தில் கேட்பவர்கட்கு இல்லையென்னுமற் கொடுத்து வருகின்றவர்கள் கொடாமல் மறுத்து என்னகொடுக்கிறது பிரயோசனமில்லை போவென்று மனம்வேறாய் வெறுத்து லோபப்புத்தி மேலிடுமாகில் ஒருவாரத்தில் சிலவு பெறுவான்.

ஒருநாளுங் கொடாத லுத்தர்கள் கடைசி காலத்தில் தானதருமபரவுபகாரம் பண்ணி எல்லாரும் ஆச்சரியப் படும்படியாய் ஈகையிற் படிந்தால் இருமூன்று திங்களில் உருண்டுபோவார்கள். சாதாரணமானவர்கள்கொஞ்சந்தலை குலுக்கிகர்வமடைந்து மனிதனைமதியாமலிருந்தால் நெய் வறண்ட விளக்குபோல்குப்பென்றெரிந்து தொப்பென்றுவிழுவதுபோல் போவார்கள். இவ்வாறின்னம் அநேகங்குறிகளுண்டு இவைகளெல்லாம்எல்லாருக்கும்பொதுவென்றெண்ணப்படாது. இக்குறிகளை வாதம், பித்தம் ஐயம் மிகுதிகை கூடிய தேகத்திற்கும் உவர்ப்புநிலம் கசப்புநிலம் புளிப்புநிலம் காகரப்பு நிலமுதலிய திசை மனிதருக்கும் இப்போதுநானுரைத்ததில் ஏதாகிலுங் குறிபிடிக்கும், ஆனால்சாஸ்திரங்களிற் சொன்னதுஎப்போதுந்தவறாது நமக்குத்தோற்றவில்லை யென்று அலட்சியம் பண்ணப்படாது, ஒன்றில்லாவிட்டால் ஒன்றுபலிக்கும் இதைக் குறிப்பாகக்கண்டு கொண்ட வுடனே பெண்டுபிள்ளை பண்டுபதார்த் தங்களைப்பாராட்டாமல் அகப்புறபற்றுசைவிட்டு தன்னால் கூடியமட்டும் தானதருமம் பரஉபகாரம் அன்னதானம் ஆண்டவனபிஷேகம் கோதானம் பூதானம் நந்தவனம் ஆலயவிளக்கு அடுத்தவர்க் கிரக்கம் இவைமுதலாகிய நன்மைகளைச்செய்து பொறுமையும் தைரியமுங் கொண்டு சகலருக்குந் தெரிவித்து நானிந்தக்காலத்தில் இந்த வேளையில் போய்வருகிறேனென்று புகன்றால், அது தெய்வலோகத்தாருக்கும் இந்தக்கர்மபூமியோருக்குமகத்துவமும் காட்சியும் பிரபலப்பெருமையையும், தெய்வநிர்மாணமும் பெரியோரொன்கிற பிரமாணமு முண்டுபண்ணும். தானும் நிஷ்டை கூடியதுபோலிருந்து நிரந்தரப்பொருளாகிய பரத்தினிடத்தில் கருத்தைப் பதித்து கர்ப்பூரஜோதி காட்டுங்கள் கட்டியாய்வைத்து சுத்திலு மூட்டுங்களென்று பிறவியின் வேதையகற்றி பாதை அறலாகும், மகத்துவமான நற்கதியடையலாம், தருமராஜனே யென்றுசொல்ல; வீஷ்டுமனைவணங்கி ஐயா, தேவதைகளுந் தொழப்பட்ட மனிதர் சிலருண்டென்று கேள்விப்பட்டிருக்கின்றேன் அப்பேர்ப்பட்ட மானிடருண்டாகில், அருள்புரியும் ஆண்டவனே யென்றார். பனைக்கொடி

வேந்தன் பகாலானர், நீகேட்டசங்கை அதிசயமல்ல உலகத்தில் எல்லோருமறிந்த விஷயமே ஆகிலுஞ்சொல்லுகிறேன் கேள்.

78. மானிடரில் தேவர்களுந் தொழப்பட்ட சிலர் உண்டா என்ற கேள்விக்கு உத்தரம்.

இந்திரசாரதி மாதலி இந்தச் சங்கையைக்குறித்து தேவேந்திரனைக் கேட்டிருக்கின்றான்; தேவேந்திரன் சொன்னபடிக்குச் சொல்லுகிறேன் கேள் தருமார்த்தகாமந் தவறுதலில்லாமல் குற்றங்களைந்து, நெறிமுறைவழுவாநிலை பெற்றவர்களும், அழகினையுடைய ஸ்திரீகளை ஒருபொருட்டாயெண்ணுமலிருக்கப்பட்டவர்களும், வித்தையினாலும், சம்பத்தினாலும், அழகினாலும், புகழ்பெற விருக்கின்றனமென்று கர்வங்கொண்டு செருக்கடையாம லிருப்பவர்களும் ஜிதேந்திரியராயிருக்கின்றவர்களும், தன்தாரமேதாரம், பரதாரசோதரரா யிருக்கிறபேரும், தருமந்தப்பாமல் நடக்கிறவர்களும், நடுநிலைமை யானவர்களும், சத்தியமே பூஷணமா யிருக்கிறபேரும் சவுசவிதி தப்பாதவர்களும், தருமஞ்செய்கிற விஷயத்தில் வலதுகையாற் செய்கிறது, இடதுகைக்குத் தெரியாமற் கொடுக்கிற பேரும், பஞ்சேந்திரியச்சேஷ்டைகள் துறந்து யதியாச்சிரம தருமந்தப்பாமலனுஷ்டிகிறவர்களையும் சிவபூஜை ஹரிபூஜை மாறுமல் அனுஷ்டிக்கின்ற வர்களையும் நான் வணங்கும்படியான பெருமை பெற்றவர்களென்று மாதலிக்குத் தேவேந்திரன் வகுத்திருக்கின்றார். ஆனதால் இதை நீதெரிந்துக் கொள்ளென்று வீஷ்மர் சொல்லப் பர்வதம் போன்ற தோள்கள் பூரித்து இருகரங்குவித்து முடிவணங்கி அடிமேற்பணிந்து. சுவாமி, இவ்வுலகத்தில் தடாக மெடுப்பது தருமமென்று பேசுகிறார்கள் அதனால் வரும்பலனைச் சொல்லு மென்று தருமராஜன் கேட்க, தளிர்மதிகுலத்திதிலுத்த கங்காபுத்திரன் நவிலலுற்றார்.

79. தடாகம் ஏர்ப்படுத்து கிறவருக்கு என்ன பலன் தருமென்ற கேழ்விக்கு உத்தரம்.

கேளும்தருமநந்தனரே! தருமங்களென்பதுகோடாகோடியுண்டு அத்தருமங்களுக் கெல்லாம் மேன்பாட்டிலொன்றுகியதருமம்தடாகப்பிரதிஷ்டையாம். அந்தத்தடாகம்வெட்டிவைத்து ஏரிகுளங்களெடு

த்து சுற்றிலுந்தோப்புகள் பூஞ்சோலைகள் தென்னஞ்சாலைகள் உண்டு பண்ணி அதிலுள்ளதீர்த்தங்கள்சகலஆத்மகோடிகளுஞ் சாப்பிடும்படிக்குநேரிட்டால்உத்தமம். தானதருமத்தில்அன்னதான தருமம்பெரிது, அதிலும் தண்ணீர் வார்க்கிறதுபெரிதுஅதிலுந் தடாகம் பெரிதென்று மறைகள் முறையிடுகிறதாகையால் ஒருவர் ஏற்படுத்தியகுளத்திலே கபிலைப்பசு, அல்லது பசுக்கள் வந்து தண்ணீர் குடித்து, தாகவிடாய் தீர்ந்து வால்வீசி, மகிழ்ந்து வருமாகில் அவர்களுடைய மரபெல்லாங் கடைத் தேறும் சதுர்வருணத்தில் தாழ்ந்த வருணத்தோர் எக்கியங்கள் பண்ணக் கூடாதாகையால் ஒருதடாக முண்டாக்கினால் எக்கிய யாகங்கள் பண்ணிய பலன்களைப் பார்க்கிலும் எண்மடங்கு அதிகபலனுண்டாகும். அவர்களுடைய மூதாதைகள் நரகத்திலழுந்திக் கிடந்தாலும் தட்சணமே தேவர்கள் கொண்டாட நின்றசுவர்க்க பதவி பெறுவார்கள். தருமபூபதியே யென்று மும்மலங் கடந்த நின்மலன் புகல, சோமகுல மற்றசுந்தரன் கேட்டு பன்மகம் புரிந்த பாக்கியனே யென்று பிரததட்சணம் பண்ணி என்னைக் கிர்தார்த்தனுக்கி இரட்சித்தருளிய கெங்கா புத்திரனே! உலகத்தில் தங்கள் தங்கள், மோகாதிக ளறும்படியாக சந்தோஷமாய் ஆநந்தமாய், ஏகமனதாய், உறுதியாய், உண்மையாய், பூசைபண்ணுகிறபோது ஆராதனைக்கடவுளுக்கு சந்தனஞ்சாத்தி, புட்பம் அர்ச்சித்து, நைவேத்தியங் கொடுத்து, தூபந் தீபமெடுத்து,கவரி ஆலவட்டம்,குடை,கொடி முதலிய உபசாரங்கள் செய்யவேண்டிய விதி என்ன வசுவதி பதியே. அந்த வரலாற்றை அடியேனுக்குத்தெரியச் செய்யவேண்டுமென்று தருமர் கேட்க அப்படியே நல்லதென்று வீஷ்டுமர் ஆசையுடன் பேசததொடங்கினர்.

அப்பனே,இப்போது, என்னைநீ கேட்டபடியே சுக்கிராச்சாரியர் மனுவைக் கேட்டறிந்து சுவர்னமகாரிஷிக்குச சொற்றனர், அச்சுவர்னமகாரிஷி நாரதருக்கு நவின்றார். அந்நாரத மகாமுனிவர் எனக்கருளிச்செய்தார்.அவரால்நானுணர்ந்தபடிக்கு உனக்குச்சொல்லுகிறேன் கேளென்று வீஷ்டுமர் தருமராஜனுக்கு விளம்பலாயினர்.

80. பூஜாவிதி ஆசாரமுறையால் என்னபலன் கிடைக்குமெனறபிரசினைக்கு உத்தரம்.

அறக்கடவுண் மைந்தனே! புட்பசாதிக ளெல்லாம் அலைகளையுடைய பாற்கடலிலே தெள்ளமுதத்துடன் சேரப்பிறந்தது. அந்த

மகத்துவத்தினல் பவித்திர புட்பமென்று தேவதைகள் ரிஷிகள் தேவர்கள் ஒப்புக்கொண்டு வந்தார்கள். அறிவுடைய ஆத்மாக்களியாவரும் அர்ச்சிக்கத் தொடங்கினர்கள். தேனுடன் மிருந்தவாசனையாயிருக்கப்பட்ட வெள்ளைமலர்களால் வழிபடு கடவுளைப்பூசிப்பாரகில் மறுமையில் தைரியமும் வீரவிஜயமும் சம்பத்தும் ஆயுராரோக்கிய முடையவர்களாய் முடிவில் அவர்கள் பெறும்பேறும் நம்மாற்சொல்லி முடியப்போகிறதில்லை. அந்தப்புட்பங்கள்கோட்டுப்பூ, கொடிப்பூ, நிலப்பூ, நீர்ப்பூ. என நான்குவிதமாம் கோட்டுப்பூ வென்பது மரக்கிளையிற் பூப்பது, கொடிப்பூ வென்பது படரும் கொடிகளில் அலர்வது, நிலப்பூ வென்பது குத்துச்செடி புதறுகளிலே உண்டாகிறது, நீர்ப்பூ வென்பது தடாகமுதலிய மடுக்களில் தாமரை முதலிய புட்பிப்பது, இந் நான்கு விதங்களில் பலகோடி புட்பங்களுண்டு இவைகளில் உத்கிருஷ்டமான புட்பங்களினலும் பத்திரங்களினலும் பூசைபண்ணினல் அந்தப் புஷ்பங்களியாவும் கல்விக்ஞானங்கொடுத்து செல்வப்போகம் அடுத்து மோட்சவீடு குறித்துப் போவதற்கு முதற்படியாயிருந்து பிறவிக்கடல் கடப்பதற்குத் தோணியாகும்.

சிவப்புப்பூவினல் பூசை அர்ச்சனை புரிந்தால் மறுமையில் நினைத்த போகபாக்கிய மெல்லாங் கைகூடும் சத்துருஜெயமாகும் நீடூழி வாழ்ந்து நித்தியபதம் பெறலாகும்.

மஞ்சள் புஷ்பத்தின லர்ச்சித்தால் மறுமையில் மைந்தர், மனை வாழ்க்கை, மாடு, கன்று, நிலம், பலம், குலம், தலம், குடும்பம், எல்லாப்பெருமையு மெய்தும் தருமகலியாணங்கள் பண்ணும், தந்தியனுவார்கள்.

கறுப்புப்புஷ்பத்தாற் பூசை புரிந்தால் பாபரகிதனய் வியாபார சிந்தனையி லீட்டிய பொருளுடையனய் அக்கியான ஆசை உடையவனய் பூமியில்வாழ்ந்து அப்பால் விக்ஞானமேலிட்டு மேன்மை பெற்று மேலுலகடைவான்.

இன்னமுள்ள பன்னிறப் பூவிலும் பற்பல விதப் பலன்களுண்டாம் ஆதலால், புஷ்பங்களின் பூசையால் பெரும்பலனைப் பேசுவதற்கு என்னலுமில்லை எவராலுமில்லை.

81. சந்தனத்தின் மகிமை.

பொதிகைவெற்பின் சந்தனத்தை பகவானுக்குச் சாற்றினல் தீராத மஹாபாதகங்க ளெல்லாந்தீர்ந்து மறுமையில் அவர்களுடைய

தேகம் பரிசுத்தமாய் தேயசுடையதாய்ப் பரிமளமாயிருக்கும். சந்தன த்தூபங்களினால் பிரம்மஹத்திமுதலிய தோஷங்கணீங்கி தருமத் திற்கும் நீதிக்கும் இருப்பிடமாவார்கள். அகிற்சந்தனம் அரிசந்த னம் பூசிவைத்தால் போகசுகமும் வச்சிரதேகமும் புகழுடம்பும் பெ றுவார்கள். சாம்பிராணிப்புகை இட்டால் கலைகற்றவர்களால் சொல் லிமுடியாத அதிபதித்துவமுங்குற்றமற்ற ஜீவன் முத்தர்கள் தரிசன ஞ்செய்வார்கள். கர்ப்பூரதீபமேற்றி வைத்தவர்கள் அகண்டசாம்பிரா ச்சிய பட்டாபிஷேகம் பெறுவார்கள். மேலும் அவர்களைச் சேர்ந்தவர் கள், வம்ஸத்தார் முதலியபேரும் பொன்பாக்கிய பூஷணாதிகளுடன் புவியாண்டு பெரியவர்களுக்கும் அரிதாகிய புண்ணியபூமிக்கண் அமை வார்கள்.

82. தீபப் பெருமை.

தீபங்களில் உத்தமமான திருவிளக்கு என்னவென்றால் பசுவி நெய்யாலும், பருத்திப் பஞ்சாலு ஆலயங்களிலும் மடங்களிலும் தா மரை நூலாலும், விளக்கு வைத்தால், ஜன்மாந் திரங்களிற், செய்த சகலதீவினைகளுந் தரித்திரமும் பின்னமாய் ஐஸ்வரிய மெல்லாம் பெருகி வியாகுல முதலியது மாய்ந்து கனமும் இனமும் வாகனமும் நல்லமனமும் பெற்று மோட்சவீடு முன்னே நிற்கும் தருமாந்தனு என்றார்.

83. நைவேத்திய நலம்.

கல், நெல், புல், உமிமுதலிய மலினமில்லாத சுத்தமான அன்ன ங்களைபருப்பு, நெய்பதார்த்தத்துடன் ஆண்டவனுக்கு அன்புடன் நை வேத்தியம்பண்ணினவர்கள் அடையுந் தவத்தைப்போல்வேறேதவமு ண்டென்று விளம்பலாகுமோ மோட்சத்தைத்தருகின்ற பரமமூர்த்தி யைப்பூசிப்பதற்குச்சமானஞ்சொல்லப்படாது பூஜாமுகத்தில் தேவதா ர்ச்சனை நைவேத்தியமில்லாத போசனம் தேவாமிர்தத்துக்குச் சமான மானாலும் பெரியவர்கள் அங்கீகாரம் பண்ணமாட்டார்கள், அந்த அன்னம் விஷத்திற்குச் சமானம் பிட்சையிட்டுண்ணாத சாதம் புழுவு க்குச்சமானம். இப்பேர்ப்பட்டவர்களுடைய இல்வாழ்க்கையில் இரக் கவுங்கூடாது தேவேந்திரன் தேவதைகள் ரிஷிகள் சித்தர் சாத்

தேயர், கருடர், கின்னரர், யக்ஷர், காந்தருவர் வித்தியாதரர் பன்னி காதி முனிவர்களும், இராக்கதர் மானிடர்முதலான சீவகோடிகளும் சுவர்க்க மத்தியபாதலத்தி லிருக்கின்ற பேர்களியாவரும் பூஜைக் கும் நைவேத்திய போசனத்திற்குஞ் சமானமில்லை யென்று போற்றி பாபங்களைப்போக்கி கரையேறலாமென்னக் கூறியிருக்கின்ற வேதா கம விதியைத்தேடி மேலானோர்கள். காம்மியார்த்தத்தை விரும்பிப் பூசி த்தால் அவர்கள் போகபாக்கியங்களை நீண்டவயசு பரியந்தமடைந்து மேற்கதியாகிய மோக்ஷத்திற்கு இடங்கொடுக்குமென்று பீஷ்மர் விளம்ப, தருமராஜன் பணிந்து சுவாமி உருத்திராக்ஷத்தின் மகிமை யும் அருள் செய்யவேண்டுமென்று வணங்கிக் கேட்க, அதற்கு பீஷ் மர்சொல்லத் தொடங்கினார்.

81. உருத்திராக்ஷ மகிமையுரைத்தல்.

திரிநேத்திரமுள்ள பரமசிவன் அருள்பெற்ற அடியார்கள் விரும்பி அணிந்து கொள்ளும் உருத்திராக்ஷ மகிமையை விவரித்துரைக்கவே ண்டுமென்று தவமேன்மையுடைய நைமிசாரண்யமுனிவர்கள் சூத முனிவரைக் கேட்க அவர்சொன்ன உருத்திராக்ஷ மகிமையை நான் உனக்கு சொல்லுகிறேன்கேள். திரிநேத்திரங்களையுடைய பரமசிவனு க்கு அடிமைத்திறம் பூண்டவர்கள் தரிக்கும் உருத்திராக்ஷத்தின் பெ ருமை அற்புதமானதென்று சூதமுனிவர் கூட்டமாக இருக்கும் நை மிசாரண்யமுனிவர்களுக்குச் சொல்லத்தொடங்கினார்.

கேளுங்கள் முனிவர்களே! எத்தன்மையுடையவர்களானாலும் இழிவான தொழில் செய்யுந் தன்மையுடையவர்களே யானாலும் பார் வதிநேயனைத் துதிசெய்யும் சித்தமில்லாதவர்களே யானாலும் பரம சிவனுடைய சிறப்புள்ள உருத்திராக்ஷம் தரிப்பார்களானால், அவர்கள் சீவன்முத்தர்களென்று வேதங்களெல்லாஞ் சொல்லும். நமது கட வுளுடைய திருநேத்திரங்களி னின்றும் உதித்துண்டாகிய தேவர் களாற் புகழப்பட்ட உருத்திராக்ஷத்தைத் தரித்துக்கொள்ளும்விவேக முள்ளவர்கள் இவ்வுலகில் நேரிடும் எல்லாப் பாவங்களினின்றும் நீங் கிச் சிவலோகத்திற் பரமசிவனை யொத்துச்சேர்வார்கள். பலபல நதி களிற்சென்று முழுகுவதினா லென்னபலன், அசுவமேத முதலாகிய யாகங்கள் செய்வதினா லென்னபலன், சதகோடி மகாமந்திரங்களை ச் செபித்தலினா லென்ன பலன், தவமென்று பஞ்சாக்கினி மத்தியி

யிருப்பதினு லென்னபலன். உருத்திராக்ஷமென்னும் அரியமணியா னது நதிகளில் முழுகுதல் முதலாகச் சொல்லப்பட்ட இவைக ளெல்லாம் கொடுக்கும்பலன் யாதோ? அதனிலும் எண்மடங்கு அதிகபலன் கொடுக்கத்தக்கது என்று புராதன முனிவர்களாகிய ஞானவான்கள் தரித்துக்கொள்வார்கள், ஆதலால் அந்தமணியினுஞ் சிறந்தபொருள் வேறொன்றுண்டோ? இல்லை. அத்தன்மை யுள்ள உருத்திராக்ஷமணிகளை ஆயிரம் அணிந்து கொள்வார்களானால் அவர்களை விஷ்ணு, பிரமன், தேவேந்திரன், தேவர்கள் முதலானவர்கள் தாங்கிச்செல்லும் இரிஷபவாகன ரூடராகிய பரமசிவனென்று கருதி வணங்குவார்களென்றால், அம்மணியைத் தரிப்பவர் மானிடப்பிறப்பில் மேன்மையானவர்கள். அவ்வுருத்திராக்ஷமணியைச் சிரசிலும் செவிகளிலும் கழுத்திலும் பரந்த மார்பிலும் தோள்களிலும் கைகளிலும் தரிக்கவேண்டிய தொகைப்படி வகுத்து, நன்மை தங்கிய அங்குஷ்டவிரலிலு மணியவேண்டிய கிரமத்தை யறிந்து, தரித்துக்கொள்ளு கின்றவர்களும், மாணிக்கமுதலாகிய ரத்திநங்களுடன் சேர்த்துத் தங்கத் தகட்டினுற் செய்யப்பட்ட ஆபரணம்போல உருத்திராக்ஷமணியை இவ்வுலகத்திற் றரித்துக்கொள்ளு கின்றவர்களுமாகிய இவர்களுடைய திருவடித் தாமரைகளைத் தொழுகின்றவர்கள் ஜனன சாகரத்தில் அழுந்தார்கள். பரமசிவனிடத்தில் அன்பில்லாதவர்களும் உருத்திராக்ஷமும் விபூதியுந் தங்கள் சரீரத்திற் றரித்துக்கொள்ளாதவர்கள், மோக்ஷமடைவதற்குரிய பஞ்சாக்ஷரத்தை உச்சரிப்பவர்களைப் பரியாசஞ்செய்பவர்களும் அவற்றின் மகிமையை அறியாத தன்மையுள்ளவர்களும் இந்தப்பெரிய உலகத்திற் கழுதையாகவும் நாயாகவும் பிறந்திறந்து கர்மசேஷத்தில் காலம் கழிப்பார்கள்.

சந்திரனைத் திருமுடியி லணிந்தருளும் சிவபெருமானது மணியாகிய உருத்திராக்ஷமாலையினைற் செபிக்கத்தக்க மந்திரந்தருகின்ற பலனை இவ்வளவென மதித்துப் புத்தியினுற் றெளிந்து அறிகின்றவர்கள் யாவர்; நீரில் முழுகுமவர்களுக்கு உருத்திராக்ஷ பரிசத்தோடு தம்மேல் விழுகின்ற நீர் சிவகங்கைத் தீர்த்தமாம். ஒருமுகமுதலாகப் பதின்மூன்று முகமீறாகவுள்ள அம்மணிகளில் ஒருமணியினைக் கருதியபுண்ணியர்கள் முறைமையுடன் பூசைசெய்தால் அப்பூசை தெளிவாகிய நல்வினையுடைய பிறை மதியணிந்த பரமசிவன் பூசையாகவே சிறக்கும்.

இத்தன்மையுள்ள உருத்திராக்ஷத்தின் பெருமைகளை யெல்லாம் எடுத்து விபரமாகச் சொல்லின் பிரமன் முதலானவர்களுக்கும்

அமையாதென்றால், 'மற்றையாவர் அதன் பெருமையைச் சொல்லத் தக்கவர்களோ: ஆயினும் இந்த உருத்திராக்ஷத்தினால் ஆதியில் நடந்த சரித்திரத்தைச் சொல்லுகிறோம் கேளுங்க ளென்றார்.

மாமரத்தி லிருக்குங் குயில்கள் சோர்வடைந்து ஒளிக்கவும், மயி லின் கூட்டங்கள் சந்தோஷிக்கவும், உஷ்ணக்குறைகள் நீங்கவும், மேகங்கள் அனுதினமும் பொழிந்து நிறைந்த சீர்தங்கிய காஸ்மீரதே சத்துக்கு அரசனும் மிகுந்த சேனையை யுடையவனுமாகிய பத்திர சேனனென்னும் வெற்றியுள்ள அரசன் பெற்றருளிய இளவரசாகிய குற்றம் நீங்கிய தருமனென்னும் புக்திரனும், கற்றுணர்ந்து பெரு மைவாய்ந்த மந்திரிபெற்றீ புத்திரனாகிய தாருகனென்னும் பெயரை யுடைய வீரனும், வேதசாஸ்திர முதலாகிய கல்விகள் முழுவதும் ஓதி யுணர்ந்தார்கள். இந்தப் புத்திரர்கள் உருவத்தி லிரண்டு பேராகக் காணப்பட்டாலும் இராஜநீதியும் தனுர்வேத வித்தைப் பயிற்சியும் ஒப்பில்லாத உருவமும் ஆயுளும் இளமையும் அழகும், தருமமும் கிருபையும், தயவும் மாட்சிமையும் ஆகிய இவைகளில் வேற்றுமை இல்லை யென்னும்படி வளர்ந்தார்கள். அத்தன்மையுள்ள புத்திரர்களி ருவரும், விலையளவு அறியப்படாததும், பிரகாசிப்பது மாகிய நல்ல இரத்நாபரணங்களும் வாசனை தங்கிய சந்தனமும் சௌந்தரியமுள்ள தங்கள் சரீரத்திற்றரித்துக் கொள்ளாதவர்களாய் விபூதியும் நிலைபெ ற்ற உருத்திராக்ஷமுமே சரீரமுழுவதும் அணிந்து கொண்டார்கள். அவ்வரசனும் மந்திரியும் அருமையாகப் பெற்ற தங்கள் தங்கள் புத் திரர்களைத் தனித்தனியாக அழைத்து இனிதான வசனங்கள் சொல் லி வாசனையுள்ள நல்ல கூட்டுவர்க்கஞ் சேர்ந்த சந்தனமும் ஆபரணங் களுங் கொடுக்கவும், நிகரற்றவர்களாகிய அந்தப்புத்திரர்கள் அவை களில் விருப்பம்வையாமல் மறுத்து விட்டார்கள். அந்தப்புத்திரர் கள் இவ்வாறு நடந்து வருநாளில் ஒரு நாள் உலகமெங்கும் புகழ் பெற்ற பராசரரென்று சொல்லும் பெயருள்ள தவசீலராகிய முனிவர் வரவும் அந்தவரசன், எதிர்கொண்டு சென்று பணிந்து அவர் மனது க்குச் சந்தோஷ முண்டாகும்படித் தகுதியுள்ள பூசைசெய்து அந்தப் பராசரமுனிவர் மனமகிழ்ந்து ஆசீர்வசனஞ்சொல்ல, அரசன் அந் தமுனிவரைப் பொன்மயமான ஆசனத்தில் வீற்றிருக்கச் செய்து, பணிந்து, என்புத்திரனும் மந்திரி குமாரனும் ஒருவரை விட்டொரு வர் பிரியாத சிநேகமுள்ளவர்களாய், நாகரத்திநம் பதித்த ஆபரணகள் முதலான பல ஆபரணங்களை இகழ்ந்து அந்த ஆபரணங்களைக் கை யினாற் றொடாதவர்களாயும், கண்களாற் பாராதவர்களாயும், நீக்கி

விட்டுப் புனிதமாகிய விபூதியும் உருத்திராக்ஷங்களுமே சரீரத்தில் பிரகாசிக்கும்படித் தரித்துக்கொண் டிருக்கின்றார்கள் அதன் காரணமின்னதென்று அடியேன் அறிந்திலேன்; ஐயனே! எனக்குச் சொல்லுமென்று பணிவுடன்கேட்க அந்த வார்த்தையைப் பராசரமுனிவர் கேட்டு எதிரேற்றுவரும் பகைவருடைய போரைக்கடந்த வேலாயுதத்தையுடைய ராஜசிங்கமே! பூர்வம் இவர்களுக்குப் பொருந்திய பிறப்பில் பழகிய தொடர்ச்சியைக் கொண்டு இப்போது வந்த பிறப்பிலும் அந்தப்பழக்கத்தை விடாமலிருக்கின்றார்கள்; அதற்கொருகாரணமுண்டு; அந்தக்காரணக் கிரமத்தைக் கேளென்று சொல்லுவாராயினார்.

மாளிகையினுச்சியிலும், மேகந்தவழ்கின்ற வீடுகளிலும், நாடகச்சாலைகளிலும் கட்டியிராநின்ற பொற்கொடிக் கூட்டம் மேலே அசைகின்ற தோற்றமானது ஆகாயத்திற் செல்லுகின்ற சந்திரனுடைய களங்கத்தைத் துடைப்பதுபோல் பிரகாசிக்கவும், வளமை பெற்ற கெடுதலில்லாத சிறப்பினையுடைய பெரும்பதியான வளப்பம் பொருந்திய நந்திக்கிராமமென் றொருநகரமுண்டு. அந்தப் பெரியநகரத்தில் மானந்தையென்னும் பெயரினையும் பவளம்போலும் அதரத்தினையுமுடைய ஒரு கணிகையானவள் சித்திரக்காரர் தீட்டிய திவ்வியமான பதுமை உயிர்பெற்றிருப்பது போலும் அழகிற்சிறந்திருந்தனள். அவள் யாவரும் விரும்பத்தக்க பொன்மயமான வடிவுடையவள். அவள் வீட்டினைத்தாவிச் செல்லுங் குதிரைப்படை முதலாகிய படைகளையுடைய ராசகுமாரர்களும் மந்திராலோசனைக்குரிய சாஸ்திரங்கள் கற்றுணர்ந்த மந்திரிகளுடைய புத்திரர்களும் மிகுந்த திரவியங்கள் கொடுக்கத்தக்க வைசிய புத்திரர்களுங் கூட்டமாகச் சேர்ந்திருப்பார்கள். மிகுதியாகிய திரவியமுள்ள வளப்பத்தினாலும் பெண் தன்மையினாலும் பூலோகத்திலெல்லாரும் பார்க்கும்படி வந்திருக்குந் திருமகளே இவளென்று சொல்லத்தக்க சௌந்தரியமுள்ள அந்தக்கணிகை மாதிடத்தில் ஒரு இராத்திரி வருகின்றவர்கள் கொடுக்கும் உரையாணிவைத்து மாற்றுப்பார்க்க வேண்டுவதல்லாத உயர்ந்தபொன்தொகை ஆயிரங்கழஞ்சியென்று சொல்லு வார்கள்.

அத்தன்மையுடையவள் நாள்தோறும் வாசனைதங்கிய மலர்களால் ஆகமவிதிப்படி அருச்சித்து மன்மதனைவென்ற நெற்றிக்கண்ணையுடைய பரமசிவனை ஆராதனைசெய்யும் திருவேடமுடைய அன்பர்களைக் கண்டு சிவமென உள்ளமுருகி வந்தனை செய்வாள். இதுவுமன்றிக் குற்றம்நீங்கிய தரித்திரர்களாகிய யாசகர் வந்தால் அவர்களு

க்குத் திரவியங் கொடுப்பாள். மெய்யறிவினிலுயர்ந்த அந்தக்கணி கையானவள் நடனஞ்செய்யும் நாடகசாலையில் புள்ளிகள்பொருந்திய சேவலும், வானரக்குட்டியும் பொருந்தக் கற்றூணிற்கட்டி உருத்தி ராக்ஷமணிகள் தொடுத்த மாலையை அவ்விரண்டுக்கும் அழகுபெ றத் தரித்து வாநரக்குட்டியுடன் பழகிய கோழி நடப்பதை வா சனைதங்கிய அரிய அளகபாரத்தையுடைய, தோழிகளுடன் பார்த்து முகம் வேர்க்கும்படி நகைசெய்து விளையாடி, இனிதாக அமர்ந்து நா ள்தோறும் அவைகளிடத்தில் தயையுடனிருப்பாள். இவ்வாறுஅன் புடனிருந்த அவள் வீட்டினில் பிரகாசியாநின்ற சடாமகுடத்தையு டைய முனிவர் வேடத்தைத் குறைவறப் பொருந்திப் பொன்னினுஞ் சிறந்த விபூதியும் உருத்திராக்ஷமுந் தரித்துக்கொண்டு இரத்திநகட கம் பொருந்திய கரத்தையுடைய சுத்தசைவ வைசியத்தலைவனாகிய ஒருவணிகன்வந்தான். அவ்வணிகருலதிலனைக் கண்டெழுந்துஇளந்தி ங்களை அணிந்த சாம்பசிவ மூர்த்தியினுடைய அடியவரிவரென்றுமு றைமையுடன்பணிந்து, என்னிறைவனே, இவ்வுலகத்தைஎல்லாம் விலை யாகமதிக்கும்படிபொன்தகடிட்டு மணிகள்பதித்து அணிந்துகொண்டி ருக்கும் இரத்திநகடகத்தின் விலை யாதோ, எனக்குத் தெரியச்சொல் லுமென்றாள். சந்திரனைப்போல விளங்குகின்ற ஒப்பற்ற குடையின் கீழ் வருகின்ற மன்னவர் முன் கையில் அணிந்திருக்கும் இரத்திந கட கங்களெல்லாம் இந்த வயிரமணிக்கடகத்தை ஒப்பாகாதென்று, மயிலி றகின் குருத்துப்போன்ற தந்தபந்தியை யுடையாளுக்கு வாங்கிக்கொ ள்ளும் விருப்பமுண்டாகும்படிச் சொல்ல, அப்பெண் பதில்கூறியது ம், அவள்மனதில் எண்ணியகுறிப்பும் வந்த வைசியன் அறிந்துகொண் டுநகைசெய்து, பெண்ணே! சூரியனைப்போலப் பிரகாசிக்கும் இந்த ரத்திந கடகம் இன்னவிலையென்று சொல்லுகிறேன். நீ அதற்குப் பொருள் கொடுக்கத் துணியமாட்டுவையோ? வென்று வைசியன் சொல்ல மானங்தை சொல்லுகிறாள், மலைபோன்ற புஜங்களையுடைய வணிகேசனே! ஸ்தனங்களை விலைக்குவிற்கும் புன்றொழிலையுடையவர் கள் ஒருபொருளை வாங்கிக்கொண்டு அதற்கு விலையாகத் திரவியங் கொடுத்தால் அந்தப்பெண்களுடைய பெண்தன்மையும் இன்பமும் நன்றேயாகுமா? வாழ்கின்றயாவர்க்கும் பொதுவாகிய இன்பத்தையு டைய கணிகை மாதர்கள் மாயன் விரும்புகின்ற கவுத்துவமணியேயா னாலும் விற்பவர்கள் கொண்டுவந்தால் புணர்ச்சியினால் தழுவி வாங்கி க்கொள்ளுவதல்லது மிகுந்த திரவியம் விலையாகக் கொடுப்பது பழ மையாகிய இவ்வுலகத்திலுண்டோ? இல்லையல்லவா! இறைவனே

அன்புடன் இந்தக்கடகத்தை என்கையிலிட்டால், மூன்றுநாள்வரைக்கும் உனக்குரிய முல்லைமலரணிந்த மனைவியைப்போல் இன்பம் உண்டாகச் சயனத்தில்உன்னை நான் அணைவேனென்றுமின்போலும் நுண்ணிய இடையையுடைய கணிகை சொல்ல, வைசியன் ஓ! கணிகைமாதே! நன்றாகச்சொல்லினை, இந்தக் கடகத்தை உன்கையிற் கொடுக்கிறேன், கொடுத்தால் எனக்குரிய மனைவிபோலிருப்பதாக நீ சொன்ன மூன்றுநாளும் சொன்னமொழிதவறி மற்றொருவர்போகத்தை அனுபவிக்கிறதில்லை யென்று ஒரு உறுதிவார்த்தையைச் சொல்லென்றான்.

நின்மலனாகிய அந்த வர்த்தகன் சொல்லிய வார்த்தைக்கு அவள் சம்மதித்து, மனிதர்களேயல்லாமல் தேவேந்திரன் இவ்விடத்தில் வந்தாலும் இந்தமூன்றுநாள்வரையில் நீக்கிவிடுவேனேயல்லாமல் நான்புணரேன்; குளிர்ச்சிதங்கிய சடைமுடியையுடைய சிவனது ஆணையின்படியென்று சொன்னாள். அப்படிச் சொல்லிய மானங்கை யென்பவளுக்குவணிகன் இருள்கெடப்பிரகாசிக்கும் இரத்தினக்கடகத்தை விருப்பமுடன் கொடுத்து பின்னும் ஒரு மாணிக்கலிங்கத்தைக் காட்டி அன்னம்போன்றவளே! இதைப் பத்திரமாக வைத்திருந்து மறுபடியும் எனக்குக் கொடுப்பையோவென்றான். தெய்வப்பெண்ணையொத்த தன்மையையுடைய மானங்கை என்பவள் அப்படியே செய்கிறேனென்று சொல்லி வணக்கஞ்செய்து அந்த லிங்கத்தை வாங்கிக்கொண்டு தன்னுடைய நாடகசாலையினிடத்தில் வைத்து மாலைப்பொழுது வந்தவளவில் தன்கணவனாகிய வணிகன் மார்பில் தேமலைப்பொருந்தி வளர்ந்திருக்கும் அழகியதன்ஸ்தனங்களின்தழும்புபொருந்தி யழுந்தப் புணர்ந்திருந்தாள். மன்மதனும் இரதியும்போலக் கலந்து வாசனைப்புகைகலந்த சயனத்தில் நித்திரைசெய்யும் அர்த்தராத்திரியானவேளையில், இரத்தினமாலைகள் கட்டிய பொன்னாலாகிய நாடகசாலை வேகும்படி தீயானது பற்றிக்கொண்டு அவர்கள் நித்திரைசெய்யும்போது மேகம்போலத் தவழ்கின்ற புகையுடன் தீப்பொறிகள் நெருங்கத்தக்கதாகச் சிவந்த சிகைகளைவிட்டெழுகின்ற அக்கினியானது அதிவேகமாகப் பற்றிக்கொண்டு வீடுமுழுவதும் எரிக்க, அவ்விருவருந் திடுக்கிட்டு நித்திரைநீங்கிப் பெட்டையன்னமும் ஆணன்னமும் ஓடுவதுபோலப் பயந்து ஓடினார்கள்.

அவ்வாறு ஓடும்போது மானங்கை என்பவள் விரைவில் திரும்பி நிர்த்தனஞ்செய்யும் நாடகசாலையில் கிளைகளில் வாசஞ்செய்யும் (உருத்திராக்ஷந்தரிக்கப்பட்ட) குரங்கு குட்டியையும் சிவந்த உச்சிக்

கொண்டையையுடைய கோழியினையுந் தேடிக் கண்டு கட்டியிருந்த கயிற்றை யவிழ்த்து விட்ட மாத்திரத்தில் குரங்குங் கோழியும் பற்றிக்கொண்டெரியுங் கூட்டமாகிய தீ இருக்குமிடத்தைவிட்டு அப்புறம் போய்விட்டன. அந்த வர்த்தகன்கொடுத்த மாணிக்க இலிங்கமானது மானந்தைக்கு ஞாபகம்வருவதற்குமுன் வெந்துநீறாய்விட்டது. தூரமாகப்போய் நின்ற வர்த்தகன் மாணிக்கலிங்கம் வெந்துபோனதைப் பார்த்துப் பெண்ணே! நான் உன்கையிற்கொடுத்த சிவலிங்கப்பெருமான் பலமுற்ற தீபற்ற அதனால் வெந்து சாம்பராய்விட்டதைக் கண்டனையோ? ஆதலால் என்வாழ் நாளின்றே முடிந்துவிட்டதென்று துயரத்துடன் சொன்னான். அதைக்கேட்ட மானந்தையானவள் வளையலணிந்தகைகளால் இரண்டு தனத்தின்மேலும் மோதிக்கொண்டு, துயரமுற்று நம்பனே! சங்கரனே! என்று வாய்திறந்து உதிரம்படியத்தக்க வேல்போன்ற கண்களில் ஆறுபோல நீர்பெருகும்படி அழுது அறிவழிந்து சோர்ந்துவிட்டாள்; அதைக்கண்ட வணிகன் சொல்லுகிறான். மைச் சாந்தணிந்த நீண்ட அளகத்தையும் நெருங்கிய ஸ்தனங்களையுமுடைய நறிய பூங்கொம்புபோல்பவளே! நீ துயரப்படவேண்டாம் எம்போலியருக்கு இவ்விதத்துன்பம் நேரிட்டால் உயிரைப் போக்கிக்கொள்வார்களேயன்றி, அதை எப்படிவிடுகிறதென்று இரங்கார்கள்; நாடக சாலையில்வைத்த என்சிவலிங்கம் வெந்து சாம்பராய்விடுமானால், தேவேந்திரன் முதலானவர்கள் வந்துவிலக்கினாலுந் தீயில் விழுந்து விடுவேன். நீ வேறொன்றும் நினையாதே, தீயில்விழுந்து நானிறப்பதற்கு உலர்ந்த விறகுகளை யடுக்கி எரியுந்தீயை மூட்டும்படி நெருங்கிய அளகத்தையுடையவளே! நீ உத்தரவுசெய்யென்று வணிகன் சொல்லச் சிறிய இடையையுடையவளாய்க் கொடிபோன்றமானந்தையானவள் இடியுண்டநாகம்போற்றிகைத்து நின்று யாதொன்றுக்கும் அஞ்சாதநிலைமையையுடைய வணிகேசனே! வேண்டியதிரவியங்கள் கொடுக்கிறேன், பிராமணர்களுக்குக் கொடுத்துச் செய்யத்தக்க விரதங்களையும் பழுதறச்செய்து, இப்போது நீ தீயில் விழும்படி நேரிட்ட குற்றம் நீங்கத்தக்கதாகப் பெரியோர்களைக்கொண்டு பிராயச்சித்தஞ் செய்துக்கொள்என்றாள். அப்போது வணிகன் சொன்னதாவது பூமியுந்தாங்கமாட்டாத மிகுந்த பொன்னையுடைய குடியிற்பிறந்தேன், ஆபரணங்களைத் தாங்கமாட்டாத நுண்ணிய இடையையுடையவளே! நீ என்னை வறுமையாளர்போல நினைத்து எங்கள் குலம் பொறுக்காத இழிவான வார்த்தை சொல்லுவதை விட்டு இவ்வுலகத்தார் பார்த்துச் சகிக்கக்கூடாததான வேகமாய் மூளும்

தீமூட்டுவாயாக என்று வணிகன் சொன்னான். இவ்வாறு கோபித்துச் சுடும்சொல்லினால் வணிகேசன் சொல்லுகையில் பொன்மலைபோல் வளர்ந்தஸ்தனத்தையுடையமானங்கையானவள் தான் தடுப்பதை யொத்துக்கொள்ளாமல் இறந்துபோவா னென்று நிச்சயித்துக்கொண்டு ஏவலாளிகளை அழைத்து விறகுகளிட்டு விரைவாகத்தீமூட்டுங்க ளென்றாள்.

அந்த ஏவலாளிகள் மானங்கை கட்டளையிட்ட வார்த்தையைச் சிரசிலேற்றுக் கொண்டுபோய், அளவில்லாத விறகுகள் அடுக்கித் தீ மூட்டித் தீச்சிகை மேலோங்கும்படிக் குடங் குடமாக நெய்யை ஊற்றினார்கள். அப்படி ஊற்ற அளவில்கொடிய தீயானது கற்றைக் கற்றையாகச் சிகைவிட்டுக் கொண்டு மேலோங்கி வளர்ந்தது.

அதைக்கண்ட வணிகமுநிவர் வாசனைதங்கிய நீரில் ஸ்நானஞ்செய்து கொழுந்து விட்டெரியுந் தீயை மூன்று தரம் பிரதக்ஷணஞ் செய்து வணங்கி, இளம்பிறையணிந்தருளிய சடாமகுடத்தை யுடையசிவ பெருமான் திருவடிகளைத்தொழுது அண்ட கூடவளையில் ஓசை யெழும்படி அந்தத்தீயில் மூழ்கினார். அந்தவணிகேசர் தீயில் முழுகினதைக்கண்டு துயரங்கொண்டு நின்ற மானங்கையானவள், தனக்குப் பந்தமாயிருக்கிற சுற்றத்தார் முகங்களைப்பார்த்து கேளுங்கள், பந்துக்களே! இப்பொழுது இத்தீயில் விழுந்து இறந்துபோன வணிகேசர் கொடுத்தது இந்தக் கங்கணம்,இதைக்குறித்துநடந்தசெய்தி சொல்லுகிறேன் கேளுங்கள், இக்கடகம் பொறுமான விலைக்காக மூன்றுநாள் அவரதுவாழ்க்கைக்குரியமனைவி போல் அவருடன் நான் வாழ்கிறேனென்று சம்மதித்துக் கொண்டேன்; அந்த மூன்று நாளுக்குள் வணிகேசர் உயிர்துறந்து இறந்ததினாலே, நானும் அவருடன். இந்தத்தீயில் விழுந்து இறப்பதல்லது இனி உயிருடன் வாழேன். அந்தச்சிவலிங்கத்தை வணிகேசன் என்கையிற் கொடுத்தபோது “இது என் உயிர்போலிருப்பது ஆகையால், பத்திரமாகக் காத்துத் தருவா”யென்று சொன்னதுண்டு, அப்படிக்கிருக்கப் பாவியாகிய நான் மறந்துமதிமோசம் போனேனே,இது என்ன காரணம், சிவலிங்கம் வெந்து போய்விட்டபடியால் தனக்கொப்பில்லாத சைவ சமயப் பக்திமையுள்ள அவ்வணிகேசர் இறந்துபோனார். இத்தனை காரியமும் என்னிமித்தம் நேரிட்ட தாகையால், நான் தீயில்விழுவதல்லது சொன்னசொல் தவறி உயிர்வாழ்கிலேன். சொன்னசொல் தவறலாகாதென்று நம்முடைய ஆண்டவனால் சொல்லப்பட்ட ஆகமங்கள் புராணங்கள் வேதங்கள் முதலாகிய எல்லாவற்றிலும்

விதித்திருக்கிற உண்மையல்லவோ? சமுத்திரமானது கரைக்குள் அடங்கி மேலுயர்ந்து நிற்பதும்,காலை மாலைகளில் முறையாகச்சூரிய சந்திரர்கள் உதிப்பதும்மறைவதும் பிருதிவிமுதலாகியபஞ்சபூதங்கள் பொருந்திஅந்தரத்தில்பூமிஎப்போதுமிருப்பதும்ஆலகாலம்உண்டபரமசிவனுடைய ஆக்கினையன்றி உண்டாகாதாதலால்,உண்மை தவறியவர்கள் இவ்வுலகத்தில் ஈனர்களாய்ப் பாபத்தை அடைந்து பெரியோர்கள் பழிக்கும்படித் திரிந்து, பின்பு தூய்மையற்ற கும்பிபாகமென்னும் நரகத்தில் விழுந்து, வருந்துவார்களென்று வாய்மையுற்றமந்திரங்களைப் பகர்கின்ற வேதமுழுதுஞ்சொல்லுகின்றன. ஆகையால் என்னைகுறித்து நீங்கள் வருத்தப்படுவது தகாதென்று மானந்தை தன் சுற்றத்தார் தெளியும்படி சொல்லித் தான் சம்பாதித்ததிரவியங்களை எல்லாம் வேதமோதிய பிராமணர்களுக்கும், பெரிதாகிய விரதங்களை அனுஷ்டிக்கும் தபசிகளுக்கும்,தன்சுற்றத்தார்க்கும் ஏழைகளாய் வருபவர்கட்கும் போதுமானமட்டும் பொருள் கொடுத்து, மௌனவிரதங்கொண்டு ஒருவருடனும் பேசாமல் நீரில் ஸ்நானஞ்செய்து திரிபுரதகனஞ்செய்த மெய்ஞ்ஞான சொரூபியாகிய பரமசிவனுடைய திருவடிகளைவணங்கி நல்ல தீப்பிழம்பைப் பிரதக்ஷணஞ்செய்து அக்கினிகுண்டத்தில் விழப்போகும் சமயத்தில், இளந்திங்கள் அணிந்த சடைமுடியையுடைய கைலாசபதியானவர் தரிசனமானார். கொன்றைமாலையணிந்த சடாமகுடமும், குளிர்ச்சியுள்ள ஐந்து திருமுகங்களும், கறுத்த காளகண்டமும், செந்தாமரை மலர்போன்ற திரு அஸ்தங்களும், ஒளிகொண்ட பொன்மலை போல விளங்குந் திருப்புயங்களும், திருவுந்தியும் பொருந்திய திருவடிகளுந் தரிசனமாகக்கண்டு மானந்தையென்பவள் பூமியில் விழுந்து பணிந்தாள். அவ்வாறு சேவித்து நிற்பவளைப் பார்த்து,அடியாளே! நீ தீயில் விழுவதை நீக்கு, உன்மனதிற் பொருந்திய மெய்யன்பினை யுன்னி இவ்வுலகத்தாருக்குத் தெரிவிக்கும் பொருட்டுப் பொன்னாற் செய்யப்பட்ட கடகத்துடன் இவ்விடத்திற்குவந்து உன்னுடன் அளவளாவித் உன்னைச்சோதிக்கத்தீயில்விழுந்த வணிகன் நாமே. இந்த இராத்திரியில் நீ தீயில் விழும்படி நிச்சயித்த காரியம் மிகவும் நன்று நன்று.

பிறைபோல் வளைவாகிய நெற்றியை யுடையவளே! பொதுமகளாயிருப்பவர்கள் பொருளாசையை விட்டு உன்னைப்போல் சத்தியத்தைக் காப்பாற்றுவார்களோ? இவ்வுலகத்தில் இது அதிசயமான காரியம் நலமாகக்கண்டறிந்தோம்; நீ அடையவேண்டிய பதவியெதுவோ அதை விரும்பி யவண்ணஞ் செல்லுவாயாக. வ்வுண்

ணம் பரமசிவன் அருளிச்செய்த திருவாக்கினைக் கேட்டுமலைகளும் மரங்களும் நின்றுருகும்படி மானந்தை யென்பவள் எழுந்து ஆனந்தக்கண்ணீர்ததும்பத்தொழுது,நிருமலனே!உங்களடியவளாகியயான் ஒன்றுமறியாதவள் இன்னவாறு தங்களைத் துதிப்பதென்பதும் அறியாச் சிறியவள் என்று துதித்து நின்றாள்.

தேவர்கள் முதல் திரிலோகத்தி லிருப்பவர்களில் எவர்கள் வாழும் பதவியும் யான் இனிவேண்டேன்; திரிமூர்த்திகளாயும் முக்குணங்களாகியும் முத்தொழிற்குங் கர்த்தாவாகியும் இவைகளை எல்லாங்கடந்த, காரணனுயு மிருக்கும் ஆண்டவனே சுவாமி! அடியாள் தேவர்கருணைக்குப் பாத்திரமாகிறதோடு அன்புள்ள என் சுற்றத்தார் எல்லாரும் துக்கசாகரத்தில் முழுகாமல் அடியேனைப் போலப் பேரின்பமுள்ள சிவலோகத்திற் சேர்ந்து இன்பமுடன் எக்காலமும் ஒரே தன்மையாக வாழும்படிக்குகிருபை செய்ய வேண்டுமென்றாள்.

கொம்பினையுடைய ரிஷபவாகன ஆரோஹணராய்வந்த பரமசிவன் மானந்தைகேட்ட வரமெல்லாங் கொடுத்தோமென்று திருவாய்மலர்ந்தருளி, சுற்றத்தாருடன் பேரின்பவீட்டிற் போய்ச்சேரும்படி அருளிச்செய்து,கைலையங்கிரிக்கு எழுந்தளினார்.முன்நாடகசாலையைத் தீப்பற்றி எரிக்குங் காலத்தில்,தெய்வப்பெண்ணை யொத்தமானந்தை யானவள் கட்டவிழ்த்துவிடவே குரங்குங் கோழியும்போய் நெடுங்காலம் இவ்வுலகத்திலிருந்து இறந்துபோன அக்குரங்குதான் உன்னுடைய புத்திரன். உதிரம் பொடித்ததை யொத்த உச்சிக்கொண்டையை யுடைய கோழிதான் சிறப்புள்ள சாத்திரங்கள் உணர்ந்த மந்திரிகுமாரன்: இவர்களிருவரும் பூலோகத்திற் பிறந்தும், பூர்வவாசனையினால் பெரிதான முறைமையுடன் உருத்திராக்ஷமும்விபூதியும் விரும்பியணிந்தார்கள். மன்னர் தொழும் மன்னனே! முன்னீங்கிய பிறவியில் பரமசிவனுடையமணியாகிய உருத்திராக்ஷத்தைத் தரித்த தபோபலத்தினால், உனக்கும் நன்மதியையுடைய அமைச்சனுக்கும் குமாரர்களானார்கள். இந்த இரண்டு புத்திரர்களும் பரமசிவனுடைய திருவடிகளை இடைவிடாமல் நெடுநாள் பூசித்து, வாளைகள் குதிக்கும் நீர்வளமுள்ள இந்தத்தேசத்தை அதிகஇன்பமுடன் ஆண்டு,காமதகனராகிய பரமசிவனுடைய திருவருளினால் மோக்ஷம் அடைவார்கள்.

இவ்விருவருடைய முற்பிறப்பின் தன்மையையும் அப்போது அணிந்த உருத்திராக்ஷத்தின் அருமையையும் அதனால் அடைய வேண்டியபயனை இப்போது அடைந்ததையும் பராசரமுநிவரால் ராம

கேட்டு உமக்குச் சொன்னோம். உன்மனதின் மிகுந்த விருப்பத்தினால் இன்னம் ஏதாகிலும் சந்தேகம் கேட்க வேண்டியிருந்தால் கேளென்று சொல்ல அப்போது தருமராஜன் ஆனந்த பரவசமாய் சிறுதுநேரம் கடவுளை தியானித்து மறுபடியும் ஐயா! பாட்டனாரே ஜாதியிலுயர்ந்த பிராமணர்கள் சொத்துக்களை அபகரித்துக்கொண்ட வனுக்கு என்னகதி கிடைக்கும் அதைஅருள் செய்யவேண்டு மென்று கேட்க, பீஷ்மாசாரியார் சொல்லத் தொடங்கினார்.

85. பிராமணர் சொத்தை கவர்வதினால் வரும் பலன் யாது என்ற பிரசினைக்கு உத்தரம்.

ஓ! தருமராஜனேகேளும், அரசபந்துவென்னும் பெயரினையுடைய கிரீடாதிபதியான இராஜனொருவன் தன்னுடைய பட்டணங்களில் பிரவேசித்து நகரிசோதனை பார்க்கும்போது ஒருபுலையனான நீசன் அக்கிராரத்துத் தெருவில்வந்தான். அந்தவேளையில் ஒரு சுழற்காற்றடித்து செந்தூளெழுந்து பறந்தது. அந்தப் பொடியானது தன்மேற் படியாமல் வளைந்து ஒடுங்கி ஒதுங்கிப்போனான். அதைக் கண்டு மாறுவேடங்கொண்டு வருகிறமன்னன் இதென்னகாரணம் இந்தத் தெருவிலெழுந்த மண்தூள் மேலேபடாமல் ஒதுங்கிப்போன வகையென்ன மாயமென்ன எனக்குச் சொல்லுமென்று வினவ, அந்தப்புலையன் புகலுகின்றான் ஐயா, என்தவத்தின் மகத்துவத்தினால் பூர்வக்ஞானந் தெரியும். சென்மாந்திரத்தில் நான் பிரம்மச்சாரி பிராமணன். வீடுகள்தோறும் பிக்ஷைவாங்கிசாப்பிட்டு தேச சஞ்சரியாய்த் திரிந்தேன், ஒருநாள் பலவீட்டிலும் பிக்ஷையெடுத்து அக்கிராரத்திலோர் திண்ணைக்கு வந்தேன். அந்தவேளையில் ஒரு பார்ப்பனி விளக்குமாறுகொண்டு விளக்கினாள். அவள் பெருக்குவதனாற் பறந்த பராகமானது பிக்ஷைச் சோற்றிலே படிந்தது, அந்தப்பொடியைப் போக்கடிக்கக் கூடாமையாலும் என்புத்தியிலுந் தோன்றாமையாலும் பிக்ஷை அன்னத்தை சாப்பிட்டேன். இதுதானையா பிராமணர் சொத்து பறந்துபோகிற தூசி நானசித்தவநல்ல பறந்து விழுந்த பொடியுடனே அன்னம் புசித்தேனே அந்தப்பாவம் இந்தச் சென்மத்தில் நீசனானேன், முன்ஜன்மம் பிரமசாரியாயிருந்து ஈசனை குருவுக்குப் பணிவிடைபண்ணி எதுகாரியங்களும் எண்ணிநடந்த புண்ணியவசத்தால் கன்னிய பிறப்பின் விர்த்தாந்தந் தெரிந்தது. இன்னம்

என்ன கதிகிடைக்குமோ வென்கிற பயத்தினாலே பிராமணர் வீதி த்தூள் மேலேபடாமல் நான் ஒதுங்கினேன். அதுவுமன்றி நான் மிக வும் விசாரமாய் ஐயையோ என் மனதறியாமல் நடந்த கொஞ்சக்காரி யத்திற்கு கொடுந்தண்டனையாய்ச் சண்டாளச் சென்மங் கொடுத் தாயே தற்பரா சதாசிவா ஈஸ்வரா வென்று நேற்று மனநொந்து விசனத்துடன் படுத்து நித்திரைபோனேன். ஏழையாகிய என்பங்குத் தெய்வமோ இன்னம்யாரோ நானறியேன். ஒரு திவ்விய புருஷரூபத் துடன் என்கனவில் வந்து நீரவலேசமேனுங் கிலேசப்படாதே, நாளை யதினம் அக்கிரார வீதியில் ஒருராஜன் உன்னைச் சந்திப்பான், உன் னிடத்திலொரு அதிசயத்தைக்கண்டு இதென்ன காரணமென்று கே ட்பான், அப்போது உன்மாரண விருத்தாந்தத்தை வசனித்து பூர்வம் ஆரணபிரமசாரி யென்றறைவாய் உடனே இந்தப்பிறவியோடிப்போ ம். நற்கதியடைவா யென்று சொல்லிப்போயினார். விழித்துப் பார்த்து மிருந்த ஆசைகொண்டு வந்தேன்; இன்றைக்கு சொர்ப்பனம் போல் மகானுபாவராகிய உம்மைத்தான்கண்டேன், நீர்கேட்கவும் என்பாவ விர்த்தாந்தங்களைப் புகன்றேன். இதோ நான் போகிறேனென்று அப் புறம்போய் புலையனுடைய உடலைப்போக்கி பிராமணதேகம் பெற்று மேலானகதியடைந்தான். இதுகளைக்கேட்டுத் திருஷ்டாந்திரத்திற் பா ர்த்த அரசன் மகா பயத்துடன் அன்றுமுதல் பிராமணர் வீதிமண் ணில் அடிவைப்பதற்கு அஞ்சி தன்னரசு நடக்கு நாடுகளிலுள்ள சகலருக்கும் இந்தச் சங்கதியைத் தெரிவித்து எல்லோரும் வேதியர் பொருளை விடமெனக்குறித்து அவர்களுக்கு வேண்டுவன கொடுத்து வேந்தனுடன் பொருந்தி வாழ்ந்து, சாய்ந்தகாலத்தில் சத்கதியடைந் தார்கள். தருமநந்தனு வென்று தீவினைவென்ற சிமானுனாக்க கோவினைப் புரக்குங் கோமான் கேட்டு குருகுல சிகாமணியேயென் று கோடி தெண்டனிட்டுக் கும்பிட்டு என்மனக்குறையாவும் போயி ற்று. சுவாமி குற்றமில்லாப் பெரியோர்கள் விண்ணுடென்று பேசுகி றார்களே அந்த விண்ணுடு ஒன்றோ அல்லது அநேக முண்டோ இதனது விபரத்தை விளம்பவேண்டு மென்று வேண்டினார். வீஷ்டு மர் மன்மதனுக்குச்சமானமான அழகையுடையவனே பூமியிற்செய் கிற நல்வினை தீவினையான தருமம் அநந்த பேதமானபடியினாலே மோட்சராச்சியமும் அநேகமுண்டாயிருக்கும் விபகாரதிசையில் கு ற்றங்களுக்குத் தகுந்படி தெண்டனை எப்படி விதிப்பதோ அப்படி யென்றறிந்துக் கொள்ளும் ஆதலால் கதிதரும் பூமியைச் சொல் லுகிறேன் கேட்பாயாக.

86. மோக்ஷபூமியாகிய விண்ணுடடின் பெருமை.

கேளும் தருமநந்தனு, சகலசாஸ்திரமகாபண்டிதராகிய கௌதம மகாரிஷி ஒருவனத்தில் வரும்போது, கறுத்தயானை ஒன்று குட்டிபோட்டஉடனே தாய் இறந்துபோய் குட்டியானைவருந்தி அழும்போது ரிஷியானவர் பரிதாபப்பட்டு அந்தக்குட்டியைத் தாம்கொண்டுபோய்ப் பிரியமாய் வளர்த்துவந்தார். அது நாளுக்குநாள்வளர்ந்துவருகையில், ஒருசற்சீடன் செய்யும் முறைபோல்பணிவிடைகளைச் செய்தது. அதனுல் ரிஷியானவர் மேலும்மேலும் அதன்மீது பிரீதிவைத்துவந்தார். அப்போது தேவேந்திரன் திரிதராஷ்டிர மகாராசனைப்போல் வேடங்கொண்டு அந்த ரிஷியினிடத்தில் வந்து அந்த யானைக்குட்டியைத் தனக்குக் கொடுக்கும்படி கேட்டான். தாயைப்பறிகொடுத்து நொந்த அந்த யானைக்குட்டியை நான் பரிவுடன் வளர்த்தபடியால் அதைக் கொடுக்கத்தக்கதில்லை யென்றுர். பஞ்சேந்திரியங்களையும் நிக்கிரகித்த தேவரீருக்கு இந்தயானை ஒரு பெரிதோ. உமக்கு ஒருவருடைய உதவியுங் காவலும் வேண்டியதோ? உம்மிடத்தில் தியாகியென்று கேட்கிறவர்களுக்கு இல்லை யென்கின்ற லோபகுண மிருக்கப்போமா? தேவரீர் சிருஷ்டிக்கிறபோதே யானை குதிரைமுதலிய ஆடம்பரங்களை அரசனுக்குரியவை யென்று அமைத்து விட்டு இப்போது மொழிமாறிப் பேசுவதுமுறைமையோ, என்று பலதருமங்களையெடுத்துக்கூறினுன். அதின்பேரில் ரிஷியானவர் அரசன் விரும்பியசொத்தை வைக்கலாகாது, உனக்கிந்தயானை வேண்டுமானுல் நான் குறிக்கும் இடத்திற்குப் போய்வந்தால் தருவேனென்றுர்.

முதலாவது, சுத்தஞானிகள் வாசம்பண்ணப்பட்ட சபைக்குப் போய்வந்தால் யானையை தருகிறேன் என்றுர்.

இராஜன் மறுமொழி. அளவில்லாத் தவஞ்செய்தபேர் போகத்தக்க இடம் அது, அங்கே நான் போகத்தக்கதகுதி இல்லை.

இரண்டாவது, பூமியில் புண்ணியஞ்செய்தவர்கள் அடைந்திருக்கிற உலகத்திற்குப் போய்வா என்றுர்.

இராஜன் மறுத்து அகந்தை மமதை யடங்கிய பேர்கள் அந்த உலகத்திற்குப் போய் வரலாமே யல்லாது, சத்துருக்களின் மாமிசரத்தங்களைச் சிந்தும் மன்னவர்கள் போகக் கூடாதென்றுன்.

மூன்றுவது, வரப்பிரசாதங்களிற் சிறந்த மந்தாகினியானது, சிந்தாமணியிலும் ஆகாயகங்கையிலுஞ் சிறந்தது. அதனிடத்திலாகிலும் போய்வாருமென்றுர்.

இராஜன் மறுத்து அக்கினிமுன்னிலையாய் எக்கியங்களைச்செய்து உயர்ந்த மகாத்து மாக்களுக்கு அதிதிபூசைபுரிந்து அவர்களுடைய சேஷத்தைப் புசித்தபேர்களும் தென் புலத்தார்க்கு நீர்க்கடன்செய்த புண்ணியபுருஷர்களும் வசிக்கின்ற மந்தாகினிலோகத்திற்குநான்போ கிறது சரியல்ல.

நான்காவது,இவ்வுலகத்திற்கு அஞ்சூராணியாயிருக்கிற மகாமே ருவுக்காகிலும் போய்வரலாமே என்றார்.

இராஜன்மறுத்து சதகியவிரதம், அன்புடைமை,சீவகாருண்ணி யம் இத்தியாதி குணமுடையோர் வசிக்கும் இடம் அது, அங்கே நான்போகேனென்றார்.

ஐந்தாவது, மகதியாழில் வீணுகானஞ் செய்யும் நாரதமகா முனிவரிடத்திற்காகிலும் போய்வா என்றார்.

இராஜன்மறுத்து அநேகம் தீர்த்தங்களில் ஸ்நானமாடி தேவதா தெரிசனைபுரிந்து சப்தசுரம் சுதி தாளம் சங்கீதம் சாமவேதம் இது களைக்கற்றுத் திறமுடைய வல்லவராகிய நாரதர் வாசம்பண்ணப் பட்ட இடத்திறகு நான்போவேனு.

ஆறுவது, மகாமேருவிற்கு வடக்காகிய மயக்கமற்ற குருபூமி க்குப் போய்வா என்றார்.

இராஜன் மறுத்து: சொற்றவறுமலும் கொலை புரியாமலும் அக விலை குறைக்காமலும் புகழ்பெற்றபேர்கள் போகப்பட்ட அந்தஇடத் திற்கு நான் செல்ல அருக நல்லனென்றார்.

ஏழாவது, வசிஷ்டர்முதலிய சப்தரிஷிகள் வாசம் பண்ணப்பட் ட உலகத்திற்குப் போய்வா என்றார்.

இராஜன்மறுத்து அன்னதானம்சொர்ணதானம்கோதானம்முத லிய தானுதிகள் கொடுத்து நிதானங்கெடாமலிருப்பவர்கள் சேர்ந்தி ருக்கும் உலகத்திற்கு நான் எப்படிப்போகக் கூடும்.

எட்டாவது, சூரியலோகமாகிலும் போய்வா என்றார்.

இராஜன் மறுத்து விரத்திற்சிறந்து வேதங்களிற்பயின்று தவத் தில் முயன்று சகலமும் நசித்த சந்நியாசிகள் போயிருக்கும் இடத் திற்கு நான் போகக்கூடுமா.

ஒன்பதாவது, வருணலோகம் போய்வா என்றார்.

இராஜன் மறுத்து பாபரகிதர்ஆசாரம் நிஷ்டை கைவிடாதபேர் கிரியாக்கினி வளர்ப்பவர்,சீவகாருண்ணியர் சேருகிற இடம்,என்னுல் போகமுடியாது.

பத்தாவது, இந்திரலோகத்திற்குப் போய்வாரும் என்றார்.

இராஜன் மறுத்து யுத்தமுனையில் சத்துருவைச்ஜெயித்து நூறு அஸ்வமேதங்களின் யாகபலனைப் பெற்றவன், கோதான மீந்தவன், குருமுதலிய பெரியோரைப்பணிந்து தாழ்ந்தவன், இப்பேர்ப்பட்டவர் அடைந்திருக்கும் லோகத்திற்கு நான் போகமாட்டேன்.

பதினோராவது, வியாழ பகவானுடைய லோகத்திற்குப் போய் வாரும் என்றார்.

இராஜன் மறுத்து அக்கினிஷ்டோமம், பவுண்டரீகம், வாசபேயம், அஸ்வமேதம், இந்த எக்கியங்களைச் செய்தவர்கள் எய்தி இருக்கும் இடத்திற்கு நான் செல்லேன்.

பனிரெண்டாவது, பசுலோகம் போய்வாரும் என்றார்.

இராஜன் மறுத்து கபிலைமுதலிய பசுக்களை உத்தமருக்குதானஞ் செய்தவர்களுக்கும் நீதியாக அரசுபுரிந்த வேந்தருக்கும் தபசுபுரிந்த சற்குண சீவன்முத்தருக்கும் காணியாட்சியாயிருக்கும் பூமிக்குநான் அருகன் அல்லன்.

பதின்மூன்றாவது, சத்தியலோகம் போய்வாரும் என்றார்.

இராஜன் மறுத்து நல்வழியிற் சேகரித்த பொருளை சாதுக்களுக்குக்கொடுத்தவர்களும்நரமேதம் ராஜசூயம் முதலிய யாகாதிகளைநடத்தினவர்களும் பிரமஞானத்தை போதித்து வைத்தவர்களும் மிகவும் அரிதாய்ப்பிரவேசிக்கும் அந்தபூமிக்கு நான் எளிதில் போய்வரமுடியாதென்றான்.

அந்த ரிஷியானவர் இதுகளைக்கேட்டு நிதானித்துநகைத்து ஓய் இராஜனே, நீ உருமாறிவந்திருக்கிறாய், நீயோ தேவேந்திரன். உன்னை நான்ஞானதிருஷ்டியினால் கண்டு கொண்டேன். என்யானையை வாங்கிக்கொள் என்றார். தக்ஷணம் திரிதராஷ்டிர இராஜ ரூபத்தைநீக்கி தேவேந்திரசொரூபத்துடன் கௌதமரிஷியைப்பணிந்து, சுவாமீ இந்தயானை உம்முடையகட்டளைப்படி பயந்துநடக்கின்றவிந்தையைப்பார்த்து தேவரீர் சிந்தை மகிழும்படி இந்த ரூபத்துடன் வந்தேனல்லது தமது ஆசிரமத்தைப் பாதுகாற்கும் அந்தயானையைக் கைப்பற்றவந்தவனல்ல, நான் தங்களுக்குச்செய்த இந்த தொந்தரையை க்ஷமிக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறேன் என்ன; இந்திரனே ! இந்த யானை மிகவும் பேரறிவுடையது பிரதாபம் பெற்றது, அதை உனக்குத் தருகிறேன். நீர் பெற்றுக்கொள்ளும் என்றார். சுவாமீ, நீர் யானையைமா

த்திரம் கொடுத்தால் நான் ஒப்பமாட்டேன், தேவரீரும் என்னுடன் கூட தேவலோகத்திற்கு வரவேணுமென்று இந்திரன் வேண்டினான். கௌதமரிஷி அதற்கிசைந்து இந்திரனுடன் தேவலோகம் போனார். இந்திரன் தான்பெற்றுவந்த யானையை இந்திராணிக்குக் காண்பித்து சிலாய்க்கித்ததுமன்றி, ரிஷியையும் அநேகமாய் உபசரித்துபூசித்தான். கௌதமர் தேவேந்திரனிடம் விடை பெற்று தமது ஆசிரமந் திரும்பினர் என்று வீஷ்மர் விளம்ப தருமர்பணிந்து ஐயா, தபசு பண்ணுவதைப் பார்க்கிலும் நல்வழியிற் சம்பாதித்ததிரவியத்தை சிலவழித்து சாஸ்வதமான தருமம்பண்ணினால், எவற்றினும் மேலானதென்று சொல்லுகின்றீர்களே அதை அடியேனுக்கு விளம்பவேண்டுமென்று கேட்க, கங்காதனயன் சொல்லத் தொடங்கினார்.

87. தபசினால்வரும்பயனைப்பார்க்கிலும் நல்வழியிலீட்டிய பொருளை சத்விஷயங்களில் சிலவழித்தால் வரும்பலனைப் பற்றிய பிரசினைக்கு உத்தரம்.

கேளும் சோபாதிகுலத்திற்பிறந்த சிறந்த குமாரா, தாளதாமரைக்கு நேசனாகிய சூரிய சந்ததியிற்றோன்றி விளங்கிய மனுகுலாதிபன் கால்வழியிற்பிறந்த பகீரதமகாராஜனை சத்தியத்துடன், நீதியறிந்துகுடிகளையோம்பி ஆறிலொருபங்குதிவாங்கி ஹரிபூஜை சிவபூஜை முதலிய பூஜைகளைச்செய்து அர்ச்சித்து அமுதூட்டி அனுக்கிரகம் பெற்று பயபக்தியுடன் பூமிபரிபாலனம் புரிந்துவரும்போது திருமாலின் திருநாபிக்கமலத்தி லுதித்த திசைமுகன் வாழ்ந்த சத்தியலோகத்திற் சென்று, பிரம்மாவுக்குப்பிரதட்சணம் பண்ணி சாஷ்டாங்க நமஸ்காரஞ் செய்து எழுந்து, கைகட்டிவாய் பொத்தி தோத்திரஞ்சொல்லித் துதித்தான். அப்போது பண்பொதுத் தந்தைமனமகிழ்ந்து ஆசனங்கொடுத்து ஆசீர்வதித்து, அநங்கனைப் போன்ற அழகு படைத்த பகீரதனே, நானிருக்கின்ற சத்தியலோகத்திற்கு மற்றொருவரும் பூததேகத்துடன் புகுந்ததில்லை நீ இந்தப் பிரகிருதியான மாயாசரீரஸ்தூலதேகத்துடன் எவ்வண்ணம்வந்தா யென்று கேட்டனர். பகீரதன் சுவாமி பங்கயாசனனே அடிமை கடைத்தேறத்தக்கதாக வெகுநாள்தபசுசெய்தேன. வேதத்திற்சொல்லிய எக்கியம் அத்தனையும்விதிகுறையாமலும் மந்திரலோபங் கிரியாலோபம் வாராமலும் புரிந்தேன்.

விரதங்களெல்லாம் தவறாமல் அனுஷ்டித்தேன். ஒன்றினாலும் உம்முடைய லோகம் வருவதற்கு உபாயங்காணும் எனக்கும் வல்லமை இல்லை: பிராமணர்கள் எங்கே தவமிழைக்கின்றார்களோ எவ்விடத்தில் எக்கிய மியற்றுகின்றார்களோ அதை விசாரித்துக் கொண்டிருந்து அவ்விடங்களுக்குப்போய் அவர்கள் செய்கின்றதபசு முதலிய எக்கியங்களுக்கு யாதொரு இடையூறுகள் நேரிடுமானால் அதைக்கெடுத்து விக்கினம் வரவொட்டாமல் வேள்வியை முடிப்பித்து ஆகுதியளித்து பூரணமாகிற வரைக்குங் காவலிருந்து யாகங்களுக்கு வேண்டிய உபகரணங்களுங் கொடுத்து பக்தி சிரத்தையாய்ப் பாதுகாத்திருப்பேன்,(அதனால்) அந்தப் பெரியவர்களியாவருங் புகழ்ந்து கூடிமகிழ்ந்து ஓ பகீரதனே! நீ பிரம்மலோகம்போய்ப்பார்த்து அங்கிருக்கின்ற அதிசயங்களைக்கண்டுகொண்டு மறுபடியும் வந்துவிடென்றுவரங்கொடுத்த தனுப்பினார்கள். அதனாலடியேன் வந்தேனென்றான். பிரம்மதேவர்சந்தோஷப்பட்டு ஓ பகீரதனே நீநல்லநிலைமையுடன் அரசுபுரிந்து நீதியுடன பெற்றதிரவியங்களைபெரியவர்களுக்கும் தேவதைகளுக்கும் உபயோகிக்கும் யாகத்திற்கும் உபகாரியா யிருந்தபடியால் அவர்கள் மகிழ்ந்து என்னுலகத்தைப்பார்க்கும் படியாய்த் தூலதேகத்துடனனுப்பிவைத்தார்கள். அவர்களுடைய அனுக்கிரகம் பெற்றபடியால் நூறுயாகங்கள் செய்வதைப்பார்க்கிலும் தவம்பண்ணுவதைப் பார்க்கிலும் பாவமில்லாமற் சேகரித்தபொருளை யாகமுதலிய நற்காரியங்களுக்கு உபயோகப்படுத்துவதும் அவர்களுடைய கிருபையைப் பெறுவதும மேலான தருமமென்றுபிரம்மதேவன் சொல்லி பகீரதனுக்கு வரங்கொடுத்து உபசாரஞ்செய்து அனுப்பினார். பூமியில்வந்தசூரியகுலோத்துங்கன் உலகத்தை முன்போல் ஒருகுடையிலாண்டு தருமோத்தமனென்று சகலரும் புகழ தனஞ் சம்பாதித்து சந்ததி யோர்களுக்கு நற்கதிதருவித்து சம்பிரமத்துடன் வாழ்ந்தான். வேழம்போன்ற தோள்களையுடையவேந்தனே யென்று கெங்காபுத்திரன் சொல்லக்கேட்டு தருமநந்தனன் புகழ்ந்து ஐயா, பூலோகத்தாருக்கு ஆயுள்விருத்தியும் அற்பாயுளும் தங்களாலே தேடிக்கொள்ளுவார்களென்று சாஸ்திரங்களிலேயும் பெரியோர்கள் வார்த்தைகளினாலேயும், கேள்விப்பட்டிருக்கிறேன். ஆயுசுவிர்த்தியும் க்ஷீணசக்தியும் எப்படியுண்டாக்கிக் கொள்ளலாம் அடியேனுக்குத் தெரியச்செய்யுமையா ஞானனந்த மூர்த்தியேயென்று கேட்கவீஷ்டுமர் சொல்லலுற்றார்.

88. பூலோகத்தாருக்கு ஆயுசு விருத்தியும், அற்பஆயுளும் தங்கள் தங்களாலே தேடிக்கொள்வார்களென்று சொல்லுகிறார்களே என்கிற பிரசினைக்கு உத்தரம்.

ஓ! தருமநந்தனா கேளும் ஆயுளும், புகழும் பணிவும் லக்ஷ்மீகரமும், தருமமுதலிய இவைகளெல்லாம் சுத்திபத்தியாகிய ஆசாரங்களினால், நித்தமும் பெருகி மொத்தமாய் நாளுக்குநாள் வளர்ந்துமேன்மேலாகும். ஆசாரம் ஒழுக்கமும் நாளுங்குன்றிடில் நசிந்துப்போகும். நல்லவழியாகிய ஆசார முறைமைப்படிக்கு நடந்து அந்தந்த வருணத்திற்குத் தகுந்தவண்ணம் தப்பாமல் நடந்தால் சகலதுன்பத்தையும் போக்கும். ஆயுளும் விர்த்தியாம், ஆசாரியன் சொல்லைத் தவறினவர்கள் வேதங்களில் விதித்த விதியை அகற்றி நடந்தவர்கள், உலகத்திற்குக் குற்றம்வரும்படி நடக்கிறவர்கள், பேசும்போது துரும்பைக் கையிலேபிடித்துக் கிள்ளியபேர்கள், சூரியனுக்கு முன்னும் பின்னும் முறம்வீசிப் புடைத்தவர்கள், தூசெழும்ப குப்பை கொட்டினவர்கள், விளக்கு மாறினாற் றாற்றினவர்கள், தருமதீபம் அவித்தவர்கள், சாப்பாட்டில் நஞ்சிட்டவர்கள், புள் மிருகங்களை அநியாயமாய்கொன்றவர்கள் அழிவார்கள். ஆயுளும் ஒழிவார்கள், எப்பேர்ப்பட்டகாலத்திலும்பொய்சொல்லாமல் கோபியாமல் பிராணனுக்கு இடையூறுவருகிறதேயென்று பேசாமல் திரிகாலத்திலேயும் தேவதார்ச்சனை புரிந்து நைவேத்தியஞ் செய்து ஓமாக்கினிவளர்த்தி, தேவதைகளை ஆகுதியினால் திருப்தி பண்ணிவைத்து ஓமப்புகையால் ஆயுள்விர்த்திபண்ணிக் கொள்ளலாகும், ஒருவனுக்குரித்தாகிய குலமனையாளைக்கைப்பிடித்துக்கொண்ட பேருக்கு வருந்தீமையை, வகுப்பதென்ன, இதைவிடப்பாபமும் துரோகமுங் கெட்டதும் வேறில்லை. வாணாள் மாய்வதற்குப் பரதாரத்தைத் தழுவுகிறதே விஷம். இதைப் பார்க்கிலுங் கொடியபாவம் இன்னமநேகமுமுண்டு. அதென்னவென்றால் தனக்கிதமான நேசன், ராஜன், ஆசான், புரோகிதன், வேதியன், பரிகாரம்பண்ணுகிறவயித்தியன், பந்து சனங்கள், தனக்குரிய அடிமை வேலைக்காறர், இவர்களுடைய பெண்சாதிபெண்களை, மாயையால்மனதினினைக்கப் படாது. நினைத்தாலோ வருணபாசபந்த நரகத்தில் வீழ்வதற்கு ஆயுள்குறைந்து முடிந்துப்போவார்கள், கோவிலைச்சேர்ந்த குளம், நிலம், தோப்பு, துரவு, முதலிய சொத்துகள் தருமார்ச்சிதங்

கள்,பிராமணருடைமைகள், அடைக்கலப் பொருள்கள்,எளியோர்நிதி
கள், இதுகளை அபகரிப்பவர்களுக்கும் ஆயுசுகுன்றும். அழியாநரக
மென்றும் மீளவிடாமற்றுன்றும், சோபானமுதலிய சலத்தை நின்று
உண்டாலும்,மலமூத்திரத்தைநின்றுவிட்டாலும்,நீரில் வஸ்திரமின்றி
இறங்கிக் குளித்தாலும், கைம்பெண்ணைக்கலந்தாலும், தனக்கு மூத்
தவளுடன் சையோகஞ்செய்தாலும், வாழ்நாள் பின்வாங்கும். கிழக்
குமுகஞ் சாப்பிட, தலைவைத்துப்படுக்கப் பழக்கம் செய்யாதவர்கள்,
பகலில் சாதத்தோடொலுண்பவர்கள், உண்டபின் தலைமுழுகுவோர்,
செரியாதிருக்கு முன்னுண்போர்,ஜீவனிழப்பார்கள். ஆசூசமாகிய எச்
சில்பட்டிருக்கும்போது அக்கினி,பிராமணர்,பசு,புட்பம்,செபமாலை,
இதைத்தொட்டவர்களுக்கு ஆயுளொடுங்கும் வினை நீங்கும். கலைவ
ல்லவராகிய பெரியவர்களைக்கண்ட காலையில் எழுந்திருந்துவணங்கி
எதிர் சென்றுபணிந்து வாய்பொத்திக் கைகட்டி தாம்பூலமணிந்திருந்
தால் அதுகளை மாற்றி அவர்கள் உத்தரவுகொடுக்கிறவரையிலுங் காத்
திருந்து அவர்களிடத்தில்சிலவுபெற்றுக்கொண்டு,போகாமற்போனால்
(பணியப்படுவார்புறங்கடையராகத்தணிவில்களிப்பினுற்றாழ்வார்,என்
பதுபோல்) ஐஸ்வரியமும் ஆயுளும் கெட்டுப்போம். எனக்கு ஆயுள்
இத்தனைவருடமிருக்கிறதென்று இசைக்கின்றவர்களுக்கும் ஜனனப
த்திரிகையாகிய சாதகத்தை அடிக்கடிவிசாரிக்கிறவருக்கும் பலன்ம
ட்டுப்பட்டுப்போய் பஞ்சையாய் உயிர்விட்டுக் கெட்டுப்போவார்கள்.
உடம்பிற்றூய எண்ணெய் இட்டுக்கொண்டவர்கள்,குருவை நிந்தித்து
கோபமாய்ப்பேசினவர்கள்,பெரியோர்கள் சினந்துபேசியபோது அவர்
களை எதிர்த்துக்கொண்டு பேசினவர்கள், பிரதமை, அஷ்டமி, ஏகாசி,
சதுர்த்தசி,அமாவாசி,பூரணை, இதுகளில்க்ஷவரம்பண்ணிக்கொண்டவ
ர்கள்ஸ்திரீபோகங்கொண்டவர்கள் அழகில்லாதஅங்கஹீனர்சற்பாத்திர
மறியாத கோத்திரர், செல்வமற்ற சிறுமையர் படியாத பாபிகள், தெ
ளிவில்லாச் சிந்தையர் இவர்கள் முகத்தி லுதயத்தில் விழித்தவர்கள்,
இவர்களைக் கண்டு பழித்தவர்கள்,ஏழைகளையடித்து எதிர்த்தவர்கள்,
பேதையர்களைப் பதரப்பேசினவர்கள்,பல்விளக்கும்போதும் மலசலம்
போக்கும்போதும் போசனம் புசிக்கும்போதும் பேசுகிறவர்கள், சூரி
யோதயத்திலும் அஸ்தமானத்திலும் தூங்கினவர்களும், வயசுகுறைந்
திறப்பர். தந்தை, தாய், தமையன், தமக்கை, குரு, தெய்வம் இவர்
களுக்கு வணங்கி சந்தன புட்ப தாம்பூல தூபதீபங்களினால் பூசை
பண்ணவேணும். பூசித்து வணங்காத வர்களுக்கும் பூரணகர்ப்ப
ஸ்திரீயுடன் கலந்தவர்களுக்கும் வடக்கு, தலைவைத்துப் படுத்தா

லும் நிர்வாணமாய்க் குளிக்கிறவருக்கும், ஆலமரம், அரசமரத்துடன் சாய்ந்து பழுவர்க்கங்கள் சாப்பிட்டாலும்,மூக்கிலே வியர்த்தவியர்வை நாக்கிலேவிழத்தக்கதாக அன்னம் புசித்தாலும்,இடதுகையில் உப்புவைத்துக்கொண்டு சாப்பிட்டாலும்,இடதுகரத்தாலுப்பு முதலியவற்றை வைத்தாலும், இரவில் தயிர்பருகினாலும்,பகலில் பால்குடித்தாலுங் கள்ளுக்குச் சமானம். இராத்திரியில் கீரைமுதலிய இலைக்கறி அருந்தினாலும்நல்லபதார்த்தங் கிடைத்தாலும் அதை நாலுபேருடன் பகுர்ந்துண்ணாமல் தான்மாத்திரந் தின்றால்வயிறுநொந்து வாதைப்பட்டு வருந்தி மரணமடைய நேரிடும். ஆதலால் கையிற்கிடைத்த அருமைப்பதார்த்தத்தை யாவரேனுங் கண்டால் அவர்களுக்குங் கொடுத்து சாப்பிடவேணும். அப்படிக்குச் செய்யாவிட்டாலும் தன் மட்டி லொருவிதமும் விருந்தினருக் கொருவிதமுமாக சாப்பாடுமுதலிய தாம்பூலமளித்தாலும் நெய், பால், தயிர், பாயசம்,வடை,அப்பம் சுகியம், உரிமையான பண்டம், பதார்த்தம் தீர்த்தமுதலியவற்றை தாய், தந்தை, பந்து முதலிய பரதேசிகளுடன் சாப்பிடாமல் ஒண்டியாய்ச் சாப்பிட்டாலும், நோயும் அமையும், ஆயுசு குறைவுமுண்டாகும். பொல்லாதகாரியங்களை ஒருவன் செய்தால் அதைப் பார்க்கவுமாகாது. நம்மால் தடுக்கப்படாக் காரியங்களைக்கண்டு ஐயோ பாவமென்று இரக்கப்படவுமாகாது.நம்மால் நிற்பாடுசெய்கிற காரியமாயிருந்தால் இரக்கமடைந்து நிறுத்தலாகும் பாபமில்லை.பார்க்கிறவர்கள் தருமவானென்று மெச்சுகிறதற்காகப் பரிதாபப்படுவதில் லாபமில்லை ஐயோ! இவர் நல்லவரென்றால் அதனால் ஆத்மாவிற்குப் பிரயோசனமுண்டா? விருதாவில் தீவினைசேரும், ஆகையால் அதி பாபங்களைப் பார்க்கலாகாது. சூரியனுடைய சாரதியை நோக்கலாகாது. அமாவாசி, பர்வம், கிரஹணம், இப்பேர்ப்பட்ட விசேஷநாளையில் சமுத்திரஸ்தானம். பண்ணலாகும் அல்லாதகாலத்தில் மூழ்கலாது. தென்புலத்தாருக்கு திதி.தர்ப்பண முதலியபூசை பகல்பனிரெண்டுநாழிகைக்கு மேல்செய்யப்படாது, தன்பிள்ளையைதம்பியைகாப்பாற்றவேணும். தமையனைதந்தையென்றெண்ணிச் சிந்திக்கவேணும். இப்படி செய்யாமல் வேறுசிந்தைகொண்டு மாறுபடலாகாது. இதுகளெல்லாம் அசுபமான காரியத்தை விளைத்து ஆயுளைக்குறைக்கும். இப்போது நான்சொன்னதெல்லாம்விட்டு நன்மையாக நடந்தவர்கள் சுகமடைந்து துன்பநீங்கிஇன்பமுடன் ஆயுள்வளர்ந்து அனுபவித்திருந்துகடையில் நற்கதிசேருவார்கள். ஆசார முதலிய நற்கருமங்களை அனுஷ்டிப்பவர்களுக்குஉபசரித்து அன்னங்கொடுப்பவர்கள் நல்லவழி

பெறுவார்கள், தானங்களில் அன்னதானம்பெரிது. அதன்பயனை ஆ ரெடுத்துச் சொல்லுவார்கள். அந்தத்தருமம் உனக்கே கிடைத்திருக் கின்றது தருமநந்தன அதைக்குறித்து நான் பேசவேண்டுவதில்லை, இன்னமு நீகேட்கவேண்டியதைக் கேளுமென்று வீஷ்மர் சொல்ல, தருமபுத்திரர் சந்தோஷித்து சுவாமிவிரதங்களைபிராமணர்களும்க்ஷத் திரியரும் அநுசரிக்கவேணுமென்று பெரியோர்கள் பேசி இருக்கின்று ர்களே, மற்ற இரண்டு வருணத்தாரும் அநுஷ்டிக்கவேண்டியதென் னவென்று வினவினர் பாண்டு புத்திரனுக்கு ஆண்டவனாகிய ஞானவ ரோதர வீஷ்மர் அருளிச்செய்கின்றார்.

89. சாந்திராயன விரதமுதலியவைகளை அநுஷ்டிக் கின்றவர் அடையும் பலன்.

ஓ! வேந்தனே! வேதமோதியவேதியர் சாந்திராயன முதலிய விர தங்கள் தங்களாசை தீரும்படியாக ஜலபானமுதலிய தன்மைகளில் லாமல் மூன்றுவருஷ முறைமையாய்தியானத்துடனிருக்கலாம். இரா ஜர்கள் பதினைந்துநாள் பட்சம் ஒருவாரம் ஒருகிழமை இந்தமட்டும் உபவாசமிருந்து விரதம்போற்றலாம். வைசியர் சூத்திரர் விரதமிருக கவேண்டுமென்றால், ஐந்துநாள் மூன்றுநாள் உபவாசமிருக்கலாம். அதன்பேரில், அதிகமாய் ஆசைகொண்டிருந்தால் குற்றமுண்டாய் விரதபங்கம்வரும், யாவரொருவர் இந்தப்பிரகாரம் சரீரத்தை வரு த்தி இரத்தஞ்சுண்டத்தக்கதாக உபவாச விரதமிருந்தால், அவருக்கு இராக்காலத்தில் மூடிய இருள் சூரியன் சுடரைக்கண்டு மறைந்து போவதுபோல் அக்கியானம்நீங்கி சுக்ஞானந்துலங்கி பிறவியும்போய் புண்ணியகெதி பெறலாகும். இப்பிரபஞ்சத்திலுள்ள ஏனையோர்கள் கடைத்தேறுவதற்குஅநேகவிரதம்நோன்புமுதலியஅநுஷ்டிப்பு ஏற் படுத்தி இருக்கின்றது, அப்படியே அநேகர் அநுட்டித்தும் வருகின் றார்கள். இது சர்வவல்லமையையும்பெற்று கல்விகற்று மூவாசையு மற்றிருக்கின்றமூர்த்திகள்பேசி இருக்கின்றார்கள். இப்பேர்ப்பட்ட விர தங்களிலுைப்பதைப் பார்க்கிலும் வேறொன்று மில்லையென்றுரைத் தனர். தருமராஜன் அதைக்கேட்டு ஆதியே! பூமியிலுண்டான மனித கோடிகள் தீவினைகள்செய்து பாவிகளானால் இந்த மேலான புருட ஜெனனம்போய் அஃறிணையான மிருகரூபம் வருமென்று விளம்புகி ன்றார்களே அதனது விபரமென்னவென்று கேட்க வீஷ்மர் சொ ல்லுகின்றார்.

90. மானிடருக்குத் தீவினையினால் மானிட ஜென்மம் போய் மிருக பறவைஜென்மம் வருமென்கிறார்களே அதுயாதினாலே என்ற பிரசினைக்கு உத்தரம்.

அரவிந்தம்போன்ற அருள் விழியோனே! கேளும்,தாய் தந்தை தமையன்,குரு,தெய்வம், இவர்களுக்குச் செய்யவேண்டிய உபசாரங்கள் அளவில்லா தனவாம். அப்படிக்குச்செய்கின்றவர்களுக்கு திசைமுகனும் பயப்படுவான்.மற்ற ஏழை எளியோர்கட்கும் பொல்லாங்கு செய்யலாகாது;ஒருவேளை குற்றங் குறைகள் நேரிட்டால் ஆசாரியரிடத்திற்சொல்லிப் பரிகாசம் பண்ணிக்கொள்ளலாம்.மேற்கூறிய தாய் தந்தை ஆசாரியர் முதலியவருக்குப்பிழை இழைத்தால்ஈஸ்வரனாலுந் தீர்க்கக்கூடாது. அதற்குப் பரிகாரமுமில்லை. ஆசாரியர் திருவடியே அடைக்கலம்.மேலும் மடம், சத்திரம்,மசானம்,கோவில்,இதுகளிலேற்றிய திருவிளக்கு நெய்முதலியபொருள்களைக் கவருவராகில் பூததேகம் விழுகிற பரியந்தம் பொல்லாததுன்பத்திலுழன்று தேகந்தடித்து வெடித்துஆன்மாநீங்கி மறுபிறப்பில்எலியாய்,பெருச்சாளியாய்,திப்பிவண்டாய்,காட்டுப்பன்றியாய், ஜனித்து வெகுநாளலைந்து கிலேசித்து அந்தஜன்மம்போய்பின்னும்,நாயாய்,நரியாய்,பேயாய்,புழுவாய்,ஒழிவில்லாமற்பிறந்து கியானமறந்து சுகந்துறந்து துக்கஞ் சிறந்து உழல்வார்கள். ஒருவன்பெண்சாதிமேல் மற்றொருவன் ஆசைப்பட்டாலும் அவளை எடுத்துக்கொண்டாலும் கழுக்கள் முதலிய பட்சிகளாய்க் குறையுடன் பிறந்து இரைகிடையாமலலைந்து வருத்தமடையவேண்டிவரும். தேவாராதனை செய்துவிட்டு மற்றொருசமயத்தைவஞ்சித்தவரும் தேவதையைப்பூசித்து நைவேத்தியம் வைக்காமற் போனபேர்களும், தெய்வங்களைத் தொழுது பிதுர்க்கடன் மறந்தவரும் தாய்தந்தையை போற்றாதவரும், அண்டங் காக்கைப் பிறப்பிலழுந்தி ஆவென்று கதறி தின்பண்டங்களைத்தின்னா நிலை இல்லாமலலைய நேரிடும். தனக்கு மூத்தவனை இளையவனை மனநடுங்கப்பேசி வஞ்சித்தபேர்கள் கொக்கு நாரையான் முதலிய கிரவுஞ்சப்பட்சியுருக்கொண்டு மகாபாவமடைந்து மயங்குவதாகும். பிராமணனை அடித்தவர்கள் திட்டினவர்கள் கோபமாய்க்கண்மைகாட்டிப்பேசியபேர்கள் பிதுர்தேவதைகளுக்கு பிண்டம் கொடாதவரும் வௌவாலாய் பிறந்து வாயினாற்தின்று வாயினாற் கக்கி தலைகீழாய்நின்று தனிநரகஞ் சேரக் கிடைக்கும்.வழி

களிற் போகிறவர்களை அடித்துப் பிடித்து ஆயுதங்களாற் குத்திவெட்டி பொன்னைப்பொருளை அபகரித்தவர்கள் கோவேறு கழுதையாகிச் சுமந்து குன்றித்திரிவார்கள், ஸ்திரீஹத்தி சிசுஹத்தி பிராமணஹத்திசெய்தவர்கள் பறப்பறந்தாய்ப் பிறந்து நரகமெத்தனையோ அத்தனையிலும் நாளுமூழ்கிக் கிடப்பார்கள். இதன்றி அன்னம், பால், தயிர், இவைகளைப்பின்னம் பண்ணினவர்கள் திருடினபேர்கள்தேவாராதனை நைவேத்தியம் செய்வதற்கு முன்னே தின்கின்றவர்கள், ஆயுதமில்லாதபேரைச் சண்டையிட்டு கொன்றபேர்கள் சலசரமாய்ப் புழுத்து சஞ்சலப்படுவார்கள். இரும்பை, பொன்னை, வெள்ளியை, இன்னமுள்ள சத்தாதிலோகங்களை மறைத்தபேர்கள் குரங்கு, கோட்டான், ஆந்தை, முதலாகிய குரூரஜன்மங்க ளெடுத்து, குறையா நிறைந்த நரகத்தில் மிதப்பார்கள். இதன்றி அடைக்கலப்பொருளை அபகரித்தவர்கள் அண்டினபேரைக்கண்டித்து துரத்தினவர், சண்டாளராகிநிந்திக்கப்பட்டு வருணபாசப்பந்தத்திலகப்படுவார்கள். பரிமள திரவியத்தை அபகரித்தவர்கள் முகஞ்சிறுய்ப்பிறந்து துர்க்கந்தமாய் மூக்கு நாற்றமெடுத்துசோம்பித்திரிவார்கள். இன்னம் அனேகம்பாவங்கள் பண்ணினவர்கள் இடையூறடைவதுமல்லாமல் தாழ்ந்த ஸ்திரீஜனங்கள் சம்பந்தமும் அற்ப உணவும் அமைதலில்லாமனமும் மணுழயிலும் வெய்யலிலும் உழன்றுத் திரிவார்கள். இப்பேர்ப்பட்டபாதகங்களிழைத்தால் இப்போதுரைத்தபிறவியிற் பிறந்து ஏங்கிமயங்குவார்கள். இத்தருமங்கள் எவர்களுக்கும் பிடிபடாது நானறிந்த மட்டுஞ்சொன்னேன். இன்னமநேக முண்டு அவைகளெல்லாம் தரும சாஸ்திரங்களினுல் அவசரமின்றி பார்த்துக்கொள்ளலாம்; பார்த்திபனேயென்று பகர்ந்தனர். தருமராஜன் மதிநிறைந்தமகிழ்வடைந்து பாட்டனுக்கு கூட்டமான முனிவருடன் வணங்கி ஐயா, அடியேன்மனதில் குறை இல்லாமற் கேட்டுக்கொண்டேன்.

இன்னொரு சந்தேகம் மாம்ஸம்புசிப்பதும் ஜீவஹிம்சை செய்வதும் பாவமென்று மகத்துக்களுரைத்துத்தடுத்திருக்க, இன்னுஞ்சிலதுலோர் புசிக்கலாமென்று முறைத்திருக்கின்றுர்களே! அதனது உண்மைஎன்ன? இராஜர்கள்வேட்டைக்குப்போய் மிருகங்களைக்கொன்று அதைச்சமைத்து மெல்லுகின்றுர்களே! வேடர்கள் குலவிருதாய்க் கொல்லுகிறுர்களே! சீவஞர்த்தஞ் செய்கிறுர்களே! பிரமக்ஞானவேதமோதுகிறவர்கள், பசுக்களைவதைத்து யாகம்பண்ணிப்பகிர்ந்து அருந்தி விருந்திடுகின்றுர்களே! இச்சாஸ்திரங்களைவகுத்த மஹாரிஷிகளியாவரும் மாமிசத்துடன் அன்னமருந்துகின்றுர்களே! சில்லறைத் தெய்வ

ங்களுக்குத் திருப்திசெய்கிறார்களே!பிதிர்ப்பூசை செய்யும்பட்சத்தில் ஊனுடன் உபசரிக்கும்படியாய்ப்பிரமாணமிருக்கிறதோ? இதுகளுக்கெல்லாம் பாபமுண்டோ இல்லையோவென்று பூதநயை விசுவாசமுள்ள பூரணன்கேட்க நாதப்பிரமந்தெரிந்த வீஷ்டுமர்சொல்லுகின்றார்.

91 மாம்ஸ பக்ஷணம் சிலர் பண்ணலாமென்றும் சிலர் பண்ணலாகாதென்றும் சொல்லுகின்றார்களே அதினுண்மை யாதென்ற பிரசினைக்கு உத்தரம்.

கேளும் தருமநந்தனா உலகத்தில் தருமங்களுக்கு அளவில்லை எல்லாத்தருமங்களுக்கும் பிரதானமானது விரதம். விரதங்க ளெல்லாவற்றிலு முயர்ந்தது கொல்லாவிரதம், இதுதான் தருமங்களுக்குத் தலையாகும் ஜீவஇம்சைசெய்யில் அதுபாபத்திற்குவிளையாகும்.இப்பால் நான் சொல்லவேண்டியதில்லை,இக்கொலைப்பாதகம் நானுவிதவழியினால் வரும் அதாவது மனத்தினினைத்தாலும், வாக்காலுரைத்தாலும் தேகம்புரண்டாலும் தேய்த்தாலும் நடந்தாலும் பிடித்தாலும் அதட்டினாலும் நாவுக்குருசியாய்த்தின்றாலும் கொலைபாவம் வரும். மனோவாக்குக் காயங்களினால் வருகிற பாவமிதுதான், இதுகளில் நன்மை தீமையறிந்த பேரறிவுடையோர்கள் நாவின் உருசிக்காகநாடிபொரித்து அவித்து புகைத்துச் சமைத்துப் புசிப்பது பெரும்பாவத்திலும் பாவம். அற்ப உடல் பருக்கவும் பலக்கவும் பாரிக்கவும் பூரிக்கவும் கொழுக்கவும் தழைக்கவும் நினைத்து மகிழ்வதை நீக்கிவிடுவாராகில் நிலைத்த நெடுநாணிங்காப்பாவமு நீங்கும்.தாமேகொன்றாலும் தின்றாலும் ஒருவரைக்கொல்லச்சொன்னாலும் கொலைசெய்தவரிடத்திற் கொண்டுண்டாலுங்கொடும்பாவமாம். (விலைகொடுத்து வாங்கினால் எப்படி பாவம் வருமென்றாலோ) யாவருங் கிரையத்திற்கு வாங்காவிட்டால் எவர்களு முயிரைமாய்க்க மாட்டார்கள்.எல்லாவற்றிற்கும் காரணம் மாம்ஸம் சாப்பிடுகிறபேர்களேயாம் ஆதலால், ஊன்புசிப்பதை ஒழிப்பதுவிரதம் ஐம்பொறிகளினாலுங் குற்றங்கள் வரவொட்டாமற் காப்பதுவிரதம்"அவிசொரிந்தாயிரம் வேட்டலின்ஒன்றன் உயிர்செகுத்துண்ணாமை நன்று" இப்பேர்ப்பட்ட சாஸ்திரப் பழக்கத்தினாலும், சாதுக்களின் பழக்கத்தினாலும், விவேகசகாயத்தினாலும், வெறுத்துவிட்

டால்மற்றதருமம்வருக்கவேண்டியிராது.நம்முயிரைப்போலதுவென்றும் நாதவிந்து சகிதமென்றும், பசுபதிநாதன் பரிபூரணமாய் நிறைந்திருப்பதென்றும் பட்சம்வைத்து,ஜீவகாருண்யஇச்சைவைத்து கண்டமட்டிற் கண்டருசியென்றும், அப்பாற் றிப்பியென்றும், அறிவாலறிந்து வெறுத்துவிட்டால் புலால்மறுத்தலென்னும் விதியைவிதித்த மகாபுருடனுவார்கள். மேலும் ஜனனங்கள்தோறும் ஸைவம்வருமாகில் நல்வினைப்பயனே. நன்மையைநாடி இச்சென்மமுதல் நடத்தினால் பெரியபிரயோஜனமாகும். கடினமான புலாலை மறுத்தபேர்கள் நால்வகைப் பிறப்பு எழுவகைத் தோற்றமாகிய எண்பத்து நான்குலட்சம் யோனி பேதங்களியாவுங்கடந்து பிறவிசாகரத்தையுநீந்திக்கரையேறி சத்கிர்த்தியங்களாகிய எக்கியங்களெல்லாம் முக்கியமாகப் பண்ணிய பலனைப் பார்க்கிலும்கண்ணியமான மேலானபலனைப் பெறுவார்கள். புலால்பிறவிக்கு வித்து.ஊன் உயிருக்குநரகச்சுமை.மாம்ஸம் உண்ட உடல் நரிக்கு, நாய்க்கு, கழுகிற்கு,காக்கைக்கு பொதிச்சோறு (அண்ணுத்தல் செய்யாது அளறுஎன்றும்) இதைக் கருதி யுணர்வாயென்று அன்புடன் சொல்லியவீஷ்டுமனைத் தருமர் தொழுது ஆநந்தக்கண்ணீர் பொழிந்து அழுது இருகரத்தையுஞ்சிரத்திலேற்றி பழுதுநடந்த பாவியே னென்று பாட்டனைப்பரிந்து ஐயா! தென்புலத்தாருக்கு மாம்ஸபட்சணமார்க்க திருப்தி என்னசெய்யும், என்று வணங்கிக்கேட்க வீஷ்டுமர் சொல்லுகின்றார் ஓ சந்திரகுலாதிபனே கேளும் யாக எக்கியகிர்த்தியங்களுக்கு சீவர்களுடைய வபையெடுத்து மந்திரார்த்தங்களினால் ஓமம்புரிந்து தேவதைகளுக்கு அக்கினிமுன்னிலையில் திருப்திபண்ணிவிட்டு சிந்தைகளிப்ப தாகையால் வந்ததோஷமும் வழிவிலங்கிப்போம். பிதுர்க்களுக்கும் அவ்வாறே வேதமந்திர விதிப்படிக்கு நிவேதனம்பண்ணலாகும் குடிகளிடும் பயிர்முதலிய உயிர்களுக்கும் தவசிகளுக்கும் இடையூறில்லாமல் வேட்டையாடுவது வேந்தருக்குமுறைமையாதலால் பழிபாவமில்லை.பாபத்தினுற்பிறந்த வேடர்கள் குலாச்சார தருமத்தைக்கொண்டு திரிவதனால் குற்றமில்லை.சாத்தேயமதத்திற்கு சம்மத மானதென்று அதர்வணவேதப்புப்பினுல் யாமளைநூலின்படி இந்திரமந்திர சம்பந்தமான தேவதைகளுக்குப் பிரார்த்தனைசெய்துபலியிடுவது மந்திர தேவதார்ப்பிதமாம்.அதில்வழக்கில்லை. வேதத்தில் விதித்தவழி நடப்பவர்க்குவேங்கியமில்லை. அநித்தியதேகத்தைப் போஷிக்கு நிமித்தம் ஓராத்மாவை அநித்தியஞ்செய்தால் அறிவாலறிந்த அக்கிரமமென்று அந்தகன் தண்டிப்பான். (முற்பகைசெய்யில் பிற்பகைவிளையுமென்னும் பழமொழிக்கிணங்க) எவ

னெர்தவுயிரை எவ்வாறுகொன்றனே அவனை அந்தவுயிர் அவ்வாறு மறுஜனனமெடுத்துவந்து கொல்லும். இது வேதத்தில் உயிர்வதைப் பிரகரணத்திற் சொல்லும். ஆதலால் யாரும் பழிக்குடன்படலாகாது. தெரிந்தவரென்பவர் சகலஜீவன்களையுந்தன்னைப்போல் நினைத்துஉணர்ந்தாலல்லவோ தெரிந்தவராவர்.நற்கதிவேண்டினபேர் நாற்றமுள்ள ஊனை மறுப்பார்கள், துர்க்கதி விரும்பினோர் உயிர்தொலைத் துண்பார்கள். மேலான தவத்தைச்செய்து வேள்வி முடித்தவர்களானாலும், உயிர்வதை சம்பந்தம் ஊனருந்தும் வேதை கிஞ்சித்துவருமாகில் துன்பப்படுத்தி அதுநாரகத்துரவிற் றள்ளும்.அப்பால்தலை எடுக்கமாட்டான்.அது அப்பேர்ப்பட்ட பொல்லாங்கான காரியமென்றெண்ணி எல்லாந்துறந்த பெரியோர் உயிரெல்லாந் தானென்றிருந்தார்கள். இதன்றியும் பூமியிற்றோன்றிய இலை, காய், கறி, பதார்த்தங்களெல்லாம் ஜீவர்களாயிற்றேயென்றால்! மச்ச முதலிய மாம்சங்களைப்போல,காய் கறி பதார்த்தங்களைச் சொல்லப்போகாது.மரக்கறிகளுக்குச் ஜீவனுண்டா யிருந்தாலும் ஓரறிவுடையது துன்பத்தையறிவதில்லை.மற்றவைகளோவென்னில் ஈரறிவு மூவறிவு நாலறிவு ஐயறிவு வுடையது. மேலும்இவைகளுக்கு அவையவங்கள் மேற்பட்டிருக்கின்றது இலை காய் கறிகளுக்குமூக்கு, நாக்கு, முதலிய அவையவமில்லை இரத்த மாம்ச சுக்கிலசுரோணிதமில்லை.சடபண்டம் தண்ணீரொன்றுமாத்திரமுண்டு. அதுவும் வெப்பு நீராம் இவைகளை அறுக்கும்போதும் பிடுங்கும்போதும், பறிக்கும்போதும் முறிக்கும்போது தறிக்கும்போதும், பதபதைப்புத் துடிதுடிப்பு முதலியசிவப்பு இரத்தம் பெருகவுமில்லை, உபத்திரவமுமில்லை தேவதாயோக்கியம் வேதங்களில் விளம்பிஇருப்பது இந்த வஸ்துக்களெல்லாம் தெய்வப்பிரீதியென்று தெரிந்தேயிருக்கிறது. எல்லாம் ஈஸ்வரார்ப்பிதமென்று பறித்தல் பாபமில்லை அதாவது ("புன்மரமுதலிய உற்றறியும் ஓரறிவுயிர், முறநந்து நாவறிவோடீரறிவுயிர், சிதல், எரும்பாதி மூக்கறிவின் மூவறிவுயிர், வண்டும்பியாதி கண்ணறிவின் நாலறிவுயிர், வானவர், மக்கள், நரகர்விலங்கு, புள்ளாதிசெவியறிவோடையறிவுயிரோ.")இவைகளெல்லாம்பகுத்தறியும் தன்மைதேவர்களுக்கும்மனிதர்களுக்கும் விசேஷப்பட்டபடியால் பகுக்கும்ஆறறிவுடைய நாம்தடுத்து சகலபூதாதிகளிலேயும்சர்வேஸ்வரன் சர்வபரிபூரணமானதால் நானென்றும் நீயென்றும் அவனென்றும், இவனென்றும், உவனென்றும்பேசாமல் அற்றிருக்கின்ற அத்துவிதியாகிய சகலமு நாசமாயிருப்பவர்களுக்கு காய்கறிகளிலேயும் சிவதுண்டென்றும் சிந்திப்பது தருமம்.மற்றையர்கள் சமயற்செய்து

சாப்பிடலாகும். இதைப்போல் மாம்ஸத்தை ஈஸ்வரார்ப்பிதம்பண்ணி னும், வருந்தித்தொழுது அழுதாலும், உயிர்வரதவிடாது. பாபம் நீங்காது, அதேனென்னில் உதிரமாம்ச சம்பந்தம் உடல் ஆடு,மாடு, பன்றி,கோழி, குருவி, நீர்வாழ்செந்து. மச்சமுதலியபட்சிகளும், உதி ரம், நிணம் கொழுமை நெய்ப்பசையுள்ளது. தன்பெரிய தேகத்தில் ஒரு சிறியமுள் தைத்தால் துன்பமும்துயரும் பிரயாசமும் தெரிகிற தல்லவா அதறிந்திருந்தும் தன்னைப்போல் தாதுக்களுடன் சேர்ந்த உயிர்ப்பிராணியைக்கொல்ல, அறுக்கத்துணிவது அநியாயமநியாயம். ஹரி! ஹரி! நானென்னென்றெடுத்துரைப்பேன்மகாபாதக மென்று தெரிந்தும் தன் தன் பிள்ளை குட்டிகள்தரையில் விழுந்தால் காயமா னல் இரத்தங்கண்டால் வியாதிநேரிட்டால் பதைபதைக்கிறதைப் போல் பாராமல் தாங்கள் வல்லுயிரொன்றும் அவைகள் புல்லுயிரொ ன்றும் மனம்பொருந்திக் கொல்லுவது தருமமா, பாவமென்று பார்த் தும் பாராமற் செய்கின்றவர்களுடைய வம்ஸம் ஆயுசு செல்வம் யா வும் பாழ்பட்டுப்போம். ருசிபெரிதா பசிபெரிதா பாபம் பெரிதா? யோ க்கியமான உயர்ந்தபிறப்பில் கல்விக்ஞானமுள்ள மானிடஆக்கையில் வந்தும் சண்டாளத்துவம் பெற்றார்கள். பூததயை பசியாத்தாபம் ஈவு இரக்கம் இல்லாதபோர்களை மனிதரென்று மதித்தபேருக்கு மாளாத் துன்பமும் மீளா நரகமுமுண்டாம். புலால்மறுத்துப் பெரியோராகித் தவம்புரிந்து மோட்சமடைந்த சாதுக்கள் ஜீவன்முத்தர்கள் அநேக முண்டு. ஆதலால் ஜீவஹிம்சைகூடாது அவ்விம்சைசெய்யாத உத்த மர்களை எல்லா உயிருங் கைகூப்பிவணங்கும் சுகப்பிரமம் போலா வான் ஓ! தருமநந்தனு! பூர்வம் இவ்வுலகமெல்லாம் ஒரு குடையிலா ண்ட சுவயம்பு மநுவானவர் மார்க்கண்டேயரை வணங்கி புலால் மறுத்தலைக் குறித்துக்கேட்டார்.அப்போது மார்க்கண்டேயர் திருவா ய்மலர்ந்தருளியதை நான் உனக்குச் சொல்லுகிறேன்.

92. புலாலுண்பதைப்பற்றி மார்க்கண் டேயர் புகலுமுறை.

கேளும் தருமநந்தனு அநேகம் கோடிரிஷிகளுக்கு மார்க்கண் டேயரும், காணுவைக்குச் சொல்லிவந்த பிரகாரமேசொல்லி இருக் கின்றார், அதாவது ஆயுசு,செல்வம், கீர்த்தி,முதலிய மோட்சமு முண்டாகும், மனிதஜன்மத்திற் பிறந்தும் நன்மைதீமை என்னும்

உணர்ச்சி யறிந்தும் இரக்கப்படாமல் ஊன்புசிக்க விரும்பிய வர்கள் இராக்ஷச கிர்த்தியத்திலிருந்து நாசமுறுவார்கள். பூர்வம் தேவர்கள் அதுபெரும்பாவ மென்றறிந்து வேதாகமங்களினுற் றெரிந்துபுலால் மறுத்தார்கள். அப்புறம் இராக்கதரை வென்று ஜயம் பெற்றார்கள். அந்த மாம்சத்தை நீக்கியலாபம் உடனே சத்துரு செயத்தை சனுதியில் உண்டாகச்செய்து அதனால் தேவர்கள் விசாரந்தீர்த்து சுகமடைந்தார்கள். ஐயா தானமும் தவமும் தருமமும் தியானமும் வேள்வியும் ஞானமும் கல்வியும் நற்கருமமும் நாளும் விடாதியற்றி நாவுக்கு ஊன் உரிசைதேடாதகற்றி உயிர்வதைசெய்து உண்ணுத சொரூபமுடையவர்களுக்கு அங்கந்தங்கமாகும். மேலும் ஒருவேளைமாம்ஸந் தின்னுதபலனும் நூறுவருடம்தவம் பண்ணிய பலனுஞ் சரியாகும். இன்னமுஞ் சொல்லா நின்ற யாகாதிகிருத்தியங்களும் விரதாதி நோன்பாதிகளும் புரிந்து புண்ணியமெல்லாங் கிடைத்து சத்தியலோகம் புகுந்து நித்தியமாயிருப்பார்கள். சகலசக்கிரவர்த்திகளும் நளச்சக்கிரவர்த்தியும் திலீபச்சக்கிரவர்த்தியும் பகீரதனும்மேலானராஜ ராஜர்களும் ஊனைவெறுத்து உடலைச்சிறுத்து உண்மையான உலகத்தைப் பெற்றார்கள். சிலர் மாம்ஸத்தை விடமாட்டாமல் மகாபாவந் தீரத்தக்கதாய் வருடத்தில் புரட்டாசி, கார்த்திகை, மார்கழி, தை, சித்திரை, இந்த ஐந்து மாதமும் விட்டு மற்றமாதங்களில் மாம்ஸம் அருந்துவார்கள். இவ்வாறு அனுஷ்டித்துவந்தாலும் நல்லகதிகிடைக்கும். இப்பேர்ப்பட்ட பெருமையை யுடையது புலால்மறுத்தலாகிய விரதம். ஒரு நாள்விட்டாலும் அதற்குண்டாகிய பலனை அனுபவிக்கலாம் தருமராஜனேயென்று சிதேந்திரியரும் ஜீவன்முத்தருமாகிய வீஷ்டுமர் சொல்ல அதைத்தருமராஜன் கேட்டு சுவாமி இவ்வுலகத்தில் நல்லமணமும் திவ்விய குணமுமுள்ள காயிலை பதார்த்தங்களிருக்க புலால் நாற்றமுள்ள ஊனைப்புசிப்பானேன்? இதனுலென்ன பயன் யாதெனன்று கேட்க கங்கா புத்திரர் சொல்லுகின்றார்.

கருமக் கடலைக் கடந்த தருமராஜனே இப்பூமண்டலத்தில் பாபமிருந்து அக்கியானத்தில் அமிழ்ந்து கிடக்கிற அறிவீனர்கள் உடம்பு கொழுத்துத் தழைத்துப் பருக்கவேண்டு மென்று சதாகாலமும் மாம்சத்தைத்தின்று ஸ்திரீவிடையக் குளங்களில் வீழ்ந்தமிழ்ந்தி எழுந்து மூச்சுத்தணறி பாபம் வருகின்ற பழிப்பை யுணராமற்கெட்டுப்போய் நரகத்தில் வீழ்வார்கள். எப்படியாயினும் புசிப்பதும் போகிப்பதும் பிரதானமென்றெண்ணுகிறவர்கள். நரகத்திற்கு நாணுமல் கொழுத்த

நிணத்தைத்தின்பார்கள். போகத்தையும்புசிப்பையும்பொருளாய் நினையாதவர்கள் ஊனைத்தின்னுமல் உயர்ந்த பதம் பெறுவார்கள். மற்றவர்கள் புலாலை மறுக்கவேண்டுமென்றால் ருசியறிந்த புலாலுடம்பு கொஞ்சத்திற்பொருந்தாது. ஒருவராலுமுடியாதது, முடிந்தாலருமைதான் பிறவிவேறறுத்துபேரானந்தமடைந்து மோட்சத்திற்குச்சமீபித்தவர்கள் ஊனைவெறுக்க உடன்படுவார்கள். தான் கெட்டுப்போனாலும் தனக்கு சம்பவிக்கும் தன்னுடைய குடும்பத்தை சந்ததியைகொல்லா விரதத்திற் காத்துக்கொள்ளுவது சகலதவத்திலு மேலானதவமென்று சாஸ்திரபுராண ஆகம உபநிடத வேதங்களு முறையிடுகின்றது என்று குற்றமற்ற பரிசுத்தமாகிய நிர்மல மனதையுடையஅகத்திய முனிவரும் விதித்திருக்கின்றார்.

93. அகஸ்தியர் விதித்த புலால் மறுத்தல்.

அகஸ்தியமுனிவரும் சொல்லியதென்னவென்றால் வேல்வில்லாளிகளாகிய அரசர்கள் வேட்டையாடித் துஷ்டமிருகங்களைக்கொன்று சிவாத்துவைதிகளாகியதபசிகளை இரட்சித்துக்காக்கவேண்டியகடைமையாதலால் அது அவர்கருமமாகும். அதையவர்கள்கொன்றமையால் தின்றமைபவேண்டிய தவசியமாயிருக்கின்றது தண்டனையாகும். இது சுருதிப்பிரமாணந்தான் புலாலுண்ணல்அசுத்தஅயுக்தமென்றெண்ணி புசியாமல்விட்டவர்கள் மாசற்றபெரியோராவர்கள். அவர்கள் இடையூரடையார்கள்இவர்களைவிடப் புனிதர்கள் எங்குமிரார்கள். மோட்சத்திற்குஅருளுடைமையே முதன்மையாகியபிரதானம். இரக்கமில்லாதவருக்குஎதுவும்பலியாதுபுலாலைவிட்டுவிட வேண்டுமென்றுநினைத்தாலும்போதுமே, அப்படியே தள்ளிவிட்டாலுநன்மையே. அன்றைக்கே தீவினையற்றுப்போம். சாஸ்திரந்தெரிந்தும் தெரியாதவர் போற்றின்னுவது கொடியபாவம் தனக்கு நேரிட்ட தீவினையைப்போக்கிக்கொள்ளவகைதெரியாமல் சும்மா விருக்கின்ற ஆட்டைமாட்டை கோழிகுரிவியை அடித்துத் தின்னுவதில் தாமடையப்போகிற மரணம் போய்விடுமோ? கொலைசெய்துண்ணும்கொடியோனைக்கண்டாலும் பேசினாலும் நேசித்தாலும் விசுவாசித்தாலும் அவர்களுடைய நிழல்பட்டாலும் பாவமாம். எல்லா உயிரும் ஒன்றென்று எவர்கள் நினைப்பவர்களோ அவர்கள் நித்தியமான சத்திய உலகத்தில் சந்துருஷ்டியா யிருப்பார்கள். எல்லா உயிரையுங்கொல்லுவதற்கு நமனொருவன் ஏற்பட்டிரு

க்கின்றான், நிர்ப்பட்சமாய் உயிர்வதை செய்கிற பாபிகளும் அதை தின்னுகிறலோபிகளும் தங்களைத் தாங்கள் பட்சிக்கின்றவர்களை அருநரகத்திலழுந்திப் பின்னும் பிறந்து தரித்திரராய் இறந்து மறுபடியும் பிறந்து இதுவே வேலையாய்ப் பழிக்குப்பழி கொடுத்து தருமவழிகெடுத்து அநேகபாடு பட்டு என்றைக்கும் பசியினால் வருந்துவார்கள். உயிர்க்கொலை செய்வதையும் ஊனுண்பதையும் என்றைக்கு விடுகிறார்களோ அன்றைக்கே அருளென்பது தழைக்கும் ஆத்மபரிபாகத்திற்கு தக்கவேற்றுருவங்கொண்டு குருவருளுண்டாய் தேர்ச்சியும் ஆட்சியும் காட்சியும் பெறுவார்கள். உயிர்க்கொலையினாலும் கருக்கொலையினாலுங் கோபம் லோபம் கடுஞ்சொல் பைத்தியரோகம் வயிறெரிவு கண் கால் கையெரிவு எரிகுன்மம் பீனிசாதி தலைக்குற்றல் தேகநடுக்கம் தலையாட்டம் கண்ணீரோட்டம் பதைபதைத்தல் உதைத்துக்கொள்ளும் காக்கைவலி சுவாசகாசம் இவைகள் முதலிய துர்வியாதிகளெல்லாம் ஜன்மங்கள்தோறும் வரும். பூர்வஜன்மத்தில் ஊன் தேகமாதலால் ஊனை விரும்பும் கியான சூன்யத்தினால் சடபதார்த்தமாகிய இலை காய் கறிகளை இச்சிப்பதில்லை. இதைப்பகுத்தறிவதற்கு விவேகமும் சாஸ்திரமும் ஆசாரமுறைமையும் ஆசாரியனுதவியும் யோக்கியமான குலமும் ஒழுக்கமுமிருக்குமானால் சுத்தமாகுமென்று வீஷ்மர் சொன்னார். இதைக்கேள்விப்பட்ட தருமராஜன் மனது திடுக்கிட்டு பயமடைந்து இனிநாமிந்தப்புலாலுண்பதைவிட்டு நற்கதியடைய வேண்டுமென்று சங்கல்பம் பண்ணிக்கொண்டு பாட்டனுக்குத் தெண்டனிட்டு ஒப்பில்லாத உண்மையுடைய உத்தமனே சகலரும் வதைபத்தக்கதாக யுத்தமுகத்திற் கொல்லுகிறார்களே அவர்களுக்கு எப்படிகதிவரும் பாபமில்லாமற் போமாவென்ன: (முதிய சூரவன் மொழிகின்றார்.)

94. யுத்தத்தில் ஒருத்தரை யொருத்தர் கொல்லுகிறார்களே அதனால் பாபம்விளையாதா என்கிற பிரசினைக்கு உத்தரம்.

பூர்வம் பிரகாசம் பொருந்திய தேஜசுடையவர் வேதங்களைச் சிக்கறுத்து விபரமாய்ப் பிரித்த தெய்வத்தன்மை பெற்றவராகிய நமது வேதவியாசர் ஒரு ஆரணியத்தில் தபசு பண்ணிக் கொண்டிருக்கும் போது அவ்விடத்தில் நல்ல ரூபமாய் காலும் உடலும் பூமியிற் படத்

தக்கதாய் ஒரு புழுவானது மஹாகிலேசத்துடன் ஊர்ந்து வந்தது. வருகிற மார்க்கத்தில் வேதவியாசர் தவமுகூர்த்தமா யிருந்ததைப்பார்த்துபயந்து இவர்நம்மைப்பிடித்துக் கொல்லப் போகிறாரென்று சீக்கிரத்தில் அர்தவழிமாறிசாரசாரவென்று ஒதுங்கிப் போயிற்று. அதன் கருத்தையும்உயிர்மேல்வைத்தபயத்தையும் பார்த்த வாதராயணர்புன்சிரிப்புகொண்டு மிகவு நடுங்கியோடுகின்றபுழுவைநோக்கி ஓ! புழுவே இன்பதுன்பத்திற் கேதுவான உடலெடுத்தோமே இந்த உடலைக்கொன்றுவிட்டால் போகட்டுமென்றெண்ணாமல் நடுங்கி யொடிங்கி ஒதுங்கி ஓடுகின்றனையே இப்படிக்கு ஓடியும் என்னலாபம்பெறப்போகிறாய் இப்போது எடுத்திருக்கிற துன்பமானஉடல்போய்விட்டால்இன்னம் வேறே எந்தஉடலானாலும் வருமென்றெண்ணாமல் வெகுநாளைக்கு நிலைபெற்றிருக்கும்பொருளைக் காப்பதுபோல சாக்கிரதைப்பட்டனையேபயப்படாதே; உன்னைநான் கொல்லவரவில்லை, உபத்திரவப்படுத்தவில்லை, நீயோடாம னின்று உத்தரஞ் சொல்லென்று கேட்டார். அந்தப் புழு மாதவயோகீஸ்வரனை வணங்கி ஐயா! அநேகங்கோடி ஆன்மாக்கள் நிறைந்திருப்பதில் பெரிதும், சிறிதுமாயிருக்கிறது. பெரிய உடலுக்குமுன் சிறியஉடல் பயப்படவேண்டும். அப்படிக்கில்லாமற்போனால் உடனே பிராணனுக்கு முடிவுவரும். இந்தப்பயத்தினால் நடுங்கி உம்மைக் கண்டொடுங்கி அப்பாற் போனேன். கியானமில்லாத பூத உடலுக்குத் துக்கம் பொறுக்கமுடியாமலிருந்தாலும் இன்னமிருக்கவேணுமென்கிற இன்பமும், சுகமும், இயற்கையாயுண்டு. இறக்கும்போது, அவஸ்தை அருமை, துன்பமும் துயரமும், உபாதி இவையெல்லாமுண்டாம். எத்தனைவித வியாதியால் புழுனெளிந்து புண்ணழுகிஒருயோசனை நாறும்படி மெலிந்துஅவையவங் குறைந்துஅதுகெட்டதுபோவென்றுவெறுத்துவிடத்தக்க உடலானது இறவாமலிருப்பது சுகமென்று என் அல்ப புத்தியிற்றோன்றி இடந் தூர்ந்தேனென்றது. அம்மொழி வழியைக்கேட்ட பராசரகுமாரராகியவியாசர்மகிழ்ந்து கருணைகூர்ந்து சொன்னதாவது.

95. புழுவாகவிருந்த கிருமிஇராஜனாகி சொர்க்கலோகம் பெற்ற மகிமை கூறுகின்றது.

ஓ கிருமியே! அருமையான வார்த்தை யுரைத்தமையால் இனி எப்படிப்பட்ட பெரிய ஜெந்துக்களுனக்கெதிர்ப்பட்டாலும் அதனாலுனக்கு இடையூறில்லாம லிருக்கத்தக்கதாக வரங்கொடுத்தேன். இனி

நீ சுகம்பெறுவாயென்றார். அந்தப்புழுவானது, ஓ! மஹானுபாவரே தெய்வ முனிவருடனிருப்பது சுகமென்று தெரியாமல் சிற்றறிவுள்ள நான் சற்றுமுணராமல் தேகத்துடனிருப்பது செல்வமென்றுரைத்தேன். சுவாமி உடலுக்குத்தக்க உயிர், உயிருக்குத்தக்க உணர்வு, உணர்விற்குத்தக்க குலம், குலத்திற்குத் தக்க குணம், இந்தக்குணங்கொண்டிசைத்த என் மொழியைக்கொண்டு பகையற்று சுகம் பெற்றிருக்க வரங் கொடுத்தருள்வீர் ஆண்டவனே! எலும்பில்லாத ஆக்கை யெடுத்த என்னுடலுக்கு என்னசுகமிருக்கிறது தோன்றியபோதே துன்பமல்லாமல் இன்பமேது. அதுஎவ்வளவுமில்லை அப்படிக் கிருந்த போதிலும் நாமனுபவிக்கிற சுகபோகத்தைவிரும்பி இதுதானின்பசுகமென்று எண்ணிமகிழ்ந்து அநேக துன்பத்தில் அகப்பட்டழிந்தவன் அணுவத்தனை தேனைநக்கியுண்டு ஆனந்தமுற்றாற்போல நாம் பிரபஞ்ச வாழ்க்கையில் போராநந்தப் படுவதேயல்லாமல் ஊணிப்பார்க்கில் ஒன்றுமிராது. ஊனற்றுலர்ந்த என்பைக்கடித்துவந்த நாய்போல் வீணாகிய சுகமென் றெண்ணி ஆநந்தப்படுவது மாத்திரமே யல்லது சுகமாகிய அன்புண்டோவென்று வணக்கத்துடன் உபசரித்துக் கிருமிசொல்லியது. வியாசர் புழுவினிடத்தில் கிருபா நோக்கம்வைத்து ஓ! கிருமியே இந்தப் பொல்லாத உடலெடுத்து வருகிறதற்குப் பூர்வஜன்மத்தில் என்னபாவம் செய்தனையோ சொல்லென்று கேட்கவும். புழுவானது மகிழ்ந்து ஐயா, நான்தவமில்லாத தாழ்ந்த குலத்திற்பிறந்தவன். என் பெயர் சூத்திர சாதனி கொலை களவு கட் காமம் பொய் முதலிய பாதங்களெல்லாங் குடிவைத்துக் கொண்டவன். பெரியவர்களுக்குத் தொண்டுசெய்து அவர்களைக் கண்டு தரிசித்துக் காட்சிபெறாதவன். பொல்லாதவர்களுடன்பொருந்தித்திரிந்தவன். நல்லசாத்திரம்படிக்காத சண்டாளருறவைச் சம்பாதித்துக்கொள்பவன். தருமத்தைக்கனவிலும் நினையாதவன். சாந்தமொழியற்றவன். சண்டையொழிகற்றவன். மேன்மையான சகலாத்மாக்களையும் இரட்சிக்கப்பட்ட ஜகதீஸ்வரனைச் சற்றேனும் நினையாத தறிதலையன். அறிவுடனே நன்னெறி நில்லாதவன், பழிபாவங்களைச்செய்கிற பாவிகள் கூட்டத்திற் பங்குவைத் திருப்பவன். இப்படிப்பட்ட துட்டனை எங்கணும் கேட்டறியமாட்டீர்கள். நான் இப்படியெல்லாந் திரிந்திருந்தபோதிலும் என்னையீன்ற அன்னைக்குமாத்திரம் நல்லவனாய்த் தோத்திரம்புரிந்து, பாதபூசை பண்ணிகடுமொழிமறந்து கால்மேல் விழுந்து அவள் ஆசீர்வதிக்கச்சிறந்து பஞ்சமாபாதகக்கொடுமைத் தொழிலிற்பறந்து திரிந்த கொடியேன். இவ்வாறு சிலநாட் சென்றபின் காட்டுவழியில் ஒரு பேரறிவையுடைய பிரா

மணைத் தொடர்ந்து அவருக்குரியவனாகக் கலந்து வந்தனைவழிபாடு செய்து மார்க்க சகாயனானேன். அதற்காக அந்தக்கர்மதேகநீங்கி யமவாதனையிலோங்கி சிலநாள்நரகத்திற்றூங்கி இந்தப் புழுத்தேகந்தாங்கினேன். வேதப்பிராமணனாகிய வழியேசென்ற அதிதிக்கு ஒருநாள்வழிபட்டபலனும், தாயைப் பூசித்துச்சரணடைந்த பலனும், தங்களுடைய ஆசீர்வசன பலனும், பூர்வக்ஞானம் புகலவுந்தெரியவு முண்டாயிற்று. முன்செயதபாவங்களை எல்லாநினைத்துபதைபதைத்துதெய்வமேஎன்னபாவம் பண்ணினேனென்று என்னேரமும் பயந்துநடுங்கி ஒடுங்கி அடங்கிப்புழுவாய் முடங்கி புரண்டு உழலுகின்றேன் புண்ணியாத்மாவே என்று மிகவும் அகங்கலாய்த்துச் சொல்லக்கேட்டு, பிரம்மாவிற்குச்சமானமான வியாசருக்குப் பரிதாபமுண்டாகிப் பயப்படாதே உன் துயரமெல்லாம் பறந்தோடப்பண்ணுகிறேனென்று பட்சம் வைத்துரைத்து உனக்குவேண்டிய வரங்களுந் தருகிறேனென்று பிரியமுடன் புகன்றனர். உடனேபுழுவானது வேதவியாசருக்கு பிரதட்சண நமஸ்காரம்பண்ணி அடியேன் இந்தத் தேகம் விட்டு யோக்கியமான புனித ஞான தேகமெடுத்து கருமபூமியில் புண்ணியதருமங்களைச் செய்து கண்ணியமான கதிபெறத்தக்கதாக அனுக்கிரகம்பண்ணி ஆண்டருள வேண்டும் ஐயனே யென்றுவேண்டிக் கொண்டது. அப்போதே வியாசர் சிரக்கம்பஞ்செய்து ஓ கிருமியே! நீ இப்போதிருக்கின்ற புழுத்தேகத்தைவிட்டு புலைத்தேக மெடுத்து புலன்களைத் திருத்தி பயிற் புலங்களைப் பொருத்தி திருத்தி பூமியில்வருத்தி பின்பு சூத்திரனாகப் பிறந்து, சத்திய சவுசம் பத்தியும் பயின்று வைசியரி லுதித்து, வணக்கம் பொறுமை விரதம், நோன்பு, மாதவம், பயின்று தூக்கந்துயின்று க்ஷத்திரியப் பிறப்பிலுற்று, யாகாதி தருமம் கடன்முறை நீதி செலுத்தி புண்ணியப்பொருளே பொருளென மதித்து சோடசமகாதானமு நடத்திநற்கதி புகுவாயென்றும், இந்தச் சனனங்கள் தோறும் பூர்வக்ஞானந்தோன்றத் தக்கதென்றும் அருள்சுரந்து பொழிந்து மொழிந்த வேதவியாசருடைய திருவடிகளை முடிசூடிப்போற்றி ஏற்றித் தோத்தரித்து சுவாமி! அடியேன் கறைதெரியாமல் துக்கசாகரத்தில் மூழ்கிக் கிடந்த கடையவனைக் கைகொடுத் தெடுத்துக் கரையேற்றிவிட்ட கண்ணுதலே! கடைத்தேறினேன் கதியேறினேன் கவலையற்றேனென்று கண்ணீர் சொரிந்து புழுவாகிய புல்லுடலை மாற்றி, புலைக்குடியிற் பிறந்து, பூர்வக்ஞானத்துடன் வளர்ந்து நன்மைகளை நாடி உண்மை அறிவுடனுறவாடி நல்வினைகூடி நலிந்து கண்மூடி மீண்டு சற்சூத்திரன் வீட்டிற்பிறந்து ஜன்மஞானத்துடன் சிறந்து, நற்றவமி

மைழத்திருந்து மறுபடியும் வைசிய குலத்திலுதித்துமஹாஞானப்பிர க்கியாதியாய் வளர்ந்து குலமுறைமை தெரிந்து வாணிபம் புரிந்து அளவற்றதிரவியஞ் செறிந்து, தருமதானம் பண்ணி கல்விகற்ற அறிவுள்ளபேருக்கு தாட்சிஇல்லாமற் றுட்டியாய்க் கொடுத்து அன்னதானஞ்செய்து அருமையான அவ்வுடலை மாற்றி அரசனுகப்பிறந்து,இராஜமுறைமைப்படிக்கு சதுர்விதஉபாயம் தனுர்வேதம் சாஸ்திரமும் படித்து தவமிழைத்து வரங்கள்பெற்று உரங்களுற்று கரங்குவித்து பெரியோரைச் சேவித்து அழகிய பூமிதேவியாருக்குப் பழகிய கிரீடாதிபதியாய் உலகமெல்லாம்புகழ உரியபெரியோர் மகிழ,வேதப்பிராமணர் இந்தவேந்தனைப்போல் சாந்தகுணஞ்ய் வாழ்ந்தவர் இதுவரையிலுமில்லை மாந்தாதா இவனே யென்று வாழ்த்த இராச்சிய பரிபாலனம்பண்ணி வருகின்ற நாளிலொருநாள்,துதிக்கையுடன் மதத்த கதித்த மும்மதம்பொழியும் யானையின்பேரில் வெண்குடைகவிக்க விருதுகள்பிடிக்க சாமரம்போட சரசிகள்பாட வாகுவலயம் பிரகாசிக்க முத்தாரம் இரத்தினாரம் கொத்தாரம் வித்தாரம் ஜொலிக்க,சூரியபிம்பமகுடரத்தினாபரணங்கள் துலங்க, ஆலவட்டம் மயிற் பீலி குஞ்சம் கொடிமுதலான இராஜசின்னங்களையுடைய கூட்டத்துடன் நால்வகைச்சேனை அறுவகைப்படை புடை கவிந்துவர மேகம் முழக்கம் பேரிபாளம் முதலிய வாத்தியம் அதிர அஷ்டதிக்கும் பெதிர இவ்வாசனுடைய புகழ் உலகமெல்லாம் பரவி வேரூன்றிப் படர இப்படிப்பட்ட ஆடம்பர ஓலக்கத்துடன் கட்டியர் பட்டோலை படிக்க மன்னனுடைய கீர்த்தியைக் கொண்டாடும்படிக்கு வாகனமேலாகிய வேதியர் கூட்டத்துடன் வேதவியாசருடைய ஆசிரமத்திற்கு வந்து பட்டத்துயானை விட்டிழிந்து மார்பிலுந் தோளிலும் சிரத்திலும் கரத்திலும் அணிந்த ஆரகேயூர வீர மதாணிப் பதக்கங்கள் அசைந்தாடச்சென்று வேதவியாசனைக்கண்டு பிரதட்சண நமஸ்காரஞ்செய்து பொன்னின் பூவாலும் மணிகளின் மலராலும் அருச்சனைபுரிந்து, பாதகாணிக்கை தட்சணைசொரிந்து அறுகுஅட்சதை தருப்பைமுதலியபுனிதவஸ்துக்களினுல் சோடசமகா பூசையும் பண்ணி,எக்காலும் இதயம் விட்டகலாததுபோல் முக்காலுந் தொழுது, முறை இட்டழுது, தேவரீருடைய அருட்கண்பார்வை இந்த பெருஞ்செல்வத்திற்கொண்டுவந்துவிட்டதென்று கூச்சலிட்டுத் துதித்து என்னைத் தடுத்தாட்கொண்ட இறைவனே என் குருமணியே! என் கண்மணியே, இன்பக்கடலே இனிய அமுதமே, இதயத்துணர்வே, இன்னிலச்சுகமே, யென்று மாறாத அன்பினுடன் பேறுகவணங்கி பின்னும் பின்னும் தோத்திரம்

பண்ணி என்னையாண்ட என்னாண்டவரே ! என்கதி இப்படியாயிற்று, புழுச் சென்மம்போயிற்று தேவரீர் என்பங்கில் முழுமைக்கும் கடாட்சம் வைத்து இனிமேற் பிறவி எடாமலிருப்பதற்கு ஹேதுசெய்யவேண்டும், இருள்போக்கிய ஒளியே யென்றிறைந்து வேண்டி விரும்பினான். வேதவியாசருக்குச்சந்தோஷஞ் ஜனித்து உள்ளங்களித்து உடலம் பூரித்து இதயமலர்ந்து ஆசீர்வசனம் புகன்று பர்ணசாலைக்குட்புகுந்து ஏகாந்தமாயிருந்து ஓ அரசனே, பரிமள மலர்மாலை புனைந்த பார்த்திபனே, இனிமேற் பிறவிவாராது. ஒருவேளை வந்தால் இறவாமலிருப்பதற்கு உபாயஞ் சொல்லுகிறேன் வேதரகசியம் விளம்புவதியாதெனில்.

பிராமணர் பொருட்டானாலும் பசுக்கள் நிமித்தியத்தினாலும் சத்துருவின் யுத்தமுனையினாலும் ஜீவனைவிட்டானாகில் அவனே நற்சனனமாகும். அதுதான் புருட சென்மத்தில் பிரதானநன்மை. இந்தவழியறிந்து மேற்சொன்ன மூன்றுவிதத்தில் ஒருவிதத்திலே யானாலும் உயிருதவி செய்வானாகில் பிராமணகுலத்திற்பிறந்து உடனே சாஸ்திரவேத சம்பன்னனாகிய பிரம்மரிஷியாய் முக்காலமுணர்ந்த முதல்வனாய் எக்காலமும் எம்மைப்போலிருப்பான். ஆதலால் நீயும் இவ்வாறனுட்டித்து வேதவேதியர் குலத்திற் பிறந்து மேன்மை பெறுவாயென்றுமந்திரானுக்கிரகம்பண்ணினார். அப்போது தபசிகள் ரிஷிகள் முதலிய முனிவர்களிலுமுயர்ந்த தாளாண்மைபெற்ற சகல சாஸ்திரமுங்கற்ற வேதவியாசமஹானுபாவாரேயென்று நமஸ்கரித்துபாதத்தில் விழுந்துபணிந்து, கடைத்தேறினேனென்று மகாமந்திரோபதேசத்தை உறுதியாய்க்கொண்டு சகலதேவதைகளுக்கும் அமுதகிரணக்கலையைகொடுத்து ஆதரிக்குஞ்சந்திரனைப்போன்றகிருபைவாய்ந்தவியாசரைவிட்டுநீங்கி தன்பட்டணத்திற்குப்போய் வியாசருரைத்த மூன்றுவிதத்தில் எந்தவிதத்திலாவது உயிரையொழிக்கவேண்டுமென்று எண்ணிக்கொண்டிருக்கும்போது பிரபலயுத்தம்நேரிட்டது. அந்தப்போர்முகத்திற் போய்நின்று சவுரிய தயிரிய பராக்கிரமத்துடன் சண்டைசெய்து நல்லசுத்தவீரன்கையாலிறந்தனன். அப்பால் பிராமணகுலத்திற் பிறந்து மகாரிஷியாய்ச்சிறந்து அளவிறந்த வேதாகம புராணந்தெரிந்துநெடுங்காலந் தவமிருந்து மாயைநீங்கியதூய்மையாகியபுனிதமஹாத்துவாய்த்தேவேந்திரனுக்குச் சிநேகமாய்த்தேவர்களாலும் மற்றயாவர்களாலும் கடவுளர் மூவர்களாலும் அவ்வியேயமஹாரிஷியென்கிற அரும்பெயர்பெற்று யாகாதிகளெல்லாமியற்றி நீலமேனியாகியநெடுமாலுக்குச் சமானரென வாதராயணரின் மலர்ப்பதம் வணங்கி வா

ழ்த்திப்போற்றி வானவர் அர்ச்சனைபுரியும் வரிசையடைந்து மஹரி ரிஷி மூர்த்திகளில் ஒருவராக வாசம்பண்ணிக்கொண்டிருக்கின்றார். (ஆகையால்) சத்துருக்களின் பேரில்சண்டைக்குச்சென்றுவெற்றிபெறாமல் வீரங்காட்டி இறந்தவர்கள் அவர்களியாவரும் பூமியிற் பிறவாநெறிபெற்று என்றைக்கு மொன்றாகியசொர்க்கத்தில் சுகமே இருக்கின்றார்கள். இதற்குமேலாகிய பேறென்னவுண்டென்று யுத்தமுகத்தில் வெற்றிபெற்றுயர்ந்த வீஷ்டுமெ ரியம்பினார். விதாணனுன தருமராஜன் புகழ்ந்து மகிழ்ந்து ஐயா இப்பூமியில் கல்வி கற்றவன் தவமிருந்தவன், தானங்கொடுத்தவன் இம்மூவரில் யாவருயர்ந்தவர்கள். அம்மூன்றுகாரியத்தில் சிறந்ததெது சொல்லவேண்டுமென்று கேட்க; வீஷ்டுமர் பேசத்தொடங்கினார்.

96. பூமியில் கல்விகற்றவர், தவம்புரிந்தவர், தானங் கொடுத்தவர் இம்மூவரில் யாவர் உயர்ந்தவர்கள் என்ற பிரசினைக்கு உத்தரம்.

அப்பா குவலைத்தாரோய் முற்காலத்தில் அக்கிரகண்ணியனுகிய மயித்திரேய மஹாமுனியானவர் வேதவியாசரை வேண்டித் தொழுது இப்போது நீகேட்ட சங்கையைக்கேட்டார். அவருக்கு வேதவியாசர் விளம்பியிருக்கின்றார். அதேபிரகாரம் நான்சொல்லுகிறேனென்று கங்காபுத்திரன் கரைக்கத்தொடங்கினார். ஒருவன் சகலகல்வி கற்பதிலும் தவம்புரிதலும், தானங்கொடுப்பதிலும் தாரதன்மைய மிகவுமுண்டு. அதெவ்வாறென்னில் அதிகப் பிரயாசைப்பட்டு வித்தை கற்கவேண்டும். தவமும் அருமையாய்ச் செய்யவேண்டும் பாபமில்லாமற் சம்பாதித்தபொருளை தானங் கொடுக்கவேண்டும். இவ்வாறுசெய்தால் கல்வியைக்கற்று அருந்தவமிழைத்து கடைத்தேறச்செய்யும் பெரும்பயனைப் பெறலாகும். சகலதானங்களிலும் உத்கிருஷ்டமானதானம் அன்னதானம். அந்த தானங்கொடுத்தவனும் வாங்கியுண்டவனும் திருப்தி யடையவேணும் இருவரிலொருவருக்கு மனக்குறைவிருக்குமாகில் கொடுத்துப்பிரயோசனமிராது. இந்தத் தானத்தில், ஜீவரட்சணை இருக்கிறபடியால் உத்தமமென் றுரைப்பர். மற்றத்தானங்களும் பெரிதென்பதற்கு மாறில்லை. ஆனால் எல்லாவற்றிற்கும் உலகமெச்சக் கொடுக்காமல் உண்மைஞான ஆன்

மாமஜிழ ஒருமைப்பட்டுக்கொடுத்தால் வாங்கினபேரும் வழங்கின பேரும் பதம்பெறுவார்கள், வையகத்தில் ஐயமில்லாத பிரையாசை பட்டு கல்வி கற்றும் அதற்குத்தக்க தவமிழைமயாவிட்டாலும் தவமி ருந்தும் மனமொடுங்காவிட்டாலும் பயன்படாவாம். அதைக்கே ட்ட பாண்டுகுமாரன் வேண்டிப்பணிந்து, ஆண்டவனே நான் காண் டற்கரிய பொருளெல்லாங் கரைத்தீர். இவன்பெண்டுகள் செய்யவே ண்டிய கருமங்களென்ன அவர்க ளெந்தவிதத்திற் கதிபெறுவார்கள். இதைச் சொல்லவேண்டும் இறைவனே யென்றேற்றினன் வீஷ்டுமர் சொல்லத்தொடங்கினர்.

97. ஸ்திரீகள் செய்யுங்கடைமைகள் யாது! அவர்கள் எந்த விதத்தில் கதிபெறுவார்கள் என்ற பிரசினைக்கு உத்தரம்.

கேளும் தருமநந்தனு! தெய்வலோக கற்பக விருக்ஷத்தி நீழ லில்விநோத வேடிக்கையாக பாக்கியப்பொக்கிஷமாக வீற்றிருந்த சாந்திலியென்னும் பதிவிரதா ஸ்திரீயானவள், பூமியிற்சிறந்த பொன் மலைபக்கத்தில்வாசம்பண்ணுங் கைகேசியென்கிறகற்புடையஸ்திரீயா னவளைக்காண கைகேசி, சாந்திலியினுடைய நன்னெறியை உட்கொ ண்டு முன்னேடிவணங்கி அம்மா நீங்கள் புண்ணியலோகம்பெற்று கண்ணியமா யிருப்பது என்னத்தினுலே அந்தவிபரத்தை எனக்குச் சொல்லவேண்டுமென்று விரும்பினுள். அதற்குச் சாந்திலி கைகேசி யைநோக்கிச் சொல்லுகின்றுள். எனக்கு இப்படிப்பட்ட கதி எப்படி வந்ததென்றுல், பதிவிரதா தன்மத்தினுல் வந்தது யென்ன அப்படிப் பட்ட மகத்துவமுள்ள பதிவிரதாதருமத்தின் வரலாறு எப்படிஎன்று கேட்க சாந்திலியென்பவள் சொல்லலுற்றுள்.

மாமியாருக்கும், மாமனுருக்கும் வழிப்பட்டு அன்புபாராட்டி நாளுக்குநாள் அதிகமரியாதை உபசாரத்துடனியற்றி அவர்கள் ஒரு பொருளைக் கேட்குமுன்னமே விரும்பிக்கொடுத்து அவர்களுடைய பாதங்களைவிளக்கி, அறுகு, அட்சதை, புட்பம் முதலியவற்றுல் பூசைசெய்து அர்ச்சித்து தூபங்காட்டி பிரதக்ஷண நமஸ்காரம்பண் ணி ஆசீர்வாதம்பெற்று பாதங்களிற்சூட்டிய அட்சதை புட்பங்களை அவர்கள்கையால் சிரசின்மே லணிந்து வணக்கம் இணக்கமாய் குண

க்கேடின்றி மரியாதையுடன் பிணக்கமில்லாமல் சொன்னபடிகேட்டு உண்டிமுதலியதும் வேண்டியமட்டும் பரிந்தளித்து கால் கைமேல் முதலியபக்கங்களில் நேரிட்ட வலி அகலப்பிடித்து வஸ்திரங்கள் அழுக்கில்லாமலளித்து தாம்பூலம்நருக்கிச் சதைத்தீந்து அரித்த முதுகு முதலிய வருத்தங்களைந்து அவர்கள் வயற்றிற்பிறந்த பெண்போல்வாஞ்சித்துஎதிர்த்து உத்தரம்பேசாமல் பொறுத்துப்புகழ்ந்து புறங்கூறுவிரதம் பொருந்தியிருந்தேன். மேலும் சகலபுவன கர்த்தாவிற்கும் தென்புலத்தாருக்கும் விருந்துவந்த அதிதிகளுக்கும்சில்லறையாகிய இல்லறதேவதைகளுக்கும்பூசை, நைவேத்தியம், முதலியஉபசாரம்பண்ணி பலபண்டபதார்த்தங்களும் பலபட்சண விதங்களும் பலபழவர்க்கங்களும் அறுசுவை யுண்டியுடனளித்து, முகமலர்ந்து இனிமையுரைத்து, அகமகிழ்ந்தேன். வீட்டுவேலைக்கு மிஞ்சினவேலையில்லை, இதுவே எனக்கு பிரதானமென்றெண்ணி தேகவருத்தம், சோம்பல், தூக்கம், இளைப்பு, ஆயாசம், இன்பம், துன்பம், எதுவும்பாராமல் இரவும்பகலும் ஏமாறாமல் என் வீட்டுவேலையை இன்னொருத்தர் கையிற்கொடாமல் என்னால் இயன்றமாத்திரஞ் செய்வேன். வீடு வாசல், திண்ணை, தெருப்புறமுதலிய இடங்களில் எச்சில், துப்பல், ஈளை, தூசி, தும்பு, குப்பை, கூளமிராமல் விளக்கி, பசுவின்சாணமிட்டு, சமமாய் மெழுகி செங்காவியுடன் மொக்கிட்டு வாசற்காலுக்கு விபூதி தொட்டு குங்குமப்பொட்டிட்டு, பூமாலைகோத்திட்டு, மாவிலை ஆரமிட்டு, லட்மீகரமா இருப்பதைப் பார்த்தவர் யாவரும் க்ஷேத்திரமாயிருக்கிறதென்று சொல்லும்படிக்குப் பரிசுத்தப்படுத்துவேன். இது நிற்க வீண்வார்த்தைகளும் பிறர்சொற்களும் பேசேன், விருதாமனிதருடன் உறவாடேன், காலை நீட்டிக்கொண்டு கதை காரணம் பேசி, பள்ளமாங்குழியாடி வருகிறவர்களையும் போகிறவர்களையும் உட்காரவைத்துக்கொண்டு விண்ணாரீட்டி இடம்பங்காட்டி சில்லரைச் சரித்திரத்தைக்கேட்டு நீட்டும்பாட்டுக்கு வீட்டிலுள்ள, அரிசி, மிளகு, முளகாய், உப்பு, புளி, சாறு, சோறு, துணி மணிகளைக்கொடுத்து, சிரித்து விளையாடி ஓடியமான வார்த்தைகளாடி ஒருகொண்டை, சொருகு கொண்டைபோட்டு, மலர்மாலைசூடி, அந்தகொண்டை சரிய தன்னொத்தபெண்டுகள் தோளின்பேரில்சாய்ந்து உரிய ஆண்மக்களில்லாதபோது ஆடிப்பாடி அலங்கோலமாய் கைமுதலியதும் புகையிலை, பாக்கு, வெற்றிலையேற்றி, ஒருவருக்கொருவர்மாற்றி ஏமாற்றிக் கொண்டுஊர்வார்த்தை, நாட்டுப்பேச்சு, ஒருவனைவிட்டொருவனைத்தொடரும் ஏச்சு. இவைகளைப் பேசிக்கொண்டு தூக்

கத்தினால் பெருமூச்சுவிட்டு விட்டுவேலையை வேலைக்காரர் வேலைக்காரிகள், வெள்ளாட்டிகள், வெறுவியர், இவர்களைப் பார்க்கவும் சமைக்கவும்சொல்லி,சுசி இல்லாமல் பண்டம் போக்கு வரவு தெரியாமல் கவனம்வைக்காமல் புருடன்முதலியவர்கள் வந்தால், அடிவேலைக்காரி; சோறுவட்டியென்றுசொல்லி அண்டை அசலுக்குப்போகிற பெண்டுகளாகிய வண்டர்களைப்போல்: என்னுயிரொழிந்தாலும் உடலழிந்தாலும் இருக்காலும், இப்படிக்கெல்லாம் நான் நடக்கமாட்டேன். ஓ! கைகேசியே எனக்குத் தெய்வஸ்தலம், தேவாதிகளுலகம், குருவாச்சிரமம், மோட்சவீடு இதெல்லாம் நானிருக்குங்குடிசைதான். இதைவிட வேறேஇடம் போயறியேன்.சர்வேஸ்வரன் நம்மை இல்லறமங்கையாக ஏற்படுத்தி வீடு தேடிவந்த அதிதி, அப்பியாகதி, பிதுர்க்கள் இவர்களுக்கு உபசரிப்பதல்லாமலும் பர்த்தாவிற்கு ஊழியம் பணிவிடைபுரிந்து,இல்வாழ்க்கையிலிருந்து கடைத்தேறென்றும் அப்பால், மேலானமோட்சவீட்டை யளிப்பதற்கு அடையாளமல்லவோ இந்தக்குடிசைவீட்டைக்கொடுத்திருக்கிறுரென்றும்,உன்னிநமக்கு கோவில், ஸ்தலம், குளம், தர்மம் இதுவெல்லாம வீட்டைச் சுத்திசெய்து ஆசாரமாய் வைத்திருந்தால் அதுவே சகலதர்மமும் தவமுமென்றெண்ணி சந்தோஷித்திருந்தேன். நான் கலியாணஞ் செய்துகொண்டு மாமியார்வீட்டிற்கு வந்தபிற்பாடு தெருவாசற்படியிற் போய் நின்றறியேன், என்புருடன் முதலிய குடும்பந்தவிர அயலார் ஆண்பெண்ணுடன் நகைத்துப் பேசி இருக்கமாட்டேன். உதையத்திற்கு முன்னெழுந்து மல சலாதி கழித்து தந்தசுத்தி செய்து மஞ்சள்பொட்டிட்டு தெருவாசல் வீடெல்லாந் திருத்திப்பெருக்கி மெழுகி மொக்கிட்டு பாத்திரஞ் சுத்திபண்ணிவைத்து விழுப்பாகிய பாண்டங்களைவிலக்கி ஸ்நானஞ்செய்து நித்தியவிதி நேமஞ்செய்துஈஸ்வரபூசை முடித்து சூரிய நமஸ்காரஞ்செய்து இஷ்டதெய்வமாகிய நாயகனது படுக்கைவீட்டிற்புகுந்து கணவனதுநித்திரைநீக்கி அவருக்குநடத்த வேண்டிய உபசாரங்களெல்லாங்குறைவில்லாமல் நிறைவாகச்செய்து அவரையனுஷ்டித்த உடனே,பத்திர புட்பம் நீர் முதலிய அறுகு அட்சதை தூபதீபம்,நைவேத்தியம்;எடுத்துப்போய்மாமிமாமனை எழுப்பி அவர்களுக் கிருமல உபாதிகடத்தி பல்விளக்கவைத்து, ஆசனமமைத்து அதன்மேலிருத்தி நான் ஜலம் விடவும் என்புருடன் அவர்கள் பாதத்தைத் துலக்கி பத்திரபுட்பஞ்சாற்றவும் நான் தூபதீபமேற்றவுங் நைவேத்தியம்வைத்து நீர்மாற்றவும் நாங்களிருவரும் போற்றவும் அவர்களெங்களை வாழ்த்தவும் ஆனபின்பு, ஈசனுல் நமக்குக்

கிடைத்திருக்கின்ற வஸ்துவைப் பக்குவப்படுத்தி அவர்கள் வாய்க்கு உருசியாய்க் கொடுத்துவிட்டு, பிற்பாடு கணவனுக்குப் போசனமிட்டு தாம்பூலந்தந்து அவர்வெளியே போகிறவரைக்கும் அவரைவிட்டு நீங்காமல் ஆலவட்ட முதலிய ஆதரணை பண்ணிக்கொண்டிருந்து அவர் அநுவஷ் காரியத்திற்குப்போன அப்போதே வந்திருக்கின்ற அதிதிகளுக்குப் பூசைபுரிந்து பணிவிடையாற்றி பாலொடு தயிர், பாயசம், பொரியல் நமக்குண்டான பற்பலவிதபண்டங்களும் வஞ்சனை நினையாமல் வைத்து உண்பித்து,பின்புபசுக்கள் முதலியவற்றைக் குளிர்ப்பாட்டி குங்குமமிட்டு நீருடன்புல்லருத்தி ஆலயங்களுக்கு அபிஷேகப்பால் வார்த்துவிட்டு, பிறகுஉறவினருக்குபசரித்து நானும் புசித்து வேலைக்காரரும் என்னைப்போல் சாப்பிடும்படியாக விதரணையாய் விசாரித்து, வீட்டு வேலைகளெல்லா நிதானித்து எங்கெந்த சாமான்களில்லையோ அவைகளை ஆண்பிள்ளைக்கு அறிவிக்காமற் சேகரித்து, வருவார் போவார் கேட்டகேள்விக்குத்தகுந்த வார்த்தையுரைத்து வம்பு வசனங்களுக் கிடங்கொடுக்காமல் மறுத்து அரைக்கண மேனுஞ் சோம்பலில்லாம லறுத்து, எந்தவிதத்தில் விருப்பு வந்தாலும் உடனே ஆகுஸ்தானம் பண்ணுவேன். அமுதுக்குவந்த பெரியோர்களைக் கண்டு அகலலாமென்று சொல்லாமல் அப்போதே சமையற் செய்து அரைநொடிக்குள் பசியாற்றிப் போற்றுவேன் எத்தனைபேர் அமுதுக்குவந்தாலும சற்றேனு மனமிளைக்கேன். எனக்கும் என்றுணைவனுக்கும் வேணுமென்று ஒருபதார்த்தமாகிலு மறைத்து வைக்காமல் எதார்த்தமாய்ப் படைப்பேன். எப்படிப்பட்ட உயர்ந்த அருமையுள்ள பழமுதலிய வஸ்துக்களாகிலும் மைப்படியுங்கண்டத்தன் பருக்கு வழங்குவேன்; என்மணவாளனே தெய்வமென்று கனவிலு மறவாமல் வழிபடுவேன். அவருடைய சொல்லுக்கு மல்லுக்கட்டி வார்த்தையாடேன். அவரது தமபி தமையன், மாமன் மாமி முதலிய சுற்றத்தாரும் மற்ற ரத்தத்தாரும் இனங்களும் பற்பல ஜனங்களும் நன்மை கொண்டாடத்தக்கதாயிருப்பேன். அவர்களைத் தாட்சி இல்லாமல் விசாரிப்பேன் முன்முறணி பின்பொறணி கூறேன். இவ்விடத்தியவார்க்குஅவ்விடத்திலும்,அவ்விடத்தியவசனம் இவ்விடத்திலுமாகக் கோள்சொல்லி கலகம்விளைக்கேன். பெற்றாருக்கும் பிறந்தாருக்கும் சண்டை யுண்டாக்கேன். பொறாமைப்படேன். பொய்ப்பேசேன் வீணாசைகொள்ளேன் வீட்டுடைமை ஒருவருக்கு வீணிற்கொடுக்கமாட்டேன். செல்விருந்து உபசரித்து வருவிருந்து பார்த்து ஜீவன்முத்தரென்று சிந்தித்துக்கொண்டிருப்பேன் .சொல்லுவார்வார்த்தைகளைக்

கேட்டு மல்லுக்குப்போகேன்.என்சாமிக்கும் மாமிக்கும் மாமனுக்கு ம் வேண்டியபதார்த்தங்களை விரும்பித் தேடிக்கொணர்ந்து பாகமாகச் சமைத்துபக்குவமாகப்பகுக்கும்போது ருசியான கறி காய்களை வாய் மலர்ந்துகேட்குமுன்னமே தாய்பரிந்தூட்டுந்தன்மைபோலளிப்பேன். என் நாயகனுக்கு ஊழியஞ்செய்கிற பணிவிடையாளரை பட்சமுள்ள பிள்ளைபோல் ரட்சிப்பேன். கணவன் வீடுவிட்டு வேலை நிமித்தம் வேறேரூருக்குப் போயிருந்தால் அவர்வருகிற பரியந்தம் சந்தன புஷ்ப தாம்பூல பரிமளாதிமஞ்சள் குங்குமம் பொருந்தேன்.தலைசீவிக்கொண்டை இட்டுக்கொள்ளமாட்டேன். பூஷணாலங்கிர்தம் பொருந்தேன். நல்லவஸ்திர மூடுக்கேன். ஊருக்குப்போனவர் வந்தபிறகு இத்தியாதி அலங்காரத்துடன் எதிர் நின்று அவர்கண்டு கண் களிக்கக் கலந்து இன்பம் பெறுவேன்:உள்ளூரில்வெளியேபோயிருந்துவீட்டிற்குவரும் என்காதலனைக் காணுமளவும்நான் முந்திச் சாப்பிட மாட்டேன். இலையில் அன்னத்தைப்படைத்து விட்டு உப்பில்லை ஊறுகாயில்லை மிளகு மிளகாய் புளி அரிசி கட்டை விறட்டி ஒன்றுமில்லையென்று முன்னின்று மௌனியைப்பிடிக்கிறதுபோற் சொல்லமாட்டேன்.தாம் பூலந்தரித்துக்கொண்ட சமயம் பார்த்து நான்கு நாளைக்கு சாமக்கிரியை இருக்கும்போதே முன்னாடிச் சொல்லி சாக்கிரதைப்படுத்திக் கொள்வேன்.ஆண்புடையானுடைய சம்பாத்தியத்திற்குத் தக்கசிலவு தகுந்தபடி செய்வேன். தாய்வீட்டுப்பட்சம்வைத்து சம்பாத்திய முடிப்புக்கட்டி அடிக்கடி தாய்மனைக்கேகேன். வாழ்மனைப்பண்டந் தாய் மனைக்கேகில் தாய்மனை பாழ்மனையாகுமென்கிற வாக்கியமறிவேன். நாயகன்மேல் நாட்டியகண்ணை மற்றொருவர்மேல் நாட்டேன். பெரியவர்களுக்குப் பேரன்புடன் பூசைபுரிந்து போசனமிடுவேன். வீட்டுப் பிரத்தியேகம்வந்தால் ஒருவேளை யன்னம் உண்டுகொண்டிருப்பேன். மூன்றும்நாள் ஸ்நானம்பண்ணிபுறம்பிலிருந்துநான்காநாள் சுத்தோதகஸ்நானம்பண்ணி ஐந்தாநாள் எண்ணெயிட்டு முழுகி கோசல கோமயத்தால் சுத்திபண்ணி பஞ்சகவ்வியங் கூட்டியுண்டு அப்பால் புருடனுடன் பேசுவேன். அவர்முகத்தில்விழிப்பேன். மாதருதுவான நான்குநாளும் மகிழ்நன் முகத்தில் விழித்தாலும் பேசினாலும் மங்கிலியத்திற்குக்குறைவுவரும். வீட்டு தூரஸ்திரீயின் காற்றும் நிழலும் நாயகன்முதலிய நல்லோர்கள் பேரிற் படலாகாது. பட்டால்புருடனுக்கு ஆயுசுகுன்றிப்போம் அப்படியே பெரியவர்கள் செப்பியிருக்கிறார்கள் வீடுவிலக்கமான காலத்தில் வாக்கினாற்பேசாமல் கைச்சாடை காட்டி வேண்டியகாரியம் பெற்றுக்கொள்வேன். ஆறுமுதலிய குளங்

களானால் ஒருவரைத் தண்ணீர்மொண்டுவரச் சொல்லிக்கரைமேலிரு ந்து ஸ்நானம்பண்ணியபிற்பாடு கோசல கோமியசுத்தியால் சுத்தி யிறங்கி மஹாத்துவக் கங்காநதியை நினைத்து மூழ்குவேன். ஒருவர் முகத்திலும் விழியாமல் நாயகன் முகத்தில் விழித்தால் ஆயுசுவிர்த்தி யும் ஐஸ்வரியமும் உண்டாம். அருமையான பிள்ளைகளையும் பெற்றுக் கொள்ளலாம். ஒருவேளை புருடன் ஊரிலில்லாவிட்டால் நாயகனுடை டைய ரூபத்தை மனதினினைத்து நாட்டி சந்திரகலையோட்டி சூரியனை ப்பார்த்துத் தரிசிக்கவேண்டும். அப்பால் பூசாவிதி முதலிய புருடன் பணிவிடைகளிலிருந்து போதுபோக்குவேன். வயிற்றிற்பிறந்தபிள்ளை தன்கூடப்பிறந்த சகோதரனானாலும் ஏழு வயதிற்கு மேற்பட்டவரை முகாலம்பனம் பண்ணிப்பேசமாட்டேன். மூந்தானையை அக்கினிக் கோட்டைக் காவலாய்க்கொண்டு முழுமதி ஆவலினால் கற்புடைமை யாகிய பொக்கிஷத்தைக் காப்பேன். பதிவிரதாபூஷணமிருந்தால் திரி மூர்த்திகளும் மதித்துத் துதிப்பார்கள். ஓமைகேசியே! புருடன் தன்னு டையசம்பாத்தியத்தைப் பெண்சாதியிடத்திற் கொடுத்து இருவருங் கலந்து ஒருமனதாய்ப்பொருந்திசமூகவிசாரநடத்திவரும்போது அந்த ஸ்திரீயானவள் இப்படிப்பட்ட கணவனை தெய்வமென் றெண்ணாமல் வஞ்சிக்கலாகாது. இவருக்குமிஞ்சின தெய்வமில்லை மாதாபிதா குரு தெய்வம் பிரபஞ்சவாழ்க்கை எல்லாம் புருஷனே. ஈஸ்வரன் பேத மையாகிய பெண்களைச் சிருஷ்டித்ததற்குக் காரணமென்னவெனில் மணவாளராகிய கணவருக்குப்பணிவிடை செய்யவும் உலக விருத்தி சந்ததி உற்பத்தியாகவுமேற்படுத்தியது. பின்னும் இல்லற தருமத் திற்கும் தென்புலத்தார் தெய்வம் விருந்து ஒக்கல் இவ்வைந்துடன் அதிதிபூசை அக்கினி ஹோம நடத்துதற்கு நம்மையுதவிக்குண்டாக் கினர். எந்தவேளையும் காமக்கலவியும் ஆபரணவஸ்திர அலங்காரங்க ளும் மேனிமினுக்குதலும் பண்ணிக்கொண்டு தாம்பூலந்தரித்து வீண் ணாணம்பேசி வேடிக்கையாயிருப்பதற்கும் நம்மை ஏற்படுத்தியதல்ல. ஒருவேளை புருடருக்குக் காமம் பிரதானமாய் விருப்பமிருந்து ஆசை ப்பட்டு ஸ்திரீயுடன் சாடை சரசம்பேசி விளையாடினால் அவர்மனது எந்தமட்டும்விருப்பமோ அந்தமட்டும் ஏகபாவமாய்ப் பொருந்தி ஒரு தலைக்காம மில்லாமல் சம்போகமாக இடங்கொடுத்து இருவரும் பர வசமடைந்து கை கால் வாய் சுத்திசெய்து தாகமருந்தி தாம்பூலம் பொருந்தி தடையில்லா நித்திரைபோய், உதயத்திலெழுந்து ஸ்நான முதலிய விதிமுறை புரிந்துவிட்டு வேலையைப் பார்த்து சீக்கிரஞ் ச மையற்செய்து, காதலனுக்கு அருத்திவைக்கவேண்டும். இரவில் சர

சமாயிருந்ததை நினைத்து இறுமாப்படைந்து மரியாதை தப்பி இன்ப ரசத்தைப்போக்கடித்துக் கொள்ளலாகாது. புருஷருக்குக் காம இச்சை இல்லாதிருந்தால் ஸ்திரீயானவள் மேல்விழுந்து போராடப்படாது சொர்ப்பனத்திலும் காமத்தைக் கருதலாகாது.

அப்படிக்கில்லாமல் அறத்தின் வழி நில்லாமல் நாயகனைமதியாமல் நால்வரு நகைப்பாரென்றெண்ணுமல் மனம்போன வழிவிட்டு மகிழ்நனை வஞ்சித்து மனக்காவல் முன்தானைக்காவல் வம்ஸாசாரக் காவல் இவைகளை மறந்து நல்லவள் போலிருந்து நடைநொடிபாவனை புரிந்து இரகசியத்தில் சோரத்துவம் பண்ணுவாளாகில் மகாகொடிய பாவியாவாள். துட்டநடத்தையுள்ள கெட்டவளாவாள், பகலை இருளென்ற பழிகாரியாவாள். அவளிருக்கும் வீடு யாளியிருக்குங்காடு. இருட்டுநிலம் திருட்டுக்குலம் களர்ப்பூமி அழற்பாறை கடுவிடம் எட்டிகசப்பு கல்லாக்கயவர்மனம் இதுகளுக்குச் சமானம். தனக்கு அன்ன வஸ்திரா பரணங்கொடுத்து மும்மூர்த்திகள் வெகுசனங்கள் புரோகிதர் அக்கினி கங்கை நவதானியம், ஆல், அரசு, முருக்கு, இம்மூன்ருகிய பச்சைமரம், திருவிளக்கு, தாம்பூலம், மஞ்சள், அட்சதை, இதுகள் முதலியதுஞ்சாட்சியாய் தாய் தந்தை நீர்வார்த்துக் கொடுக்க அதைப்பிரமாணமாகப் பெற்றுக்கொண்டு, அவள்கழுத்தில்தான் நீஎன்னும் பொருளைத் தரும்படியான, தாலி என்னும் பெயருடையமுத்திரையைத் தரித்து கைகொடுத்து, அஷ்டமங்கல மெடுப்பித்து அக்கினியை வலம்வந்து பொரிவாரிசசொரிந்து பூசுரரைப்பணிந்து அம்மை, அரன், சுப்பிரமணியரைத் துதித்து அம்மி மிதித்து அருந்ததிதரிசித்து சிறுமனை புகுந்து தேவரைப்பணிந்து மணவனுமாதும்மகிழ்ந்து வாழ்ந்து தேகத்தில் பாதியாளென்று இச்சை வைத்தநாயகனுக்கு லச்சையுண்டாக்கிதன்னுடைய விவேகங்கெட்டு விரதமும்விட்டு, பதிவிரதாமகத்துவத்தைப் பாழாக்கிவிட்டு காமத்தின்வழியே கருத்தைச் செலுத்திபரபோகம் விரும்பும் பான்மைசுருங்கி நரபோகம் விரும்பு நாளில் வாழ்வு கெட்டுத் தடுமாறி ஒருவருக்குந் தெரியாதென்றெண்ணி சோர்வடையாமல் புருஷன்பாதத்தை மூன்று காலமும் பூசைபண்ணி சொல்மறுக்காமல உலகமெல்லாம் உத்தமியென்று கொண்டாடும் படியாய் வேஷங்காட்டி இல்லறத்திலிருந்து கருமமுதலிய தருமங்களைச் செய்யுங், கணவனுக்கு உடந்தையாகிய இருவருங் கடைத்தேறுங் கதியிற் புகாமல் இவள் கெட்டதுமன்றி இவளுக்குரிய கலியாணமாப்பிள்ளையையுங் கெடுத்து சத்தியந்தப்பி மணவாளனை வஞ்சித்துப் பலபேரைப் புணர்ந்து

தேடியபாதகத்தை தன்மட்டிலனுபவியாமல் இவனை நல்லவனென்று நம்பி இருந்த பாதிக்காரனுக்கும் பங்கிட்டு அவன் தலைமேலுமேற்றி இரண்டுவிதத்திலும் பிரஷ்டத்துவ மாக்கிய சண்டாளியை, புருஷனுக்கு மான ஹானிசெய்து வஞ்சித்தமாபாவியை, தன்தலைவனைத் தலை இறக்கவைத்த சவத்தை, கொண்டவனுயிருக்கு எமனாகச்சமைந்த கோரத்தை இவ்விடத்தில் யாவருஞ், சீ, சீ, சீ, என்றே சிகாறித் துப்பும்படியாய், கை, கால், குறைந்து சிரங்குபுண்நோய் மிகுந்து புழுப்புழுத்து பூமியில் விழுந்து பூததேகம்போய் சூட்சமமாகிய யாதனா சரீரம்வந்து எமபடாளிழுத்துப்போய் பாசம் வேல், கதை, சுடு சரம் முதலியவற்றால் உபத்திரம் விளைத்து வைவச்சுத நரகத்திற்குத் தென்மேற்கில் வன்னிக்குளம் வளரடியோரபிமன்னிக் கட்டிஇறுக்கி வெந்நீர் முதலிய வெப்ப வேதனை விளைப்பார்கள். அந்தகன் தண்டனையின் விபரமென்ன வென்னில்.

98. சரசஸ்திரீகளுக்கு வரும் எமதெண்டனையின் விபரம்.

ஓ! கைகேசியே கேளென்று சாந்திலைசொல்லுகின்றாள். காமம் பெரிதென்றெண்ணி கலியாணஞ்செய்துக்கொண்டகணவனை வஞ்சனை பண்ணி கந்த கஸ்தூரி கதம்பம் புனைந்து கண்ட நாயகனுடன் கலந்து மருவிய யாதனாதேக நிதம்பத்தில் முசலமாகிய இரும்பு புலக்கையை நெருப்புப்பொறிபறக்கக் காய்ச்சி சொருவதுமன்றி கிங்கரர்பிடித்து உருகியிருக்கும் ஈயக் கொப்பறையிற் றேய்த்து ஊன்பெருகியோடும் படியாய் சூலத்தை ஏற்றி செவசெவயென்று காய்ந்திருக்கிற செம்புப் பதுமையை ஆசையுடன் தழுவிக்கொள்ளடி யென்று அடிப்பார்கள், அவ்வேதனையால் புரண்டு உருண்டு துடி துடித்துப் பதைபதைக்கச் சுடுவார்கள், கீழேதள்ளிக்கிள்ளுவார்கள், அட்டைகளை விட்டுக் கடிப்பிப்பார்கள், புழுக்களினால் குடையப் பண்ணுவார்கள், திப்பிவண்டுகளால் துளைப்பிப்பார்கள், கிட்டிகொண்டு பிடிப்பார்கள், குறடுகளினால் சதைகளை கிள்ளுவார்கள், நாய்களினால் கடிப்பிப்பார்கள், நரகத்தில் அழுத்தி ஊசி ஏற்றுவார்கள், கழுவேற்றுவார்கள், தூண்டுமுள் ளேற்றுவார்கள், இரண்டு தூணுட்டி அதன்மேல் பானுவட்டம்போட்டு அதனடுவில் சங்கிலிமாட்டி அச்சங்கிலிநுனியை மூக்கிலும் வாக்கிலுமேற்றி கீழே நெருப்பிட்டு எமகாதகர்கள் இரு

புறத்திலுமிழுப்பார்கள், தலைமேல் நெருப்புப் பற்றிய இருப்பு முள்
முடிவைத்திறுத்துவார்கள், விஷத்தைக் கொண்டுவந்து அருத்துவார்
கள், இரும்பைக்காய்ச்சிக் குதத்தி னிடத்தி லேற்றுவார்கள், கொட்
டாப்புளிகொண்டு ஆப்புவைத்திறுக்குவார்கள், ஆ, ஊ, கூ, என்
று உறுக்குவார்கள், கத்திக்கித்தனை சதையாகக் கை காலை நறுக்கு
வார்கள்,கோடாறிகொண்டு தறிப்பார்கள், சம்மட்டி யடியால் சதை
ப்பார்கள்,தலைகீழாய்த் தொங்கிற வேசியைபுகையினால் வருத்திமுலை
மீது சுடர்வேற்றயிலஞ் சொரிந்து மூக்கில் காரக்கடுமைச் சாறேற்றி
கால்விரலில் சுடரேற்றி தலைமயிரைக் கொளுத்தி ரம்பங்கொண்
டறுத்து, கழுகு, காக்கை, பருந்து, நரி, இவைகளை உசுப்பிப் பிடுங்
கவிட்டு சித்திரவதை செய்யும் போது முறையோ வென்றழுதுகதறி
பதறி சிதறி கைகாலுதறி வலிப்பெடுத்து மொருகி கூந்தற்போடுகிற
போது பேசாதே பேசாதேயென்று இருப்புச்சோட்டாமுள் தடி
வளை வச்சிரதண்டம் இதுகளினு லடிப்பார்கள், இடிப்பாகள், இப்
படி நெடுநாளிருந்து மழுவாயுதத்தால் துண்டித்து இருப்புச் சட்
டியில் நெருப்பாகக் கரும்பொன் மணலைவறுத்து அதைக் கரண்டி
யில் வாரி அவள் தேகத்தில் ஓயாமற் கொட்டு வார்கள், தீ மூட்டு
வார்கள் கற்பு நிலைகெட்டு, கணவனை விட்டு வஞ்சனைகண்ட காமக்
கிழத்தியை உலைக் களத்தில் வேக்காடிட்டு அடித்துத்திரட்டி இருக்
கின்ற முறட்டு முள்முனையிலேற பொருத்தும் படிக்குப்பேசிய எம
னுடைய வார்த்தையின் வண்ணம் தாட்சணியம் பாராமல் எமதூதர்
பிடித்து எலும்பை ஒடித்து எண்ணியாயிரம் எண்ணுமலாயிரம் அடி
அடித்து, நீ, புருஷனை இகழ்ந்து சத்தியம் புரண்டு குலகோத்திரத்
தைக் கெடுத்த குடி கேடி என்று பேரொடுத்து அன்னிய புருஷ
சுகத்தை யடுத்து அவனிடம் படுத்து ஆண்புடையானைக் கடுத்து
வீட்டுப்பொருளைக்கொடுத்து விரதமுதலிய நோன்பையும் விடுத்து
வஞ்சநெஞ் சுடையவளா யிருந்தனையே இதோ அந்த இன்பசுகம் இந்
தக்கழு முனையிலேறி அனுபவியென்று இறுத்தி, அவளிரண்டு காலை
யும் பொருத்தி பக்கத்திற் சூலம் பாய்ச்சி கெற்பங்கலங்க ஊன்றி,
தொங்குங்காலைப்பிடித்திழுத்துக் கண்விழிபிதுங்கக்கொத்தும்படிக்கு
நரகக்குழிக்காக்கைகளை ஏவவிட்டு வைப்பார்கள், அப்படி வெகுநா
ள் வேதனைப் பட்டுக்கொண் டிருக்கும்போது புருஷனை வஞ்சித்த
பூவையிவளென்று ஒருவர்சொல்ல, பலர் பல்லினால் மெல்லுவார்கள்.
அவர்கள் பாவியிலும் பாவி, பெரும்பாவிகளாகும், அப்பால் புரு
டனை வஞ்சித்த சிலரை கையுங் காலுங்கட்டி குருந்தடியா லடித்து

பின்புறமாய்வளைத்து சரீரம் அசையாமல் பந்தித்து கீழுக்குக்கீல், கூராணியடித்து கிட்டியிட்டுக்கட்டி செம்பையுருக்கி பொற்சாயலாகிய கடிதடத்தின்பேரில் கொஞ்சங் கொஞ்சமாய் சுரசுரவென்ன வார்ப்பார்கள், அந்தச்செம்புரசம் படும்போது குபீரென்றெரிந்து புகைச்சலும் எரிச்சலுமிருந்து இரணங்களினூற் புழுத்து நெளிய, ஐயோவென்று பறக்கும்பொழுது இருப்புக்குரட்டாலிடித்து வாய்க்குறட்டைப்பிடித்து வலிப்பார்கள், பின்னுங்கோனாய்கள் குளைநாய்கள், செந்நாய்கள் ஓநாய்கள் அவளுடைய சதையைக்கடித்திழுத்துத்தின்னத்தக்கதாய்உசிப்பிவிடுவார்கள்,மூக்குநீளமுடைய ஆந்தை கோட்டான் கழுகு பருந்து காக்கைமுதலியசேர்க்கை இனங்கள் சேர்ந்து அவளாக்கையைக்கொத்தி ஆவலுடனுண்ணும்படி செய்வார்கள். அவளுடைய பிராணன் அவஸ்தைப்பட்டு கோரமானவிகாரரூபத்துடன் கிடப்பாள், அப்போதுங் கூர்மையான கொழுக்கொண்டிடுவார்கள், சேற்கெண்டைபோன்றகண்ணால்மருட்டிபரபுருடனைச் சேர்ந்தஸ்திரீகளை எமதூதர் பிடித்துக்கட்டிக் கொண்டுபோய் பார்த்தவர்களுடைய மனநடுங்கும்படியாய் இருப்புக்கொப்பறை எண்ணெய்யிலிடுவார்கள். அடுப்பேற்றி எரிப்பார்கள், குண்டுக்கட்டாய்க்கட்டிக் கொளுத்துவார்கள், சரீரங்கள் பத்தலாய்வெடித்து இரத்தங்கள்வடிய நிணங்கள் வழிய வறுப்பார்கள், பெரியரம்பங்கொண் டறுப்பார்கள். நாயகனடுங்க நடந்தவள், எதிர்த்துப்பேசினவள், சண்டைபோடுகிறவள் சரசமில்லாதவள் சாதங்கறியை தன்மட்டிலெடுத் தொளித்துக் கொண்டவள், இன்பகாலத்திற் றடை செய்தவள், புருடனைக்கடன்படச் செய்தவள், கணவன் சொன்ன இரகசியத்தைப் பலபேர்காதிற் போட்டவள், மணவாளனிடத்தில் மனமில்லாமல் பட்சம் இருப்பதுபோலபிநயித்தவள், வீடேறி வந்தவிருந்தைப் பகைத்தவள், வீட்டிற்பிறந்தாரை வெறுத்துக்கடிந்தவள், வீட்டுடைமைகளைத் திருடிவிற்றவள் பிட்சை போடாதவள் தன் தங்கை அக்காள் மச்சினிமார் முதலியமற்றையவர்களைக் கூட்டி கொடுத்தவள், வேசையளைப்போல் ஆசைகொண்டவள், தகாதபெண்களுடன் சகவாசம்பண்ணினவள், மலசலங் கழிக்கும்போது மணற்கொண்டு சுத்திசெய்யாதவள், குளையல் முழுகல் காலக்கடன் ஆசமன்னியமில்லாமல் சமையல் வீட்டிற்புகுந்து சாப்பாடிட்டவள், படுத்தும் இருந்தும் புருடன்கேட்ட கேள்விக்குப் பயமில்லாமல் உத்தரவு கொடுப்பவள், கணவருடன் கலந்தபோதே ஸ்நானம்பண்ணாதவள், கர்வங்கொண்டு புருடனுக்குப் போஜனத்தைக் கெடுத்தவள், கல், நெல், புல், உமிமுதலியதும் போக்

கிச் சமைக்காதவள், புருடனெளியவனென்று பொருட்செய்யாமற் போனவள், கால் கைபிடித்து காலமறிந்து நடவாதவள், மாமன், மாமி, கோறியகாரியத்தைக் கெடுபண்ணினவள், முன்காரியம் பின்காரியம் அறிந்து முடிக்காமல் அசடுதேடினவள், அண்டையசனுக்குப் போய்ச் சண்டையிழுத்தவள், மணவன் மச்சினன், மூத்தாருக்கு சண்டைமூட்டிவைத்தவள், இன்னமுள்ள நற்செய்கைகளுக்கு இடங்கொடாதவள் இப்படிப்பட்ட பெண்களை எமதூதர் கொண்டுபோய் இரும்புத்தூணை நெருப்பிற்காய்ச்சித் தழுவச்சொல்லி இடிப்பார்கள். குண்டாந்தடிகொண்டு அடிப்பார்கள், எலும்பையொடிப்பார்கள், இருப்புமுள்ளுகளிலே போட்டுருட்டுவார்கள், கத்தியைப்பரப்பிக்காச்சி மிதிப்பிப்பார்கள், கையிற் கயிற்றைக்கட்டி நரகக்கிணற்றில் துவைத்தெடுப்பார்கள், இருப்புக்கூண்டிற்றூக்கியேறிட்டுவைப்பார்கள், இரத்தமுஞ் சீழுநிரம்பிய நரகத்தில் சுற்றிலுங் கருங்குளவி மொய்த்துக்கொண்டிரைய அழுத்துவார்கள், துர்க்கந்தமாம்ஸ நரகத்தில் துறுட்பார்கள் மலசல நரகத்திற் கவிழ்த்து வாட்டுவார்கள், அக்கினிக்குழியிற் புகுத்துவார்கள், அனற்பொறி நிரையத்திலிருத்துவார்கள், பாம்புக்கிணறு, அட்டைக்கிணறு, அருணைக்கிணறு, தேள்கிணறு, விரியன்கிணறு, நண்டுத் தொறக்காய் கிணறு, பிள்ளைப்பூச்சிக்கிணறு, பெரும்புலிப்போன், கரடிப்போன் கத்தி, வாள், ஈட்டி, முள்ளுமுனை மாட்டிப்புதைத்து வருத்தப் படுத்துவார்கள். இந்தப்படிக்கு அநேகவித பேதமான இருபத்தெட்டுக் கோடி நரகங்களிலேயும் புகுத்தித் தண்டிப்பார்கள், இப்பேர்ப்பட்ட துன்மார்க்கப் பெண்களை நான்கண்ணிலும் பாரேன். அவர்கள் பேச்சைக் காதிலுங் கேளேன், கலந்து விளையாடேன் எனக்குத் தகுந்த இஷ்டமுள்ள பதிவிரதைகளுடன், ஒழுகுவேன் பழமைப்பாராட்டி பழகுவேன் நற்குண ஸ்திரீகளுடன் பேசுவேன் மற்றவேளைகளில் வீட்டுவேலைகளும் இல்லறதருமமும் பிராணுகிய புருடன் பணிவிடையும் பிரதானமென்று பார்ப்பேன், பறவை பட்சிகளைக் கூண்டில்வைத்து வளர்க்கமாட்டேன். பசுமுதலிய மாடு கன்றுகள் பட்டினியிருக்க வொட்டேன் என் நாயகனுக்கு மனங்கோணுதலாக நடந்து எதிர்த்து வார்த்தையாடேன், அவனென்னை யடித்துத் திட்டியுதைத்த போதிலும் அவருடைய கால் கை வாய் நோவுமே யென்று உபசரித்து உடனே அவர் அழைத்தாலும் அழையாமற் போனாலும் ஏனென் றோடி அவருக்குண்டான பணிவிடைகளைப் பால்மாறிக்கை இல்லாமற் செய்து என்பேரிலேர்ப்பட்ட கோபந்தீர்ந்து இஷ்டம்வரும்படியாய் நல்

லவார்த்தைபேசி அவர்தயவைத் தேடிக் கொள்ளுவேன், ஏழைகளாய் நொந்துபோனசமுசாரிகளுக்கு என்னன்பருடன் சொல்லி உபகாரமான காரியங்களைச்செய்யமனமுண்டாகவைப்பேன். தருமகூட்சமாகிய புண்ணியம் என்னுலியன்றது சகலருக்கும் தாகத்திற்கு சலம் அன்ன முதலியவைகளளித்து நன்மை சம்பாதிப்பேன். என் பிள்ளைகளுக்குக் கல்விவருவிக்கும் விஷயத்தில் மெத்தக்கருத்தாய்ப் பொருத்திவை ப்பேன். இப்படிப்பட்ட சத்கருமங்களெல்லாஞ் சர்வசாக்கிரதை யாகப்பண்ணி நாளுக்குநாள் அபிவிர்த்தியாய் இந்தப்பாக்கியத்தை யனுபவித்துக் கொண்டிருக்கிறேன். என்று சாந்திலை சொல்ல அந் தவார்த்தையைக்கேட்ட கைகேசியானவளுக்குவிவேகமும்ஞானமும் பிறந்து பிரதட்சணம்பண்ணி அம்மணி நீ சொன்ன எதார்த்த வார்த்தையனைத்துஞ் சத்தியமேயென்று புகழ்ந்து கொண்டாடி மகா லட்சுமிக்குச் சமமான கைகேசியானவள் சிலவுபெற்றுக்கொண்டுமக மேருகிரிச்சாரலிலிருக்கின்ற தன்வீட்டுக்குப்போயினுள். இந்தப்பி ரகாரம்யாவரொருவர் சாந்திலைகைகேசிசமவாதத்தைஅனுஷ்டித்துநட ந்தவர்கள் கேட்டவர்கள் படித்தவர்கள் முதலியோரும் ஆயுசுவிர்த்தி போகபாக்கியம் புத்திரப்பேறு நோயற்றவாழ்வு புண்ணியக் கீர்த்தி பொருள் பெரும் பொருள் அருளுண்டாகும் முரசகேதனுவென்று பிரம்மச்சாரியாகிய வீஷ்டுமர் விளம்பினுர். இத்தருமத்தைக்கேட்ட தருமராஜன் சந்தோஷித்து பாட்டனுக்குப் பிரதக்ஷணம்வந்து நமஸ் காரந்தந்து ஐயா உம்மாலே பதிவிரதா ஸ்திரீகளின் பான்மையெல் லாங் கேட்டேன் விசிதமாயுணர்ந்தேன் சுவாமிகளே புருடனுகிய நாம் நடக்கவேண்டிய நன்மைகளெப்படி குற்றந்தீர்ந்து கடைத்தே றுவதெப்படி இப்படி யென்றியம்பவேண்டும், அருட்கடலாகிய ஐயா வென்றுகேட்க, குருமுகூர்த்தங் கொண்டருளிய வீஷ்டுமர் சொல் லத்தொடங்கினுர்.

99. புருடர் நடக்கவேண்டிய ஒழுக்கம்.

புருடன் உதயத்திலெழுந்து உபாதிநீக்கி ஸ்தான சந்தியனு ஷ்டான கருமமுதலிய செபமுடித்துக்கொண்டு சூரியநமஸ்காரஞ் செய்து இந்தப்படிக்கு மூன்றுகாலமும் சோம்பலில்லாமல் முடித்து சுத்தவஸ்திரந்தரித்து அல்லது ஈரவேட்டியுடனிருந்து ஈஸ்வரத்தி யான மியற்றி, எட்டெழுத்தும், ஆறெழுத்தும், ஐந்தெழுத்துஞ் ஜெபித்து, அரனை, ஆதியை, அனுதியை, எங்குந்தானுகிய பரி

பூரணனை, புண்ணியனை உண்மைப் பொருளை, சத்தியநித்தியனை, மோட்ச காரணனை, ஆதிமத்தியாந்தரகிதனை, ஆதிமூலப்பொருளை, நாராயண மூர்த்தியை வாழ்த்திவணங்கித் தோத்திரம் பண்ணி இரவு ம்பகலும் இஷ்ட காமியார்த்தங்களை விரும்பி, நித்தனை, நிராமயனை, நின்மலனை, நிற்குணனை, சகுணனை, மூவர்முதல்வனை, முக்குண னை, முக்கணனை, வேதவேதாந்தவேதியனை, சோமசூரியாக்கினிச் சுடர்க்கண்ணானவனை, அறம்வளர்த்தாளாகிய அம்பிகையை வாம பாகத்தில் வைத்தவனை, களனை, நிட்களனை, சகளனை, முத்தனை, கர்த்தனை, சித்தனை, கிருபைக்கடலை, மும்மூர்த்திசொரூபனை, முத் தொழிற்கும் வித்தானவனை, விநோதனை, லீலாவிபூதனை, விசாக மூர்த்தியைப் பெற்றவனை, நிஜானு போகமுற்றவனை, குற்றமற்ற மனத்தால் மோட்சகாமியத்தைக் குறித்துவணங்கி, இந்தப்பிரகாரம் மூன்றுகாலமு முற்றுவையாகில், நாளுக்கு நாள் அறிந்தறியாமற் செய்த குற்றங்களெல்லாம் பறிந்தேகும். விஷ்ணுநாமம், சிவநாமம் இதை ஒருக்காற் சொன்னமாத்திரத்தில், மகாபாவங்கள் விலங்கிப் போகும். புகழும் புண்ணியமும் ஆயுசும் செல்வமுமுண்டாம். இ வ்வண்ணம் யார்நடந்தவர்களோ அவர்களுக்கெல்லாம் சகலபாபக்ஷ யமுமுண்டாய் மோட்சமடைவார்களென்று சொல்ல, இதைக்கேட் ட தருமராஜன் இரண்டுகரத்தையுங் குவித்து நமஸ்கரித்து பத்மாச னம்பண்ணி தொடைமேற் கரமமைத்து மனதைக்குவித்து பஞ் சேந்திரியங்களையு மடக்கிவாயுவைக் கும்பித்து மூக்குமுனையில் மு னைக்கண்ணூட்டி சூரியமண்டலத்தில் சத்தியப்பிறபை மத்தியிலிருக் கப்பட்ட பரமேஸ்வர மூர்த்தியை மனோதியானம்பண்ணி அப்புறம் தருமராஜன் கண்ணைவிழித்து பாட்டனைப்பார்த்து ஐயா, தானங்கொ டுக்கிற தென்றும் இன்சொற்பேசுகிற தென்றும் சொல்லப்பட்ட இ ரண்டுவகைக்குள் எதிலே அதிக பலனுண்டாகும் அதனைச் சொல்ல வேண்டுமென்று கேட்க வீஷ்மர் சொல்லுகின்றார்.

100. தானங்கொடுப்பதிலும் இன்சொற் சொல்லுத லிலும், எதிலே அதிகப்பலன் உண்டாகுமென்ற பிரசினைக்கு உத்தரம்.

தானமென்பது ஒருவருக்கொருத்தர் தனதாக ஈவது தானம். தனதென்பது மனோபக்தியுடன் அன்புவைத்தது தனதாம், கொடுக் கிறவனுக்குக் குலசம்மந்தத்தால் குணமிருக்கும், குணம் எவ்வள

வுடையதோ அவ்வளவுகல்வி, கல்வியெம்மாத்திரங் கற்றானோ அம்மாத்திரம் பேரறிவு, பேரறிவு எம்மட்டோ அம்மட்டும் தெளிவு, தெளிவிற்குத்தகுந்தபடி சேர்க்கை சேர்க்கைக்குத் தகுந்த ஈகையுண்டாகும், ஈகையில் எவ்வண்ணங் கியானம் விளங்குவதோ அவ்வண்ணம் பலனனுபவிப்பான், மேலும் தானங்கொடுப்பதைப் பார்க்கிலும் மேன்பாடாகிய தருமமொன்றுண்டு, அதென்ன வென்னில் வந்தவர்களையுபசரித்து வணங்கி அன்புபாராட்டி தேன்சொரிவதுபோற் இனிய சொல்பேசுவது. பெரியதானம் அதாவது சத்துச்சித்து ஆநந்தமென்று மூன்றுபதார்த்தம், அதிலேசத்தாகிறது சாத்மீககுணம், இந்தக்குணஞ் சுலபத்தில்பிறவாது மனஞ்சேதனப்பட்டு அகங்காரமடங்கி பொறுமையொடுங்கி அவாவிலங்கி, நான் எனது என்கிற தேகாபிமானமும் பெண்டு பிள்ளை பண்டுபதார்த்தங்களெல்லாம் மித்தையாகக்கண்டு சர்வபூதாதிகளிடத்திலேயுந் தயைவைத்து பசியாதாபமுண்டாய் அருளுடனிருப்பது சத்வகுணம். இந்தச்சத்வகுண முள்ளவர்கள் சித்தாகியபிரம விலாசவித்தெல்லாந் தெரிந்தவர்கள். பிரம்மத்தைக்கண்டபோதே ஆநந்தமும்மோனமும் சொந்தமாகும். அவர்கள்தான் நித்தியானந்த பிரபஞ்ச விசாரமேற்ற நின்மலானந்தர்கள். சித்தென்பது சாத்மீகமாகிய அறிவும் பிரபஞ்சமும் பொய்மையெனக் கண்டபேர்களுக்கே வரும். பூதாதிகளியாவுஞ் சமத்துவமாய்ப் பார்க்கப்பட்டதே சமசித்தம். வேறுஉரை பாறுசெய்கை வேறு இருப்பவர்கள் இன்சொற் பேசுவார்களா, திரிகரணசுத்தி யுடையவர்கள் இனியசொற் கூறுவார்களல்லது மற்றொருவருக்கும் இன்சொற்பேசுவதுஉளவாயினும்எளிதல்ல. அது பெரியகாரியம்எல்லாருக்குந்தானே வாராது சுத்தசாத்மீகிக்கு மாத்திரம் சுதந்தரம் இதற்கொருதிருஷ்டாந்தம் சொல்லுகிறேன் கேள்.

சர்வபூதாதிக ளிடத்திலேயும் கிருபையுள்ள சாத்மீக குணத்தையுடைய பிராமணனொருவன், அவன் வனத்திலே சஞ்சரிக்கிறபோது தாருண னென்கிற ராட்சதன் பெரும் பசியுண்டாய் இரையகப்படாமல் மிகு கோபங்கொண்டு எதைஎடுத்து விழுங்கலாமென்று ஏக்கங்கொண்டு வருகிறபோது, மேற்கூறிய பிராமணனைக்கண்டான். காணவும் தன்பசி நோயினால் இந்தப்பிராமணனைப் பிடித்து எடுத்து விழுங்கிவிடவேண்டுமென்று நினைத்து ஓங்கிக்கனைத்து இரண்டுகைகளையும் விரித்துத்தடுத்துப் பிடித்துக்கொண்டான். அப்போது சகலவேத ஆகம இதிகாச புராண சாஸ்திர முழுதுந்தேர்ந்து சங்கையறக் கேள்விகேட்டு ஆத்மவிசாரமறிந்திருக்கிற வேதியன் தெளிவு

டையவனும் முகமலர்ச்சியுடன் சற்றேனுஞ் சித்தங்கலையாமல் தன்ம னம் பதைக்காமல் துடிக்காமல் கோபிக்காமல் ஆநந்த நடம்புரிகின்ற ஆதி மூர்த்திபோல் சோதிகாட்டி நகைத்துத் துயரமற்றிருந்தான்.அந்தத் தாருணனென்னும் அரக்கன் மனமருண்டு, மதிமயங்கி, மகிட்சியடங்கி, புத்திகலங்கி, இவரெப்படிப்பட்ட பெரியவரோ எத்தன்மையுடையவரோ வென்று ஐயப்பட்டு பிராணபயமில்லாமல்நகைக்கின்றாரோ முகமலர்ச்சி கொண்டிருக்கிறாரோ இதென்ன விந்தையென்று அவரைச்சேர்த்துப்பிடித்தகையை விட்டுவிட்டு பசிநோய் தீரும்படிக்குக் கோபமாறி இவரையடுத்து ஐயரோ எனக்குப் பசியும், ஆயாசமும், இளைப்புங், களைப்பும், வெளுப்பும் விதிர்விதிர்ப்பும் வரவேண்டிய காரணமென்ன நீரிதை நன்றாயோர்ந்து சொல்லுவீராகில் உம்மைக் கொல்லாமல் அகல்வன், இல்லாவிட்டால் என்பசிக்கு எப்படியும் உன்னைத் தின்னுவேன், கொல்லுவதற்கு முன்னாக உன் கருத்தைச் சொல்லென்றான். அந்த மொழிகேட்ட பிராமணன் அஞ்சாமல் நகைத்து முகமலர்ந்து சர்வ பூதங்களிடத்திலும் ஈஸ்வரன் தானித்தியமென்பதை நன்றாயறிந்த நாதனாகையால், மிகுந்த இரக்கத்துடனே இன்சொல்லினால் அப்பா இராக்கதனே! தேகங்குளிர்ச்சியாய்ப் புஷ்டியாய்ப் பருக்காமல் உலர்ந்து போவது காசிரோகமென்கிற வியாதியின் குணம். குளிர்ந்தபார்வையுடையவனே உடல்வெளுத்து மெலிந்து காட்டுவதெல்லாம் பாண்டுரோகத்தின் பான்மை. இந்தரோகம் வருகிறதற்கு ஏது என்னவென்றால் தங்கள் தங்களுடைய சுற்றத்தார் பந்துஜெனங்கள் மித்திரர் தரித்திரர் முதலிய பேர்களைக்கடிந்து குரூரவார்த்தைகளைக் கொட்டினாலும், அவர்கள் வயிறெரிந்து மனம்புகைந்து மலமல வென்று கண்ணீர் சொரிந்து அழுதாலும் ஒருவனுண்ணும்போது மெனியைப் பிடித்தாலும், தாய் தந்தையைத் தமையனைப்பழித்து பேசினாலும், யேசினாலும் சஞ்சலப்படுவதினாலும் ஒருவன் பெற்ற ஜெயத்தை நான் பெற்றேனென்று ராஜசமுகத்தினின்று பெருமை கூறினாலும், அப்படி சொல்லும்போது ஜெயம் பண்ணினவனுக்குத் திகில்பட்டு மூலாக்கினி எழுந்து வியர்வையுண்டாகி மெத்த வருந்துவதினாலும், ஆபத்காலத்திலே உதவிசெய்யா திருந்தாலும், உதவியற்ற பேர்கள்விருதாவில் நான் செய்த உதவியாற் பிழைத்தானென்றுவிருதாடம்பசம்பம் பேசினாலும், செய்தவுதவியைச் செப்பிக்காட்டினாலும், கல்லாதமூடன் கற்றவிசேடனைப் புகழ்ந்து சந்தோஷப்படாமலிகழ்ந்தாலும், தேடிய திரவியத்தை பெரியவர்கள் முதலிய நல்வழி

யிற் செலவழிக்காமல் தீநெறியில் விரையப்படுத்தினாலும், அன்னமுண்டு பின்னம்பண்ணினாலும், வீண்விசாரம் பெற்றவனானாலும், நன்றாயிருப்பவரைப்பார்த்து பொறாமைப்பட்டு நமக்கில்லையே யென்று மனம் பொறாமையினாலும். தேவர் முதலிய நல்லோர்பெரியோர்களை நிந்தனைபண்ணினாலும், மகாபாவமாகிய பசி பழி இளைப்புமுதலியநோய்களெல்லாம் வருமென்று சொன்னார். அதைக்கேட்ட தாருணராக்கதன் "சிறுமையுணீங்கியவின்சொன் மறுமையுமிம்மையுமின்பந்தருமென்பதுபோல்" வேதியருடைய இன்சொல்லுக்கிரங்கி அவரை உயிர்வதைசெய்யாமல் விட்டுவிட்டான். அப்பால் சீலாசாரத்தையுடைய முனியானவர்தனதுஎதாஸ்தானம்போய்ச்சேர்ந்தார். கேளுந் தருமநந்தனனே இன்சொல்லினாலே உயிர்பிழைத்தனர் ஆதலால் இதமுள்ளது எல்லாவற்றினுமேன்பாடென்று கங்கைமைந்தன் கரைத்தார் தருமராஜன் சுவாமிபுத்திரர்களிலே அநேகவித புத்திரருண்டென்றுசொல்லுகிறார்களே அத்தனைவிதங்களையுஞ் சொல்லவேண்டுமென்னமுற்றுமுணர்ந்த வீஷ்டுமர் சொல்லுகின்றார்.

101. வினையினால்வரப்பட்ட புத்திரவிபரம்.

தனக்கு மாங்கல்லிய தாரணமுள்ள சுதந்தர ஸ்திரீக்குப் பிறந்த பிள்ளை உத்தமமாகிய ஜேஷ்டபாகமுள்ள முதற்பிள்ளை. தன்னுடைய பெண்வயிற்றிற் பிறந்தபிள்ளை முதற்பிள்ளைக்குச் சமானமான இரண்டாவது பிள்ளை. தன்னுடைய பெண்சாதி தன்னையறியாமல் மற்றொரு விதத்தினாற் பெற்றபிள்ளை மூன்றாவது பிள்ளை. இன்னொரு தந்தை தாய்கூடி ஈன்றமைந்தனை தத்து புத்திரனாகக்கொண்ட மஞ்சனீர்ப்பிள்ளை, நான்காவது பிள்ளை தாய்தந்தையைநீங்கி தன்னிச்சையாய்த் திரிந்தபிள்ளை. சரணமென்றடைந்த அடைக்கலப்பிள்ளை ஐந்தாவதுபிள்ளை. பெண்சாதி விபசாரத்துவமாய்ப்பலபேருடன் கூடிப்பெற்றபிள்ளை இன்னான் விந்துக்குப் பந்தமாய் வந்ததென்று தெரியாதபடியால் அவன் சாந்தமான ஆறாவதுபிள்ளை. அன்னையும் பிதாவும் அடித்துத் துரத்திவிட்டபிள்ளை ஆதரவில்லாமல் ஒருவருக்குட்புகுந்து அடுத்திருந்தால்ஏழாவதுசேர்ந்தபிள்ளை. கன்னிகையில் ஒருவனைக் கலந்துபெற்றால் அந்தப்பிள்ளையைக் கானீனனென்பார்கள். பிற்பாடு அந்தக்கன்னிகையை எவன் கலியாணம் பண்ணிக்கொண்டானோ அவனுக்கு இந்தப்பிள்ளைஎட்டாவதுபிள்ளை. ஸ்திரீயினுடைய வயிற்றில் கருப்பங் கொண்டிருப்பது தெரியாமல் கலியாணம் பண்ணிக்

கொண்டால் முன்னுண்டாயிருந்த பிள்ளை வீரியம் விட்டவனுதன்று இப்போது தாலிகட்டிக் கொண்டவனுக்குச் சொந்தமென்னச் சாற்றுவது அவன் ஒன்பதாவதுபிள்ளை. தன்னுடைய மனைவியைத் தானே கோபித்துக் கொண்டு வேண்டாமென்று வெறுத்து ஓட்டிவிட்டானுகில் அந்தப்பெண் தருமமாகப்பார்த்தும் பர்த்தா துரத்தியபடியால் தன்பேரிற் குற்றமில்லாமல் இன்னொருவனிடத்திலிருந்து பெற்றபிள்ளை முந்திய தந்தைக்குப் பத்தாவதுபிள்ளை. தாயும் தகப்பனும் விலைகொடுத்து வாங்கிக்கொண்டால் கொண்டவனுக்குக் கொண்ட பிள்ளை பதினோராவது பிள்ளை. இவனுடைய வீரியம் அன்னிய ஸ்திரீயினிடத்தில் தரித்து உதித்தால் எல்லாரு மறிந்து இன்னானுக்குப் பிறந்ததென்று தெரிந்து இவன் பெயரோ வழங்குமாயின் அந்தப்பிள்ளையும் இவனுக்குப் பன்னிரெண்டாவது பிள்ளை. இப்படிக்கெல்லாஞ் சொல்லுவது மனு நூலின் பிரமாணமென்றனர். தருமராஜன் தண்டம் சமர்ப்பித்து ஐயா கங்காநதியின் பெருமையையும் மகிமையையும் அடிமைக்குச் சொல்லவேண்டுமென்று வணங்கினார் அன்புடனே காங்கேயன் சொல்லத்தொடங்கினார்.

102. கங்கையின் பெருமையும் மகிமையும் உரைத்தல்

பேரனே கேளும் சூரியனில்லாத பகலும் சந்திரனில்லாத இரவும் போன்றது கங்காநதியில்லாத நாடு, ஆதலால் நதி இல்லாதநாடு பாழ், தேவர்களுக்குள் தேவேந்திரனெப்படி உயர்வோ அப்படிக்கு பூலோகத்திலிருக்கின்ற அநேகங்கோடி தீர்த்தங்களுக்குள்ளே புனிதமும் மணமும் சிரேஷ்டமும் மகாபாதகவிமோசனமும் சகலபீடா பரிகாரமும் இகபரசாதனமுந் தரப்பட்டது. போகபாக்கிய முதலிய பொன்னுடும் மோட்சமும் தரப்பட்ட சகல புவனகர்த்தாவாகிய சாம்பமூர்த்தியினுடைய சடாமகுடத்தில் சயித்தியமாய்ப் பதிவிருந்து ததும்பி நெற்றிக்கண் சுடரை நிமிரவொட்டாமற் றணிப்பது. கங்கை இப்படிப்பட்ட மகா கங்கையை நானென்னென்று சொல்லுவேன், ஆகிலும் இந்தக் கங்கையில் விதிமுறைப்படிக்கு ஸ்நானஞ் செய்தால் தீமைகளானகொலை, களவு, கள், காமம், பொய், யென்கிற பஞ்சமகா பாதக முதலியவற்றின் வேரைக்களைந்து மாயாமயக்கங்களையு மாய்த்து, எமபாசத்தைத் தேய்க்கும். மும்மலத்தையும் நின்மலமாக்கும். முக்குறும்பையு மடிக்கும் இந்திரியங்களை யியற்றும், பற்றும் வினை

களைப் பாழாக்கும். ஆகாமியசஞ்சித காமியத்தை யடக்கும். பிராரத்
துவத்தைக் கழித்து உடலுயிருடனொழிக்கும், மனதைச் செம்மைப்
படுத்தும், உறுதியுண்டாக்கும். ஜனனந்தோறுந் தேடிக்கொண்டவ
ஞ்சனை, துரோகம், பாவம், லோபம், மோகமுதலிய வெல்லாவற்றை
யும் தீயச்செய்யும.சுவற்காதிபோகங்களில்,என்னாளுங்குடியாயிருக்க
ஏற்றிவைக்கும் சஞ்சலமாகிய சமூகவிசாரத்தையுந் தீர்க்கும், பிறவி
வேலையைப் போக்கும், இன்னமநேக நன்மைகளை யெல்லாந் தரும்.
இனி அதனுடைய பெருமையை என்னாற்சொல்லமுடியுமோ எக்கி
யங்கள் தானங்கள் பசுக்கள் விரதங்கள் சீலம் ஆசாரங்கள் செபம்
இதுகளெல்லாம் இன்னொரு தீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்து எய்தும்
பலன்களுக்கு எட்டு பங்கதிகமாகும. இந்தக் கங்காஸ்நானம் செய்கி
றவர்கள் நற்பேறுபெறலாகும். இப்பேர்ப்பட்ட பெருமையையு
டையதென்றும் ஜெகத்திலுள்ள ஆத்மகோடிகளுக் காதார மென்
றும் சுத்த சலத்தில் ஸ்நானம் பண்ணினாலும் எப்போதுங் கங்கை,
யமுனா,கோதாவரி, யென்று நினைத்தாலும் அதன் பெருமையை ஒரு
வருக்கு உரைத்தாலும் பூபிரதக்ஷணம்பண்ணினாலும் கங்கா ஸ்நான
த்திற்குப் போகிறேனென்றாகிலும் மூன்றடி ஏழடி ஒன்பதடி பெயர்
த்துவைத்து நடந்தாலும் பாபங்களெல்லாம் பறந்தோடிப்போகும்
இப்படிப்பட்ட கங்காநதி தீரத்தில் சர்வதாய் வாசம்பண்ணி அந்நீ
ரில் முழ்கி அந்தத் தீர்த்தத்தைச் சாப்பிட்டவர்களுக்கு என்னபலனெ
ன்றியம்புவேன்! அந்தக் கங்கையைக் காவடியில்வைத்துக்கொண்டு
தோளிலேசுமக்கிறவர்களுக்கும்சுமந்துபோய் இன்னொருஸ்தலத்தில்
அபிஷேகம்பண்ணியபேருக்கும், பண்ணச்செய்கிறபேருக்கும், பண்
ணிவைக்கிறவருக்கும்தீராதவல்வினைதீர்ந்து திறம்பெற்றிருப்பார்கள்.
இந்தக்கங்காமகத்துவத்தைக் கருதிக்கேளாமல் அலட்சயம்பேசி அறி
வழிந்த ஒருவன் தட்டுக்கெட்டு தடுமாறி ஏதோ ஒருகாலாதீதத்தால்
அந்தக்கங்கைக் கரையில்வந்து அந்தக் கங்கையின் காற்று அல்லது
திவலை இவன்மேற் படுமாகில் மின்பின்னுள்ளபாப மூட்டைகளெல்
லாம் எரிந்துபோம் பூமியில் ஒருகோடி புண்ணிய தீர்த்தங்களுண்டா
யிருந்தாலும் கங்கைக்குச சரிசொல்லக் கற்றவர்களும் கருத்தைப்
பொருந்தார்கள். கோடிநட்சத்திரங் கூடினாலும் ஒரு சந்திரனாமா?
பத்துக்கோடிமலைகள்சேர்ந்தாலும் பொன்மலையாமா,ஆயிரஞ் சக்தியா
னாலும் பராசக்தியாமா, பல்லாயிரந்தேவராயினாலும் தேவராஜனாகு
மா! அப்படிப்போல கங்கைக்குச் சமானமில்லை இப்பேர்ப்பட்ட கங்
கையில் ஸ்நானம்பண்ணவேணுமென்று ஒருதரஞ்சொன்னாலும் மகா

புண்ணியமும் புனிதமுமுண்டாம். கங்காஸ்நானத்திற்குப் போகிறே னென்றுஓரடியெடுத்துவைத்து நடந்தாலும் அவர்களுக்கு மேலுலகச் சுதந்தரமுண்டாம். கங்கை அப்படிப்பட்டபுனிதமுடையதுவென்றும் ஒருவராலும்அறியப்படாத மகிமையுடையது எனவும் வீஷ்மர் விள ம்பினர். தருமர்மிகவும் புகழ்ந்து நமஸ்காரஞ்செய்து விடைபெற்றுக் கொண்டு அவரவர்கள் வாசஸ்தானம்போய் சேர்ந்தார்கள்.

103. ஸ்ரீ கிருஷ்ணபகவானுக்கு நாரதமுனிவர், மஹாதேவ இரகசியங்கூறல்.

ஓர்காலத்தில் ஓர் பர்வதச் சாரலில் நைமிசாரண்ய வாசிகளா கிய மகாரிஷிகளும் சூதமுனிவரும் கூடியசமயத்தில், அவ்விடத்தில் மகதியாழ்வல்லவராகியநாரதமகாமுனிவர்வந்தபோது ரிஷிகளெல்லா ஞ்சேர்ந்து அவரைப்பணிந்து, சுவாமி சகலாத்மகோடிகளிலும் இருக் கப்பட்ட உயிர்வகைகள் கரையேறுவதற்கு அக்கியான இருளைப்போ க்கிசுக்ஞானமுண்டாக்கிஜனனவேதையகற்றி தீவினைமுதலாகிய மகா பாதகங்களெல்லாந்திரமுதற்காரணமாயுள்ள மெய்,வாய்,கண், மூக்கு, செவி,ஞானேந்திரியங்களைந்தும்,சப்த,ஸ்பரிச, ரூப, ரச, கந்த, மாகிய தன்மாத்திரை ஐந்தும் பிராணவாயுமுதலானதும் வெகுலேசிலொடுங் கிப் போகத்தக்கதாயிருக்கிறதேஅதின் விவரங்களும்வேதத்திலொழு க்கம் அதனநுஷிதிவிலக்கு வெளிவிடுகிற தருமம் நீதிமுதலிய சாஸ்தி ரம் சாங்கோபாங்கமாய்தெரியும்படிக்கும், மேற்கதியிற்புகும்படியான விதத்திற்காதாரமெதுவோ அதையும் எங்களுக்கு விபரமாய்த் தெரி விக்கவேண்டும் வேதனே யென்று திருவடியைப்பணிந்து நிற்கின்ற, ரிஷிகளுக்கு நாரதமகா முனிவர் சொல்லத்தொடங்கினர்,

முன்னாளில் துவாரகையில் வீற்றிருந்த நீலமேகச் சாமளவர் ணராகிய ஸ்ரீ கிருஷ்ணதேவர், அவர் நிழல்போல் மருவிய உருக்கு மணிதேவியாரிருக்க இவர்களிருவரும் ஒருநாள் ஓர் பர்வதச்சாரலில் மேகங்கள் தவழ்ந்து விளையாடுகின்றதுபோல் உல்லாசமாய்ச் சென்று கின்று முல்லைமலரணிந்தமூர்த்தி தன் பெருமைக்குத் தகுந்தபடியே தனக்கு புத்திரன் வேண்டுமென்று பன்னிரண்டுவருடம் ஒரே நிலையா ய் மகத்தாகிய தவம்பண்ணினர். அப்போது பூலோகத்திலிருக்கின்ற

ரிஷியீஸ்வரர்களெல்லாம் ஒருங்கக் கூடிவந்து ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தியைக்கண்டுப்பணிந்து சந்தோஷங்கொண்டு ஆநந்த அமுதமுண்டு புளகாங்கிதங்கொண்டு பரவசமாகிச்சென்று சூழ்ந்துநின்றார்கள்.

இப்படியாக நலம் பெறும்படியாக விரும்பிவந்த மகாரிஷிகள் உருக்குமணியிடனிருந்த உலகளந்த நாதனைச் சூழ்ந்து சந்தித்துப் பணிந்து வந்திருக்கும்வேளையில் ஸ்ரீ கிருஷ்ணபகவானுடைய வாயிலிருந்து ஒரு அக்கினிசோதிபிறந்து க்ஷணநேரங்கூடத் தெரிசனைக் கிடங்கொடுக்காமல் வடவா முகாக்கினிபோல் விரிந்து ஆகாயத்திலெழுந்து அண்டத்திற்பறந்து அங்கிருந்துவந்து அந்த நந்தனுடையசெந்துவர் வாயிற் புகுந்தது. அந்த விந்தையைக்கண்டு வந்த முனிவரெல்லாரும் சிந்தைமருண்டு அற்புதமாய்த் திரண்டு வெள்ளம்போற்புரண்டு வேணுகோபால ஸ்வாமியே தேவரீருடைய திருவாயிலிருந்து ஒரு அக்கினிபிறந்து ஆகாயத்திற் புகுந்து மறுபடியுந் திரும்பி வந்து தேவரீருடையதிருவாயிற்புகுந்த பாக்கியமென்னமோ,சுவாமி அதனது வரலாற்றை சொல்லவேண்டுமென்று கேட்க, வாசுதேவன் மனமகிழ்ந்து வாருங்கள் ரிஷிகளே உங்களுக்குத் தெரியவில்லையோ, ஆனால் நான்சொல்லுகிறேன், அருவிபெருகிவரப்பட்ட சிகரமும் விசாலமும் உயரமுடைய பெரிய பர்வதச்சாரலுக்கு சமீபத்திலிருந்த ஒரு இராக்கதன் அவ்விடத்திலுண்டாகிய உயிர்களைபெல்லா மழித்து வதைத்துத்தின்று தேவதைகளுக்கு இடையூறுவிளைத்துத் துன்பப் படுத்திக்கொண்டு திரிகிறான், அவனைக்கண்ட உயிர்களெல்லாம் எமனைக்கண்டாற்போற் றிடுக்கிட்டு நடுங்கித் தெய்வமே யென்றுதிரிகின்றன. அப்படிப்பட்டவனைக் கொல்லவேண்டுமென்று ஒருதாபாக்கினியை என்வாய்வழியினின்று பிறப்பித்தேன். அந்த நெருப்பானது போய் அந்த மஹாபாதகனாகிய அரக்கனைப்பொடியாக்கிவிட்டு பிரம்மலோகம் போயிற்று. அங்கேஇருந்த பிரம்மதேவன் கண்டு அந்த அக்கினியினுடன் மன்மதனையனுப்பி நீயும் இந்தநெருப்புடன்கலந்து ஸ்ரீ கிருஷ்ணருக்குப் பிள்ளையாகப்பிறக்கக்கடவையென்று அனுப்பினார். அந்தமன்மதனும் அக்கினியுடன்சேர்ந்து என்னுடம்பிற்குள் ஒடுங்கி இருக்கும்படியாக எரித்துக்கொண்டு சோதியாய் வந்ததை மறுபடியும் வாய்மடுத்துண்டே னென்று கேசவநாராயண மூர்த்தி புகல,பிரம்மரிஷிகளெல்லாஞ்சந்தோஷப்பட்டு சந்தேகந் தீர்ந்து அற்புதமடைந்து ஆநந்தபரவசராய் வாக்கிற்கும் மனத்திற்கும் எட்டாத மாதவப்பொருளே, மஹானுபாவா, லோகநாயகா, எப்படிப்பட்டவர்களானாலும் உம்மை எளிதிலறியமாட்டார்கள் கர்த்தனே யென்று

முனீஸ்வரர்களெல்லாங் கைதொழுங் கடவுளாகிய முகுந்தனை வணங்கினார்கள். அப்போது இந்த ரிஷியீஸ்வரர்கள் வந்திருக்கப்பட்ட நெறியைக்கண்டு நெடியோனாகிய ஸ்ரீமந் நாராயணமூர்த்தி, ரிஷிகளிடத்தில் பிரியமுள்ளவராய் புன்முறுவல்காட்டி ஓ! ரிஷியீஸ்வரர்களே நானிந்தச் ஜென்மமெடுத்து துவாரகைக்கு இராஜனாகப்பிறந்து பலகோடி ராக்ஷசகுலங்களைப் பாழாக்கி தேவர்களுக்குத் திருப்திபண்ணிவைத்தேன்; அந்த அரக்கரைகொன்றபாவம் என்னைத்தொடராமல் நீங்கிப்போகும்படியாய் நீங்களியாவரும் என்னிடத்திற் கடாட்சம் வைத்து சகல பாபக்ஷயமும் சத்துருசெயமும் உண்டாகத்தக்கதாகியபுனிதபுண்ணிய இதிஹாசங்களை என்காதிற் பொழியவேண்டுமென்று கரமுகிழ்த்து ஸ்ரீ கிருஷ்ணபகவான் கேட்டருளினார். அம்மொழி கேட்ட முனீஸ்வரர்கள் தபசாகிய அமுதஞ் சாப்பிட்டிருக்கின்ற சந்தோஷத்தினாலும் தைரியத்தினாலும் சொல்லத்தொடங்கிய பொழுது அவ்விடத்திலுள்ள ரிஷிகளெல்லாஞ்சேர்ந்து என்னைச்சந்தித்து மிகவும் விரும்பிகேட்டுக்கொண்டபோது நான்கண்ட கைலையங்கிரிச்சாரலில் நடந்த புண்ணிய, தேவ இரகசியங்களை உங்களுக்குச் சொல்லுகின்றேன் கேளுங்களென்று நாரதமகாமுனிவர் சொல்லத் தொடங்கினார்.

சரஸ்வதி நாயகனாகிய சதுமுகனைத் திருநாபிக்கமலத்திற் றந்தருளிய தயாபரமூர்த்தியே! நான் கங்கைமுதலிய அநேகங்கோடி தீர்த்தங்களில் மூழ்கி பூபிரதக்ஷணம்பண்ணிவரும் போது கைலையங்கிரிச்சாரலில் ஆகாயமளாவியமரங்களால்நெருங்கி கமகமவென்னும் வாசனையுடன் புஷ்பித்து தேன்பொருந்தி கண்ணுக்கெட்டிய தூரம்பரவி தென்றலினாலசைந்து பசியநிறத்தளிர்களுடன் தழைந்து விரிந்த சோலையொன்றிருந்தது. அச்சோலையில் தோகை மயில்கள் தேவநாட்டியஞ்செய்யவும் கிளிகள் அளிகளுடன் வேதங்களோதவும், சுரதசதிதாளத்துடன் குயில்கள்பாடவும் பலகோடிபட்சிகள் உட்களிப்பாடவும், தடாகங்களிலிருக்கின்ற அன்னங்களெழுந்து சாமரமுதலிய ஆலவட்டம் வீசுவதுபோல் அசைந்து பறந்து சிறந்து வந்திறங்கவும் தாமரைத்தடாகங்கள் ஆலஞ்சுற்றி திருஷ்டிகழிக்கவும், தாமரைப்புஷ்பங்கள் தையலார் முகமலர்ந்து பார்ப்பதுபோலவும், மரங்கள் சிரக்கம்பம்செய்வது போலவும், தேனீக்கள் சங்கீதரசம்போமென்றோசைக்காட்டவும் கருவண்டுகள் ஒத்திசை கூட்டவும் வெள்ளைமேகங்களிறங்கி கொள்ளையாய் வஸ்திரவரிசை கொடுப்பதுபோலக் கொடுக்கவும், கருமேகம் பொன்மாரிபோற் பொழியவும், மலையருவி

கள் மத்தளவோசைபோல் முழங்கி விழவும், தவில்கள் தாளந்தொ
னிக்கவும், சங்கினங்களெங்கு முழங்கவு மிராநின்ற அந்தத்தோப்புநடு
வில் கொலுக்கொண்டிருப்பது போல் பருத்தவில்வமாமொன்று
வானமளாவியுயர்ந்து மலர்ந்து தழைந்து காய்த்துப்பழுத்து உலகம
ளந்த பெருமானோ வென்று தேவர்கள் முதலிய பிரம்மாவும் நினைக்
கும்படியாய்ச் சிறந்தோங்கி இருந்தது. அப்படிப்பட்ட கூவிள விருட்
சத்தி நிழலில் ஏற்படுத்தியிருக்கின்ற வெள்ளி வேதிகையின்மீது
கரியநிறக் கண்டராகிய பரமேஸ்வரர் பார்வதிதேவியாருடன் எழுந்
தருளி இருந்தார். அப்போது சில தேவகணங்கள் தூய்மையாகிய
கங்காதேவியின் நுரைபோ லிருக்கப்பட்ட சாமரங்கள்வீச வெண்
மையாகிய சுவேதச்சத்திர நிழலில் அஷ்டநந்திதேவர் கட்டியம் பாட
பரிசுத்த ஞானவான்கள் பணிவிடைபுரிய சிவபெருமானுடைய கிரு
பையை மறவாமற் பெறுபவர்களாகிய மெய்யடியார்கள் திரிகரணசுத்
தியாய் மூன்றுவித வணக்கமுஞ்செய்து நால்வகைப் புட்பத்தினாலும்
அர்ச்சித்து பூமாரிபொழிந்து சமுத்திரமானது மகமேரு வமைந்த
மாநிலத்தை வளைந்திருப்பதுபோல் சகலகோடி தேவதைகளுஞ்சூழ்ந்
துக்கொண்டு ஹரஹரசம்போவென்று தோத்திரஞ்சொல்ல இயக்கர்
சித்தர், கின்னரர், சாத்தியர், விஞ்சையர், பூதர், பைசாசர், முத
லானவர்களும் இசையுள்ள சாமகானங்களினாலே ஈஸ்வரனுடைய
லீலாவினோதத்தை வீணையில்மீட்ட, மாயையற்ற சதகோடி சீவன்
முத்தர், பிராமணரிஷிகள், தேவர்கள் முதலியவர்களும் பிரதக்ஷண
நமஸ்காரம்பண்ணி, மகாதேவருடைய மலரடியை அளப்பில்லாத
மோட்சவீடென்று பிரம்மாநந்தங்கொண்டு பரவசத்தராய்ப்பணிய,
தும்புருநாரதர் தென்பாகிய ஏழிசைபாட, கொன்றையும் தும்பை
யுங் கூவிளமும் கரந்தையும் கங்கையும் திங்களும் முப்புரிநூலும்
பொங்கரவமும் பொன்னிறச் சடைமுடியுடன் பொருந்தி, மரகதக்
கொடிபடர்ந்த பவளமலைபோன்ற திருநீறுநிறைந்த திருவுருவுடைய
சிவபெருமான் நகம்கீன்ற புலித்தோலாடையுடன் யானைத்தோலும்
போர்த்து ஒருபாதம் முயலகன் முதுகினிடத்தும், மற்றொருபாதம்
தொடையில்மடித்தும் திவ்விய தேஜோமயமாகிய ஐந்து திருமுகத்
தை அடியார்களுக்குக்காட்டி அவர்களின், விருப்பங்குறையாமல்
சுகப்பேறுகொடுத்து, கருணைக்கண்காட்டி கடாட்சித்துக்கொண்டி
ருக்க, சோம சூரியாக்கினியென்கிற மூன்று கண்ணுந்துலங்க சுற்றி
லுந் தோளெட்டினும் மான்மழுவும் சூலகபாலமும் பிறையும், சடை
முடியும், அபயவரதமும்; சிறுநகையும், மகரகுண்டலமும் வாசமலர்மா

லேயும், சகலகோடி அண்டங்களையும் பெற்றுவளர்த்த நாதவடிவான உண்ணாமுலையுடன் தூண்டா விளக்கின் சுடரொளிபோல் ஆண்டவனெழுந்தருளி இருக்குங்காலையில்; அடியேன் பூர்வபுண்ணிய நலத்தால் போற்றிப்பணிந்து கிருதார்த்தனாகி பிரதட்சண நமஸ்காரஞ் செய்து திருவோலக்க தரிசனங்கண்டு பார்க்கப் பார்க்கப் பரவசமாய்க் களித்து என்பு உருகி அன்புபெருகி தேகஞ்சிலிர்த்து மயிர்க்குச்செறிந்து நாக்குழறி ஆநந்தநடனம்புரிந்து சாஷ்டாங்கமாக வணங்கி அவர்களடியை என்முடிமேற் பொருத்தி கண்களிலொத்தி, கைகட்டி வாய்புதைத்து வேதோக்தமாகிய தோத்திரஞ்சொல்லி யாழ்பீட்டி வீழ்ந்தெழுந்து நின்றேன். அப்போது ஆதிபகவனுக்கு அருள்வாரி சுரந்து அநுக்கிரகம் பண்ணினார். என்போலொத்த கோடி ஞானமுனிவர்களுக்கும் கடாக்ஷித்தருளினார். நாங்களெல்லாம் பேரின்ப வாரிதியில் மூழ்கிப்பிழைத்தோம். அந்தவேளையில் உலகமாதாவாகிய உமாதேவியம்மன் ஆகாசசொரூபச் சுடராகிய ஆதிபாண்டரங்களைப்போற்றிசெவ்வாம்பல் மலரிலிருந்து தேன்சொரிவதுபோல திருவாய்மலர்ந்ததென்னெனில் ஓ, கண்ணுதன்மூர்த்தியாகிய கைலைக்கரசே! பற்பலகோடி அண்டங்களிலேயும் பொருந்திய, சகலாத்மகோடிகளையும் பெற்றவரியாவர், அவ்வாத்மகோடிகளைக் காத்திரக்ஷிப்பவர் யாவர், அவைகளை மறுபடியும் அழிப்பவரியாவர், சூரியன், சந்திரன், அக்கினி முதலான கிரகங்கள் எப்படி யுண்டாயிற்று, இதுகளெல்லாம் உலகத்திற்கு உபயோகமென்றுமறவாமற்செய்தவர்யார், இவைகளைக்குறித்து எனக்கு எப்போதுஞ் சந்தேகமில்லாதிருக்க அநுக்கிரகம் பண்ணவேண்டும் ஐயனே யென்று கேட்க சோமசுந்தரக் கடவுளாகிய கிருபாநிதி அம்மையைநோக்கி புகலுகின்றார்.

104. சகலாத்மகோடிகளையு முண்டாக்கினவரும், அவற்றை இரக்ஷிப்பவரும் அழிப்பவரும், கிரகங்களை அந்தந்த நிலைகளில் நிறுத்தி உலகங்களுக்கு உபயோகமாகச் செய்தவர்யாரென்ற உமாதேவியின் கேள்விக்கு உத்தரம்.

கேளும், பராபரையே! பிரிதிவியண்டம் அப்புவண்டம் தேயுவண்டம் வாயுவண்டம் ஆகாய அண்ட முதலாகிய பலகோடி யண்டங்

களையும் நித்தியமாயுண்டாக்கி அவைகளுக்கொரு கெடுதியுமில்லா மல் நாள்கள், நட்சத்திரங்கள், திதிகள், யோகங்கள், கரணங்கள், கிர கங்கள், இராசிகள், வான்மீன்கள்,வேதங்கள், ஆகமங்கள், புராணங் கள்,சாஸ்திரங்கள்,உயிர்வருக்கங்கள், பலரூபமான பேதங்கள் இவை களையுடைய நால்வகையோனியும், எழுவகைத் தோற்றமும், எண்ப த்து நான்குலட்சயோனிபேத ஜீவராசிகளாய் உற்பவிக்கச்செய்து விரிந்த ஆன்மாக்கள்தோறும் நீங்காமல் யாவற்றிலுங்குடியாயிருந்து அவற்றிற்கு நல்வினைதீவினைக்குத்தக்கபடி தனுகரண புவனபோகங்க ளைத்தந்து, பிடிபடாமலிருப்பவன் யானே! எங்குந்தானாய் நிராமயமா ய்நிட்களமாய் ஏகமாய், பழம்பொருளாயிருப்பவனும்யானே! என்னு டைய அங்கமானது பிரமாண்டத் தெல்லைக் கடங்காததாய் இவ்வள வென்று முடிவு பெறாததாய் சங்கல்பங்களொன்று மில்லாததாய் விகற்பமற்றதாய் ஜோதிமயமாய் பஞ்சபூத சகித தத்துவமாய், தனி முதலாய் யோகஞான சொரூபமாய், பிரமாநந்தப் பெருக்காய், பேரா நந்தவெள்ளமா யிருப்பவனும்யானே! ஒருவராலுமென்னை உணரப் படாது, ஊனக்கண்களாற் காணப்படாது, ஏகமயமாய் நிகள நிஷ்கள சொரூபமா யிருப்பவனும்யானே! ஒருகால் திருவிளையாடற் புரியும் பொருட்டாக வெட்ட வெளியிலே நின்று அலையிலெழுந்த குமிழி போலும் மேகங்களினுள் மின்னும்மின்னலைப்போலும்,உலையிலுருகிக் கண்விட்டாடிய பொன்போலும் பொருந்தி, மூவராய்ப் பிரிந்து உலக சிருஷ்டியில் விரிந்து ஓரிடமில்லாமற் றிரிந்து உடலுயிரொன்று வள ர்ந்து சிருஷ்டி திதி சம்மாரம் முதலியவை புரிந்து விடுவது என்னு டைய விளையாட்டுதான்! பிரபஞ்சம்யாவும் யானேதானும்! பிரம்மம் தனிப்பிரம்மம்தான்தானே பிரம்மம்!நானேபரமநாதமென்றுணர்வை. இவ்வண்மையுள்ளதன்மையாலுல்தேவரீருக்குஇந்தரூபமேன்வந்தது யென்று இமாசல நாயகியாகியபார்வதாதேவியார் வினவ,பரமேஸ்வரன் விசுவாசித்து.ஓ!பவானி இந்தத்தேகம் எனக்குச்சகளம்.இதனிடமாய் வருபவர் மூவர். அவர்கள் முக்குணரூபர். முத்தொழிற் பிரதாபர். சிருஷ்டி திதி சங்கார மூன்றும் நடத்துவார்கள். சிருட்டியில் மண் பொறுத் தந்தையென்றும், திதியில் ரட்சகனென்றும், சம்மாரத்தில் உருத்திரனென்றும் பொருந்துவார்கள். இவர்களுக்கு வேண்டியமு யற்சியு முறைமையுஞ் செய்துக்கொண்டு இம்மூவரினும் பிரவேசித் திருக்கின்றேன். சூரிய சந்திர அக்கினியும் என்னுடைய கண்களா இருக்கின்றார்கள். என்னுடைய சுவாசமே உலகமெங்கும் வாயுவாக உலாவுகிறது,பாதலமே எனது பாதங்களாகும். அண்டகடாகம் என்

னுடைய திருமுகமண்டலம், மத்தியகண்டங்க ளெல்லாம் என்னு டைய உடல், என் சொல்லானது வேதம். என்னை நினைப்பவர்களு க்கு நான் சமீபம், நினையாத வர்களுக்குத் தூரம், என்னுடைய மா னசத்தால், அநேகங்கோடி உருத்திர கணங்கள் பிறந்தது. மஹா விஷ்ணுவின் திருநாபிக்கமலத்திற் சனித்தபிரமன் எமதுஆக்ஞைப்ப டிக்குப் பிராணிகள் முதலியவற்றைப் பிழையறப் படைத்தான். அந் தச் சராசரங்களை மஹாவிஷ்ணு காத்திரட்சிப்பவன். அவ்வுயிர் வர்க் கங்களை அழிப்பவன் உருத்திரன். அழிந்துபோகின்ற ஆன்மா பக் தி வயிராக்கிய முற்றிருப்பதற்குப் பிறவித்துன்பம் வரவொட்டாம லும் தனுகரண புவனபோகங்களை பாதுகாக்கவேண்டிய நிமித்தமாய் நானிந்த உருவங்கொண்டிருக்கின்றேன். இப்படிக்கிருந்த போதி லும் சத்தி சிவம், நாதம், விந்து, கூடாமல் எதுவு நாடாது, ஆனது பற்றி பிரபஞ்ச நிமித்தமாக எனக்குள்ளே மஹாவிஷ்ணுவும், மஹா விஷ்ணுவிற்குள்ளே நானுமாயிருந்தால்மாத்திரம் உலகமாம். இல்லா விட்டால் பிரயோசன மிராது,இந்தரகசியம் ஒருவருக்குந்தெரியாது. அருமையானவர்களுக்குத் தெரிந்தாலும் பிரியாது. பேதமையால் நான்வேறு விஷ்ணுவேறென்று பேசுவார்கள், துஷ்டர்கள் வாதிப்பா ர்கள் தூஷிப்பார்கள், இஷ்டர்கள் பூசிப்பார்கள் விவேகிகள் யோசிப் பார்கள், நானுயர்ந்தவனென்று சிலர்சொல்லுவார்கள், விஷ்ணு உய ர்ந்தவனென்று பலர்சொல்லுவார்கள். நானில்லாமல் திருமாலில்லை மாலில்லாமல் நானில்லை, நாங்களிருவருமின்றி எதுவுமில்லை. நாங்க ளிருவரும் அபின்னப்பொருளென் றறியாமல், பின்னத்தனத்தாற் கொன்னிப்பேசி மர்மந்தெரியா மதத்தவர் பிதற்றுவார்கள். மதிமகிழ் ந்து எங்கள் மகிமையறிந்த மகானுக்கள் முனீஸ்வரர்கள் முதலிய யோகஞான தத்வநிலையறிந்தவர்கள் இரண்டு மொன்றென்று எண் ணித்தவம் பண்ணுவார்கள், இதோ நம்மைத்தரிசனம் பண்ணிக்கொ ண்டிருக்கிற இவர்கள் பேதப்படாத பேரறிவுடையவர்கள். புண்ணிய தேகிகள் புனிதர்களென்று பூதநாதன்புகல, பொருப்பிற்சிறந்த பூங் கொடியாகிய மஹாதேவி கேட்டு புளகாங்கிதமுற்று சுவாமி ! மஹா தேவ சம்போ! தத்வஞான கருணாநிதியே! தயாபரப்பொருளே! எ ன்றுதோத்திரஞ்செய்து இரண்டுகைகளையும் தலைமேற்குவித்து எண் டோளிறையே யென்று போற்றிஇன்னமொன்று கேட்கத் தொடங்கி னாள்.தெய்வமே! சோமசூரியாக்கினி மூன்றும் தேவரீருடைய திருக் கண்களென்றீரே! இக்கண்ணை மூடினால் அம்மூன்று ஜோதிக்கும் பிர காசித்தலிராதோ வென்றாள். அதற்குப் பரமசிவம் ஆம் உலக

மிருண்டுபோம், ஒருசோதிச்சுடரும் உதவாது உதவாதென்றுரைத்தனர். பார்வதிதேவி அதைப்பரிட்சிப்போமென்று காந்தள் மலர் போன்ற கையைவிரித்து அவர் இரண்டுகண்களை மூடினாள், உடனே சந்திர சூரியருமறைந்து பதினான்குலோகமு மிருண்டு சந்தேகப்பட்டவ ருள்ளம்போல் இருண்டுவிட்டது. அப்போது, வேதநியமங்கள் ஆசாரங்கள், பூசாவிதிகள், போசன நைவேத்தியங்கள், இதெல்லாங்கெட்டு தோற்றம் உற்பத்தி ஒடுக்கம் சங்காரங்களியாவுந் தவறிப் போய் காலங்களின் அளவைதெரியாமல், ரிதுக்கள், மாதங்கள், வருடங்கள், வாரங்கள், பட்சங்கள், இதுகளெல்லாந் தடுமாறி தேவதைகள் முதலாகிய சகலாத்மகோடிகளும் திடுக்கிட்டு நைந்து நொந்து வருந்தி வாடியகாலையில் பசுபதியானவர்எவற்றையும்பரிபூரணராஇருந்தறிந்தஎம்பெருமானாகிய கர்த்தர் உலகமியாவும் இருள்மூடிய படியினாலே தமது நெற்றிக்கண்ணைத் திறந்தார். உடனே அந்தகாரம்நீங்கி பந்தபாசமகன்ற பான்மையா லோங்கிவிளங்கியது. அதைப்பார்த்து பார்வதியம்மன்பயந்து மூடியகையைத் திறந்து கால்மேல் விழுந்து கண்ணீருகுத்து கரத்தைக்குவித்து அண்டர்நாயகனே! ஆதிபுங்கவனே! அடியேன் அபராதியாயினேன்,என்குற்றங்களை க்ஷமித்து என்னையாண்டருள்கவென்று போற்றிஏத்தி வாழ்த்தி தோத்தரித்தாள். அதைக்கண்டு பரமமூர்த்தி மகிழ்ந்து பார்வதியைப் புகழ்ந்து பயப்படாதே யென்று சிலவார்த்தை பேசுகிறார், ஓ சிவகாமியே நீஎன்னுடைய கண்ணிரண்டையும்புதைத்தாய் அதனாலே உலகமிருண்டுகலகம்விளைந்தது,எல்லாரும் என்னைச்சிந்தித்து வருந்தினார்கள், வந்திப்பதைமறந்துவிட்டார்கள் அவர்கள்கடைத்தேறுவதற்கு ஸ்நான அனுஷ்டான செபம் சிவபூசை தவமுதலியவைகளும் தாட்சி,இல்லாமல் நடக்கும் படிக்கு நெற்றிக்கண்ணைத்திறந்தேன், அப்பால் மன்னுயிர்கள்யாவுந் துன்னிப் பிழைத்தது. உலகத்தைமறைத்த இருளுமோடியது இப்போது நீமறைத்த கையையெடுத்தபிற்பாடு சூரியனையும், சந்திரனையும், பார்த்துவேர்த்து வெதும்பிய ஆத்மகோடிகளியாவும் கவலை நீங்கி களிப்புற்று வாழ்ந்தார்கள். நான் எப்போதும்போல நெருப்பான நெற்றிக்கண்ணை மூடிக்கொண்டேன் நாராயணியென்று மகாதேவ னவின்றார்.

அழிவில்லாத ஞானமங்கைதொழுது, ஆதியே! தேவரீருடைய ஒப்பில்லாத உல்லாசத்தை ஆறிவார்கள் அடியாள் தெரியாமற் பழிதேடிக்கொண்டேன், என்சிக்கை மடிந்து இடிந்துபோய்விட்டது இதைமன்னிக்கவேண்டுமென்று வணங்கி இன்னமொன்று கேட்கத் தொடங்கினாள்.

105. பரமசிவத்திற்கு ஐந்து முகம் வந்ததற்குகாரணமியாதென்று உமா மயேஸ்வரி கேட்ட கேள்விக்கு உத்தரம்.

கருணைக்கடலாகிய கடவுளே உமக்கு ஒருசிரசில்சோடசகலாப் பிறை பிரசித்தமாயிருக்க மற்றநான்கு சிரம் வரவேண்டியநிமித்தமென்ன! அதனது விபரம் நானறியும்படிக்கு அருள்புரியவேண்டுமென்று கேட்க,அதற்கு ஆதிபகவன் கிருபைகூர்ந்து அருள்செய்யத் தொடங்கினார். ஓ, பார்வதி! மகாவரப்பிரசாதிகளானமாதவரும் முனீஸ்வரரும் தேவதைகளும் அன்புடைமைப் படைத்த மெய்யடியார்களும்கடைத்தேறத்தக்கதாகச் சொல்லுகிறேன்.ஓபராபரை! பராக்கிரமசாலிகளாய் உலக கண்டகராய்உயிர்களுக்கபகாரிகளாய் யாவரும்எதிரில்லாதவர்களாய் எல்லாவரங்களும் உரங்களும் பெற்றவர்களாய் தங்களுக்குத்தாங்களே சண்டைசெய்து இறந்தாலிறக்கலாம் மற்றொருவராலும் சுற்றுப்புறத்தி லுள்ளவராலும் பற்பலகோடி ஆயுதங்களினாலும்மரணமில்லாவரம்பெற்றிருந்த சுந்தோபசுந்தரென்கிற தானவர்கள் செய்த அக்கிரமங்கள் எண்ணிமுடியாது. அவர்களைக்கொல்ல வேண்டுமென்று மனத்தில் நினைத்துஅவர்களுக்காகதேவஅரம்பைமுதலிய பெண்களின் அழகுகளில் திலகமத்தனை எடுத்து பிரம்மா சிருஷ்டித்த திலோத்தமை என்னும் பெண்ணானவள் சதாநந்தரிடத்திற்குப்போய் அவரையழைத்துக் கொண்டு என்னிடத்திற்குவந்து எனக்குவழிபட்டு சிஷ்டாசாரத் தன்மைதெரிந்து அன்புமிகுத்து பணிந்து பிரதக்ஷணம் பண்ணினாள்.ஒருவருக்குங் கிடைக்காத பேரழகைப்படைத்த பெண்பெருமாளானவள் என்னைவலம் வருகிறபோது ஒருமுகத்தால் திரும்பித்திரும்பிப்பாராமலும் அவள்விரும்பிக்கேட்டுக்கொண்டபடி நான்கு பக்கத்திற்கும் நான்குமுகம் உண்டாக்கிக்கொண்டு அன்னம்போல் நடக்கின்ற அவளழகைப்பார்த்திருந்தேன் அன்றுமுதற்கொண்டு இன்றையவரைக்கும் ஐந்துதலையாகவே அமைத்துக்கொண்டேன் ஆரணி, இதல்லாமலும் ஈசானம், தற்புருடம், அகோரம்,வாமம்,சத்தியோஜாதம், இவற்றுள் ஆக்கல் காத்தல், அழித்தல்,மறைத்தல், தோற்றுவித்தல், இவ்வைந்து குணமுடையது ஐந்துமுகமென்று சொல்ல, மாதேவிகேட்டு சுவாமி,உமது கண்டத்திற் கறையாகியதென்னவென்ன.

106. பரமசிவத்திற்கு கண்டத்தில் கறையாகிய காரணம் யாதென்ற உமையவள் கேள்விக்கு உத்தரம்.

ஓ ! கௌரீ, முன்னாளையில் துருவாசருடைய சாபம் பெற்ற தேவேந்திரன் செல்வங்குன்றிப்போய் மஹாவிஷ்ணுவைப் பணிந்து தொழுது அழுதான், அது நிமித்தம் திருமால் மந்தரகிரியைமத்தாகவும் வாசுகியைதாம்பாகப்பூட்டி பாற்கடல் கடைந்தனர். மந்தரமாகிய மத்திற்பூட்டியவாசுகிவருந்தி விடத்தைக்கக்கினன். அவ்விஷம் காலாக்கினிபோல் நாலாய்ப்பிளந்து மூலைக்குமூலை முட்டிச் சுடர் தகிக்கும்போது அங்குள்ள சகலகோடிதேவர்களும் அதி தேவதைகளும் அந்த விஷச்சுவாலை பொறுக்கமாட்டாமல் வருந்தி உடல்கரிந்து ஒருவரையொருவர்பிரிந்து என்னைத் துதிதுதுத்தோத்திரம் பண்ணினார்கள். உடனே நான் பிரசன்னமாகி தேவர்களுடையதுன்பத்தை நீக்கும்பொருட்டு அங்கு எழுந்த ஆலகாலவிஷத்தின் அகத்தை யடைக்கி அகங்கையிற்றிரட்டிப் புசிததேன், அப்போது தேவர்கள் முதலியவர்களும் துதித்துப்போற்றி சுவாமி நாங்களும் மறக்காமலிருக்கும் படியாக அண்டத்தை எரித்த இந்தவிஷத்தைக் கண்டத்திற்றனே அமைக்கவேண்டுமென்றுவேண்டிக்கொண்டார்கள். அதனாலே என்கண்டத்தினிடத்தில்நிறுத்தினேன், இதைக்கண்டதேவர்கள் முனிவர்கள் முதலிய யாவரும் துன்பம் நீங்கி இன்பமாகிய அமுதபோசனம் பண்ணினார்கள். அதுமுதல் நீலகண்டனென்று எனக்கும் பெயருமிட்டார்கள். ரிஷிகள் முதலான உலகிலுள்ளயாவத் புருஷர்களுடைய கண்டத்திலும் அதுமுதல்ஓரடையாளமாகக்காணப்படும் என்றுரைத்த இறைவனை உலகமாதாவானவள் நோக்கி என்கருணைக்கடலாகிய கண்ணுதலே உமதுதிவ்விய திருக்கரத்தில் பிநாகமென்னும் விற்பிடிக்க வேண்டிய காரணமென்ன வென்று வினவ அதற்குப்பரமேஸ்வரர் சொல்லுகின்றார்.

107. பிநாகம் என்கிறவில்லை பரமசிவம் பிடித்தகாரணம் யாது என்கிற பிரசினைக்கு உத்தரம்.

கேளும் நாராயணீ! பிநாகம் பிடித்ததற்கு காரணம் வருணங்களிற் சிறந்த பிராமண குலத்திலவதரித்த கண்ணுவரிஷி தவத்தி

லுயர்ந்த முதன்மையானவர். பெரியோர்க ளியாவருங்கொண்டாடத் தக்கவர், பாசபந்த அவாவாகிய ஆசை வேறறுத்துப்போகும்படி நெடுநாள் தபசு பண்ணினூர், அசைவற்றிருந்த தவநிலையினுல் காற்றுகளடிக்க அதனுற் படிந்த தூசுகள்பனிநமரினுல் புற்றுபோற் குவிந்து மண்மூடிப் போயிற்று.அந்தப்புற்றின்மேல் ஒரு வயிரம் போன்ற மூங்கில் முளைத்து ஆகாயம்வரைக்கும் வளர்ந்து சூரியசந்திரர் முதலாகிய நட்சத்திரங்களை உறுய்ந்து மிகப்பெருகித் துயரம் விளைத்துத் தலையாட்டிக்கொண்டிருந்தது; அதனுல் தேவர்களெல்லாரும் வருந்தி சிருஷ்டிகர்த்தாவினிடத்தில் முறையிட்டார்கள். முதற்கடவுளாகிய பிரமதேவர் அந்த மூங்கிலைப்பார்த்து அதனது பருமத்திற்கும் உயரத்திற்கும் சந்தோஷப்பட்டு, அந்த மூங்கிலைவேருடன் களையவேணுமென்று மகாரிஷியை மூடிக்கொண்டிருந்த புற்றையுங் கழித்து அந்தப்புற்று மண்ணோடு மண் மூடிப் பொருந்தித் தவமிருந்த கண்ணுவரிஷியைக்கண்டு மகிழ்ந்து உம்மைப்போல் உறுதியாய்த்தவமிருந்தவரொருவருமில்லையென்று அவரைக்கொண்டாடிப் புகழ்ந்து, அவருக்கு அனுக்கிரகம்பண்ணி விட்டு தேவர்களும் முநிவர்களும் சேர்ந்துகேட்டுக்கொண்டபடி அவர்மேல்முளைத்திருந்த மூங்கிலை மூன்று துண்டாக்கி கடைக்கண்டத்திற் செய்த வில்லுக்குக்காண்டீபமென்று பெயரிட்டு பிரம்மதேவனெடுத்துக்கொண்டு, நடுக்கண்டத்திலேர்ப்படுத்திய வில்லைசாரங்கமென்று.பெயரிட்டுமகாவிஷ்ணுவிற்குத் தந்து,அடிக்கண்டத்தாலானவில்லை பிநாகமென்றுபெயர்நாட்டி எனக்குக்கொடுத்தனர், லோகோப காரமாய் அந்தவில்லைப்பிடித்துதேவர்களுக்கு நோய்பழிகுற்றங்கள்தீர்க்கவேண்டுமென்றுவேண்டிக்கொண்டார்கள், அதனுல்எனக்குப்பிநாகபாணியென்றுபேர்வந்தது,நானும் அந்தப்பிரம்மாவின் சொல்லைக்கொண்டும் இந்தவில்லைக்கொண்டுதேவதைகளுக்கு இடையூறுவிளைவிக்கும்இராக்கதர்கள்மேலிட்டால்அவர்களை அதப்படுத்திதேவர்களை இரட்சிப்பேன். சாமானிய இராட்சசர்களை இராட்சசவயிரியாகிய நாராயணன் அச்சாரங்கத்தினுல் கொல்லுவார், அவருக்கடங்காத்திடங் கொண்ட வர்களைநான்சம்மார கிர்த்தியஞ்செய்து ஜாடுவேன், இது என்னுடையவேலை. இந்தப்பிநாகம் வந்ததற்கும் நான் கைப்பிடித்ததற்கும் காரணமிது தானென்று, காமனைக் காய்ந்தோனுரைக்க, கயற்கணம்மைகேட்டு,அன்புருகிப்பணிந்து கசிந்து சொல்லுகின்றாள் கடவுளே! மதம் பொருந்திய யானைகள் பொன்மயமான விமானங்கள் திவ்விய கதியுள்ள அஸ்வங்கள் இப்படிப்பட்ட வாகனங்களெல்லா மிருக்க இதுகளை விரும்பாமல் இரிஷபத்திலேறி வருவா

வானேன் அதனுடைய தவமென்னமோ வென்றாள், அதற்கு ஈஸ்வரன் சொல்லுகின்றார்.

108. பரமசிவத்திற்கு இரிஷபம் வாகனமாயினகாரணம் யாதென்ற சங்கைக்கு உத்தரம்.

கேளும் சுத்தசீலசத்தியே, நந்தியென்பது சத்தியம், தருமம், புனிதம், இம்மூன்றும்பொருந்திய தன்மையால் அதைமால் விடையாகக் கொண்டேன். மற்ற வாகனங்களின்பேரி லேறுவதற்கு மனமில்லை, எனக்குவாகனமாக தருமதேவதையே இரிஷபமாக வந்த காரணமுண்டு:அதென்ன வென்னில் பூர்வம் பர்வதராஜனுக்குப்பக்கத்தில் ஓர்பர்ணசாலையில் இவ்வுலகம் சுகம்பெறவேண்டி தியானத்திலிருந்தேன். அப்போது ஒரு ரிஷபம் என்னிடத்தில்வந்து பிரதக்ஷணம்பண்ணி தினந் தினந் தப்பாமல் சேவித்துக்கொண்டிருந்தது இன்னும் காதுகளினாலும், கொம்புகளினாலும், நாவினாலும், வாயினாலும், தேகத்தினாலும் என்னைத் தீண்டிக்கொண்டே யிருக்கும் அதன்கருத்தை நானறிந்து அதனிடத்தில் உள்ளன்பு புரிந்து வெளிக்கு தயவில்லாதுபோலக் கொஞ்சங் கோபங்காட்டினேன், அந்தவேளையில் பிரம்மாமுதற்கொண்டு சகலகோடி தேவதைகளும் என்னிடத்திற்குவந்து சர்வஜீவதயாபர மூர்த்தியே ! சத்துச்சித்தானந்த தற்பரநாதா சாம்பசிவா சம்போ என்று என்னைவணங்கி வாழ்த்தி போற்றி இந்தநந்திகேஸ்வரர்உம்மைநத்திநித்தம் அர்ச்சனை பண்ணிக்கொண்டு வருகின்றார். இவர்பேரில்தேவரீர்கிருபைவைத்து இரட்சிக்காமல் கோபிக்கவேண்டியதென்ன இவருடைய எண்ணம் தேவரீருக்கு வாகனமாகவும் கொடியாகவும் இருக்கவேண்டு மென்கிற இச்சையுள்ளவராயிருக்கின்றார், இவரிஷ்டப்படிக்குக் கட்டளை இட்டருளவேண்டு மென்று வரங் கேட்டார்கள். அவர்களின் வேண்டுதலின்படியே வாகனமாகவும், கொடியாகவும், இரிஷபத்தை பொருத்தினேன் என்றார் பால்போன்ற மொழியையுடைய பரமேஸ்வரிகேட்டு பாக்கியமென்று மீண்டுஞ்சொல்லுகின்றாள்.

ஓ பராபரப்பொருளே ! புனிதமான பூமியில்வாசம் புரியாமல் என்பும், நரம்பும், தோலும், உடலும் ஓடும், பூதமும் பேயும், நாயும், நரியும், முனியும், உறங்குவதற்கு மேடிட்டுக்கிடக்கிற மசானத்தில் தாங்கள் வாசம்பண்ணவேண்டிய வாறென்னவென்ன; பிரளயகாலாக்கினிக் கண்களையுடைய பினாகன் பேசத்தொடங்கினார்.

109. பரமசிவம் மயானவாசம் செய்யுங் காரணம் யாதென்ற கேள்விக்கு உத்தரம்.

கேளும் தற்பரையே சர்வசங்கமபரித்தியாகம்பண்ணி ஆசாபாசங்களற்று மோட்சமடையவேண்டுமென்று எண்ணிஇருக்கின்றமுத்தர்களுடைய மனதிலே வினைதேய்ந்து இருவினை யொப்புமலபரிபாகமுள்ளமுத்தாத்மாக்களின் நினைவுமறைந்தஇடத்தில்விதிமாண்டுபோன இடத்திலே வாசமாயிருக்கிற நான் இவைகளுக்குமேற்பட்டுஎதுவுமல்லாமற் கடந்து சம்பந்தமொன்றுந் தொடாமல் இனிப் பிறவி எடுப்பதற்கேது வில்லாம லிருக்கும் இடமாம் அந்தரங்க மயானம். இன்னும் பாழாய் சூனியமாய் ஒன்றுமில்லாதது நிற்குணமயானம் சகுணத்திற்கு சகளீகரித்துசகலதத்துவங்களுடன் குணங்குறியுடன் குலாவிஇருப்பது, ஆசாபாசரோஷநேச விசுவாச பூசாவிதிகளும்தன தாய்ப் பெண்டுபிள்ளைகளும் பண்டுபதார்த்தங்களும் போகபாக்கியங்களும் பொருந்தி எல்லாந் தானென்றிருந்து முடிவில் உயிர்போம்பொழுது, ஒன்றுக்கொன்று சம்பந்தமில்லாமல் தான் இன்னதென்றறியாமல்மயங்கி வீடு விட்டு பிரத்தியக்ஷமாய் தானேதேகமென்றிருந்த தளரா தேகத்தை தணலிலிட்டு தகனம்பண்ணிச் சாரமற்றுப்போன என்பைச்சலத்திலே வாரிக்கொட்டி நேற்றுமில்லை இன்றுமில்லை என்றைக்குமில்லா திருந்ததனை,நேற்றிருந்தார் இன்றில்லை என்று முறையிட்டு முற்றுப்பெற்றது அநித்தியமயானம். ஜீவன்முத்தராகிய பவமற்றபேருக்கு நினைப்புமறப்புமில்லாதது நின்மயமயானம்; அதுவே நிராகாரவெளி, அதுதான் எனக்குரிய இடம், மஹேசஸ்தானமென்பது. அதனால் என்னை மசானவாசியென்பதாம். களங்கமற்ற பாழ்வெளியி லிருப்பவனானபடியால் அக்கியான கேவலத்தால் சமானமான மருளைப் போக்கடித்து நிற்குணபூமியென்று வந்தபெரியோர்கள் தேவதைகள், ஜீவன்முத்தர்கள் தெய்வ மயான மென்பார்கள்.அவர்களின் மாசற்ற மனோவெளியே எனக்குவாசம. ஞானிகளும், அக்கியானிகளும் ஈமத்தாடியென்று என்னையழைப்பார்கள் இதன்றியும், வாசனைபெற்ற தாமரைமலர்மேல் வாசம்பண்ணப்பட்ட பிரம்மதேவன் சிருஷ்டிக்கப்பட்ட அளவிறந்த கோடி ஆன்மாக்களை அடியோடே கொன்று அழிக்கப்பட்ட என்னுடைய பூதகணங்களைக்கண்டு பயந்து நடுங்கி, தாரைதாரையாய்க் கண்ணீர்விட்டழுகின்ற பிராணிகள் கருணைத்திருமேனிக் கடலே நெடிய நிலையுடைய நிருமலதீபச்சுடரே அண்டபகிரண்டத்தும் அசைவற்ற மசானத்தும் பொருந்திய ஆநந்

தப்பதமே! அமுதரசப்பெருக்கே! எம்மை இரட்சியுமையா வென்று வேண்டிக்கொண்டால், நான் அவர்களுக்கு இரக்கமுடன் நல்லவரங் கொடுத்து அகிலபுவனத்திற்கு வெளியிலேயும் அகிலசராசர நிலத்திற் குள்ளிலேயும் விருப்பமாயிருப்பேன். என்னையறியும் ஞானமுள்ளவர்கள் மயானத்தைப்பற்றற்ற புனிதபூமி என்பார்கள். ஞானசூனமுள்ளவர்கள் அசுசஸ்தான மென்றெண்ணி, பின்னம் பரிக்கும் பூமியாதலால் ஆசார நிமித்தம்சுத்தம் பண்ணிக் கொள்ளவேண்டியதே. இதுலோகாசாரம் உமையவளே யென்று உமாமகேசனுக்க பார்வதியானவள் மகிழ்ந்துசுவாமிதேவரீர், நீறுபூசியதும் எலும்பைப் பூண்டதும் பாம்பையணிந்ததும் சூலந் தரித்ததும் பிறைசூடியதும் பெருஞ்சோதியானதும் பேசவேண்டும் கங்கையைத்தரித்தருளிய சடாமகுடத் தானுவேயென்று கேட்க, மகமேரு வில்லியானவர்வகுக்கத் தொடங்குகின்றார்.

---

110. பரமசிவம் திருநீறணிந்ததும், எலும்பைப் பூண்டதும், பாம்பையணிந்ததும், சூலந்தாங்கியதும், பெருஞ்ஜோதியானதும்,எப்படி என்ற கேள்விக்கு உத்தரம்.

ஓ! பர்வதபாலே, நாமரூப மாவ தெல்லாம் சர்வசம்மார காலத்தில் நசித்துப்போம். அக்காலத்தில் நானொருவனுயிருக்கும்போது சகல புண்ணிய ஜீவாத்மாக்களும் வெந்தெரிந்தநீற்றையெடுத்து விருப்பமாய்த் தரித்துக்கொள்வேன், இதன்றி மறுபடியும் ஆத்மாக்கள் தழைக்கும்போது முன்னுதாகத்தருமதேவதை சரஸ்வதி இலக்குமி உருவமாகிய பசுவை ஏற்படுத்தி பஞ்சகவ்வியாதிகளினால் பூமியைப் பரிசுத்தமாக்கி பூமியிற்பிறந்த புற்களை பசுவிற்கு வாயினாயேற்றி அதனாற் கழிக்குங் கோமயத்தைதகித்து நீறாக்கி மந்திரார்த்தங்களினால் வாரிப்பூசிக்கொள்வேன்.மறுபடியும் ஜீவாத்துமாக்களெல்லாம் கருப்பட்டு உருப்பட்டுப் பிறக்கும்படிக்கு சர்வசம்மாரகாலத்தில் அவர்களிறந்தெரிந்த நீற்றை தருமதேவதை முன்னிலையில் இலகிதமாக அணிவது புனிதமென்று யாவருமறிய அணிவேன்.

இரண்டாவது எலும்பும் பாம்பும் எவர்களும் ஆபரணமாகப் புனைந்துக் கொள்ளார்கள். மற்றதைதரித்துக்கொள்வார்கள் எனக்கு

ஆனதும் ஆகாததுமொன்றுமில்லை. விருப்பு வெறுப்புமில்லை எனக்கு எல்லாஞ்சரியே இந்தக்கருத்திற்குஅடையாளமாக அதுகளைத்தரித்துக்கொண்டேன். முத்தாரம் புனைந்தமுதல்வியே!பெருக்கங்காட்டாமல் சுருக்கமாயிருப்பது பெருமிதத்திலும் பெருமிதமாகும் பெருக்கமாய் டம்பம் ஜம்பம் காட்டாததினால் ஒடுக்கமேயல்லது பெருக்கமில்லை.

மூன்றாவது சூலப்படை ஏனென்றால் சிருஷ்டி, திதி சம்மார மூர்த்திகள் மூவரும் ஒருவருக்கொருவர் பேத மில்லையென்பது தெரிவிக்கதேவர்களா லறியப்படாததிரியாட்சரச்சிகையினையுடைய சூலத்தை மூவுருவமும் ஓருருவமாய்தரித்தேன்.

நான்காவது ஜோதியுருவம் எனக்குவந்த வரலாறு, நித்தியாநந்தக்கடலில் மூழ்கிய புத்திமான்கள் மதிக்கவேண்டியதுசீதஉஷ்டணமென்று இரண்டுவகைப்படும், அவை பூலோகமுதலாகிய சகல புவனத்திலும் பொருந்தாவிட்டால் சகல பிராணிகளும் பிழைத்து உலாவிச் சீவித்து சுகப்படமாட்டார்கள். எந்தவஸ்துவும் விருத்தியாயிராது வளராது ஆகையால் சீதளத்தை விஷ்ணுவிற்கொடுத்து உஷ்ணமாகிய ஜோதிஉருவை நான்தரித்துக்கொண்டேன். உலகத்திறகுக் குளிர்ச்சியாகிய நிலவும் வெப்பமாகியவெய்யலும் போன்று திதியும் சம்மாரமும் நடத்திவரப்பட்டிருக்கின்றது அந்த உஷ்ண சோதிசுவாலையினால் மேனியும் சிவந்ததென்றார்.

பூரணசந்திரோதயம் போன்ற முகத்தையுடைய மலைமடந்தை தனங்கள் புளகமோங்கி, ஓ, தயாநிதியே! கங்கையைச் சடையில்வைத்ததற்குக் காரண மென்னவென்று வினவ: காருண்யராகியகடவுள் சொல்லுகின்றார்.

111. பரமசிவம் கங்கையை சடையில் வைத்ததற்கு காரணமுரைத்தல்.

கங்கையைச்சடையில்வைத்தகாரணம் யாதென்னில் முன்னொருகாலத்திலே, திருக்கைலாயத்தில் விளங்கிய பூங்காவனத்தில் நீயும் நானும் வேடிக்கையார்த்தமாக எழுந்தருளியிருக்கும்போது திருவிளையாடலைக் கருதி சோமசூரியாக்கினியாகிய எமது விழிகளை உனது கரங்களினாலே புதைத்த அக்காலத்தில் உலகங்களை விளக்குகின்ற சூரியசந்திரர் அக்கினி இவைகள் எமது கண்களினொளியாதலாற் பிரகாசியாமலடங்கின தருணத்தில் நிமைப்போதாயினும் புவனங்களுக்கு

அளவற்றயுகங்களாக யிருந்து உயிர்கள்காடாந்தகாரமான இருளிற்பட்டு குருடாகி தடுமாறி அலைச்சற்பட்டன. அதை யானறிந்து அவர்களின் இடரை யொழித்தளிக்கவுள்ளங்கொண்டு நெற்றிக்கண்ணைத்திறந்தேன் அவ்வொளியினால் அண்டாண்ட புவனங்களில் மூடியிருந்த இருளும் ஜீவராசிகள் மயக்கமும் நீங்கி பழயபடியே ஆதித்தனும், சோமனும், அக்கினியும், விளங்கினார்கள். இச்செய்கைகளை கண்டுபயந்து மூடியகைகளை வாங்கும்போது, விரல்களினிடத்துப் பெருகும் வியர்வையையுதற அவ்வியர்வையானது கங்கைகளாகிய சமுத்திரம் போலப் பெருகி, ஆயிரநூறுகோடி முகங்களாய் எங்கும்பரவித் தோய்ந்து, உலகங்களை யழித்தோடின; அதைப்பிரமனாதியர்கண்டு பயப்பிராந்திகொண்டுதிருக்கயிலாயத்திற்கு ஓடிவந்து எம்மைக்கண்டு, சேவித்துப் போற்றி, தீனதயாபர மூர்த்தி, தேவாதி தேவா, சுவாமி, இதோ மிகுந்த வெள்ளமானது கடையுக சமுத்திரத்தினு மேலிட்டு கல்லென்னு மொலியுடன் பெருகி புவனசராசரங்களை யழிக்கத்தொடங்கியது. தேவரீர் சற்றுத்தாழ்வடக்கிலின் அனைத்தும் முடிவெய்தும்: ஆதலாற்கிருபையுற்று ஆதியில் அழன்றெழுந்த விடத்தையுண்டு தேவர்களைபாதுகாத்தது போலவே இதையும் பரித்து, சகலரையும் இரட்சிக்கவேண்டுமென்று வேண்ட, நாம் இரங்கி அவ்வெள்ளத்தை இச்சடைகளில் விளங்கும் ஒருரோமத்திற் சுவறச்செய்தடக்கினோம். இப்பெருமையைக்கண்ட விஷ்ணு பிரமன் இந்திரனாதியான தேவர்கள் இம்மகிமைகளைக் கொண்டாடி சங்கல்பித்து அவர்கள் பார்ப்பதியார் வாமபாகம் பெற்ற தேவரீர் முடியிலே தாங்கப்பெற்ற முயற்சியினால், அது பவித்திரமாகும், ஆதலால் அக்கங்கையிற் சிலபாகம் எங்களுலகங்களிற், பெருகக்கடாட்சிக்க வேண்டுமென்றிரந்தார்கள், அப்போது நாம் அன்பாய் அத்தீர்த்தத்திற் சிலதிவலைகளை அம்மூவர் கரங்களிலே புரோக்ஷிக்க அவர்கள் வணங்கி யேந்தி சிலவுபெற்று, தங்களுலகஞ் சேர்ந்து, அத்தீர்த்தங்களை விட்டார்கள். உடனே அவைகள் பரமபதத்தில் விரசாநதி யென்றும் சத்தியலோகத்தில் மனோவதியில், மானததீர்த்த மென்றும் இந்திரலோகத்தில் தேவகங்கையென்றும், ஆறாகிப் பெருகியிருக்கின்றன அவைகளில் பிரமலோகத்தி லிருந்த கங்கையைப் பகீரதன் அரியதவத்தைச்செய்து பெற்று பரமசிவத்தின் சடையின் மூலமாகப் பூமியிற்கொண்டுபோய் இறந்த அரசர்கள் அஸ்தியின்மீதுபெருக்கினான். கங்கையினது பரிசம் பட்ட மாத்திரத்தில் அறுபதினாயிரம் இராஜபுத்திரர்களும் நரகவாதனை யொழிந்து மோட்சவீட்டில் நித்தியமாயிருக்கப் பெற்றார்கள்.

மற்ற இரண்டும் பொன்னுலகத்திலும், வைகுந்தத்திலும் விளங்குகின்றன. யாம் உலக உபாதியை நீக்கும்பொருட்டுச் சடையில் தரித்தோமென்றார் கங்கையைமுடியிலே தரித்தசரித்திரம் இதுவாகும் என்றியம்ப பிறகு அம்பிகை, சந்திரனை ஜடையில்தாங்கிய காரணம் யாதென்றுகேட்க, ஜடா மகுடனுரைக்கின்றார்.

112. பரமசிவம் சந்திரனை ஜடையில் வைத்ததற்குக் காரண முரைத்தல்.

ஓ எனது நேசமங்கையே, சந்திரனைச் சடையில் வைத்தகாரணம் யாதெனில் தக்கன்செய்த அக்கிரமயாகத்தில் உக்கிரவீரபத்திரனால் உதைபட்டுஉருய்ந்து தேய்ந்துபோன கலைகளெல்லாம்போக ஒருகலைமாத்திரம் இருக்கும்போது உயிர்பிழைக்கும்படிக்கு சந்திரன் ஓடிவந்து என்பாதத்தில் விழுந்து அடைக்கலம் புகுந்து ஆதரிக்கவேணுமே ஐயனேஎன்றான். அவனை யாதரித்து பயப்படாதே யென்று தக்கனால்வந்த சாபத்தையுமொழித்து தேவதைகள் புசித்த அமுதகலையதினமும் வளரும்படி செய்து ஜெகத்தில் கிறுத்தி ஒருகலையுடன் சரணம்புகுந்த சந்திரனை இரட்சித்த அடையாளத்திற்காக ஜடையில் தரித்துக்கொண்டேன். இதற்குமுன் சாரத்துவத்தைக்குறித்து தேவகுருவிட்ட சாபத்தினாலே தேகம்வெந்து நெருப்பாயிருந்தான். அப்போது அபயஸ்தங்கொடுத் தாதரித்தேன். வீரபத்திரன் கோபத்தினால் யாகத்தி லிறக்காமலும் ஆதரித்தேன், இம்மூன்று விதத்தாலும் பிறையை முடிக்க வேண்டியதாயிற்று: தேகங்குளிர்ந்து வளரவும தேயவும் வாழ்வுபெற்று வையகத்தார்மதித்து பயந்து நடக்கவும் சந்திரன் வாழ்ந்திருக்கின்றனன். தாமரையில் வாழும்பிரம்மாவும் தேவர்களும் என் சிரசிலிருக்கின்ற இளம்பிறையைக்கண்டு சந்திரசேகரனென்று எனக்குதிருப்பெயர்தந்து வணங்கினார்கள். இன்னங்கேட்கவேண்டுவனவற்றைக் கேளென்று பிரீதியாய்ச் சொல்ல, அப்போது அநந்தங்கோடி பிரமமரிஷிகளுந் தேவகணங்களும் அடியார்களும் பூசித்துத் துதித்துப் போற்றினார்கள். சாம்பவியும் மகிழ்ந்து சங்கரனைப் பணிந்து ருக்குவேதம் சாமவேதங்களினாற் றோத்திரஞ்செய்து மஹாதேவியாகிய தாய் ஈசனைநோக்கி மாதவர்கள் மகிழும்படிக்கு பாசவாசை வெறுத்து பந்தவினையை யறுத்த பக்தர்கள் பணியும் பதாம்புயனே படைப்பிலுண்டாகிய எல்லாஉயிர்களையும் ஒன்றென் றெண்ணு

மல் ஒன்றுயர்ந்தது ஒன்று தாழ்ந்ததென்று பேதமெண்ணிப் பேசுவா னேன்? உடலுமுயிரு மொன்றாயிருக்க வருணாச்சிரமம் வகுப்பானேன், வருணாச்சிரமங்களுக்கு வேதத்தில் மொழிந்திருக்கிற வாலாறென்ன இதைச்சொல்லவேண்டும் காளகண்டனே என்றுமாதவர்முதலிய பெரியோர்களும மலர்கொண்டு பூசிக்கவரமருள்கின்ற மரகதமேனியும் அருள்விழிப்பார்வையு முமுடைய மகாதேவி கேட்க, ஐயரானக்கடவுள் அருள்செய்தாரொன்று மகதியாழ் வல்லவராகிய நாரதமகா முனிவர் ரிஷிகளுக்குச்சொல்ல ரிஷிகள் மகிழ்ந்து மோனமடைந்து மேனடந்ததையுட விரும்பினுவ நாரதர் விளம்புகின்றார்.

113. பஞ்சகோச உடலுமுயுரு மொன்றுயிருக்கசாதிகள் பலபலவகுப்பான காரணம்யாது என்ற கேள்விக்கு உத்தரம்.

பரமேஸ்வரன் பரமேஸ்வரியை நோக்கி ஓ! பவானி! வருணாச்சிரமம் வருவதற்கு காரணம் பாபமிகுந்த ஆத்மாக்கள் மிருகாதி முதலியபட்சிகளிலேபிறக்கும், அதனிலுங்கியான மிகுந்தால மேன்மையைப் பெறும். இல்லாவிட்டால் சிறுமையடையும், நல்வினை தீவினை சேர்ந்த உடலில் நல்வினை இன்னதென்றும் தீவினை இன்னதென்றும் நாடி, நன்மையைத் தேடினால் மதிவிளங்கிய மானிடயோனியில் வரலாகும், அப்படி ஜனித்தபோதிலும் நல்வினையே மிகுந்துவிட்டால் திவ்விய தேகமுடைய தேவராய் நற்கதிபெறுவார்கள். (வருண நான்கு வந்த முகாந்திரம்) அவரவர் தாய்தந்தை செய்த நல்வினைதீவினைக்கீடாய், புனிதம், சுசி, ஆசாரம் ஒழுக்கமுதலிய மேன்பாடுற்று, சிருஷ்டி கர்த்தாவின் கால் துடையிலும, பாதத்திலும், அடுத்த நாபியிலும் மார்பிலும் தோளிலும், புஜத்திலும் முகத்திலும் நால்வர் பிறந்தார்கள் எந்த இடத்திலெவர் பிறந்தார்களோ அந்தந்த இடத்திற்குரிய செய்கையால் குணத்தையுடைய வருண நான்கென்று வழங்கி வந்தது, பிரமன் தொடையிலும் பாதத்திலும் ஜனித்தவன் சூத்திரனென்றும், நாபியிலும், மார்பிலும் உதித்தவன் வைசியனென்றும் தோளிலும், புஜத்திலும், தோன்றினவன் க்ஷத்திரிய னென்றும் முகத்தில் வந்தவன் பிராமண னென்றும் இவனே மற்ற மூன்றுபிரிவாருக்கும் வேதங்களை யுணர்ந்தவனாய் தருமக்கிரியைகாட்டி கடைத்தேற்

றிவைத்து தேவதைகள் சுகபோசனங் கொள்ளும்படிக்கு அவிர்ப்பாக ங்கொடுத்து வேதத்தைவிடாம லனுசரித்து விதிவழி தருமங்களை வி ளங்கவைத்து தானம், ஓமம், தபம், செபம், சாந்தம், ஞானம், தண் ணளி, ஒழுக்கம், மானம், குலம், கல்வி, ஊனமில்லாம லுணர்ந்து ஈனமில்லாமலிருப்பவராகும்.

இன்னும் வேதிய ரொழுக்கமாவது, வேதமோதல், வேதமோதி வைத்தல், இயாகஞ்செய்தல், இயாகஞ்செய்வித்தல், தானமீதல், தான மேற்றல், இவ்வாறுதொழிலும் பிராம்மணியமான சத்தியமும் அதிதி பூசைசெய்வதும், பிதிர்க்கடன் கழிப்பதும், சூரியனுக்கு அர்க்கியங்கா லமறிந்து கொடுப்பதும் நற்குண நற்செய்கையுள்ள மனைவியுடன் இ ல்லற நடத்துவதும், அறுசுவை யுண்டியும், இரண்டுபோ தூண்ணலு ம், சாத்மீக குணமும், தருமநினைப்பும், விடாச்செபஞ்செய்யும் வாக் கும், தேகம்தேவதார்ச்சனைக்காகவும்இயமநியமாதியோகமிருந்துமுடி த்தாலும் ஜீவகாருண்ணியமும், சிந்தைபரிசுத்தமும், அக்கினிபூசையு ம், ஆசாரவாசையுமுடையவனு இருக்கவேண்டும். பேராசை வெறுப் புமுதலிய மாசுள்ள குணத்தால் பிராமணர் வேதவிதிக்கு மாறுப ட்டு நடக்கிற பொருளாசையுற்று அருளாசையற்று போசனநிமித் தம் உயிர்வதைசெய்து பாபபுண்ணியம் பாராமல் பொருள்நிமித்தம் பொய் பொறாமை பொருந்தி ஆங்காரமேலிட்டு தானுயர்ந்தசாதி யெ ன்று தாழ்ந்தசாதியோரை சங்கடப்படப் பழித்தும் எனக்குச்சமதை யன்றென்று இறுமாந்திருப்பதும் இன்னமுள்ள மமதைகொண்டிரு ப்பாராகில் அவர்கள் உயர்ந்த குலத்திற் பிறந்திருந்தாலும் இழிகுலத் தாரென்றியம்பப்படுவர். பிரமசிருஷ்டியிலேயே உலகத்திற்கு வேண் டிய தருமகருமங்களியாவும் அமைந்து முதன்மையாகிய பிராமணன் நடந்துகாட்ட வேண்டுமென்று வேதத்தில் விதித்திருக்கின்றன. ஆத லால் வேதவிதிக்குப்பிறந்த பிராமணன் மறையோதுதல் முதலாகிய மார்க்கங்களை விட்டு உத்தியோகம் பண்ணவும் அதிகாரஞ்செய்யவும் ஏற்பட்டுபொருளபேட்சையும் கோபமும் மனஸ்தாபமும் துற்கரும முதலிய மோட்சவிகட்சியும் விரும்பி ஈனத்தொழிலிற் பிரவேசித்து தன்னையறியாது உத்தியோக முயற்சிதேடி பொய்புரட்டு பட்சபாரம் ஓர விபகாரம்அனியாய ஆர்ச்சிதம் இழிதொழில் பழிதொழில் பொய் ச்சாட்சி பொய்ப்பத்திரம் இவையளிலிச்சைவைத்துபூணூல் பின்குடு மியுடன் நானுமொருபிராமண னென்று பெயரிட்டுக்கொண்டு என் னேரமும் வேசையுறவும் வியாபார புலைத்தொழிலும் பிரதாபப்பெரு மையும் புன்சவகாசமும் பூரியர்பொருள்மேல் சம்பாத்தியமனமும்

சிங்காரிப்புங் கூடாது. இன்னடைகளையுடையவன் கடையிலுங்கடையன் என்றைக்குங் கதிசேரப் போகிறதில்லை. வேதமோதல்குறைந்தாலும் குலாச்சாரம் குறையாமலிருக்கவேண்டும். தன்னுசாரத்திற்குவிதித்திருப்பது நியாயமானாலும் நியாயமல்லாமற்போனாலும் உலகத்தோடொத்துவாழ்ந்தால்பெரியோர்கள்சபிக்கமாட்டார்கள். ஒருகுலத்திற் பிறந்தவன் மற்றொருகுலத்திற் பிரவேசித்து கிரமந்தப்பிநடப்பானாகில் அவன்குலப் பிரஷ்டன், சமயப்புலையன், மகாபாவி, மற்றவருணங்களு மப்படியே. ஒருவேளை இதரவருணந்தப்பிப் போகுமாகில்பிராமணனைக்கொண்டு வேதவிதியின் வண்ணமுடிப்பித்துக்கொள்ளுகிற பிராயச்சித்தமுண்டு, பிராமணன் தப்பிப்போவானாகில் பிராயச்சித்தமில்லை. அவன் நித்தியபாபசொத்துபிரேத கருமத்திற்கும் உபயோகமாக ஒப்புக்கொள்ளக்கூடாது. அவனிருக்குமிடத்தில் தேவதைகள் முதலிய பிதுர்க்களும் பொருந்தார்கள். அவனால் ஆசீர்வசனமும் சங்கல்பாதி தருமங்களுநற் கருமங்களும் பலிதப்படாது. அவன்மரணவேதனையால் வருந்திநரகஞ் சேருவான். உத்தமனல்லாத பிராமணனாலே காரியநடத்திவைத்தவர்களும் நடப்பித்துக்கொண்டவர்களும் ரவுரவாதிநரகம்பெறுவார்கள். பெரியவர்களும் அவன் முகாலம்பனம் பண்ணார்கள் ஒருவேளை வழிதப்பி அவன்பொருளை யாராகிலும் தானமாக வாங்கிவிட்டால் அவனுக்கு நற்கதி வருங்காலத்தில் தானம்வாங்கினவர்களுக்குநரகமும் குலநாசமும் தவத்திற்கழிவும், வாங்கும் தானமே ஈனமாக்கும். ஆதலால் குலாச்சாரந்தப்பி பாபத்தினாற்றேடும் பொருளை யாவரிடத்திலும் பெரியோர்கள் வாங்கமாட்டார்கள், "மறப்பினுமோத்துக்கொளலாகும் பார்ப்பான் பிறப்பொழுக்கங் குன்றக்கெடும்" என்பது போலாம். எந்தச்சாதி கெட்டாலும் பரிகாரமுண்டு பிராமணச்சாதி கெட்டால் பரிகாரமில்லை.

114. க்ஷத்திரியர் பிராமணரைக் காத்தலாகிய முறை.

க்ஷத்திரியருடைய சாதியாசார மென்னவென்னில் க்ஷத்திரியராகிய இராஜர்கள் தன்னிடத்திலிருக்கின்ற மந்திரி பிரதானிகளுடைய வார்த்தையைக்கேட்டு தன்புத்தியினால் ஆராய்ந்து பார்த்து சகல காரியங்களையும் நடத்துவதாம். வேதமோதும் வேதியருக்கு நித்திய

கரும அனுஷ்டானந்தவிர வேறுவேலை இல்லாமலும் அவர்களொழுக் கத்திற்குவிலக்குவாராமலும் விருதாகாலம் போக்கவொட்டாமலும் போசனக்குறை இல்லாமலும் உபசாரங்குறையாமலும்மேன்மையா கவும்வைத்துக்காத்து,யாகம்,ஓமம், இஷ்ட காமியார்த்தம் ஆத்மார்த் தம் தேவதாபூசை நடத்தி வைத்துக்கொண்டு அவர்களிடத்தில் நான் குவேதங்களையும் நன்றாயோதி யுணர்ந்து விதிவிலக்கு ராஜதருமம் புண்ணியம் தேவபக்தி குருஉபசாரம் கடவுணிர்ணயம் காசினிநடக் கை வருணாச்சிரம தருமம் கலியாணம் சுபம் சோபனம் கருமக்கிரி யை, தேவாலயம், பிரம்மாலயம், பிரம்மோற்சவம், கோதானம்,பூதா னம், மஹாதானம், தியானம், தியாகம், துஷ்டநிக்கிரகம், சிஷ்ட பரிபாலனம், தண்டனை பொருளீட்டல் மிருகபயமாற்றல், குடி, படை, குலம் ஓம்பல், மலை, காடு, அரண், கொடி, குடை, மாலை, ஆ யுதம், கோட்டை, வாத்தியமுதலிய அங்கம், மானம், திடம், தை ரியம், வற்புறுத்தல், நிஷ்கண்டிதம், கண்ணோட்டம், கருணை பொ றுமை, காலத்திற்குத் தகுந்த கோபம், கல்விப்பயிற்சி, ஆயுதப்பழ க்கம் இதர இராஜாங்கத்தின் காரியமறிதல், இதெல்லா மிருந்தும் ஈனவிர்த்தியிற் பிரவேசிக்காது தன்னுயிர்போல் மன்னுயிரோம் பல் ஆறிலொரு கடமையடைதல், பழைய மனிதரைப் பிரியாமல் புதியமனிதர்பேரில் பிரியம்வைக்காம லிருக்கத்தக்கது. பகைவரைப் பல்லில்நிறுத்தி சிநேகரை நெஞ்சி லிருதத வேண்டியது. சுற்றத் தாரைச் சூழவைத்துக் காப்பது, திரண்ட சேனைகளைச் சேர்ப்பது சத்துருக்களைச்சண்டை யிட்டுச்சாய்ப்பது, சாதுசங்கமம் வித்வகோ ஷ்டி என்னேரமும் விடாமலிருப்பது, விரதம் நீர்வளம். நிலவளமுண் டாக்குவது பயிரிடுகிறவர்களுக்கு மாடுமுதலிய பொருள் உதவிசெய் வது ஏழை எளியவர்களை ஆதரிப்பதும் அன்னசத்திரம் புதுப்பித்து அருள்புரிந்து மாணுக்களுக்கு மண்ணிடம் பொருத்துவதும் இதுமுத லியவெல்லாம் பொருந்தவேண்டியது இராஜதருமம்.

வைசியர்களின் இயல்பு கல்வியும் திரண்டதிரவியந் தேடு வதற் குமுயர்ச்சியும் சிந்தையும் சுபசோபன கலியாணமுதலிய காரியங்களு க்கு லோபத்துவமில்லாமற் செலவுசெய்தல் பெரியோர்பிராமணர் உ ரியோர் வித்துவான்கள்தேசாந்திரிகள் ஆதுலர் வைராக்கியர் நோயி னர் தரித்திரர் இவர்கள்முதலிய பேர்களுக்கும் முகங்கோணாமல் உப சாரத்துடன் அவரவர்காரியங்களைக் கேட்டு சுதாவிலறிந்து உதவி பண்ணவேணும், பசுக்களுக்கு வாய் இரைகொடுத்து தருமதேவதை யா யெண்ணிப் போஷிக்கவேணும், வியாபாரத்துடன் வேளாண்மை

மிக்கசெய்து அன்னதானம் அதிகஞ் செய்யவேண்டியது மற்றதானங்களெல்லாம் தன் சம்பாத்தியத்திற்குத் தக்க வருவாய்க்கு நிதானமாகப் பார்த்துக்கொள்ளவேணும். பிராமணரை விஷ்ணுவாக மதித்துப் பூசிக்கவேணும். யாகம் எக்கியங்களுக்குப் பொருளுதவி செய்யவேணும் எந்த தருமத்திற்கும் பொருந்தி கோவில் குளமுதலியவெல்லாங் குறைவற நடத்தவேண்டும், சுகந்த பரிமளவஸ்து முதலிய பலபண்டங்களும் ரசவர்க்கங்களும் பொற்காசு முதலியதும் விற்று வியாபாரம் பண்ணலாம். சத்தியந் தப்பாமல் தயாளுவா இருந்து இனந்தழுவுதலே இன்பமாம்.

இப்பால் பூவைசியாற் தன்மை கல்விகற்று தனக்குமேலான நல்வினைத் தொழில் நடாத்தி ஊழியம்பண்ணி பூமிக்குரியவர்களாய் உழுதுபயிரிட்டு அக்காரியங்களில் முயற்சியாயிருந்து உத்தியோகராய் இராஜர்களுக்கு முன்னையணியாய மந்திரியாய் புத்தியாய் பூமியாளராய் கங்காபுத்திரராய் பிராமணருக்குச்சமான விவேகிகளாய் தேசாசாரப்படிக்கு நடந்து சகலதொழிலும் புரிந்து எல்லாவற்றிற்கு முரியவர்களாய் மற்றக்கருமங்களுந் தவறாமடத்தி பிக்ஷை ஐயம் பிதுர்க்கருமம் பிராமண உபசாரம் இஷ்டமான தெய்வ ஆராதனைக்ஷத்திரியரூழியம் ஏவல் பக்தி முத்தி வயிராக்கியம் இரக்கம் சத்தியம் சாந்தம் தருமம் சௌரியம் முன்னுரைத்தவரை பொய்யவுரையாமலும், கோகச்செய்யாமலும், பரஸ்திரீகவனம், பரபொருளி னிச்சைவையாமலும், அதிதி, அப்பியாசி, ஆசாரியர், தெய்வம், பெரியோரை வழிபடல் அரசரோடு எறுமாறுய்ப் பேசாமை பந்துஜனபோஷிப்பு இறுமாப்படக்கல் மமதைப்போக்கல் வணக்கம், ஒடுக்கம், மரியாதை, தாழ்மை, இவை யெல்லாமிருக்கவேணும். இப்படிக்கில்லாமல், கெர்வப்பட்டால் இம்மையில் இடையூறும், தரித்திரமும் துன்பமும், தண்டனை, கண்டனையும், சாபமும், சோபமும், தனக்குத்தானே விளையும், முன்சொன்ன குலாச்சாரமுறை குறையாமனடந்தால் இச்சென்மத்தில் சுகபோகியாய் நல்வினைப்பயன் கைக்கூடி மறுமையில் தேவலோகம் பொருந்தி திவ்வியமங்கள குணவானுவான். அப்புறம் பூமியிற்பிறந்தால் சுகசௌக்கிய, சுகபாக்கிய சுத்தயோக்கிய, மணவாளனுவான். இந்தமட்டும் வருணச்சிரம தருமம் முடிவாயிற்றென்று பரமசிவம் சொல்ல பார்வதியார் சுவாமி! மலைவாசியாய் அரிய தபஞ்செய்கின்றீர்களே, அதற்கு மிஞ்சின நன்மை வேறில்லையா என்ன? மகாதேவர் மகாதேவிக்குச் சொல்லத்தொடங்கினார்.

115. மலைவாசிகளாய் தவஞ்செய்கிறதைப் பார்க்கிலும் அரிதாகியது வேறொன்றில்லையா வென்ற கெள்விக்கு உத்திரம்

ஓ ! மரகதவல்லி, அரிதாகிய வஸ்துயாதெனில் எல்லாவற்றினு முயர்ந்த நித்தியபெருஞ் செல்வத்தைப்பெற்றதேவபோகத்தை மறுத்து மோக்ஷத்தைவிரும்பி வெகுகோடிபேர் தபசுபண்ணிப்பெறுவார்கள், சிலர் இம்மையிலே அனுபவிக்கும் பேதகபாக்கியத்தை நாடிப் பெருந்தவமிழைத்து மையல்தீர வாழ்ந்திருப்பார்கள். சிறிதுபேர் பற் பலதேவதைகளுடைய பதவிகளைக்குறித்து உறுதியாகத் தவமியற்றி அப்பதவி பெறுவார்கள். இப்படி அநேகமான தபசுகளுண்டாயிருக்கின்றது அவைகளிலொன்றுமில்லை ஒருகாலத்தில் அப்பேறுகளியாவு மழிந்து போய்விடும். பின்னுஞ் ஜனனமெடுக்கவேண்டி வரும் இதன்றி இன்னமுண்டாயிருக்கின்ற தவமென்ன வென்றால், மௌனமடைந்து சங்கல்பமில்லாமல் நிலைநின்று செய்கிற தவமே தவம். மற்றத் தவங்களெல்லாம் இறந்த உடனேசொற்காதி போகமுதலான பதவியைக் கொடுத்துமறுபடியும் பூமியிற்பிறப்பிக்கும். அங்குஷ்டப் பிரமணத்துடனே இருக்கின்ற வாலகில்லியர்கள் சூரியன்தேரிலிருந்து தபசுபண்ணுகிறார்கள் அதுவேதவம் அதற்குமிஞ்சினதில்லை பிறவிக்கிடங்கொடாமற் செய்யும். இன்னுஞ்சிலபேர் பூவாழ்க்கையிற் பொருந்தி இருந்தும் இல்லறநெறிதவறாமல் ஆசாபாசமும் மனமாயையும் தேகாபிமானமுமற்று மஹாதவம்பண்ணுவார்கள், அதுவும் முக்கியமான தவமே. போஜனஞ்செய்து தவமாற்றுவோர் சிலர்; காற்றைப்பக்ஷித்து தபசிருப்பவர்கள் பலர்; சருகுபட்சணம்பண்ணி தவமிழைப்பவர்களும் கந்தமூலங்களருந்தி அருந்தவமிருப்பவரனேகர்; சலமருந்திப் பொருந்தித் தவம்புரிந்து அசைவற்றிருப்பவர்சிலர்; ஒற்றைக்காலிலும் மற்றக்கால் பெருவிரலை யூன்றியும் தலை கீழாயும்பஞ்சாக்கினி மத்தியிலும் ஊசிமுனையிலும் தண்ணீரிலும் மலையுச்சியிலும் மண்ணிடத்திலும் மாதவமிருப்போர் சிலர்; எவ்விதமாகத் தவம்பண்ணினாலும் ஆசாபாசம்விட்டு தானென்பதுமற்று தனித்துச் செய்கிற தவமேதவமென்று சங்கரரியம்பினார்.

குன்றனைய இளமுலை கொண்ட கோமள வல்லிகேட்டு மனமகிட்சியாய் சுவாமி இல்லறதருமமே தருமம் அவ்வில்லறத்திலிருந்து

தவமிழைப்பது ஏனைவைகளினு மேன்மையென்று தேவரீர்க்கினிமை யென் றியம்புகின்றீர்களே அவ்வில்லறம் துறவறத்தினும் பெரிதோ. இந்தச்சந்தேகத்தை எளியேனுக்கு அனுக்கிரகம் பண்ணும் ஈசனே யென்றுகேட்க அதற்கு இறைவியை நோக்கி எப்பொருட்குமுரிய தனி முதலெடுத்துப் புகலுகின்றார்.

116. துறவறத்தினும் இல்லறம் பெரிதா என்கிற பிரசினைக்கு உத்தரம்.

ஓ! சாம்பவி, இல்லறம் துறவறம் உனக்கு முன்னே சொல்லியி ருக்கின்றேன் நீ மீளவும் உலகத்தாருக்கு உறுதியுண்டாக்கும்படிக்கு கேட்கின்றாயென் றுணர்ந்தேன். நன்று நன்று அவ்வில்லறதருமத் தின்பெருமையைக்கேளும் சாஸ்திரங்களில் என்னென்ன காரியம் த வறுதலென்று சொல்லியிருக்கின்றதோ அதுகளெல்லாம் போக்கி வேதவிதியில் நன்மையாக விதித்திருக்கிறதெதுவோ அந்தவிதியாகிய நற்காரியங்களைச் செய்து நற்குண நற்செய்கையுள்ள பெண்ணைக் கலியாணஞ்செய்து இல்லறமுறை வழுவாமல் நடந்து அதிதிகளுக்கு அன்னம்படைத்து நான்காச்சிரமங்களுக்கு முதன்மையாய் சோடச மகாதானமுங்கொடுத்து பாக்கியமாகிய புகழும்பெற்று புண்ணியமெ ன்னும் பொருளைத் தேடி, வந்தவிருந்தையும் சுற்றத்தையும் வருந்தி உபசரித்துதானங்களிலுயர்ந்தஅன்னதானமும் கோதானமும் புரிந்து எல்லாரிடத்திலும் பரிந்து இனியவார்த்தைசொல்லி உயிர்க்கொலை செய்யாமல் ஊன்புசியாமல் என்னை முறையுடன் அருச்சித்து உண் மையாயிருக்கில் அந்தஇல்லறத நமமே நல்லறமென்று பரமேஸ்வரன் சொலல, பரமேஸ்வரியார் மகிழ்ந்து அன்னதானம் அதிகமென்றமை யால் அந்த அன்னதானம் பண்ணுகிற கிரகஸ்தன் செய்யவேண்டிய முதற்கரும மென்னவென்று மகாதேவிகேட்க மகாதேவன் திருவாய் மலர்ந் தருளுகின்றார்.

முதற்றருமம் தாய் தந்தையைப் பூசித்துபசரிப்பதும் அப்பால் ஆசாரியனைத் தொழுவதும் அவரால் தருமம் தெய்வநிர்ணயந் தெரி ந்து எல்லா உயிருந் தன்னுயிர்போற் காணபதும் ஏழைகள் முதலிய பரதேசிகளை ஆதரிப்பதும் இதுவே கடைத்தேறுகிற அன்னதானமு தல்வழி. அந்த இல்வாழ்பவர்களுக்குரிய மனையாள் புருஷனே தெய் வம், அவருடைய ஊழியமே தேவர்களுக்குரிய பணிவிடை, அவ

னைச் சுற்றிவருவதே பிரதட்சண நமஸ்காரம், அவர்சாப்பிடுகிறவ ளாயினும்சலபானம் பண்ணுதிருப்பதே உபவாசம், விரதம் அவருடைய சொல்லுக்கு மாறுபடாமல் நடப்பதே வேதவிதி மந்திரமாம். அவருக்கு முன் இறப்பதே அழியாப் பதவி பின்னிறப்பது அனுபவிக்குஞ் சம்பந்தம் அக்கினிப் பிரவேச மாவது இரும்புண்ட நீர்போலத் தி நம்பிவாராதிருத்தல் இதைத் தெரிந்துகொள்ளு மென்று முக்கண்ணன மொழிய, மைக்கண்ணுடைய மாதேவி ஐயா. அன்னதானமகிமையுரைத்தல் வேண்டுமென்று கேட்க சுவாமி சொல்லத்தொடங்கினர்.

117. அன்னதானமகிமையுரைத்தல்.

ஓபாலாம்பிகை, மேற்சொன்ன பிரகாரம் இல்லறத்தில் இல்லறதரும நடத்தும் சத்புருஷரும் மனைவியும் ஒருமனதாய் வாழ்ந்து அன்னதான நடத்து முறைமை எப்படியெனனில் பிராதக்காலையிலெழுந்து நித்தியகருமமுடித்து சூரியநமஸ்காரம் இஷ்டதேவதை பூஜை ஜெபதபம் ஓமம் முதலியதும்செய்து ஆதுலர்க்கும் அவதூதுகளுக்கும் முற்றத்துறந்த முனிவர்களுக்கும் ஏழைகளுக்கும் மற்றேனையோருக்கும் சதாகாலமும் அன்னம படைத்து வேண்டிய உபசாரங்களும் வந்தனை வழிபாடுகள் செய்யவேண்டியது. இப்படித் தினந்தோறும் அன்னதானஞ்செய்தவர்கள் இகத்தில் மெய்ஞ்ஞானமும் புத்திரப்பேறும், சகலசம்பத்தும், தீர்க்காயுளும் சுத்ததேகமும், பரிசுத்தமனமும், என்னனுக்கிரஹமும் பெறுவதோடு மறுமையில் தெய்வலோகமடைந்து தேவர்களுடன்சகலமும் தாதக்க கற்பகவிருக்ஷ நிழலில் அநேகநாளிருந்து சங்கநிதி பதுமநிதிமுதலியநிதிகளும் சூழ்ந்திருக்க சிந்தாமணியைச் சிலகாலம் தனதாகச் சிரத்திற்றரித்துத் தேவர்களோடு சகலபோகமும் வெகுகாலமனுபவித்து தேவேந்திர சிநேகராய் அநேகநாளிருந்து பிறகு இம்மண்ணுலகில் மானிடராய் இராஜவம்சத்தில் பிறந்து தனக்கு எவரும் நிகரில்லாத சகலகலாவல்லவராய் வித்வச்சிரோமணியாய் எல்லாரு மெச்சும்படி புஜபலபராக்கிரமமுள்ள இராஜனுகி செங்கோல் நடத்துவார்கள் என்று சிவபெருமான் திருவாய் மலர்ந்தருள, உமாதேவியார் சுவாமி, தாய்தந்தை இருவரும் இறந்துபோன பிறகு பிள்ளை செய்யவேண்டிய பிதுர்க்கடனென்னவென்று வினவ பெம்மான்பேசத்தொடங்கினர்.

118. பிதுர்க்கர்ம்ம மகிமை யுரைத்தல்.

பிதுர்கர்ம்மமென்பது தாயுந் தந்தையும் இறந்தபின்பு அவர்களைப் பின்னமென்று இகழாமல் மறவாமல் தென்புலத்தாராகிய பிதுர்த் தேவதைகளென்று எண்ணி அவர்களுக்குச் செய்யவேண்டிய அருங்காட் டருங்கடன் முடித்து சூதக கவசம் பூண்டுசோடச திவசமீந்து கருதிக்குரிய பெரிய பதவியிற்புகுத்தி ஊனமாசியமுவந்து ஓராண்டிற்கலந்து விஸ்வதேவ பூசைபுரிந்து விஷ்ணுமுதலிய தேவர்களைப்பணிந்து பிதுர்க்களுக்குத் திருப்திபண்ணி அதிதி பரதேசிகளுக்கு அன்பான அன்னமளித்து மாதமாதம் வருகிற அமாவாசி திதி எல்லாம் மறவாமல் மதிமயங்காமல பால்மாறிக்கைப்படாமல் இல்லை என்றிராமல் உண்டானமட்டும் உபகாரஞ்செய்து வருஷாப்திகமாறுமற் கருமவிதியைப்போல் எக்கியம் கொடுக்கவேண்டும். இது கள் தப்பிப்போமாகில் அந்தப்பிதிர்க்கள் மாத வருஷத்திதிவருங்காலையில் தன் சந்ததியாரிருக்கிற மனைக்குவந்து பார்த்து மனமெரிந்து வயிறெரிந்து சாபங்கொடுத்துப் போவார்கள். அப்பால் அந்தக்குடும்பந் தலையெடுக்கப்போகிறதில்லை. ஒன்றுபோனு லொன்று இடையூறு, துன்பம், பொருளில்லாமை, நோய், உபாதி, அபாண்டம், குடிதோஷம், குலப்பிரஷ்டத்துவம், கோத்திரக்குறைவு, குன்றுதனிறைவு இதெல்லாம்வந்து சேரும் இடிந்துபோவார்கள். ஆதலால் தரித்திரராலும் கருத்தில்மதித்து திலோதகதர்ப்பணக் கடனுவது கழித்து சங்கல்பஞ் சொல்லவேணும். இதன்றி யாத்திரைபோகும்படி நேரிட்டால் வழிகளில் எந்தப்புண்ணிய ஸ்தலங்களை புண்ணிய தீர்த்தங்களை நந்தவனங்களைக்கண்டாலும் அந்த இடங்களில் இந்தப்பிதிர்க்கடனைத்தீர்த்தால் முந்திச செய்திருக்கும் பலனுக்கெல்லாம் மேற்பட்ட பலனும்.மூவேழுதலைமுறை தந்தைதாய் முதலிய பந்துக்களும் உயர்ந்த பதத்தைப் பெறுவார்கள். அங்ஙனே பிண்டம்வகுத்து தற்பணம்பண்ணி பொன், வெள்ளி, வஸ்திரம் பூஷணமுங் கொடுத்து பிராமண பூசைபண்ணி தேவதார்ச்சனை நடத்தி தரிசனைசெய்யவேணும். ஒருவித அசந்தர்ப்பத்தினுல்சிலவேளை இசையாமற்போனல் இரணியசிரார்த்தமாகிலும்அதாவது தக்ஷணைகொடுத்துபிண்டம் வைத்துதர்ப்பணம் பண்ணவேணும். எதாசக்தி என்னும் சங்கல்பஞ் சொல்லிதாய் தந்தை முதலிய பேர்களைக்குறித்து குலகோத்திர நாமங்கூறி பூரிகொடுத்தாகிலும் விடவேணும். அதுவுங் கிடையா

மற்போனால் அழுதுபடியாகிலும் முன்னை முசுட்டையானாலும் வைத்துக்கொடுக்கவேணும் மந்திரம் கிரியை வழுவாமலியற்றி வேதியனைப் பூசிக்கவேணும். பிதிர்த்தினமாகிய விசேஷபுண்ணியகாலத்தில் பிள்ளைபேரன், தத்துபுத்திரன் அபிமானபுத்திரன், அடைக்கலப்புத்திரன், ஆருமற்றபுத்திரனானாலும் பிதுர்க்கடன் பூரணமான புத்தியுடன்சுத்த பத்தியாய்ச்செய்யவேணும் என்றுசொல்ல பார்வதியார், சுவாமி விதவைஸ்ரீகளின் ஒழுக்கங்களையும் அருள்செய்யவேண்டுமென்று கேட்க ஆண்டவன் சொல்லத்தொடங்கினார்.

119. விதவஸ்திரீகளின் ஒழுக்கமுறைமை.

புருஷன் போய்விட்ட பிற்பாடு உயிர்வைத்திருந்த விதவஸ்திரீயானவள் தன்னாயகனுக்கு நல்லகதி வரத்தக்கதாக பிரம்மசரிய விரதம்போலிருந்து நித்தியஸ்நானம் பண்ணி நியம முடித்து ஒருவேளையாய்ப் புசித்து சாந்து, சந்தனம், புட்பமுதலாகிய நற்பண்டங்களிலாசைவைக்காமல் தன்னுடைய பர்த்தாவை என்னேரமும் உன்னி நினைத்து தோத்திரம்பண்ணி மானதபூசைவைத்து இஷ்ட தெய்வத்தை ஏற்றிப்போற்றி சுவாமி என்புருடனுக்கு நல்லபதவி கொடுக்கவேண்டுமென்று நாளுந்துதித்து தலைமுண்டிதமாய் நற்கருமங்களை அனுசரித்து சாஸ்திரபுராண தருமமுதலிய அடியார்கள் சரித்திரங்களையுங்கேட்டு பாய், தலையணை, பஞ்சணைவிலக்கி, தரையிற்படுத்து, நல்ல வஸ்திராபரணங்களை அணிந்துக்கொண்டால் அதுகளை நாயகன்பார்க்கவேண்டியதென்று மனதால் வெறுத்து தாம்பூலம் விடுத்து பரபுருடனை மனத்திலு நினைத்துப்பாராமல் பெரியவர்களுக்குப் பூசை உபசாரம் புரிந்து கூடியமாத்திரம் பரதேசிகளுக்குப் பிட்சை கொடுத்து சுவாமி என்று தரிசனம்பண்ணி தாயாகிய பார்வதியையும் இலட்சுமியையும் மதியிற்பதித்து விழுப்புவஸ்திர மகற்றி சுசியாகிய வெள்ளை வஸ்திரம் மடிப்புடைவை யுடுத்தி மனமடங்கி எந்தவேளையிலும் கர்த்தனே இந்தக்கட்டையை சோற்று மூட்டையை பீற்றச்சட்டையை மலக்குட்டையை சாரமற்றசாரப்படையை ஒன்பது ஓட்டையிலுள்ள என்னைத்தெளிவுடன் உன்னுடைய பாதாரவிந்தத்திற் சேர்த்துக்கொள்ளுமென்று பகவானை நினைத்து தியானம் பண்ணிக்கொண்டுவைராக்கியமா யிருக்கவேண்டியது என்று பொன்பே

ன்ற கொன்றைமாலையைப் புனைந்த புராந்தகன் புனிதனுரைக்க பூத நாயகியார் புகழ்ந்து, மகிழ்ந்து ஆண்டவனை புருஷனிறந்த பெண்களுக்கு விதிசெப்பினீர் பெண்சாதியை இழந்த புருஷருக்கு ஒன்று மில்லையாவென்று பேச பெருமானியம்புகிறார்.

120. பெண்ஜாதி இழந்த புருஷர்நடக்க வேண்டிய முறைமை.

ஓ, பெண்பாவாய்! புருடர் தன்னுலான மட்டும் மாதுர் பிதுர்க் கடன்களை உபேலாபத்துவமில்லாமல் சாங்கோபாங்கமாய் நடத்தி பஞ்சபர்வங்களை அனுட்டித்து விரதமிருந்து இந்நாட்களிலும் மாசாந்திரம் மூன்றுநாள் வருஷாந்திர மூன்றுநாள் ஸ்திரீயுடன் பேசாமல் நாவிற்குருசிதேடாமல் குழந்தை முதலியபந்துக்கள் பசியாயிருக்கின்றார்களென்று காதிலிட்டுக் கொள்ளாமல் பறவை, எலி, பூனை, நாய் முதலிய செந்துக்கள் சிலபண்டங்களைத் தின்று விட்டால் அதுகளின்மேரில் கோபியாமல் அதுகளுக்குக் கிட்டாத இடத்தில் கெட்டிபண்ணிக்கொண்டு பெரியோர்முதலிய தாய்,தந்தை,தமயன்,தனயன் பத்தினி தம்பி முதலிய பேர்களுக்குச் சஞ்சலம் வரவொட்டாமல் எல்லாரிடத்திலுந் தயவா யிருந்து தானதருமம் பரவுபகாரம் பண்ணி, மனை வாழ்விலுயர்ந்து மாதவரைப் புகழ்ந்து வாழ்த்திமகிழ்ந்து, தாரந்தப்பினுல் தருமகருமம் மனைவியில்லாமல் யாதும் புரியலாகாதென்று சாற்றியவேத விதிப்படிக்கு அக்கினிமுதலிய யாவருஞ் சாட்சியாய் நற்குணமுள்ளபெண்ணை புனர்விவாகம் பண்ணிக்கொண்டு அம்மனைவியுடன்மருவி பிறர்மனைவியைப் பேணுமல் தன்பத்தினி நோயினுல் புத்திரப் பேற்றினுல் குணபேதத்தினுல் தான்கூடுவதற்கு உபயோகப் படாவிட்டால் தேவதாசியாய் தேசவாசியா யிருப்பவளைச் சேர்ந்து தனக்குவொத்தபோது தன்மனைவியிடத்தில் மருவவேண்டியது. இதைவிட்டு இரவும் பகலும் அதுவே வேலையா இருக்கப்படாது. இல்லற தருமத்தை இகழக்கூடாது. பரபோகத்தால் நல்ல தருமபத்தினி மனஞ்சலிக்க நடக்கலாகாது ஐயமிட்டுண்ணும் அன்புடையாருக்கு நூறு அஸ்வமேதம் பண்ணிய பலன்வந்து கிட்டும். அவனெங்கிருந்தாலும் இந்திரபோகனே. எந்தக்காரியமும் அவனுக்கு எளிதில்முடியும் அவ்வன் எந்த வருணமானுலும், முந்திய

வருணபாசந் தொடராது. சந்திர சூரியருஞ் சிந்திப்பார்கள். பூமியிலுள்ளோர் வந்திப்பார்கள். தேவர்கள் முதலியபேருந் தொழுதிப்பார்கள். சங்கற்பவிகற்பங்கள் சாராது நல்வினை தீவினை வலிக்காது. அகப்பற்று புறப்பற்று அணுகாது. நின்மலசித்தனுயிருப்பான். பிறவியறுப்பான், அவனுடைய மனது நல்லகாற்றினால் அலையெறியுங்கடலானது துரும்பு தூணுகளை யொதுக்கி முத்துக்களை ரத்திநங்களை யடக்கி ஆநந்தத்துடன் எப்படி முழங்குகிறதோ அப்படிப்போல் அழுக்கற்று பரிசுத்தமாய் பொய் வஞ்சகம் பொறாமை முதலிய பொருமல்களைக் கரைவெளியி லொதுக்கி தயை தாட்சணியம் சாந்தம் தருமம் முதலியவற்றைத் தன்னிடத்தி லடக்கிப்பேராநந்தங் கொண்டிருப்பான். அவன் பூலோகமாகிய கரும பூமியிலிருந்தாலும் தெய்வலோகமாகிய தருமபூமியி லிருப்பவனென்று சாமவேதப் பிரியன் சாற்றினர். அவ்வசனத்தைக்கேட்ட இமயவல்லியெழுந்து சுடர்க்கொழுந்துபோன்ற சோதியைத்தொழுது சந்திரசேகர சடாமண்டலதாரவென்று வாழ்த்தி சுவாமி! பூலோகத்தில் தேவரீருடைய சிருஷ்டிக்குட்பட்ட மானிடதேகம் பெற்றமனிதனாக இராநின்ற ஒருவன் மகாராஜனென்றும் எல்லாருக்கு முயர்ந்தவனென்றும் தண்டனை கண்டனை செய்கின்ற சண்டப்பிரசண்டனென்றும்,ரத கஜ துரக பதாதிகளும் வெள்ளைக்குடையும் வெண்சாமரமும் அருகுதீவட்டியும் கொடியும் தோரணமும் செங்கோலுங்கொண்டு எங்கோனென்று எவர்களுந் துதிக்கநின்று இயாவரையுந் தொண்டாக்கிக்கொண்டு சிறுது பேரை ரட்சிக்கவும் சிலபேர்களை சிட்சிக்கவும் உச்சாகங்கொண்டு இச்சா சுதந்தரனாய் இயாவரும்வணங்க சிங்காசனமேறி இருக்கப்பெற்ற செல்வமென்னமோ அடியாளுக்குத் தெரிவியுமென்ன அதற்குப் பரமசிவன் சொல்லுகின்றார்.

121. அம்மணியார் உலகத்தில் ஒருவன் அரசனாகி அவனுக்கு யாவரும் அடங்கி அவனால் ரக்ஷிக்கப்படுவதும், சிட்சிக்கப்படுவதுமாயிருந்து உடனே மாரிப்போகுங் காரணம் யாதென்ற கெள்விக்கு உத்தரம்.

ஓ! பார்வதி மனித ரியாவரும் மனங்குளிர்ந்து தவமிருக்க மாட்டார்கள், ஏகதேசத்தில் ஒருவன் தனக்கு அதிகசெல்வம் வேண்டுமென்றும் இயாவருக்குந்தலைவனாகவேண்டுமென்றும் அருந்தவமிழை

ப்பான், அந்தத்தவத்திற்குப் பிரசன்னமாகிய கடவுள் அநுக்கிரகம் பண்ணுவார், அதுவுமன்றி அனந்தபுண்ணியவசத்தினால் அவன் மறு சனனத்தில் போகபாக்கிய யோக்கியனாக பூலோக இந்திரன்போல் ஒருகுடைநிழலில் உலகத்தையடக்கி ஆளுவான், அவன் நால்வகை வருணத்தாரையும், சாமபேத தானதருமங்களினால் கண்டனை தண் டனைசெய்து நீதியாய்நடக்கவும், அவன்செல்வ கர்வத்தினால் ஆண வப் படாமல் தருமத்தையனுசரித்து நீதிகுன்றாமல் நெறிக்கோல் சா யாமல் ஏழைகளுக் கிடர்விளைக்காமல் குடிபடைகளுக்கு இதமாக நடந்து சத்துருசெயம் பெற்று சமயங்களில் பேத நிந்தைசெய்யா மலுற்று நீதிவழுவி நடவாமல்கோபம் மாற்சரியங்களைப்போக்கி, ஒரு வருக் கிடையூறு செய்யாமல் குடும்பகலகம் குடும்பதோஷம் புரியா மல் சமயம்வந்தவேளையிலிளைக்காமல் போர்முகத்தில் புறங்கொடுத் தோடாமல் தருமவழி நடந்தவனெவனோ அவன்தான் நல்வினைப்பய னைப் பெறுவான். நால்வருக்கு மேன்பாடாகிய இராஜ ராஜனாகியு றுவான். பிற்பாடு பெரிதானகெதியிற் போய்ச்சேருவான். இந்நெ றிதப்பி தான் முன்செய்த புண்ணியத்தைமறந்து அனியாயமாய் நட ந்து வீண்சண்டை விளைத்து கலகமூட்டி நிலைதவறி நெறிபிசகிபட்ச பாதமிருந்து பணஞ்சம்பாதித்து இரட்டிவட்டி கூட்டிகணக்கிற் பிச கெழுதி கடன்கொடுத்துக் கடன்வாங்கி பெரியவர்களுக் கடங்காமலு த்தரவுபேசி பணப்பெருமையாலும் காலபலத்தாலும் பரதாரம்பிறர் பொருளிச்சித்து உதாசனம்பேசி, தெய்வ தூஷணைசெய்து ஆலயம் குளம், சாவடி, நந்தவனம் சத்திரங்கள் முதலியவற்றை இடித்து ஒத்திவைத்து விற்றுத் தாய்த்தகுடும்பத்தி லிராமற்றனித்து கொண் டாளுக்கடங்கி இளைத்து தாய்தந்தையைப் பகைத்து இன்னமுள்ள பற்பலகொடுமைகள் செய்தபாபிகள் ஒருநாளுங் கடைத்தேறார்கள். ஒருவேளை ஆயிரம்பாபத்தில் ஒரு அணுவத்தனை புண்ணியமிருந்து இவனை அரசனாக்கிவைத்தாலும் செல்வமுடனமைந்தாலும்அவனணி ந்திருக்கிற பாபமாகியசட்டைமீறி அன்றைக்குத்தானே சிங்காசனம் விட்டிறக்கி தரித்திரனாக்கி ஆயுளைக் குறைத்து, ஆதரிப்பற்று அலை ந்து திரிந்து சஞ்சலத்துடன் காடேகதியாய் நரககதியைப்பெற்று தரித்திரனாய்ப் போவான். எப்போதும் நன்மைகளையே நாடவே னும் நாயகியேயென்று நாதாந்த நாதனை பாதாம்புயப் பார்வதி யார்கேட்டு பூதாதிகளு மகிழ்ந்து போற்றுஞ்சோதிசொரூபமே. எளி திற் கடைத்தேறுகிற தரும மொன்றுண்டேல் அடியேனுக்கு அறி விக்கவேண்டு மென்ன, நல்லதென்று சொல்லத்தொடங்கினார்.

122. எளிதிற் கடைதேறுவதற்குபாய தருமமுரைத்தல்.

ஓ! பாலாம்பிகையே, கொல்லாவிரதம் எல்லாத் தருமத்திற்கு மேலானதென்று புரமூன்றையும் புன்சிரிப்பாலெரித்தருளிய புராந்தகன் ஈரேழுலகத்தையும் ஈன்றருளுக்கியம்ப அந்த அம்மாள் ஓ! கர்த்தனே; கருமபூமியிற் ஜனித்து கருமகாரியர்களாகிய பூததேகிகள் எவ்வாறு கொல்லா விரதங்காப்பது எவ்விதத்திலாலும் கொலைபாவஞ் சம்பவிக்குமே அளவிறந்த விளையாட்டையுடைய அத்தனே; இதை என் சித்தத்திற்குத் தெரிவிக்கவேண்டுமென்று, வேதங்களுக்குள்ளும் நாதங்களுக்கு வெளியிலுமுள்ள வித்தகிவினவ உத்தம சித்தருரைக்கின்றார். ஓ; பராபரையே இதுதேவேந்திரன் தேவர்கள் முதலிய வர்களுக்குந் தெரிதற்கரிதா யிருக்கப்பட்ட சந்தேக இரகசியம் பொங்குசிங்க இடையும் தங்கும் அன்னப்பேடை நடையும் உடையும் தலைமூன்றுடைய சூலப்படை யுமுடையவளே! நீயுணரலாம். வியர்வையினாலும் புழுக்கத்தினாலும் உண்டாகிற,பேன்,கொசு, புழு, எறும்பு முதலிய சிற்றுயிர்கள் சடராக்கினி படைத்த சடத்தை யெடுத்தவர்களில் அயிக்கியமே. ஒருவராலும் உயிர்வதை இல்லாதகாலம் மண்ணிலொருநாளுமிராது, ஆகிலும், உபசாரமாயுள்ளவர்கள் ஆறொன்னில் எவ்விடத்திற்கும் போகாமல் இருந்த இடத்தைவிட்டெழாமல் சஞ்சரிக்காமல் தேகம் ஒஞ்சரிக்காமல், காய், கனி, கிழங்கு, சாகுமுதலி பட்சணங்களுண்ணாமல் மனம்வேறுபடாமல் இரக்கம்வைத்து வையகத்திலிருந்தால் குற்றம்வருமென்றறிந்து உன்னதஸ்தானத்தி லுட்கார்ந்துக்கொண்டு அக்ஞானமுதலிய இந்திரியங்களையகற்றி இருபாகையுமொடுக்கி அறிவுபுறஞ் சாயாமல், பூசஞ்சாரம் புரிவது விடுத்து பரண்மேலிருந்து, பசியடக்கிஇருப்பது மகாபிரயாசம். ஒருவருமிருக்கமாட்டார்கள் ஒருவேளை அப்படி இருக்க இசைந்தாலும் சுத்தமாய்க் கொல்லாவிரத மிதுதானென்று துணிந்து சொல்லப்படாது. அதிலுங் கலக்கம்வந்து கலக்கும். இன்னமும் ஒருவன் மகாபரிசுத்தனாய் நானென்கிற ஆணவமலமும், தேகாபிமானமும், யான்எனதென்னும் பற்றும் மோகப்பிராந்தி கொள்ளாமல் செருக்கைகயற்று சுத்தாத்மாவா யிருப்பவன் ஒன்றிலும் சம்பந்தப்படான். இயாவும் பிரமமேயல்லது வேறில்லையென்று ஒட்டா

மற் கண்டு விட்டவன் பிரபஞ்சத்திலுழன்றாலும் பிரபஞ்சந் தானல்லாதவனும். புளியம்பழமும் ஓடும்போலிருப்பவன் தானென்பதும் எனதென்பதும் எப்போது இறந்ததோ அப்பொழுதே அவனுக்கு ஒருபற்றுமில்லை. அவன்தான் கொல்லாவிரதமுடைய வல்லாளனென்று ஒருவேளைசொல்லலாம். தேகாபிமான முண்டானால் கொசு, எறும்பு, முதலிய செந்துக்கள் கடித்தால் உடனே அடித்துக்கொல்லவேண்டி வரும் அப்படிக்கானால் கொல்லாவிரத மெங்ஙனம் மங்கையே! மெஞ்ஞானிக்கு கோப, தாப, கொடுமை, காமம், வெகுளி, மயக்கம், ஜீவஹிம்சை இவைமுதலியவைகளிராது, உலகவாழ்க்கையை ஒரு பொருட்டாயெண்ணான், உலகமெல்லாம் ஒருகுடையிலாள்வதையும் ஆண்டுவந்த அரசனையும் துதிக்கான், மதிக்கான், பொன்னும் ஓடும் பிரித்துநோக்கான். இயாவரிகழ்ந்தாலும் இயாவர் புகழ்ந்தாலும் பொருளாய்மதியான். சீதஉஷ்ண, நன்மை தீமை வீடு, நாடு, காடுயென்று பேதமில்லாமல் எல்லாமொன்றென்று நாடுவான். அவனுக்கு யானைமுதல் எறும்புவரையிலும் பிரம்மமே எல்லாவிதியும் விதித்தபடியென்று எண்ணி விட்டவனுகையால், கொல்லாவிரதனென்றெல்லாரும் பேசலாகும். அவனுக்குக் கொலைபாதகமில்லை எடுத்தகூறிய கூத்தேசரி இனிப்பிறழயான பிறப்பில் அவன்தான் சாயுச்சியபதமென்கிற என்னிற்கலந்தவன். மற்றவருக்கு நிர்ணயமாய்ச் சொல்லப்படாது. ஒருவேளை தன்னையறியாமலாவது தனக்குத் தானேயாவது கொலைவந்துவிட்டால் அக்கொலைபாவம் அந்த மெஞ்ஞானியை பிடிக்கமாட்டாதோ வென்று மைதீட்டியமடமானேக்கிக்கேட்க.

ஈஸ்வரன் ஓ! நாராயணி லட்சுமிவிலாசமாய், பிரகாசத்திற்கு வைத்த விளக்கு எரியும்போது விட்டில்பூச்சி பத்தெட்டு விழுந்து சாகிறது, அதனால்வரும்பாவம் விளக்கேற்றினவனுக்கு வாராதுபோலும் கலப்பைபிடித்து பூமியிலுழும்போது கணக்கில்லாத சீவன்மடிகின்றதே அந்தப்பாவம் அவனைத்தொடாதுபோலும் பின்னும் அநேகஷிதமூலங்கங்களில் பிலவாத்மா முடிகிறதே அந்தப்பாபம் அணுகாதுபோலும் இவ்வுயிர்வதைப்பாவம் பிரமத்தின் செயலென்று இருப்பவர்க்குச்சேராது. மேலும் ஆயுள்முடியாமலழியாதென்கிற திடச்சித்தக்ஞானமில்லாமல் தேகம் தானென்னுஞ் சஞ்சலத்தால் சங்கடப்படுகிற அக்கியானிகளுக்குக் கொஞ்சந்தொடரும் பிரபஞ்சமோசஆசாபாசத்துடன்கலந்து எல்லாம்என்னாலே நடந்தது என் சமத்தென்று எண்ணி இறுமாந் திருப்பவரெவரோ அவருக்குஇருவினைகளும்

உண்டாம். எண்ணமிறந்தாருக்கு ஒருவினையுமில்லை. இதெல்லாம் தன்னினைவினால் விளைவதேயல்லது வேறில்லை. வேதவிதிப்படி யாகங்கள் பண்ணும்போது பற்பலபசுக்களையுங் கொன்று தேவதைகளுக்கு அவிர்ப்பாகங் கொடுக்கவுண்டு களித்திருக்குங் காரணத்தினாலும் மேன்மையான சுகபோகத்தையனுபவிப்பதினாலும் கொல்லாவிரதத்திற் குண்டான பலன்கிடைக்கும் குற்றமில்லை.

இதற்குத் திருஷ்டாந்திரம் பூர்வம் நெறிமுறை மாறாமற் செங்கோற் செலுத்திவந்த அந்திதேவனென்னும் அரசனொருவனுண்டு. அவன் நூறாயிரம் பசுக்களைக்கொன்று எக்கியஞ்செய்து மேலான பேறடைந்தான். இன்னம் அந்தப்பசுக்களினுடைய இனங்கள் நான் வருகிறேன் நான்வருகிறேன் என்று யாகமுன்னிலையில் உடலை வெறுத்து உயிர்விடுவதற்காகக் காத்துக்கொண்டிருக்கின்றது. அந்த அந்திதேவனுடைய சந்ததியார் முந்தியவாறுபோல் பிந்திச்செய்து மோட்சத்திற்குப் போகின்றார்கள். ஓமத்துக்குரித்தாகிய பசுக்கூட்டங்களும் கோமளவுலகத்தில் குலாவியிருக்கின்றதுகள். எக்கியம் பண்ணத்தொடங்கியபின் இறந்தபசுக்களுடைய உதிரமானது சருமணவதி யென்று பிரமாண்டமான நதியாய்ப்பெருகியது. பூமியிலுள்ளவர்கள் அந்நதியில் புனிதமாய் ஸ்நானம் பண்ணி பஞ்சமாபாதகங்களையும் போக்கடித்துக்கொண்டு பதவியடைகின்றார்கள்.

நீலோற்பலம் போன்ற நேத்திர முடையவளே! யாகமுன்னிலையில்பசுபந்தனம் பண்ணி இயாகஞ்செய்தாலும்அவர்களுக்குக் கொலைபாதகம்பொருந்தாது. அந்தப்பழியை மந்திரதேவதைகளேற்றுக் கொள்வார்கள். இதன்றியும் பெரியசண்டையில் எண்ணிறந்தவர்களைக் கொன்றாலும்மேலான வீரசொற்க இன்பங்கிடைக்கும். இந்தப்பாவங்களை வீரலட்சுமி தாங்கிக்கொள்ளுகிறாள். நிர்த்தாட்சணியமாயுத்தம்பண்ணாமல் முதுகுகாட்டி யோடுகிறவர்கள் ஒதுங்கினவர்கள் பதுங்கினவர்கள் கொடிய நரகத்திற் குலாவுவார்கள். பகைத்து யுத்தநேரிட்ட காலத்தில் உயிர்வதைசெய்யாமல் விடுவது மகாபாவமாம்.புறமிடாமனின்றுவெற்றிபெறுவதேபுண்ணியசாரம் புருஷதீரம் புகழ்ப்பிரதாபம்பொருந்தியவீரம். ஜீவாதாரப்பிரசாதமாயிருக்கிறநெற்பயிர்முதலாகியவைகள்சீவனாலும் அதுகளையறுத்துப்புசிப்பதனால் பாபமில்லை.மேலும் தவசிமுதலிய முனிவர்களைமனிதர்களை பசுபட்சிமுதலியதுகளை பயிர்பலன்களைக் கெடுக்காநின்ற துஷ்டமிருகங்களையடக்கும்பொருட்டு இராஜன் வேட்டையாடிக்கொல்லவேண்டியது.

அதனாலும்பாவமில்லை. இப்படிக்கெல்லாம் இறந்துபோகிற உயிர்களு க்கு நற்கதியுண்டாம்.மறுபடியும்மிருகங்களும் பக்ஷியாகப்பிறக்காது. இன்னும்நல்லவிவேகிகளாய் தருமசொரூபியா யிருக்கிற பேர்களுக்கு சிலபாவிகள் பொல்லாததுன்பமிழைப்பார்கள். அவர்களையும் அரசன் நீதிவழுவாமல் நெற்பயிருக்குக்களைபிடுங்குவதுபோலதுன்பமில்லாம லழிக்கலாம் கொடுமையில்லை. ஆத்மவிர்த்தியாய்ச் சுகப்படுவார்கள். நீதியுண்டாம்.நன்னெறிசேரும் மாதவர் தவம்புரிவார்கள் அதனால் ம ழைமாரி மிகப்பெய்யும் வையகந் தழைக்கும் இதுகளெல்லாம் நன் மையேயல்லது வேறல்ல. இன்னும் கொடிய கொலைபுரிந்த பேர்கள், பிராமணர்களை நடுங்கச் செய்தவர்கள், பசுவைப் போஷிக்காமல் பட் டினிபோட்டவர்கள், கொரட்டிலே கட்டியடித்தவர்கள் பெரியாரை இகழ்ந்து பிழைத்தவர்கள் வேதவிதிதப்பி நடந்தவர்கள் இவர்களை எல்லாம் இராஜன் விதிப்படிக்கு விசாரித்து துஷ்டநிக்கிரகம் பண் ணினால் துஷ்டர்களுக்குப் பாவம்போய் தெளிவுபிறந்து செவ்வையா னவழியிற் சேர்வார்கள். இராஜனுக்கும் நல்ல சுகபோக பதவிகிடை க்கும். இராஜநீதி கொல்லாநெறியிலும் மேலான நெறியென்றுரைத் தார். அதைக்கேட்டு சண்முகனை அருளி மகிழ்ந்த உண்ணாமுலை அன் னையானவள் சுவாமி பிரம்மசாரி வானப்பிரஸ்தன் சந்நியாசி இம் மூவருக்கும் இல்லறத்தான் துணையென்ப தென்னையென்று கேட்ட தற்கு கைவல்லியமாகுங்கடைப்பிடித் தருமங் கற்பித்தருளினீர், அக் கருத்தை யோசிக்குமிடத்தில், செல்வமிருந்தால் மாத்திரம் சீர்பெற நடத்தலாம். திரவிய முதலிய வருவாய் இல்லாவிட்டால் மேற்சொ ன்ன மூன்றுச் சிரமத்தையும் எப்படிபோஷிப்பான் அவனுக்குப் பொருந்தும் அப்பொருள் வரும்வகையேது எவ்வாறு இல்லறதரும நடத்துவது ஏழையேற்கருளவேண்டுமென்று இறைவி வினவ எப் பொருட்கு மிறைவனாகிய ஈசன் சொல்லுகின்றார்.

123. பாபமில்லாமல் திரவியம் சம்பாதிக்கும் விதம் எப்படிஎன்கிற கேள்விக்கு உத்தரம்.

கேளும் மைக்கண்ணிமானே; தருமார்த்த காமமும்திரவியமில்லா மற் கூடாது திரவியம் வரும்வழி யாதென்னிலோ வித்தியா மூலத் தில், சொல்வண்மையாகிய கட்டுவார்த்தையில், உழவு வாணிபத்தில்,

உண்மையான வியாபாரத்தில்,பசுக்காக்கும் பக்குவத்தில் உத்தியோகத்தில் ஆசை இல்லாமல் சத்தியத்துடனே சம்பாதிக்கலாம். இதுகளிலும் கல்வியுடையவன் கர்வங்கொண்டு தருமங்களைப் பகுத்துசெய்யாமல் சேர்க்கும் பொருளானால் அதுவும்பாவமே. பிரசங்க முதலிய சொல்வண்மைபெற்றவன் ஆங்காரப்படாமல் யாவருக்குந் தாட்சி சொல்லி மாட்சிமைபெறவேணும். உழவு வாணிபமுறை செய்பவன் சோம்பலகற்றி சீவகாருண்யனாய் வரி இறை முறை வழுவாதளித்து மனங் களிகூர்ந்து வருவிக்கவேண்டும். தன்னையுணர்ந்து தனத்தைச் சுமந்து நடு நிலைமையாய் வியாபாரநடத்[illegible] பசுவின்பாலைக்கறந்துகுடித்து பின்னால்காட்டிலோட்[illegible] பல்லும்விழுந்து புல்லும்பிடித்து [illegible] முதலிய தண்ணீருங்கொடுத்து [illegible] பலப்பொருளை ஆர்ச்சிக்கவேணும். உத்து[illegible] வேலை[illegible] தன்னெஜமானன் மனதின்படி நடந்து அவன்சொ[illegible] உண்மைக்குத்தாரமாக வஞ்சனை பொய்மனத் தழுக்கில்லாம விருந்து இரத்தினபரணமுதலியபொருளைச் சம்பாதித்தல் நன்மைப்பொருள். கீர்த்தியுந் தருமமுங் கிளைத்து மேற்படரும். இதுதான் பாபமில்லாத சொத்து. எந்தக்குலத்தோனானாலும் எத்தொழில் புரிந்தாலும் சத்தியமாய் நீதியாய் சம்பாதிப்பது தருமம். இந்தச் சொத்துகளுடனும் உத்தமியாகிய ஸ்திரீயுடனும் வாழ்ந்தால் உத்தமம். உத்தமத்திலுமுத்தமம். தாய் தந்தை பந்துமித்திர உடற்பிறப்புடனிருத்தல் சித்தபவித்திரம். தென்புலத்தார் தெய்வம் விருந்து ஒக்கல் அதிதி பூசை முதலிய விரதங்களை வேதப்பிரமாணப்படிக்கு இழைத்தால் பர அன்னங்கள் பரதனங்கள் புண்ணியமானதாய்ப் பார்த்து இதற்கு வாங்கி இடலாம். இது நான்கு வருணத்தோரு நடக்கவேண்டியதே அவரவர்கள் தன்தன் குலத்திற்குத் தகுந்த பிரதிஷ்டையுடன் சத்தியமாய்ச் சேகரித்த திரவியத்தை தான்மாத்திரஞ்சாப்பிடாமல்சுற்றத்தார் மற்றில்லாதபேருக்கு உதவிசெய்து எல்லார் குட்சியிலும் விழுப்பண்ணவேணும். நல்லதண்ணீர்க்கிணறு உலகத்திற் கெப்படி உபயோகமாகிறதோ அப்படிப்போல உதவினால் எந்தப் புண்ணியவான்களில் கருப்பம் பூரிக்குமோ குளிருமோ அதனால் மேன்மை யுண்டாம். யாவரும் முதற்குலத்தாராகிய பிராமணருக்குக் கொடுத்து பத்திசிரத்தையுடன் வணங்கிப் பட்சம் பாராட்டவேணும். தனக்குப் பின்குலத்தாராகிய பேர்களுக்கு முதவி உபசாரமாய் இன்சொல்லினால் இயம்பவேணும். எவனாகிலும் ஒருகாலங்களிற் செய்த நன்றியை உயி

ருள்ள மட்டு மறக்காமல் இஷ்டதெய்வத்தைக் குறித்துப் பூசித்து நித்தியம் வணங்கி விண்ணப்பம் பண்ணவேணும். நன்றி மறந்தால் அவனொன்றைக்குங் கடைத்தேற மாட்டான். என்றைக்குங் கோபத்தைக் குறைத்து விடவேணும். தீவினை முதலிய பாபங்களுக்குப் பயந்துநடக்கவேணும். நல்வினைப் பொருளை எப்போதெப்போதென்று நம்முடைய செவ்வையான காலத்திலேயே சம்பாதித்துக்கொள்ளவேணும். நாவைக் காக்கவேணும் நல்லவர்கள் உறவை எந்நாளும் விடப்போகாது தீயவரிருக்குந்திசையை நாடப்படாது. இராஜனுக்கினைக் குட்படவேணும், ஓருயிரையுங்கொன்று தின்னுமல் மறுக்கவேணும். சத்தியந்தப்பலாகாது தருமதேவதை பிரியப்படநடக்கவேணும். சாதுசங்க சாஸ்திரவிசாரணை யென்னோரமு மிருக்கவேணும். நல்லகேள்விகளினுல் நமதுகாதுகள்சுத்தியாகிதனக்குத்தானே ...தகுணம்வரவேணும். அப்பால் நன்மைதீமை பெரியவர்கள் சிறியவர்களென்று அறிந்துக்கொள்ளலாம், ஈஸ்வரத்தியானமுண்டாகும் எல்லாநன்மைகளும் விளைவிப்பது கேள்வி எல்லாவற்றிலு மேன்மையானது நல்வழியிற்கொண்டு போய்விடும். திவ்வியபதவி பெறுவான், அவன்மனிததேகமானுலும் தேவர்கள் தேகத்திலும்அதிகமென்று ஸ்திரமாய் நம்பும் பார்வதியேயென்று சாம்பவமூர்த்திசொல்ல அதைக்கேட்ட அம்மையானவள் சுவாமி உலகத்திலே சிலர்பாக்கியவான்களாயிருக்கவும் சிலர் தரித்திரமும் நோயாளியாயும் வருத்தப்படவுமிருக்கிறார்களே இதற்கு காரணம் எனக்குச்சொல்லவேண்டு மென்ன நல்லது காருணியே என்று சொல்லத்தொடங்கினுர்.

124. உலகில் சிலர்பாக்கியராயும் பலர்தரித்திரராகியும், நோயினராகியும், இருப்பதற்கு காரணம் யாதென்பதற்கு உத்தரம்.

ஆதிகாலத்தில் தாமரைப்பூவினில் வாசம்பண்ணிய பிரம்மா இந்த உடல்களை ஏற்படுத்திய நாள் முதற்கொண்டு குற்றமும் பொய்யுமில்லாமலிருந்தது. அதனுல் உயிர்களுக்கு நன்னெறி, நீதி, ஈகை, சாந்தம், உண்மை, பொறுமை, அன்னம், அரிசி, பிட்சை, தக்கோராகிய பெரியவர்கள் மனம் நோவாமல் வணங்கவும், விரததான முதலியதும் பண்ணி அன்றைக்கன்று செய்கிற காரியங்களை ஈஸ்வரார்

பிதும்செய்து பயந்துகாலங்கழிக்கிறபேர்கள் நித்தியவைபவச் செல்வங்களைப்பெறுவார்கள். இதன்றியில் தன்னைப்போன்ற சுற்றத்தார் அண்ணன் தம்பிகள் தாய் தந்தையர்கள் பசியினால் துன்பப்பட்டுக்கொண்டிருக்க தன்வயிற்றைப் பெரிதாய் நினைத்து செவ்வையாகச் சாப்பிட்டு நிர்த்தயாளுவாயிருந்து உபாதான பிக்ஷைமுதலிய அன்னதானஞ் செய்யாமல் ஏழைகளை எதிரிட்டு சண்டை போட்டுத் திரிபவராகிய பொல்லாதவர்கள் வறுமைவந்து நொந்து ஊரூராய்த் திரிந்து இரந்து உழலுவார்கள். அவரவர்கள்மனதினால் தேடிக்கொண்ட இருவினையையும் சீர்தூக்கிப்பார்த்து திசைமுகன் சிருஷ்டிப்பான். இதனால் செல்வம்பெருகுவதும் அல்லலடைவதுமுண்டாகும். சொல்லப்பட்ட ஐஸ்வரியமும் வறுமையும் ஒருவழியில் வருகிறதல்ல, பற்பலவித பேதச்செய்கைகளினால் பூர்வகிர்த்திய பாவபுண்ணியமென்பதற்கு ஈடாய்வரும். பூர்வந்தேடிக்கொண்ட செயல்களென்னவென்றால் தேவதைகளை வணங்காமற் பழித்து இகழ்வதும், தனக்கு வந்த செல்வங்களை நிதானித்து நம்முடைய இருப்பென்ன, நமது முன்னோர்களிருந்த நிலையாது, இந்தப் பொருட்பாக்கியம் நமக்குக் கிடைத்த விதமெப்படி இதுயாவனுடைய முயற்சி,பயிர்க்குழியாகிய செடிபடர்ந்து காய்ப்பதுபோல் சென்மாந்திர புண்ணியவசத்தால் வந்து நேரிட்டது, இதைக்கெட்டியாய்க் காப்பாற்றுவோமென்றால் இதற்கு முன்னிருந்த செல்வர்களெங்கே அவர்களுடையபாக்கியமென்னமாய்ப் போயிற்றென்று நிதானிக்காமல் தானுமுண்ணாமல், தருமதானம் புரியாமல், ஒருவருக்குங் கொடாமல், பந்து மித்திர சவரட்சணையும் பண்ணாமல், உலுத்தனாய் கவலைகொண் டிருப்பவன், பூர்வத்தில் ஒருவன்பொருளை யபகரித்து வஞ்சித்து மோசஞ்செய்து முழுதும் புரட்டினவன், இந்தச் சன்மத்தில் அவனுக்காகக் காப்பாற்றி வைத்திருக்கிறானென்று தெரிந்துக்கொள்ளலாம். இப்படிப்பட்ட பாவி இந்தஜன்மத்தில் யாவராகிலும் பெரியவர்கள் பந்துக்கள் இவனுக்குப் புத்திசொல்லி, ஐயோ வீணாய்ப் புதைத்து வைத்திருக்கிற திரவியத்தை யெடுத்து வெகுபேருக்கு கொடுத்து, சத்திரம் சாவடி கோவிற் குளங் கட்டப்படாதா வென்று நாள்தோறும் இடித்துச்சொல்லிக் கொண்டுவர அதனால் வெட்கப்பட்டு ஏதோ சிலதருமங்களைச் செய்வதற்கும் மனமில்லாமல் உலகத்தார் மெச்சும்படி நடந்தவர்கள் இப்பிறப்பில் வெகு தரித்திரராய்த் துன்பப்பட்டு போசனவஸ்திர பூஷணமில்லாமல் வாடுகிற பேர்களாம்.

பூர்வத்தில் லட்மீபுத்திரராகிய பாக்கியவான்களைப் பார்த்துப் பொறாமைகொண்டு இல்லாத இடையூறு விளைத்தவர்கள், பேதையறிவினால் பிதற்றித்திரிந்து சோம்பலாய் திரிவார்கள்.

தருமம்பண்ணுகிறபேரைத் தடைப்படுத்தி விரதம், நோன்பு, யாகம், வேள்வி, இவைகளுக்குப் பழுதுரைத்து, பிராமணரை நிந்தித்து பசுவைப் பந்தித்து, இரைமுதலியதும் இடாமல் சிசுவைக் கண்டித்து மனத்திலொன்றும் வாக்கிலொன்றுமாய் வசனித்து வஞ்சித்து, செல்வம்வருமென்று பேராசைபிடித்து இறந்தவர்கள் என்னாளும் பசிநோயால் வருந்துவார்கள்.

அப்படி வருந்தாமல் இருந்த இடத்தில்தானே நான்குதிக்கிலுமிருந்து திரவியம்வந்துசேர நாணயம் பாராட்டி பரஉபகாரம் பண்ணி பாக்கியவானென்று சுகமாயிருப்பவர்களியாரென்றால், பூர்வஜென்னத்தில் தனக்குக்கிடைத்ததை இல்லையென்னமல் தானமுமீந்து மனோதுக்கமில்லாமல் மகிழ்ந்து இன்னம் வருவார்களாவென்று புகழ்ந்து பெரியவர்களுக்குப் பலவந்தமாய் பூசைபுரிந்து அமுதுபடைத்து ஆலயந்தொழுது ஆசாரியபக்தி செலுத்தினபேர்களாம்.

எந்தவேளையுங் கவலையாய் அலைச்சல்பட்டு அலைந்து அகாலபோசனமுண்டு சுகத்திலுந் துக்கத்திலும் பாதியாயனுபவிக்கின்றபேர்கள் ஆரென்னில், பூர்வசன்மத்தில் ஒருவருக்கு வாக்குத்தத்தம்பண்ணி ஆசைவார்த்தை காட்டி அலக்கழித்துக்கொடாமல் வயிரெரியப் பண்ணினவர்களாம்.

சிலவேளையிற் அரிய வருத்தமான தொழிலைச்செய்து இராப்பகல் சரீரகஷ்டப்பட்டு அனுத்தூதிரவியங்கிடையாமல் இன்மையால் உயிர்வேதைபடுகிற வர்களாரென்னில் பூர்வத்திலிரப்போர்களிடத்திலிருக்கும் பொருளை இச்சித்து துரோகஞ்செய்து துன்பப்படுத்தினவர்களாம்.

ஆங்காலமெல்லாம்போய் சாங்காலத்தில் பாக்கியம் வந்தால் அனுபவிக்காமல் இறந்துபோகிறார்களே அதுயாது காரணமென்றால், நல்ல ஊழ் வினையினுற்றிரவியம் கிடைத்திருந்தும் நல்லவர்களுக்கும் உற்றார் பெற்றாருக்கும் ஆபத்துவேளைக்குக்காலமறிந்துகொடாமல் நெடுநாள் சும்மாவிருந்து தனக்கு முடிவுகாலஞ் சமீபித்தபோது கொடுக்கப்புகுந்துகுபிலென்றெரிந்த தீபம்போல் கன்மனத்துடனிறந்த கொடுமையாளரென்றறிவாய்.

அநேகம் பொருள் வருவாயிருந்தும் பிணியாலும் போசனப்பிரிவாலுந் துன்பப்படுகிறபாவிகள் யாரென்னில், முன்சென்மத்தில் திர

வியங்கிடைத்ததை நல்லபுண்ணிய காலங்களில் அரதேசி பரதேசி சங்கமர் முதலிய பெரியவர்கள் உரியவர்கள் இவர்களுக்கு உபயோகப்படுத்தாமல் தனக்கு ரோகம்வந்தபோது அந்தநோய் தீர்வதற்காக செபம் நலம் நமஸ்காரம் செய்வித்தவ ரென்றறிவாய்.

சுந்தரலாவண்ய சௌந்தரிய சந்திர முகார விந்தமும் நற்குண நற்செய்கையும் சுகசீவனம் நீண்டசம்பத்துடையவருமாயிருக்கிற பேர்கள் யாரென்னில் பூர்வத்தில் புலால்முதலிய மதுவாதிபுசிக்காமலும்,புசித்தவர்களையும் துட்ட நடத்தையோர்களை மதியாமலும் துதியாமலும் ஈஸ்வரனுக்குத் தேன் பால் பழவர்க்கமுதலியவற்றால் அபிஷேகம்பண்ணி இரக்கமுடன் இருப்பவர் இந்த இன்பமுடையாரென்றுணர்வாய்.

இரக்கமின்றி ஈனராய் அங்கவினராய் அழகில்லாமல் விகாரசொரூபமா யிருப்பவர்கள் யாரென்னில் ? பூர்வத்தில் முகஞ்சுளித்து கடுமொழி புகன்று ஆத்மகோடிகளை வதைத்துக் கையைக் காலையொடித்து கழுத்தையறுத்து கருக்கிப்பொசிக்கிப் புசித்தபேர்களாம்.

நற்குணங்களுஞ் சத்கீர்த்தியும் மேன்பாடுஞ் சொல்வண்மையுந் திண்மையுந் நன்மையுஞ் செல்வமு முள்ளவர்கள் யாரென்னில், அக்கினிசாட்சியாய் தான்மணந்த மனைவியைவிட்டு அன்னியஸ்திரீகளை விரும்பி,தவத்தை சத்தியத்தை விடாமல் தன் மனைவியாருடன் முன் ஜென்மத்தில் கூடி சுகமாகவாழ்ந்தவர்களாம்.

பெண்சாதி இறந்துபோக தான்முண்டையாய் பெருமைகெட்டு ஒருவருக்கும் யோக்கியப்படாமல் தன்னெஞ்சைத் தானேசுட்டுகொண்டு மனம்வெந்து நொந்து நைந்து திக்கில்லாமல் சலிப்பவர்கள் யாரென்னில், பூர்வபுண்ணியத்தாற் கிடைத்த சற்குணப் பெண்சாதியை முறட்டுத் தனத்திற் கடிந்து உதாசீனமாய்ப்பேசி அடித்துப் பிடித்து தாலியறுத்துதனியே படுக்கவைத்து அவள்வயிறெரியும்படியாய் அவளுக்கெதிரில் மற்றொருஸ்திரீயிற்கு உடல் புளகமுண்டாக போகங்கொடுத்து இன்பமுண்டாக்கினவர்களாம்

பிதமற்ற கல்விஞானங்கற்று உலகமெல்லாங் கொண்டாடப் பேர்பெற்று கஞ்சிக்குமாத்திரங் காற்றாய்ப்பறப்பவர்கள் யாரென்னில் பூர்வத்தில் கல்வி கேள்வியிருந்தும் விசேஷகாலங்களில் தானங்கொடாமலும்,கல்வியை ஒருவருக்கு உபயோகப் படுத்தாமலும் கபடியாய் மனத்தழுக்குடனிருந்தவர்களாம்.

பரிசுத்தஞானங் கல்வி செல்வ சம்பத்துடனிருப்பவர்கள் யாரென்றால், பூர்வத்தில் இயாவரிடத்திலும் பேதநினையாமல் எங்குநிறைந்த ஈஸ்வரனேயென்று தாரதன்மயம் பிரிக்காமல் ஒருவருக்குங் குறைவில்லாமல் பெரியகுடும்பங்களைப் போஷித்து நன்றாகக்கொடுத்திரக்ஷித்தவர்களாம்.

கல்விக்ஞான மில்லாம லிருப்பவர்களா ரென்றால்,

பூர்வத்தில் தாம்கல்வியுடையோரென்றும் தனக்கு யாரும் நிகரில்லையென்று யாவரையும் அவமதித்து யெண்ணி இறுமாப்புடன் அலக்ஷியஞ்செய்தவர்களாம்.

மதுரம் சித்திரகவி வித்தாரமுதலிய கவிகளைப்பாடி பிரசங்கஞ்செய்பவர்கள் தரித்திரமடைவது யாதென்னில்,

ஒருகுருவை வணங்கி வழிபட்டு அவரைவிட்டு இன்னொருவரோ டிணங்கி முன் குருவைப்பழித்து பின்குருவைப் புகழ்ந்து, காணிக்கை வஸ்திரங்கொடுக்க நாணினவனும்.

கற்றகல்வியை யாவருக்குஞ் சொல்லி ஆசானைமகிழ்வித்து சொன்னகல்வியின் வழிநடந்து அடங்கி இருந்தவன் இந்தச்சென்மத்தில் கல்வியும் செல்வமு முடையவனுவான்.

குருவையடுத்தும் என்னென்ன பாடுபட்டும் வித்தை வாரமல் அறிவுதுலங்காமலிருப்பவன் யாரென்னில் பூர்வசென்மத்தில் சகலகேள்வியுந் தெரிந்தபெரியோர்களை மதிக்காமல் மரியாதைபண்ணுமல் அவமதித்து இகழ்ச்சிசெய்து பாவந்தேடிக்கொண்டவனும்.

நல்லபெண்சாதி வல்லமையான பிள்ளை லட்சுமிகடாட்சம் ரோகநிவர்த்தி பூரணுயுசு ஆரோக்கிய திடகாத்திரம் பெற்றவர் யாரென்னில் பூர்வம் கல்விதானம்,கேள்வி தானம்,கன்னிகாதானம் புத்திரதானம் தனதானம்,தானியதானம்,வாகனதானம், மாலை, சந்தனம் வாசனுதிரவியங்களைத் தானம்பண்ணியபேர்களாம்.

புருடன் பிள்ளை பெண்டு பந்து ஒருவருக்கொருவர் சம்மந்தமில்லாமல் தேசதேசங்களிற் பிரிந்து தனித்து கவலைகொண்டு உத்தியோகமுதலிய எதைப்பிடித்தாலு முடியாமலிடுக்கமடைந் திருப்பவர்கள் யாரென்னில், சென்மாந்திரத்தில் திரவியந்தேடி மோகலோபங்களினுலே பூமியிற் புதைத்துவைத்த இடந்தெரியாமல் வாயடைத்து மாண்டவர்களாம்.

செல்வங் கிடைத்தும் பிள்ளைகளில்லாமல் வேதனையாய் தருமம்புண்ணவேணு மென்று சஞ்சலப்படுகிறவர் யாரென்னில் ?

மூற்பவத்தில் கருப்பங்கொண்டிருக்கிற உயிரை கத்தியினலறுத்து கருப்பத்தைக் கொலைத்து, குருவிக்கூண்டைக் கோலாற்கலைத்து குளம், கிணறு, குட்டையைக் கெடுத்தவர்களாம்.

பிறவிக்குருடரா யிருப்பவர்கள் யாரென்றால் பூர்வத்தில் காமமயக்கத்தினல் பிறருடைய ஸ்திரீயை அபகரித்துக்கொண்டும் வஸ்திரம் விலங்கிய பெண்ணுருபங்களேயும் அவர்கள், அவயவங்களைப்பார்த்து ஆசைகொண்டிருப்பவர்களாம்.

நடுமத்தியில் கண்போனவர்கள் யாரென்றால், தவளைமுதலிய ஜெந்துக்களைப்பிடித்து ஈர்க்கில் திரிச்சீலை கொளுத்திச் சொருகினவர்களாம்

கண்களில் பூவிழப்பட்டவர்கள் யாரென்றால் மூளகாய்முதலிய கொடியதூள்களை ஒருவர் அல்லது ஒருஜெந்துவினுடைய கண்ணிவிட்டவர்களாம்.

கண்சிதைந்தவர்கள் யாரென்றால் பசுவைமற்ற உயிர்வருக்கங்களைக் கண்பொறிகலங்க அடித்தவர்களாம்.

காதுகேளாதவர்கள் யாரென்றால் பெரியோர்முதலிய தாய் தந்தை அண்ணன் அம்மான் இவர்களை அதட்டி கடூரமாகிய மொழிபுகன்று கடுஞ்சொல்லாகிய நெருப்பைக் காதிலேற்றினவர்களாம்.

தீப்போலாகிய வயிற்றுநோய்வந்து தேம்பித்திரிபவர் யாரென்றால், பொய் அசத்தியம் ஒருவர்பொருட்டாக பேசிய பொருளை அல்லது பெண்ணை மற்றொருவற் கீந்து மணமுவச்செய்தவரும் ஒருவர் தின்னுகிற அன்னத்தைக்கண்டு கண்கூசி வயிறுதாரிஎன்றேசி நகைத்தவர்களாம்.

பித்தமூர்ச்சை பிடித்தலைபவர்கள் யாரென்றால், கள் சாராயம் கஞ்சாக்குடித்து அபின் தின்றுமயங்கி அத்துமீறி உத்தமிமுதலிய மற்றவரையேசி இகழ்ந்தவர்களென் றுணர்வாய்.

எத்தனை பிள்ளைகளைப் பெற்றாலுஞ் அடிக்கடி இறந்து செல்வமுங்கெட்டு அல்லல்படுபவர்கள் யாரென்றால், வித்துவான் மனநோகப்பண்ணிய வீணர்களாம்.

கோசத்தில் இரணங்கண்டு சீழும் இரத்தமும் சிலைத்தண்ணியும் சொட்டு இந்திரியஞ் சிந்தி இருப்பவர்கள் யாரென்றால், முற்பிறப்பில் பரதாரம்விரும்பி தொந்தரைபண்ணி பலவந்தமாய்ப் புணர்ந்தவர்களாம்.

அடத்தின்பேரில் ஒருவருக்கு சங்கடஞ் செய்தவர்கள், கன்னியையழித்தவர்கள், பசு, கழுதை, எருமை, குதிரை, ஒட்டை, முத

லிய வற்றினுடன் சம்மந்தப்பட்டவர்கள் சிறியதாய், தமக்கை, தன்பெண் இப்படிப்பட்டவர்களுடன் முறைதப்பினவர்கள் அறிவு கெட்டு மாடுபோலுழைத்து வறுமையுடன் பாவிகளாவார்கள்.

மாட்டை வண்டியிற்கட்டி, பொதிபோட்டடித்து அந்தலாபத்தைத் தின்றவர்கள் இப்பிறப்பில் யானைக்கால் விஷாவிக்கத்துடன் கழுத்தொடிய பளுவெடுப்பவர்களாம்.

மூர்ச்சையாய் மயங்கிவிழுபவர்கள் யாரென்னில், கோழி, ஆடு திருடி, கழுத்தைமுறித்து முடித்தவர்களாம்.

விலங்குபோட்டுகொண்டு கட்டுக்காவலாகிய காவற்கூடத்தி லிருப்பவர்களாரென்றால், பசுவைத்தளைந்து அண்ணாந்தாளிட்டு பட்சி மிருகங்களைத் தனிக்கூட்டி லடைத்து வளர்த்தவர்களாம்.

முடவரானவர்களாரென்றால், பசுமுதலிய நல்லசீவனைக்காலை முறித்துபடுகுழிபாய்ச்சிருண்டுகள்காலை உயிருடன் ஒடித்தவர்களாம்.

கால்கள்பருத்து, இரணமாய்ப் புண்ணாய்ப்புழுத்து மண்ணாய் மக்கிறவர்களாரென்றால், கால்கழுவாமலும் புறங்கால் நனையாமலும் சுசி இல்லாமலும் பொய்யாக கால்நோ யென்றுசொல்லி, பெரியோர் களிட்ட வேலைசெய்யாமல் பால்மாறினபோர்களாம்.

கோவிலுக்குப்போய் தரிசிக்கசோம்பலுடையவர்கள்யாரென்றால் பூர்வத்தில் தும்மலிட் டவர்கள், . பெரியவர்களுக்கு தேவதைகளுக்கு உரியபொருளை அன்னத்தை உதைத்தபேர்களாம்.

தொண்டநோய், கூன்,வாய்க்கோணல்,இப்படிப்பட்டவர்கள் யாரென்றால் கூலிக்காரருக்கு கழுத்தொடியச் சுமையேற்றி கூலிகுறைத்தவர்களாம்.

வியாபாரத்தில் தான்னியமுதலிய பலபண்டங்களை அங்காடியை குறைந்த விலைசொல்லிக் குறைத்தபாவிகள்; குஷ்டரோகிகளாய் விரல், கை, கால், மேனி, குறைந்து, வெடித்து வலிப்பெடுத்து, இருக்கிற தீயர்களாம்.

நிறை மறக்கால் படிமுதலிய அளவிற்குறைய அளந்து நிறுத்தவர்கள், பரமசாதுவாய், பத்தியாய் சத்தியமாயிருக்கும் பாப்பிரமமத்தின் பிரீதியடைந்தவர்களை வஞ்சித்து அவர்களுடைய பொன்னைப்பொருளை நிலத்தை யெடுத்துக்கொண்டு போராட்டஞ்செய்த புலையர்கள்; இந்தச்சன்மத்தில் நிலை இல்லாமல் உன்மத்தராய் சீச்சீயென்ன அடிக்கடி உதையும்பட்டு, ஆகாரமில்லாம லுயிரோடிருப்பவர்களாம்.

பிள்ளைகளிருந்தும் குடும்பமழிந்து போகிறவர்கள் யாரென்னில், மாதுர்பிதுர்காரியங்களை மகிழ்ந்து நடத்தி பிராமணரைப் பூஜியாத பேர்களாம்.

சிசுவதையும், பசுவதையுஞ்செய்த தீயர்கள், இச்ஜன்மத்தில் நபும்சகனானவர்கள், அதாவது பேடியாவார்களாம்.

பஞ்சபுண்ணிய காலங்களில் ஸ்திரீகளைப் புணர்ந்தவர்கள் ரிஷபத்தைக் கோசத்தி லடித்தவர்கள் கலகஞ்செய்யும் மத்திமமானவர்கள், நிரோதுவாய் தன் ஸ்திரீயுடன் பேசாமல் சபதம்பண்ணிக்கொண்டு அவளைக்கூடாமல் அவளக்கறை இல்லையென்று விட்டுவிட்டு, அல்லது அவளை தாய்வீட்டுக்கனுப்பிவிட்டு இருப்பவர்கள்மூலரோகத்தினாலும், கோசரோகத்தினும் துன்பப்பட்டு சுகமற்றிருப்பவர்களாம்.

புருஷனைநீங்கி வஞ்சித்து சோரபுருஷனைச் சேர்ந்தவள், இப்பிறப்பில் மேற்சொன்ன துன்பத்தையடைந்து கண்ணீரும் கவலையுமாயிருப்பாள் இவள் புருஷன் மாத்திரம் கண்ணியமாயிருப்பான்.

நல்லகுடிப்பிறப்பில் பிறந்தும் ஆசாரசுசியிற்சிறந்து இருந்தவர்கள் பற்பல ஈனமானமில்லாத தொழில்களைச்செய்து கண்ட இடத்திற் புசித்து ஜாதி குலமேதென்று ஞானியைப்போலப்பேசி வயிறு வளர்க்கின்றவர்கள் யாரென்றால், முற்பிறப்பில் சிற்சொரூப வஸ்துவாகிய தேவாதிதேவனை சிவபெருமானைத் தெரிந்து பரிந்த மெய்யடியார்களை பத்தி பாராட்டாமலும் பரிவுகூறாமலும் உபசரிக்காமலும் உல்லங்கனம் பண்ணினவர்களாம்.

முயற்சியுமின்றி படிப்புமில்லாமல் சோம்பலுடையவனாய் யாவருங்கோபிக்க கண்பிசைந்து தாசத்துவமாய் வேலைசெய்து ஆளடிமைப்பட்டவர்கள் யாரென்னில் முற்பிறப்பில் ஒருவர் பொருளை யெடுத்து மறைத்து அறியேனென்று அசத்தியம் பண்ணினவர்களாம்.

உரியவனாய்ப் பெரியகாரியங்கள் உபசாரம் பட்சம்வைத்து வேலைசெய்தாலும் இவர்கள்பேரில் எஜமானன்களுக்கு இஷ்டமில்லாமலிருப்ப தென்னவெனில், பூர்வத்தில் தாதாவாய் வந்தபேருக்குத் தியாகங்கொடுத்து வரும்போது அதில் ஒருவனைக்கண்டு அவனைத் தன்னிடத்தில் வரவொட்டாமலோட்டித் துரத்தி விட்டவர்களாம்.

மகாபாபசிந்தை படைத்த நிர்த்தாட்சணிய இராஜன் ஒருவனைப் பார்த்து உடனே நாகசற்பம்போற் சீறிக் கோபித்துக்கொண்டு தண்டனை கண்டனை பண்ணச்சொல்லி அதனால் வருந்துகிறவர்கள் யாரென்னில் முற்பிறப்பில் சாந்தகுணமில்லாமல் நாய்போற் குலைத்

து தயாரசம் மின்றி தன்னைச்சார்ந்தவர்களை இம்சித்து தலைநடுக்கப் பண்ணிய பாவியர்களாம்.

தன்கைப் பொருளை ஒருவருக்குக் கொடுத்து அந்தத் திரவியம் வராமல் திரிந்து அலுத்துத் தளர்ந்து சண்டைபோட்டு நெஞ்சு புண்ணாகப்பேசியும் ஞாயஸ்தலங்கள் தோறுந்திரிந்து பொருள் போயிற்றே யென்று பரிந்து விசாரப்பட்டு பரதவிக்கிறவர்களாரென்றால் ஒருவர் தன்னிடத்தி லடைக்கலமாக வைத்த பொருள்களை அபகரித்து அவனை அழவிடுத்த குருத்துரோகியர் களாம்.

பெண்களும் பிள்ளைகளும் பெண்சாதியும் உற்பாதமாய் ஏககாலத்திற் சாகுகின்றவர்கள் யாரென்னில் அனேகம்பேர்களைக் குடும்பத்துட னழித்த அதிகார ஆங்காரிக ளென்றுணர்வை.

ஓ, பார்வதி! இப்போது நாம்புகன்ற பாபாத்மாக்களை எல்லாம் இயமன்முன்னே தண்டித்தும் மறுபடியும் பற்பலயோனிமுதலிய மானிடப் பிறவிபிழந்தும் அனுபவிக்கவேண்டிய வாறென்றறிந்துக் கொள்வாயாக இயமன் அந்தப் பாபிகளை நரகத்தில் வீழ்த்தி அநேக நிற்பந்தமான ஆக்கினைபுரிந்து இத்தனைகால மென்று கணக்கிட்டு அதததனையு மனுபவித்துத் தீர்ந்தபிற்பாடு அவரவர்கள் பாப புண்ணியத்திற்கு தக்கபடி மறுபடியும் மனுஷனாய்ப் பிறந்தபோது நான் சொல்லிய படி அனுபவிப்பார்கள், இதனிலுங் கொடுமை இழைப்பார்களாகில் பின்னும்பிறந்து நரகப்படுகுழியில் வீழ்ந்து கிடந்து மறுஜனனத்தில் உதவாதயோனிபேதமாயுதிப்பார்கள் என்று கைலாசவாசர் திருவாய் மலர்ந்தருளினார், மலையத்துவஜன் மகளாகிய பார்வதியார்கேட்டு அற்புதப்பட்டு சந்தோஷமாய் ஒருவாக்கியம் பேசினாள். எமதுகடவுளே கொடியபாவிகளை மனுவிக்ஞானப்படி தண்டிப்பது நீதியானாலும எமதண்டனையிருக்க இவ்வரசன் தண்டிப்பானேன் பாவிகள் தண்டிக்கப்படுவானேன், இது பூர்வவினையா, அல்லது இத்தப்பிறப்பிற்செய்த பாவமா, சொல்லவேண்டு, சுத்தாத்மகமேயென்று கேட்க, கொன்றைமாலை சூடியகோமான் சொல்லுகிறார்.

125. குற்றமுடையவனை மனுவிக்கியான முறைமைப்படி அரசன் தண்டித்திருக்க அவன் நரகத்தையனுபவிப்பானேன் என்பதற்கு உத்தரம்.

ஓ! கோமளமே. கர்மபூமியிற் சனித்தயாவருக்கும் நல்வினைதீவினைப்போகம இன்னொருபிறப்பிலாட்டுமே, அதுயாதென்னில் பொய்,

அநியாய பத்திரங்கள் கணக்குவழக்கு பிசகு ஆங்கார ஆணவ மோக அவா, காமக், குரோத, லோப, மத, மாற்சரியமுதலியவற்றைப் பற்றிவருகிற சொல்ப குற்றங்களை அப்போதைக்கப்போதே அரசன் தண்டிப்பது இருவினைக்கும் மனோவினைவுக்கும் சம்மந்தமில்லை. பெரிதாகிய வஞ்சங்கொலைமுதலிய கொடுமைகளெல்லாம் இராசதண்டனையிற் றீராது. பரலோகத்தில் சண்டன் தண்டனைக்குள் ளடங்கியதே பெரும்பாவத்திற்குத் தகுந்ததண்டனை வேதனை, அரசனியற்றினால் ஸ்தூல தேகம் பொறுக்காமல் உயிர்போய்விடும், அப்பாலுயிரைக்கண்டு பிடித்துத்தண்டிக்க வேந்தனால்முடியாது இயமபடாள் யாதனாசரீரவசத்தாகிய பிராணனை வேண்டியமட்டுங் கண்டிப்பார்கள், அப்புறமும் கர்மபூமியில் சமூகவிசாரபந்த சல்லிய தொந்தமாம். இவ்விருவினைக் கீடாய் ஆன்மாக்கள் முத்திசேரும் அவர்களுக்குப் பிறப்பில்லை யென்று தேவிக்குச்சாற்றினார், மகாதேவிமகிழ்ந்து, சுவாமீ உலகத்தில் எத்தனைகோடி பாபம் பண்ணினாலும் ஒரு அஸ்வமேதம் பண்ணினால் தீர்ந்து போமென்று தேவரீரைப் பூசிக்கு முனிவரும் வேதங்களுமொரு செப்புகின்றனவே, அதெப்படி க்குத்தீரும் நல்வினைதீவினை, அனுபவியாமற் றீராதென்று தேவரீர்மொழிந்தீர்களே, அது விபரஞ்சொல்லவேண்டு மென்றுவேண்ட பரமசிவம் பகரலுற்றார்.

ஒரு இராஜன் தெளிவுள்ளவனாய் இந்தப் பிரபஞ்ச மித்தை யென்றுணர்ந்து தேகாபிமான மிங்கிய செருக்கற்ற ஞானவான்கள், பாபஞ் செய்வானாகில் தன்னையறியாமற் கலந்தபாவம் அஸ்வமேதை யாகஞ்செய்தால் தீரும். தானென்கிற அகங்காரம் படைத்து மத மாற்சரியமாககோபம் பொய், பொறாமை, லோப, மோகம், இகட்சி எனதெனு தென்னும் பற்று தன்னைவிட வேறேயாரு மில்லையென்று அஞ்ஞானகேவலமுடையவனுக்கு அளவிறந்தபாவமாம். அவன் எப்படிப்பட்ட தானதருமம் எக்கியாதிகள் செய்தாலுந் தீராது. எமதண்டனை பூர்த்தியாயுண்டு. அவன் அநேக செனனமெடுத்து இம்மையிலும் துன்பம் அனுபவித்து மறுமையிலுந் நரகவாதையடைய அனுபவியாமற் றீராதென்று விளம்பினார்.

அதைக்கேட்டகற்பகவல்லி,சந்தோஷப்பட்டு இரண்டு கரங்களையுங்குவித்துப் பணிந்து ஆண்டவனே, அருளாகிய ஞானம்வந்த காலத்தில் எல்லாம் ஈஸ்வரச்செய லென்றும் காலத்தி னியல்பென்றுஞ் சொல்லுகிறவர்கள் சிலர், ஆத்மாபுசித்து அனுபவிப்ப தெல்லாம் வினையின் சுபாவமென்று பலர் பேசுகிறார்களே! அந்தமயக்கத்தை

மாற்றியருளும் மஹாதேவனையென்று வணங்கும் மயேஸ்வரிக்கு மயேஸ்வரன் சொல்லுகின்றார்.

முன்செய்த இருவினைக்கீடாகப் பின்னனுபவிப்பது மெய்தான். அவ்விருவினைக்குத் தகுந்தகாலமும் வந்துகைகூடும், அந்தக்காலம் நல்வினையானால் சகலசம்பத்தும் நினைத்தகாரியங்களும் நேருக்குநேராய் வந்துபொருந்தும். பொல்லாவினையின் காலமானால் பிடித்தகொம்பும்போய் மிதித்த கோலும்போம் ஆதலால், இன்பமும் துன்பமும் வினைக்கு தகுந்ததுபோல் நடக்கும். ஆதியில் தாய்தந்தை இருவரும் அமர்ந்தபோது அறுகுநுனி பனியனைய துளிதரித்தகாலம் ஜலோதயம் சிரோதயம் பூர்வோதய மானகாலம் இதற்காக ஏற்படுத்திவைத்திருக்கின்ற நாள், நக்ஷத்திரம், லக்கினம் நவக்கிரக தீட்சண்யம், வீட்சண்யம் நட்பாட்சி உச்சநிலைகள் மாறல், வக்ரம், கேந்திரகோணம் இவைகளைப்பிரித்துப் பொருத்தி பிறந்ததுமுதல் இறப்பதுவரைக்கும் ஆயுர்பாவ மேற்படுத்தி இந்த இந்தக்காலம் இன்ன பலன் இந்த இந்தக்காலம் இன்ன நஷ்டமென்று நாம்செய்த சோதிட நூலோர் நியமிப்பார்கள். நல்வினை தீவினைக்கீடாய் ஒத்து நடந்தேறிவரும், ஆங்காலமெல்லாம் தன்சமத்தென்று தலையாட்டங்கொண்டிருப்பான், போங்காலம் பொருந்தியபோது தெய்வமே தெய்வமே யென்று புலம்பித்தவிப்பான். நற்காலத்திற்குத் தகுந்த புத்தியுத்தி சக்தி சித்தியெல்லாம் பிறக்கும். துற்காலத்தில் முன் பிறந்ததெல்லாம் பறக்கும், இதுதான் உலகவாழ்க்கை வினைவசத்தென்பதற்குச் சந்தேகமில்லை. இப்படிப்பட்ட வாழ்க்கையையும் வினையையும் இதுகளினால் விளையும் உபாதிகளையும் நீக்குகிறவர்கள் யாரென்றால் மலபரிபாகப்பட்டு பிரபஞ்சத்தைநீக்கி இருவினையையொப்பக் கழித்தவர்கட்கில்லை. அவர்களென்னைச் சார்ந்தவர்கள் என்றார். அப்போது சாம்பவி பணிந்து, சுவாமி, பாலரானவர்கள் சிறுபிள்ளைகள், வயசுக்காரர், சீக்கிரமிறக்க வார்த்திபர் வெகுநாளைக் கிருக்கின்றார்களே அதென்னகாரண மென்ன.

126. வார்த்திபர் வெகுநாளைக்கிருக்க, பால்ய எவ்வனமுள்ள சிறுவர் இறப்பதற்கு காரணம் யாதென்ற கேள்விக்கு உத்தரம்.

ஓ மலைமகளாகிய மணியே! அது பூர்வசென்மத்திற்செய்த புண்ணியவசத்தால் கருத்தரிக்கும்போதே கற்பனையாய்விடும், முற்பிறப்பி

ல் சத்தியம் வாய்மை சாந்தம் பொறுமை, இரக்கம், கருணை, வணக்கம் ஒழுக்கம், நெறிமுறையாசாரம் ஞாயாநியாயம் அன்னைபிதா குரு தெய்வம் பிதுர்க்கள், இவர்கள் பூசை அன்புடனுசை உரியவராசை உணவினுரிசை சொற்றவறாமை முதலாகிய சத்கருமங்களிற் பிரவேசித்தவர்களுக்கு ஆயுள்விருத்தி ஐஸ்வரியசித்தி அறிவானந்தயுக்தி அபரிமிதமில்லாப் புத்தியும் பொருளு முண்டாம்.

பொய், வெகுளி, கோபம், குரோதம், பகை, சூது, வாது, தாய்தந்தைஇகழ்ச்சி தன்னிஷ்ட மகிழ்ச்சி, ஆசாரயீனம்,அனுசாரபானம் தருமவிகாதம் குருதெய்வம், பெரியோர்நிந்தனை இன்னமுள்ள பொல்லாதகாரியம் செய்தவர்களுக்கு அந்தந்த அளவின்படி அற்பாயுசுண்டாம். இதல்லாமலும் இன்னமொரு இரகசியங்கேளும் இமயவல்லி! மேலுலகாகிய சொற்காதி போக முதலானதுகளிலே இருந்து அனுபவித்துத்தீர்ந்த பிற்பாடு மறுபடியும் பூமியிற்பிறந்து புண்ணியமும் பண்ணின பேருக்குப் பூரணாயுசும் நோவற்ற வாழ்வும் குறைவற்றசெல்வமுமுண்டாம். நரகத்திற்கிடந்து நலிந்து மெலிந்து பின்னும் எழுவகைத்தோற்றங்களிற் பிறந்து ஒருவேளை மானிடயோனியில்வந்துவிடுமாகில்,பலவகைப்பிணிகளால் உழந்திசிலநாள்வருந்தி நல்ல சுகபோகமில்லாமல் தரித்திரராய்மாய்வார்கள். பலர் அற்பாயுசாய் மாய்வார்கள். இதுதான்மேலை ஆத்மா சுகதுக்கப்பட்டுக்கொண்டேதிரியும் ஆத்மா நசிக்கும் வரையிலும் துக்கநீங்காது. அதுவரைக்கும் எத்தனைகோடி தாய் எத்தனைகோடி தந்தை எத்தனை ஸ்தலம் எத்தனை ரூபம்எத்தனை நாமம் எத்தனை யெத்தனையென்றியம்புவேன் இறைவி, இந்தஉயிர் இயற்கை குணமாகில், இன்பம்வாய்த்து அது செயற்கை குணத்தால் அவ்வெண்ணமாயிற்றென்று பெரியவர்களின் சாவகாசம்பண்ணுமற்போயிற்று. சாஸ்திர விசாரணையுடன் விவேகம் விளங்கி தன்னையுந் தலைவனையு மறிகிறகியானமருவி மோட்சமடைகிற பரியந்தம் பிறவிக்கிடமுண்டாகும். ஆயுள்வளருகிறதுந் தேய்கிறதும் சரத்தினது தன்மை. சரமாவது கலை, கலையென்பது சூரியகலை சந்திரகலை சுழிமுனையென்று மூன்றுவிதமாய்ப் பிரித்துஅதில், வலதுபக்க மூக்கில் வருகிறசுவாசம் சூரியகலை. இடதுமூக்கிலோடுகிற சுவாசம் சந்திரகலை. சுழிமுனையென்பது புருவமத்தி. இவற்றில் ஒவ்வொருபக்கத்திற்கு அஞ்சுநாழிகையாக்கி ஒருநாழிகைக்கு இருபதுவயது நியமித்தது அந்தநாழிகைஸ்திரீபுமான்கள்சுவாசத்திலேநின்றது ஆயுசென்றும்சுழிமுனையானால், அப்பொழுதுதானே ஒடுங்குமென்றும் சரசாத்திரமும் சொல்லியிருக்கின்றது. அதுவும்

முன்சொல்லிய இருவினைக்கிடாகவே ஒத்திருக்கும். எல்லாவற்றிற்கு மூலம் வினையேதான். காரணம் வினைக்குமிஞ்சின தொன்றில்லை அதை விபரமாய்ப் பாராவிட்டால் மேல்வருந் தொல்லையென்று சதாசிவப் பெருமான் சாற்றவும் மந்திரவேத வித்தாகிய மயேஸ்வரிகேட்டு சந்தோஷப்பட்டு மீண்டும், ஓ சுவாமி ! உடலெல்லா மொன்றாயிருக்கவும் அதை உத்தம, மத்திமமென்று சொல்லவும் நேரிட்டிருப்பானே னென்று கேட்க அருளானந்த சொரூபாராகிய பரமசிவம் காமக் கோட்டியைக் கண்ணோக்கி சொல்லுகின்றார்.

127. ஜென்மங்களில் உத்தமம் மத்திமம் அதமம் அதமா அதம வகையுரைத்தல்.

கேளும் உமையே நால்வகை யோனி, எழுவகைத் தோற்றம், எண்பத்து நான்கு லக்ஷம் ஜீவபேதங்களும் அவற்றின், அண்டஜம், சுவேதஜம் உற்பீஜம், ஜராயுஜம், இன் நான்கில் ஜராயுஜம் என்னும் மானிடயோனியி லுற்பவித்து அதில் கூன், குருடு, செவிடு, ஊமை, பேடு நீக்கி பிள்ளையாய்ப்பிறந்தும், அதினும் கல்வி கேள்வி, ஞானம், தான தருமம் சாந்தம் தயை, ஈகை, இரக்க முடையவன் உத்தம ஜனனமாவன். இரண்டாவது மேற்சொல்லிய நல்லவயவங்களுடனும் இன்றியும், கல்வி, கேள்வி, தான, தருமமுண்டாகி ஞான மில்லாமலிருப்பவன் மத்திம ஜனனமாவன். மூன்றாவது எல்லா அவயவங்களும் பொறி, புலன்களுடன் நன்றாயிருந்தும், கல்வி, கேள்வியின்றி, மூடமாயிருப்பவன் அதமஜனனமாவன். அதனுடன் பொய் புரட்டு, வஞ்சகம், பிறர் பொருளிச்சித்தல் கடுஞ்சொல், தந்தை, தமையன், பந்து, மித்திரர் பெரியோர் நிந்தை செய்பவன், மற்றபசுவாகிய அஃறிணை ஆத்மாக்களிற் சேர்ந்த அதமாதம ஜெனனம். இப்படி எண்ணிறந்த ஜனனங்களில் கருப்பாவஸ்தை முதல் பால்ய, எவ்வன கௌமார, வார்த்திகவனாயில் அடையும் துன்பத்தையுன்னி, பெரியவர்கள் இலை சருகு முதலியதை உண்டும் ஜலம் காற்றையுமருந்தி இருவினைக் கிடாய்வந்த உடலை விட்டார்கள். ஆகையால் தத்துவங்களையுணர்ந்து தன்னையறிந்து என்னையுணர்ந்து இன்பமனுபவிப்பதே நித்திய நிலையென் றுணர்ந்து சிரவண மனனஞ்செய்யும் படிக்குச் சாஸ்திரங்கள் முறையிடுகின்றன சிரவணமானது, கேட்டல், சிந்தித்தல் தெளிதலென்று சொல்லப்படும், அச்சிரவணம் பெருங்காற்றினுல்

பெருமரம் வேரறுவதுபோல் கேள்வியாம்,காமக்குரோத, லோபங்கள் நீங்கிப்போம்,யாவனொருவன் கல்வி, கேள்வி இல்லாதவனோ அவனது நல்வினை உறுதிப்படமாட்டாது.நல்வினை யுள்ளமட்டும் அற்ப பலனைக் கொடுக்கும்.எந்த காரியத்திற் பிரவேசித்தாலும் அதற்குஅநேக விக்கினங்களுண்டாம்,ஆதலால் எல்லாவற்றிலும்கல்விகேள்வியேபெரிது. ஆன்மாகடைத்தேறும் மேலான தருமம் பலிக்கும். செல்வஞ் சித்திக்கும் மற்றொருவிதத்திலும் பயனில்லை. பெரியவர்களுக்குத் தொண்டு புரிந்து அன்புடன் கேட்ட இன்பமுடையார்க்கு முன்பிறந்த பிறப்பின் முதன்மை தெரியும். இவர்களைத்தான் திரிகாலஞ்ஞானியென்பது. இவர்கள் மகாத்மாக்கள் தவசிரேஷ்டர் இதுகளெல்லாங் கடைசில் அவரவர்கள்செய்த இருவினைக்கீடாய் நடக்கும். முன்விட்ட குறை யெதுவோ அதுதான் இப்போதுவந்து தொட்டுக்கொள்ளும், அறியாமை ஒன்பதுபங்கு அறிவாண்மைஒருபங்கு,இதைதேவதைகளும் நீக்கிக்கொண்டவர்களல்ல; அவர்களும் வினைவசத்தரோ ஆகையால், பட்டதைப் பட்டுகேட்டதைக் கேட்டு கெட்ட இடத்திலே கெட்டு சொன்னதைச் சொல்லி பெண், பிள்ளை, பூமி முதலியதும் பொய்யென்று தள்ளாமல் மெய் யென்று நம்பி ஆசை கொண்டு ஈஸ்வரத்தியானமில்லாமல் மௌடீகமாய் வாழ்பவர்கள் நோயால் மெலிந்து பந்துமித்திராதி சுற்றிலு மிருந்து அழும்போது எமதூதர்வந்து இவனறிவைக்குறைத்து உடலைப்பேதித்து உயிரைக் கொண்டுபோய் மகாவிரத சத்தியசீல உத்தமனான காலகர்த்தனிடத்தில்விட்டு இவனுடைய நலம் பொலன்விசாரித்து அனுபவிக்கப்படுத்தி பின்னும் பூமியிற்பிறக்கச்செய்து பெண் ஆண் என்கிற உடற்பேதமுமாக்கி விடுவார்கள் என்று நிமலன் புகல, நாதநாதாந்த ரூபிகேட்டு நானுடையவளாய், ஐயரானக்கடவுளே! கனவென்று சொல்லுவதியாதென்ன சோமசுந்தரர் சொல்லலுற்றார்.

ஓ! நீலமேகத் தோகாய் நனவே கனவென்பது அதுமனச்சேஷ்டை எந்த நாளையில் எவ்விடத்தில் என்னத்தைக்கண்டு நினைப்பதோ அன்னதெல்லாம் கனவுதான் ஆகிலும்அப்படிக்காகிற சொர்ப்பனத்தில் சிலகாரியங்களுங் கைவல்லியமாம், பிரயோசனமற்றுப் போகிறதுமுண்டு அல்லதுசொற்பப்பிரயோசனமாகும். அதையொரு பொருட்டாயெண்ணவேண்டியதில்லையென்று ஒப்பில்லாதவருரைக்க அதற்கு விற்பன விவேகமுள்ள மாதாவானவள் சுவாமி, இதுசகலாத்ம கோடிகளுக்கும் மேல்வினையினால் நடப்பதோ தேவரீர் செயலால்வருவ

தோ அந்தவிபரஞ் சொல்லவேண்டுமென்று. சிவசத்திகேட்க சதா சிவஞ் சொல்லுகின்றார்.

128. ஒவ்வொருவருடைய செய்கையும் தன்வல்லபத்தின் செயலா அல்லது வினையால் நடத்தும் ஈஸ்வரச்செயலா என்பதற்கு உத்தரம்.

ஓ! காருணியகடாக்ஷியே கேளும், எந்தச் செய்கையும என்னை முன்னிட்டுக் கொண்டிருக்குமல்லாமல் வேறல்ல. தானென்னும் மாயாவசத்தி லழுந்தாமல், பிரபஞ்சம் ஈஸ்வரவிலாசமென்று எல்லாவற்றையும் எனக்கு அற்பிதம்பண்ணப்பட்ட அன்புடையவர்கள் செய்யுங்காரியமெல்லாம் என்னைச்சாரும். ஆணவமலத்தால் தன்னையறியாது தானென்றுன்னிய செய்கைகளியாவும் நஷ்டமும், கஷ்டமுமுண்டாய் துஷ்டத்தனத்திற் கொண்டுபோய் விட்டுவிடும். சர்வமும் மித்தையென் றறிந்தவனுக்கு என்னுடைய செயல், நினைப்பின்வண்ணந் தன்செயலென் றுணர்ந்தவனுக்கு ஊழின்செயலென் றுரைத்தார்.

உலகநாயகிகேட்டு தேவாதிதேவா ஊழ்வினையென் றுண்டானால் உலகத்திலுள்ள மதபேதங்களில் ஒருமதஸ்தர் இந்தப்பிறப்பி லெடுத்ததேகம் இத்துடன்சரி இன்னொருபிறப்பென்பது சந்ததிகாலவழி, வேறேதேகமெடுப்பதில்லை யென்று பேசுகிறார்களே, அதென்னகாரணமென்று அம்மன்கேட்க, பச்சைக்கொடியாகிய பணாயே கேளென்று பரமேஸ்வரன் பகருகின்றார்.

129. மறுஜனனம் இல்லையென்று சில மதஸ்தர்சொல்லுகின்றதெப்படி என்றகேள்விக்கு உத்தரம்.

ஒருபொருளுண்டென்றெண்ணாதவன் மோட்சத்தைக்கண்டதாரென்றவன், உடலடைகிறதே மோட்சம் தேகமிருக்கும்போது அனுபவிப்பதே ஆத்மலாபம் வினைப்போக மென்பவன் நினைப்பின் வழியே நடப்பான், அவனுக்குந் துணை நாமே இருப்போம் இதொரு பட்சவாதியின் கருத்தென்றார்.

பராசத்தியார் சுவாமி இப்படிக்கு அருள்புரிந்தால் இதற்குமுன் சொல்லிவந்த சூக்ஷத்தில் தேகியும் தேகமும்போனவுடனே ஆத்மா எமபடாள்வசமாய்ப்போய் நரகமுதலியநன்மைகளையனுபவித்துமறுபடியும் பிறவியாமென்று நவின்றிருக்கின்றதே இதற்கென்னசொல்லுவீர் எண்டோளிறையே யென்று, இமயவல்லி வினவ, மகாதேவன் வசனிக்கின்றார்.

நல்வினை தீவினையினால் எடுத்திருக்கிறசரீரம் இருவினைத்தீர்ந்தவுடன் விழுந்துபோம். அப்போது எமதூதர் ஒருமாயாதேகத்தைக் கொண்டுவந்து ஆத்மாவை அதற்குள்ளடக்கி எமனிடத்தில்விட்டு அவனுத்தாரப்படிக்கு நல்வினையாளனை நற்கதியிலும் தீவினைமாக்களை தீக்கதியிலும் புகுத்தித் தெண்டிப்பார்கள். பாவிகளைக் கண்டவுடன் இயமன்கோபித்து எரிந்து விழுந்து நிற்பந்தம்பண்ணிச் சொல்லுவான் இருட்டுவழியுள்ள குருட்டுமார்க்கத் துற்கந்தக்கொடிய நரகத்திலழுத்தி மூழ்த்திவிப்பார்கள் புண்ணியவான்களைக் கண்டவுடன் விசுவாசமாய் அரியபிரிய வாற்சல்லியப் பெருமைபாராட்டி தன்னருகாசனத்தி லமைத்துக்கொள்ளுவான். சகலவெகுமதிகளும் பொன்னுபரண பூஷணமுங்கொடுத்துப் பூசிப்பானென்று புகன்றனர். ஒருமானைக்கைப்பற்றிய பெருமானுடைய சரணாரவிந்தங்களில் பணிந்து மலைமகளாகிய மாதேவி, ஓசிவமே ! வெகுகோடி ஆன்மாக்களாற் செய்யப்பட்ட புண்ணியபாவங்கள் எத்தனை விதப்பட்ட தென்றும் எந்தெந்த விதங்களினால் பாபபுண்ணியம் விளைவதென்றும் கேட்டனள். அதற்கு இறைவன் தீவினையானது மூன்று விதத்தினால் வரும் அம்மூன்று விதமென்ன வென்னில் மனம், வாக்கு, காயம் இவற்றுள் மனதினால் நினைத்து வருவது மயக்கம் பிறருடைமையின்பேரிலாசை விரோதம் வஞ்சம் இதுமுதலிய பொல்லாங்கு.

வாக்கினால்வருவது பொய் அசத்தியம் இழிச்சொல்பயனில்லாச் சொற்கடகடவென்று பேசுதல் முதலியவைகளாம்.

காயத்தாலுண்டாவது உயிர்க்கொலை மதுபானம் புரிதல்பரதாரத்தைத்தோய்தல்முதலிய எலலாரும் பழிக்க உண்ணுமுடம்பு வளர்த்தல இம்மூன்றும் ஒரு வாறிருக்க, இதில் பொய்யைப் பார்க்கிலும் பெரிது கள்ளுண்ணுதல் பாதகத்துக் கெல்லாம் பதியாயிருப்பது மிகுந்த தோஷத்தை விளைப்பது. கல்வி, கேள்வி, ஞானம் இன்றி, அறிவு நன்னெறி, தருமம், குலாச்சாரம், கோத்திர தோஷம், பிதுர்த்தேவதைகள் சாபம் தாய்தந்தை பந்துமுதலியோர் வயிரொறிவு மனைவியின் மனோதுன்பம் நல்லவர்கள் பெரிய வர்களினிந்தை இவை

யெல்லா முண்டாய் அபகீர்த்திக்கு ஆளாக்கி மறுமையில் நரகத்தில் மயங்கிக்கிடக்கப்பண்ணும். இகத்தில் அவமதிப்பு இகட்சி ஆடிவாடி விழுதல் வாய்குளறிப்பேசல் மொழிமாறல் தனப்பழுது தவமழிவு விரதகுற்றம் பகைபழி ஆணவாங்காரம் இவையெல்லாம்மறுமையில் இழிந்த பிறவியைவிளைவிக்கும்.

ஆனால் மதுபானம் பண்ணப்படாதோ வென்றால் பண்ணலாம், ஒருதெய்வத்தின் முன்னிலையின் தேசிகன் பொருட்டில் மந்திர பூதி செய்து யாவருக்குந் தெரிய உட்கொண்டாலும் மெய்வழியில் நின்று விரதஞ் செலுத்தின பலனுண்டு.

பொய்வழிமேற் சென்று ஐம்பொறியையும் அதன்வசத்தாக்கினால் குடியனிலும்குடியனாய்க் கரையேறமாட்டாததீக்கதியிற் கண் கலங்கிக்கிடப்பான். வேதவிதிதப்பிநடப்பவரும் இக்கதியைப்பெறுவார்கள். இப்படிப்பட்டவர்களுடைய உறவு எத்தனை இலாபத்தைக்கொடுத்தாலும் கொடுப்பதா யிருந்தாலும் உடனே விட்டுவிட்டு மறுவேலைபார்க்கவேண்டும். மேலும் எத்தனை பேதமான பாவங்களைப் பண்ணினாலும் பரிகாரந்தேடி கொள்ளலாம் இந்த இனிப்பாகிய கள்ளுண்ணலினால் வருகிறபாபம் ஒருபோதுந் தீரமாட்டாது எமனாற்காச்சிவிடுகிற ஈயத்தைக்குடித்து அலறிக்கதறிப் பதறும்போது அப்போதுந் தீருமோ தீராததே. அவர்களனுபவிக்கப்போகிற நரகத்தை நாம் நாவினாற்பேசினாலும் பாவம்பிடிக்கும் இதிப்படி இருக்க.

இன்னொரு இரகசியம் அமராவதியாகிய பொன்னுலகத்தில் மானிட ரியாவருஞ் சேர்ந்து வெகு சம்பிரமத் துடனே இருந்தார்கள். சுவர்க்கலோகம் இடம் பெறாமற் போயிற்று தேவேந்திரன் முதலிய தேவதைகளும் அன்னவாகன மூர்த்தியாகிய அயனிடத்திற்குப் போய்ப் பணிந்து முறை இட்டார்கள் அதற்குப் பிரம்மதேவர் இந்த ஆத்மாக்களுக் கெல்லாம் பூர்வக்ஞானந் தோன்றாமற் போகும்படிக்கு மயக்கம் மறதி கர்வம் இம்மூன்றையும் உண்டாக்கினார். அதுமுதல் ஒன்றுந் தோன்றாமல் பிறப்பிறப்பிலே மூழ்கி கியான சூனியமாய் மனம் போனபடிக் கெல்லா நடந்து வழி பிசகிப்போனார்கள் அப்பால் நல்வினைப் பயன்பெற்ற சிலர் சாஸ்திரங்களைக் கற்று நற்றவமறிந்து சாதுசங்கப் பழக்கமுற்று பூர்வக்ஞான முணர்ந்து பொருட்பட்டு வந்தார்கள். அதை பிரமனறிந்து ஒருசூட்சும முண்டாக்கிவைத்தார். அதாவது வேசிகள் சூதுகள் இப்படிப்பட்ட வைகளை யுண்டுபண்ணி சாஸ்திரமூலமாய் வந்த கியானத்தைத் தட்டழியப் பண்ணினார். இது

ளிலும் தப்பித்துக்கொண்டவர்கள் கதியின்கரையைக்காண்பார்கள். மற்றைய ரெல்லாம் உலகில் வடம்போல் பிறந்து இறந்துசுகமோ துக்கமோ கண்டது வரைக்கும் ஆநந்த மென்று அநுபவித்து உழலுவார்கள். வலையிலகப்பட்ட மான்போலும் படுகுழியில்வீழும் யானை போலும் கண்ணின் பிசின் ஒட்டுப்பட்டபட்சி போலும் கள் தாசி சூது இதிலகப்பட்டுக் கெட்டுப் போகிறார்கள். இது பிரம்மசூட்சி, இச்சூட்சந் தெரிந்த புத்திமான்கள் மலைகலங்கினும் மனங்கலங்காமல் திடச்சித்தவிருத்தி யுடையவராய் நீதியும் நெறியும் நிலையுந் தருமமும் பதியாகிய உன்னையும் என்னையும் பணிந்து கடைத்தேறுவார்களென்று பரமேஸ்வரர் பகர்ந்தார்.

பாலாம்பிகை, இருகரத்தையுங் கூப்பி இறைவனே இதுவரையிலுந் தீவினையின் சேர்க்கை தெரிவித்தீர் நல்வினை நணுகுவதெவ்விதமென்று வினவ நம்பன் சொல்லுகின்றார்.

130. நல்வினைவருவது எவ்விதமென்ற கேள்விக்கு உத்தரம்.

கிரௌஞ்சகிரியைப்பிளந்த குமாரனையருளியகோதாய்! கேள் தன்நினைப்பில் சுகித்த முள்ளவனும் ஈஸ்வரபக்தியுடையவனும் இரக்கமுடையவனுமிருந்தானாகில் நன்மைகளுக் கெல்லாம் முதன்மையான காரியத்தை யடைவான். ஒருவருடைய ஆபத்தில் காப்பாற்றுகிறநிமித்தம் பொய்யாகிலுஞ்சொல்லி உபாதி தீர்த்துவைத்தால் இதுசத்தியத்திலும் அற்புதமான சத்தியமாகும். தான் சொல்லுகிற மெய்வசனங்களினால் ஒருவருக்கு உபத்திரவத்தையுண்டாக்குமாகில் மெய்யினாலனுபவிக்கவேண்டிய பொல்லாங்கைக் கொடுக்கும். ஆனதால் வாக்கினால் புனிதவசனங்களைக்கொண்டு புண்ணியஞ்சம்பாதித்துக் கொள்ளலாம் அதிலும்தருமசூட்சமறிந்து பேசவேண்டும்.

இனிகாயத்தா லாகவேண்டிய தென்னை யென்னில் தானங்களீவதும் தவங்கள் பண்ணுவதும் தக்கோராகிய பெரியவர்களைப் பூசிப்பதும் சாஸ்வத தருமங்களை நிலையாக விசாரித்துச் செய்வதும் காசி முதலாகிய தீர்த்தங்களில் ஸ்நானம் பண்ணுவதும், விரதமனுஷ்டிப்பதும், புண்ணிய க்ஷேத்திரங்களில் வாசம்பண்ணி தரிசிப்பதும் அன்னதானஞ் செய்வதும் அதிதி, அப்பியாகதிகளுக்கு அமுதளித்து, உபசரிப்பதும், அஷ்டாங்கயோகம் புரிவதும், இன்னமுள்ள உத்தமக் கிரிகைகளெல்லாம் தன்னாற்கூடியமட்டும் தவறாமல் தேடிக்கொ

ள்வதாம். இந்தப்பிரகாரம் மனோவாக்குக் காயங்களினால்,பொருள்கள் சம்பாதிக்கவேண்டியது.இப்படிச்சம்பாதித்தபேர்களுக்கு உத்தமமான பதவியும், ஆயுசும் சீரும், சிறப்பும், கீர்த்தியும், மனதொத்த பத்தினியும், வம்ஸத்திற்குரிய சுபுத்திராதிகளும், காரிய சித்தியும் எல்லாக்காரிய அனுகூலங்களு முண்டா யிருப்பார்கள். இவ்விதமான நல்லசெய்கைகளை விட்டு பொல்லாவழியில் நடந்து இங்கு மங்கும் ஈனப்பட்டு நரகத்திற் கேதுவாகிய பேர்களை நானெப்படி இயம்புவது தீவினைவசத்தமொன்று செப்பவேண்டியதே யென்று சொல்ல. பர்வத ராஜ புத்திரி பரவிப்பணிந்து, எக்கியத்தி னியல்பென்னை யென்று வினவ அதற்குச் சாப்பாபரண ராகிய தனிமுதல் சொல்லுகின்றார்.

131. சத்கரும எக்கியத்தின் இயல்பு.

ஓ பெண்கள்சிகாமணியே! எக்கியம் ஐந்து, இதுவேதத்தில் விளம்பி இருக்கின்றது, இவ்வைந்தில், தான் தன்சகோதரன் என்கிற இரண்டைத்தள்ளிவிட்டால் விதிப்பிரகாரம் செய்யவேண்டிய மகங்கள்மூன்று,அதாவது தேவதைகள் தென்புலத்தார விருந்தினர் என்பது.தேவதைகளுக்குச்செய்யப்பட்ட எக்கியம் மூன்றுபிரிவாயிருக்கும் அதுயாதென்னில் தக்ஷணாக்கினியம், காருகபத்தியம், ஆகவனீயம் இந்த மூன்றக்கினியும்வளர்த்து தேவதைகளுக்கு அவிற்பாகங்கொடுத்துப் பூசிப்பதுஒருவிதம்.இன்னொருவிதம் தெய்வங்களுக்கு கோவில்கோபுரம் குளம் தேர் நந்தவனம் இதுமுதலானதுகள் செய்கிறது.ஆலயங்கட்டுவித்தல் அநேகந் திருப்பணிகளுண்டு; அவைகளைச்சொல்லிமுடியாது திருப்பணி வேலைமுடித்து வேதவிதிப்படிக்கு மூலஸ்தானம் அர்த்தமண்டபம் மகாமண்டபம் அந்திராளம் ஏர்ப்படுத்தி மந்திரலோபம் கிரியாலோபமில்லாமல் மூர்த்தியை ஸ்தாபித்து கும்பாபிஷேகம் பண்ணி அன்னதானங்கொடுத்து பிராமணபூசைநடத்திவஸ்திராபரண அலங்காரமாலைகள் சாத்தி தூபதீப நைவேத்தியம்வைத்து சத்திர சாமர ஆலவட்டம் கொடி குடை விசிறி முதலான ஆடல் பாடல் பூரண கடதீபம் ஓமம் சந்தன தாம்பூலபுட்பம் மேளதாளவாகனவரிசைகள் பலவும் கண்ணாடி மண்டபம் பிரம்மோற்சவம் இகபரத்திற் கேதுவாய்ச் செய்வதாம். மேலும் வேதாகமவிதிப்படிக்கு என்னையும் உன்னையும் கருக்கட்டி பஞ்சலோகத்தினால் வார்ப்பித்து பஞ்சபர்வ

ஊற்சவாதி நடப்பித்தவர்கள் சென்மசென்மங்களிற் செய்திருக்கிற மகா பாதகங்களெல்லாம்போய் நம்மிற் கலந்திருப்பார்கள். அவர்கள் பெருமையை அளவிட்டுச் சொல்லப்போகாது. இதற்குமிஞ்சின தருமமுண்டென்று எண்ணாதே. இது சத்தியமென்று ஆத்மார்த்த பூசை செய்பவர்களும் பரார்த்தபூசை பண்ணுகிறபேர்களும் பாக்கியவான்களாம் நமது தரிசனம் உதயகாலம் மத்தியானம் சாயங்காலம் அர்த்தசாமம் இதுகளிற்செய்யவேண்டும், உதயகாலத்தில் திருவனந்தல் தரிசித்தால் சகலபீடை துக்கந் துன்பந் துயரம் நோய் வறுமை மலடு இவைமுதலியது நீங்கும், அதிகப்பலனோங்கும், உச்சிகாலதரிசனம் சத்துருக்ஷயமுறும், தீவினையறும், போனபுண்ணியப் பொருள்வரும், தேகவெப்பந்தீரும், கிரகதோஷம்போக்கும், வச்சிரசரீரமுண்டாகும், சாயங்கால தரிசனம் குலாச்சாரம் விளக்கும், சைவாச்சாரமிலங்கும், பெரியோர்களாசீர் வசனமுண்டாகும், உத்தியோகம் பிரபலமாகும், பழிநீங்கும் புகழோங்கும் பாபவிநாசமாம், அர்த்தசாம தரிசனம் தெய்வங்கள் தேவதைகளின் சுகுணவாசப் பரிசமாம்மந்திர நிலையருளாம்,மாதவரருள் கிடைக்கும், மூலஸ்தானமொடுக்க முக்கியமாம். முத்திநிலைதரும் மெய்யடியார்களின் திருத்தாள் தூள் சிதறும் மேனி பவித்திரமும், ஜன்மசாபல்யமுமாம். கிரஹணபுண்ணியகாலங்கள் முதலாகிய விசேஷதினங்களில் விரதசீலராய் சுசியாசாரமாய் பிரதக்ஷண நமஸ்காரஞ்செய்து துவஜஸ்தம்பத்தினிடத்தில் வணங்கியிருந்து சங்கல்பஞ்சொல்லி அர்ச்சனைகர்ப்பூராதிதேங்காய்பழம் அபிஷேகம் ஆபரணம் ஆடை இன்ன முள்ளவைகளைச்செய்து பூசித்தவர்கள் மேன்பாடுடையவர்களென்றும் மகாபாப வற்சிதரென்றும் வேதமுதலிய ஆகமங்கள் முறை இடுகின்றது இந்த இரண்டு வித எக்கியமும் முக்கியம்.

132. பிதுர்தேவதைக்குரிய யாகங்கள்.

பிதுர்த்தேவதைகளுக்குரிய யாகத்தைக்கேளும் தர்ப்பணம் பிண்டம் அன்னதானம் பிராமணருக்குக்கொடுத்தல் அவர்கள் முன்னிலையில் மந்திரார்த்தம் வஸ்திரம் பந்துஜனபோஜனம் சந்தனதாம்பூலம் புஷ்பம்,அரதேசி பரதேசிக்கு உபசாரம் குற்றமில்லாத பூசைபுரிந்து வழிகாத்திருந்துவருகிற பெரியவர்களையழைத்து உண்பித்தல் இது பூதவேள்வி. இது மூன்று ஒக்கலுடன் சகோதரர்கள் பவித்திரா

மல் அவர்களுக்கு தன்னாலியன்றமட்டும்வஞ்சனையில்லாமற் கொடு த்து தன்சரீரத்தைப் பத்திரமாய்ப் போஷித்துக்கொண்டு மனையாளை த்திருத்தி இல்லறதருமத்திற் கிடையூறுவாராமல் நடத்திக்கொள்ளு வதுமுக்கியம்.

ஆகஐந்து எக்கியமும் இதுதான் என்றியம்பப் பரஞ்சோதியை ப்பார்த்து பார்வதிபணிந்து சுவாமி,தேவரீர்செப்பிய எக்கியம் முக்கி யமுணர்ந்தேன் இறந்துபோனவர்கள் எழுவகைத்தோற்றங்களிற் பிர வேசித்துவிட்டால் அவர்களைக்குறித்து இருக்கிறவன் எங்கேகொடுக் கிறதுஎவன்வாங்குகிறதுஎவர்களைச்சேருகிறது எனக்குச்சந்தேகமா யிருக்கிறதென்று சாம்பவிகேட்க. சந்திரசேகரர் தலையசைத்து சற் றே நகைத்து பக்கத்திலுள்ள ரிஷிகளெல்லாம் ஹரஹர சம்போவெ ன்று பிரணவஞ்சொல்லித்துதிக்கும்படியாய் சொல்லத்தொடங்கினார்.

133. இறந்து போனவர்களைக்குறித்து எக்கியதானங் கொடுத்தால் அவர்கள் எவ்விதமாய் அடைவா ரென்பதற்கு உத்தரம்.

பவளம்போன்ற இதழுடையவளே! இறந்துபோன தாய் தகப் பனைப்பற்றி அவர்கள் போனால் ஆத்மாபிரிந்த கிருஷ்ணபட்சம் சுக்கி லபக்ஷ திதியை கவனம்வைத்து அந்தநாளில் தர்ப்பணம் பண்ணினால் யாதனுசரீரத்திலகப்பட்டு நரகத்தில் வாதைப்படுவதா யிருந்தாலும் உடனே நீங்கும். சூட்சம தேகத்திலிருந்து சுகம் பெற்றிருந்தாலும் இன்னம் மேலான பதவி கிடைக்கும். அது அப்போதைக் கப்போது உதவி, இப்படிக்குச் செய்யாவிட்டால் அந்தப் பிதுர்க்கள் குடும்பத் தைச் சபிப்பார்கள். அதனால் குலகோத்திரம் நசித்துப்போம் எத்த னைவித பிறவியிற்பிறந்தாலும் அனுபவித்து வரவேணும், எப்படியும் பிதுருலகம் பாழாகமாட்டாது, இதன்றியும் சிரார்த்தஞ் செய்வது எதுநிமித்தமென்றால் அவர்கள் தன்னைச்சுமந்து பெற்று வளர்த்துப் பாதுகாத்து புத்திமதி கற்பித்து அநேகம்பாடுபட்டு முன்னுக்குக் கொண்டுவந்து முறைநெறி விதிகாட்டி நன்மை தீமைகளுக் குடன் பட்டபடியால் அவர்களைப்போல எவரும் பாடுபடமாட்டார்கள்; அவர் கள் செய்தநன்மைக்கு ஈடல்லாவிட்டாலும் பாராட்டுகிற பட்சமாம். ஒருவ ரொருவருக்குச் செய்த நன்றியை என்றைக்கு மறக்கலாகா தென்று வேதங்களில்விளம்பி யிருக்க, உலகில் எவன் எந்தநன்றியை

மறந்தபோதிலும் பிராயச்சித்த முண்டு, ஆபத்துக் காலத்திலுத வியநன்றியை மறக்கலாகாது, அதை மறந்தாலும் தாய், தந்தை நொந்து பெற்று வளர்த்துக் காத்த உதவியை ஒருக்காலு மறக்கபோ காது, இதுநிமித்தம் அவர்கள் பேரைச்சொல்லி தர்ப்பணம் பண்ணு வது ஒருவருஷத்திற் கொருதரமென் றெண்ணுதே அதுதேவர்களுக் கு ஒருநாள், அவர்களுக்கு நாம்பிரதிதினம்நினைப்பது போலாம், பிரம்ம தேவன் உலகசிருஷ்டி செய்யும்போது ஜெகத்துக்குத் துணைக்காரண மான தேவதைகளை ஏர்ப்படுத்திய காலையில், பிதுர்த்தேவதைகளெ ன்றும், பிதுருலகமென்றும், உண்டாக்கி தென்புலத்தாரொன்னநியமி த்து அவர்களுடைய கால்வழியிற்றோன்றிய சந்ததியார்சிரார்த்தமுத லிய பூசைபுரிவதை அவர்கள் ஏற்று, அக்குடும்பங்களை இரட்சித்துக் கொண்டிருங்களென்று வரங்கொடுத்து மகாபலன்களை யுடையவல்ல மையானதேவதைகளாய் மேன்பாடும், தயாரசமும், சார்வதா பொரு ந்தி இருக்கப்பண்ணி இருப்பதனால் ஆமசிரார்த்தம், அன்னசிரார்த்தம் செய்கிற கால்வழிகளில் உருத்தெரியாமல்அவர்கள்வந்து இருந்து, சுசி ஆசாரபக்தி சிரத்தையாய்க்கொடுப்பதைக் கைகொள்ளுவார்கள். அந் தத் திதிகாலங்களில் சிரார்த்தஞ்செய்கிறவர்கள் உதயத்தி லெழுந்து வீடுவாசலைச்சுத்தி செய்வித்து செம்மண்ணிட்டு கோசலங்தெளித்து ஸ்நானஞ்செய்து அக்குடும்பத்திலுள்ள சமஸ்தமானபேரும்சுத்தவஸ்தி ரந் தரித்து, தாய் தந்தையை நினைத்து, பிராமண பூசைபுரிந்து, தன் னுலியன்ற மாத்திரம் அன்னமுதலிய பதார்த்தங்களுடன்தண்டுலமளி த்து, வஸ்திரம்கொடுத்து, திலதர்ப்பணம் விடுத்து அட்சதைவகு த்து, தர்ப்பைவிரித்து, நைவேத்திய தூபதீபங்கொடுத்து, அவரை எ தாஸ்தானத்திற்கு எழுந்தருளப்பண்ணி, திருப்தியாய் உதயத்தில் திதி கொடுத்தால், அவர்கள் என்றென்றைக்கும் இந்தக்குடும்பங் தழைக் கத் தக்கதாகவாழ்த்தி அனுக்கிரகம் பண்ணிப்போவார்கள், அதனால், குலவிர்த்தி, தீர்க்காயுசு, நல்லபோகபாக்கியம், பதிவிரதையான ஸ்திரீ சுபுத்திரன், மனோபிஷ்டம் முதலாகியதும் வரும். இம்மைமறுமைப் பயனுண்டாம், இதைவிட்டு பிரதிஷ்டைக்காக ஊரார்மெச்சவேண்டி பலதருமங்களையும் பண்ணி தந்தை, தாயினுடைய திதியைக்கொடா மல் நிறுத்திவிட்டாலும், சிரத்தை இல்லாமல் அல்பமாய்ச் செய்தா லும்; அசிரத்தையுடன் வெறுப்பாய் பிராமணர்பேரில் கோபித்து விருப்பமில்லாமற் கொடுத்தால் அவர்களுக்கு ஆயிசுகுறைவு, தே கமெலிவு, ஐஸ்வரியப்பூச்சியம், வழக்கு, அபாண்டம், அபரோதனை, பிள்ளை முதலிய நாசம், பெண்சாதிமோசம், ராஜதண்டம், பழிபாவங்க

ளெல்லாம் அடுக்கடுக்காய்வரும், ஆனபடியினலே ஐந்து எக்கியங் கூடினேனும், அவ்வைவந்தில் நான்கு நழுவிப்போனாலும் போகலாம், இத் தப்பிதூர்க்கருமமென்கிற வொன்று பொருளிருந்தாலும் இல்லாவிட் டாலும் எப்பாடு பட்டாகிலும் செய்யவேண்டும், அவனுக்கு இதனால் பஞ்சஎக்கியபலனு முண்டாகும், பிட்சை எடுத்தாவது திவசம்பண்ணி தாய் தந்தையின் பசியும் பாபமும் தீர்க்கவேணும், தாய்தகப்பன் பட் டிணியிருக்க ஊரார்மெய்க்கச்செலவுசெய்து உற்சவாதிபண்ணி அன் னசத்திர மமைத்தலில் பலனெப்படிவரும் நீர்சொல்லும் பார்வதியே யென்று எம்பெருமானாகிய ஈஸ்வரன்சொல்ல, என்தாயான தயாபரி கேட்டு சந்தோஷித்து என்பிராணவல்லபா நற்கதி யடைகிறவர்களி ன்னார் துற்கதி அடைபவரின்னாரென்று விவரித்துரைக்க வேண்டுமெ ன்ன, பரமேஸ்வரன் சொல்லலுற்றார்.

134. நற்கதியடைகிறவர்களின்னாரொன்றும், துற்கதி யடைகிறவர்களின்னாரென்றும் பரமசிவம் சொல்லுகின்றார்.

ஓ கோமளவல்லி ! பிறருக்குக் கேடுநினைக்காமல், ஞாயந்தப்பா மல், தருமமறவாமல், சத்தியங் குன்றாமல், ஆசாரியனுக்குப் பிழைசெ ய்யாமல், உயிர்வதை செய்யாமல் ஊராருடைமைக்கு உலைவைத்திரா மல், ஏழைகளை எதிரிடாமல், வந்தவிருந்துகண்டு எரிந்து விழாமல், ஜீவகாருண்யந்தப்பாமல், விசேஷகால விரதங்களை விட்டுவிடாமல், ஓரேஉறுதியாய் மனம் சுத்தமாயிருப்பவர்கள் நற்கதியெத்தனையோ அத்தனையும் பெறுவார்கள். தீநெறியுடையவர்கள் சிந்தைவெறுப்பு செருக்கு, பொய் அசத்தியம், கோபம், அல்பத்தின்மீதாசை, துஷ் டருறவு, கொலை, களவு, கள், காமம், ஸ்திரீமோகம், மோசம், வஞ்சகம், கபடம், பெரியோர் நிந்தனை, தெய்வதூஷணை, குருநிந்தை, நன்றிமறத்தல், தந்தைதாய் வயிறெரிய விந்தையுடன்வாழ்தல் பிதுர்க் கருமம்பூசியம்பண்ணல் பசுவையுதைத்தல் அடித்தல் ஸ்திரீ சிசு பசு ஹத்தி வேதாகமபுராண மதநிந்தை இப்படிப்பட்ட துர்க்குணமுடை யவர்கள் நிரகமென்பது எவ்வளவோ அவ்வளவும் அனுபவிப்பவர்க ளென்றார்.

அம்பிகைமகிழ்ந்து திரிநேத்திரதாரியை நோக்கி, சுவாமி நற்கதி அடைதற்கு ஒரு வழிசொல்லாமல் மிஸ்சிரமமாய் அநேகங்கோடி

தருமங்களை அறைந்தீர் இத்தனை தருமமும் ஒருவனுக்கிசையுமோ கால தேச வர்த்தமானங்களில் வேறுபட்டுப்போமே ஆகையால் எல்லாத்தருமங்களும் ஒருதருமத்திற்குள்ளே அடங்கியிருக்கத்தக்கதாக ஒருதரும சூட்சஞ் சொல்லுமையாவென்று கேட்க மேனுதேவி புத்திரியாருக்கு விமலனார் விளம்புகின்றார்.

125. எல்லாதருமங்களு மடங்கியிருக்கும் சூக்ஷும தருமமும் பிறப்பிறப்புகளினவஸ்தையினியல்பும் தேகனிலே முத்தி முடிபுரைத்தல்.

இல்லறம் நீங்கித் துறவறந்தாங்கி வானப்பிரஸ்த்தாச்சிரமமேற்ங்கி நாட்டைவிட்டுக் காட்டில் மலைச்சாரலிற் போய்தவமிழைப்பதே கடைப்பிடியான தருமம். அந்த வானப் பிரஸ்த்தத்தின் வகையைக் கேளும், பொருள் பெண்டு பிள்ளை மண் மனை இவைகளை நினையாமல் நல்வினை தீவினை மயக்கமில்லாமல் மழை வெய்யல் கல் புல் கறடு மேடு பாராமல் பஞ்சேந்திரியங்களையும் நிக்கிரகித்து அறுவகைப்பகையையு மொழித்து தானென்கிற ஆணவமலத்தை யறுத்து உடலபிமானம்விட்டு சிகையெக்கியோபவீதங்களைந்து தண்டு கமண்டலந் தாங்கி மரவுரி உடுத்தி பெரிய மகானுபாவனா விரும்பி யோகத்தி லோங்கி விதிவிலக்கை யனுசரித்து வெறுப்பு விருப்புமில்லாம லிருப்பவர் பிறவாதவர் இறவாதவர். இதற்கு மேற்பட்ட தருமமில்லை, மற்றவைக ளெல்லாம் துறவிற்குச்சரியான தல்ல, எல்லாம் பந்த சம்பந்தங்களாம்.

ஒரு சம்மந்தத்தின் இயல்பென்ன வென்னில்? பொருள் பொருளென்று நினைத்துக்கொண்டு எத்தனை பாவங்களானாலுஞ் செய்து பொருளைச் சம்பாதிப்பதும் அந்தப்பொருளைப் போஷிப்பதும் அப்பொருள் அழிந்துபோவதும் இத்தியாதிவிதங்களினாலுந் துன்பம். எப்போது பொருளாசைவிடுகிறதோ அப்போதே விசனம்விட்டது. இஃதிப்படியிருக்க புத்திர ஆசைபெரிது, பிள்ளையைப்பெறுவது பிள்ளை இல்லாமற் போமாயின் மிகவும் பிராந்தி, பிள்ளை கிடைத்தாலோ அதற்கு வேண்டியதுக்கம்; இவனார் பிள்ளையார் இது சிருஷ்டியினுடைய சுபாவம் உடனே ஒழிந்து அழிந்துபோம். ஒருமரத்தில் தளிர்த்தது கொழுந்து அப்பால் இலை பின்பு பழுப்பு அதன்பேல்

உதிர்ந்த உலர்ந்த சருகு இலைப்போல் இந்த ஆக்கையுங் குழந்தை
பால எவ்வனகுமரநாயகன் வயோதிகப்பருவம்போனபின் எமவாதை
வாய்த்து கானல் நீர் போன்ற இக்காயம் நல்வினைதீவினைக்கீடா யெ
டுத்த உடல் மாயம். வினையொழிந்தால் விட்டுமறையும், மின்னலைப்
போலாகும்.இப்படிப்பட்ட பொய்யை மெய்யென்று நம்பின வீணரு
க்கு மோட்சமேது. சத்தைவிட்டு அசத்தைத்தொட்டு மயங்கிஇருநா
ளையில் நாறி நலங்குலைந்து போவார்கள். இவர்கள் புத்திசாலிகளல்ல
பிறவி வேரறுக்க மாட்டார்கள், பிறகு எப்போதுதான் கடைத்தேறு
வாரென்றால் பிரபஞ்சமாயா மயக்கம் மித்தையென் றுணர்ந்து ஈஸ்
வரபக்தி பிறந்து தான்தேகியென்றறிந்து, ஞானஞ்சிறந்த நாளெது
வோ அன்றைக்கு நற்கரும அதிகாரியாவார்கள். மலினம் நீங்கும்
அவனியைவிரும்புகிறவனாயினும் அல்பசந்தோஷவைத்தியக்காறன்
அவ்விருப்பமொழிந்தால் முற்றுமுணர்ந்த வைத்தியக்காரன், சரீரந்
தோன்றும் போதே, பிணி, நரை, திரை,தளர்ச்சி யுண்டு. பிறந்ததுமு
தல் இறக்கிறவரையில் என்ன சுகம், எண்ணிப்பார்த்தால் எளிதிற்றெ
ரியும்,என்னோமுஞ் சஞ்சலம் தேகமென்ப தென்னை துக்கம்,பிறக்கு
ம்போது ஆலையிலகப்பட்டகரும்புபோல்யோனிவாய்நெருக்குண்டல்
பணிக்குடப்பாய்ச்சல்கத்திரிபோல் எக்கச்சிக்கத்திரிகோணமூலச்சுழிக
ருப்பகோளகைத்தட்டு அதற்குட் கருப்பட்டு ஐந்துபிரிவா யுருப்பட்
டு முன்னூறுநாள் கட்டுண்டு சலத்தால்மிதந்து அனலாற்றீய்ந்துகுளி
ர்ந்த நீரால்நடுங்கி வெப்பநீராலொடுங்கி வாயுவாலுதைப்பட்டு வதங்கி
த்தலைநட்டு கீழதுமேலதாய்த் திரும்பி கிருமிதலத்தில் மலசலத்து
டன் கலந்து பூமியிற்பிறந்து பிராணமூர்ச்சையாகக் கிடந்து உருவி
சலந் தெளித்தவுடன் ஓ ! ஓ ! வென்றழுது மூக்கெடுத்து காதுருவி
கண்விளக்கி அபானந்துலக்கி ஆணுக்குப் பெண்ணும் பெண்ணுக்கு
ஆணுமாக அமுரி புகட்டி ஆண்பிள்ளைப்பருவமடைந்துதன்னைமறந்து
தாய் தந்தையைத் துறந்துசரசமாதுடன்கலந்துபணந்தேடப் பறந்து
கிழமாயிறந்துபோவதுந்துன்பமே. இறந்தும் எமபாசபந்தப் படுகிற
துந்துன்பமே.பணத்தினால்ஆங்காரமடைந்தபோதுந்துன்பமே. ஆகை
யால் நல்ல கல்வி கேள்விகளைக்கேட்டு பெரியோரைப்பேணி ஆசாபா
சத்தை ஒருவிதமாயகற்றி அதன்வசத்தாய் அகப்பட்டுக்கொள்ளாமல்
ஆத்மக்ஞானம் பிறந்து பிரபஞ்சமாயை தெளிந்து மனத்துணிவு வந்
தவனெவனோ அவன்பிறவிசாகரநீந்திக்கரையேறினவனாவான், தேவே
ந்திரன் முதலிய தேவதைகள் ரிஷிகள்முனிவர்கள் இவர்களெல்லாம்
நல்வினைவசத்தாய் மனதுவருந்திமெலிவார்கள். இன்னம் சர்வசங்க

யுரித்தியாகம் பண்ணி என்னை நாடி இருப்பவர்களுக்குச் சுகமல்லாமல் மற்றவருக்குச் சுகமேயில்லை. வேதாந்த இன்பங்கண்டவர் பேரின்ப ஞானானந்தங் கொண்டவர். இந்தத்துறவறம் இல்லறம் என்னுந் தருமத்திலிருந்துபெறலாகும். அதெவ்வாறென்னில்மூவாசைமுதலிய பாசத்திலும் புளியம்பழத் தோடுபோல் பற்றற்றிருந்து அகம்புறமொத்து பிரபஞ்சமித்தை யென்று சுத்தமாய்த்தோன்றி உற்றுப்பார்த்தபேர்களுக்கு இல்லறத்தானென்று நடைநொடிபாவனை காட்டி உள்ளம்பக்குவப்பட்டு மனத்துறவுபூண்டிருந்து பலனைப்பெறுகின்ற வருமுண்டு. ஆனால் பெண்டுபிள்ளை பண்டுபதார்த்தத்திலிருந்து பெருந்துறவடைவது மிகவும் அருமை. அப்படிக்கானால் அதுசத்துவப் பெருமை இன்னுஞ் சாதுசங்க நூற்பயிற்சியால் சாங்கிய யோகத்திலிருக்கிறபேருக்கும் சித்தியான ஞானமும் முத்தியும் பெறுவார்கள். அஷ்டாங்கயோகத்திலிருந்து பரமுத்தியோகம் பாராட்டிய பேருக்குப் பதவி கிடைக்கும் இரவும் பகலும் கிரியை ஆசாரநெறி தப்பாமல் ஈஸ்வராத்தியானத்திலிருப்பவர்களுக்கும் இன்பமுண்டாகும். அதுவும் நன்மை தீமையுமொன்றாய் நாடியபேருக்குக் கைகூடும்.

136. தவக்கியாணிகளுக்கு சித்தியான யோகஞான முக்தியின்விபரம் பகவான் கூறுதல்.

பிருதிவு, அப்பு, தேயு, வாயு, ஆகாயம், இப்பஞ்சபூதம், வாக்கு பாதம் பாணி பாயுரு உபஸ்தமென்னும் கருமேந்தியங்களும் சப்தம், பரிசம், ரூபம், ரசம், கந்தம், தன்மாத்திரைகளும், சுரோத்திரம், துவக்கு, சட்சு கிங்குவை ஆக்கிராணம், ஐம்புலன்களும், மனம் புத்தி சித்தம் அகங்காரம் அந்தக்கரணம் நான்கும், பிரகுருதி முதலாகிய தத்துவங்களும் ஆன்மதத்துவம் இருபத்து நான்குடனே அளாவிக்கொண்டு அவ்வியத்தனை அனுதி ஆன்மா பிரகுருதி யென்கிற பெயர்பெற்று மயங்கி மாயையிலுயங்கிமலைத்துத்தியங்கிக்கெட்டுப்போகின்றான், அதைநீங்கி பிரகிருதி மாயையை வெறுக்கி தான்சுயம்பிரகாச மென்றறிந்து இருந்தானானால் உடலெடுக்காது இது முத்தியின் விபரம். கொவ்வைக்கனிபோன்ற இதழையுடைய கோதாய் இனி முக்குணத்தின் இயல்பு மொழிகின்றேன் கேளும்.

இராசதம் தாமதம், சாத்மீகம் என்கிறகுணங்கள் மூன்றும் மாறிமாறி நாழிகைக்கு ஒருவிசை வரும் எந்தக்குணம் எப்போது வருகிறதோ அப்போது அந்தக்குணத்தின் தன்மையை அதுவிளைவிக்

கும் அதாவது, உன்மத்தம் சித்தப்பிரம்மை சோம்பல் தும்பல் கோபம் பொய் களவு காமம் சண்டை தூக்கம் கெடுதி இராக்ஷசகுணம் இவைமுதலிய வெல்லாம் தாமத குணத்தின் செய்கை. மானம் கல்வி இன்பம் வண்மை பேரறிவு உச்சாகம் சோடசதானம் நல்லொழுக்கம் சீலம் தவம் செபம் இராஜரீகம் இதெல்லாம் இராசதகுணத்தின் செய்கை. ஞானம் அருள் சத்தியம் பொறுமை மெய் சாந்தம் வேதாகம புராண ஆராய்ச்சி இதுகளெல்லாம் சாத்மீக குணத்தின் தன்மை, இம்மூன்று குணங்களிலேயும் தாமதம் இராசதம் இவ்விரண்டையுந் தள்ளி சாத்மீகக்குணத்தினாலே ஆராய்ந்தறியத்தக்கதை யறிந்து அதையும்வெறுத்து குணரகிதமாய் சாங்கோபாங்க சாஸ்திரநிலை யறிந்துநின்றவன் இந்தஉலகத்தைமித்தையென்றுன்னிபிராந்திகொள்ளாமல் பழுதையை பாம்பல்ல வென்றும், கிளிஞ்சலின்ஒளி வெள்ளியல்லவென்றும், கானலை தண்ணீரல்ல வென்றும், கட்டையைகள்ளனல்லவென்றும்நிச்சயித்து நிற்குணத்தி லிருப்பான். அதுவே முக்தி. தாமசகுணத்தினாலே பாபம்பிறக்கும், இராசதகுணத்தி னாலே புண்ணிய விளையும். இந்தப்பாப புண்ணிய மிரண்டும் சாத்மீக குணத்தினாலே ஒழியும். அப்போதே அழியா பிறகிருதியற்ற சுகங் கிடைக்கும். இதுநிற்க பஞ்சேந் திரியங்களைப் பாழ் படுத்துவதற்கு ஒருத்தராலேயு முடியாது. மனங்குவிந்து வசப்பட்டால் செயிக்கலாம் மனங்குவிவது மகாப் பிரயாசம். மனதின் விகற்பத்தினாலேயே எண்ணிறந்தகோடி தேகமாயிற்று. அப்படிப்பட்ட மனதையும் அம்மனதின் விரிந்தபேதத்தையும் ஒடுங்குந் தன்மையுமறிந்தால் அவன்என்றைக்கு மழியாத பரமாநந்தசுகத்தையடைவான். இப்படிக்கு மனமொடுங்கி அவ்வியக்தனுகி ஆத்மாநித்தியனுகி எல்லாந்தானென்றுணர்ந்து தான் கண்டவிடமேநிலையென்று தேறி சித்தசாந்தி பெற்று எங்குந்தானென்கிற பிரகாசமடைந்து பிரம்மத்தியானனு இருக்கவேண்டு மென்று வேத முடிவில் மகா வாக்கியம் விளம்பி இருக்கின்றது. அந்த வாக்கியம் தத்துவ மசியென்கிற மூன்று. அதாவது, தத்பதமென்றும், தொம்பத மென்றும், அசிபத மென்றும், புகல்வது, அது நீயானு யென்னும் அருத்தமுடைய சொல்லென்றுணர்வாய்.

யோகமென்று ஒரு நெறி யுண்டு அதாவது ஐம்புலனையும் மனத்துடன் கூட்டி இருக்கும்விதம், நல்லசிந்தை, அருள், பெருமை, புகழ் பொருந்திய ஆசனமென்கிற யோகத்தி லிருந்துயாதொரு பக்ஷமுமில்லாமல் மனப் பற்றற் றிருப்பார்கள். பிராண, அபான, உதான, சமான, வியானமென்னும் வாயு, தன் வசப்படுமானுல், ஆயுள் விருத்தி அநேக

நடனிருக்கலாம் அழி வில்லை உடலொழிவில்லை கருமபூமியில் இவர்கள்தான் காயசித்திபெற்ற பேர்கள் அவர்களுக்கு நினைப்பில்லை மறப்பில்லை நிலைஇல்லை தொல்லை இல்லை ஒருவிதமுத்தியை இவர்கள்முடித்து வைத்திருப்பவர்கள். இவர்களுக்குச் சீவன் முத்தரென்று திரு நாமமுண்டு. உல்லாசமாக உடலை வைத்துக்கொண்டு ஒன்று மில்லாமல் எல்லாமுள்ளவர்களாய் எப்பொருட்கும் வல்லவர்களாய் நல்லவர்களாய் எம்போதுருவுகாட்டிக் கொண்டு இன்பதுன்பங்களெல்லாம் அறிந்து சுகித்து தன்னுடைய அனுபவ ஆனந்தங்கொண்டிருப்பவர்கள் மஹாதூய்மை வாய்ந்த வாய்மையுடைய சித்தபுருடர் அவர்கள் காரியம் உலகத்தவர்கட்கு பிரத்தியேகம் அடங்கலுக்கும் புறம்பு, நான்மாத்திரம் அவர்களுக்கு சொந்தமென்று நவின்றனர். இதைக் கேட்டு, மகாதேவியானவள் மதிமகிழ்ந்து ஐயா, சுத்தஞான வான்கள் உமது தேஜசாய் சாரூப்பிய மடைவார்களென்று கேள்விப்பட்டிருக்கின்றேன் அதனுடைய விபரம் அடியாளுக் கறியப்படுத்த வேண்டுமென்று போற்றினள், அப்படியே அமலமூர்த்தி அருள் செய்யத் தொடங்கினர்.

137. நான்குபதவிகளாகிய சாலோக சமீப சாரூப சாயுச்சிய பதவி யடைகிற வர்களின்னுறொன்று பகவான் தெரிவிக்கின்றார்.

ஓ, ஆதிபரையே, மறைகளினு லறியப்படாத சிற்பரம் பொருள்யான், எனக்கு நிட்கள சகள விலாசமென்று இரண்டுண்டு, அதுகளில் நிட்களமாவது பரிபூரணமாய் எங்குந்தானுயிருக்கப்பட்டது, என்னையன்றி எள்ளத்தனையு மின்றி செகத்தெல்லாம் எமது பரிபூரணரூப நாமக்கிரிகைகளில்லாத விலாசம். சுத்தஞானவான்க ளெல்லாம் எனதுநிஷ்களவிலாசத்தை யடைவார்கள். இதோ நானிருப்பது சகளத்தோற்றம் யோகீஸ்வரர்களி யாவரும் சகளீகரித்த சாரூப்பியம் பெறுவார்கள்.

இதன்றியும் சாலோக, சாமீப, சாரூப, சாயுச்சிய பதவியென்னும் நான்குவித பதவியுண்டு அவைகளை விபரமாய் கேளென்று சொல்லத் தொடங்கினர்.

எமது சொரூபம் உலகத்தில் ஸ்தாபித்திருக்கிற சிவலிங்க மூர்த்தியாம். அதை வேதங்களில்விதித்திருக்கிறபடிக்கு மனோவாக்கு கா

யங்களினால் பலவாறுகச்சிந்தித்து எமது அருள் பெறுவார்கள். ஆதி லும் சரிதை, கிரியை யோகம் ஞானம் என்னும் நான்கு விதம் உண் டு அதில் எமது கோயிலுக்குபோய் எம்மை வழிபடுதல், திருவலகிடு தல், மெழுகல், உழவாரப்பணி செய்தல் நந்தவனம் வைத்தல் பூக் கொய்தல் புட்ப மாலை தொடுத்தல், திருவிளக்கிடுதல் சந்தனம் இ ழைத்துக்கொடுத்தல், திருக்குளத்தை சுற்றிலும் சுத்திசெய்தல் மட ம் சத்திரம் கட்டிவைத்தல் அன்னதானம் செய்தல் தண்ணீர் பந்தல் வைத்தல் எமது அடியார்களுக்கு தீங்குவராது காத்தல் அவர்களுக் குப் பணிவிடைசெய்தல் முதலிய திருப்பணி செய்வோர் முதற்படி யாகிய சரிதையோர், அவர்கள் தேவர்கள் கொண்டாடப்பட்ட எமது சாலோகபதவி யடைவர்.

கிரியையாவது வேதத்தில்விதித்திருக்கிறபடி கோயிலில் ஸ்தாபி த்திருக்கிற எமது சொரூபத்திற்கு திருமஞ்சனம், உற்சவம், அலங் காரம் செய்வித்தல் திருக்கோயில் புதுப்பித்தல் ஜீரணோத்தாரணஞ் செய்வித்தல் வாகனஞ்செய்வித்தல் தூபதீபம் இயற்றி அருச்சனை செய்வித்தல் என்னைப்புகழ்ந்து பாடி பரவிபணிதல் தொழுதல் ஓமஞ் செய்வித்தல் முக்காலங்களிலும் தெரிசனஞ் செய்தல் அடியார்களைப் பணிதல் ஆலவட்டம் குடை தாங்கப்பெற்று இன்பமுடன் இப்பணி செய்வோர்க்கு இரண்டாவதுமார்க்கமாகிய கிரியையுடையோர் எமது சாமீபப் பதவியடைவர்.

யோகமென்பது யாதென்னில் எமது அருட்தரிசனம் அடியார் தங்களிடத்தே தோற்றுவித்தல், அதாவது ஆசாரியனை யடைந்து அனுக்கிரகம்பெற்று அவர் சொன்னவழியில் நின்று அவர் பிரசாதி த்த சிவமுத்திரையால் மனதை நிறுத்தி சுழி முனை நாடிமார்க்கமாய் செலுத்தி வாயுவை அசைவற நிறுத்தி ஐம்புலனை அடக்கி விஷயங் களின்வழி மனதைச்செலுத்தாது மூலாதார சுவாதிஷ்டான மணி பூரக அநாகதவி சுத்திஆக்கினையாகிய ஆறாதாரங்களில்ஊடுருவி அவ் வாறாதார அதிதேவதைகளை மனக்கண்ணினால்கண்டு தரிசித்து தியா னித்து அஜபாநலத்தினால் குண்டலிசத்தி அருளால் அமுர்தம் உண் டு அருட்தரிசனமாய் முழுஜோதிப்பிரகாசமாய்தோன்றும்ஜோதியை மனக்கண்ணால் தரிசிக்கும் யோகநிலை சாதித்தோர் எமது சிவ உருவ த்தைப்பெற்று முத்தியைப் பெறுவர்.

ஞானமென்பது மேற்சொல்லிய மூன்றுபடிகளுங் கடந்து ஞா னசாரியனை யடைந்துதத்துவங்களெல்லாம் நவநவமாகநியதிகளைந்து

நான் எனதென்னும் மயலதையகற்றி மண்,பெண்,பொன்னுசையாகிய, மாயையற்று காண்பான் காட்சிகாணப்படுபொருள் மூன்றும்நசித்து ஏகமாய் பரிபூரணமாய் எங்குந்தானுயிருக்கக்கண்டு ஆனந்தமாய் மகா மௌனமாய் இருக்கும்ஞானிகள் என்னோடு இரண்டறக்கலந்து எனது சாயுச்சிய பதம்பெறுவார்கள். இதுவேபரிசுத்தமாகிய ஞானப்பிரகாசம்இஞ்ஞானிகள்நமக்குசுதந்தரம் தொகையேயென்றுசொல்ல காதளவுநீண்டகண்ணியாகிய கற்பகவல்லி களித்து தெண்டநிட்டு சுவாமி வேதநுட்பங்க ளெல்லாம் அறியத்தக்கதாக விளம்பி நீர் யான்கவலையற்றேன் மூதறிவையுடைய முனிவரும் ரிஷீஸ்வரரும் மகிழ்ந்து மதிபெற்று கதியுற்றார்கள் இனிக்குறைவில்லை யென்று கைலைமலையாருக்கு பனிமலைக்கன்னி உபசாரஞ்சொல்லி பணிந்தாள். அதற்கு அரன்திருநாமமெடுத்துத் துதித்து யாவரும் ஆனந்தக் கூத்தாடினார்கள். அந்தவேளையில் பரமசிவம் அபிராமியைப்பார்த்து ஓ நாராயணி அநேகம் பெண்கள் நம்மைச்சேவித்து சிலதருமங்களைக் கேட்க வந்திருக்கின்றார்கள். நீயும் பெண்ணாயகமாகையால் அவர்களுக்குண்டாகிய சங்கையை தீர்த்தருளல் வேண்டுமென்று ஆண்டவன் சொல்ல, வேதநாயகி அருள்புரிந்து சொல்லத் தொடங்கினாள்.

138. ஸ்ரீ பரமேஸ்வரி, முநீஸ்வராதிகளுக்கும் அவர்கள் பத்தினிமார்களுக்கும் ஸ்திரீகள் நடக்கவேண்டிய ஒழுக்கமுறை சொல்லிய சரித்திரம்.

சுவாமி, அகிலலோக நாதா! அற்புதக்குண சீலராகிய பரஞ்சுடரே! வேதங்களினாலும் விள்ளுதற்கரிதாகிய இரகசியங்களை அடியார்களுக்கு விளம்பினீர் அப்படியிருக்க அடியேன்என்னசொல்லப்போகிறேன் தேவரீரே திருவாய்மலர்ந்தருளவேண்டு மென்று தேவிசொல்லமஹாதேவர்நகைத்து மாதுசிரோன்மணி உன்வாக்கினாற்கேட்க விருப்பங்கொண்டு வந்தவர்களுக்கு நான் சொல்லுவது நன்மையன்று மேலும் உன்வாக்கினால் கேட்க எனக்கும் ஆசையா யிருக்கின்றது, நீயே தெரிவியு மென்று சிவபெருமான்கூற, அந்த சமயத்தில் அரம்பாஸ்திரீகளும் காந்திருவப்பெண்களும் நெறிவழுவில்லாத ரிஷிபத்தினியர்களும் தேவமாதர்களும்,மகாதேவி சாம்பவி வராகி பாலே வயிணவி பகவதி பார்வதி பயிரவி மோகினி யென்று துதித்து பிரதட்சண நமஸ்காரம் புரிந்து பணிந்து கைகட்டி வாய்பொத்தி தாயே

நாங்கள்கடைப்பிடியறிந்து கதிபெற்றுகடைத்தேறும்படியாய் இரட்சிக்கவேணு மென்று வேண்டினார்கள் அப்போது தாண்டவ மூர்த்தியின் தாளிணையைத் தொழுது சகலருங் கேட்கச்சங்கரி சொல்லத் தொடங்கினாள்.

கங்கை, யமுனை, சரஸ்வதி, நருமதா,சிந்து, காவிரி, கோதாவிரி, துங்கபத்திரி அவந்திமுதலிய சப்தநதியும் தங்கள் சுயரூபத்துட னிருந்து இருகரத்தையுஞ் சிரசிற்குவித்து அன்புடனே அம்மனைப் பூசித்து நிற்கவும் வதிஷ்டர்முதலானசப்தரிஷிகளும் அவர்களுடைய ஸ்திரீகளும் பொருந்தி பரமேஸ்வரியைவிட வேறில்லை யென்று பணிந்து போற்றித் துதிக்கவும் புப்பத்து முக்கோடிதேவர்கள் நாற்பத்தெண்ணாயிரம் ரிஷிகள்யக்ஷகின்னர கருடகாந்திருவ,சித்த,வித்தியாதர தும்புரு நாரதர்களும், ஞானமூர்த்தியையும், ஞானாநந்த பரிபூரணியையும் போற்றிச் சபைகூடி இருக்கிறசமையத்தில் சண்முகனைப் பெற்ற உண்ணா முலைத்தாயார் உரைக்கத் தொடங்கினாள்.

பெண்களின்தருமம் திரிகாலத்திலுஞ் சுதந்தரமில்லை தாய், தந்தையின் கட்டளைப்படிக்குச்சிலகாலம். புருஷன்பணிவிடையில் அவனுக்குப் படிக்குச்சிலகாலம். பிள்ளையின்சொல்லுக்குமாறு படாதிருத்தல் சிலகாலம். இதற்குள்ளாகக் கால அளவைகணக்கு முடிந்துபோம் இதோர்விதி, ஸ்திரீகளுக்கு யாதொரு அதிகாரமுமில்லை, தாய், தந்தை அண்ணன், தம்பின், இவர்களிலொருவர் சம்மதித்து தருணப் பருவத்தில் ஒருவனுக்குத் தத்தம்பண்ணிக்கொடுத்து விட்டால்அந்தத் தத்த நீரோந்திய தலைவனேமுதன்மையான தெய்வம்.தனதுபிராணன் அவனுடைய அபிமதப்படிக்கு நடந்து தென்புலத்தார் அதிதி முதலியபேர்களுக்குச் செய்யவேண்டிய கடன்முதலாகிய பூசனைகள் செய்து மனம்வாக்கு காயமூன்றும் ஒன்றாய் சட் ருசிபதார்த்தத்துடன் சமயற்செய்து ஊட்டிவைத்து அகோராத்திரியும் பகலும்பணிவிடையில் பால்மாறிக்கைஇல்லாமல் குளிர்ந்த சொல்லும் ஆசாரமும் அறிவும்ஆழ்ந்தமனமுமுடையவள் மாஹா பதிவிரதை. அதற்குத் திருட்டாந்தம்,ஒருபிராமணன், அவனுக்கு இரண்டு ஸ்திரீகள் மூத்தாள், சகலதருமமும், நாயகன் மனத்திற்குப் புறம்பாய் நடத்தி நன்னடத்தையும், குடிவாழ்க்கையும், தன்சுதாவில் பெருமைபாராட்டி கனம்பண்ணினாள். இளையவள் புருடன்வார்த்தைக்கு எதிரிடாமல் வழிபாடு பட்டு நிதமும் சதமென் றெண்ணி அவருத்தரவின்படி பிரியமாய்நடந்து வந்தாள் பிறகு அந்த இருவர்களும் வயோதிகதிசையடைந்து மறுமைப் பயனை நாடினார்கள். அவர்களிடத்திற்கு

அறக் கடவுள் வந்து, முதல் பத்தினியைப் பார்த்து ஓ, பெண்ணே உன் புருஷனுடைய கட்டளைப்படிக்கு தருமங்கள் செய்யாமல் உன்னிஷ்டம் போல கரும தருமங்களைச் செய்தாய், அதனாலுனக் கென்னவுண்டு நீ செய்த புண்ணிய கருமங்களினால் பிரயோசன மில்லை நீ உன்புருஷனோடு இந்தப்பூமியிலிருந்து சுகபோகச் சௌக்கியங்களையனுபவிக்கச் சுதந்தரமில்லை அந்தப்பூமியிலும் வந்திருக்கச் சொந்தமில்லை, நீ இங்கேதானே விதந்துவா யிருவென்று விட்டு விட்டு, புருஷன் சொற்கடவாமல் நடந்த இளையாளுடன், அவள், நாயகனையுமழைத்துக் கொண்டுபோய் சுவர்க்காதி போகங்களை அனுபவிக்கச் செய்து சுகத்தி லிருத்தினார். மூத்தவள் விதவையாய் சுமங்கிலியப் பெண்களைக்கண்டு மனமருண்டு விசாரங்கொண்டு, வெதும்பி அன்னத்தை வெறுத்து அகங்கலாய்த்து அழுத கண்ணீருஞ் சிந்தையுமாயிருந்து நாயகனையே தெய்வமாக நாடி நினைத்து நலியுங்காலையில் குற்றமற்ற எமதரும ராஜன்வந்து ஓ, பெண்பாவாய், நீ யேன் கிலேசிக்கிறாய் ஒருபிரயோஜனமு மில்லை மறுபடியும் பிறவிக் கிடந்தேடிக் கொண்டாய், எப்படி நீ மகிழ்னன் உத்தரவில்லாமல் உன்சுயமாய்த் தருமம் பண்ணினையோ, அப்போதே எல்லா அகங்காரமு முண்டாய் விட்டது, ஆதலால் நீ இறந்து இன்னொரு தரம் பிறந்து வேறு புருடனுக்கு வாழ்க்கைப்பட்டு மிருந்த பத்தி செலுத்தி தகுந்த ஊழியத்திலிருந்து அவ னுத்தரவு கடவாமல் நடந்து அவன் மனதின்படிக்கிருந்து விருந்து முதலியதும் பரிந்து செய்வை யாகில், முடிவில் இந்தப்புருஷன் பெறுகிறகதி நீயும், பெறுவையென்று புகன்றுபோய் விட்டார். அவ்வாறே பேறுபெற்றனள், ஆதலால் ஸ்திரீகள் சுயமாய் ஒருகாரியமுஞ்செய்ய அதிகார மில்லை, தருமமுதலிய கருமம் நடத்தவேண்டு மானால், புருஷனாலும் அவருத்தரவினாலும் புரியலாம். கைம்பெண்ணான பின்பும் பிள்ளை இல்லாவிடில் தமையன் தம்பியால் அல்லது சந்ததியாரையாவது தமையனாக பாவித்து அவர்மதியினவழி நடத்தவேண்டியது இதற்கு வேதமே சாட்சி விளம்பியது தாட்சி இல்லை. ஆட்சியாகிய பெண்கள் புருடனுக்குக் கண்கள். பெண்களுக்கு சகலமும் புருடனே தாரகம், அநேகம்போக மாதருடன் கூடி சமானமாகவாழ்ந்தாலும், மனங்கோணாமல் பணிவிடைபண்ணித் தீரவேண்டும். அதுகற்புநிலைமையாம் அற்புதக்குணமாம் தன்வசத்தில்வைத்தபொருளை உயிர்போறகாத்துஎந்தக்காரியத்தைப்பற்றி அவர்கேட்டாலும் தடைசொல்லாமல் உதவவேணும், நாயகன் கரத்தால் எதுகிடைத்தாலுங் குறையென் றென்னாமல் நிறைவாய்க்

கொள்ளவேணும். ஒருவருக்கொன்று கொடுத்தால் தானும் அதற்கு அனுகூலமாகவேணும் அந்தரங்கத்தி லிருந்த சங்கதிகளை அயலாரறியப்போகாது வெகுபேர் பெருமையாய்ச் சொல்லிக்கொள்ளுவதுண்டு. அதுபெரும் பிழையாய்விடும் நாயகன் வறியன், நோய், குரூபி, அறிவில்லாமூடன் அழகற்றவனானாலும் தனக்கென்று ஆண்டவன் கட்டளையின்படி சமைந்தவனானபடியால், அவனை தெய்வமென்று நித்தமும், பத்திசெலுத்தி மெத்தவும் பூசித்துத் தொழவேண்டும், பார்ப்பவர்களுக்கும், கேட்பவர்களுக்கும் பெருமைபாராட்டிப் பேசவேண்டும் மனஞ்சலியப்போகாது தென்புலத்தார் தெய்வம்விருந்து ஒக்கல் இவையெல்லாம் தினந்தினஞ் சிந்திக்கவேணும் இதனால் புருடனுக்குசிரேயஸ்கரமுண்டாகும் நற்காலந்துற்காலங்களிலும்சமமாய் ஒத்துநடக்கவேணும், இதன்றி பெண்கள் அசுரமென்றும் பைசாசமென்றும்,இராக்ஷசமென்றும், மூன்றுகுலம், அவர்கள் குணமெப்படியென்னில் விபசாரத்துவம் உடற்பிறப்பு,ஆசாரஈனம், அவர்களுக்கடிமை தீயநடத்தையே செய்யும்புண்ணியம், மாறுபாடு வஞ்சமேதேறியநெஞ்சம், மானம், வெட்கம், வணக்கமொடுக்கம், அவர்களிருக்கும் நாட்டிலுமிராது அவர்களுக்கு பாபபுண்ணிய மிராது குரோதங் குடிகொண்ட சிந்தை கொலைபாவத்திற் கஞ்சுவதில்லை மெய்பேசமிஞ்சுவதில்லை தங்களிச்சையின் படிக்குச் செலவழித்து லச்சையற்றுத் திரிவார்கள். புருஷன் ஒருபொருளல்ல புருஷன்தவத்தையழிப்பதே போதுமானபெருமை வீட்டுடமைகளை விற்றுமுடிந்து மேற்காசுகண்டு தாயார்வீட்டுக்கும், தன் திண்டிப்பொருட்டுக்கும், வட்டிக்கும், குடுசெட்டிக்கும், ஆசைக்கும் மதுபான பூசைக்கும், போட்டுவிட்டு ஒன்றுமில்லை யென்று ஒறுவினை புரிந்து கர்வங்கொண்டு அண்டை அசல் நகைக்கச் சண்டைபோடுவார்கள் புருடனுடன் ஒருபோதும் நயந்துபேசார்கள் கடுகடுப்பு சிடுசிடுப்பு படபடப்பு வெடுவெடுப்பு துடிதுடிப்பு இப்படிக்கு என்னனு முண்டு; இத்தியாதி குணமுள்ளவர்கள் அசுர ஸ்திரீகளென்று அறையவேணும்.

பைசாசமடந்தை கணவனை ஏறப்பாராள் அன்பில்லாள் நாய்போல் வீழ்வாள் மகாகர்வி பிள்ளைகள் தாய் தகப்பன் அண்ணன் தம்பின் பந்துமித்திராள் பேரில் பட்சம்வையாள் என்னேரமும் பேயாட்ட மாட்டிவைப்பாள் கலகம் அசத்தியம் தூஷணை பிறத்தியாரிடத்தில் பூஷணை பட்சம்விளையாட்டு சிரிப்பு களிப்பு வெளியிலுண்டு உள்ளிட்டாரில் முகச்சுளிப்பு பிரியமிராது எடுத்தெறிந்து பேசுதல் இக்குணமுடையாள் பைசாசமங்கை.

இராக்ஷசஸ்திரீகள், கள்ளு, சாராய், கஞ்சா, அபின், பலமாம்சம் இதுகளைப் புசிப்பதில் அதிக இச்சை புருஷனிருப்பது லச்சை ஆசாரங் கொச்சை தேகநாற்றம், துணியழுக்குவாசம், சின்னவருடையநேசம் செய்வதெல்லாமோசம், பொய்மேல் விசுவாசம், நாயகன் புணர்ச்சியோ எமபாசம், நாணம், மடம், அச்சம், பயிற்பு நாசம், வெட்கஞ்சிக்கு இல்லாத விருப்பு, வீண்ஜம்பம், வெறும் பேச்சு, சர்வமட்டி, தவம், விரதம், செய்வதற்கு விசனம் பெருங்குரல், பண்டவாளமெல்லாம் ஊரறியச் சொல்லுதல், வீடுவீடாய் நுழைதல், நாவிற்கு உருசிதேடல், நாலுவீட்டுத்தங்கை, எட்டுவீட்டப் பாத்தை இத்தியாதி செயற்கை யுடையவளை இராக்ஷசப்பெண் ணென்னலாம். இந்தக்குணமுடைய பேர்களுக்கும், இவளைக்கொண்ட கணவருக்கும், இறப்புப் பிறப்பு என்னுரு மொழியாது.

தேவஸ்திரீகள் இலட்சணம், நன்னடக்கை, சுசி, புனிதம், ஒழுக்கம், நல்லறிவு, அன்பு, தருமம், புருஷபக்தியுடையவர்கள், மானிடஸ்திரீகள், புருஷனுண்டபின் தானுண்ணல், நித்திரைசெய்தபின் தானித்திரைபண்ணல் அவனெழுமுன்னே தானெழுதல், பாதம்வருடல், அறுசுவையுண்டி அமைத்து அருத்துதல், பூததயவு, புருஷன்காண்பதற்கு பூ மஞ்சள், பூஷணவஸ்திர அலங்காரம் பூணல் இருப்பதைக்கொண்டு இந்திரபாக்கிய மென்னல் லாபலோபத்திற் குடன் பட்டிருத்தல் கோபிக்கும்போது நற்குணங்காட்டி கோபந்தணித்தல் பிறர் மனைபுகாமை பெரியவர்களிடத்தில் பேசுதல் மாமியார் மாமனார் மகிழநடத்தல் கொண்டார் பெயர் குடிப்பெயர் உரையாமை உபகாரம் பசுமஞ்சட்குளி நெற்றியிற் றிலகம மாதவிடாய் மூன்றுநாள் மறைந்திருந்து, நான்காநாள் ஸ்நானம். ஐந்தாநாள் தயிலஸ்நானம் அப்பால்; புருஷன்முகத்தில் விழித்தல் புருஷனுக்கு மிஞ்சிப்பேசாமலிருத்தல், மற்றொருபுருடனை மதியாமை மகிழாமை புகழாமை வாசற்படி உரல் உலக்கை முறம் அம்மி இப்போர்ப்பட்ட இடத்தில் உளுக்காராமல், இலட்சுமிபூசை, குடும்பத்தின்பேரி லாசை அவமரியாதையாய்ப் புருஷனுடைய சொல்லுக்கு மாறிப் பேசுதலில்லாமை பிறந்தகுடும்பத்தின்பேரி லன்பு புகுந்த குடும்பத்தின் பேரிலன்பு புருஷனிற்கும்போதும் வார்த்தைசொல்லும் போதும் உளுக்காந் திராமல் எழுந்துவணங்கி இருத்தல், சாலா நீதத்தால் நாயகனிறந்தால் உடன்கட்டை யேறுதல் சாகமனங் கூடாதாயின் பாக்கு வெற்றிலை சந்தனம் புட்பம் உயர்ந்த வஸ்திரம் பாய் தலைக்கணை சட்ருசிபதார்த்தம் இதுகளை எல்லாந் தள்ளி தலைமொட்டை இட்டு ஒருவேளை

அன்னம் புசித்து விரதங்க ளனுஷ்டித்து பெரியோரைப்பூசித்து தே வதா தரிசனஞ்செய்து புண்ணிய நதிகளில் மூழ்கி தானதருமம்புரி ந்து முடிவில் கதியடைந்து தேவதாசொரூபமெடுத்து சுவர்க்காதி போகமடுத்து அளவிறந்தகாலம் புருஷனுடனே அமர்ந்து வாழ் வார்கள்.

இம்முறை தப்பினால் உயிர்வதையான நரகத்தி லுழலுவார்கள். துன்மார்க்கமுள்ள பெண்சாதிகளாலே நல்லபுருஷனுக்குந்தீங்கும்நரக முமுண்டாம். இத்தியாதிகற்புடைமைகளுங் நிறைந்துஇருந்தால் அவ ர்களைக்கொண்டகணவனுக்குத் தருமங்கூறவேண்டுவதில்லை அவர்கள் வாக்கு வேதத்திற்குச்சமானம் தருமதேவதைவாக்கியம் திருமந்திரம் அவர்களிருக்கும் வீடு சிவலோகம். பதினான்குலோகமுங் கடைத்தே றும் பெய்யென்றால் மழைபெய்யும் அந்தஸ்திரீகளுக்கு மேலான வர்களில்லை. இப்படியாக ஈஸ்வரிசொல்ல, ஈஸ்வரனும் மற்றமாதவர் களுங் கேட்டுமகிழ்ந்தார்கள் புகழ்ந்தார்கள் பாடினார்கள் ஆடினார்கள் தொழுதார்கள் ஆநந்தசமுத்திரத்தி லழுந்தினார்கள் தேவதைகள் ரிஷி கள் முனிவர்கள் முதலிய கணநாதர்களும் பரவசமுற்றார்கள். இருகர த்தையுஞ் சிரத்திற்குவித்து இறைவனையும் இறைவியையும் வலமாக வந்து பணிந்து ஆநந்தபாஷ்பம் பொழிந்து அரகரசம்போ சங்கரவெ ன்று கோஷித்துத் தொழுதார்கள். அப்போது பரமசிவம் பார்வதி யைப்பார்த்து நாமிருவரும் ஏகாந்தமாயிருந்த இடத்தில்வந்து இப் பேர்ப்பட்ட தருமமுதலிய பதிவிரதாநீதி மகத்துவங்களைக்கேட்டு சந் தோஷப்பட்டவர்கள் இப்பிரகாரம் வழுவாமல், நடந்தவர்கள் பூலோக த்தில் இயாவருக்கும் புகன்றவர்கள் விசுவாசித்தவர்கள் அவர்களெல் லாம் திவ்வியதேகம்பெற்ற தேவதைகளாய் நமது அருளுக்குப் பாத் திரர்களாய் சமயம் ஆறையுங்கடந்து ஞானாநந்தசாகரத்தைப்பெற்று இகபரத்தும் பெருமையுற்று பிறவியற்று பெரும்பேறு பெறுவார் கள் புத்தியுண்டாம் வெற்றியுண்டாம் கல்விசேரும் செல்விநேரும் துற்சொப்பம் துற்பயங்கரம் துர்மரணம் துர்வியாதி நீங்கும், சற்சிநே கம் சன்மார்க்கம் சற்பிரபலம் சத்காலக்ஷேபம் ஓங்கும், பெரியோர் கள் இந்தச் சரித்திரத்தை யெடுத்துப்பேசுங்காலையில், மனதை வே றிடத்திற் செலுத்தாமல் வெறுக்காமல், அவசரப்படாமல், அலுப்பா யிராமல், அலட்சயப் படுத்தாமல் பசிநோக்காமல் பத்தியாய் கைகு வித்து வந்தனை வழிபாடுடன் இந்தப்பதவிக்கு இதுகிட்டுமோ கிட்டாதோ வென்கிற ஏக்கம்வைத்து தூக்கஞ்சோம்ப லற்று தே வாராதனை செய்து தும்மல் கொட்டாவி நெட்டை குறுகுறுப்பு

முதலிய தில்லாமல் கேட்டு இந்த விரதத்தை அநுசரித்து நடந்த வர்கள் ஏழுசன்மங்களிற்செய்த வல்வினைகளும்போய் புண்ணிய மேலிட்டு இம்மையில் மிகுந்த போகபாக்கியத்துடனிருந்து மறுமையில் பிரமலோகத்தை யடைவார்கள். இந்த நீதியாகிய தருமங்களைச் சுமங்கலமாதர் கேள்விப்பட்டால் மகாபதிவிரதா மகத்துவ மங்கள முண்டாகும் மோட்சங் கிடைக்கும் புருஷனிழந்த பெண்கள் வினவினால் இந்தசன்ம மிப்படியானாலும் இன்னொரு பிறவியில் கணவனுடன் கலந்து தருமந்தப்பாம லிருந்து மகிழ்ந்து வாழ்ந்து வைதவியமென்கிற வசனமில்லாமல் நித்தியசுபமங்கள மாயிருப்பார்கள். நற்கதியுண்டாம் மலடிகள் பக்தியாய்ப் பூசித்துவிரும்பினால் நல்லசுபுத்திரரைப் பெறுவார்கள். தரித்திரர்கேட்டால் செல்வமுஞ் சீரும் தயாளமும் உண்டு. ரோகிகள் அனுஷ்டித்தால் சகலபீடைகளும் விட்டுப்போம் கிரகசாரமும் ஒடுங்கும் தீர்காயுசுண்டாம் இந்தப்பொருளைக் கல்வியறியார் படிப்பில்லார் கற்று மறப்பார் புத்திமழுங்குவார் முதலிய பேர்களும் உற்றுணர்ந்துகேட்டால் அவர்கட்குவேண்டிய நன்மையெல்லாம் உண்டாகுமென்று அந்திவண்ணன் செவ்வந்தி புனைந்த நந்தி பணிந்த அம்மனுடன் சொல்லி இருவம் ஆசீர்வதித்து கணநாதர் கொண்டாட தேவமுனிவர்முதலிய ரிஷிகள் பக்கத்திற்சூழ்ந்து தோத்திரம்பண்ணித் தொடர்ந்துவர தமது திருமேனி நிலவெறிப்பதில் பச்சைப்பிரகாசம் பிரதிபலித்திருக்க காலகாலனை கண்ணுடைய வள்ளலாகிய கருணாநிதியும் உமாமயேஸ்வரியும் கைலாயத்திற் கெழுந்தருள அங்கிருந்ததேவர்களும் முனீஸ்வரர்களும் துதிக்கவும் யான்யாழிசைக் கொட்டவும் அப்பொழுது இந்தசரித்திரங்களை பகவான் உலகிலுள்ள ஆத்மகோடிகட்கு போதிக்கவும் ஆக்கியாபித்தபடியால் அதை உங்களுக்கும் தெரிவித்தேன் இந்தபுண்ணிய சரித்திரங்களைக் கேட்டவர்களும், எழுதினவர்களும் வாசித்தவர்களும் வாசிக்கச்செய்தவர்களும் அவ்வொழுக்கத்தில் நின்றவர்களும் அளவுகடந்த ஆனந்தவாரியில் மூழ்கி பிரமனது சிருட்டியும் இயமனுடைய பாசமும் தொடராது மோக்ஷத்தை யடைவாரென்பதற்கு ஐயமில்லை என்று நாரதமகாமுனிவர் சொல்ல, நைமிசாரண்ய முனிவர்கள் அகமகிழ்ந்து அவரைப்பணிந்து சுவாமி, தாங்கள் தெய்வலோகங்களில் கண்ட பிரமன், இந்திரன், இயமன், வருணன், குபேரன்முதலான பேர்களுடைய சபையின் பெருமைகளையும் அருமைகளையும் தாங்களனுக்கிரகம் செய்யவேண்டும் மென்று கேட்க; நாரதமகாமுனிவர் அச்சபைகளின் சிறப்பைச்சொல்லத் தொடங்கினார்.

139. நாரத மகாமுநிவர், நைமிசாரண்ய முநிவர்களுக்கு அருள்செய்யும் இந்திரசபையின் சிறப்பு.

கேளும் ரிஷிகளே தேவலோகத்தில் தேவேந்திரனுடைய சபையொன்றுண்டு, அதற்குச் சுதர்மையென்று பெயர். அது நூறுயோசனையகலமும் நூற்றைம்பது யோசனை நீளமும் ஐந்துயோசனை உயரமும் உள்ளதாய் ஆயிரங் கிரணங்கள் பரவிகொண்டிராநின்ற சூரியனைபோல் பேரொளிபெற்று விளங்கிக் கொண்டிருக்கின்றது. அது இந்திரனுக்குவேண்டிய இடத்துக்குப் போகும்படி ஆகாயத்திற் சஞ்சரிக்குந் திறமுடையது. மிகுந்தபுண்ணியஞ் செய்தவர்களுக்கேயன்றி பாபிகளுக்கு எவ்வளவும் கிடைக்கத்தகுந்ததன்று. அதை இந்திரன் சுதாவிலே நிருமித்தான், அதிற் பற்பலவிநோதங்களுமுண்டு, அவைகளை இப்படிப்பட்டன வென்று சொல்லக்கூடாது, அதில் அனேகவிநோத ஆசனங்களிட்டு நடுவில் ஓர்சிம்மாசனம் போட்டிருக்கின்றது, அதில் தேவேந்திரன் சசிதேவியுடனே கொலுவிருப்பான், அப்படியவன் கொலுவிருக்குங் காலத்தில் சப்த மருதுக்கள் ஏகாதச ருத்திரர் துவாதசாதித்தர், விசுவதேவர், அசுவனிதேவதைகள், சப்தரிஷிகள், சுக்ராசாரியர், பிரகஸ்பதி முதலாகியவேதியர், மற்றும் கருடர், கந்திருவர், சித்தர், சாத்தியர், கின்னரர், கிம்புருடர், வித்தியாதரர் முதலாகிய சகலதேவகணங்களும், பராசர், பருவதர், சாவர்ணி காலர், சங்கர், லிகிதர், கவுரமுகர், துர்வாசர், தீர்க்கதபர், யாஜ்ஞவல்கியர், உத்தாரகர் சுவேதகேது, தாண்டியர், பாண்டாயநி, அவிஷ்மான், கவிஷ்டன், சாண்டலியர், ககூஷிவான், கவுதமர், வைசுவாநரர், சம்வர்த்தர், தேவஹோத்திரர், வால்மீகர் இவர்முதலாகிய அநேகரிஷிகளும் இன்னுமநேக சுகர்மஞ்செய்த பேர்களும் அரிச்சந்திரமகாராஜனும் சூழ்ந்திருக்க, ஒருபுறத்தில் அரம்பை, ஊர்வசி, மேனகை, திலோத்தமை முதலாகிய பெண்கள் நடனஞ்செய்ய மற்றொருபுறத்தில் விசுவாவசு சித்திரசேனன் முதலாகி கந்தருவர் யாழிசைத்துப்பாட, ஒருபாரிசத்தில் முநிவர்செய்யும் ஆசீர்வாத கோஷம்முழங்க மற்றொருபுறத்தில் அனேகர் அகசியஞ்செய்ய, மற்றொருபக்கத்தில் யோகிகளிருந்து வேதவேதாந்தங்களின் தாத்பரியங்களைப் பிரசங்கிக்க சப்தமேகங்களு மொருபுறத்திலிருந்து முழக்கமிட சிரத்தை, மேதை, என்னுந் தேவதைகளும் மற்றுமனேகம் கன்மதேவரும் போற்ற அச்சபையானது மிகவும்மனோரம்மியமாய் தகதகவென்று நவரத்தினங்களும் ஜொலித்து விளங்கும்.

அன்றியும் அச்சபையிலிருப்பவர்களுக்கு மூப்பு, சோபம், மோகம், முதலாகிய துன்பங்களிலொன்றேனு மிராது, யாவரும் மிகவுஞ் சிறந்தமணிகளிழைத்த, திவ்வியாபரண வஸ்திரங்களினு லலங்காரம் பெற்று,திவ்வியசுகந்தம் திவ்வியமாலைகளையணிந்து மகாவினோதமாக இருப்பார்கள், இவ்வாறாக இந்திரன் சபையானது பூலோகத்திலிருக்கிற யாவரும் பலதவங்கள்செய்து மறுமைப்பயனிதுவே யென்று மகாசந்தோஷத்துடன் கோறி வரும்படியாகிய புண்ணியர்களை எதிர்கொண்டழைக்கும்படி சிறப்புடனே விளங்கிக்கொண்டிருக்கின்றது.

140. இயமன் சபையின் சிறப்பு.

இனி இயமன் சபையின் சிறப்புச்சொல்லுகிறேன் கேளுங்கள் அந்த இயமதர்மராஜனுடைய சபையானது நூறுயோசனை நிகளமும் அதற்குத்தக்க அகலமும் உயரமுமுடையதாய் தேஜோமயமாய் நாற்புறங்களிலும் பரவாநின்ற ஒளியுடையதாய் மிகுந்த குளிர்ச்சியுமில்லாமல் அதிக உட்டிணமுமில்லாமல் சமகுணமுடையதாய் விசுவகர்மாவினாலே நிருமிக்கப்பட்டிருக்கின்றது. அந்தச்சபையில் இருப்பவர்களுக்கு பசி, தாகம், மூப்பு, வியாதி முதலான ஓர் துன்பமுமுண்டாகிறதில்லை. எப்பொழுதும் சந்தோஷமுண்டாயிருக்கும்;சகலபாக்கியங்களு மதில்கிடைக்கும் அச்சபையில் இயமதர்மராஜன் கொலுவிருக்குமளவில், யயாதி, நகுஷன், பூருமாந்தாதர், சோமகன், திரசதக்யு, உரகன், கிருதவீரியன், சுருதசிரவன், அரிட்டநேமி, சிம்மன், கிருதவேகன், கிருமி, நிமி, பிரதர்தநன், சிபி, மச்சியன், புருதுலாக்ஷன், பிரகத்திரதன், பார்த்தன், மருத்தன், சாங்காசியன், சங்கிருதி, துபருவன், சதுராசுவன், சதசுவன், ஊர்மி, கார்த்தவீரியன், பரதன், சுரதன், தபோரதன், சுதன், நிஷதன், நளன், திவோதாசன் அம்பரீஷன், பகீரதன், வியசுவன், வக்கிரன், பிருதுவேகன், லோமபாதன், அநரணியன் லோகிதன், உத்தவன், பிரிஷக்கு, விருஷசேநன் க்ஷுபன், வசுமநன், புருகுச்சன், ஆட்டிசேணன்,திலீபன், புண்டரீகன், சர்யாதி, சரபன், அரிட்டன், வேணுதுச்சந்தன், சிருஞ்சயன் சயன், வர்சஸ்வரி, விரேதன், கரந்தமன், பாகிலீகன், பிரத்தும்நன் பிருது, கபோதரோமன், சகதேவன், அர்ச்சுனன், ஸ்ரீராமன், லட்சுமணன், கட்சசேனன், பரசுராமன், நாபாகன், சகரன், பூரித்தும்நன்,

பிருதாக்கியன், சனகன், பரிச்சித்து,ஜனமேஜயன்,பிரம்தத்தன், திரி கர்த்தன், உபரிசரன், பீமன்சாநு, காரபிருட்டன், நயன், பத்துமன் முசுர்குந்தன், இந்திரத்தியும்நன், பிரசேனசித், அஷ்டகன் முதலாகிய அநேகம் ராஜரிஷிகளும், மச்சியராஜர்களில் நூற்றுவரும், நீபரில் நூற்றுவரும், திரிதராஷ்டரில் நூற்றொருபேரும், எண்பது ஜென மேஜெயரும், நூறு பிருமதத்தரும் நூறுவரியரும், நூறுபீஷ்மரும், நூறு பீமர்களும், நூறுபிரதிவிந்யர்கதிரும் நூருநாகம் நூறு அய ரும் நூறு பராசரும், நூறு இராகுசரும், சூழ்ந்துகொண்டிருக்கிறார் கள், அன்றியும், தருமராஜன் தகப்பனாகிய பாண்டு, உஷத்தகன், சயத்திரதன் இவர்களும் ஓர் புறத்திலிருந்தார்கள். இதுவுமல்லாமல் பிருஷ்தசுவனென்கிற ராஜன் தனது மந்திரிகளுடன்கூட உட்கார் ந்து உபாசித்துக் கொண்டிருந்தான். அன்றியும் அநேக அசுவமே தங்கள்செய்து சதபிந்துவின் குமாரர்களாகிய அநேகரும் அந்த இயமதர்மராஜனை யுபாசித்துக்கொண் டிருக்கின்றார்கள் இவருமன் றி அகஸ்தியர் மதங்கர் காலன் மிருத்தியு முதலாகிய பேர்களோர் புறத்திலும், யாகஞ்செய்தவரோர்புறத்திலும், தானசீலரோர்புறத் திலும்,நீதிமான்களோர்புறத்திலும்,தருமனிருப்பமுள்ளவரோர்புறத் திலும், சத்தியசந்தரோர் புறத்திலும், ஆபத்திற்காத்தவரோர்புறத்தி லும், கோயில் குளம் சத்திரம் சாலைமுதலிய தருமஞ்செய்தவரோர் புறத்திலும் வீற்றிருந்து புகழ்ந்துக்கொண் டிருக்கிறார்கள். மேலும் சித்தபுருஷரும் யோகபுருஷரும் பிதுர்க்கணங்களும் சோமகிருப ரும் அக்கினிகளும் காலசக்கிரமும் ஓர்புறத்தில் துதித்துக்கொண் டிருக்கிறார்கள்; தக்ஷிணாயநம் உத்தராயநம் மிருத்தியு காலசோதனை பண்ணும் கிங்கரர்களும் நின்று துதிசெய்து கொண்டிருப்பார்கள், அச்சபையி லிருப்போர்களை கணக்கிடலெண்ணி முடியாது. இவ் வளவு பெயர்களுக்கும் வெகுவிசாலமாகிய விடத்தைக் கொடுத்துக் கொண்டு விளங்காநின்ற அச்சபையினருகில் நாகரத்தினங்க ளிழை த்து மரகதத் தூண்கள் நாட்டி வயிரங்களிலு லுத்திரமுங் கொடுங் கைகளு மமைத்து பூரணச் சந்திரனுடைய கிரணங்களுக் கொப்பா கிய காந்திகளை வீசாநின்ற முத்துப்பந்தலின் கீழே சிங்காசனத்தின் பேரில் இயமதர்மராஜன் வீற்றிருந்து ஆடல்பாடல் முதலிய விநோதங் களினாலே வெகுசந்தோஷமடைந்து ஓர்கரத்தில் பாசமும் ஓர்கரத் தில் கதாயுதமுமேந்தி பயங்கரமாகிய ரூபத்தைக்காட்டிப்பாபிகளைநர கத்தில் தள்ளவும், புண்ணியவான்களைத் தனது சபையிலிருத்தவும், எதிரிற்கைகட்டி நிற்கும் கிங்கரர்களுக்குக் கட்டளை யிட்டுக்கொ

ண்டு தருமதேவதை சித்திரகுப்தன் முதலானோர் புடைசூழ்ந்திருக்க தனதாளுகையைச் செலுத்தி வருகின்றான்.

141. வருணன் சபையின் சிறப்பு.

கேளும் ரிஷிகளே வருணனுடைய சபையும் இயமனுடைய சபைக்குச்சமானமாகிய அளவுடையதாய் வெகு அழகாகியும், உயரமாகியுமிராநின்ற மதில்களினாலும், கோபுரங்களினாலும், சூழப்பட்டு நவரத்தினங்களிழைத்து எப்பொழுதும் வெயில்பரப்பி விளங்கிக்கொண்டிருக்கும், அது நீர்களுக்குள்ளே வெகு விநோதமாய் விசுவகர்மாவினால் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அதைச் சுற்றிலும் சிவரத்தின மயங்களாய் எக்காலமும் பூப்பதும், காய்ப்பதும், பழுப்பதுமா யிராநின்ற பலவகைப்பட்ட மரங்களையுடைய சோலைகளிருக்கின்றன அன்றியும், அச்சோலைகளில் மிகவினிப்பா யொலிக்காநின்ற பொற்சிறகுடைய பலவகைப் பட்சிகளும் களிப்புடனே சஞ்சரித்துக்கொண் டிருக்கின்றன. அச்சபையில் மற்றொரு விசித்திர மிருக்கின்றது அதென்னவெனில், அதினிடம் ரத்தினமயமாயிருந்தாலும்தொடும்பொழுது மலர்போல் மிருதுவாகியும் சீதளமாகியு மிருக்கின்றது

இவ்வாறாகிய அச்சபையினடுவில் திவ்விய சிங்காசனத்தில் வருணதேவன் வீற்றிருந்து கையிற்பாசமேந்தி விலைமதிக்கக்கூடாத தாளங்களதிர செய்யப்பட்ட கிரீடகுண்டலகவசமுதலாகிய திவ்விய ஆபரணங்களைத் தரித்து வெண்பட்டுடுத்தி வெண்மையாகிய பூமாலை சூடி வெள்ளைச்சாந்து பூசி வெள்ளை குடைகளும் வெள்ளைச்சாமரங்களும் கையிலேந்திஅரம்பையர்சூழ்ந்திருக்கக் கொலுவிருப்பான். எப்பொழுதும் அநேகதேவர்கள் நல்லவஸ்திர ஆபரணங்களையும் திவ்வியசந்தனமாலைமுதலானவைகளையும் தரித்து மிகுந்தபிரகாசத்துடனே அச்சபையிலிருந்து வருணனையுபாசித்துக்கொண்டிருப்பார்கள், அன்றியும் தக்ஷகன், வாசுகி, அயிராவதன், லோகிதன், பதுமன், சித்திரன், கம்பலன், அசுவதரன், வலாகன், மணிவான், குண்டதாரன், கார்க்கோடகன், தநஞ்சயன், ஏணரதன், கண்டகன், பிரகிலாதன், மூஷிகாதன், ஜநமேஜயன், இவர்கள் முதலாகியஅனேகநாகராஜர்கள் நாற்புறங்களிலும் மாணிக்கச்சுடர்களைக்கக்காநின்ற மகாரத்தினச் சூடுபொருந்திய விசாலமாகிய வெகுபடாமகுடங்களை யுடை யவராய் பலவர்ணங்களும் பொருந்தியபளபளப்பாகிய தேகங்களுடனேகூடி அச்சபையில் சூழவிருப்

பார்கள். இதுவுமன்றி பலிச்சக்கரவர்த்தி, நரகாசுரன், பிரகலாதன், விப்பிரசித்தி, காலகேயர், சுமனன், சுடோரதன், மகாபாரிசுவன், விருபன், மகாசிரன், தசக்கிரீவன், வாலீ, திரிதசாம்பரன், டிட்டிபன், விகடாபன், சந்திரதாபனன், இவர்முதலாகிய தைத்திரியர், தானவர், என்னும் பிரிவினையுடைய அசுரர்களும் பல அலங்காரங்கள் பொருந்தி சிறப்பாய் அச்சபையிலிருந்து வருணனையுபாசித்துக்கொண் டிருப்பார்கள். நான்கு சமுத்திரங்கள் கங்கைமுதலாகிய சகலநதிகள் மற்றும் தடாகங்கள் குட்டைகள் கிணறுகள் முதலாகிய புண்ணியதீர்த்தங்களெல்லாம் திவ்விய தேகங்களுடனே விளங்கி வருணபகவானைத் துதித்துக்கொண்டிருக்கின்றன. மேலும் எட்டுத்திசைகளும் பூமியும் மலைகளும் உருவமாய் தேகங்களெடுத்துக் கொண்டு சூழ்ந்திருக்கின்றன. இப்படிபட்ட விநோத சபையாருடனேகூடி கந்திருவர் வீணகானஞ் செய்ய, அப்சரர்கள் நாட்டியமாட மிகவிநோதத்துடனே வருணதேவன் சுநாபனென்கிற மந்திரியுடனேயும், தன்குமாரர்களுடனேயும் நற்கதைகளைப்பேசிக்கொண்டுவாருணிதேவியுடன்கூட அச்சபையில் விளங்கிக் கொண்டிருப்பன்.

142 குபேரன்சபையின் சிறப்பு.

குபேரனுடைய சபையானது நூறுயோசனைநிகளமும் எழுபது யோசனையகலமுமுள்ளதாய் மிகவுன்னதம் பொருந்தி ஆகாசத்தில் தனியே யொருசுடர்போன்று நாற்புறங்களிலும் நிலவுவீசிக்கொண்டு மகாரத்தினமயமாய் அனேகங்குகியகர் என்பவரால் சுமக்கப்பட்டு விளங்காநின்றது. அது குபேரனால் மகாதவம் பெருமைகொண்டு சிருஷ்டிக்கப்பட்டது அதைச்சுற்றிலும் பத்தரைமாற்றுத் தங்கமயமாகிய மரங்கள், மணிமயமாகியகிளைகள் பவளமயமாகிய அரும்பு தளிர் முதலானவைகளுடனேயும்கூடி மிகுந்த வாசனையுடைய புட்பங்களையும் மதுரமாகிய பழங்களையுண்டாக்கிக்கொண்டு விநோதமாகிய பலபக்ஷிகளுக்கு மிருப்பிடமாய் விளங்காநின்றன, அச்சபையில் சுகத்தையடையத்தக்க பலவிடங்களும் அவரவர் களுக்குத்தகுந்த பலபல ரத்னசிங்கார ஆசனங்களும் மற்றும் வேண்டிய வஸ்துக்களும் சித்தமாயிருக்கின்றன.

இவ்விதமாய் ஆச்சரியப்படத்தக்க சிறப்பினையுடையதாய் ஆகாசத்தின்கொடியைப்போல் பிரகாசிக்கின்றது. அந்தமகாசபையில்

குபேரன் விசித்திர பொன்மயமாகிய வஸ்திராபரணங்கள் தரித்து அனேகமாதர்களுடன்கூடி சூரியன்போல் வெயிலெறிப்பனவாயும் மிருதுவாயுமிராநின்ற இரண்டு ஆதனங்களில் கால்களைவைத்துக்கொண்டு சுறப்பின்மிருந்த சித்ர இரத்னமணிகளுடன் ஜொலிக்காநின்ற சிங்காசனத்தில் வீற்றிருப்பன். அச்சபையினருகில் மந்தாரச்சோலையினது பரிமளங்களையும் செங்கழுநீர்புட்பங்களுடைய பரிமளங்களையும் தாமரைகளினது பரிமளங்களையும் சந்தனக்காட்டினது பரிமளங்களையும் வீசிக்கொண்டு வாயுவானவன் பின்னும் அனேகதேவர் முதலானபேர்கள் மிகவினோதமாய் குபேரனுடன் சந்தோஷமாய் சம்பாஷித்துக் கொண்டிருப்பார்கள்.

அன்றியும் மிசுரகேசி, அரம்பை, சித்திரசேனை, கிருதாசி, மேநகை, புஞ்சிகத்தலை, விசுவாசி, சகசன்னி, பிரமலோசை, ஊர்வசி, இவர்முதலனேக வச்சிரப்பெண்கள் திவ்வியதாளங் கொட்டிக்கொண்டு வேணு, வீணை, மிருதங்கம், இதுமுதலியவாத்தியங்களை வாசித்துக்கொண்டு நர்த்தனஞ் செய்துகுபேரனையுபாசிக்கிறார்கள். கின்னரரென்றும் கிம்புருவனென்றுஞ்சொல்லப்பட்ட கந்திருவரும்மாணிபத்திரன்சுவேதபத்திரன் காசாரகன் கண்டகன் பிரத்தியோதன் முதலாகிய இயக்கரும் விசுவாவசு, தும்புரு, விசாலகன் வராககர்ணன் தாமிரொஷ்டன், பலபக்ஷன், பலோதான், அங்காருடன், சிகாவர்த்தன் ஹேமநேத்திரன், விபூஷணன், பூருவாநனன், பிங்களகன், சோணிதாதன், பிரவாயகன், விருக்ஷவாசநிகேதன், சிரவாசன், இவர்முதலாகிய காயகரும், அச்சபையிலிருந்து சங்கீதம் பாடுவார்கள். லோகமாதாவாகிய ஸ்ரீமகாலட்சுமியும் அங்குபிரசன்னமாயிருப்பாள் அக்குபேரனுடைய குமாரனாகிய நளகூபரனென்கிறவன் சிலயக்ஷ கந்திருவர்களோடுகூடி ஓர்புறத்தில் வீற்றிருப்பான், நானும் என்போன்ற வனேக தேவரிஷிகளும், பிர்மரிஷிகளும், அச்சபையிலிருந்து ஆசீர்வதித்துக்கொண்டிருப்போம். மேலும் அனேகம் ராக்ஷதர்களும், பைசாசங்களும், பயபக்தியுடனுபாசித்திருப்பார்கள். அச்சபையி னோர்புறத்தில் உமாபதியாகியும், பசுபதியாகியும், முக்கணனாகியு மிராநின்ற உருத்திர மூர்த்தியானவர், கையில் சூலமேந்தி அனேக பூதகணங்களும், வாமனர்களும், விகடர்களும், கூனர்களும் ஆகிய சிவகணங்கள் சூழ்ந்து போற்றுநிற்ப, நந்தி முதலாகிய அந்தரங்கபக்தர் உபசாரங்கள் செய்ய வீற்றிருந்து விளங்குவர், அனேகங்கிங்கரர்கள் பலவாயுதங்களைத் தரித்து அச்சபையைச் சுற்றிக் காத்திருப்பார்கள். ஆகா ஊகூ என்னுங் கந்திருவர் முதலாகிய வைணிகர் குபேரனருகிலிருந்து பாடுவார்கள்,

இமாசலம் பாரியாத்திரம் விந்தியம் கைலாசம் மந்தரம் இவைமுதலாகிய பருவதங்களும், தேகங்களுடன் சேவித்துக்கொண் டிருக்கின்றன, விபூஷணன் னென்னும் ராக்ஷசராஜன் தன்பரிவாரத்துடனே அண்ணனாகிய குபேரனை யுபாசித்துக்கொண்டிருப்பர், நவநிதிகளாகிய சங்கநிதிபத்மநிதி, மாணிக்கவைடூரிய,கோமேதக,இரத்ன குவையல்களும் ஜோதிப்பிரகாசமாய் இருபுரங்களிலும் விளங்கிக்கொண்டிருக்கும்.

இவ்வாறாகிய பரிவாரவிபவங்கள் பொருந்தி யக்ஷராஜனாகிய குபேரன் நித்தமும் அச்சபைக்குவந்து மகாதேவராகியசிவபெருமானை சாஷ்டாங்க நமஸ்காரஞ்செய்து விடைபெற்று பின்பு கொலுவிருப்பான்,அந்தசிவபெருமானும் குபேரனிடத்தில் வாற்சலியத்தினால் அங்கே இருந்து அநுக்கிரகஞ்செய்துக்கொண்டிருப்பர். இவ்வுலகில் ஆதுலர்க்குப் பலதானங்கள் வழங்கினபேர்கள் அச்சபையில் திவ்வியதேகபோகங்களுடனே வாழ்ந்துகொண் டிருப்பார்கள். இப்படிப்பட்ட அந்தசபையானது ஆனந்தமேவடிவுகொண்டதுபோல் விளங்கிக்கொண்டிருக்கிறது.

143. பிரமன் சபையின் சிறப்பு.

பிரமதேவனுடைய சபையானது ஒருவராலும், இப்படிப்பட்டதென்று சொல்லக்கூடாதது, அந்த சபையானது மனதினாலே சிருஷ்டிக்கப்பட்டது, முற்காலத்தில் சூரியபகவான் இப்பூலோகத்துக்கு வந்தபோது அச்சபையின் மகிமையை விஸ்தாரமாகச் சொன்னார். ஆகிலும் அவ்வளவுஞ்சொல்ல எனக்குத் திறமில்லை. ஆனால் அந்தச்சூரியபகவானை நோக்கி சுவாமி அப்படிப்பட்ட பிரமசபையை நான்பார்க்க வேண்டுமென்று நினைக்கிறேன் அதற்குக் காரணமாகிய உபாயமென்ன அதை அருளிச்செய்ய வேண்டுமென்று நான்கேட்க, அந்தச் சூரியபகவானனவர் எனக்கு ஒருவிரத முபதேசித்தார் அதாவது ஆயிரம்வருஷ காலவரையில் இந்திரிய நிக்கிரகத்துடனே பிரமதேவனைக்குறித்துத் தவஞ்செய்து வரச்சொன்னார், அப்படியே நான் இமயமலையின் சாரலி லுட்கார்ந்துகொண்டு தவஞ்செய்தேன் அப்போது அந்த தபோமகிமையால் பிரமதேவன் தமதுசபைக்கு என்னை வருவித்தார், அப்போது அந்தச்சபையை யான்பார்த்து ஒன்றுந் தெரியாமல் ஸ்தம்பித்து பிரமித்து நின்றேன், ஆதலால் அதினுடைய

சுயரூபம் இப்படிப்பட்டதென்றும், அதினளவு இவ்வளவென்றும், நான் சொல்லமாட்டேன் ஓர் உபமானத்தைக் காட்டிச்சொல்வோமென்றாலும் அதற்கு உபமானமாகிய வஸ்து ஒன்றுமில்லை ஆனாலும் அதிற்கண்ட சிலவிஷயங்களை மாத்திரஞ்சொல்லுகிறேன்கேளுங்கள்.

அந்தச்சபையில் சீதளமென்பதுமில்லை, உட்டினமென்பதுமில்லை, சீதோட்டினங்கள் வேண்டுங்காலங்களிலும் சௌக்கிய ஹேதுவாகவே இருக்கின்றது, பசியென்பதுமில்லை, தாகமென்பதுமில்லை, நல்ல உணவுகளையும் பானவஸ்துக்களையும் சாப்பிட்டாலும் ஏற்றுக்கொள்ளுகிறது எவ்வளவு வருத்தப்பட்டாலும் வருத்தமுண்டாகிறதில்லை. சூரியன் முதலாகிய பேர்களுடைய கிரணங்களங்கே பரவுகிறதில்லை. நித்தியம் பிரகாசமாகவே இருக்கிறது அதிலிருக்கிற ஸ்தம்பங்கள், சுவர்கள், கதவுகள், மெத்தைகள், மேடைகள் முதலிய வெல்லாவஸ்துக்களும், மகாகாந்தி பொருந்திய நவரத்தினமயங்களாகத் தோன்றினாலும் தேசோமயமாய்க் காணப்படுகின்றன. இன்னும் அதன்விசித்திரத்தை என்னசொல்வேன், கம்பங்கள்முதலானதுகளினால் தாங்கப்பட்டது போலிருந்தும் அந்தச்சபையொன்றினாலும் தாங்கப்படாததுபோலவே காணப்படுகிறது.

அதுபார்க்கும்பொழுது ஒருவிதமாய்க் காணப்படாமல் ஒருவேளையில் ஓருருவுமின்றி வெறுஞ்சுடர்போலவும் ஒருவேளையில் ஸ்தம்பம் கவாடம் முதலிய வுருக்களோடு கூடியது போலவும், ஒருவேளை வெறும்வெளிபோலவும் ஒருவேளைமுழுதும் அதன்மையன்போலவும் ஒருவேளை ஆதாரமில்லாதது போலவும் ஒருவேளை யாதாரமுடையதுபோலவும், இன்னவண்ணமாகியதென்று சொல்லொணாத்தன்மையுடன் விளங்குகின்றது.

அப்படிப்பட்டமகாசபையில் ஸ்ரீமந்நாராயணமூர்த்தியினுடைய நாபிக்கமலத்திலுதித்த நான் முகக் கடவுளானவர் தேவர் மனிதர் திரியக்தாவரம் என்கிற நான்குவித உலகங்களைச் சிருஷ்டித்துக் கொண்டிருப்பர். அப்போது தக்ஷர் பிரசேதர் புலஹர் மரீசி கசியபர் பிருகு அத்திரி வசிட்டர் கவுதமர் அங்கிரசு புலஸ்தியர் கிருது பிரகிலாதர் கர்த்தமர் என்கிற உபப்பிரமணர்களும், அதாவராங்கிரசுக்கள் வாலகிலியர் மரீசிபர் என்கிற மகாரிஷிகளும், மனம் அந்தரிக்ஷம் வித்தைகள் வாயு தேசு பலம் பூமி முதலானவைகளும், சத்தம் பரிசம் ரூபம் ரசம் கந்தம் என்கிறவிஷயங்களும் பிரகிருதி விகுருதி முதலாகிய காரணப்பொருள்களும், அகஸ்தியர், மார்க்கண்டேயர், ஜமதக்கினி,

சம்வர்த்தர், பியவ்ரதர், ரிஷியசிருங்கர், சநகர், சநந்தரர், சநத்குமாரர், சநத்சுசாதர், முதலாகிய யோகிகளும், வியாசரும், அசிதர், தேவலர், ஜைகீஷவியர், இருக்ருவரியர், சிதசத்துரு மணிஎன்னும் தவசிகளும், எட்டங்கங்களுடைய ஆயுர்வேத மென்கிற வைத்தியநூலும், காந்தர்வவேதமென்கிற சங்கீதநூலும், தநுர்வேதமென்கிற ஆயுதநூலும், அர்த்த தந்திரமென்கிற நீதிநூலும் நான்குவேதங்களும், வேதாந்தங்களும், பதினெண் புராணங்களும், தருமநூல்களும், இவைமுதலாகிய தேவருடம்கொண் டிராநின்ற பல நூல்களும் சூரியன் சந்திரன்முதலாகிய கிரகங்களும் நக்ஷத்திரங்களும்; சகல தேவகணங்களும், பிதுர்கணங்களும், மகத்துவமிகுத்த யாகங்களும், க்ஷணம் முகூர்த்தம் இரவு பகல் பக்ஷம் மாதம்ருது வருஷம் யுகம் முதலாகிய காலங்களும், காலசக்கிரந் தருமசக்கிரகளும், தேவ மாதர்களும், அசுரமாதர்களும், நாகமாதர்களும், சகலலோகபாலகரும்; மநுமுதலாகிய மகாராஜர்களும், அந்த பிரமதேவனைச் சுற்றிலுமிருந்து பயபக்தியுடனே துதித்துக் கொண்டிருப்பார்கள்.

அன்றியும் கந்திருவர் யக்ஷர்கள் வித்தியாதரர் கின்னரர் கிம்புருடர் முதலானபேர்க ளிருந்து சங்கீதம் நாட்டியத்துடன் சகலவிநோதங்களுஞ் செய்வார்கள் மேலும் பூலோகத்தில் மகா உக்கிரமாகிய விரதத்துடனே வேதமோதியவர்களும், தவஞ்செய்தவர்களும், விசேஷமாகிய புண்ணியஞ்செய்தவர்களும், மகாதேசுபொருந்தி அச்சபையில் வாழ்வார்கள்.

இவ்விதமாகிய சபையார் சூழ்ந்திருக்க சந்தியை சாவித்திரி காயத்திரி சரசுவதியென்கிற தேவிமார்களுடனே திவ்விய சிங்காதனத்தில் கொலுவிருக்குமளவில், அந்தச் சபையானது வேதகோஷமயமாகவும், பிரமதேசோ மயமாகவும் விளங்கும்.

இவ்வாறாகத் தேவர்களுடைய பல சபைகளையும் பார்த்திருக்கிறேன், ஆனால் மனிதலோகத்தில் இச்சபைக்குச் சரியாகியசபை எக்காலத்திலுமில்லை இதுமிகவும் மேலாகியது இதனால் உங்களுக்கு மகாவிசேஷங்களுண்டாகும் என்று சொல்லிய நாரதமகாமுனிவரை நோக்கித் தண்டனிட்டு சொல்லுகின்றார்.

ஓ! சுவாமி நாரதமகாமுனிவரே தேவரீர் தேவலோகங்களிலுள்ள இந்திராதிகளுடைய சபைகளை யெல்லா மருளிச்செய்தீர் அவைகளில் வருணசபையின் சிறப்பும் அதில் வாசுகிமுதலிய நாகராஜ

ர்களும், அசுரராஜர்களும், அறுபத்தாறுகோடி மகாநதிகளும், சப்த சாகரங்களும், மற்றும் புண்ணியதீர்த்தங்களும், இருக்கின்றன வென்றீர். குபேரனுடைய சபைச்சிறப்பும் அதில் இயக்கர் ராக்ஷதர் குகியகர் கந்திருவர் அச்சுரர்கள் விரிஷபத்தால் விளங்காநின்ற கொடியையுடைய மகாதேவனென்கிற உருத்திரமூர்த்தி முதலாகியபேர்களிருப்பதையும் புகன்றீர். இதுவுமல்லாமல் பிரம்மதேவன் சபையின் சிறப்பையும் அதில்சகலபிரமரிஷிகள்தேவரிஷிகள் தேவதைகள்சகல அப்சரஸ்திரீகள், யக்ஷர், கின்னரர், கிம்புருடர், பைசாசர், பதகர், உரகர், சித்தசாத்தியாதிகள் முதலாகியபேர்களிருக்கின்றதையும் சொன்னீர்கள். தேவேந்திரனுடைய 'சபையின் சீர்மையும் அதில் முப்பத்து முக்கோடி தேவர்களும், சில கந்தருவரும், அரம்பைமாதர்களும், சிலமகாமுநிவர்களும் இருக்கின்றாரென்பதையு மருளிச்செய்தீர் ஆனால் இராஜர்களுக்குள்ளே அரிசசந்திரன் என்கிற ஒருமகாராஜன் அதிலிருக்கிறானென்று சொன்னீர் அந்த அரிச்சந்திரமகாராஜன் எந்தப் புண்ணிய விபாகத்தினாலே இந்திரசபையில் வாசமாயிருக்கிறான் அவன்செய்த புண்ணியங்களின் சிறப்பு எப்படிப்பட்டதோ? எந்தெந்த நியமங்களை யவன் அநுட்டித்தானோ எந்தப்புண்ணியப் பிரபாவத்தினாலே இந்திரனுடன்எக்காலமும் வாசஞ்செய்கின்றான் அதைஎங்களுக்கு உரைசெய்யவேண்டு மென்றுக்கேட்க நாரதமுநிவர்சொல்லத்தொடங்கினார்.

கேளும் ரிஷிகளே அரிச்சந்திரனுடைய எந்தபுண்ணியவிபாகத்தைக் குறித்துச் சந்தோஷத்துடனே கேட்கிறீரோ அந்தப்புண்ணியங்களையும் அவனுடைய பெருமையையும் சொல்லுகிறேன்.

இட்சுவாகு குலத்தில்திரிசங்குவென்று மகாதருமநிலைமையுள்ள ஒருஇராஜனிருந்தான் அவன்கேகயராஜனுடைய மகளாகியசத்தியவதியென்கிற பெண்ணை மணந்து அரிச்சந்திரனென்கிற ஒருபுத்திரனையுண்டாக்கினான். அந்த அரிச்சந்திரன் மகாவீரனாகியும் மகாசூரனாகியும் மகாதீரனாகியும் வெகுபுத்திசாலியாகியும் வெகு உதாரனாகியுமிருந்தான். அவனது ஆணையைச் சகலராஜர்களும் சிரத்தின் மீதிற்கொண்டு அவன்பாததாமரைகளில் வணங்கிவந்தார்கள். அவன்தானொருவனாகியே தன்புஜவலிமையினாலே நெடியகடல் சூழ்ந்த புவிமுழுதுஞ்செயித்துச் சத்துருவென்கிற பெடரையழித்து மிகவுமேன்மை பொருந்திய யாகங்களின் முதன்மையென்று சொல்லத்தக்க ராஜசூய யாகஞ்செய்தான். அந்தயாகத்திற்குச் சகலதேச இராஜர்களும்வந்து வெகுகாணிக்கைகள் கொடுத்து வணங்கி போசனஞ்செய்யும் வேதிய

ருக்குப் பலவிதகச்சாயங்களையும் உண்டி முதலியவைகளையும் பரிமாறினார்கள். சில இராஜர்கள் பலவிதபரிகாரஞ்செய்தார்கள். இவ்வாறாக இராஜசூயமென்கிற மகாயாகத்தை நிறைவேற்றி எல்லாவரசர்களும் எல்லாவேதியருங்கூடி முடிசூட்டச் சாம்பிராச்சிய பட்டாபிஷேகத்தை யடைந்து விளங்கினான். அப்போது யாகஞ்செய்வித்தபேர்களுக்கும் மற்றை மகானுபாவராகிய பிராமணர் களுக்கும் அநேகம் ரத்தினாபரணங்கள் திவ்விய வஸ்திரங்கள் நாநாவிதவாகனங்கள், நவமணிகள் பதித்து நல்ல இலக்கணங்களுள்ள நான்கு குதிரைகள் கட்டிய பலகோடிதேர்கள், சுவர்ணமயமாகிய சேணிகள் கட்டி நவரத்தினங்களிழைத்த முகப்பட்டயங்களும் கடிவாளங்களும் அணிந்து நாலுகால்களிலும் தங்கக்கடகங்களும் சலங்கைகளும் போட்டு கழுத்துமயிரில் இரத்தின மிழைத்த குச்சுகள்கட்டி நெற்றியில் பொன்மயமாகிய சந்திரபிறையணிந்து காதுகளுக்குநடுவில் முத்துகளால் செய்யப்பட்ட துராக்கள்கட்டி கழுத்தில் பலமுத்தாஹாரங்களும்போட்டு அலங்காரஞ் செய்திருக்கின்ற அநேககோடி குதிரைகளையும், உத்தமசாதியிற் பிறந்ததுகளும் மிகுந்த வேகமுடையவைகளும் பெரியபருவதங்களுக்குச் சரியானதேகங்களுள்ள வைகளும் சகல அலங்காரங்க ளணிந்தவையுமாகிய அனேகலக்ஷம் யானைகளையும், அளவற்ற திரவியங்களையும் கொடுத்தான். மேலும் அந்தயாகம் ஆரம்பமாகியது முதல் ஒருவருஷம்வரைக்கும் வந்தபேருக் கெல்லாம்தேவாமிர்தத்திலும் மேற்பட்ட பாயசமுதலாகிய அன்னங்களை வழங்கினான். இவ்விதமாகப் பலதானங்கள் வழங்கி பூசித்த அந்த அரிச்சந்திர மகாராஜனுக்கு வேதியரெல்லாம் மனமகிழ்ந்து சகலசம்பத்துகளு முண்டாகக் கடவனென்றும் கீர்த்தி உலகமெங்கும் பரவக்கடவதென்றும் ஒருவராலும் ஜயிக்கக்கூடாத தேஜசு உண்டாகக்கடவதென்றும் எல்லோரிலும்மேன்மையுண்டாகக் கடவதென்றும் ஆசீர்வாதஞ்செய்தார்கள். இப்படியாக வெகுசிறப்பாய் ராஜசூயயாகஞ் செய்தபடியினாலே அரிச்சந்திரமகாராஜன் தேவேந்திரனுடைய சபையை அடைந்து இந்திரனாலே பூசிக்கப்பட்டு மகிழ்ந்திருக்கிறான்.

கேளும்ரிஷிகளே இவ்விதமாகவே எவரெவர் ராஜசூயஞ்செய்வார்களோ அவர்களெல்லாம் இந்திரசபையையடைந்து இந்திரனாலே பூசிக்கப்படுவார்கள். அன்றியும் யுத்தகளத்திற்சென்று முன்வைத்தகாலைப்பின்வைக்காமல்யுத்தஞ்செய்துமனதில் கிஞ்சித்தேனும்பயமின்றி, உயிரைவிடுகிறவர்களும் உக்கிரமாகிய தவங்கள்செய்து அத்தவங்களிலே தேகத்தைவிடுகிறவர்களும் அந்த இந்திரசபைக்குச்சென்று

வாழ்வார்கள். என்று நாரதர் சொல்ல ரிஷிகள் இந்தமகத்துவத்தைக் கேட்டு தேவரீருரைத்த தெய்வலோகங்களை யெல்லாம் மனதிற்பதித் தோம் இனி பூமியில் பூசைசெய்கின்றவர்களும் அதற்குரித்தானவர் கள் யாரென்றுகேட்க, நாரதமுநிசொல்லலுற்றார்.

144. பூசை புரிகின்றவர்களின் மகிமை.

கேளும் ரிஷிகளே சிவயோகியர் முதலிய சகலரிஷிகளும் அகப் பற்று புறப்பற்று அற்றவர்களானாலும் அதைப்பெற்றவர்களானாலும் ஈஸ்வரத்தியானத்திலும், பெரியோர்களுடை பூசை, அரிபூசை, சிவபூ சை, முதலிய வல்லமையுடையவர்களே பெரியோர்கள் அவர்களெ ந்தக்குலமானாலும் அவர்களைப்போற்றி வணங்கி அன்புடனே பூசை செய்யவேண்டும். சுவர்ணமந்தாரை மாலை தரிக்கப்பட்ட தேவதைக ளுக்கும் மும்மூர்த்திகளுக்கும் பூசை பண்ணுவது முக்கியம். அதனால் அதிகபலனுண்டாகும். அவரவர் ஆராதிக்கும் ஆத்மார்த்த தேவதைக ளின்பிரபாவமும் வேதவேதாந்தங்களுந் தருமமும் நீதியுஞ்சாஸ்திரமு ஞ் செவ்வையாகக்கற்ற தேசிகனாலே தெரிந்துக்கொள்ளல்வேண்டும் அவர்கள் சிலஇரகசியப் பொருள்களை நவிலுவார்கள் அதுநாவினூறிக் கொண்டிருக்கும் சகலதேவதைகளும் அவர்கள் நாவிற்குடியிருப்பார் கள். ஆதலால் அப்பேர்ப்பட்ட உத்தம வித்வான்களைப் பணியலாம் அவர்களைப் பூசித்து வேண்டியபொருளு மளித்து அவர்கள் மனங் கோணாமல் நடந்தபேர்களுக்கு பூமியில் ஒருகவலையுமிராது. பூமண் டலாதித்துவ முண்டாம். கடைசியில் ஒருவரும் பெறக்கூடாத சுகா நந்த பேற்றைப் பெறுவதற்கு தேவர்கள் எதிர்வந்து விமானத்தி லேற்றிக்கொண்டுபோய் தேவபோகங்களெல்லாம் அனுபவிக்கச் செ ய்து யாவராலும் சொல்லப்படாத பேரானந்தத்தை பெறும்படிச் செ ய்வார்கள். இதன்றியில்கற்றவர்களுக்கு ஆசைவார்த்தைசொல்லி மோ சப்படுத்தினாலும் கடினவார்த்தை பேசினாலும் மரியாதை பண்ணும லிருந்தாலும் அலட்சயம்பண்ணினாலும் இகட்சியாய் நிந்தித்தாலும் வேறாய்ச் சிந்தித்தாலும் அவர்கள் மனநொந்தால் வெந்து விரிந்து மஹாபாபிகளாய் இம்மையிற் செல்வங் கெட்டு எமன்வசப்பட்டு நா கவேதனைக் குட்பட்டுப் பாதவிப்பார்கள், எப்படிப்பட்ட மஹா ராஜ னானாலுங் கற்றவித்துவானை உன்னதஸ்தானத்தில்வைத்துதான் தா

ழ்ந்திருந்து மரியாதை உபசாரம் பண்ணிவணங்கவேணும். அப்படிச்
செய்யாமற் போனால் அவர்கள்மனமெலிந்து சபிப்பார்கள். அதனால்
அந்நாட்டில் மழை இல்லாமல் தானிய முதலிய பலபண்டங்களுங்கு
றைந்து வறுமை நிறைந்து குடிபடை கூழ் சாய்ந்து அழகு சிறப்புந்
தேய்ந்து ஆயுளுமாய்ந்து ஆண்மிக்கையும் ஓய்ந்து பஞ்சமேலிட்டு
நோய் முதலாகிய துன்பங்களில் இன்பமிழப்பதாய் வரும்.

முற்காலத்தில் ஒருவேசியானவள் தருமமென்பதை அறியாத
வளாய் ஈவிரக்கம் பசியாதாபமில்லாமல் பாவமே செய்பவளாயிருந்
தாள், பிறருடைமையைப்பார்த்துப் பேராசைப்படுகிறவள் ஊருடைமை
க்கு உலைவைத்திருப்பவள் பேசுவதெல்லாம் பொய் நிரம்பிய பொக்கி
ஷம். வஞ்சனை வளரும் பூமி. மாறுபாடில்லாவல்லவர்களையு மயக்கிவிக்
குங்காமி. மோசத்தில் கட்குடியில் மிகுத்தவளாய் வாழ்ந்து வருகிற
நாளையில் ஒருநாள் சகலநூலுங் கற்றறிந்த முதன்மையான பெரிய
வர் அந்தத் தாசிவீட்டுக்கு வந்தார். அவள் அவரைக் கண்டவுடன்
எதிர்சென்று வணங்கி தோத்திரஞ்சொல்லித் துதித்து அவர் விரும்
பிக்கேட்ட பொருளெல்லாங் கொடுத்து உபசரித்து அனுப்பிவிட்டு
பின்னுஞ் சில நாட் பூமியிலிருந்து தன்னைத்தபூவிமருவிய நாயகர்க
ளைத்தனிக்கவிட்டுகாலாந்திரத்திற் கண்மூடி இறந்தாள். இவளை தூத
ர்கள் வந்து எமலோகத்திற் கொண்டுபோய் விட்டார்கள். இவள்பேரி
லிருக்கிற பேரேடெல்லாம பாபமே நிறைந்திருக்கின்றது புண்ணியம்
வராமல் பூச்சியமா இருக்க, ஒருநாள் கற்றுணர்ந்த பெரியவரைப் பூசி
த்த புண்ணியபலன் கணக்கிலகப்பட்டது, அதைக்கொண்டு பற்றுவ
ரவு சரிப்படுத்தி பார்க்கும்பொழுது ஒருநாள் செய்திருந்த புண்ணிய
மானது அவள் அதற்குமுன்னால் செய்தபாபங்களெல்லாம் முழுகி இ
ன்னும் அவளுக்குக் கொடுக்கவேண்டிய அதிகபாக்கிநின்ற புண்ணிய
பலத்திற்காகப் பூலோகத்தில் உயர்ந்த பிராமண குலத்தில் நற்குணப்
பெண்ணாய்ப் பிறப்பித்துசகலவித சுகபோசனபோக வைபவ சந்தோ
ஷ சம்பிரமங்களும் அனுபவிக்கப் பண்ணினார், அதனாலவள் பெருங்
கற்பினையுடையவளாய்சகலதேவதைகளுங் கொண்டாடும்படிக்குவே
தமந்திரங்களெல்லாங் கேட்டு தம்பதி சமேதராய் தருமகருமங்களி
யாவு நடத்தி, அதிதிபூசைபுரிந்து அழியாப்பதவியடைந்தாள். இதைப்
பார்க்கிலுந் திர்ஷ்டாந்தம் வேறுவேணுமோ வென்று நாரதர்சொல்ல,
அதைக்கேட்டு ரிஷிகள் ஐயா சுவாமி தன்னைவிட்டு நீங்காத தரித்திர
த்தை நீக்கிக்கொள்வதற்கு உபாயமுண்டானாற் சொல்லுமென்று
துதித்துக் கேட்கவும் நாரதமகாரிஷி சொல்லலுற்றனர்.

145. தன்னைவிட்டு நீங்காத தரித்திரத்தை நீக்கிக்கொள்ளுவதற்கு உபாயமுண்டா வென்பதற்கு உத்தரம்.

கேளும் ரிஷிகளே? உதயமாகு முன்னே எழுந்து காலக்கட
னை முடித்துக்கொண்டு மஹா கணபதியை நினைத்து துதித்து வண
ங்கி, பால்போன்ற நிறம்பெற்ற சரஸ்வதியைப்பணிந்து நற்குண
நற்செய்கை நன்நீதி முறைமைகளைச்சிந்தித்து லட்சுமிமந்திரஞ் செ
பித்துப் பிரம்மத்தையும் விஷ்ணுவையும்போற்றி வேல்போன்ற கண்
களை யுடைய பார்வதி தேவியையும் பரமேஸ்வரனையும் பிரதக்ஷண
நமஸ்காரம்பண்ணி திக்குநோக்கித் தெண்டனிட்டு சரவணத்திலுதித்
தருளிய சூரசங்காரக் கடவுளான சண்முகக் கடவுளை வள்ளி தெய்வ
யானை மணாளனைவாழ்த்திப்போற்றி தேவேந்திரன் முதலாகிய திக்கு
ப்பாலகரையும் கண்காட்சியாய்க்கண்ட சூரிய சந்திரரையும் மற்றக்
கிரகங்களையும்சப்தநதியையும் சப்தசமுத்திரத்தையும் காமதேனுவை
யும் சப்தரிஷிகளையும் வாலகில்லியர்களையும் வேதவியாசர் வான்மீ
கர் பாரத்வாசர் நாரதர் அகஸ்தியர் கௌதமர் காசிபர் கண்ணுவர் இ
ன்னமுள்ள மஹாரிஷிகளையும் போற்றி தருமதேவதை,சத்தியதேவ
தை,தனக்கடவுள்பகல்,இரா,இராசி,நட்சத்திரங்கள், திதிகரணம்,யோ
கம்,பட்சம்,ரிதுக்கள்,அயனம்,மாதம்,வருடம்,வாரம், கடிகை, பதினா
ன்குலோகம்,சப்ததீவுகள்,பிலத்துவாரம்,வேதப்பிரமணுள்நீதியுடைய
சக்கிரவர்த்தி,அருந்ததி,முதலிய ரிஷிபத்தினிகள், சப்தகன்னிகைகள்
பஞ்சகன்னிகைகள்,இவர்களையெல்லாந் தினமுநினைத்து குற்றமில்
லாமற் குறித்து வணங்கினால் தேயசும் ஆயுசும் செல்வமுங்கல்வியும்
புத்திரபாக்கியமும் மித்திரபோக்கியமும் மனைவாழ்க்கையும் வாகன
போகமுமுண்டாகி,வறுமையறும் இவைகளுக்கு மனமேசாட்சி மன
வுறுதிவேண்டும் மேலும் ஸ்ரீமந்நாராயணனை, வாசுதேவனை, பரந்
தாமனை, கேசவனை, வாசவனை, விமலனை, அமலனை, கமலனைத்தந்த
திருநாபியனை,விண்டுவை,கொண்டலை துளபமாலையணிந்த,அழகனை,
குழகனை, முண்டாகாசனை கேள்வனை, நராரியை, முராரியை, இரா
வண கண்டகனை, கோதண்டநாதனை, நிமிஷமுந்துதித்துச் சிந்திக்க
வேணும். கோவிந்தன், கோபாலன், கோபிகாநாதன், அஷ்டலட்சுமி
வாசன், ஆதிமத்தியாந்த ரகிதன் தாமோதரன், ஜனார்த்தனன் காகு
த்தன், அச்சுதன், மால் இவ்விதமான, விஷ்ணுவார்ச்சனை சிவார்ச்சனை

நாமங்களை சகஸ்திரார்ச்சனை முதலாகிய தோத்திரங்களையும் செய்தால் இப்பிறப்பும் ஒப்பில்லாதிருந்து அப்பிறப்பும் பரமபதமடையலாம் அக்ஞான கேவலத்தினின்று நீங்கிவிக்ஞானமேன்பாடடைந்து சனனமரணதுக்கசாகரக் கரையேறி பிரகாசம்பெற்ற சூரியன்போற்றுலங்கிவாழ்வார்களென்றுசொல்ல ரிஷிகூட்டங்கள் எழுந்து நின்று மகிழ்ந்து புகழ்ந்துபணிந்து சுவாமிபூசையைபெற்றுக்கொள்வதற்கும் வணங்குதற்கும் அன்னங்கொடுப்பதற்கும் உபசாரத்திற்கும் உரிய பெரியவர்க ளாரென்று வினவ நாரதர்எல்லாவற்றிற்கும் உரியவர்கள்; வேதவேதியர் தாமென்று அவர்கள் நிலையைப்பேசத் தொடங்கினார்.

146. உபசாரம்செய்வதற்கும் ஏற்பதற்கும் உரிய பெரியவர்கள் யாறென்கிற கேழ்விக்கு உத்தரம்.

கேளும்ரிஷிகளே வேதங்களும், இயாகங்களும்,ஒழுக்கமும், ஆசாரமும்,மேன்பாடும்,பொறுமையுந் தவமும்,செபமும்,ஆச்சிரம தருமமும், அருளும்,சத்தியமும், அவுபாசமும், சந்தியாவந்தனமும்,சுவாமி தரிசனமும், பிராமணருடைய சொத்தென்று சுருதி முறையிட்டிருக்கின்றது. அன்றியும் தானமேற்றல் ஈதல்முதலிய வெல்லாம்மற்றயாருக்கு அதிகாரமில்லை. பிறப்பொழுக்கங் குன்றாப் பெரியவர்கள் அவர்கள் பிசகிப் போவார்களாகில் பூமிதேவி பொறுமையுட னிராள். தருமதேவதை தளர்ச்சி யடையும் லட்சுமி விலங்கிப்போவாள் மூத்தவள் உலாவித் திரிவாள், ஆகையால் கிரமமுடைய கியானவல்லவரான பிராமணர்களையே பூசிக்கவேண்டும், ஏதாகிலும் கிஞ்சித்துக்கொடுக்கவேண்டும் அவர்கள் பெறுகிறதற்கு யோக்கியாளென்றுரைத்து பின்னும் நான்குவேதமும் நன்றாயோதியுணர்ந்த விருத்தப்பிராமணனுக்கு அன்னங்கொடுத்தால், அந்தப்பெரும்பயனைச் சொல்லவல்லவரில்லை. ஒருபிராமணனுக் கன்னமளித்த மகத்துவப்பலன் இப்படியானால் நூறு ஆயிரம் பதினாயிரம் லட்சம் பிராமணபோசனம் சந்தர்ப்பணை பண்ணிய புண்ணிய வான்களுக்கு என்னபலன் பேசுவது எந்தக்காரியக் கிரியைகளையும் பிராமணரை முன்னிட்டுப் பூசித்து நடத்தி முடிக்கவேணும் அதினும் மானம், குலம், கல்வி, வண்மை அறிவுடைமை,தானம்,தவம்,முயற்சி, தாளாண்மை இனியசொல் சத்தியம்

தருமம் இவற்றுள் ஒன்றுலொன்று குறைவில்லாதோங்கி நன்மனத்துடன் செய்கின்றவர்களுக்கு நீங்காத தெய்வலோகத்தை யடைந்து சுகானந்தத்தை பொருந்தியிருப்பார்கள் அதைக்கேட்டரிஷிகள் இருகரத்தையும் சிரத்திலேற்றி நமஸ்கரித்து,பிதாமகனைப்பணிந்து ஐயனே! நல்வழி நூலைக்கேட்டுச்சிந்தித்து அவ்வழியில்நில்லாமல்,அதற்கு மாறுபடப்பேசி,சாஸ்திரங்களை,நிந்தித்து கலகம்விளைத்து பகைத்து,தன் மனது போனபடி திரிந்து, உலகம், இரண்டுவகையாக, கடவுள் இரண்டென்று பிரித்துணரும்படி கலகம்விளைத்து பகைத்து, சாஸ்திரங்களைப்பார்த்தும், கோத்திர, சூத்திரங்களை மறந்து நிந்திப்பானேனென்று கேட்க நாரதமுனிவர் சொல்லத்தொடங்கினார்.

147. சாஸ்திரங்களை நிந்தித்துகடவுள் இரண்டென்று கலகம் விளைவித்து பகைக்கும்காரணம் என்ன வென்கிற கேள்விக்கு உத்தரம்.

கேளும் ரிஷிகளே கடவுள் ஒன்றாயிருந்து சிருஷ்டி, திதி, சம்மாரம், திரோபவம், அனுக்கிரகமுதலிய யாவும் அந்தந்த அவசரங்களில் அந்தந்தத்தொழிலாகநின்று அனுக்கிரகம்செய்யும் ஆண்டவனை அகங்காரத்திற்கு காரணமானதாமஸகுணமுடையார்,சாஸ்திரவிரோதியும், சமையப்பகை வருமாவர்.இவர்முன்ஜென்மத்தில் முன்பின் அறியாமல் தெய்வநிந்தை செய்து அடியார்களை தூஷித்து தேவாராதனை செய்தவர்களைத்தடுத்து இன்சொல்எவரிடத்திலும்சொல்லாமல்பரிகாரஞ் செய்து தர்க்கம் விளைத்து நிந்தையே உடம்பாயெடுத்து பாபிகளையே சிநேகமாயடுத்து ஞானிகள் நேசம்விடுத்து தாய்தந்தையரை வஞ்சித்துமேலுலகமொன்றுண்டென்றுகிஞ்சித்தேனு நினையாமல்சிலநன்மையினால்மானிடயோனியிலவதரித்து அவர்கள்சாஸ்திரங்களை நிந்தித்து கடவுள் இரண்டென்று கலகம் விளைத்து ஒருவருக்கொருவர் பகையுண்டாக்குவார். விந்துதிக்கும் போதே நொந்ததாய் தந்தைக்கு வந்தவர்கள். சாத்மீக குணமுடையவர்கள் மாத்திரம் புராணசார சாஸ்திரங்களை நம்பி, சிரவணமனன நிருத்தியாசனஞ் செய்வார்கள் அவர்களுக்குப் பேதம் தோற்றாது அபேதகுண முடையவர்களாம். அவர்களை அபேதக் கடவுளரும் அபேக்ஷித்து அனுக்கிரம பண்ணுவார். அப்படி வஸ்துபேதமற்றவர்களுக்கு, மரணவேதை வாராது,மோக்ஷ

காக்ஷிதாக்ஷியில்லாமல்வரும்,அப்படிக்கில்லாமல்கடவுள் இரண்டென்று சாஸ்திரங்களைபோதித்து,வாதாடிக்கெட்டவர்கள் மமகாங்காரத்தால், பூலோகமெய்க்கும், புகழுக்கும் பொருளுக்கும் பாடுபட்டு பிறவிக்கிடங்தேடி,பழியும்பாவமும் பூண்டு,புலன்,பொறி,குன்றி பிரமத்தை மறந்து பீடையும், இகக்ஷியுமடைந்து பிரார்த்தைக்கப்படுவார்கள். அதெப்படி எனனில் பொருளுடையோர் பிறருக்குதெரியாமல் காப்பது எப்படியோ அப்படிக்கு அருளுடையவர்கள் மௌனத்திலிருந்து, சாஸ்திரங்களை ஆராய்ந்து தேறிவாய்விட்டு மாற்றமுறையாமல் மாறாத மோக்ஷத்தை தாக்ஷி இல்லாமற் பெறுவார்கள். மாற்றமுடையவர்கள் தாங்கள் நடக்கும் வழியில் முட்களைஅடைத்து துன்பத்துடன் திகைத்து நிற்பவர்கள் போலாம். அவ்விருவர்களிலும் லோகமெச்சப்பேசுகிறவர்களென்றும், உண்மையாய் பகருவர்களென்றும் தெரிந்துக் கொள்ளலாமென்று, நாரதர் சொல்ல, முனீஸ்வரர்கள் யாவரும் மகிழ்ந்து துதித்துகொண்டாடி போற்றினார்கள், உடனே நாரதமுனிவர் ஆகாயமார்க்கமாய் எழுந்தருளினார்.

148. ஸ்ரீகிருஷ்ணபகவான் திருவாய் மலர்ந்தருளிய பகவற்கீதை.

பூபாரத்தை ஒழிக்கும் காரணமாய் பூர்வம் ஆக்கியாபித்தபடி துவாபரயுகமுடிவில் பாண்டவர்களை ஆதரிக்கும் நிமித்தம் ஸ்ரீகிருஷ்ணமூர்த்தியானவர் அவதரித்து பாரதயுத்தத்தில் தேரை யலங்கரித்து அர்ச்சுனனை ஆதரிக்கும் பொருட்டும் தான் பார்த்தனுக்கு சாரதியாயமைந்து மூர்த்தண்டத்துடன் வீராவேஷத்துடன் அர்சுனனை இரதத்திலேற்றிக்கொண்டு, இருதிறசேனைகளையும் பார்த்துக் கொண்டு வரும்போது,வீஷ்மாச்சாரியர் துரோணாச்சாரியர், கிருபாசசாரியர், அசுவத்தாமர், துரியோதனுதியராகிய சகோதரர்கள் புத்திரமித்திரான் படைத்துணைகூடி வந்தபார்த்திவாகள்நம்மை நம்பிப் பிழைக்கும்படியாயிருக்கிறவீரர்கள்ஏழைகளாகியசேவகாரர்கள் இவர்களெல்லாரையுங் கண்டு ஐயோ இவர்களைக்கொன்று இயமலோகமனுப்பிவிட்டு அப்பால்பிணந்தின்றபெரும் பூச்சிபோல் இந்தப் பூமியையாண்டு கடைசியில் பாண்டவர் மாண்டுபோனார்களென்று வசைமொழிபெறுவதிலும் இச்சை நீங்கி லச்சைவிடுத்துக் பிச்சையெடுத்துண்பது பெருவாழ்வென்று நாங்களைவரும் பிழைக்கவேண்டி அளவிறந்த பேர்களையுங்

கொன்று அரசாக்ஷிசெய்து அன்னமும் பாலுமுண்டுசொண்வயிறுவளர்க்குந்தன்மை எத்தன்மை யென்னில், பெரியோர்முதலிய உரியோருடைய இரத்தத்திற் குழைத்த அன்னங்களுண்டு வாழ்நாள் வளர்க்கு மகாபாவிகளுள் எங்களைவிட வேறொருவருண்டோ? ஈசனே, இப்படியே வளர்த்தபோதிலும் எத்தனை நாளைக்கிருந்துவாழப் போகிறோம், பனிப்பெருக்கில் கப்பலைநடத்தும் பான்மைபோலொத்த தேகத்தை நம்பி நீண்டபுகழினையுடைய துரோணாச்சாரியர் வீஷ்டுமாச்சாரியரென்னும் ஆண்டவர்களெல்லாரு மாண்டுபோகச்செய்தார்கள் பாண்டவர்களென்னும் பழிச்சொல்லைப்பெற்று, பாபிகளாவதிலும் பழயபடிக்குக் காடே நாடாகவும் அவ்விடத்திலிருந்து வாடாமல் வதங்காமற் திரும்பாமல் காலங்கழிக்கு மிடமே கடவுள் பொருத்திய மோக்ஷவீடாகக்கருதிப்போய் விடுவதே உத்தமம். காரியா காரியந் தெரியாமல் காலநுட்ப முணராமல் முன்பின் எண்ணிப்பாராமல் புத்திஇல்லாமல யுத்தஞ்செய்ய வந்தோமென்று மனநொந்து மிகவுநைந்து மனநடுங்க மதிமயங்க மயிர்க்கூச்செறிய வியர்வைவழிய கரங்களுங் கால்களுந் தோள்களும்வாடக் கைவில்லுஞ் சோரக் கண்ணீர்ததும்ப தேரின்மீது மூர்ச்சையாகச்சோர்ந்து வீழ்ந்து தியங்கி மயங்கிய திடகாத்திரதேகதீர வீரப்பிரதாபசூர சிலைமாரனாகிய விஜயனைக் ஸ்ரீகிருஷ்ணபகவான் திருக்கண்களாற்பார்த்து நகைத்து எப்படிப்பட்டவர்களாலும் அறியக்கூடாத நமதுமாயாவிசித்திரம் இன்னதென்று இந்த அர்ச்சுனன் அறியத்தக்கதோ சற்றேனும் அறியமாட்டான். ஆகையால்பேச்சில்லாமல் மூச்சொடுங்கி போயினன் இவனை இப்போதே தேற்றவேணுமென்று திருவுளத்தில் நினைத்து தமதுகரங்களினால் அர்ச்சுனனை வாரியெடுத்துமார்போடணைத்து ஆலவட்டமுதலியஉபசாரங்களினால் மூர்ச்சைதெளிவித்து, அர்ச்சுனாவென்றழைத்தபோது, அந்தக்கிருஷ்ணபகவான் வாக்கியமாகிய அமுதம் விஜயன் காதிற் புகுந்த உடனே விடாய்நீங்கி விழிப்பவரைப்போற் கண்விழித்துப்பார்த்து நாவிற்சலமூறி நல்லுணர்வுடனே தேறி நாரணனைத்தொழுது அவரே காரணமென்றழுது சொல்லத்தொடங்கினான்.

ஓ! ஆபத்பந்துவாகிய ஐயனே, என் கண்களிருண்டது கருத்தழிவுற்றது கால் கை நடுங்குகின்றதி கண்ணீர் பெருகுகின்றது இரக்கமுந்தயையும் இப்போது தோன்றுகிறது என்மனங் குன்றுகிறது என்னை இவ்விடத்தில் நிறுத்திவைக்காமற்பாசறைக்குக்கொண்டுபோம் பரமனேயென்றுபரிதாபமாய்ப்பற்குனன்சொல்ல அந்தவார்த்தையை வாசுதேவன்கேட்டு புன்னகையுடையவராய் என்ன அர்ச்சுனா உன

க்கிப்போது கண்டிருக்குந்திகிலானது தேகத்தோடொத்த வியா
தியோ அல்லது தேசத்தோடொத்த பாசபந்த உபாதியோ இதென்
ன ஆச்சரியம் காண்டீபனே ! அல்லது இன்னமும்வேறொன்று நினைக்
கின்றேன் அதென்னவென்றால், அங்கதேசாதிபதியாகிய கர்ணன் உன்
தலையை வாங்கிவிடுவேனென்று அடிநாளையிற் சபதம்பண்ணி இருப்ப
தல்லாமலும் உனக்குப்பகையாகிய அச்சுவசேனனென்னும் பெரும்
பாம்பை ஆதரித்து வளர்த்துக்கொண்டு வந்திருக்கின்றானே அந்தக்
கர்ணனையும் அவனிடத்திலிருக்கின்ற ஆலகால விஷத்தையுடைய
நாகாஸ்திரத்தையுங்கண்டு, ஐயோ நம்மைக்கொல்லுமேயென்று பி
ராணபீதிகொண்டு பயப்பட்டாயோ பார்த்தனே; மேலும் அறுபதி
னாயிரம் வெண்கல ரதக்காரரென்று வந்திருக்கின்ற சம்சப்தகா ளெ
ன்னும் அரக்கர்கள் மிகுந்தபலசாலிகளும் தவமுதலியதிற் சிறந்த
யோகசாலிகளுமாகிய பேர்களைக்கண்டு மூர்ச்சைபோனையோ அதன்
றியும் சகஸ்திரவாகுவென்று சொல்லும்படியாகிய தானவர்சிரேஷ்
டன் சகல நலமும் சர்வபலமும் தனக்கெதிரற்ற வரமும்பெற்ற அட
லாயிபாருவைக்கண்டு அடங்கியொடுங்கினையோ அர்ச்சுனா! அன்
றியும் சந்திரஜடாமண்டலதாரியாகிய சதாசிவத்தியான மோனமந்திர
த்தை அநுசரித்துத் தவமிழைத்து சிவபெருமானிடத்தில் வாளாயு
தமும் ஜெயம்பெற வரமும்பெற்று வந்திருக்கின்ற சிந்துதேசாதிபதி
யாகிய செயித்திரதனைக்கண்டு சண்டைசெய்யப் பயங்கொண்டு அண்
டையிலிருக்கிற நான் உறுதிசொல்லி யுத்தம் பண்ணச் சொல்லுவே
னென்று நடுங்கிநாவரண்டு நாபிவரண்டு மூர்ச்சையாய் விழுந்தாயோ?
அல்லது தாஷ்டீகராகிய வீஷ்மாசாரியர் சேனாபதித்துவத்திற்கு வ
ந்து நிற்கின்றாரே இவனை நாம் எந்தக்காலத்தில் வெல்லுவதென்றி
ளைத்து எங்ஙனேயோவென்று ஸ்ரீகிருஷ்ணமூர்த்தி இஷ்டமுடையவ
ராய்க் கேட்க, பாராளவேணுமென்னு மிஷ்டமில்லாமற் பரிதாபத்
துடன் மனவெறுப்பு கொண்டிருக்கும் விஜயனுக்குக் கோபம்பிற
ந்து கண்கள்சிவந்து மாலைகள்கருகி சருகாகவும் வியர்த்து பெருமூச்
செறிந்து சற்று நிதானித்துக் கிருஷ்ணமூர்த்தியைப் பார்த்து என்
குலதெய்வமே! தேவரீரென்னசொன்னீர் என்னசொன்னீர்பளாவெகு
நேர்த்தியென்று யாவருந்திடுக்கிட நகைத்து ஐயனே என்னுடைய
அருமை பெருமையாவுந்தெரிந்த பரிசுத்தனே தேவரீருடைய சித்
தம் இப்படிபேசுவதற்கு இஷ்டங்கொண்டிருக்குமாகில் நான்செய்
யலாவதென்ன? ஆகிலும் இறந்துபோவோ மென்னுங்கவலை எனக்
கெள்ளளவேனுமில்லை. யானைக்குச்சிங்க மிளைக்குமாகில் ஆடரவுக்குக்

கருடனஞ்சுமாகில் ஆட்டைக்கண்டுபெரும்புலிஅலறுமாகில் ஆய்ந்து நன்னூலுணர்ந்த மேலோர் அசத்திய வாக்கியக் குடியருக்கு அஞ்சுவாராகில் அழியாப்பொருள்பெற்ற ஞானிகள் அழிந்துபோகும் அற்பமாகிய பொருளைக்கண்டு கண்டெரியாமல் அலையுங்கடையருக்கு அஞ்சுவார்களாகில் நானுமிந்தச் சத்துருக்களைக்கண்டு பயப்படவேண்டியதாயிருக்கும். தேவாதி தேவனாகிய தேவனே உத்தமகுல க்ஷத்திரியர்களுக்கு ஞானம் தவம் விரதம் கருமமுதலியவைகளைச் செய்து காலம்போக்குவது உத்தமம். அப்படிக்கில்லாமல் வெகுளிமேற் கொண்டு யுத்தந் தொடுத்து பகைவரைவென்று பாராள நினைப்பது அஞ்ஞானமென்றறிந்தேன் ஐயனே! அதுநிற்க இந்தக்கர்மபூமியிற்றோன்றிய தெல்லாம் மாண்டுபோம்பொருளே யல்லதுவேறில்லை, மேலும்தோல்துருத்திபோலும் சூத்திரக்கயிற்றினாலாடும்பொம்மைபோலும் விளங்குகின்றஇத்தேகம் எத்தனை நாளைக்கிருந்தாலும் இறப்பதேயல்லது இறவாமலிருக்குஞ் சிறப்பொன்றில்லையே ஈசனே, இன்றைய தினம் நான் இந்த இரணக்களத்திற்கு வரவும்வெகு ஜனங்களைப்பார்க்கவும் இவ்வளவு பேருமடிந்த அன்றைக்கல்லவோ நமக்குச் செயம் வருமென்றும் இவர்களைக்கொல்லாவிட்டால் நமக்கு அபஜெயம் வருமென்றும் நாமேகொல்லுவோ மென்பதற்குச் சாக்ஷியென்னவென்றும் இவர்களெல்லாரையு மடித்து கரத்திற் செங்கோற்பிடித்துமண்ணையாளலாமென்று நம்பிவந்த நாமிறந்துபோனால் என்னலாபமென்றும்கானலை நீரென்றுகருதி அலையுந்தன்மை போலாகுமேயென்றும் நாம்வெற்றிபெற் றிருந்தாலும் வீரம்விட்டிறந்தாலும் பாருள்ளவரைக்கும் பழியும் பாவமும் வளருமே யென்றும் இப்படிப்பட்ட கருமவினைக்கிடாகாமல் தருமவினையை அநுசரித்தும் பெருமைதங்கிய வனத்திற்சென்று அருமையாகிய தவத்தினின்று காலங்கழிப்பதேநற்காரியமென்றுங் கருதினேன் உடனே இரக்கமும் அதைரியமும் உறக்கமும் மனமடிவுமேலிட்டு வருந்த சோர்ந்து விழுந்து விட்டேன், மாதவனே, தேவரீருடைய சித்தமெப்படியோ நானறியேனென்று அர்ச்சுனன் அழுது தேம்பிச்சொல்ல, அந்தவார்த்தைகளை யெல்லாம் அரி வாசுதேவன் கேட்டு அகமகிழ்ந்து தமதுதிருக்கரத்தால் அர்ச்சுனனைச் சேர்த்துத்தழுவி எடுத்து அணைத்து ஆதரித்துத்தேற்றி சிந்தைதெளியச்செய்து, நீகொண்டசந்தேகம் நீங்கும்படியாய்ச் சொல்லுகிறேன் பயமகற்றி பராமுக மில்லாமற்பக்ஷமாய்க்கேளும்பார்த்தனே யென்று பரந்தாமன் சொல்லத் தொடங்கினார்.

பாரமார்த்தியனாகிய பற்குனனேகேளும், மித்துருவென்றும்சத்துருவென்றும் சுஜனங்களென்றும் வெகுஜனங்களென்றும் பாட்டனென்றும் ஆசாரியனென்றும் சிஷனென்றும் தமையன் தம்பிமார்களென்றும்புத்திரவர்க்கமென்றும்மைத்துனனென்றும்மாமனென்றும் சாகத்தக்கபேரென்றும் கொல்லத் தக்கபேரென்று ஊழ்வினைப் பயனைத்தள்ளிப்போகத்தக்கபேரென்றும் உன் மனத்துட் கொள்ளத்தக்கதொன்றுமில்லை; வீணாகிய ஆசாபாசங்களினால் இவர்களெல்லாரையும் எப்படிகொல்லத் துணிவோமென்றும் கொன்றாற்பாவமும்பழியும்நமக்குச்சுமையாகுமேயென்றும் நீயேன்மயங்குகிறாய்மன்னனே? சுமைதாங்கி ஆயந்தீர்க்கப் போகிறதில்லை. சுவரிலெழுதிய சுந்தரச்சித்திரங் காக்கப்போகிறதில்லை அப்படியே உன்னால் சில தாகிறதும் உன்னாற்சிலர் சாகிறதும் நீசிலரைக்கொல்லுகிறதும் நீசிலரை வெல்லுகிறதுமா யிருக்குமென்று யோசிப்பையாகில் மற்றக் காரியங்களெல்லாம் உன்னால் நடத்திக்கொள்ளலா மல்லவா, அர்ச்சுனா அப்படியெல்லாம் நடத்தவல்லவனாக இருப்பாயாகில் முன்னால் நடந்தகாரியங்களை யோசித்துப்பார்க்க வேண்டிய தல்லவா? இப்போதாகிலும் முனக்குத் தெரியவில்லையா, அப்பனே! ஒருகாரியத்தை முடிப்பவனார்? முடியத்தக்கது யாது? கொல்லு கிறவனார்? கொல்லப்படுவது யாது? எது சாகத்தக்கது? எது சாகாமற் போகத்தக்கது? எவர்கள் உறவினர்? எவர்கள் பகைவர்? இஷ்டரெவர்கள்? துஷ்டரெவர்கள்? சௌக்கியமெது? அசௌக்கியமெது? நன்மையெது தீமையெது? அர்ச்சுனா யான் சொல்லுவதைக் குறிப்பாகக் கேட்கக்கடவை; அஃதாவது இவ்வுலகத்தில் நாமரூபங்களாகப் பேசப்படும் பொருள்களெதுவோ அவைகளுக் கெல்லாம், பழமையா யிருக்கும்படியாகிய ஆதியை எங்கும் பரிபூரணமா இருப்பதை, ஒப்பில்லாத் தன்மையுடையதை நித்தியதத்துவத்தை, நின்மலத்தை, நிர்விஷயத்தை, நிலைபெற் றிருக்கும் பேறறை ஐம்புலன்களாலும் அறியப்படாத நுட்பமாகிய அறிவுக்கறிவைத் தனக்குத்தானா யிருக்குந் தத்துவசொரூபத்தை இன்னதென்றுணராமற் சண்டைசெய் கின்றதனால் இறந்துபோமென்று நினைத்து வருந்துகின்றனை அர்ச்சுனா எது இறக்கத்தக்கதென்று, இஷ்டராகிய ஸ்ரீகிருஷ்ணர்கேட்க, அர்ச்சுனன் சொல்லு கின்றான்; சுவாமி தேவரீர்சொல்லி வந்த வஸ்துவானது எப்போதொருபெயரைப்பெற்றதோ அப்போதே பலவித துன்பங்களினாலும் அதற்குக்கேடுண்டல்லவா என்று கிரீடிகேட்க? கண்ணன்சொல்லுகின்றார், கீர்த்திகொண்டபார்த்தனே நீர்கேட்ட கேள்விஞாயமே ஆகிலும், நான் சொல்

லப்போகிறபொருள் எப்படிப்பட்டதென்றால் அதுயுகாந்தகாலாக்கினியினாலும் வேகாது; பிரசண்டமாருதத்தாலுங் கலங்காது, எழுகடலும் பொங்கிவழியுஞ் சலப்பிரளயத்தாலு மிறக்காது; ஆதிசேடனுடையபணாமுடியி லிடிக்கும் பேரிடியினாலும் உடைபடாது; ஒருபொருளையும்விட்டு நீங்காது; உருவென்பதுவும் அருவென்பதுவும் ஒளியென்பதுவும் வெளியென்பதுவும் உளதென்பதுவும் இலதென்பதும் அற்று, போறிவின்பெயரைத்தாங்கி எங்குந் தன்மயமாய் எவற்றிலுந் தானாயிருக்கும்படியாகிய ஆன்மாவென்னும் அழியாதவஸ்துவை நீகைக்கொண்ட அல்பஆயுதங்களால் மடியச் செய்யுந் தன்மை உன்னிடத்திலுண்டோ? வாசவன் மகனேயென்று கேசவன்சொல்ல, அந்த வார்த்தையைக்கேட்டு விஜயன்சொல்லுகின்றான். ஓ! சுவாமி, தேவரீர் திருவாய்மலர்ந்தருளிய ஜீவான்மாவென்னும் வஸ்துவானது அழிவில்லாதது என்றால் உயிர்போய்விட்டதென்று உலகத்தார் சொல்லுகின்றார்களே? அந்த உயிர்நீங்கிப்போவானேன் அழிவில்லாத ஆன்மாவைத்தாங்கிய உடலுக்கு அழிவுவருவானேன்; இந்தஸ்தூலதேகத்தைவிட்டு நீங்கியஉயிர் எவ்விடஞ்சேரும்? அதை அடியேனுக்குக் கட்டளையிடுமென்று காண்டீபன்கேட்க, கண்ணன் சொல்லுகின்றார் கேளும் அர்ச்சுனா, இவ்வுலகிலுற்ற மானிடர்கள் தேகாபிமான அலங்காரங்களுக்காக உடுத்திக்கொள்ளும் வஸ்திரங்கள் அழுக் கடைந்து கந்தையாய்ப் போகுமாகில் பற்பல தினுசாகிய புதுவஸ்திரத்தைத் தரித்துப் போர்த்துக் கொள்ளுவதைப்போல் இந்தஸ்தூலதேகமானது வியாதிமுதலிய போகாதிகளால் நொந்து நீங்கி விட்டால் புதிதாகிய இன்னொரு தேகத்திற் புகுந்துவிளையாடிக் கொண்டிருந்து அந்தத்தேகம் அகந்தையினாற் கந்தையானால் இன்னொரு தேகத்தினுழைந்து கூத்தாடிக்கொண்டிருக்கும் அப்பனே! யாவருஞ் சிந்திக்கும்படியாகிய உலகநிறைந்த உண்மைப்பொருளுக்கு ஒருக்காலும் அழிவில்லை, உடலுக்குமாத்திரம் அழிவுண்டென்று மாதவனுரைக்க அர்ச்சுனன்கேட்டு மனமகிழ்ந்து நாதனே; அகப்பற்றும் புறப்பற்றும், நல்வினை தீவினையும், ஷட்கர்மமும் உயிர்க்குரியதா? அல்லது உடற்குரியதா? வென்று தனஞ்செயன் கேட்கப் பரந்தாமன் சொல்லுகின்றார். அப்பனே நீ என்பதுவும் நானென்பதுவும் உன்னுடையதென்பதும் என்னுடையதென்பதும் உன்னாலென்பதும் என்னாலென்பதும் இரண்டு வினையும் ஆறுவிதக்கருமமும் உடலுக்கேயன்றி உயிருக்கொன்றுமில்லை யென்றுரைத்து, மேலுஞ் சொல்லுகின்றார் காண்டீபனேகேளும், இவ்வுலகத்திற் பிள்ளையை ஆர்பெற்

ரூர்கள் அந்தபிள்ளைக்குத் தனுகரண புவனபோகாதி முதலிய செய்ல்கள் எவரால் நேரிட்டதீ? எவர்பெற்றுக்கொண்டார்கள்? எவனொன்றும் அவர்பிரிந்தால் அவர் எங்கவிடத்திற் போய்ப்பொருந்தியிருப்பார். இதுகளினுடைய காரியங்கள் முன்னுந் தெரியார்; இனிபின் நடக்கப்போகிற செயலுந் தெளியார்; ஆதியும் அந்தமும் தெரியாமல் மத்தியில் தாமுயன்ற முயற்சியின்படி தானே தகப்பன் தாயென்றும் தனக்கவன் பிள்ளையென்றும் நினைத்துக்கொண்டே இருந்தவர்கள், தாமிறந்துபோனால் இந்தப்பூமியில்விழுந்து துக்கத்தை அனுபவித்து வருந்துவோர்கள்யார் எங்களுக்குச் சொந்தமென்று ஏன் மயங்கவேண்டும்? ஒருவருக்கு மொன்றுமில்லை. அர்ச்சுனு! பிராரத்வ வினைப்போகத்துக் கிடாய்ப் பிறக்கும்படியானது உடல் அந்த உடலிற்கடாகாசம் போற்றேன்றிக் கொண்டிருக்கின்றது உயிர், அதாவது ஆகாயத்திலுதித்த ஒருசூரியன் தண்ணீர்க் குடங்கள்தோறும் பல சூரியனுகக் காணப்படுமாப்போல் சொரூபமாகிய ஜீவான்மா வொன்று பல தேகங்டோறும் பிரதிபலித்துக்கொண்டுலாவுகின்றது என்று உத்தமன்சொல்ல வெற்றிபெற்ற விஜயனகேட்டு சுவாமி இயாவத்விஷயமும் உடலுக்கே யென்றால் ஆத்மாவுக்குச் சம்பந்த மொன்றுமில்லையா என்று அர்ச்சுனன் கேட்க ஆத்மாவுக்குச் சம்பந்தமுண்டு; அதெப்படி யென்றால், தேகவாசனை விஷயத்தால் கருமங்களெல்லாந் தன்னுடையதென்று பார்ப்பதனால் விதித்திருக்கின்ற இருவினையின் பிரயோசனத்தைத் தானும் அனுபவிக்கும், அதற்காவே பெரியோர்கள் பேசியிருக்கும் வாசக மென்னவென்றால், எதுவுந் தனக்குச் சம்பந்தமில்லாமல் எல்லாம் அவன் செயலென்றுரைத்து இன்னொருவ னிருக்கிறுனென்று தள்ளிவிட்டால் யாவத்துமென்னைச்சேரும் விவேகத்திற் சிறந்த விஜயனே!மகாமாயைத்தொலைத்த மகானுக்கள் அறிந்துநடக்குந் தூய்மை யென்பது இதுதான். நீயும் அப்படி நீக்கிவிடாமல் எல்லாம் உன்னுலாகுமென்றுண்ணி நவிந்துவருந்தினை இந்திரன் மதலாய்;இன்னமுங்கேளும்பூமியில்யார் பெற்றவர்கள் யார்வந்து பிறந்தவர்கள்,நேசமானவர்கள்யார்,நேசமில்லாதவர்கள் யார்? நாசமானவர்கள்யார்,நாசமில்லாதவர்கள் யார்?உறவார், பகையார் உற்றுப்பார்க்கு மிடத்தில் ஒன்றுமில்லை கற்றுணர்ந்த காவலனே;யாவத்தும் அவன்கட்டளைச் செயலென்றுட்கொண்டால்குற்றமென்பதொன்றும் விளையாது கொடியவினைக் கிடாகவுமாட்டார். மேலும்மாயை யென்னும்பெண்ணுனவள் மனமென்னும் பிள்ளையைப்பெற்றுள் அந்தமனமென்பவன் அறிவென்னும் சுதனை நல்கினுன். இந்த

மூவருக்குள் தாய்தந்தையென்றும், பத்தினி புத்திரனென்றும் இவர்களிடத்தில் நாட்டும்படியாகிய ஆசாபாச நேசமும் மாயையென்பவளாலும் மனமென்பவனாலும் விளையாநின்றது, அந்தச்சமயத்தில் அறிவென்னும் பிள்ளை பிரவேசிப்பானாகில் இவைகளையெல்லாம் நீக்கிவிடுவான், ஒருவனையுஞ் சேரவொட்டான்; அதனால் அந்த மாயையும், மனமென்னும் பிள்ளையும் அறிவனைத்தள்ளி ஒருகக்ஷியாயிருக்கின்றார்கள். இதல்லாமலும், மெய், வாய், கண், மூக்கு, செவி, யென்னும், ஐம்பொறிகளும் சப்த, பரிச, ரூப, ரச, கந்தமென்னும், தன்மாத்திரைகளும், ஞானம், அருள், தவம், பொறுமை, சத்தியம் வாய்மை, மேன்மை, மோனம், இவ்வெட்டும் ஐம்பொறி யடக்கல், முதலியதும் சாத்மீககுணம், மனஊக்கம், ஞானம், விரதம், தவம், தருமம், தானம், கல்வி, கேள்வி, இவ்வெட்டு முடையது இராசதகுணம், பெருந்தீனி, நெடுந்தூக்கம், கடுஞ்சோம்பல், கெடுநீதி, துட்டநடத்தை, வஞ்சம், மறைதி, பொய், கோபம், கொலை, காமம், இப்பதினொன்று முடையது தாமதகுணம். இவைகளாகிய முக்குணங்களுடனேயும் அறுவகைப்பயன் களுடனேயும் பழகி அரசாக்ஷி செய்யும் இந்தச்சாயலுலகினை வணங்கித்துதித்து நித்திரை கொள்ளும்போது ஒளித்துநின்ற அறிவனென்னும் அரசனுந் தோன்றுவான். இத்தன்மையாகிய நன்மை நிறைந்த அறிவவென்னும் அரசனை அறிந்தவரெவரோ அவரைத்தான் அறிஞரென்று போற்றிப்புகழ்வது அன்பனே பிரம்மாவினால் வகுக்கப்பட்ட சராசரப் பொருள்கள் தோறும் பாலும் நெய்யும்போல் உயிர்க்குயிராகிப் பொருந்தி வாழ்வைப் பெற்றுக்கொண்டிருக்கும் இந்தப்பந்தங்களை யுணர்ந்து நாசிநுனியினடு நிலைநாட்டி நேரிற்பார்க்கு மிடத்து நமக்கு ஆர் உறவு ஆர்பகைவர் அப்பனே; ஆகையால், நீயும் நானும் நிருபவர்களுஞ் சகல உயிரும் பிறந்து இறப்பதும் இறந்துபிறப்பதும் இல்லை யென்றுயோசித்து கற்றுணர்ந்தோர்சள் கலங்கமாட்டார்களென்று மாயவன்கூற, அர்ச்சுனன் இந்தவசனத்தைக்கேட்டு சுவாமி ஒருவரும் இறக்கமாட்டார்களென்றால் பார்த்தபோர்களை மறுபடியும் பாராதிருக்குங் காரணமென்ன ஆர்நீங்கினவர்கள்? ஆர்நீங்காம லிருந்தவர்கள்? அதனுடைய நிச்சயத்தை அடியேனுக்குச் சொல்லவேண்டுமென்று நிருபன் கேட்க, ஸ்ரீகிருஷ்ணன் சொல்லுகின்றார்:—

விஜயனே கேளும், இவ்வுலகத்திற் பிறந்து இறக்கும் படியானது உடலுக்குற்ற விதியே யல்லது நித்தியமாய் நின்சொரூபமாகிய ஆன்மா இறந்து பிறந்ததில்லை என்று சுவாமி சொல்ல.

அர்ச்சுனன்கேட்டு கர்த்தனே என்சொரூபம் ஆத்மாவென்று ரைத்தீர்: என் சொரூபமென்பது அங்கம் இந்திரியமுதலாகிய இவைக ளாயிருக்கிறதே யல்லது நானென்பது வேறுபிரிந்து காணவில்லையே; இந்த இடத்தில் நான்வேறாகஇருப்பதைச் சொல்லுமென்று அர்ச்சு னன்கேட்க ?

மெய்மையாகிய ஆன்மா அவயவ அங்கமும் இந்திரியமுமேயல்லது வேறாகயில்லையே யென்றுகேட்டவ னெவனே அவனும் அவனால் அ றியப்படாதவனும் நீயாயிருக்கின்றாயென்று கோபாலன்சொல்ல. அ தைஅர்ச்சுனன்கேட்டு நல்லது ஐயனே, தேகம்பிறந் திறக்குமாகில் அதைச்சேர்ந்த அறிவனென்பது எங்கேயென்று விஜயன்கேட்க ?

தூக்கமாகிய கருமவினைத் தொடர்ச்சிக்குப் பொருளாய்நின்றவ னென்று சுவாமிசொல்ல.

தேக உற்பத்தியாகு முன்னமே கருமச்செயல் எவ்விதம் வரு மென்று காவலன்வினவ ?

வித்துள்ளொடுக்கம் மரமென்றும் மரத்துள்ளொடுக்கம் வித்தெ ன்றுஞ் சொல்லும் வகையாமென்று கண்ணன் சொல்ல.

நல்லது சுவாமி தேகமும் ஆத்மாவும் வேறென்றுரைத்தால் கரு மவினையைச் செய்தவர்கள் யாரென்று காண்டீபன்கேட்க ?

தேகமேவிளைவித்தது அந்தத்தேகமே வினைக்கருமத்திற்குரிய தன்றி ஆன்மாவுக்கு நிமித்தமில்லையென்று ஆண்டவன் சொல்ல.

தேவரீருடைய வாக்கியப்படிக்கு உடலானது கருமத்தைச்செ ய்தால் அதனால்வரும்பலனை ஆரனுபவிப்பதென்று அர்ச்சுனன்கே ட்க ?

இயாவத்துமாகியபலனும் உடலுக்கல்லது உயிருக்கில்லையென்று உத்தமனுரைக்க.

அதைக்கேட்டு சுவாமி வெவ்விய உடலே வினைப்போகத்திற் குரியது என்றீர் அந்த உடலானது எல்லாவற்றையுஞ் செய்து இந்த க்கர்ம பூமியில் மாய்ந்து விழ்ந்துபோக ஜீவாத்மா நடுநடுங்கிசுவர்க்க நகரத்தை அனுபவிக்க வேண்டிய காரணமென்ன சொல்லுங் கர்த் தனே யென்று காவலன்கேட்க ?

சுவாமி சொல்லுகின்றார்; அர்ச்சுன உலகத்தில் தறுகரண புவ னபோகச் செயல்களைத் தனதென்று சார்ந்திருந்த தன்மையைப்போ ல் நரக சுவர்க்க அநுபவமென்று சொல்லுவது மாத்திரமேயல்லது

ஆத்மாவிற்கு நரக சுவர்க்க அநுபவமில்லை உண்டென்று பேசுவது வீண் ஆரோபிதமென்று விளம்ப.

இத்தன்மையாகிய உடலின் செய்கைகளெல்லாம் ஆத்மாவின் பேரிலேறும் படியாகிய மயக்கமென்ன வென்று அர்ச்சுனன் கேட்க?

முற்றுமுணராம்படியாகிய நல்லறிவில்லாத மோகத்தினாலேறிய தென்று ஸ்ரீகிருஷ்ணமூர்த்தி சொல்ல.

அவ்வறிவானது தேகத்திற்கோ அல்லது ஆன்மாவிற்கோ வென்று அர்ச்சுனன்கேட்க?

நீர்கேட்ட கருத்தைப்பிரித்துச்சொல்லுவோமாகில் உடலானது அசத்து உயிரானது சத்து இந்த உயிர்அறிவான பிரம்மமென்று உலகளந்தோனுரைக்க.

அதை அர்ச்சுனன் கேட்டு. ஐயா, தேகம் அசத்தாகில் இந்தச் செய லெப்படிவருமென்ன ?

ஏகமாகியஜோதி உள்ளிருத்தலால் காந்தம் ஊசியைஇழுப்பது போல் இழுத்ததென்ன.

தேவர்சொன்ன செயல் உடலுக்கானால் சுகதுக்கமாருக்கென்ன?

உடம்பினுக்கென்று கோவிந்தன் சொல்ல.

சேதன ஆன்மாவைச்சேராத சுகதுக்கம் அசேதனமாகிய தேகத்தைச் சேருமாவென்ன ?

புலன் பொறி பூதம் உயிர் அந்தக்கரணமென்னும் ஸ்தூலசூக்கும ஈருடலாகிய மனதிற்கே இன்பதுன்பமென்றுசொல்ல.

ஸ்தூலசூக்கும இருவகையுடலுக்கு ஏதுவென்ன வென்று விஜயன் கேட்க ?

ஜன்மாந்திரக்காரணத்தால் ஸ்தூல, சூக்கும, காரண, மாகிய மூன்றுடலமென்று கண்ணன் சொல்ல.

நல்லது மனமறியுந் துக்கசுகத்தை அவா வென்றுரைத்தீர் இந்தமனம் சேதனமா அசேதனமா என்று விஜயன் கேட்க ?

மனம் சேதனம் இந்த மனத்தில் ஆன்மாவானது பேதமறவிருக்குந் தன்மைபோற் றோன்றலால் சுகதுக்கத்தைச் சேதனமாகிய மனமே அனுபவிக்கும் என்று மாயன்சொல்ல.

இந்தமனம்பெற்ற சுகதுக்கம் இதினிடத்திலில்லாமல் ஆன்மாவை மருவவேண்டிய தென்னவென்று விஜயன் கேட்க ?

வெப்பமுந் தட்பமும் மேல்வைத்த பாண்டத்தினுள்ளிருக்குஞ் சலத்திற்றங்குவதைப்போ லென்றுரைக்க.

சித்தாகிய பிராணனும் ஜடமாகிய சித்தமும் எப்படி ஒத்திருக்கிறதென்று விஜயன்கேட்க ?

இரும்பும் நெருப்பும் பொருந்தியதைப்போல் விவேகத்தைக்கண்டு பண்புகொண்டு ஆன்மாவும்மனமும் அனுகூலித்ததென.

இப்படிக்குக் கூடிய ஆன்மாவும் மனமும் எப்போதாகிலும் பிரியுமோ வென்ன ?

செம்பானது நிறங்காட்டிக் களிம்பேறுவதுபோலும் அடுத்ததைக்காட்டும் பளிங்குபோலும் க்ஷணத்திற்குக்ஷணம் ஆத்மாவும் மனமும் பிரிந்து மறைந்து கலந்துகொண்டிருக்கத்தக்கது. மேலும் படிகம்போலொத்த சொரூபம் ஆசாமலின் மனோபந்தத்தால் வந்திருக்கின்றமையால் முக்தியில்லை யெனறு முகுந்தனுரைக்க.

பந்தமாவது எது?முக்தியாவதெது வென்று பார்த்தன்கேட்க ?

தேகாபிமானமும் ஈஷணாத்திரையமுமே பந்தம். அந்த பந்தமறுப்பதே முத்தியென்று பரமனுரைக்க.

அபிமானம் வருவதும் அதை யொழிப்பதும் எவ்விதமென்ன ?

அஞ்ஞானத்தால் அபிமானம் வரும். மெய்ஞ்ஞானத்தால் அபிமானம்விட்டு முத்திபெறும். அந்த மெய்ஞ்ஞானந் துலங்குமாயின் அப்போது ஆநந்தமுண்டாமென்று ஹரிசொல்ல.

அந்தப்படிக்கு விளங்குவதற்கு வேதாந்த சாஸ்திரங்களினாலும் ஆசாரியராலும் கியானம்பெற்றபோதிலும் பொல்லாங்காகிய துக்கசுகந் தீராமலிருப்பது யாதுகாரணமென்று விஜயன்கேட்க ?

சாஸ்திரங்களினாலும் குருவுபதேசத்தினாலும் வந்த பரோக்ஷஞானத்தாற் பற்றறமாட்டாது. அநுபோகமாகிய அபரோக்ஷஞானத்தாற் பற்றறவேண்டும்.

அதெப்படி யென்னில் தீபம்ஏற்றென்று வாக்கினாற் சொன்னால் இருணீங்குமோ? தீபமேற்றிவந்தால் இருணீங்குமோ சொல்லும் அர்ச்சுனா!கேள்வியினாலும்மனனத்தாலும் யோகாப்பியாசத்தினாலும் பிரமாநுபத்தினாலும் அபரோக்ஷ ஞானம் வரவேணும் மற்றவிதங்களால் வராதென்று திருமாலுரைக்க.

அஞ்ஞானத்தை நீக்கத் தெரியாதநற்கருமம் மெய்ஞ்ஞானத்தை தாங்கும் விதமெப்படி யென்ன ?

இந்திர ஜாலம்போற் றந்திரமாக இவ்வுலகத்தை கிளிஞ்சலிற் றோன்றும் வெள்ளியின் கிரணம்போலும் கனவு கானற் ஜலம்போலும்

ஏன்னிடத்திற் காட்டி யிருக்கின்றோம் அது சத்தியமல்ல வென்று தாமரைக்கண்ணன் சாற்ற.

ஐயா, உலகத்தைக் கனவுபோலென்றீர் பிரத்தியக்ஷமாய் விளங்குகின்றதே யென்று அர்ச்சுனன்சொல்ல ?

அஞ்ஞானமிருக்கும் வரையிலும் இப்படியே தோன்றும் மெய்ஞ்ஞானம் வந்தால் உலகமென்னு மாயை விட்டோடிப்போம், அல்லாமலும் பிரமனென்றும் சிவனென்றும் விஷ்ணுவென்றும். பலகோடி ஜீவனென்றும்சொல் மயக்கமாகச் சொல்லுவதல்லது ஆன்மாவொருவனே இதையுன்னிபார்க்குமிடத்து உலகம் பொய்யாகும் அவாவினால் உன்னிப்பார்க்காதிருக்குமளவும் உலகம்மெய்யாகும். ஆசையற்றுப் பார்க்கும்போது உலகம்பொய்யாகும் அர்ச்சுனா ஆகாயத்திற்றோன்றிய சூரியன் சலத்திலாடுந் தன்மைபோலும், ஓர் கடலில் பல குமிழி யுதித்ததைப்போலும், ஒன்றாய் நிறைந்து ஜீவபேதம் பலவாய் விரிந்து விளங்குவது ஆன்மா. ஆகையால் சுழுத்தியவத்தையை நோக்குவை யாகிற் றோன்று மென்று சொல்ல.

இவ்வுலகம் பிரம்மமயமென்றறிந்தாலும் பூதமயமாய்த் தோற்றிப்போராடுகின்றதே, அறிவும் அறிபவனும் அறியும்படியாகிய பொருளும்மூன்றாகிப் பேதமாகின்றதே இந்தப்பேதங்களை நான் காணாதிருக்கத்திருவருளுண்டோ கண்ணனேயென்று காண்டீபன் கேட்க ?

துரியயோகத்தால்மனம் லயப்படுமாகில் மூன்றுவகை விகற்பமும் அழிந்துபோம் மேலும் சத்துச் சித்தானந்தமென்னு மூன்றும் தனுவாதிகளுடனுற்று ஜகமாகி இம்மூன்றும் பிரம்மமாயிருக்கையிற்றோற்றாது ஸ்மரிக்கில் ஞானத்தால் ஆன்மாவை யறிந்துகொள்ளலாமென்று கோபாலன் கூற.

சிறந்த ஆன்மா யெனக்குத் தரிசனமாமோ வென்று தனஞ்செயன் கேட்க ?

முதன்மையாகிய விக்ஞானத்தால் அக்ஞான நீங்கினால் சிந்தையுள் சுயம் பிரகாசமாய் ஆன்மா துலங்குமென்று சொல்ல.

இன்பமாகிய மோக்ஷசுகமென்ப தெப்படியென்ன ?

அநுபவத்தால் விஷயானந்தம் போலறிந்துகொள்ளக் கடவை மேலும் மனலயமுடைய ஜனகாதி முதலிய ஜீவன்முத்தர்களிருக்கின்றார்கள் மைத்துனனே யென்று சொல்ல.

ஜீவன்முத்தி யடைந்தோர்களின் செயலும் குணமும் சொல்லுக்கியாலாகிய நல்லுயிரையும் சொல்லுமென்று விஜயன் கேட்க ?

உற்பத்தி வளர்தல் பருத்தல் குறைதல் முதலிய யாவும் உடலுக்கல்லது உயிருக்கில்லையென்றும் இன்னும் அனுபவமாகச் சொல்லுகிறேன் கேள் பெண்பிள்ளை முதலியயாவுந் தாமரை இலையினீர்போற் பொருந்தாதிருப்பவர்கள் ஜீவன் முத்தர்கள், தயிர்கடைந் தெடுத்தவெண்ணெய் மோரிற்கிடந்தாலுங் கலங்காதிருக்குந் தன்மைபோல்மயங்கா திருப்பார்களென்றுசொல்லி, மேலுஞ்சொல்லுகின்றார் விஜயனே கேளும் தேவர்களாலும்முனிவர்களாலும் மற்றியாவர்களாலும் அறியப்படாத ஆனமாவென்னும் பொருளை இப்போது நீயறிந்துகொள்ளும்படியாக நான்சொல்லிக்கொண்டுவந்தேன் மேலும் யாவர்களுக்கும் பஞ்சபூதங்களினு லுண்டாகிய தேகம் அந்தத்தேகத்தினுள்ளே சிவனுனவனொருவன் ஞானியாகநின்று சகல நன்மை தீமைகளையும் நடத்திவருகின்றான் சூத்திரதாரியாகிய அந்தச்சிவனென்னும் ஒருவனுலேயே நடத்துமுண்மைகளை நீ உற்றுப்பார்த்தறியக் கடவை அன்றியும் வருவதை விலக்கவும் வாராததை வருவிக்கவும் எப்பேர்ப்பட்டவர்களாலும் கூடாது. ஆகையால் போர்புரியுஞ் செய்கையை நீமேற்கொண்டு வருந்தி உன்னுடைய தென்னும் பற்றுகளினுல் வெவ்வியவினைக்குள் அகப்பட்டு வெந்துபோகாதே நல்வினை, தீவினை இரண்டுமெற்ற சிவபெருமானுடைய திருவிளையாடலென்று அவனுக்கற்புதம் பண்ணிவிட்டு நீ, பரிசுத்தனுக மகிழ்ந்திருக்கக் கடவை மைத்துனு; மேலும் ஆங்காலம் போங்காலமென்று சொல்லுங் காலங்களும் இடமும் சொல்லத்தக்க கருவியும் சமயமும் உடல் விழும்படியாகிய நிலமும் எவரெவர்களுக்கு எப்படி அமைந்திருக்கின்றதோ அவனிடமே நேரிடுவதல்லாமல் வேறுகூடவாது எவ்வளவு பலசாலிகளாயிருந்த போதிலும் தாங்களெண்ணிய படிக்கு ஒருவனை முடிக்கும்படியாகிய செயலு முண்டோ; அரன்வரம் பெற்றநரனே நீவீணுகிய மயக்கத்தில் வீழாதே கடைப்பிடிக்கருமமொன்று சொல்லுகின்றேன் அதாவது, ஆயுள் முடியாமல் அற்பவுடற்றாங்கிய கொசுமுதலாகிய உயிர்களும் மடியமாட்டாது இதினுடைய உண்மையிப்படி இருக்க; பூர்வத்தில் சகலஇராஜர்களும் நெருங்கியசபையில் நீங்களைவரும் கையெடுத்து நீட்டி அவரவர்களைக் காட்டி ஆண்மிக்கையுடன் சொல்லிய கட்டுரைச் சபதம் தப்பிப் போகும்படியாக விட்டு காட்டுக்குப் போவோமென்று திரும்பிவிடுவீர்களாகில் இம்மைப்பயன் மறுமைப்பயன் உம்மைப்பயனென்னும் மூன்று பிரயோசனங்களையு மிழந்து எல்லோரும் பழிக்கும் படியாகிய ஏளிதம்பூண்டு கீழ்ப்பட்டுக் கொடிய நரகிற் குளித்து மூழ்கிக்கண்ணீர் சோரவரு

ந்தி வெப்பமாகிய பிணியாலுமூன்று சுவை, ஒளி ஊறு, ஓசை, நாற்ற மென்றுரைக்கும் ஐம்புலனுகர்ச்சியுங் கெட்டுப்போவீர்களே யல்லது பிரயோசனம் பெறும்படியாகிய காரியமொன்றுமில்லையே; ஆகையால்போர்முகத்தில்வந்து யுத்தஞ்செய்யாமற் போவேனென்பது புருஷதீரமன்று. கூறியசபதங்களை நிறைவேற்றும்படியாகச் சத்துருக்களைக்கொல்லுவது தர்மங்களெல்லாவற்றிலும மிகுந்ததர்மம். அப்படியே முடித்தால் உங்களுக்குப்பழிபாவமுதலிய குற்றங்களில்லை. என்னுடைய வசனத்தை இருக்குவேதமாக நம்பு அர்ச்சுனா, பகையாளியை வென்று நீ ஜெயம் பெறுவையாகில் இவ்வுலக மெல்லாவற்றிற்கும் ஏக சக்ராதிபதியா யிருப்பாய், ஒருவேளை இறந்து போவையாகில் தேவர்கள் முதலிய அரம்பாஸ்திரீகள் எதிர்கொண்டழைக்கும்படியாகப் போய் சுவர்க்கலோகத்தைத் துரைத்தனஞ் செய்வாய், நித்திய பதவியாகிய மோக்ஷமு முண்டாம். இன்னுங்கேள் வீரபற்கனென்னும் சூரனே, உலகில் சாதாரணமாக வழங்குவது எனது ஆடை, சுவர்ணம், பூமி, புதல்வன், மனைவி, யானை குதிரைமுதலிய வைகளை தனதென்றும், கண், முகம், கை, கால், எனதென்றும் இவ்வவையவங்களையுடைய உடலை, யானென்றும் தன் சுதந்தரமாகச் சொல்லிக்கொள்வார்கள் அன்னியமாகிய வஸ்திராபரணம், யானை, குதிரையைப்போல், தன்னுடலை யோசிக்குமளவில், ஆடைமுதலிய பொருள்களையும், கண்முதலிய அவயவங்களையும் எனதென்றும், பிரிவுபட்டிருக்கின்ற இந்த உடலினை, தானென்று மறந்துஞ் சொல்லத்தக்கதன்று.

பின்னும் சொல்லுகின்றார் நீபுசிக்கும் அன்னமானது ஒரு கூறு மலமாகும், ஒருகூறுமனமாகும், ஒருகூறு உடம்பாகும், அந்தஅன்னத்தாலாகும் மனமுந்தேகமும் நீயானால், முதலுண்டான மலமும் நீயாகவேண்டும். மலம் அன்னியமானால் மனமும் தேகமும் அத்தேகத்தாலுண்டாகிய அன்னமயகோசங்களும் அதனாலடையும் இன்பதுன்பங்களும் நீயல்லவே! என்று கேசவன்மொழிய விஜயன் விசுவாசநேசத்துடன்கேட்டு மகிழ்ந்துமனதுட்கொண்டு மயக்கமகன்று சிந்தைதெளிந்துதிருமாலைநோக்கிவண்டுகள் மொய்க்கு மதுநிறைந்தவாசத்துளவமாலையணிந்த வானவர்கோமானே, மலர்மகள் சீமானே, பூதங்கள்தோறும் பொருந்திஇருக்கின்றவன் சிவனென்று புகன்றீர்; அச்சிவனாகிய தேவன் எவ்விடத்தி லிருக்கின்றார்; அந்த உண்மை ஏழையாகிய அடியேனுக்குத் தெரிவிக்கவேண்டுமென்று ஜெயவிஜயன் கேட்கப் பரந்தாமன் சொல்லுகின்றார்.

பார்த்தனுகியபார்த்திபனேகேளும், சத்தியலோகத்திற்றுமரைம லர்மே லிருந்து மன்னுயிர்களைச் சிருஷ்டிக்கும் பிரமனென்பவனும், வைகுந்தத்திலிருந்து இரக்ஷிக்கும்விஷ்ணுவானவனும், தேவர்முதலி ய யாவரும் வணங்கும்படியாய்க் கைலாயத்தில் உமாமகேஸ்வரியுட னிருந்து சம்மாரத்தொழில் செய்யும் வெள்ளைவிடையேறிய விமல னும், வாசநிறைந்த கடம்பமலர் மாலையணிந்த சண்முகத்தேவும், பலம்பொருந்திய அயிராவதத் தலைவனுகிய தேவேந்திரனும், இவ்வுல கினிறைந்த சராசரப் பொருள்களைத் தேர்ந்துணர்ந்து அவைகளிற் சஞ்சரித்துக்கொண் டிருப்பவனும் வேதபுராணங்கள் முதலிய யாவ ற்றையும் இவ்வுலகில் விரித்துரைத் தருளிய வேதவியாசனும், இரவி ற் சந்திரனுனவனும் பகலிற் சூரியனுனவனும், உலகிற்சிறந்த பூமியா னவனும் மாதவர்களிற் சிறந்த நாரதர் முதலிய முனிவரானவனும், திக்குபாலக ரானவனும் நவக்கிரக மானவனும், கற்பகத் தருவானவ னும்,மரங்களில் அரசானவனும்,மனிதர்களில் இராஜனுனவனும், பசு க்களிற் காமதேனுனவனும், நானே என்றறிந்துக்கொள்ளும் அர்ச்சு ன. இதன்றியும் எந்தத்தேசங்களில் எந்தத்திறங்களையுடைய பேர்கள் எந்தச்சாதியார் எந்தக்காலத்தில் எந்த உருவமாகப் எவ்வித பாவனை செய்து என்னைத்துதித்து வணங்குவார்களோ, அந்தத்தேசங்களில் அந்தத்திறங்களையுடைய அந்தச்சாதியாருக்கு அந்தக்காலத்தில் அந் த உருவத்துடன் அவரவர்களுக்குப் பிரசன்னமாகி அவர்களுக்குவே ண்டிய மனோபீஷ்டங்களை எல்லாங் கொடுத்து இரக்ஷிப்பவன் நான்: அன்றியும் பிர்ம்மா,விஷ்ணு,ருத்திரனுகிய மூவரும் சிருஷ்டி திதிசங் காரமென்னும் தொழில் மூன்றும் சாத்மீகம் இராசதம் தாமதமெ ன்னுங்குண மூன்றுமுடைத்தாய் அவைகளுக்குள்ளாய், அவைகளுக் குப்புறம்பாய், வேதமுடிவென்னும் வேதாந்தத்தில் முத்திக்கு வித் தாகி முதன்மைபெற நின்ற தனிப் பரப்பிரமப் பழம்பொருளா யிரு க்கின்றவன் யான். நீ உண்மையாக இதை உட்கொள்ளக்கடவை உ த்தமனுகிய பார்த்தனே என்று கரியதிருமேனியையுடைய கண்ணன் சொல்ல! காண்டீபன் அற்புத மடைந்து ஐயனே; வாசுதேவருக் கும் தேவகிதேவிக்கும் புத்திரராகப் பிறந்து ஆயர்வீட்டில் வள ர்ந்து வெண்ணெய் பால் முதலிய யாவுமுண்டு எங்களுக்கு மை த்துனராகி எங்களொப்பந்தமா யின்பதுன்பங்களை யனுபவித்து அழுவாருடனழுது, தொழுவாருடன் தொழுது, நகைப்பாருடன நகைத்து, பகைப்பாருடன் பகைத்து இப்படிக்கெல்லாம் 'விளை யாடிக்கொண்டிருந்து விட்ட நீர், எல்லாம் நான்தான், என்னைவிட்ப்

பிரபஞ்சமில்லை யென்றுசொல்லுவது பெரிய ஆச்சரியத்தை விளைக்கின்றது; எனக்காகச் சொல்லிய வார்த்தையோ; அல்லது உண்மையாகிய காரியந்தானோ; அப்படி உண்மையா யிருக்குமாகில், யாவரும் யாவும் தாமாகியிருக்குந் தேவரீருடைய திருக்கோலவுருவத்தை அடியேன்கண்டு தரிசித் துய்யும்படியாகத் தெரிவிக்க வேண்டும் தெய்வநாயகனே யென்று கேசவன்றோழன் கேட்க, அப்படியே தரிசித்துக் கொள்ளென்று ஞானக்கண்கொடுத்து அர்ச்சுன னுடைய முகத்தைத்தடவிய அப்போதே உலகத்தை ஓரடியாக அளந்த உருவம் போலுயர்ந்து பாதாளம் வரையிலும் தாழ்ந்து, மேலிருக்கும் அகண்டாகண்டப் பேரண்டச் சுவர்வரையிலும் மேலுங் கீழுமாகத்திணிந்து நெருங்கும்படி யாய்ச் சுயம்பிரகாச ஒளியாய் விராட் சொரூபமாகி நின்றார். அந்தத்திருக்கோலத்தைத் தனது திவ்விய ஞானவிழியினால் விஜயன்கண்டு வாய்பேசாமல் மௌனியாய் விற்பனமுடைய அற்புதகுணசீலனாக மயிர்க்கூச்செறிய ஆனந்த சமுத்திரத்தில் மூழ்கி தன்னைத்தானேமறந்து அசைவற்று நின்றுவிட்டான். அப்பால்தேவர்களும் நான்குவேத பாராயணராகிய தவமுனிவர்களும் அந்த விராட்டினுடைய திருவுருவத்தில் ஒருபக்கமாயிருந்து மறைமாரியும் மலர்மாரியும் வாரிவாரிப்பொழிந்தார்கள். இதாமாகிய இருதிறப் படைகளின்பகுதியோர் முன்னிருந்தபடியே கிருஷ்ணார்ச் சுனரைப் பார்த்துக் கொண் டிருந்தார்க ளன்றி, மற்றுவேறொன்றுங் கண்டதில்லை, இப்பால் தன்னிலையெல்லாம் அர்ச்சுனன் செவ்வையாய் அறிந்துக்கொண்ட தன்மையைக்கண்டுதான்கொண்ட விராட்டுருவத்தைமாற்றிமுன்னின்ற நிலைப்படிக்குச் சாரதியா யிருந்து விஜயனுடைய தெளிவாகிய பிரகாசம்பெற்ற முகத்தைப் பார்த்து, அர்ச்சுனா முற்றத்துறந்த சித்தத்தவர்களும் அறியப்படாத என்னிலையை நீயறிந்து கொண்டாய் உன்னைப்போல் எவருணர்ந்தார்கள் உத்தமனே மலையி னுயரம் மலைக்குத் தெரியா தென்பதுபோல் என்னிலை எனக்குத் தெரியவில்லை, ஆகையால் நீ கண்டுகளித்த தோற்றமாகிய வெல்லாவற்றையும் நானறியும் படியாகச் சொல்லக்கடவை தவநிறைந்த பேரறிவினையுடைய தனஞ்செயனே யென்று நளினநாமனாகிய நாராயணன் கேட்க விஜயன் சொல்லலுற்றான்.

சுவாமி பிரம்மாண்ட கோளகையைக் கிழித்து மேற்பட்டுப் பேரொளியாகத் தோன்றி, சிரம், கரம், உரம், கால், மேல், இடை, தொடை யென்பது ஒன்றுந் தெரியாமல் உலகமெல்லாஞ் சலமயமாயுள்ள

துபோலிருந்த உருவத்தை நானெப்படி பகுத்துச் சொல்லுவேன். மாதவனேயென்று இரண்டு பாதங்களையும் தன்னிருகரத்தாற் றழுவி முடித்தலையைத் திருவடிக் கடியிற்சாய்த்து இருகண்களும் ஆற்று நீரி லூற்றுப் போற்சுரந்து பெருக்கெடுத்தோட திடகாத்திரமாகிய தேகநடுங்க மொழிகுழறும்படி நாவுநடுங்கத் தான்கண்ட காக்ஷியைத் தாக்ஷி இல்லாமற் சொல்லத்துணிந்து என்னாண்டவனே; தாண்டவனாகிய தற்பரனே; காண்டவமெரித்த கண்ணனே: பாண்டவர்க்கிசைந்த பாகனே கேட்டருளும்; நான்கண்டகாக்ஷி மாதவம் பெற்ற வேதவேதியராகிய முனி சிரேஷ்டர்கள் சூழ்ந்து வணங்கும் படியாயிருந்த பிரம்மதேவனைச் சரஸ்வதி முதலியோர்களுடன் உனது தேகத்தி லிருக்கக்கண்டேன். சங்கு, சக்கரம், கதை, கட்கம், கோதண்டமென்னும் பஞ்சாயுதங்களுடன் மகாலட்சுமியும் பொருந்த கவுஸ்துவாபரணமும் துளபமாலையுடன் பரவாசுதேவனே உன்னுடலில் ஒரு புறத்தில் மருவக்கண்டேன். குளிர்ந்த பிறையணிந்த உருத்திர மூர்த்தியை, நாராயணி யாகிய நாயகியுடன் தேவகணம், பூதகணங்கள் சூழத் தேவர் திருமேனியிற் பொருந்தி யிருக்கக்கண்டேன். பிரகாசமுடைத்தாய் மேலோங்கிய பெருமாளாகிய சண்முகக்கடவுளைவள்ளிதெய்வயானையுடன் உமதுதேகத்தில் இன்புற்றமர்ந்திருந்த இஷ்டமாகிய இடமுங்கண்டேன், முப்பத்து முக்கோடி தேவர்களும் நாற்பத்தெண்ணாயிரம் ரிஷிகளும் தேவேந்திரனும் இந்திராணியுடன் தேவரீருடைய திருவுருவிற் றிகழக்கண்டேன். நான்குவேதம் உபநிடதம் வியாகரணம் ஆறுசாஸ்திரம் பதினெண்புராணம் ஆகமமுதலாகிய எல்லாவற்றையுங் கண்ணிற் கண்டேன். பகைவராயிருந்தழிந்து மடியும் அரக்கர்முதலிய அசுரர்களையுங் கண்டேன். சரம், அசரமென்னும் எல்லாப் பொருள்களையுங் கண்டேன். முத்தொழிலும், முக்குணமும், மூவுருவும், முக்காலமும், வாரம், திதி, மா, வருடமுதலியதும் அவைகளின், தொழிற்குணங்களுங் கண்ணுற்றேன். இதல்லாமலும் இன்னொரு ஆச்சரியங் கண்டேன் இறைவனே; நான் கண்ட தென்ன வெனில், நாகக் கொடியோனாகிய துரியோதனன் முதலிய யாவரையும், அநேகம் அக்ரோணி சேனைகளையும் பாண்டவர்களுக்குச் சகாயமாகிப் படைத்துணைவந்த மன்னவர்முதலிய பேருஞ் சேனைகளையும் தேவரீருடைய திருவாயால் விழுங்கக்கண்டேன். இவ்வளவுகோடி சேனைகளையும் இந்த எழுகடல் முதலாகிய பெரும் புறக் கடலையும் வளைத்துக் கொண்டிருக்கும் அநேகங்கோடி கரங்களும், அநேகங்கோடி சிரங்களும், அநேகங்கோடி கண்களும், அநே

கங்கோடி கால்களும், அநேகங்கோடி திருக்கைகளும், அநேகங்கோடி திருமுகமண்டலமும், பிரகாசிக்கும்படியாய்க் கண்டேன். தேவரீருடைய பூரண உருவத்தைப் பார்ப்பதற்கு அநேகங்கோடி கண்களை பெறாமற் போனேன். கைகூப்பி வணங்குவதற்கு கரங்க ளனந்தம் பெறாமற்போனேன், தேவரீருடைய திருநாமங்களை ஸ்துதிப்பதற்கு அநேகமாயிரம் நாவினைப் படைக்காமற் போனேன், இனி நான்சொல்லத்தக்க தொன்றில்லை யென்றான். அப்படியாகச்சொல்லிய அர்ச்சுனனை அணைத்து அருளளித்து நீபிழைக்கும்படியாய் இவ்விடத்திற் கண்ணுறக்கண்ட அதிசயம் யாவற்றையும் எவர்களிடத்திலுஞ் சொல்லாதே கடைசியில் தருமராஜன் முதலிய நீங்களைவரும் பிழைத் திருக்கப்போகிறவர்கள், இதரமானவர்க ளெல்லாரும் அழிந்துபோகிறவர்கள், இதை உன்மனத்தி லுறுதியாக வைத்துக்கொள்; அறியாமையாகிய இருளை நீக்கிவிட்டுவிடு மேலாகிய வல்லபமுடைய விஜயனே நாமிருவரும் இவ்வுலகிலுள்ள எல்லாரையுங் கும்பு கூட்டி மடிப்பதற்கே பிறந்திருக்கின்றோம். நீ வேறாக எண்ணிக் கலங்குவை யாகில் நாம்வந்த காரியந் தாறுமாறாகும்;ஆகையால் எந்தவேலையெப்படி இருந்தாலும் நாம்வந்தவேலையை முடித்துச் சுகந்தமாலையைத் தரித்து வெற்றிபெறும் படியாகிய விதத்தை விதியாய்த் தேடிக்கொள்ள வேண்டும், பின்னும் உனக்கு மயக்கமிருக் தமாகில் இன்னமும் சொல்லுகிறேன் கேளும்,எல்லாஇடங்களும் அவ்விடங்களிலிருக்கின்றஎல்லாப் பொருள்களும் யாவும் நாமாகி, வேதமும் வேதவேதாந்தமும் நாமாகி இருக்கின்றோம். உன்னை விட்டு நான் பிரியமாட்டேன் என்னைவிட்டு நீ பிரியமாட்டாய் அப்படி யல்லவென்று பிரிந்தாலும் வேறு படோம்.அதெப்படி யென்னில்,முன்னொருமுறையில் நானும் நாராயணனுமாகப் பிறந்து பூபாரம் போக்கினோம்; இன்னொரு பிறப்பில் இராமலட்சுமணர்களென்னும்பேர்பெற்று சத்தியமுதலிய நித்திய விரத தவங்களை நிலை நிறுத்தினோம்; இந்தப்பிறப்பில் கிருஷ்ணார்ச்சுனராக இவ்விடத்தில் நிற்கின்றோம் ஆகையால், உன்னுடைய மயக்கத்தையும் இவர்கள் பேரிற் கொண்ட நேசத்தையும் ஆசாரியார் மேல் விசுவாசம் வைக்க உன்னை மயக்கிய மோக பாசத்தையும் விட்டொழித்து விடென்று தன்னிலைகளெல்லா வற்றையுஞ் சொல்லித் தத்துவந்தெரிவித்த சாமள வர்ணனாகிய சுவாமியினுடைய திருவாய் மொழி கேட்டுத் தெளிவுற்றுத்தேறி: தர்மம், அர்த்தம், காமமென்னும், அறம்பொருளின்பத்தை அனுபவித்து அப்பால் தேவரீருடைய திருவடியைச் சேரும் பதத்தின்பயனை அடியேனுக் குபதேசித்த

ஆரியனே யென்று செந்தாமரைக் கமலமணக்குந் திருவடியிற்றொழுது அடியேன் விவேகசூனியத்தாற் றெரியாமற் சொல்லிய சொற்குற்றம் பொருட்குற்றம் மரியாதை முதலிய மனக்குற்றம், குலக்குற்றம் குணக்குற்றம் இவைமுதலிய நீங்குகளேதாகிலு முண்டாயிருக்குமாகில் அவைகளை யெல்லாம் க்ஷமிக்கவேண்டும் அச்சுதனே பரந்தாமனே ஆரணனே பூரணனே யென்றுஅடிமலர்வணங்கி யுத்தஞ்செய்யஅருச்சுனன் ஆரம்பித்தான். அதற்குவேண்டிய கருவிகளெல்லா மேற்படுத்திக்கொண்டு இதோ யாவரையும் முடிப்பேனென்று வீரப்பிரதாபதீரத்துடன் எழுந்து நின்று சண்டைசெய்தான். அப்போது ஸ்ரீகிருஷ்ணபகவான் விஜயனைப்போல் பராக்கிரமமுள்ளவீரன் இவ்வுலகத்திலுண்டோ வென்று புகழ்ந்து மிகுந்த சந்தோஷமுடையவராய் குருமுகூர்த்தம் கொண்டருளிய இந்தபகவற்கீதையை உபதேசித்து கடவுள் நிச்சயங்காட்டியசங்கதி விஜயனுக்கும் விஷ்ணுவுக்கும் நடந்த தேவரகசிய மென்று வியாசர் சொல்ல, அப்போது ரிஷிகள் அப்பேர்ப்பட்ட இரகசியம் தேவரீர் தெரிந்து அடியேங்களுக்கு சொல்லும் விதமெப்படி என்று கேட்க வியாசபகவான் புன்னகையுடையவராய் வியந்து ஓ தவசிரேஷ்டர்களே கேளுங்கள் சகல தேவ இரகசியங்களும் நான் தெரிந்துக் கொள்ளும்படியாக பரமசிவம் அனுக்கிரகம் செய்தருளிய அந்தந்த இரகசியங்களெல்லாம் நடந்தவண்ணம் உங்களுக்குச் சொன்னேம். என்றுவேதவியாசர் புகல நைமிசாரண்ய முனிவர்கள் கேட்டு மகிழ்ந்து புகழ்ந்து பற்பல புட்பங்களால் அர்ச்சனை புரிந்து வாழ்த்தி போற்றினார்கள், அப்போது ஸ்ரீ கிருஷ்ணபகவான் நான் சொன்னபடி இதை அனுஷ்டித்துக்கொண்டு அனுபவத்தில் என்னையும் தன்னையும் அறிந்து இந்த இரகசியமான அர்த்தங்களெல்லாம் பகுத்துணர்ந்து எனது பக்தர்களுக்கு யார் சொல்லுகிறார்களோ அவர்களும் இந்த தத்துவார்த்தங்களை கேட்டு ஆனந்திப்பவர்களும் தேகாந்தத்தில் பரிபூரணசோதியிற் கலந்து முத்தி பெறுவர்.

சகலகலா பூஷணம் முற்றுப் பெற்றது.

இந்நூலை அனுஷ்டிக்கின்ற ஒவ்வொருவருக்கும் கொள்ளைநோய் முதலிய பிணிகளணுகாவாம்.